உன்னோடு நானும்
என்னோடு நீயும்!

ரேவதி அசோக்

உன்னோடு நானும் என்னோடு நீயும்!

ரேவதி அசோக்

அன்பு இல்லம்

கே.கே.பி. காம்ப்ளக்ஸ்,
எண். 107/2, கௌடியா மடம் சாலை,
இராயப்பேட்டை, சென்னை - 600 014.
செல்: 9003145746

நூல் குறிப்பு

- நூல் தலைப்பு — **உன்னோடு நானும் என்னோடு நீயும்!**
- ஆசிரியர் — ரேவதி அசோக்
- மொழி — தமிழ்
- முதற் பதிப்பு — ஏப்ரல், 2016
- உரிமை — ஆசிரியருக்கு
- தாளின் தன்மை — 11.6 K.g. வெள்ளைத் தாள்
- நூலின் அளவு — 1 × 8 கிரவுன்
- அச்சு எழுத்து — 11 புள்ளிகள்
- மொத்தப் பக்கங்கள் — **508**
- பைண்டிங் — சாதா அட்டை

விலை: ரூ. 260.00

வெளியிடுவோர் — **அன்பு இல்லம்**
கே.கே.பி. காம்ப்ளக்ஸ்,
எண். 107/2, கௌடியா மடம் சாலை,
இராயப்பேட்டை, சென்னை - 600 014.
செல்: 9003145746

கணினி அச்சு — மாதா பிரிண்டர்ஸ், சென்னை - 69.
செல்: 8939427929

அச்சிட்டோர்: — மஞ்சு ஆப்செட், சென்னை - 5.

உன்னோடு நானும் என்னோடு நீயும்!

பாண்டிச்சேரி.

சுஜா இல்லம்...

அதிகாலைச் சூரியன் தன் இளம் மஞ்சள் கதிர்களைப் பரப்பி புற்களின் காதலிகளான பனித் துளிகளை விரட்டித் தன் பணியை ஆரம்பிக்க, அலாரம் சத்தம் கேட்டு எழுந்தாள் ஷைலஜா.

கண்களைத் திறவாமலே வழக்கம் போலத் தன் உள்ளங்கையைத் திறந்து, 'விநாயகா' என்றபடி விழிகளைத் திறந்தவளின் பார்வை, அடுத்தபடியாகக் கடிகாரத்தில் சென்று படிந்தது.

ஐந்து மணி பத்து நிமிடம் என்றதும், அவசரமாக எழுந்து படுக்கையைச் சரி செய்து, துண்டை எடுத்துக் கொண்டு பாத்ரூமில் நுழைந்தாள். அவள் வெளியே வருவதற்கு முன் அவளைப் பற்றிப் பார்த்து விடுவோம்...

ஷைலஜா... பிடித்தவர்களுக்குச் சுருக்கமாக ஷைலு. சுஜாதா – சஞ்சய் வர்மா தம்பதிகளுக்கு மூன்றாவது பெண். பெயரைப் போலவே அழகும், அறிவும் நிரம்பி யவள். சராசரிப் பெண்களை விடச் சற்றே உயரம் கூடுதல், இடையைத் தாண்டிய கருநாகம் போலக் கருமையான கூந்தல், சந்தனமும் மஞ்சளும் கலந்த மலையாள நிறம், மீனாவை ஞாபகப்படுத்தும் கண்கள், மெல்லிய – ஆனால் தீர்க்கமான, இயற்கையிலேயே சிவந்த இதழ்கள், வில் போன்ற அடர்த்தியான புருவங்கள்.

இவையெல்லாம் காலம்காலமாகக் கதைகளிலும், சினிமாவிலும் கதாநாயகியை வர்ணிக்கப் பயன்படும் வார்த்தைகள் என்றாலும், ஷைலுவுக்கு அவை எல்லாமே பொருந்திப் போயிற்று.

மொத்தத்தில் ஆண்டவன் ஏகாந்த நேரத்தில் படைத்த தேவதையோ என்னும் அளவிற்குக் கொள்ளை அழகு. தாய் சுஜாதா, மாநிறத்திற்கும் மட்டு என்றாலும், அழகின் இலக்கணமாகத் திகழ்ந்தார்.

சஞ்சய் வர்மா, ஒரு நார்த் இந்தியன் என்பதால், நல்ல நிறம். தந்தையின் நிறமும், தாயின் அழகும் ஷைலுவுக்கு அமைந்துவிட்டது. பாரதிதாசன் கல்லூரி யில் ஆங்கில இலக்கியம் படித்து வருகிறாள்.

இவளுக்கு மூத்தவர்கள் நளினா - சாதனா என்ற இரட்டையர்கள். கடைக்குட்டியாகத் தவமிருந்து பெற்ற விக்னேஷ் என்கிற விக்கி. தந்தை, புகழ்பெற்ற ரியல் எஸ்டேட் பிசினஸ் செய்வதால், பணத்திற்குக் குறைச்ச லில்லை.

ஷைலு பிறந்த பிறகுதான் பிசினஸ் கூடு பிடித்து, அவரின் நீண்ட நாள் கனவான கடற்கரையை ஒட்டிய இந்தப் பங்களாவை வாங்கியதாக அடிக்கடி சொல்வார். அதனால் சின்ன மகள் ஷைலுவின் மீதும், வீட்டின் ஒரே ஆண் வாரிசான விக்கியின் மீது அலாதிப் பாசம்.

விக்கி மேல் எல்லோருக்கும் பாசம் அதிகமிருந் தாலும், அவனுக்குத் தன் இளைய தமக்கை ஷைலு மேல்தான் பிரியம். அவள்தான் தம்பியுடன் சரிசமமாக விளையாடுவாள்.

ப்ளஸ் டூ படிக்கும் அவனுக்குப் பாடத்தில் சந்தேகம் இருந்தால் சொல்லிக் கொடுப்பாள். அவன் நண்பர் களோடு ஜோவியலாகப் பழகுவாள்.

சாதனாவும், நளினாவும் வேலை முடிந்து வீட்டுக்கு வந்தால், ஜோடி போட்டுக் கொண்டு ஊர் சுற்றவே நேரம் சரியாக இருப்பதினால், அவர்களுக்கு வீட்டில் நடக்கும் எதிலும் அக்கறையோ ஆர்வமோ துளியும் இருந்ததில்லை.

அவளே வந்து விட்டாள். இனி...

குளித்துவிட்டு வந்த ஷைலு, பூஜையறைக்குச் சென்று விளக்கேற்றிச் சாமி கும்பிட்டு விட்டு, மொட்டை

மாடிக்குச் சென்றாள். காற்றோடு கடல் அலைகளின் சாரலும் கலந்து தேகத்தைத் தீண்ட, குளிராக இருந்தாலும் ஷைலுவுக்கு மிகவும் பிடித்தமான ஒன்று.

வழக்கம் போல மாடியிலிருந்து சூரியன் உதிப்பதைக் கண் குளிரத் தரிசனம் செய்தபடியே, அலைகளின் ஓரங்களை ரசித்தபடி, தூரத்தில் தெரிந்த மனக்குள விநாயகர் கோயிலை நோக்கிக் கையெடுத்துக் கும்பிட்டு விட்டுக் கீழிறங்கிச் சமையலறைக்குச் சென்றாள்.

வேலைக்காரி தனம் வாங்கி வைத்திருந்த பாலை அடுப்பில் வைத்துக் காய்ச்சிக் காபியைத் தயாரித்துப் பிளாஸ்க்கில் ஊற்றி வைத்தவள், காலை டிபனுக்குப் பூரிக் கிழங்கும் மசாலாவும் செய்து முடித்தாள்.

அதற்குள் தாயே குளித்து விட்டு வந்து விடவே, அவருக்குக் காபியைக் கொடுத்து விட்டுத் தனக்கும் எடுத்துக் கொண்டு தன்னறைக்குச் சென்றவள், வியர்த்து விட்டிருந்த முகத்தைக் கழுவிக் கூந்தலைச் சீவித் தன் ஒப்பனையை முடித்துக் கொண்டு வெளியே வர, நளினாவின் குரல் கேட்டது.

தமக்கையின் குரலைக் கேட்டதுமே உள்ளுக்குள் சிலீரென்று கத்தி போலக் குளிர் பரவ, வேலைக்காரி மூலமாக டிபனைக் கொண்டு வரச் சொல்லிச் சாப்பிட்டுத் தமக்கையின் கண்களில் படும்முன் அவசரமாகக் கல்லூரி பேக்கை எடுத்துக் கொண்டு, தாயிடம் சொல்லி விட்டு வீட்டை விட்டு இறங்கினாள்.

தெருமுனை தாண்டியதும் காயத்ரி நிற்பதைக் கண்டதும் மனது லேசாக, புன்னகையும் இலவச இணைப் பாக வந்தது. காயத்ரி, ஷைலுவின் நெருங்கிய தோழி.

அவளிடம்தான் ஷைலு எல்லாவற்றையும் பகிர்ந்து கொள்வாள். காயத்ரிக்கும் ஷைலுவின் வீட்டைப் பற்றித் தெரிந்ததனால் அவளின் மேல் அலாதிப் பிரியம்.

"குட் மார்னிங் ஷைலு... எப்படி இருக்கே?" என்ற வள், தோழியின் முகம் வாடியிருக்கவும், "என்னடி... வழக்கம் போல ஹிட்லர்ஸ் சிஸ்டர்ஸ் ஏதாவது சொன்னார் களா?" என்றாள்.

அவளின் கேள்விக்கு முகம் அனிச்சை மலராக வாடிவிட, "அது எப்பவும் நடக்கிறதுதானே...!" என்றவளின் குரலில் விரக்தி வழிந்தோட,

"ஹேய்... இந்த மாதிரிப் பேசாதேன்னு சொல்லி யிருக்கேன்ல...?" என்றவள், பேச்சை மாற்ற விரும்பி, "சரி, இன்னைக்கு ஹெச்.ஓ.டி. ஹிட்லர் கிளாசோட ஜூலியட் சீசர் படிச்சியா...?" என்ற கேள்விக்கு,

"ம்ம்... முடிச்சிட்டேன். இன்னைக்குச் சாயங்காலம் கம்ப்யூட்டர் கிளாசில் ப்ரோக்ராம் டெஸ்ட் இருக்கிறது. அதைவேறு ஒரு தடவை ரிவிஷன் பார்க்கணும்...!" என்றாள் அலுப்புடன்.

சுஜா நிவாஸ்...

"அம்ம்மா..." என்று அலறிய நளினாவின் குர லுக்குக் கை வேலையைப் போட்டு விட்டு அரக்கப் பறக்க ஓடி வந்த சுஜாதா,

"எதுக்குடி இப்படிக் கத்தி ஊரைக் கூட்டறே...?" என்றார் எரிச்சலுடன்.

"ஆமாமாம்... நான் ஊரைக் கூட்டி உங்களை அசிங்கப்படுத்துறேன்... நீங்க அவமானத்தில் தலை குனிஞ்சு நிற்கிறீங்க...?" என்றவளின் குத்தல் பேச்சுக்குச் சுஜாதாவின் பற்கள் ஆத்திரத்தில் அரைபட்டது.

பொறுமையை இழுத்துப் பிடித்து, "விஷயத்தைச் சொல்லு!" என்றவருக்கு,

"காபி எங்கே? எங்கே உன் சின்னப் பெண்? காலேஜ் போயிட்டாளா?" என்று வரிசையாகக் கேள்வி களைத் தொடுக்கத் தாய்க்குக் கோபம் எல்லை மீறியது.

ஆனால், இதை வெளிக்காட்டினால் வீடு நரகமாகி விடும் என்று இத்தனை வருட அனுபவத்தில் தெரிந்து வைத்திருந்ததினால், முடிந்த வரை கோபத்தை அடக்கி, "ம்ம்... இரு, காபி கொண்டு வரேன்!" என்று கடுகடுத்து விட்டு நகர்ந்தவரை நிறுத்தினாள் நல்லி என்கிற நளினா.

"என்ன செய்தாள் டிபனுக்கு...?" என்றவளின் கேள்விக்கு...

அமைதியாக, "பூரிக் கிழங்கு மசாலா..." என்று வெடுக்கென்று பதில் வர,

"ஏன்...? உன் செல்லப் பெண்ணால் சப்பாத்தி செய்ய முடியாதா? அல்லது உடம்பு வளையலையா?" என்றாள் ஏளனத்துடன்.

பெரிய மகளின் பேச்சில் சுஜாதாவிற்கு ஆத்திரம் சுறுசுறுவென்று ஏற, அதைக் கட்டுப்படுத்தி, "அவள் என்ன சும்மாவா இருக்கிறாள்...? அவளும் காலேஜ் போக வேண்டாமா? கொஞ்சம் அக்கா மாதிரிப் பேசு... ஏதோ எதிரி மாதிரிப் பேசுறே...?" என்றார் அதட்டலாக.

"ஆமாமாம்... உங்க சின்னப் பெண்ணைப் பற்றி ஏதாவது சொன்னாலே உங்களுக்குப் பிடிக்காதே!" என்று சண்டைக்குத் தயாராக, நளினாவின் சத்தம் கேட்டுத் தங்கை சாதனாவும் தந்தையும் ஆஜராகினர்.

"என்ன சத்தம் சுஜா...?" என்ற கணவருக்கு,

"ஒன்றும் இல்லை... சும்மாதான் பேசிக்கிட்டு இருந்தோம்..." என்று மகளை முறைத்தபடிச் சமாளிக்க,

"சரி... டிபன் எடுத்து வை, மணியாச்சு ஆபீசுக்கு...!" என்றபடி குளிக்கச் செல்ல, இரு மகள்களையும் முறைத்து விட்டுக் கணவரைப் பின்தொடர்ந்தார்.

பெரியவர்கள் இருவரும் நகர்ந்ததும், "என்ன நல்லி பிரச்சனை?" என்ற தங்கையின் கேள்விக்கு,

"ஒன்றும் இல்லையடி... நம்ம வீட்டு அழகு ராணி ஷைலு... அவளைப் பற்றித்தான் கேட்டுக்கிட்டு இருந்தேன்..." என்று எகத்தாளமாகப் பேச,

"ஏன்... என்ன...?" என்றாள் ஆர்வமாக.

"நத்திங்... இப்படி அடிக்கடி ஏதாவது சொல்லிக்கிட்டே இருக்கணும். இல்லையென்றால் திமிர் ஏறிடும்.

ஏற்கெனவே அழகாக இருக்கோம் என்ற திமிர்... இப்படி எதுவும் பேசாமல், அவள் செய்து வைத்ததை வாயை மூடிக்கொண்டு சாப்பிட்டால், அவளுக்குக் கொழுப்பு அதிகமாயிடும்..." என்று கண்ணடிக்க, இருவரும் சேர்ந்து சிரித்தார்கள்.

இவர்கள் பேசுவதைக் கேட்டால், யாருக்கும் ஷைலு இவர்கள் தங்கை இல்லையென்றே தோன்றும். தோன்றும் என்ன... தோன்றியே இருக்கிறது.

இவர்கள் ஷைலுவைத் திட்டுவதற்குக் காரணம், அவளுடைய அழகு.

இரட்டைகள் சுமாரான அழகுதான். கலரும் தாயைப் போலக் கம்மியாக அமைந்து விட்டது. அழகின் மேல் உள்ள மோகமே தங்கையையே எதிரியாகப் பார்க்க வைத்து விட்டது.

நளினா எம்.எஸ்ஸி., எம்.எஸ். முடித்து விட்டு, ஒரு கம்ப்யூட்டர் நிறுவனத்தில் சீஃப் ப்ரோக்ராமர் ஆக வேலை செய்ய, சாதனா ஃபேஷன் டிசைனிங் முடித்து விட்டு, ஒரு பொடிக் வைத்து நடத்துகிறாள். அந்தப் பொடிக்கில் வசதியானவர்கள் மட்டுமே வாடிக்கை யாளர்கள். இருவரிடமும் பணத்திற்குப் பஞ்சமே இல்லை.

இதனால், படித்துக் கொண்டிருந்த தங்கையைக் கண்டாலே இளக்காரம், என்னவோ அவர்கள் பிறந்த திலிருந்து சம்பாதிப்பது மாதிரி. லீவு நாட்கள் வந்துவிட்டால் போதும்... வீட்டிலேயே இருக்க மாட்டார்கள். காலையில்

வீட்டில் சாப்பிட்டு விட்டுக் கிளம்பினால், சினிமா, ஹோட்டல், ஷாப்பிங் என்று சுற்றியலைந்து விட்டு, இரவுதான் வீடு திரும்புவார்கள்.

இதில், ஒரு நாள் கூடத் தங்கையை அழைத்துச் செல்ல வேண்டுமென்றே தோன்றியதில்லை.

சஞ்சய்க்குத் தொழிலிலேயே நேரம் ஓடி விடுவதால், வீட்டில் மூத்த பெண்கள் செய்யும் அட்டூழியங்கள் தெரிந்திருந்தாலும், நேரடியாகக் கண்டிக்க முடியாத சூழல்.

வீடு திரும்பவே முக்கால்வாசி நாட்கள் இரவாகி விடும். அதனால் மனைவியிடம், தன் செல்ல மகளைக் கவனித்துக் கொள்ளச் சொல்லி அறிவுறுத்துவார்.

கணவர், ஷைலுவைப் பற்றிப் பேச்செடுக்கும் போதெல்லாம், சுஜாவுக்குப் 'பெரிய மகள்களிடமிருந்து சிறிய மகளைக் காப்பாற்ற முடியவில்லையே...!' என்ற இயலாமையில் கண்ணீர் கரை கட்டும்.

வீட்டைப் பற்றிய நினைவில் அமைதியாக வந்த வளிடம், "என்ன ஷைலு... பேசாம வர்றே...?" என,

"ப்ச்... ஒன்றும் இல்லை. சும்மாதான்..." என்றாள் அலுப்புடன்.

"சும்மா கதையெல்லாம் சொல்லாதே... எனக்குத் தெரியாதா? ஆமா... இன்றைக்கு என்ன டிபன்?" என்றாள் மீண்டும், பேச்சைத் திசை திருப்பும் விதமாக.

"பூரிதான் செய்தேன்," எனச் சுருக்கமாகப் பதில் வர,

"ஏன்டி... நான் தெரியாமல்தான் கேட்கிறேன்... உங்க வீட்டில் பணத்திற்குப் பஞ்சமில்லை... வீட்டிலும் செர்வெண்ட் இருக்கும்போது, நீ ஏன் சமையல் செய்யுறே...?" என்றாள் நூறாவது முறையாக. ஒவ்வொரு முறை கேட்கும்போதும் அவளுக்கு ஆதங்கம் மட்டும் மாறவே மாறாது.

ஷைலுவும் அவளின் கேள்விக்குச் சளைக்காமல் பதில் சொல்லுவாள்.

"அதுக்குக் காரணம் இல்லாமல் இல்லை காயூ... எவ்வளவு பணம் இருந்தாலும், நம் தேவையை நாம் தான் பூர்த்தி செய்து கொள்ள வேண்டும்... அடுத்தவரை எதிர்பார்க்கக் கூடாதுன்னு அம்மா சொல்லுவாங்க. வேலைக்காரி தனத்திற்கு மற்ற வேலைகள் செய்ய மட்டும்தான் அனுமதி. அவர்களைச் சமையல் செய்யச் சொல்ல அம்மாவுக்குப் பிடிக்காது. தன் குடும்பத்திற்கு அம்மாதான் செய்யணும்னு நினைப்பாங்க... மற்றபடி விசேஷமாக ஒன்றும் இல்லை..." என இன்றும் அதே விளக்கத்தை அச்சுப் பிசகாமல் ஒப்புவிக்க,

"அது சரி... ஆனால், காலை நேரத்தில் உனக்குக் காலேஜ் கிளம்பத்தானே சரியாக இருக்கும்...? அந்த நேரத்தில் நீ அவசரமாக எழுந்து சமைக்க வேண்டுமா?" என்றவளுக்குச் சின்னச் சிரிப்பை உதிர்த்தாள்.

"நான் பத்தாவது படிக்கும்போது என் அக்காக்கள் இருவரும் காலை டிபனைச் செய்தார்கள். நான் சின்னப் பெண் என்பதால், எனக்கு வேலை இருக்காது... என்

இஷ்டம் போல இருந்தேன். மதியமும் இரவும் அம்மா சமைப்பார்கள். அதில் ஒரு திருப்தி அவர்களுக்கு.

"பெண்களுக்குச் சமையல் பற்றித தெரிந்திருக்க வேண்டும் என்பதில் அம்மாவுக்கு ஒரு பிடிவாதம். அது மட்டுமில்லாமல்... ஒருவேளை சமையல் செய்தால், அதுவும் காலை வேளையில் செய்தால், உடம்பும் மனசும் எப்போதும் சுறுசுறுப்பாக இருக்கும்.

அதே சமயம் அடுத்தவர்களை எதிர்பார்க்காமல் நம் தேவையை நாமே நிறைவேற்றிக் கொள்ளலாம் என்ப தால்தான்..." என்று சாதாரணமாகச் சொல்லிக் கொண்டு வந்தவள்,

"ப்ச்...! என்னுடைய கவலை இது அல்ல. எனக்குக் காலையில் வேலை செய்வது ஒரு உடற்பயிற்சி மாதிரி தான். ஆனால், என் அக்காக்கள் என்னைக் குறை சொல் லாமல் இருந்தாலே போதும். அதுதான் என் மனதைப் புண்ணாக்கி விடுகிறது!" என்றாள் ஒரு பெருமூச்சுடன்.

அவளின் வேதனை புரிந்தாலும், அதைப் பற்றித் தொடர்ந்து பேசினால் ஷைலு மனது வலிக்கும் என்ற காரணத்தால், பேச்சைத் திசை திருப்ப, "ஹும்... இதுவும் நல்ல பாலிசிதான். ஆனால், எனக்குச் சமைச்சுப் போட்டால், நல்லா மூக்குப் பிடிக்கத் தின்னத் தெரியும். ஒரு காபி கூடப் போடத் தெரியாது!" என்றவுடன், மற்ற வளின் முகத்தில் புன்னகை அரும்பியது.

"சரி, விடு. உனக்குன்னு வருகிறவன் சமைச்சுப் போடப் போறான்..." என்றவள், கூடவே மர்மச் சிரிப்பை உதிர்க்க, அவளின் சிரிப்பில் உள்ள கேலியைப் புரிந்து கொள்ள முடியாமல்...

"ஏய்...! இப்போ எதுக்குச் சிரிச்சே...? சொல்லிட்டுச் சிரி!" என்று சிணுங்கினாள்.

அவளின் சிணுங்கலுக்குச் சிரித்தபடி கல்லூரியில் நுழைந்தவள், "கையில் ஒரு குச்சியோடு உன்னையும், கையில் கரண்டியோடு உன் புருஷனும் இருக்கிற மாதிரி கற்பனை செய்தேன்!" என்று சொல்லி விட்டு மீண்டும் சிரிக்க,

"உன்னை...!" என்று கையை ஓங்கிக் கொண்டு அடிக்க வந்தாள்.

அவள் கையில் மாட்டாமல் அவளிடமிருந்து விலகி, ஒற்றை விரலை மடக்கி அழகு காட்டிச் சிரித்துக் கொண்டே ஓடியவள், எதிரே வந்த காலேஜ் மேட் ஷிவா மேல் மோதினாள்.

மோதிய வேகத்தில் இருவருமே நிலை தடுமாற... கீழே விழாமல் இருக்க... ஷிவா, அவளைக் கைப்பிடித்து நிறுத்த, ஷைலுவின் மனம் விதிர்த்துப் போனது.

அவனிடமிருந்து வேகமாக விலகி, "சாரி... சாரி... ஷிவா, நான் கவனிக்கலை. தப்பா நினைச்சுக்காதீங்க...!" என்றாள் படபடப்பு அடங்காமலே.

ஷிவாவின் விழிகள், அவளின் திக்கித் திணறிய சிவந்த இதழ்களையும், பயத்தில் உறைந்து போன மீன்

விழிகளையும் ரசனையுடன் பருகிக் கொண்டே, "கூல்... கூல்... இதுக்கு ஏன் இப்படி டென்ஷன் ஆகிறே...?" என்று குறும்பாய்ச் சிரிக்க,

அப்போதும் படபடப்பு அடங்காமல், மறுபடியும் ஒரு தடவை மன்னிப்புக் கேட்டு விட்டு, அந்த இடத்தை விட்டே ஓடினாள்.

அவளைத் துரத்திக் கொண்டே வந்த காயத்ரி, "ஏய் ஷைலு... இதுக்கு எதுக்கு இப்படிப் படபடப்பாக இருக் கிறாய்? லீவ் இட். நீ என்ன தெரிந்தா இடித்தாய்...?" எனத் தோழியின் தோளை அழுத்தினாள் சமாதானப்படுத்தும் விதமாக.

"இல்லே காயூ... இனி ஒரு தடவை என்னால் யாருக்கும் பிரச்சனை வரக்கூடாது. மற்றவர்களாலும் எனக்குப் பிரச்சனை வரக்கூடாது. இதுவரைக்கும் வந்த பிரச்சனைகளே போதும். அதுவே என்னால் அனுபவிக்க முடியவில்லை!" என முகத்தை அழுந்தத் தேய்த்து விட்டுக் கொண்டவளைப் பார்க்கப் பரிதாபமாக இருந்தது.

2

LDகாலக்ஷ்மி இல்லம்...

"அம்மா..." என்று, பூஜையறையில் விளக்கேற்றிப் பூஜை செய்து கொண்டிருந்த தாய் மகாலக்ஷ்மியை அழைத்துக் கொண்டே மாடி யிலிருந்து இறங்கி வந்து கொண்டிருந்தான் கார்த்திக் ஈஷ்வர்.

அமெரிக்காவில் எம்.எஸ். முடித்து விட்டு, பாண்டிச் சேரியில் குளோபல் கம்ப்யூட்டர் என்னும் சாப்ட்வேர் நிறுவனத்தை நடத்துகிறான்.

அதன் கிளைகள் பாண்டியில் மட்டுமில்லாமல், மும்பை, பெங்களூரு மற்றும் ஆந்திரா என்று ஆரம்பித்து வெற்றிகரமாக நடத்தி வருகிறான்.

இவனைப் பற்றி ஒரே வரியில் சொல்ல வேண்டும் என்றால், ரோட்டில் போகும் பெண்கள் நிச்சயம் ஒரு தடவை திரும்பிப் பார்ப்பார்கள். அந்தளவு அழகும், வனப்பும் உள்ள இருபத்தியெட்டு வயது வாலிபன்.

கல்யாணத்தைப் பற்றிப் பேசினாலே பிடிக்காது. பெற்றவர்களுக்கு ஒரே பையன். அப்படியென்றால் செல்லமும் அதிகமாகத்தானே இருக்கும்.

"இதோ வரேன் கண்ணா...!" என்று குரல் கொடுத்தவரிடம்,

"ப்ளீஸ்மா... சீக்கிரம்! மணியாச்சு, டிபன் எடுத்து வையுங்க. இன்னைக்கு ஒரு முக்கியமான மீட்டிங் இருக்கு. சீக்கிரம் போகணும்...!" என்றான் மணியைப் பார்த்துக் கொண்டே.

"ஐந்து நிமிடம் கண்ணா, இதோ வந்து விடுகிறேன்!" என்று மீண்டும் குரல் மட்டும் வெளியே வர, சலிப்புடன் சோபாவில் அமர்ந்து, டீப்பாயில் கிடந்த பேப்பரைப் படிக்க ஆரம்பித்தான்.

தாய் மகாலக்ஷ்மி, பெயருக்கு ஏற்ற மாதிரி மகாலக்ஷ்மியேதான். மிகவும் நல்ல குணம் படைத்தவர்.

அதே சமயம் இரக்க குணமும் அதிகம். தந்தை விஸ்வ நாத், ஓய்வு பெற்ற தேர்தல் ஆணையர். இப்போது பையனின் கம்ப்யூட்டர் நிறுவனத்தைப் பார்த்துக் கொண்டு இருக்கிறார்.

கார்த்திக் மற்ற கிளைகளைக் கவனிக்கச் செல்லும் போது, பாண்டி கிளையை நிர்வகிப்பார். மனைவி மீதும், மகனின் மீதும் அலாதிப் பிரியம்.

மொத்தத்தில் அளவான, அன்பான குடும்பம்.

"மகா... சீக்கிரம் வாம்மா, கார்த்திக் கூப்பிடுறான் பார்...!" என்றபடி மகனின் பக்கத்தில் அமர்ந்து டீப்பாயில் கிடந்த ஹிந்து பேப்பரைக் கையில் எடுக்க,

"இதோ வந்திட்டேன்... உட்காரு கண்ணா!" என்றபடி டிபனைப் பரிமாற ஆரம்பித்தார்.

"ம்மா... எத்தனை முறை சொல்லியிருக்கேன்... என்னைக் கண்ணான்னு கூப்பிடாதீங்கன்னு. கார்த்திக் ஈஷ்வர்னு ஒன்றுக்கு இரண்டு பெயரை வைத்து விட்டு, அந்த இரண்டுமே இல்லாமல் இதென்ன கண்ணா...?" என்றான் சலிப்பாக.

அவனின் சலிப்பிற்குச் சிரித்தபடி, "என்ன செய்வதுப்பா... நீ எனக்கு ஒரே பிள்ளையாய்ப் போய் விட்டாய்... அதனால்தான் கார்த்திக்னு கூப்பிடுவதை விடக் கண்ணான்னு கூப்பிட்டால் மனசுக்கு ஒரு ஆறுதல்..." என்று புன்னகைக்க...

"க்கும்... விட்டால் எல்லாத்துக்கும் ஒரு கதை சொல்வீர்களே!" எனப் போலியாக அலுத்துக் கொண்டான்.

"அப்போ நீ ஒரு கல்யாணத்தைச் செய்து கொண்டு, ஒரு பேரப் பிள்ளையைப் பெற்றுக் கொடு. நான் அந்தப் பிள்ளையைக் கண்ணா, செல்லம்னு கொஞ்சுகிறேன்..." என்றார் பாதி குறும்பும், பாதி ஏக்கமுமாக.

சாப்பிட்டுக் கொண்டிருந்தவன் விலுக்கென்று நிமிர்ந்து, "ஆரம்பிச்சிட்டீங்களா...! என்னடா இன்னும் இந்த டாபிக் வரலையேன்னு நினைச்சேன்...!" என்றான் கேலியாக.

அவனே தொடர்ந்து, "ம்மா... நான் கல்யாணம் செய்துக்க மாட்டேன்னு சொல்லலை. ஆனால், இதுவரை அப்படி ஒரு எண்ணமே வரமாட்டேங்குதே...! நான் என்ன செய்ய... சொல்லுங்க?" என்று முறுவலுடன் கேட்டவன்,

தாய் முறைப்பதைக் கண்டதும், "ஓ.கே... ஓ.கே... முறைக்காதீங்க. அப்படி எனக்கு என்னைக்குக் கல்யாணம் செய்யணும்னு தோணுதோ, அப்போ சொல்றேன்... நீங்க பெண் பாருங்க. ஓ.கே...?" என்றதும் தாயின் முகம் ஆயிரம் வாட்ஸ் பல்ப் ஒளிர்வதை ஓரக் கண்ணால் கவனித்து விட்டு, "ஆனால், ஒரு கண்டிஷன்...!" என்று நிறுத்தினான்.

ஒளிர்ந்த முகம், மகனின் கண்டிஷன் என்ற வார்த்தையில் மீண்டும் கூம்பி விட, அதைத் தாங்க முடியாமல், "பயப்படாதீங்க... என் கண்டிஷன் எல்லாம், பொண்ணு உங்களை மாதிரியே பொறுமையானவளாகவும், அமைதியானவளாகவும், அதே சமயம் அன்பான

வளாகவும் இருக்கணும். கூடவே கொஞ்சம் அழகும் வேணும்..." என்று சொல்லி முடித்ததும்,

மகா கொஞ்சமும் தாமதிக்காமல், "அப்படின்னா, லாலா கடையில் ஆர்டர் கொடுத்துத்தான் செய்யணும்!" என்று கேலி செய்ய, விஸ்வநாத்தும், கார்த்திக்கும் உரக்கச் சிரித்தார்கள்.

கார்த்திக் சிரித்து முடித்துவிட்டு, "அது உங்க தலை வலி...!" என்று சாப்பிட்டு எழுந்து போக,

அதுவரை மகனின் வசீகரச் சிரிப்பை ரசித்துக் கொண்டிருந்த தாய், ஏதோ ஞாபகம் வந்தவராக, "கண்ணா... ஒரு நிமிஷம்!" என்றார்.

திரும்பியவனிடம், "மனோகரி அத்தை, உன்னை அவங்க காலேஜில் வந்து பார்க்கச் சொன்னார்கள்...!" என்று தகவல் சொல்ல,

"ஓ.கே.ம்மா... நான் அங்கே வருவதற்கு முன் போன் செய்கிறேன்னு சொல்லிடுங்க...!" என்றவன், இருவரிடமும் விடைபெற்றுக் கொண்டு கிளம்பினான்.

பாரதிதாசன் கல்லூரி...

ஷைலு மோதி விட்டுப் போனதும், ஒரு பூங்கொத்து மோதியதைப் போல ஒரு பரவசமான உணர்வு எழ, மெய் மறந்து நின்று கொண்டிருந்த ஷிவாவை, அவனின் கல்லூரித் தோழன் அமர் உலுக்கிக் கொண்டிருந்தான்.

அவனின் உலுக்கலில் தன்னை மீட்டு, "சாரிடா... ஏதோ நினைவு..." என்று அசடு வழிய,

"ஏதோ நினைவு இல்லை மச்சான்... கனவுலகத்தில் யார் கூடயோ டூயட் பாடிக்கிட்டு இருந்தே போலே...?" என்று குறும்புடன் வாரினான்.

"ப்ச்... சும்மா இருடா. எப்போ பார்த்தாலும் கேலிதான்!" என்று போலியாக அலுத்துக் கொண்டாலும், நண்பனின் கேலியை உள்ளூர ரசிக்கவே செய்தான்.

அமரே தொடர்ந்து, "அது சரி... யார் கூட டூயட்? யார் அந்தத் தேவதை?" என்று கண் சிமிட்டிக் கேட்ட துமே... அவன் எப்பொழுது கேட்பான்னு எதிர்பார்த்துக் கொண்டிருந்தது போல,

"ஷைலு பத்தி தான்டா நினைத்துக் கொண்டிருந் தேன். அவளிடம் என் காதலை எப்படி ப்ரொபோஸ் செய்யறதுன்னு தெரியலை. அவள் விழிகளைச் சந்தித் தாலே சுத்தமா எனக்குத் தைரியம் வரமாட்டேங்குது!" என்று மறுகிய நண்பனைத் தோளில் தட்டி ஆறுதல் படுத்தினான்.

"உன் உணர்வுகள் எனக்குப் புரியுது ஷிவா. நீ மட்டுமா அவளை விரும்புறே...? நம் காலேஜில் பாதிப் பேர் அவள் நினைவாகத்தான் இருக்காங்க. ஆனால், அவளோ யாரிடமும் பேச விரும்பாமல், தன்னைச் சுற்றி ஒரு வேலியைப் போட்டுக் கொண்டு, வெளியே வர மாட்டேன்கிறாள். காயத்ரியை நெருங்கினால் ஷைலு விடம் பேசலாம் என்றால், அப்படியும் திரும்பியே பார்க்க மாட்டேன்கிறாள். ஹும்... பார்க்கலாம். சரி... வா, கிளாசுக்குப் போகலாம்...!" என்றான் ஒரு பெருமூச்சோடு.

மதியம் லஞ்ச் முடிந்து கிளாஸ் திரும்பும் நேரத்தில், தன் ஹோண்டா சிட்டியில் கல்லூரிக்கு வந்திறங்கிய கார்த்திக், 'ப்ரின்சியாக இருக்கும் அத்தை மனோகரியின் ரூம் எங்கே இருக்குன்னு யாரிடம் கேட்கலாம்?' என்று யோசித்துச் சுற்றும்முற்றும் பார்த்தவன், கிளாசுக்கு வேகமாகத் திரும்பிக் கொண்டிருந்த பெண்ணை நோக்கி, "ஹலோ மிஸ் மஜந்தா கலர் சுரிதார்... மன்னிக்கவும்... ப்ரின்சி ரூம் எங்கேன்னு சொல்ல முடியுமா?" என்றான் உரக்க.

யாரோ தன் உடையின் நிறத்தைச் சொல்லி அழைப்பதைக் கேட்டு, யாரென்று திரும்பிய ஷைலு, எதிரே நின்றவனைக் கண்டதும் ஒரு நிமிடம் இமைக்க மறந்து விக்கித்துப் போக, கார்த்திக்குக்கும் அதே நிலைமைதான்.

அவன் அழகான பெண்களைப் பார்த்ததில்லைன்னு சொல்ல முடியாது. அவன் பிசினஸ் சர்க்கிளில் நிறையப் பெண்களைப் பார்த்துப் பேசி இருக்கிறான். ஆனால், மூச்சடைத்து நிற்குமளவுக்கு யாரும் அவனைச் சலனப் படுத்தியதில்லை.

இருவரும் தன்வசமின்றி நிற்கவும், அவளைத் தேடி வந்த காயத்ரி, "ஹாய்... யாருப்பா இவர்?" என்று கேட்ட தோடு நில்லாமல், "வாட் டூ யூ வான்ட் சார்...?" என்றாள் பார்மலாக.

அதற்குள் இருவரும் தங்களைச் சுதாரித்துக் கொள்ள, "சாரி..." என்று சற்றுத் தடுமாறிவிட்டுக் கார்த்திக்,

ஷைலுவிடம் கேட்டதைக் காயூவிடம் கேட்க, "நேரே போய் லெப்ட் திரும்பினால் ப்ரின்சி ரூம்..." என்றவளுக்கு, "தேங்க்ஸ்!" என்றவன், ஷைலுவை ஒருமுறை பார்வை யால் வருடி விட்டு அங்கிருந்து அகல, காயத்ரி யோசனை யோடு அவனைப் பார்வையால் பின்தொடர்ந்தாள்.

மனோகரியின் ரூமுக்குப் போன கார்த்திக்கால், தன் அத்தையிடம் சரியாகப் பேசக் கூட முடியவில்லை. அவன் கண் முன்னே ஷைலுவின் முகம்தான் மின்னிக் கொண் டிருந்தது.

கவனத்தை இழுத்துப் பிடிக்க முடியாமல், அத்தை யிடம் முட்டி மோதி ஏதோ பேசிவிட்டு அவசரமாக வெளியில் வந்து, 'அவள் எங்கேயாவது தெரிகிறாளா?' என்று தேடினான்.

அவளைக் காண முடியாமல், 'ச்சே...! அவள் பேரைக் கூடக் கேட்காமல் விட்டேனே...! அந்தளவு மடையன் மாதிரி நடந்து கொண்டிருந்திருக்கிறேன்...!' என்று தனக்குள் சிரித்துக் கொண்டவன், 'நாளை மறுபடியும் வந்து அவளைப் பற்றி டீடெயில்ஸ் கலெக்ட் பண்ணணும்...!' என்று நினைத்தவாறே உற்சாகமாகப் பாடலைச் சீட்டியடித்துக் கொண்டே வண்டியில் ஏறிச் சென்றான்.

வீட்டில் காரைப் பார்க் செய்துவிட்டுப் பாடலை ஹம் செய்து கொண்டே உள்ளே நுழைந்தவனைக் கண்டதும், பெற்றோருக்கு ஒரே ஆச்சரியம். எவ்வளவு சந்தோஷம் இருந்தாலும், ஒரு சிரிப்பில் மட்டுமே வெளிப்படுத்து

பவன், இப்போது விடலைப் பையன் மாதிரி விசிலடிப்பது அதிசயமாக இருக்க, ரகசியமாகச் சிரித்துக் கொண்டார்கள்.

துள்ளலுடன் இரண்டிரண்டு படிகளாக மகன் ஏறிச் செல்வதை ரசித்தவர்கள், தங்களுக்குள், 'என்னவாக இருக்கும்...?' என்று பேசிச் சிரித்துக் கொண்டார்கள்.

இரவு, மகன் சாப்பிட வரவில்லை என்றதும், மகாலக்ஷ்மி மாடிக்குச் செல்ல, கார்த்திக் டிரெஸ்ஸைக் கூடக் கழற்றாமல் கட்டிலில் கவிழ்ந்து, தனக்குள் சிரித்த படி தனக்குள் சஞ்சரிப்பதைக் கண்டு, "யாரடா கண்ணு அந்தப் பொண்ணு...?" என்றார் புன்னகையுடன்.

தாயின் குரலில் நிகழ்காலத்திற்கு வந்தவன், கட்டிலில் இருந்து துள்ள எழுந்து, "அம்மா... உங்க ளுக்கு... எப்படி...?" என்று முடிக்காமலேயே ஆச்சரியத் துடன் வினவ,

"ஒரு தாய்க்குத் தன் பிள்ளையின் மனது புரியாதா?" என்றவர், "சொல்லுடா செல்லம்... யாரந்த அதிர்ஷ்டக் காரி...?" என்றார் முறுவலுடன்.

"தெரியலைம்மா... காலையில் நான் உங்களிடம் சொன்ன மாதிரி அழகு, மற்றும் அமைதியுடன் கூடிய ஒரு பெண்ணைப் பார்த்தேன்மா. ஏனோ அவளைப் பார்த்த திலிருந்து என் மனசு இறக்கை கட்டிப் பறக்குது. ஒரே பார்வையில் என் மனசில் பசை மாதிரி ஒட்டிக்கிட்டா. அவ கிடைச்சா நான் சந்தோஷமாக இருப்பேன்னு தோணு தும்மா...!" என்று கண்களில் கனவு மிதக்கப் பேசிய

மகனை, விநோதமாகப் பார்த்துக் கொண்டிருந்தார் அந்தத் தாய்.

இதுவரை தன் சந்தோஷங்களை யாரிடமும் வெளியிடாமல், அப்படியே பகிர்ந்து கொண்டாலும்... அதில் ஒரு கம்பீரமும், ஒரு நேர்த்தியுமாக நடந்து கொண்டவன், இன்று ஒரு சிறு பையன்போல பரீக் அவுட்டாகப் பேசுவதைக் கண்டு மலைத்துப் போயிருந்தவர், தன்னைச் சுதாரித்து, "எப்படிப்பா சொல்றே, அவள் கிடைத்தால் நீ சந்தோஷமாக இருப்பேன்னு...?" என்றார் ஆழமாக.

"ஆமாம்மா... நான் அவள் அழகை மட்டும் பார்க்கலை. அந்த முகத்தில் ஒருவிதமான சோகமும், அதனால் உண்டான அமைதியும் இருந்தது. அதுகூட அவளுக்கு ஒரு அழகைக் கொடுத்ததும்மா. உங்களுக்கும் அவளை மிகவும் பிடிக்கும். ஒரு தேவதை போலிருந்தாள். நம் வீட்டுக்கேத்த மருமகளாக இருப்பாள்னு எனக்கு நம்பிக்கை இருக்கும்மா...!" என்று பேசிக் கொண்டே சென்றவன், சற்று நிதானித்து, "உங்களுக்கு இதில் ஆட்சேபணை எதுவும் இல்லையே...?" என்றான் சிறு பயத்துடன்.

அவனின் கேள்விக்கு மென்மையாகச் சிரித்து, "கண்டிப்பாக இல்லை கண்ணா... உன் ஆசைகளுக்கு நாங்கள் என்றைக்கு மறுப்புச் சொல்லி இருக்கிறோம்...? நீ எவ்வளவு பொறுப்பான பிள்ளைன்னு எங்களுக்குத் தெரியும். நீ எது செய்தாலும் அது சரியாக இருக்கும் என்ற நம்பிக்கை எங்களுக்கு என்றைக்குமே உண்டு...!"

என்றவர், "சரி... அந்தப் பெண்ணின் பெயர் தெரியுமா?" என்று கேட்டார்.

அவரின் கேள்விக்கு, "ம்ஹூம்..." என்று உதட்டைப் பிதுக்க,

"எங்கே பார்த்தாய்...?" என்றார் அடுத்த கேள்வியாக.

"அத்தையின் காலேஜில்!" என்ற பதில் வந்ததும், சிறிது யோசித்தவர்,

"சரி... முதலில் அவளை யாரென்று விசாரித்து உன் காதலைச் சொல். மற்றதை அப்புறம் பார்த்துக்க லாம். இப்போ சாப்பிட வா...!" என்றழைத்தார்.

"ப்ளீஸ்மா... மனசு ரொம்பச் சந்தோஷமாக இருக்கு. கொஞ்ச நேரம் ஃப்ரீயா விடுங்களேன். நான் அப்புறம் வர்றேன்!" எனக் கண்ணால் கெஞ்ச, மகாவுக்குச் சிரிப்பு வந்தது.

அதைக் கட்டுப்படுத்தி, "சரிப்பா, உன்னிஷ்டம்," என்று நமட்டுச் சிரிப்புடன் திரும்பியவரை,

"தேங்க்ஸ்மா...!" என்று கட்டிப்பிடித்து முத்தமிட,

"இதெல்லாம் பெயர் தெரியாத அந்தப் பெண் ணுக்குச் சேமித்து வைப்பா...!" என்று குறும்புடன் கூறிச் சிரிக்க, கார்த்திக்கின் முகம் வெட்கத்தில் சிவந்து விட்டது.

தாய் சென்றதும், அவன் மீண்டும் ஷைலுவின் நினைவுகளில் மூழ்கி விட, அவளின் முகமே அவன் மனதில் மின்னிமின்னி மறைந்து கொண்டிருந்தது.

ஒரு நிமிடம்தான் பார்த்திருப்பான். அதற்குள் அந்த விழிகள் ஆயிரம் கதைகள் சொல்லியது வியப்பாக இருந்தது.

'என்ன அழகான பேசும் கண்கள்...?' அவனுக்கு நினைவு தெரிந்து, இந்த மாதிரிப் பேசும் விழிகளைப் பார்த்ததில்லை. அவள் முகம் ஒரு நிலவு போல் இருந்தது.

"பெண்ணிலா முகம் பார்க்க வெட்கப்பட்டுத்தான்
வான்நிலா பகலில் ஒளிந்து கொள்கிறாளோ...?
நீ இரவில் வெளியே வரமாட்டாய் என்றுதான்
தைரியமாக இரவில் உலாவுகிறாளோ...?"

என்று கவிதை கூட வந்தது.

முதன்முதலில் தன் மனது ஒரு பெண்ணிடம் சலனப்பட்டது அவனுக்கு அதிசயமாக இருந்தாலும், அந்த உணர்வே சுகமாக இருந்தது. 'அவளுக்கும் இந்த மாதிரி உணர்வு தோன்றுமோ...? நான் அவளைச் சலனப்படுத்தி இருப்பேனா...?' என்பது போன்ற கேள்விகளோடு உறங்க, கனவிலும் அவள் முகவரியே.

காலேஜும், கம்ப்யூட்டர் கிளாசும் முடிந்து, வீட்டுக்கு வந்து சாப்பிடுவது எல்லாவற்றையும் ஏதோ இயந்திர கதியில் செய்துவிட்டுப் படுக்கையில் விழுந்த பிறகுதான், அவளுக்கு இன்றைக்கு மனது ஒரு நிலையில் இல்லை யெனப் புரிந்தது. மனது சந்தோஷமாக இருக்க ஆசைப் பட்டாலும், உள் மனது அதற்குக் கடிவாளம் போட்டது. 'இது சரியில்லை!' என்று மனச்சாட்சி உறுத்தியது.

காலேஜில் இருந்து திரும்பும்போது காயத்ரி துருவித் துருவிக் கேள்விகள் கேட்க, ஷைலு எதற்கும் வாயைத் திறக்கவில்லை. எல்லாவற்றிற்கும், "ஒன்றும் இல்லை... சும்மா உளறாதே!" என்று சமாளித்து வைத்தாள். 'இன்றைக்கு ஓ.கே. ஆனால் எத்தனை நாள் இநத மாதிரிச் செய்ய முடியும்?'

கார்த்திக்கைப் பார்த்த அந்த நிமிடமே, ஏதோ நூறு ஜென்மம் பார்த்துப் பழகின மாதிரி ஒரு உணர்வு எழுந்தது அவளுக்கு ஆச்சரியமாகவும், அதே சமயம் விநோதமாகவும் இருந்தது.

'காலேஜில் எத்தனை ஆண்களைத் தினமும் பார்க்கிறேன். அவர்களைப் பார்த்தால் எதுவும் தோன்றவில்லையே! ஆனால், அந்தப் புதியவனைப் பார்த்ததும் என் மனது நிலை கொள்ளவில்லையே! ஏன்? அக்காக்கள் சொல்கிற மாதிரி, எனக்கு மனசை அடக்கத் தெரியவில்லையா? அல்லது பக்குவம் போதவில்லையா?' என்று யோசிக்க யோசிக்கத் தலை வலித்தது.

'என் மனது சலனப்பட்ட மாதிரிதான் அவனுக்கும் தோன்றியிருக்குமோ? அதனால்தான் என்னை மாதிரியே அவனும் ஃப்ரீசாக நின்று விட்டானோ? காயத்ரி கூப்பிட்ட பிறகுதானே சுயநினைவிற்கு வந்தோம்? காயத்ரியைத் தவிர வேறு யாரும் பார்த்திருந்தால் என்ன நினைத்திருப்பார்கள்...?' என்று தோன்றியதுமே, 'ஐயோ...!' என மனது பதறியது.

'அவன் யாரென்றும் தெரியவில்லை. நல்லவனா, கெட்டவனான்னும் தெரியாது. இவ்வளவு அழகாக இருக் கிறவனை, எந்தப் பெண்ணும் விட்டு வைத்திருக்க மாட் டாள். ஒருவேளை அவனுக்கு நான் பத்தோடு பதி னொன்றா...?' என்ற சிந்தனை ஓட, இன்னொன்றும் தோன்றியது.

'நான்தான் இந்த ராத்திரி நேரத்தில் அவனைப் பற்றிப் பைத்தியம் மாதிரி நினைத்துக் கொண்டிருக் கிறேனோ...? இல்லை, நானும் அவன் மனதைச் சலனப் படுத்தி இருப்பேனா? நாளை என்னைத் தேடி வருவானா? அப்படியே வந்தாலும், என்னால் அவனை மனதார ஏற்றுக்கொள்ள முடியுமா?' என்று யோசித்துக் கொண்டி ருந்தவள்,

யோசனை போன பாதை மண்டையில் உறைக்க, 'ஐயோ...! என்ன இது... இந்த ரீதியில் யோசித்துக் கொண்டிருக்கிறேன்...? ஒரு தடவை தப்பே செய்யாமல் பட்டது போதாதா? மறுபடியும், நீங்கள் நினைப்பது மாதிரி தான் நான் என்று அவர்களுக்கு நிரூபிப்பது மாதிரி ஆகி விடுமே!

'ச்சே...! போதும். இந்தக் குப்பை நினைப்பை எல்லாம் தூக்கிப் போட்டு விட்டு, ஒழுங்காகப் படித்துச் சொந்தக் காலில் நிற்க வேண்டும். நம் ஆசைப்படி ஏதாவது சமூக சேவை மையத்தில் சேர்ந்து, நாலு பேருக்கு உருப்படியாய் ஏதாவது செய்ய வேண்டும். இந்தக் காத லும் வேண்டாம்... கத்தரிக்காயும் வேண்டாம். போதும், இப்போது நான் அனுபவிக்கிறதே.

'காயத்ரி நாளை ஏதாவது கேட்டால், ஒன்றும் இல்லைன்னு தெளிவாகச் சொல்லி விட வேண்டும். கடவுளே! நீதான் எனக்கு மன உறுதியைக் கொடுக்க வேண்டும்!' என்று வேண்டியபடி படுத்துக் கண்களை இறுக்கமாக மூடிக் கொண்டாள்.

விழிகளை மூடினாலே புதியவனின் முகம்தான் அவள் கண் முன் வந்து போனது. 'ஈஸ்வரா! இது என்ன சோதனை? என்னால் என் மனசை வெல்ல முடியாதா?' என்ற வேதனையோடு கண்ணீரில் கரைந்தவளுக்குக் காரணமில்லாமல் அந்தப் புதியவன்மேல் கோபம் பீறிட்டது.

'ஏன்டா என் கண் முன்னே வந்தாய்? இத்தனை நாள், நிம்மதி இல்லையென்றாலும், இந்த அளவு வேதனை இல்லாமல் இருந்த என் வாழ்க்கை என்னும் குளத்தில் சலனம் என்ற கல்லை எறிந்து விட்டாயே!' என்ற புலம்பல்களோடு கண்ணயர்ந்தாள்.

காலையில் உற்சாகமாகப் படியிறங்கி வந்த கார்த்திக், டைனிங் ஹாலில் தனக்காகப் பெற்றோர் காத்துக் கொண்டிருந்ததைக் கண்டதும், "குட்மார்னிங்மா... குட் மார்னிங்பா..." என, மகா ஒரு புன்சிரிப்பைப் பதிலாக வழங்க, விஸ்வநாத்தோ பதிலுக்குக் குறும்புடன்,

"குட் அண்ட் ஹாப்பி மார்னிங் கார்த்திக்..." என்றதும், தந்தையின் குறும்பிற்குக் காரணம் புரிய,

"ஹையோ...! ஏன்பா இப்படிக் காலையிலேயே ஓட்டறீங்க...?" என்று சிரித்தான்.

"நேத்து நைட்டு அம்மா சொன்னா... ஐயா ஏதோ ஒரு பொண்ணு கிட்டே மாட்டிக்கிட்டீங்கன்னு. ஆமா... என்னவோ காலையில், கல்யாணம் செய்து கொள்கிற ஃபீலிங் வரவில்லை... அது, இது என்றாய்...? மதியத்துக்குள் எப்படிப்பா உன் மனசு மாறிச்சு...?" என்றவர், குறும்புடன், "லவ் அட் ஃபர்ஸ்ட் சைட்டா கார்த்திக்...?" என்றார் கண் சிமிட்டி.

தந்தையின் பேச்சில் மகனின் முகம் சிவக்க, ஒரு கையால் தலையைக் கோதிக்கொண்டே உதட்டைக் கடித்து வெட்கப்பட, தாயின் மனம் பூரித்தது.

விஸ்வநாத்தோ அர்த்தமாகச் சிரித்து, மனைவியிடம் கண்ணைக் காட்டி, "என்ன கார்த்திக்... பதிலே இல்லை...?" என்று மீண்டும் வார,

"டாட்... ப்ளீஸ்...!" என்றான் கொஞ்சலாக.

"ஓ.கே... ஓ.கே... ஜோக்ஸ் அபார்ட்... இப்போ சீரியஸாகக் கேட்கிறேன், பார்த்ததும் நீ அந்தப் பெண் மேல் காதல் வந்தது என்கிறாய்... அவளைப் பற்றி உனக்கு என்ன தெரியும்? அவளுடைய படிப்பு, குணம், குடும்பம், அட்லீஸ்ட் அவள் பெயர்...! எதுவும் தெரியாமல், இது எப்படிச் சாத்தியம் கார்த்திக்?" என்றார் உண்மையிலே புரியாமல்.

ஒரு நொடி அமைதி காத்தவன், "அப்பா... உங்களுக்கு என்னைப் பற்றி நல்லாத் தெரியும். என் பிசினஸ் சர்க்கிளில் இதுவரைக்கும் நிறையப் பெண் களைச் சந்தித்திருந்தாலும், என் மனதில் இந்த மாதிரி உணர்வே ஏற்படவில்லை.

"ஆனால், இவளைச் சந்தித்த முதல் பார்வை யிலேயே என் மனதில் அழுத்தமாகச் சிம்மாசனம் போட்டு அமர்ந்து விட்டாள். அந்த நிமிடம் எனக்கு, 'ஷீ இஸ் மை கேர்ள்!' என்றுதான் தோன்றியது. இதை நம்புவதற்குச் சிரமமாக இருந்தாலும், இதுதான் உண்மை!" என்றவன், தொடர்ந்து,

"இத்தனை வருடத் தொழில் அனுபவத்தை வைத்துச் சொல்கிறேன்... அவள் முகத்தில் அமைதியும், புத்திசாலிகளுக்கு உண்டான ஒரு முகக் களையும் இருந் தது. அது என் மனதில் அழுத்தமாகப் பதிந்து விட்டது. அவளுடைய குடும்பத்தைப் பற்றி எனக்குக் கவலை யில்லப்பா..." என்று சொல்ல, விஸ்வநாதனும் மகாவும் கவலையுடன் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டனர்.

இதைக் கவனித்தவன், "என்னப்பா அப்படிச் சந்தேகமாகப் பார்க்கிறீங்க...?" என,

"கார்த்திக்... இப்போ நான் சொல்வதைக் கவனமாகக் கேள். எப்போதும் உன்னுடைய விருப்பத் திற்குத் தடையாக நாங்கள் இருக்க மாட்டோம். முதலில் அவளைப் பற்றி விசாரி. அவள் பெயர், கல்யாணம் என்கிற ப்ரொபோஸல் எதுவும் ஏற்கெனவே இருக்கிறதா,

இல்லையான்னு. எங்களுக்கு அவள் குடும்பம் வசதி இல்லையென்றாலும் கவலை இல்லை. ஆனால், உனக்கு ஏற்றவளாக இருக்கணும்.

"கல்யாணம் என்பது ஆயிரம் காலத்துப் பயிர். கல்யாணம் செய்யப் போகிற பெண் நல்லவளாக, குணவதியாக இருந்தால்தான் நீயும் நிம்மதியாக இருப்பாய்... அதைப் பார்த்து நாங்களும் நிம்மதியாக இருக்க முடியும். புரிகிறதா?" என்றார் ஒருவிதத் தவிப்புடன்.

தந்தையின் பேச்சு கார்த்திக்குக்குப் புரியவில்லை என்பது அவனின் பார்வையிலேயே புரிய, "நீ எனக்கு ஒரு சத்தியம் செய்து தர வேண்டும்..." என்றதும்,

அவனின் முகம் மேலும் குழப்பமுலாம் பூசிக் கொள்ள, அவர் தொடர்ந்து, "சப்போஸ்... நீ நினைக்கிற மாதிரி அவள் இல்லை, அல்லது அவளுக்கு ஏற்கெனவே மேரேஜ் ப்ரொபோஸல் இருக்கிறது என்றால், நீ எந்தப் பாதிப்பும் இல்லாமல், திரும்ப எங்களுக்குக் கிடைக்கணும். லவ் ப்ரேக் அப்னு ஆகிவிடக் கூடாது..." என்றதும், கார்த்திக் ஏதோ சொல்ல முயல, அவனைக் கையமர்த்தினார்.

"ஏன் சொல்கிறேன் என்றால், உன்னுடைய எக்ஸைட்மென்ட்டைப் பார்த்தால், எங்களுக்குக் கொஞ்சம் பயமாக இருக்கிறது. நீ ஸ்ட்ராங் பெர்சனாலிட்டிதான். இருந்தாலும் எப்படிப்பட்ட மன உறுதியுள்ள மனிதனையும் இந்தக் காதல் பலவீனமாக்கி விடுமே! அதனால்தான் இப்படிக் கேட்கிறேன். உன்னால் எங்களுடைய பயத்தைப்

புரிஞ்சுக்க முடியுதா கார்த்திக்...?" என்று நிறுத்தினார் சற்றுக் கவலையுடன்.

அவரின் பயம் புரிந்து, மென்மையாகச் சிரித்து, "ஷ்யூர் டாட்... நிச்சயமாக நீங்கள் கவலைப்படும்படி எதுவும் ஆகாது. சோ, டோன்ட் வொர்ரி...!" என்றான் உறுதியுடன்.

"ஓ.கே. கார்த்திக். அவளைப் பற்றிய டீடெய்ல்ஸ் வேணும்னா, மனோகரியிடம் கேட்கலாமே...!" என்ற தந்தையின் ஆலோசனையைக் கொஞ்சம்கூட யோசிக்காமல் மறுத்து விட்டு,

"இப்போதைக்கு அத்தைக்கு எதுவும் தெரிய வேண்டாம்!" என்றான் அவசரமாக.

அவனின் மறுப்பைப் பரிசீலித்தவர், "இதுவும் கரெக்ட்...!" என,

அதுவரைக்கும் அப்பாவும் பிள்ளையும் பேசிக் கொண்டிருந்ததைத் தலையிடாமல் கவனித்துக் கொண்டிருந்த மகாலக்ஷ்மி, "சரி கார்த்திக்... அப்பா சொன்னதை ஞாபகம் வைத்துக் கொள். எதுவாக இருந்தாலும் அதை ஏற்றுக்கொள்ளும் பக்குவத்தோடு செய்...!" என்று அறிவுறுத்தியவர், "சரி. மணியாச்சு, சாப்பிடுங்க!" என்றார்.

சாப்பிட்டு முடித்துப் பெற்றவர்களிடம் விடை பெற்றுக் கம்பெனிக்குச் சென்றவன், கம்பெனி வளாகத்தில் நுழைந்து வண்டியைப் பார்க் செய்து விட்டு உள்ளே நுழைந்ததும், வேலை செய்பவர்களின் வாழ்த்தை

ஏற்றுப் பதிலுக்கு வாழ்த்தி விட்டுத் தன்னுடைய சீட்டில் அமர்ந்தான்.

அன்றைக்குச் செய்ய வேண்டிய வேலைகளைச் சரிபார்த்து, ஒரு வெளிநாட்டுக் கம்பெனிக்குக் கொடுக்க வேண்டிய பதில்களைக் கொடுத்து நிமிர்வதற்குள் மணி பன்னிரண்டு ஆகியிருந்தது. சீட்டின் பின்னால் சாய்ந்து, கைகளை மேலே தூக்கி நெட்டி முறித்து விட்டு வசதியாகச் சாய்ந்து அமர்ந்து, 'கல்லூரியில் பார்த்தவளைப் பற்றித் தெரிந்து கொள்ள, எங்கிருந்து தொடங்குவது?' என்று யோசிக்க, ஒரு ஐடியாவும் கிடைக்கவில்லை.

'மறுபடியும் காலேஜுக்குப் போகலாமா? இல்லை, அவள் கல்லூரியை விட்டு வெளியே வரும்போது பார்க்கலாமா? அப்படியே காலேஜுக்குப் போனால், யாரிடம் யாரை என்று விசாரிப்பது?' என்று யோசித்துக் கொண்டிருக்கும்பொழுது அவனின் செல்போன் சிணுங்கியது.

டிஸ்ப்ளேயில் நம்பர் பார்த்தவுடன் கார்த்திக்கின் மனம் துள்ளிக் குதிக்க, 'ச்சே! இவனை எப்படி மறந்தேன்? இவனுடைய தம்பியும்தானே அத்தையின் கல்லூரி யில் படிக்கிறான்? இவனிடம் சொன்னால், தம்பியிடம் சொல்லி விசாரிக்க மாட்டானா...?' என்று தோன்றியதும், மனம் சந்தோஷத்தில் துள்ளியது.

போனை ஆன் செய்து, "ஹாய் சந்தோஷ்... வாட் எ ப்ளசென்ட் சர்ப்ரைஸ்...! திடீரென்று போன் செய் கிறாய்...?" என்றான் துள்ளலாக.

"டேய்... டேய், நிறுத்துடா. நான் உனக்குப் போன் செய்து கொண்டுதான் இருக்கிறேன். திருவாளர் கார்த்திக் தான் ஊரிலே இருப்பதில்லையே!" என்று வாரினான்.

அவனின் கேலிக்குச் சிரித்து, "சாரிடா... நான் ஊரிலிருந்து வந்து இரண்டு நாள்தான் ஆயிற்று. கொஞ்சம் பிஸியாக இருப்பதினால் உன்னைக் கூப்பிட முடியவில்லை..." என்று விளக்கமளித்தவன், "அது இருக்கட்டும்... உன் காதல் எந்த அளவில் இருக்கிறது?" என்றான் விசாரிப்பாக.

"ஹும்... அதைப் பற்றித்தான் பேசக் கூப்பிட்டேன். சரி, நீ இப்போ எங்கே இருக்கிறாய்? கம்பெனியிலா? வீட்டிலா?" என்றவனுக்கு,

"நானும் உன்னிடம் அவசரமாகப் பேசணும்... ப்ளூ டால்பின் ரெஸ்டாரண்டுக்கு வருகிறாயா...? லஞ்சை அங்கேயே முடிச்சிக்கலாம்...!" என்றான்.

"டன்...!" என்றவன், போனை வைத்து விட, கார்த்திக் ரெஸ்டாரண்டிற்குப் போன் செய்து டேபிள் ரிசர்வ் செய்தவன், மீதி வேலைகளை முடித்து விட்டு ஹோட்டலை அடைந்ததும், வெளியே நின்றிருந்த சந்தோஷ், வேகமாக வந்து கையைக் குலுக்கினான்.

"எப்படிடா இருக்கே...? பார்த்து ரொம்ப நாளாச்சு. போனில் மட்டுமே பேசிக் கொள்கிறோம். எனக்கு என் ஆபீஸ்... உனக்கு உன் சாப்ட்வேர் கம்பெனி...!" என்றான் படபடவென்று.

அவனின் பேச்சுக்குப் புன்னகைத்து, "ம்ம்... நல்லா இருக்கேன். என்ன, கொஞ்சம் ஆபீசில் பிஸி...!" என்ற வன், "ஏதோ பேச வேண்டும் என்றாயே...! என்ன விஷயம்? ஏதாவது ப்ராப்ளமா?" என்று நேரே விஷயத் திற்குத் தாவினான்.

அவன் எப்பொழுதுமே அப்படித்தான். எதையும் சுற்றி வளைத்துப் பேச மாட்டான். எதைப் பேச நினைக் கிறானோ, அதை நேரடியாகக் கேட்டு விடுவான்.

"ஆமாம்டா...! வா, உள்ளே போய்ப் பேசலாம்...!" என,

இருவரும் ரிசர்வ் செய்த டேபிளில் அமர்ந்ததும் பேரரை அழைத்து மெனு ஆர்டர் பண்ணி விட்டு, "ம்ம்... இப்போ சொல்லு, என்ன ப்ராப்ளம்?" என்றான்.

அதற்காகவே காத்திருந்தது போல், "டேய்... உனக்கு என் காதலைப் பற்றித் தெரியும் இல்லையா...?" என,

"ஆமா... அதுக்கென்ன இப்போ...? அதில் ஏதாவது சிக்கலா? உன்னை விடப் பெட்டரா யாராவது கிடைத்து, உன்னை வேண்டாம் என்று விட்டாளா...?" என்றான் கார்த்திக் கேலியாக.

"டேய்...போதும்டா கேலி. நீ மாட்டாமலா போவே...! அப்போ இருக்கு கச்சேரி!" என்று மண்டகப்படி செய்தவன், "என் காதல், என் வீட்டில் தெரிந்து ஒரே பிரச்சினை. உனக்குத்தான் அப்பாவைப் பற்றித் தெரியுமே! அவ ருக்குக் காதல் என்றாலே அவ்வளவு கசப்பு. காதலிப் பவர்கள் எல்லாம் அவரைப் பொறுத்தவரை எதிரிகள்.

"என் காதல்பற்றித் தெரிந்ததும் தாம்தூம்னு குதிக்கிறார். அதனால் எனக்கும் அப்பாவுக்கும் ஒரு வாரமாக ஒரே சண்டை. நானும் எவ்வளவோ கெஞ்சிப் பார்த்துட்டேன். ம்ஹூம்... மசியவே மாட்டேன்கிறார். அதான் எனக்கு ஒன்றும் புரியவில்லை. நீதான் ஏதாவது ஐடியா சொல்லேன்...!" என்றான் சந்தோஷ் பரிதாபமாக.

அதுவரை கவனமாகக் கேட்டுக் கொண்டிருந்தவன், "சரி... ஸ்வேதா வீட்டில் என்ன சொல்கிறார்கள்? அவர் களுக்குச் சம்மதமா?" என்றவனுக்கு,

"ம்ம்... அவர்கள் வீட்டில் எல்லோருக்கும் ஓ.கே. எனக்கு ஒரு வாரம்தான் டைம் கொடுத்திருக்கிறார்கள், எங்கள் வீட்டில் சம்மதம் வாங்க. இன்னும் ஒரு மாதத்தில் ஸ்வேதாவின் பெற்றோர், அவள் அக்காவின் பிரசவத் திற்கு அமெரிக்காவுக்குச் செல்ல இருப்பதால், அதற்குள் ஸ்வேதா கல்யாணத்தை முடிச்சிடணும்னு நினைக் கிறாங்க.

"என்னால் ஒரு வாரத்திற்குள் சம்மதம் வாங்க முடிய வில்லை என்றால், அவளை அவளின் தாய் மாமாவிற்கு முடித்துவிடுவார்களாம். அவன் ஆஸ்திரேலியாவில் வேலை செய்கிறானாம். அவனுக்குத்தான் ஸ்வேதா என்று இருந்தார்களாம். எங்கள் காதல் விஷயம் தெரிந் ததும், அங்கேயும் சண்டை போட்டு ஒரு வழியாகச் சம்மதம் வாங்கி, இந்த ஒரு வார கண்டிஷனில் நிற்கிறது!" என்று மூச்சிரைக்கச் சொல்லியவன், "நீதான்டா ஏதாவது செய்யணும்!" என்றான் கசங்கிய முகத்தோடு.

அதற்குள் அவர்கள் ஆர்டர் கொடுத்த அயிட்டம் வந்து விடவே, "முதலில் சாப்பிடு. கவலைப்படாதே, நான் அப்பாவிடம் பேசுகிறேன்..." என்றதும்,

"ஆமாம் கார்த்திக்... அவருக்கு உன்னிடம் எப் போதுமே ஒரு சாப்ட் கார்னர் உண்டு. அதுமட்டும் இல்லை... உனக்குப் பேச்சுத் திறமையும் அதிகம். அதனால் ஒருவேளை நீ பேசினால் ஒத்துக் கொள்வார்!" என்ற சந்தோஷின் பேச்சிற்குச் சிரிப்பு வந்தது.

"ஆஹா... ஐஸ் மன்னனே! போதும்ப்பா... எனக்குக் கோல்ட் வந்து இந்தச் சமயம் பார்த்து உடம்பு சரி யில்லாமல் போய்விடப் போகுது!" என்று சிரித்த நண்ப னின் பேச்சுப் புரியாமல்,

'என்ன...? இந்தச் சமயமா...?' என்று குழம்பியவன், சட்டென்று முகம் லைட் போட்டாற் போன்று ஒளிர, "ஹேய்... ஏதாவது மேட்டரா? சொல்லவே இல்லையே!" ஆர்வமாகக் கேட்டவன், சட்டென்று ஞாபகம் வந்தவ னாகத் தன் தலையில் கொட்டிக் கொண்டு, "ஓ... ஆமா...! நீ போனில் ஏதோ என்னிடம் பேசணும்னு சொன்னே... நான்தான் என் பிரச்சனையில் உன் விஷயத்தை மறந்தே போய் விட்டேன்..." என்று தன்னையே குற்றஞ்சாட்டிக் கொண்டு, "சொல்லு... சொல்லு... என்ன, லவ் மேட்டரா?" என்று கண்ணடித்தான்.

நண்பனின் ஆர்வத்தைக் கண்டு சிரிப்பு வந்தாலும், உடனேயே எதுவும் பேச முடியாமல், சிறிது நேரம் சாப் பாட்டை ஸ்பூனால் அளைந்து கொண்டிருந்தவன்,

தொண்டையைச் செருமிக் கொண்டு சொல்ல ஆரம் பித்தான்.

"சந்தோஷ்... இப்போ நான் சொல்லப் போற விஷயத்தைத் தெளிவாகப் புரிஞ்சுக்கோ..." என்று புதிர் போட்டவன், முதல் நாள் ஷைலுவைப் பார்த்ததிலிருந்து, அப்பா, அம்மா பேசியது என்று எல்லாவற்றையும் சொல்லி முடித்ததும், கேட்டுக் கொண்டிருந்த சந்தோஷ், ஆனந்தத்தில் துள்ளிக் குதித்தான்.

"கடைசியில் நீயும் காதல் கடலில் தொபுகடீர்னு குதித்து விட்டாயா? நான் லவ் பண்ணும்போது எப்படி யெல்லாம் என்னைக் கிண்டல் செய்வே, இப்போ மாட் டினியா? கங்கிராட்ஸ்! இதைக் கேட்கவே ரொம்பச் சந்தோஷமாக இருக்குடா...!" என்று சிரித்து விட்டு,

"ஆனாலும் எனக்கு ஒரு விஷயம் ஆச்சரியமாக இருக்கு... நீ என்னை மாதிரி அவசரக் குடுக்கை இல்லைன்னு தெரியும்... அதுதான் லவ் அட் ஃபர்ஸ்ட் சைட் என்றவுடன் நம்பறது கொஞ்சம் சிரமமாக இருக் கிறது. எப்படியோ, உன் தேர்வு பெஸ்ட்டா இருக்கும் என்ற நம்பிக்கை இருக்கிறது. சரி, இதில் என்ன பிரச்சனை உனக்கு?" என்றான் புரியாமல்.

"ஹே ஃபூல்... அவள் யார், அவளுடைய பெயர், என்ன படிக்கிறாள்...? அவளுக்கு ஏற்கெனவே மேரேஜ் புரொபோஸல் இருக்கா, இல்லையா என்கிற டீடெய்ல்ஸ் வேண்டாமா?" என்றான்.

"ஓ...! யெஸ்... யெஸ்... நீ அதைப் பற்றிக் கவலைப் படாதே. உடனே தெரிஞ்சுக்கலாம். ஷிவாவும் அந்தக் காலேஜில்தானே படிக்கிறான்... அவனிடம் நீயே விசாரி. எப்போ வீட்டுக்கு வர்றே...?" என, கார்த்திக் அவனை முறைத்தான்.

"இடியட்... எனக்கும் அது தெரியும்!" என்று புன்னகையுடன் கூறியவன், "இப்போ வர முடியாது, முக்கியமான வேலைகள் எல்லாம் இருக்கு. அதை முடிச்சிட்டுச் சாயங்காலமாக வந்தால், ஷிவாவும் வீட்டில் இருப்பான், அவனிடம் பேசிவிட்டு, அப்படியே உன் அப்பாவிடம் உன் கல்யாண விஷயத்தையும் பேசி ஒரு முடிவு செய்து விடலாம். சரியா?" என்றதும், சந்தோஷ் மகிழ்ச்சியாகத் தலையாட்ட, இருவரும் சாப்பிட்டு விட்டு அங்கிருந்து கிளம்பினார்கள்.

சுஜா நிவாஸ்...

காலையில் எப்போதும் போல எழுந்து வேலை களை முடித்து விட்டுக் கல்லூரிக்குக் கிளம்பிக் கொண் டிருந்த ஷைலுவின் அறைக்கு வந்த தம்பியைக் கண் டதும் ஆச்சரியமாக நோக்கி, "ஸ்கூலுக்கு நேரமாகுதே... இன்னும் கிளம்பவில்லையா?" என்றவள், "இன்றைக்குக் கெமிஸ்ட்ரி எக்ஸாம்னு சொன்னியே... ப்ரிப்பேர் செய்திட்டியா?" என்றாள் அக்கறையாக.

"அதெல்லாம் சூப்பராகப் படிச்சிட்டேன். சந்தேகம் வந்தால் சொல்லித் தர நீ இருக்கும்போது எனக்கென்ன

கவலை?" என்றவன், "நான் வந்தது அதற்காக இல்லை. நேற்று நீ காலேஜ் முடித்து வீட்டுக்கு வரும்பொழுது உன் முகமே சரியில்லையே...! ஏன்? நம்ம வீட்டு இரட்டை ஹிட்லர்ஸ் உன்னை ஏதாவது சொன்னார்களா?" என்றவன், தொடர்ந்து,

"அவர்கள் அப்படியே ஏதாவது சொன்னாலும் நீ ஏன் அவர்களை எதிர்த்துப் பேச மாட்டேன் என்கிறாய்? நீயும் இந்த வீட்டுப் பெண்தானே? அப்படியிருக்கும் பொழுது, அவர்கள் என்ன சொன்னாலும் நீ அமைதி யாக இருக்கிறது எந்த விதத்தில் நியாயம்? நீ இப் படியே இருந்தால், அவர்கள் மேலும் மேலும் உன்னை நோகடித்துக் கொண்டேதான் இருப்பார்கள்.

"அம்மாவைக் கேட்டால், 'நான் என்ன செய்வது? அவர்கள் இருவரும் பெரியவர்கள், அவர்களிடம் சண்டை போட்டால், வீட்டின் அமைதிதான் கெடும். அதுமட்டு மில்லாமல், நான் ஷைலுவுக்குச் சப்போர்ட் செய்தால், அவர்களுக்கு அவள் மேல் துவேஷம்தான் அதிக மாகும். அதனால்தான் நான் கண்டுகொள்ளாத மாதிரிப் போகிறேன்'னு ஏதோ ஒரு காரணம் சொல்கிறார்கள்..." என்று படபடவென்று கோபத்துடன் பொரிய... தன் மேல் தம்பியின் பாசத்தைக் கண்டு நெகிழ, அதன் விளை வாகக் கண்கள் பூத்தன.

தம்பிக்குத் தெரியாமல் கண்ணீரை மறைத்து, "விக்கி... என்னை யாரும் எதுவும் சொல்லவில்லை. நான் நல்லாத்தான் இருக்கேன். நேற்று கம்ப்யூட்டர் கிளாசில்

ஒரு ப்ரோக்ராம் செய்யும்போது, கோடிங் சரியாக வராமல் கொஞ்சம் கஷ்டப்பட்டுட்டேன். அதனால் ஒரே தலைவலி... மற்றபடி ஒன்றும் இல்லை...!" என்று கோவையாகப் பொய் சொல்லி அவனைச் சமாதானம் செய்தவள்,

"சரி, எனக்கு நேரமாச்சு... உனக்கும் நேரமாச்சு. கெமிஸ்ட்ரி எக்ஸாம் நல்லா எழுது. ஆல் த பெஸ்ட்..!" என்றவள், தாயிடம் சொல்லிவிட்டு வீட்டைவிட்டு இறங்கினாள்.

'எப்படியோ விக்கியிடம் சமாளித்துவிட்டேன். காயத்ரியிடம் எப்படிச் சமாளிப்பது...?' என்ற யோசனை மண்டையை வண்டாய்க் குடைந்தது.

இவளையே பார்த்துக் கொண்டிருந்த காயத்ரிக்கோ, 'இவள் நேற்றிலிருந்தே சரியில்லையே...! இவள் மனதில் என்னவோ இருக்கு...!' என்ற யோசனை ஓடியது.

ஷைலு நெருங்கியதும் அவளுடன் இணைந்து நடந்து கொண்டே திரும்பித் திரும்பித் தோழியின் முகத்தை ஆராய்ச்சி செய்து கொண்டிருக்க, இது எதுவும் அறியாத ஷைலு, வேறு ஏதோ நினைவில் அமைதியாக நடந்தாள்.

ஷைலு பொதுவாகவே அதிகமாகப் பேச மாட்டாள் என்றாலும், வழக்கத்திற்கு மாறான அமைதி, காயுவை நிறையவே சிந்திக்க வைத்தது.

'ஒரு வேளை நேற்று வந்த அந்த நெட்டையனைப் பற்றி நினைத்துக் கொண்டிருக்கிறாளோ! ஆள் ஹேண்ட்சம்மாகத்தான் இருந்தான்... அவனும் ஷைலு

வையே பார்த்துக்கொண்டு இருந்தானே...! ம்ஹூம்... ஷைலுவை யார்தான் பார்க்காமல் போவார்கள்? அவளுடைய அழகுக்கு ஆண்கள் வாய் பிளந்து கொண்டு பார்ப்பது புதிது இல்லையென்றாலும், அந்தப் புதியவனின் பார்வை புதிதாக இருந்தது.

'ஒருவேளை ஷைலுவும் இப்பொழுது அவனைப் பற்றித்தான் நினைத்துக் கொண்டிருக்கிறாளா...? அப்படியே நினைத்தாலும், அவன் யாரென்றே இவ ளுக்குத் தெரியாது. நேற்று ப்ரின்சியைப் பார்க்கத் தான் வந்தான். இன்றும் இவளைப் பார்க்கவென்றே வருவானா? என்ன கண்றாவி இது? ஒரு மண்ணும் புரியவில்லையே! இவள் என்னடாவென்றால், வாயைத் திண்டுக்கல் பூட்டுப் போட்டுப் பூட்டிக் கொண்டிருக்கிறாள்...' என்ற ரீதியில் எண்ணங்கள் ஓடின.

அவளைப் பலமுறை அழைத்து விட்ட ஷைலு, "ஹலோ மேடம்... எந்தக் கோட்டையைப் பிடிக்க இந்தப் பலமான யோசனை, நான் கூப்பிடுவது கூடக் காதில் விழாமல்...?" என்று அவளின் தோளைத் தொட்டு உலுக் கினாள்.

தோழியின் தொடுகையில் தன் சிந்தனையைத் தூரத் தள்ளி வைத்து, "பெரிசா ஒன்றுமில்லை... தஞ்சாவூர் கோட்டையைப் பிடிக்கத்தான் யோசித்துக் கொண்டிருக்கிறேன். ஆனால், ஐடியாதான் ஒன்றும் உதிக்கவில்லை!" என்று சிரிக்காமல், பரிதாபமாக உதட் டைப் பிதுக்க, ஷைலு வாய் விட்டுச் சிரித்தாள்.

"ஏன்...? உன் மாமாதான் இருக்கிறாரே... நீ என்ன சொன்னாலும் தஞ்சாவூர் பொம்மை மாதிரித் தலை யாட்டுவாரே! அவரிடம் கேட்க வேண்டியதுதானே... என்ன, கொஞ்சம் மூளையைக் கசக்கிப் பிழிந்து யோசிக்கணும். அதனால் கொஞ்சம் கஷ்டம்தான். நல்ல ஐடியா கிடைக் காது, பாவம்!" என்றாள் சிரிக்காமலே.

அவளின் கேலி புரிந்து, "போடி... உனக்கு எப்போ பார்த்தாலும் என் மாமாவைக் கிண்டல் பண்றதே வேலை யாகப் போச்சு. சரி, என் மாமாவைக் குறை சொல் கிறாயே... உனக்கு வருகிறவன் எப்படி இருக்க வேண் டும்னு நினைக்கிறே...?" என்றாள் சமயத்தை நழுவ விடாமல்.

அதைக் கேட்டு ஷைலுவின் முகம் ஒரு நிமிஷம் வெளுத்து விட, காயத்ரி பார்க்காமல் திரும்பிச் சமாளித்து, "இப்போ என்ன அதைப் பற்றிப் பேச்சு...? அப்படி ஒன்று நடக்கும்போது பார்க்கலாம்..." என்று சுருக்கென முடிக்க, ஷைலுவின் முக மாற்றத்தைக் கண்ட காயத்ரி, தனக்குத் தேவையான பதில் கிடைத்து விட்டது போல் மனதிற்குள் சிரித்துக் கொண்டாள்.

இருவரும் பேசிக்கொண்டே கல்லூரியை அடைந்து, நண்பர்களின் காலை வணக்கத்திற்குப் பதில் வணக்கம் சொல்லி விட்டுத் தங்கள் கிளாசில் அமர்ந்தார்கள்.

அவர்கள் கிளாசைத் தாண்டிச் சென்ற ஷிவா, ஷைலுவைக் கண்டதும், "குட் மார்னிங் ஷைலு..." என்று

சிரிக்க, பதிலுக்குக் கண்ணுக்கு எட்டாத புன்னகையைத் தந்து விட்டு ஷைலு திரும்பிக் கொள்ள, ஒரு பெரு மூச்சுடன் தன் கிளாஸ் நோக்கிச் சென்றான்.

வழக்கம் போல் கிளாஸ் முடிந்து மதியம் லஞ்ச் டைம் வர, காயத்ரியைப் பரபரப்புத் தொற்றிக் கொண்டது. அவள் கணிப்புப்படி, நேற்று வந்தவன் ஷைலுவை விரும்பினால் எப்படியும் அவளைப் பற்றித் தெரிந்து கொள்ள வருவான் என்பதால், அவன் வருகிறானா... இல்லையா...? என வாசலையே அடிக்கடி பார்த்துக் கொண்டிருந்தாள்.

தோழியின் நடவடிக்கை விநோதமாக இருந்ததால், "ஏய்... என்னப்பா, யாரையாவது எதிர்பார்க்கிறாயா?" என்றாள் ஆச்சரியம் கலக்க.

"ஆமாம்... ஆமாம்... ஒரு முக்கியமானவர்தான் வருகிறாரான்னு பார்த்துக் கொண்டிருந்தேன்!" என்று தோழியை ஓரக்கண்ணால் அளவிட்டுக் கொண்டே கூற,

"யார் அவர்...? உன் மாமாதானே! என்ன, உனக்கு ஏற்கெனவே நிச்சயம் ஆகிவிட்டது. அதனால் அவரைத் தவிர வேறு யாரையும் நீ எதிர்பார்க்க மாட்டாய்...! சரி தானே காயூ...?" என்று தன் ஊகத்தைச் சொல்லி, காயூவின் முறைப்பை வாங்கிக் கட்டிக் கொண்டாள்.

"அவசரப்படாதே... கொஞ்சம் வெயிட் பண்ணு. அவர் வந்த பிறகு நீயே பார்த்துக் கொள். இப்போது

மண்டையைப் போட்டு உடைத்துக் கொள்ளாதே!" என்று ஷைலுவை அமைதிப்படுத்தியவளுக்கு, லஞ்ச் டைமும் முடிந்து கிளாசுக்குத் திரும்பும் நேரம் வந்தும் அந்தப் புதியவன் வராததால், 'தன் யூகம் தவறோ...?' என்ற எண்ணம் எழுந்தது.

இருந்தாலும், 'இன்றைக்கு ஏதாவது வேலை இருந் திருக்கும்... கத்தரிக்காய் முற்றினால் கடைத் தெருவுக்கு வந்துதானே ஆகணும்...? பார்க்கலாம்!' என்று முடிவு செய்து, ஷைலுவை அழைத்துக் கொண்டு செல்ல, அவளுள் ஒரே குழப்பம்.

'என்ன இது...? என்றும் இல்லாத திருநாளா இவள் காலேஜில் யாரையோ எதிர்பார்க்கிறாளே...! எனக்குத் தெரியாமல் யார் அது?

ஒருவேளை நேற்று நடந்ததைக் கண்டுபிடித்து விட்டாளா? அதனால்தான் அவனை எதிர் பார்த்துக் காத்துக் கொண்டிருந்தாளா?' என்று நினைத்தாலும், ஷைலுவும் கார்த்திக்கை எதிர்பார்த்திருந்தாள்.

அவன் வரவில்லை என்றதும் சற்று ஏமாற்றமாக இருந்தது.

'என்ன இது விசித்திரமான மனது? அவன் வந்தால் ஏற்றுக்கொள்ள முடியாது என்கிறது, வரவில்லை என்றால் ஏமாற்றமாக இருக்கிறது.

ச்சே...! விவஸ்தையே கிடையாது...!' என்று சலித்துக் கொண்டே கிளாசுக்குத் திரும்பினாள்.

மாலை வேலையெல்லாம் முடிந்து சந்தோஷ் வீட்டிற்குக் கிளம்பியவனின் கை, அனிச்சை செயலாய் டிரைவிங் செய்தாலும், மனம் முழுவதும் 'ஷைலுவைப் பற்றிப் பற்றிப் பாசிட்டிவாக இருக்கணுமே...!' என்ற பரிதவிப் புடன் சந்தோஷ் வீட்டை அடைய, இவனைக் கண்டதும் உற்சாகமாக வரவேற்றான்.

தாய் பார்வதியை உற்சாகமாக அழைக்க, அறை யிலிருந்து வெளியே வந்தவர், கார்த்திக்கைக் கண்டதும் சந்தோஷம் மிக வரவேற்று, "என்னப்பா நீ... இங்கே வந்தே பல மாசமாச்சு...! எப்படி இருக்கே? அப்பா, அம்மா வெல்லாம் நல்லா இருக்காங்களா?" என்று குசலம் விசாரித்தார். தன் பிள்ளைகள் மேல் எவ்வளவு பாசமோ, அதே அளவு கார்த்திக் மேலேயும் பாசம் வைத்திருப்பவர்.

அவரின் விசாரிப்பிற்குப் புன்னகையுடன் பதில் சொல்லிக் கொண்டிருக்கும்பொழுதே, சத்தம் கேட்டு வெளியே வந்த ஷிவா, "வாவ்...! கார்த்திக் அண்ணா, எப்போ வந்தீங்க? ஒரு ஆறு மாசமாக ஆளையே காணோம்...? எப்படி இருக்கு உங்க கம்பெனீஸ்...?" என்ற ஷிவாவின் கேள்விகளுக்குச் சிரித்துக் கொண்டே பதில் சொல்ல,

"அண்ணா...! உங்க சிரிப்பு சூப்பர். அது எப்படிண்ணா இப்படிக் கவர்ச்சியாகச் சிரிக்கிறீங்க? இந்தச் சிரிப்பில் இன்னுமா ஒரு பொண்ணும் வந்து மாட்டலை...? எப்போண்ணா அண்ணியைக் கொண்டு

வரப் போறீங்க...?" என்று கேள்விகளை அடுக்கிக் கொண்டே சென்ற ஷிவாவைக் கண்டு, மற்ற இரு ஆண்களும் சிரித்தார்கள் மர்மமாக.

தாயோ, "ச்சூ... என்ன இது, கொஞ்சம் கூட மரியாதை இல்லாமல் அண்ணனிடம் இப்படி எல்லாம் பேசுறே...?" என்று கண்டித்து விட்டு உள்ளே செல்ல, அவனுக்குத் தாயின் கண்டிப்பு காதில் ஏறவில்லை.

மாறாக, அவர்களின் சிரிப்புக்குக் காரணம் அறிய விரும்பி, "ஏன் சந்தோஷ் இரண்டு பேரும் சிரிக்கிறீங்க...? நான் ஏதாவது தப்பாக் கேட்டுட்டேனா...?" என்றான் குழப் பத்துடன்.

மீண்டும் இருவரும் உரக்கச் சிரிக்க, "இதுக்குப் பதில் இன்னும் கொஞ்ச நேரத்தில் கிடைக்கும்...!" என்று மர்ம மாகச் சிரித்த கார்த்திக், "உனக்கு ஏதாவது அர்ஜென்ட்டா வெளியே வேலை இருக்கா ஷிவா...?" என்றான்.

"நத்திங்ணா... ஏன், ஏதாவது முக்கியமான விஷயமா? நான் ஏதாவது செய்யணுமா? சொல்லுங்கண்ணா... உடனே செய்கிறேன்!" என்றான் ஆர்வமாக.

அண்ணன் கூடப் படித்தாலும், இந்த வயதிலேயே பல சாப்ட்வேர் கம்பெனிகளை உருவாக்கித் திறம்பட நடத்தி வரும் திறமையைக் கண்டு, கார்த்திக் மேல் அவனுக்கு எப்பொழுதுமே ஹீரோ வொர்ஷிப் உண்டு.

பேச்சின் நடுவே பார்வதி பழச்சாறு கொண்டு வர, நன்றி சொல்லி வாங்கியவன், "அங்கிள் எங்கே ஆன்ட்டி...? அவரிடம் கொஞ்சம் பேசணும்!" என,

"உள்ளே ஏதோ வேலையாக இருக்கார்... நீ வந்தது இன்னும் அவருக்குத் தெரியாது. கூப்பிடவா...?" என்றார்.

"இல்லை ஆன்ட்டி... நானே உள்ளே போய்ப் பேசிக்கிறேன்!" என்று எழுந்தவன், அவரின் அறையின் கதவைத் தட்டி அனுமதி கேட்க, கார்த்திக்கைக் கண்டதும் முகம் விகசிக்க வரவேற்றார் சுந்தரம்.

சற்றுமுன் பார்வதி கேட்ட அதே கேள்விகளை இவரும் கேட்க, அதற்குண்டான பதிலைக் கொடுத்து விட்டு, "அங்கிள்...! நான் ஒரு முக்கியமான விஷயமாக உங்களிடம் பேச வந்தேன். நான் சொல்வதைக் கொஞ்சம் பொறுமையாகக் கேட்பீர்களா?" என்றான் பீடிகையுடன்.

"என்ன... பில்ட்அப் எல்லாம் பலமாக இருக்கு... என்ன விஷயம், சொல்லுப்பா...?" என்றவரிடம், நேரிடை யாகச் சந்தோஷ் கல்யாண விஷயத்தை ஆரம்பிக்க, அவருக்கு ஆத்திரம் வந்து விட்டது.

"நீயே சொல்லு கார்த்திக்... இவங்களைக் கஷ்டப் பட்டுப் படிக்க வைத்து, ஒரு நல்ல நிலைமைக்குக் கொண்டுவரத் தெரிந்த பெற்றோருக்கு, ஒரு நல்ல வாழ்க்கையைப் பிள்ளைகளுக்கு அமைத்துத் தரத் தெரியாதா? அதென்ன காதல்... ஊதல்னு அலைவது? இந்தக் காதல் கல்யாணம், கடைசியில் கோர்ட் வாசலில் தான் நிற்கும்னு எனக்குத் தெரியாதா?

"காதல் மயக்கத்தில் பெற்றோரை எதிர்த்துக் கல்யாணம் செய்ய வேண்டியது. அப்புறம் கொஞ்ச நாள்

ஆனதும், உனக்கும் எனக்கும் ஒத்து வரலைன்னு விவாக ரத்துக் கேட்க வேண்டியது. இந்தக் காதலால், இவர்கள் வாழ்க்கை மட்டுமா பாழாகுது...? பெற்றோருடைய ஆசைகளையும் கனவுகளையும் சேர்த்தல்லவா பாழாக்கு கிறார்கள்...! அதனால்தான் எனக்கு இந்தக் காதல் என்றாலே பிடிக்கவில்லை. எனக்கு மட்டும் ஆசை யில்லையா... என் பையன் சந்தோஷமாக இருக் கணும்னு...?" பொரிந்து தள்ளி விட்டார் சுந்தரம்.

அவரின் வாதத்தைக் கேட்ட கார்த்திக், அவருக்குக் கொஞ்சம் ஆசுவாசப்படுத்த டைம் கொடுத்துவிட்டு, "நீங்கள் சொல்வதும் சரிதான் அங்கிள். அதே சமயம் ஒரு உதாரணத்திற்குக் கேட்கிறேன் கோபிக்காதீங்க... பெற்றோர் பார்த்து நடத்தி வைக்கிற திருமணங்கள் எல்லாம் வெற்றியடைகிறதுன்னு நினைக்கிறீர்களா?" என்றான் எதிர்க்கேள்வியாக.

அவனின் கேள்விக்குச் சட்டென்று பதில் சொல்ல முடியாமல், ஒரு நிமிடம் அவனையே உற்றுப் பார்த்தவர்,

"நீ ஏதோ சொல்ல வருகிறாய்... அதைச் சொல் முதலில். அப்புறம் என் கருத்தைச் சொல்கிறேன்...!" என்றார் அமைதியாக.

ஒரு நிமிடம் வியந்த கார்த்திக், தன் தயக்கத்தை உதறி, "நான் சொல்றதைச் சரியான கோணத்தில் புரிந்து கொள்வீர்கள் என்கிற நம்பிக்கையில் சொல்கிறேன் அங்கிள்..." என்றவன்,

"உங்களுக்கு உங்கள் பிள்ளை சந்தோஷ் மீது பாசம் இருக்கிறது. அதே சமயம் அவன் காதலித்த பெண்ணைத் திருமணம் செய்ய அனுமதி தந்தால், நாளை நம் மீது மதிப்பு இருக்காதோ என்ற பயமும் இருக்கிறது. அதனால்தான் அவன் காதலை ஏற்றுக் கொள்ள மாட்டேன் என்கிறீர்கள். சரியா?

"இது உங்களுக்கு ஈகோ ப்ராப்ளம். அதுதான் உங்களுக்கு இப்போதைய பிரச்சனை... நிச்சயமாக சந்தோஷோட காதல் இல்லை...!" என்று கார்த்திக் அழுத்தம் திருத்தமாகச் சொல்லி நிறுத்த, ஆச்சரியப் பட்டுப் போனார் பெரியவர், மனதிற்குள். 'பையன் நம்மைச் சரியாக எடை போடுகிறானே...!' என்று நினைத்தவாறே, மேலே சொல்லு என்று சைகையில் காட்டினார்.

"நான் ஏற்கெனவே ஸ்வேதாவைப் பார்த்திருக் கிறேன் அங்கிள். ரொம்ப நல்ல பெண். உங்கள் குடும்பத் திற்கு ஏற்றவள். அவளும் சந்தோஷ் கம்பெனியிலே வேலை செய்வதால், இருவருக்கும் பெரிதாக எந்தப் பணப் பிரச்சனையோ, ஈகோ ப்ராப்ளமோ வராது. அதுமட்டுமில்லை, அவர்களின் குடும்பமும் உங்கள் அள விற்கு வசதியானவர்கள்தான். அதனால் நீங்கள் எந்த வகையிலும் பயப்படத் தேவையே இல்லை.

"நீங்கள் சம்மதம் தராமல் பிடிவாதமாக இருந்தால், அவன் நிச்சயம் ஸ்வேதாவை ரிஜிஸ்டர் கல்யாணம் செய்து கொள்வான். அந்தளவு காதலில் இருவரும் உறுதியாக இருக்கிறார்கள். அது உங்களுக்கு இன்னும்

அவமானத்தைத் தேடித் தந்து விடும். சந்தோஷுக்கும் வாழ்நாள் முழுவதும், உங்கள் வார்த்தையை மீறி விட டோமே என்ற குற்ற உணர்வு இருக்கும்.

"அதுவே நீங்கள் சம்மதம் தந்தால், அவனும் நிம்மதியாகக் கல்யாண வாழ்க்கையைத் தொடங்குவான் அதுமட்டுமில்லை... என்றுமே உங்கள் வார்த்தைக்கு மதிப்புக் கொடுப்பான். சந்தோஷ் எனக்கு ஒரு நல்ல நண்பன் மட்டும் இல்லை, எனக்குக் கூடப் பிறந்தவன் மாதிரி. ப்ளீஸ் அங்கிள்... புரிந்து கொள்ளுங்கள்!" என்று நீளமாகப் பேசி முடிக்க, அவன் பேச்சைக் கிரகித்து வண்ணம் அமைதியாக இருந்தார்.

கார்த்திக்கின் பேச்சில் உள்ள நியாயத்தை உணர்ந்த சுந்தரம், தன் வறட்டுப் பிடிவாதத்தைத் தளர்த்தி, "என்னை விட என் பிள்ளையின் மேல் இவ்வளவு பாசம் வைத் திருப்பதைப் பார்த்தால், எனக்கு உண்மையில் பெருமை யாக இருக்கிறது. கவலைப்படாதே கார்த்திக்... நிச்சயம் என் சம்மதம் உன் நண்பனுக்கு உண்டு. இப்போது உனக்குச் சந்தோஷமா?" என்று கார்த்திக்கைக் கட்டிப் பிடித்துத் தட்டிக் கொடுக்க,

முகமெல்லாம் விகசிக்க, "தேங்க்ஸ் அங்கிள். தேங்க்யூ சோ மச்...!" என்று நன்றி சொல்லி விட்டு வெளியே வந்தான்.

அதுவரை, மனைவியைப் பிரசவ வார்டுக்கு அனுப்பி விட்டு, வெளியே பரபரப்பும், தவிப்புமாகப் போட்டி போடும் கணவன் போல் டென்ஷனாக நகத்தைக்

கடித்தபடி தந்தையின் அறையின் முன் நடந்து கொண்டிருந்தவனைக் கண்டதும் சிரித்த கார்த்திக்கிடம், பரபரப்பும், ஆர்வமும் போட்டி போட விசாரித்தவனுக்குக் கட்டை விரலை நிமிர்த்தி, "சக்சஸ்" என, சந்தோஷ் துள்ளிக் குதித்து நண்பனைக் கட்டிப் பிடித்து இரு கன்னத்திலும் மாறி மாறி முத்தமிட்டு, "தேங்க்ஸ்டா... தேங்க்ஸ் எ லாட்.." என்றான் கண்ணில் நீர் தளும்ப.

"ஹே... கூல் மேன். எதுக்கு இப்போ எக்ஸ்சைட் ஆகிறாய்...?" என்று தன் கன்னத்தில் முத்தமிட்ட சந்தோஷின் எச்சிலைத் தொட்டுக் காட்டி, "இதெல்லாம் கொஞ்சம் ஸ்வேதாவுக்கும் வெச்சுக்கோ!" என்று கேலி செய்யவும், அங்கே சிரிப்பலை பரவ, சந்தோஷிற்கு வெட்கமாக இருந்தது.

"எப்படி கார்த்திக், சந்தோஷ் அப்பா சம்மதித்தார்?" என்ற பார்வதியின் கேள்விக்கு,

"அது ஒன்றும் இல்லை ஆன்ட்டி... அவருக்குச் சந்தோஷின் காதல் மேல் வெறுப்பு இல்லை. வெறும் பயம், அவ்வளவுதான். அதை எடுத்துச் சொன்னேன், புரிந்து கொண்டார்..." என,

"ஒன்ஸ் அகெய்ன் தேங்க்ஸ்!" என்ற நண்பனின் தோளைத் தட்டி,

"நீ போய் அப்பாவிடம் பேசு... நான் ஷிவாவிடம் பேசிவிட்டு வருகிறேன்..." என்றவன், அவனை அழைத்துக் கொண்டு மாடிக்குச் சென்றான்.

மாடியின் கட்டைச் சுவரில் அமர்ந்தவன், "ஷிவா... நான் நேற்று உங்க காலேஜுக்கு வந்தேன்..." என்று ஆரம்பித்ததுமே,

"அப்படியா...? எப்போ வந்தீங்க?" என்று ஆச்சரியத்துடன் கேட்டவனுக்கு,

"லஞ்ச் டைம் முடியும்போது வந்தேன். அப்போ ஒரு பொண்ணைச் சந்தித்தேன் ஷிவா... எனக்கு அவளைப் பற்றி டீடெயில்ஸ் வேணும்...!" என்று நேரடியாக விஷயத் திற்கு வர, சிறியவன் அசந்து போனான்.

ஆர்வம், தங்கத்தின் விலை போலக் கிடுகிடு வென்று உயர, "அவங்க பெயர் தெரியுமா?" என்று கேட்டவனுக்கு, இல்லை என்றே பதில் வர, "சரி... அவங்க அப்பியரன்ஸ் எப்படி இருந்தது?" என்றான் அடுத்ததாக.

ஷிவாவின் கேள்வியில் கண்களை மூடிச் சில வினாடிகள் யோசித்து, ஷைலுவின் உருவத்தை மனக் கண்ணில் கொண்டு வந்தவனின் முகம் மென்மையாக, "ஹ்ம்... பெண்களின் சராசரி உயரத்தை விடச் சற்றுக் கூடுதல், சந்தனக் கலர், பேசும் விழிகள், நீளக் கூந்தல், லிப்ஸ்டிக் போடாமலே சிவந்த உதடு..." என்று கார்த்திக் சொல்லிக் கொண்டிருக்கையிலேயே ஷிவாவிற்குச் சந்தேகம் முளைக்க ஆரம்பிக்க,

'ஒரு வேளை ஷைலுவைச் சொல்கிறாரோ? இந்த அடையாளம் எல்லாம் ஷைலுவுக்குத்தான் பொருந்தும்!' என்று நினைக்கும் போதே நெஞ்சைப் பிசைய ஆரம் பித்தது.

இருந்தும் ஒரு நப்பாசையில், "அவங்க என்ன கலர் டிரெஸ் போட்டிருந்தாங்க...?" என்று மீண்டும் கேட்டதும்,

"மஜந்தாவில் வொர்க் செய்த சுரிதார்!" என்ற கார்த்திக்கின் பளிச் பதிலில், ஷிவாவிற்கு ஒரு நிமிடம் மூச்சே நின்று விட்டது.

'நான் சரியாகத்தான் கேட்டேனா? இலலை, ஏதாவது கனவா?' என்ற குழப்பத்தில் பேசாமல் இருந்த ஷிவாவை, கார்த்திக்கின் கேள்வி, நிகழ்காலத்திற்குக் கொண்டு வந்தது.

"என்ன ஷிவா... உனக்கு யாரென்று தெரிந்து விட்டதுன்னு நினைக்கிறேன். அதைச் சொல்ல ஏன் இவ்வளவு தயக்கம்?" என்றதும், அவனின் சரியான யூகத்திற்கு ஒரு நிமிடம் மலைத்துப் போனான்.

'இனியும் இவரிடம் மறைக்க முடியாது, சொல்லித் தான் ஆகணும். ஷைலு என்னை விட கார்த்திக் அண்ண னுக்குத்தான் பொருத்தமாக இருப்பாள். அதுமட்டுமில்லை, என்னைக் கண்டாலே பேச மாட்டேன் என்பவளை எப்படிப் போர்ஸ் செய்வது?

ஒரு வேளை ஷைலு, கார்த்திக் அண்ணனுக் கென்று இருந்தால், அதை யாரால் மாற்ற முடியும்?' என்று தன்னைத் தேற்றிக் கொள்ள சிறு அவகாசம் தேவைப்பட... அமைதியாக இருந்தவன், நெஞ்சின் வலி கண்ணீராக உற்பத்தியாகிக் கன்னங்களில் வழியும் முன் ஷைலுவைப் பற்றிச் சொல்ல ஆரம்பித்தான்.

அவளின் பெயர், படிப்பு, குடும்பத்தைப் பற்றிச் சொல்லிக்கொண்டு வந்தவனை இடைமறித்து, "ஏதா

வது மேரேஜ் புரொபோஸல்...?" என்று கேட்ட அவனின் அவசரத்தைக் கண்டு மனதிற்குள் விரக்தியாகப் புன்ன கைத்து,

"இல்லை... இதுவரைக்கும் அவர்கள் க்ளீன் சிலேடுட்டுதான்..." என்றவன், "இதெல்லாம் ஏன் கேட் கிறீங்கன்னு தெரிஞ்சுக்கலாமா...?" என்றான் கரைந்த குரலில், மனதில் கடைசி நம்பிக்கையுடன்.

ஷைலுவைப் பற்றித் தெரிந்து ஆகாயத்தில் மிதந்து கொண்டிருந்த கார்த்திக், ஷிவாவின் குரலில் தன்னை மீட்டு, அவன் என்ன கேட்டான் என்று மீண்டும் கேட்டதும், ஷிவாவின் கேள்வி அவன் முகத்தில் புன்னகையை வரவழைக்க, "ஐ லவ் ஹெர் ஷிவா...!" என்றான் முகம் விகசிக்க.

ஏற்கெனவே உறுதியானாலும், அதை மீண்டும் கார்த்திக்கின் வாயால் கேட்கும்பொழுது, யாரோ இதயத் தில் பலமாக ஓங்கி அடித்தது போல் வலிக்க, முகம் கசங்கியது.

அதைக் கவனித்து விசாரித்தவனிடம், "நத்திங்ணா... இந்தக் காற்று ஒத்துக்கொள்ளவில்லை. லேசாகத் தலை வலிக்கிற மாதிரி இருக்கு..." என்று முகத்தைக் கஷ்டப்பட்டுச் சரி செய்து சமாளித்தான்.

மாடிக்கு வந்த சந்தோஷிடம், "என்னடா, அப்பாவிடம் பேசி விட்டாயா?" என்று விசாரிக்க,

"ம்ம்... நாளை பெண் பார்க்கப் போகலாம்னு சொல்லி விட்டார். ஸ்வேதாவுக்கும் தகவல் சொல்லி

விட்டேன். நீ நாளை மாலை வந்துவிடு...” என்ற வனுக்கு,

“சாரிடா... எனக்கு ஒரு முக்கியமான வேலை இருக்கு... நீங்க தேதி குறிங்க, கல்யாணத்திற்கு வருகிறேன்!” என்று நிறுத்தியதும், சந்தோஷ் கோபத்தில் அமைதியானான்.

“ப்ளீஸ்டா...” என்ற கார்த்திக்கின் கெஞ்சலுக்கு முகம் மாறி,

“ஓ.கே. பொழைச்சிப் போ. சரி, உன் கதை என்ன ஆச்சு? எல்லாம் விசாரித்தாயா? உன் தேவதை பெயர் என்ன?” என்று சற்றுக் கேலியாகக் கேள்விகளை அடுக்க,

ஒரு விரலால் சந்தோஷிற்குப் பத்திரம் காட்டிக் கொண்டே, “ஷைலஜா...” என்றான் ஒரு மந்தகாசப் புன்னகையுடன்.

கார்த்திக்கிடம், ஷைலு பற்றிய மற்ற விவரங்களை விசாரித்துத் தெரிந்து கொண்டவன், தம்பியிடம் திரும்பி, “பொண்ணு ரிசர்வ்டா... ஜோவியலா...?” என,

“இரண்டுமே இல்லை. முதல் வருடம் எல்லோரிடமும் மிகச் சாதாரணமாகத்தான் சிரித்துப் பேசிப் பார்த் திருக்கிறேன். அதுவும் அளவுடன்தான். ஆனால், கொஞ்ச நாளிலே அந்தச் சிரிப்பும் துணி கொண்டு துடைத்தது போல, யாரிடமும் பேசாமல் தனக்குள்ளே ஒரு வேலி போட்டுக் கொண்டு, மிகவும் அமைதியாக மாறி விட் டார்கள். இப்பொழுது அவர்கள் கொஞ்சமாவது சிரித்துப்

பேசுகிற ஒரே ஆள், அவங்க தோழி காயத்ரி மட்டும் தான்," என்று ஷிவா சொன்னதைக் கேட்டுச் சந்தோஷ் குழம்பிப் போக,

கார்த்திக்குக்கு ஏதோ புரிந்தும் புரியாத மாதிரி இருந்தது. ஆனால், சரியான வடிவம்தான் கிடைக்க வில்லை.

குழப்பத்தைத் தீர்த்துக் கொள்ளத் தன் தம்பியிடமே அதற்கான காரணத்தைக் கேட்க,

அவன் கையை விரித்து, "அதைப் பற்றிச் சரியாகத் தெரியாது. எனக்குத் தெரிஞ்சு ரொம்ப நல்ல பெண். படிப்பிலே ஃபர்ஸ்ட். அவங்க அழகுக்கும், அறிவுக்கும் காலேஜில் நிறையப் பேருக்கு அவங்க மேல் ஒரு க்ரஷ். ஆனால், அவங்க யாரையும் ஏறெடுத்தும் பார்த்த தில்லை!" என்று தனக்குத் தெரிந்ததைச் சொல்லி விட்டு இருவரின் முகத்தையும் ஆராய, அவர்கள் தீவிர யோசனையில் இருந்ததால், "நான் படிக்கணும்... கீழே போறேன்," என்று முனகி விட்டுச் சென்றவனை நிறுத்தி னான் கார்த்திக்.

"ஷிவா... எனக்கு இதற்காக உன் உதவி தேவைப் பட்டால் செய்வாயா?" என,

"என்னண்ணா, இப்படிக் கேட்டுட்டீங்க? என்ன செய்யணும் சொல்லுங்க... கண்டிப்பாகச் செய்கிறேன்!" என்று உறுதியளித்து விட்டுக் கனத்த மனதுடன் கீழே இறங்கிச் செல்ல, கார்த்திக்கின் தேங்க்ஸ் என்ற வார்த்தை காற்றில் கரைந்து போனது.

"அடுத்து என்ன செய்யப் போறே கார்த்திக்?" என்ற சந்தோஷின் கேள்விக்குச் சிறிது நேரம் அமைதி காத்தவன்,

"நேரமாச்சு... அம்மாவுக்குப் போனே செய்யவில்லை. நான் வீட்டுக்குப் போயிட்டு நிதானமாகத்தான் யோசிக்கணும். நாளைக்கு உனக்குக் கால் செய்கிறேன்!" என்று எல்லோரிடமும் சொல்லிக் கொண்டு கிளம்பி விட்டான்.

தன்னறைக்குச் சென்ற ஷிவா, படுக்கையில் படுத்துக் கண்களை மூடிக் கொள்ள, அவனால் எதையுமே யோசிக்க முடியாத அளவுக்கு மூளை மரத்துப் போயிருந்தது.

கண்களில் ஈரத்தை உணர்ந்ததும் அவசரமாகக் கண்ணைத் துடைத்துக் கொண்டு, 'ச்சே! என்ன இது...? நானா அழறேன்? நான்தானே அவளைக் காதலித்தேன்... அவளிடம் என் காதலைக் கூடச் சொல்லவில்லை, அப்படியே சொன்னாலும் அவள் ஏற்றுக் கொள்வாள் என்ற நம்பிக்கையில்லை.

'அப்படியிருக்கும் போது எதற்கு முட்டாள்தனமாக அழறேன்? அவளும் என்னை விரும்பியிருந்தால், ஒரு வேளை அழலாம். எனக்குள்ளே தோன்றி எனக்குள்ளே மறைந்த காதலுக்கு அழுவதில் என்ன பிரயோஜனம்?' என்று யோசித்துக் கொண்டிருந்தவன், 'நல்ல வேளை இது கார்த்திக் அண்ணனுக்குத் தெரியவில்லை. தெரிந்தால் மிகவும் கஷ்டப்பட்டிருப்பார்,' என்று தோன்றியது.

'என் காதல் உண்மையாக இருந்தால், ஷைலு வுக்குக் கார்த்திக் அண்ணன் மாதிரி ஒரு நல்ல துணை கிடைப்பதைப் பார்த்துச் சந்தோஷம்தான் பட வேண்டும். அவர்கள் இருவரையும் எப்படியாவது சேர்த்து வைக்க வேண்டும்!' என்று மனது உறுதி பூண்டது.

மனது தெளிவான பிறகு, ஒரு விஷயம் அவனைச் சிந்திக்க வைத்தது. 'காலேஜில் சேர்ந்த வருடத்தில் நன்றாக இயல்பாகச் சிரித்துப் பேசிக் கொண்டிருந்த பெண், திடீரென்று ஸ்விட்ச் ஆஃப் செய்த மாதிரி சிரிப் பதைப் பேசுவதை நிறுத்திக் கொண்டு விட்டாளே... ஏன்? நடுவில் என்ன நடந்திருக்கும்?' என்று யோசிக்க யோசிக்கத் தலையைப் பிய்த்துக் கொள்ளலாம் போல இருந்தது.

'நாளை கார்த்திக் அண்ணனைக் காலேஜுக்கு வர வைக்க வேண்டும். அதன் பிறகு என்ன செய்யலாம்னு முடிவெடுக்கலாம்!' என்று தன் யோசனையைத் தள்ளி வைத்தான்.

இரவு சாப்பாட்டுக்குப் பிறகு படுக்கத் தோன்றாமல் பால்கனியில் அமர்ந்த கார்த்திக்குக்கு ஷைலுவின் நினைவுகளே நெஞ்சில் பேயாட்டம் போட்டுக் கொண் டிருந்தது. 'ஷைலஜா... ஸ்வீட் நேம். ஷார்ட்டா ஷைலு...' என்று அவள் பெயரைச் சொல்லிப் பார்க்க, அது உயிர் வரை இனித்தது.

அவளை முதன் முதலில் பார்த்த பொழுது ஏற்பட்ட மின்னதிர்வு, அவள் பெயரை உச்சரிக்கும் பொழுதும்

ஏற்பட, அனிச்சை செயலாக முகம் புன்னகையில் குளித்தது.

'ஷிவா சொல்வதைப் பார்த்தால் ஷைலுவை நெருங்குவது கஷ்டம் என்றே தெரிகிறது. ஆனால், அவள் என்னைப் பார்த்தபோது அதிர்ந்துநின்றது, அவள் விழிகள் பேசியது... இது எல்லாம் எனக்குப் பாசிடிவ் ரிசல்ட்டைக் கொடுக்குமா? அப்படியே இல்லை யென்றாலும்...' என்று மேலே யோசிக்கும் போதே உள் மனம், 'நோ சான்ஸ்...' எனக் கடிவாளம் போட்டு நிறுத்தியது.

'என் கணிப்புப்படி அவள் மனதில் நான் கண்டிப் பாக இருப்பேன். அவள் என்னைப் பற்றிக் கட்டாயம் நினைத்துக் கொண்டுதான் இருப்பாள்!' என்று யோசித் தவன், அதிலேயே திருப்தியடைய விரும்பாமல், 'ஷைலு வோட மனதில் நான் இருக்கிறேனா, இல்லையான்னு நாளை கல்லூரிக்குப் போய்ப் பார்த்து விடுவோம்...!' என்ற முடிவுக்கு வந்தவனாகச் சந்தோஷுக்குக் கால் செய்தான்.

"ஹாய்... என்ன மேன்... எப்படி நெருங்குவதுன்னு முடிவு செய்து விட்டாயா?" என்று ஆர்வத்துடன் கூவ,

"கூல்... கூல்... முதலில் அவளுடைய மன நிலை எனக்குத் தெரியணும்.அதனால் நாளை நான் காலே ஜுக்கு லஞ்ச் டைமில் ஷிவாவைப் பார்க்க வருகிறேன்னு சொல். அதன் பிறகு அவளை எங்கே, எப்படிச் சந்திப்பது என்று முடிவு செய்யலாம்," என்றான்.

"தட்ஸ் குட். ஓ.கே... டன்... ஆல் த பெஸ்ட்... நாளைக்குப் பார்த்துட்டு என்ன ரியாக்ஷன்னு சொல்... குட் நைட்... இரவெல்லாம் ஷைலஜா உன் கனவில் வந்து தொல்லை பண்ணட்டும்!" என்று வாழ்த்தவும்,

பதிலுக்கு, "ஸ்வேதாவும் உன்னைக் கனவில் தொல்லை பண்ணட்டும்!" என்று சிரித்துக் கொண்டே போனை வைத்தான் கார்த்திக்.

அடுத்த நாள் ஷைலுவைப் பார்க்கலாம் என்று முடிவு செய்தவனால் போக முடியாமல் ப்ராஜெக்ட்ஸ் வொர்க் அவனைத் துரத்திக் கொண்டே இருக்க, ஷைலுவைச் சந்திக்க முடியாமல் மனது அலை பாய்ந்தது.

ஷிவாவிடம் தன் நிலைமையைச் சொல்லி, இன்னொரு நாள் வருகிறேன் என்றவன், தினமும் ஷைலுவைப் பற்றிக் கேட்டுத் தெரிந்து கொள்ளத் தவறமாட்டான்.

காலேஜுக்குக் கார்த்திக் வந்தபோது இருந்த மனப் போராட்டம் ஷைலுவுக்குக் கொஞ்சம் குறைந்திருந்தது. காயத்ரியிடமும் கொஞ்சம் இலகுவாகப் பேச முடிந்தது.

அடுத்தடுத்த நாட்களில் இது இன்னும் குறைந்தாலும் அந்தப் புதியவனின பார்வையும், முகமும் ஷைலுவின் நெஞ்சின் ஓரத்தில் அழியாத சித்திரமாகப் படிந்து விட்டது. அவனின் நினைவு வரும்போதெல்லாம் ஏனோ உள்ளத்தில் லேசான குறுகுறுப்பும், அதைத் தொடர்ந்து ரகசியப் புன்னகையும் தோன்றும்.

மூன்று வாரம் கழித்து ஒரு நாள் மதியம் லஞ்ச் நேரத்தில், "ஷைலு, இங்கே கொஞ்சம் வெயிட் பண்ணு, நான் அனிதாவிடம் போய் நோட்ஸ் வாங்கி வந்து விடுகிறேன்..." என்று காத்திருக்கச் சொல்லி விட்டுப் போன தோழிக்காக வெளி வாசலைப் பார்த்தபடி அமைந்திருந்த வராண்டாவில் அமர்ந்து, வாசலையே பார்த்துக் கொண் டிருந்தாள்.

அந்நேரம் கார்த்திக்கின் கார் உள்ளே நுழைய, 'இது யாருடைய கார்...? இந்த நேரத்தில் யார் வரு கிறார்கள்...? அன்றைக்கு வந்தானே அவனாக இருக் குமோ...?' என்று நினைத்ததுமே, 'ச்சே... அவன் எதில் வந்தான்னு கூடத் தெரியாது' என்று யோசனை செய்த படியே அந்தக் காரையே பார்த்துக் கொண்டிருந்தாள்.

உள்ளே வந்து காரை பார்க் செய்த பிறகும் கார்த்திக் வண்டியிலிருந்து இறங்கவில்லை.

உள்ளே வரும்போதே அவன் ஷைலுவைப் பார்த்து விட்டான். மெல்லிய சோகம் இழையோடிய அவளின் முகத்தைப் பார்த்தும் அவனின் கை பரபரத்தது.

அப்படியே அணைத்து, உனக்கு என்ன கண் ணம்மா கஷ்டம்னு கேட்டு ஆறுதல் சொல்ல வேண்டும்னு தோன்றியதை அடக்கிக் கொண்டு, அவளையே பார்த்துப் புன்னகை தளும்ப ரசித்துக் கொண்டிருந்தான்.

'இந்தக் கார் வந்து இவ்வளவு நேரமாகியும் யாரும் இறங்கவில்லையே!' என்று ஷைலு யோசித்துக் கொண் டிருக்கும் பொழுதே திரும்பி வந்த காயத்ரி, அந்தக்

காரைக் கண்டதும் அவளின் மூளையில் மின்னல் வெட்டியது.

'ஹேய்...! இது அன்றைக்கு வந்தவனுடைய காராயிற்றே! இப்போ வந்திருக்கான் என்றால், ம்ம்... நான் நினைத்தது சரிதான்...' என்று யோசித்தபடியே ஷைலுவை நோக்கித் திரும்பி அவள் முகத்தை ஆராய்ந் தாள்.

ஆனால், அவளின் முகத்தில் எந்தப் பாவனையும் இல்லாமல், உணர்ச்சியைத் துடைத்து வைத்த மாதிரி ஒரு பொம்மை போல் அமர்ந்திருக்க... காயத்ரிக்கோ, 'என்ன இது... வண்டி இப்போதான் வந்ததென்றால் அப்புறம் ஏன் வண்டியிலிருந்து யாரும் இறங்கவில்லை? ஒருவேளை, முதலிலேயே இறங்கிப் போய் விட்டார்களா? அப்படி இறங்கும்போது, வந்தவன் அவன்தான் என்றால் இவள் பார்த்திருப்பாளே...? அப்புறம் ஏன் அந்த முகத்தில் எந்த உணர்ச்சியும் இல்லாமல் இருக்கிறது...?' என்று முடியைப் பிச்சிக்காத குறையாக யோசித்து கொண்டிருந் தாள்.

காரின் உள்ளே உட்கார்ந்திருந்த கார்த்திக்குக்குச் சிரிப்பாக இருந்தது காயத்ரியின் நிலையைக் கண்டு.

அந்தச் சமயம், 'அண்ணன் வரேன் என்றார்களே... இன்னும் வரவில்லையே!' என்று வாசலை எட்டிப்பார்த்த ஷிவா, கார்த்திக்கின் காரைக் கண்டவுடன் வாசலுக்கு ஓடி வந்தான்.

காரின் கதவைத் திறந்து, "எப்போ வந்தீங்க...? ஏன் காரின் உள்ளே இருக்கீங்க...?" என்று கேட்டவுடன் கார்த்திக், ஷைலுவின் பக்கம் கண்ணைக் காட்ட, அப் போதுதான் ஷிவா திரும்பிப் பார்த்தான்.

ஒரு சிறு சிரிப்புடன், "சரி... வாங்க, அவங்க ரியாக்ஷன் எப்படி இருக்குன்னு பார்க்கலாம்!" என்றதும் ஷைலுவிடம் இருந்து பார்வையை விலக்காமலே இறங்க, கார்த்திக்கைக் கண்டதும் ஷைலுவுக்கு இதயம் தூக்கி வாரிப் போட்டது.

'இவன் எங்கே மறுபடியும் வந்தான்? கடவுளே! இப்போதான் கொஞ்சம் அலைபாய்தல் இல்லாமல் இருந்தேன்!' என்று நினைத்தாலும், விழிகள் என்னவோ அவன் முகத்தையேதான் பார்த்துக் கொண்டிருந்தது.

அவன் முகத்திலிருந்து ஷைலுவால் விழிகளைப் பிரித்தெடுக்கவே முடியவில்லை.

கார்த்திக்கின் பார்வையும் அவள் முகத்தை விட்டு ஒரு கணம் கூட விலகவில்லை. அவனின் உள்ளம், 'ஹேய்...! நீ ஜெயித்து விட்டாய்!" என்று ஆனந்தமாகக் கூக்குரலிட்டது.

ஷிவா, கார்த்திக்கைப் பற்றி ஏற்கெனவே காயத்ரி யிடம் சொல்லி விட்டதால், ஷிவாவைப் போலவே ஆர்வ மாகக் காத்துக் கொண்டிருந்தாள்.

ஷைலுவையும், கார்த்திக்கையும் மாறிமாறிப் பார்த்த காயத்ரியும் ஷிவாவும் ஒருவரையொருவர் பார்த்துச்

சிரித்துக் கொள்ள, முதலில் சுதாரித்துக் கொண்ட கார்த்திக், ஷிவாவைப் பார்த்து அர்த்தபுஷ்டியாகப் புன்னகைத்துக் கண்ணைக் காட்ட, சுய நினைவிற்கு வந்த ஷைலுவுக்கு, முகம் சிவந்து வெட்கம் பிடுங்கித் தின்றது.

'ஐயோ...! இப்படிப் பட்டிக்காடு மாதிரி முறைத்துப் பார்க்கிறேனே... அவன் என்ன நினைப்பான்?'ன்று தவிப்பாக இருந்தது.

அந்த இடத்தை விட்டுப் போக வேண்டும் என்று நினைத்தாலும் மனது நினைத்தாலும் கால்கள் நகர மறுத்தது. அங்கே இருக்கவும் முடியாமல் அகலவும் முடியாமல் இருதலைக் கொள்ளி எறும்புபோலத் தவித்தாள்.

ஷைலுவின் முகச் சிவப்பும், வெட்கமும், தவிப்பும் மற்ற மூவருக்கும் அவளின் மனதைத் தெளிவாகப் புரிய வைத்தது. காயத்ரியோ ஒன்றுமே அறியாதது போல், "யார் ஷிவா இவர்...?" என, எப்படி இருவருக்கும் அறிமுகம் செய்து வைப்பது... என்று யோசித்துக்கொண்டிருந்தவள், அவள் கேட்டதும் சட்டென்று பிடித்துக் கொண்டான்.

"இவர் எங்க அண்ணனோட நண்பர், கார்த்திக்," என்று இரு பெண்களுக்கும் அறிமுகம் செய்து விட்டுக் கார்த்திக்கிடம் திரும்பி, "அண்ணா... இவங்க ஷைலஜா, இவங்க காயத்ரி. ரெண்டு பெரும் திக் ப்ரெண்ட்ஸ்..." என்றான் சிறு புன்னகையுடன்.

ஷிவா அறிமுகப்படுத்தி வைத்ததும் காயத்ரி, "ஹலோ!" எனவும் கார்த்திக்கும், பதிலுக்குக் காயத்ரிக்கு

"ஹலோ!" என்றவன், ஷைலுவிடம் திரும்பி, "ஹலோ..." என்றான் கரத்தை நீட்டியபடி.

ஷைலு ஒரு நிமிடம் தன் கையைக் கொடுத்ததும், கார்த்திக் அவளின் கையை மென்மையாக அழுத்திக் குலுக்கினான். "ஷைலு, நீ பேசிக்கிட்டு இரு... இதோ வந்துடறேன்," என்ற காயத்ரி, ஷிவாவிடம், "எனக்கு உங்களின் நோட்ஸ் வேணும்... வந்து எடுத்துத் தர முடியுமா?" என்று கண்களால் இருவரையும் காட்டிக் கேட்க, அந்த இடத்தை விட்டு இருவரும் அகன்றார்கள்.

அவர்கள் சென்றதும் சில நொடிகள் மௌனத்தில் கரைய, கார்த்திக் அவளையே விழுங்குவதுபோல் பார்த்த பார்வையில் ஷைலு நெளிய, அவளின் அவஸ்தையைச் சிறிது நேரம் ரசித்துச் சிரித்து விட்டு, "வெல்... ஏதாவது பேசுங்களேன் ஷைலஜா. நான் உங்களை அப்படிக் கூப்பிடலாமா....?" என,

"ம்ம்..." என்று குனிந்து கொண்டே மெதுவாகச் சம்மதம் என்று தலையை அசைத்தாள்.

"தேங்க்ஸ் ஷைலஜா... ஷார்ட்டா ஷைலு... நைஸ் அண்ட் ஸ்வீட் நேம்...!" என்று ரசனையுடன் கூறி அவளின் பார்வை நிலம் நோக்கியே இருப்பதைக் கண்டு, "கொஞ்சம் நிமிர்ந்துதான் என்னைப் பாருங்களேன். ஏன், என்னைப் பார்த்தால் பயமாக இருக்கிறதா? நானும் உங்களை மாதிரியே மனுஷன்தான். இங்கே பாருங்க, எனக்கும் ரெண்டு கை... ரெண்டு கால் இருக்கு..." எனக்

கேலியாகச் சொல்ல, ஷைலுவின் இதழ்கள் சிரிப்பில் துடித்தன.

அதை அடக்கக் கஷ்டப்படுவதைக் கண்டு, "சிரிப்பை ஏன் அடக்கணும்...? உங்க அழகான சிரிப்பைப் பார்க்கிற பாக்கியம் எனக்கு இல்லையா?" என்றவனின் ஏக்கம் கலந்த குரல், அவனின் முகம் நோக்கி விழிகளை மலர்த்தியது.

அவளின் விழிகளின் அழகு அவனை மயக்க, "ம்ஹூம்... விட்டால் என்னைக் கண்ணாலே விழுங்கிடு வீங்க போலிருக்கு...!" என்றான் சீண்டலாக.

பேச்சு எல்லை மீறிப் போவதை உணர்ந்தவள், "ப்ளீஸ்..." என்று மெல்லிய குரலில் கெஞ்சியவள், "நீங்க யாருன்னு எனக்குத் தெரியாது. புதிதாக சந்திக்கிற பெண்ணிடம் இப்படியெல்லாம் பேசுறீங்க!" என்று கோப மாகப் பேச நினைத்து... முடியாமல் போக, கெஞ்சலிலே முடித்தவளைக் கண்டு வசீகரமாகச் சிரிக்க. அந்தச் சிரிப் பிலிருந்து பார்வையை எடுக்க முடியாமல் தடுமாறினாள்.

சில நொடி நேரம் அவள் விழிகளை ஊடுருவ, அந்தப் பார்வையின் வீச்சைத் தாங்க முடியாமல் விழிகள் நிலம் நோக்கிப் பயணிக்க, கார்த்திக்கின் இதழ்களில் புன்முறுவல் குடியேறியது. "எதுவாக இருந்தாலும் என்னை நிமிர்ந்து பார்த்தால்தான் சொல்லுவேன்..." என்று கண்டிஷன் போட, சிறு தயக்கத்துடன் மெல்லத் தலையை உயர்த்தி அவன் கண்களைச் சந்தித்ததும், "குட்..." என்றான் மெச்சுதலாக.

"எனக்கு உங்களைப் பற்றி எல்லாம் தெரியும், ஆனால், உங்களுக்கு என்னைப் பற்றி எதுவும் தெரியாது அல்லவா...?" என்றவன் தொடர்ந்து, "நான் கார்த்திக், குளோபல் கம்யூட்டர்ஸ் சேர்மன். பெற்றோருக்கு ஒரே பிள்ளை, எலிஜிபில் பேச்சுலர். போதுமா...? இன்னும் ஏதாவது வேணுமா?" என்று வசீகரமாகப் புருவத்தை மேலேற்ற, அவள் பார்வையில் கேள்விக் குறி தொக்கி நின்றது.

அவளின் கேள்வியான பார்வைக்கு அவனின் ஆழமான பார்வையே பதிலாக, ஷைலுவின் நெஞ்சில் குளிர் தென்றலடிக்க, அவளின் தேகம் அந்த நிமிஷம் ஜிவ்வென்று வானத்தில் பறப்பது போல் இருக்க, யாரோ தன் தலையில் ஒரு கூடை பன்னீர் ரோஜாக்களைக் கொட்டியது போல் உணர்ந்தாள்.

"ஹலோ ஷைலஜா... எங்கே போயிட்டீங்க...? நீங்க இப்படியே நின்றால், இங்கே ஏதோ பனிச் சிற்பம் இருக்குன்னு எல்லோரும் பார்க்க வந்துடப் போறாங்க..." என்று, கேலியாக இருந்தாலும் மனதில் தோன்றியதைச் சொன்னதும் ஷைலுவின் முகம் குப்பென்று சிவக்க, அவனின் பார்வை அவளை ரசனையுடன் வருடியது.

தன்னைச் சுதாரித்து மிடுக்கை வரவழைத்துக் கொண்டு, "நீங்க ஏன் என்னைப் பார்க்கணும்?" என்று கேட்டவளுக்கு,

"அதைப் பற்றி பேசணும்னா இங்கே முடியாது. வெளியில் எங்கேயாவது மீட் பண்ணலாம்!" என்ற

சுவாதீனமான கார்த்திக்கின் பேச்சிற்கு ஷைலுவின் உள் மனம் விழித்துக் கொண்டது.

'ஐயோ, என்ன இது...? ஒரு அந்நியனிடம் இவ் வளவு நேரம் தனியாகப் பேசிக் கொண்டிருக்கிறேனே! இது சரியில்லையே...!' என்று தோன்றியதுமே, அங் கிருந்து விலகும் எண்ணத்தில், "க்ளாசுக்கு நேரமாச்சு, நான் போறேன்...!" என்று திரும்பியவளின் கையை எட்டிப் பிடித்தான்.

"பதில் சொல்லாமல் போனால் என்ன அர்த்தம்? ம்ம்..." என, ஷைலுவுக்கு அவனின் ஆளுமையை யும், தைரியத்தையும் கண்டு ஒருபக்கம் மலைப்பாக இருந்தாலும் இன்னொரு பக்கம் மிரட்சியாக இருந்தது. அவனுடைய இரும்புப் பிடியிலிருந்து கையை விடுவிக்க முடியாமல் கெஞ்சலாக, "ப்ளீஸ்...!" என்றாள் தலையைக் குனிந்தபடி.

"நான் உன்னைத் தனியாக மீட் செய்துதான் சொல்லணும்னு நினைத்தேன். ஆனால், என்னால் முடியவில்லை. உன்னைப் பார்த்ததும் என்னைக் கட்டுப் படுத்திக்க முடியவில்லை. எனக்குச் சுற்றி வளைத்துப் பேசத் தெரியாது. என் வாழ்க்கையை உன் கூட வாழ ஆசைப்படுகிறேன்... எஸ், ஐ லவ் யூ ஷைலு..." என்று உணர்ச்சிமிகுந்த குரலில் அவளுக்கு மட்டுமே கேட்கும் படி மெதுவாகச் சொன்னதும் ஆயிரம் வாட்ஸ் மின்சாரம் பாய்ந்த மாதிரி இருக்க, கையை உருவிக் கொண்டு ஒரே ஓட்டமாகக் கிளாசுக்கு ஓடினாள்.

கிளாசில் அமர்ந்து படித்துக் கொண்டிருந்த காயத்ரி, மூச்சிரைக்க ஓடி வந்த தோழியைக் கேள்வியாக நோக்கி, "ஏன் ஷைலு இப்படி ஓடி வர்றே...? இன்னும் க்ளாசுக்கு டைம் ஆகலை!" என்றாள் மிகச் சாதாரணமாக.

கண்கள் கரை கட்ட, "ஏன் காயத்ரி என்னை விட்டுட்டு நீ மட்டும் வந்துட்டே...?" என்று குற்றம் சாட்டியவளுக்கு,

"இல்லேடா... ஷிவா கிட்டே ஒரு நோட்ஸ் இருந்தது, அதை எடுக்க வந்தோம். ஏன், என்னாச்சு ஷைலு?" என்றாள் ஒன்றும் புரியாமல்.

ஆனால், அவளின் கேள்விக்குப் பதில் சொல்லாமல், "ஒன்றும் இல்லை..." என்று பூசி மெழுக, "நீ கிளாசிலே இரு... இதோ வந்துடறேன்..." என்று கிளாசை விட்டு வெளியே வந்து வாசலைப் பார்க்க... கார்த்திக், ஷிவாவிடம் பேசிக் கொண்டிருப்பதைக் கண்டதும் மீண்டும் கிளாசிற்குத் திரும்பினாள்.

ஷைலுவுக்கு இன்னும் படபடப்பு அடங்கவில்லை, அவள் மனது அவனை விரும்பினாலும், அதை அவன் வாயால் கேட்டதும் இதயத் துடிப்பை அவளால் கட்டுப் படுத்த முடியவில்லை.

அவளின் முகம் பேயடித்த மாதிரி இருப்பதைக் கவனித்த காயத்ரி, "ஏன் ஒரு மாதிரி இருக்கே? கார்த்திக் என்ன சொன்னார்...?" என்று கேட்டதும்...

அதற்கு மேல் மறைக்க முடியாமல், திக்கித் திணறி, "அவர்... அவர்... என்னிடம் ஐ லவ் யூ... என்றார்!"

என்றதும், 'இரண்டாவது சந்திப்பிலேயே காதலைச் சொல்லியாச்சா...? ரொம்பத்தான் தைரியம்!' என்று நினைத்தாலும், அதையும் மீறி அவள் மனது நிறைந்தது.

'கார்த்திக் மாதிரி ஒருவர்தான் ஷைலுவின் அழகுக் கும், பொறுமைக்கும், அறிவுக்கும், அதையும் மீறி, அவள் மனதால் அனுபவிக்கும் துன்பத்திற்கும் பொருத்த மானவர். கடவுளே! இவள் மனதை மாற்றிக் கார்த்திக்கின் காதலை ஏற்றுக் கொள்ளச் செய்!' என மனதார வேண்டி னாள்.

"சரி, நீ என்ன சொன்னே...?" என்ற காயத்ரியின் கேள்விக்குப் பதில் சொல்ல முடியாமல், ஷைலுவின் கண்களில் கரகரவென கண்ணீர் வர, பதறிப் போனவள், "ஹேய்! இப்போ என்ன ஆச்சுடா? ஏன் அழறே...?" என்றவள், அவளைத் தன் மடியில் சாய்த்து முதுகை ஆறுதலாக வருடிக் கொடுக்க, அவளின் அழுகை ஓய்ந்து விசும்பல் மட்டுமே வந்தது.

கண்ணைத் துடைத்துக் கொண்டு நிமிர்ந்தவள், "எனக்கு வீட்டுக்குப் போகணும் காயத்ரி. நீயும் வர்றியா...?" எனவும், காயத்ரி மறுப்பேதும் சொல்லாமல் அவளுடன் கிளம்பினாள்.

IDதிய நேரத்தில் மகளைக் கண்ட சுஜாதா, "என்ன ஷைலு... காலேஜ் இல்லையா....? ஏன் முகம் ஒரு மாதிரி இருக்கு...?" என்று துருவினார் அக்கறையுடன்.

"செம தலைவலி... கண்ணெல்லாம் எரியுது... அதான் வந்துட்டேன். கொஞ்ச நேரம் தூங்கினால் எல் லாம் சரியாகிவிடும்!"

தடுமாறி, கோவையாகப் பொய் சொல்லி விட்டுத் தன்னறைக்குச் சென்றவளைத் தடுத்து,

"சாப்பிட்டாயா...? கொஞ்சம் இரு, மாத்திரை தரேன் போட்டுக்கோ..." என்றவர், சமையலறைக்குச் சென்று காபி தயாரித்து எடுத்து வந்தார்.

மகள் சோர்வாகப் படுக்கையில் விழிகளை மூடிப் படுத்திருப்பதைக் கண்டதும் நெற்றியில் கை வைத்துப் பார்த்தவர், அவளை எழுப்பி மாத்திரையைப் போட வைத்து, காபியைக் குடித்ததும் கதவைச் சாத்திக் கொண்டு செல்ல. ஷைலுவின் மனம் மீண்டும் கார்த்திக்கிடமே போய் நின்றது.

கார்த்திக், 'ஐ லவ் யூ ஷைலு!' என்றதும் உடம்பெல் லாம் புல்லரித்தது. மனதில் சொல்ல முடியாத ஒரு உணர் வும், தன்னை தனக்காகவே காதலிகிற ஒருவன் என்று சந்தோஷமாக இருந்தாலும் ஏனோ மனம் முரண்டியது.

ஒரு பக்கம், 'எதற்காக இந்த மாதிரி நம்மையே வருத்திக்கணும்...? அடுத்தவர் வார்த்தைக்கு மதிப்பு கொடுத்து நாம் ஏன் நம் சந்தோஷத்தை அழிச்சிக்கணும்? இந்தச் சந்தோஷத்தை அனுபவித்தால்தான் என்ன...? நம் காதலைச் சொன்னால் கார்த்திக் எவ்வளவு சந்தோஷப் படுவார்...? அவருடைய வசீகரமான சிரிப்பைப் பார்த்துக் கொண்டே இருக்கலாமே!' என நினைத்தாலும்,

இன்னொரு பக்கம், 'எத்தனை நாள் இந்தச் சந்தோஷம் நிலைக்கும்? இந்தக் காதல் வீட்டுக்குத்

தெரியும்போது என்ன நடக்கும்? அதனால் என்னென்ன பிரச்சினைகள் வெடிக்கும்? ஏற்கெனவே அனுபவித்தது, இன்னும் அனுபவித்துக் கொண்டிருப்பது போதாதா..? மீண்டும் புது பிரச்சினையை இழுத்துப் போட்டுக்கொள்ள வேண்டுமா...?' என்று பலவாறு எண்ணி மனம் நொந்த தால், உடம்பு அனலாய்க் கொதித்தது.

வீட்டில் காயத்ரிக்கு நிலைகொள்ளவில்லை. 'ஷைலு எந்த மாதிரி மன நிலையில் இருக்காளோ... இது வரைக்கும் க்ளாசை கட் செய்ததே இல்லை. இன்றைக்கு இப்படிப் பாதியிலே வந்துட்டாளே... வீட்டுக்குப் போய் மனசைப் போட்டு ஏதாவது குழப்பிக் கொள்வாளோ...? அவளைப் போய்ப் பார்த்தால் என்ன...?' என்று தோன்றியதும் தாயிடம் சொல்லி விட்டுக் கிளம்பி விட்டாள்.

இவளைக் கண்டதுமே சுஜாதா, "வா காயத்ரி... என்னாச்சு ஷைலுவுக்கு, சீக்கிரமே வந்துட்டா...?" என்று விசாரிக்க,

"தலைவலின்னு சொன்னா... அதான் வந்துட்டோம். இப்போ எப்படி இருக்கா ஆன்ட்டி...?" என்று சிறு தயக் கத்துடன் கேட்டதும்,

"உள்ளேதான் படுத்துக்கிட்டு இருக்கா... போய்ப் பாரு!" என்றார் ஆதங்கத்துடன்.

அறைக்குச் சென்றவள் பதட்டத்துடன் சுஜாதாவை அழைத்து, "ஷைலுவுக்கு கொதிக்குது. வந்து பாருங்க..."

என, சுஜாதா ஓடிவந்து ஷைலு நெற்றியில் கை வைத்துப் பார்க்க, அனலாய்க் காய்ந்தது.

உடனே போய் டாக்டருக்குப் போன் செய்து வர வழைத்து சிகிச்சை கொடுத்ததும், சிறிது நேரம் ஷைலு கூட இருந்து விட்டு வீட்டுக்குத் திரும்பிய காயத்ரிக்கு மனசே சரியில்லை.

'ச்சே...! இந்த முட்டாள் பெண் தேவை இல்லாத வற்றையெல்லாம் நினைத்துக் குழம்பி இப்படிக் காய்ச் சலை வரவழைத்துக் கொண்டாளே. இதை எப்படி டீல் செய்வது? பேசாமல் கார்த்திக் சாரிடம் பேசிடலாமா...? அவர் என்ன சொல்கிறார் என்பதை வைத்து அடுத்து என்ன செய்யலாம்னு அவரிடமே கேட்கலாம்!' என்று முடிவெடுத்தவள், அடுத்த நாள் ஷிவாவிடம் கார்த்திக் நம்பரை வாங்கிப் போன் செய்தாள்.

ஷைலுவிடம் இரண்டாவது சந்திப்பிலே தன் காதலை வெளிபடுத்திய கார்த்திக்குக்கு, 'கொஞ்சம் அவசரப்பட்டு விட்டோமோ...?' என்று தோன்றினாலும், என்னவோ அவளைப் பார்த்த நொடியிலிருந்து ஏதோ ஜென்மம் ஜென்மமாகப் பழகிய உணர்வு அவனுள் நிறைந்திருந்ததால், ஒரு புதியவளிடம் தன் காதலைச் சொல்கிறோமே என்ற உணர்வே எழவில்லை.

ஷைலுவின் வெட்கமும் முகச் சிவப்பும், அவள் மனதில், தான் இருக்கிறோம் என்ற நினைப்பே அவ னுக்குத் தித்தித்தது.

ஆனால், ப்ரொபோஸ் பண்ணும்போது அவள் முகத்தில் ஏற்பபட்ட கலவரத்தை நினைவில் கொண்டு வந்தவனுக்கு, 'ஒரு வேளை திடீரென்று காதலைச் சொல்லவும் பயந்து விட்டாளோ...? மறுபடியும் அவளைச் சந்தித்து அவள் பயத்தைச் சரி செய்யணும். எது எப்படி இருந்தாலும் நீதான் ஷைலு என் வாழ்க்கைத் துணை. அதை யாராலும் மாற்ற முடியாது!' என்ற இனிய கனவுகளோடு ஆபீஸ் வேலைகளில் ஈடுபட்டிருந்தவனின் செல்போன் சிணுங்கி அழைத்தது.

வேலையிலிருந்து கவனம் கலைந்து டிஸ்ப்ளேவில் நம்பரைப் பார்த்தவன், 'புது நம்பராக இருக்கே...!' என்று யோசித்தவாறே எடுத்தவனிடம், "நான் ஷைலு ப்ரெண்ட் காயத்ரி பேசறேன்..." என்றதும், கார்த்திக்குக்கு ஆச்சர்யம் ப்ளஸ் குழப்பம்.

"சொல்லுங்க, ஷைலு எப்படி இருக்கா...? என்ன சொன்னாள்...? என்று ஆர்வமாகக் கேட்க,

"அதைப் பற்றித்தான் உங்களிடம் பேசணும், கொஞ்சம் நேரில் சந்திக்க முடியுமா...?" என்று தயக்கத்துடன் வினவ, எதற்கு என்று புரியாவிட்டாலும் ஏதோ பிரச்சினைன்னு புரிந்து கொண்டவன்,

"ம்ம்... நாளை நேரு பார்க்கில் லஞ்ச் ப்ரேக்கில் சந்திக்கலாம்...!" என்று போனை வைத்தான்.

அவனுக்கு ஒரே குழப்பம். 'ஷைலுவுக்கு என்ன ஆச்சு? காயத்ரியின் குரலில் சுரத்தே இல்லை... ஏதோ

பேசணும் என்றாங்களே... எதைப் பற்றி இருக்கும்...?' எப்படி யோசித்தாலும் எதுவும் அனுமானிக்க முடியாமல் குழம்பிப் போனவன், அடுத்த நாள் மதியம் லஞ்ச் ப்ரேக்கில் அவனைச் சந்தித்த காயத்ரி, "நீங்கள் ப்ரொபோஸ் செய்ததால் ஷைலுவுக்கு ஜுரம்!" என்றதும் பதறிப் போனான்.

"ஷைலுவுக்கு நான் ப்ரொபோஸ் செய்ததால் ஜுரம் என்கிறீர்களே... ஏன், என்னை அவங்களுக்குப் பிடிக்க வில்லையா...?" என்று வேதனையோடு கேட்டவனுக்கு அவசரமாக,

"ச்சே... ச்சே...! நீங்க ஏன் சார் இப்படியெல்லாம் நினைக்கிறீங்க? நீங்கள் ப்ரொபோஸ் செய்ததால் வந்த ஜுரம் இல்லை. இன்பாக்ட் அவள் உங்களை விரும்பு கிறாள்...!" என்றதுமே கார்த்திக்கின் முகம் மலர, அதைச் சலனமில்லாமல் பார்த்துவிட்டு, "ஆனால், அது தான் அவள் ப்ராப்ளம்...!" என்ற காயத்ரியைக் குழப்ப மாகப் பார்த்தான்.

"சாரி... நீங்க என்ன சொல்ல வர்றீங்கன்னு புரிய வில்லை...!" என, ஒரு பெருமூச்சை எடுத்தவள்,

"இப்படி அரைகுறையாகச் சொன்னால் உங்களுக் குப் புரியாது. நடந்ததை முழுதாகச் சொன்னால்தான் புரியும்..." என்றவள், இரண்டு வருடங்களுக்கு முன் நடந்ததைக் கூற ஆரம்பித்தாள்.

"இயல்பிலே அமைதியான பெண்ணாக ஷைலு இருந்தாலும் அவளும் நன்றாகப் பேசுவாள், சிரிப்பாள். ஆனால், அவள் கலகலப்பையும் சிரிப்பையும் அவளின் கூடப் பிறந்த தமக்கைகளே முடக்கி விட்டார்கள்..." என, கார்த்திக்கின் முகம் மேலும் குழப்பமானது.

"ஆமாம் சார். அவள் ப்ளஸ் டூ படித்துக் கொண்டி ருந்த பொழுதே அவளின் அழகிற்காக நிறைய ஆண்கள் அவள் பின்னால் சுற்றினார்கள். ஆனால், ஷைலு யாரையும் கண்டு கொண்டதே இல்லை. கூடப் படிக்கும் மாணவிகள், தன் பின்னால் யாராவது சுற்றினால் அதைப் பற்றி பெருமையாகப் பேசிக்கொள்ளும் பொழுது, ஷைலு மட்டும் அதற்கு விதி விலக்காக இருந்தாள். அவளுக்குத் தெரிந்தது எல்லாம் ஸ்கூல்... வீடு... படிப்பு மட்டுமே.

"இவள் கண்டு கொள்ளாததால் கடுப்பாகிப் போன சில பொறுக்கிகள், அவள் வீட்டின் முகவரிக்கு லவ் லெட்டர்ஸ், பண்டிகை, புது வருடத்திற்கு கிரீட்டிங்ஸ் என்று அனுப்புவார்கள். அதில் முகவரியோ பெயரோ இருக்காது. இந்த மாதிரி வருவதைப் பெற்றோரும் பெரிதாக எடுத்துக் கொள்ளவில்லை.

"அழகான பெண்ணுக்கு ஏற்படும் தொல்லைகள் தான் இதெல்லாம் என்று சகஜமாக எடுத்துக் கொண் டார்கள். ஆனால், அவளின் தமக்கைகளுக்கு அந்த மாதிரி லேசாக விட்டு விட மனமில்லை. எப்பொழுது அவளை மனதை உடைக்கலாம் என்று நேரத்தை எதிர்பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

"ப்ளஸ் டூவில் நல்ல மார்க்கில் தேறியதால் ஷைலுவுக்கு அவளின் கனவுப் படிப்பான கேட்டரிங்கில் சேர ஆசைப்பட்டு அப்ளை செய்து, அதற்குண்டான இண்டர்வியூ கார்டும் வந்தது. ஆனால், தமக்கைகள் ஒன்று கூடி, அவளை கேட்டரிங்கில் சேரக் கூடாது என்று தடுத்து விட்டார்கள். காரணம், காலேஜ் மெட்ராசில் இருந்ததால் ஹாஸ்டலில் தங்கிப் படிக்க வேண்டும் என்பதுதான்.

"அவர்களுக்கு இவள் படிப்பதே பிடிக்கவில்லை என்னும் போது, சென்னைக்கு எப்படிப் படிப்பதற்கு அனுப்புவார்கள். அதைத் தடுக்க அவர்கள் சொன்ன காரணம் என்ன தெரியுமா? 'இங்கே இருக்கும் பொழுதே கண்டவன் கிட்டேயிருந்து லவ் லெட்டர்ஸ், கிரீட்டிங் வருது. கேட்டால் எனக்கு ஒன்றுமே தெரியாது என்று நடிக்கிறாள். தனியாக ஹாஸ்டலில் போய்ப் படித்தால் அவ்வளவுதான் ஊர் சுற்றுவதற்கு வசதியாகப் போய்விடும். அதனால் படித்தவரைக்கும் போதும். வீட்டிலேயே இருக்கச் சொல்லுங்கள்...!' என்று அதிகாரமாகச் சொல்லி விட, தந்தையால் எதுவும் பேச முடியவில்லை.

"பிகாஸ்... நிறைய நேரங்களில் ஷைலுவுக்கு சப்போர்ட் செய்ததால் இந்த நேரத்தில் அவளுக்குப் பரிந்து பேச முடியாமல், இந்த காலேஜில் சேர்த்து இங்கேயே படிம்மா... என்று விட, வேறு வழியில்லாமல் மனதைத் தேற்றிக் கொண்டு காலேஜுக்கு வந்தாள்..." என, அதைக் கேட்டு கார்த்திக்கின் முகம் கடினமானது.

காயத்ரி அவனின் முக பாவனையைக் கவனிக்காமல் தொடர்ந்து, "காலேஜில் சேர்ந்த பிறகு எப்பொழுதையும் விட மிக ஜாக்கிரதையாக யாரிடமும் பேசாமல், அப்படியே பேசினாலும் ஒன்றிரண்டு வார்த்தை, அளவான சிரிப்பு இந்த எல்லையை அவள் தாண்டியதே இல்லை. இதுவே அவளுக்கு இங்குள்ள மாணவர்களின் மத்தியில் மதிப்பை ஈட்டித் தந்தது.

"ஒரு நாள் எங்கள் கிளாஸ் மேட் அவள் வீட்டு வழியாகச் சென்றவன், ஷைலுவைக் கண்டதும் ஒரு மரியாதைக்கு, "ஹாய்..." என, இவளும் அதே மரியாதைக்கு ஹாய் என்றிருக்கிறாள்.

"அவன் பைக்கிலிருந்து இறங்கி இரண்டு வார்த்தை பேச, இவளும் பேசியிருக்கிறாள். ஷைலுவை முடக்க சரியான நேரத்தை எதிர்பார்த்திருந்த தமக்கைகள், இந்தக் காட்சியைக் கண்டுவிட்டு, வீட்டின் உள்ளே சென்று, 'நான் அப்பவே சொன்னேனே, இவளுடைய நடத்தை சரி யில்லைன்னு. கேட்டீங்களா...? இப்பொழுது வெளியே எவனோடவோ கொஞ்சிக் கொண்டிருக்கிறாள்!' என்று ஆக்ரோஷமாகக் கத்த, சாதனாவும் கூடச் சேர்ந்து கொண்டாள்.

"சத்தம் கேட்டு, 'ஏன் இரண்டு அக்காவும் கோபமாகப் பேசிக் கொண்டிருக்கிறார்கள்?' என்று புரியாமல் உள்ளே வந்தவளிடம், 'என்ன, உன் காதலனுடன் கொஞ்சி யாச்சா?' என்று திராவகத்தை வீச, ஷைலுவின் உடம் பெல்லாம் பதறி விட்டது.

" 'ஐயோ! என்ன சொல்றீங்க...? எனக்கு ஒன்றும் புரியவில்லை...!' என்று அழுதவளிடம், கொஞ்சம்கூட இரக்கமே இல்லாமல், 'போதும், நிறுத்து உன் நாட கத்தை. இத்தனை நாள் ஏமாத்தினது போதும். இப்போ எங்க கண்ணாலே பார்த்து விட்டோம். இனியும் என்ன சொல்லி எங்களை ஏமாற்றப் போகிறாய்...? இவன்தான் உன் புதுக் காதலனா...? எப்போ கல்யாணம் செய்கிறதா ப்ளான்...? ஏன்னா கல்யாணம் அது இதுன்னு பேசிக்கிட்டு இருந்தீங்களே... அதான் கேட்கிறேன்...!' என்று நெருப்புத் துண்டங்களாய் வார்த்தைகளை அவள் மீது கொட்ட, ஷைலுவுக்கு மயக்கமே வந்து விட்டது.

"சாதனாவும் தன் பங்கிற்கு, 'ஓடிப் போய் கல்யா ணமா... இல்லை...' என்று காது கூசும் அளவிற்குப் பேச, ஷைலு கைகளால் காதைப் பொத்திக் கொண்டாள். அவள் என்ன சொன்னாலும் அவர்கள் நம்பாமல், அவளைக் குத்திக் குதறுவதிலே நோக்கமாக இருந்ததினால், எதையும் பேசிப் பிரயோஜனமில்லை என்று புரிந்து, சோர்ந்து போய் மூலையில் சரிந்தவள், பெற்றோரின் முகத்தில் ஆதரவு தேட, அவர்களோ எதையும் பேச வகையற்றுக் கையைப் பிசைந்து நின்று கொண்டிருந்தார்கள்.

6

பெற்றோருக்கு ஷைலுவைப் பற்றி நன்றாகத் தெரியுமென்பதால், பெரிய பெண்களின் பேச்சை அவர்கள் காதில் வாங்கவும் இல்லை, சப்போர்ட் செய்து

பேசவும் இல்லை. அவர்கள் மனதில் ஓடிக் கொண்டி ருந்தது எல்லாம்... கூடிய சீக்கிரம் இருவருக்கும் கல்யாணம் செய்து அனுப்பி விட்டால் ஷைலு நிம்மதி யாக இருப்பாளே என்பதுதான்.

ஆனால், தான் ஷைலுவுக்கு ஆதரவாக இந்த நேரத்தில் பேசி, அவர்களின் வன்மத்தை மேலும் வளர்த்து விட மனமின்றி அமைதியாக இருந்தார்கள்.

"அவர்களின் அமைதியும், ஷைலுவின் அமைதியும் அவர்களுக்கு மேலும் கடுப்பைத் தூண்டி விட, 'நீங்க வேண்டுமென்றால் பார்த்துக்கொண்டே இருங்க... இவள் ஓடிப் போய் கல்யாணம் செய்து கொள்ளத்தான் போகிறாள். இவளாலே நம் குடும்பம் அவமானப்பட்டு தலைகுனியத்தான் போகுது. சரியான ஓடு காலி... இவள் படிப்பை முடிக்கிறதுக்குள்ளே இந்த மாதிரி நடக்குதா, இல்லையான்னு பாருங்க...' என்று நளினா சவாலாகப் பேசியதைக் கேட்டதும் ஷைலுவுக்கு அப்படியே பூமி உள்வாங்கிக் கொள்ளாதா என்று தவித்தாள்.

"அவர்கள் மேலும் தொடர்ந்து, 'நாங்களும்தான் காலேஜுக்குப் போனோம்... எவனாவது ஒருத்தன் எங்களைப் பின்தொடர்ந்து வந்திருப்பானா...? இல்லை, லவ் லெட்டர்ஸ்தான் வீடு தேடி வந்திருக்குமா? எவனாவது ஒருத்தன் இந்த வீடு தேடி வந்திருப்பானா...? உன்னை மாதிரி கேடுகெட்ட ஓடுகாலித் தங்கை எங்களுக்கு வேண் டாம்...!' என்று அவள் இதயத்தைக் குத்திக் கிழித்து வார்த்தைகளை அக்னித் திராவகத்தில் தோய்த்து அவள் மீது வீச,

நிலைகுலைந்து போய்ப் பேசச் சக்தியில்லாமல் ஒரு அறையில் முடங்கி விட்டாள்.

"அன்று மாலை அவளை நான் பார்க்கச் சென்ற பொழுது அந்த அறையில் அரை உயிராக அழுது வீங்கிய முகத்தோடும், கண்களில் ஜீவனே இல்லாமல் விட்டத்தை வெறித்துக் கொண்டிருந்தவள், என்னைக் கண்டதும் அடிபட்ட மானாய்க் கதறி அழ, என் நெஞ்சமே பதறி விட்டது.

"என்ன நடந்தென்று தெரியவில்லை என்றாலும் அவளின் ஓய்ந்து போன முகம், அதில் தெரிந்த மயான அமைதி, அவளின் கதறல்... இதெல்லாம் அவள் மன தளவில் காயப்பட்டிருப்பதை என்னால் உணர முடிந்தது.

"அழுகை ஓய்ந்து மெல்ல விசும்பலுக்கிடையே நடந்ததைக் கேட்ட எனக்கு, என்ன செய்வதென்றே தெரியவில்லை. எனக்கு அவர்களின் அக்காக்கள் குணம் தெரிந்திருந்தாலும் இந்த அளவு கீழ்த்தரமாகப் பேசு வார்கள் என்று நான் எதிர் பார்க்கவில்லை.

'நான் இனிமேல் காலேஜ் வர மாட்டேன். இப்படியே ரூமிலே இருந்திடறேன்...!' என்று அழுதவளை ஒரு வழி யாகச் சமாதானப்படுத்தினேன்.

" 'இப்போ எந்த முடிவும் எடுக்காதே! கொஞ்ச நேரம் அமைதியாக இரு. நல்லாத் தூங்கு. அப்புறம் பேசிக்க லாம்...!' என்ற என்னிடம், 'அமைதியா...? அது இன்னுமா எனக்கு இருக்கு...?' என்று அழுதவளுக்கு, நான் என்ன

வென்று சொல்லிச் சமாதானப்படுத்த முடியும். ஏதோ ஏதோ சொல்லி ஆறுதல் படுத்திவிட்டு வந்தேன். ம்ம்... நல்ல வேளை, அது செமஸ்டர் லீவாக இருந்தது.

"அதன் பிறகு அவள் தம்பி, அப்பா, அம்மா, நான் என்று எல்லோரும் மாற்றி மாற்றிச் சொல்லிச் சொல்லி, அவளை மீண்டும் காலேஜுக்கு வர வெச்சோம். அதிலிருந்து சிரிப்பே மறந்து போன மாதிரி ஆகிவிட்டாள். நான் எவ்வளவோ அவளைச் சிரிக்க வைக்க முயற்சி செய்தாலும், கொஞ்சம்தான்!" என்று மனம் கனக்க முடித்தவள்,

"ஒரு உயிரைக் கொன்றால்தான் கொலையா? மனதைக் கொன்றாலும் அது கொலைதானே! அந்தப் பாதகத்தைத்தானே அவளுடைய சகோதரிகள் இன்னும் செய்து கொண்டிருக்கிறார்கள்...?" என்று ஆவேசமாகக் கொந்தளித்தவள்,

"ஆனால், உங்களைப் பார்த்த நாளிலிருந்து அவளுள்ளே ஏதோ ஒரு மாற்றம். எல்லோருக்கும் வாழ்க்கையில் வருகிற முதல் காதல் அவள் வாழ்க்கையில் வந்தாலும், அதை மனதார ஏற்றுக் கொள்ள முடியாமல் தத்தளித்து, இப்போது ஜுரத்தில் இருக்கிறாள்...!" என்று வேதனையுடன் சொல்லி முடித்தவள், பழைய நினைவுகளின் தாக்கத்தில் அங்கிருந்த பெஞ்சில் சோர்ந்து போய் அமர்ந்தாள்.

இதுவரைக்கும் காயத்ரி சொன்னதைக் கேட்டு இறுகிப் போய் அமர்ந்திருந்தவனின் மனதில் புயலடித்துக்

கொண்டிருந்தது. 'என் ஷைலுவின் பின்னால் இப்படி ஒரு சோகமா...? பூ மாதிரி இருக்கிற பெண்ணின் உள் ளத்தை இவ்வளவு குரூரமாக உடைத்து விட்டார்களே? எப்படி இதைத் தாங்கிக் கொண்டிருக்கிறாள்...? ச்சே...! இவர்க ளெல்லாம் மனுஷ ஜென்மம்தானா...?' என்று அவனின் மனது அணு உலை போலக் கொதித்தது.

'இவர்களிடமிருந்து ஷைலுவைக் காப்பாற்றி, என் உயிர் உள்ளவரை சந்தோஷமாக வைத்திருக்க வேண் டும்...!' என்ற உறுதி எழுந்தது.

இறுகிக் கல் மாதிரி அமர்ந்திருந்த கார்த்திக்கைக் காயத்ரி பலமுறை அழைத்த பிறகு தன்னிலைக்கு வந்தவனிடம், "இப்போ சொல்லுங்க கார்த்திக் சார்... உங்களுக்கு அவள்மீது நம்பிக்கை இருக்கா?" என்றாள் சிறு நப்பாசையுடன்.

அவள் கேட்டதும் சற்றும் தாமதியாமல், "என்ன கேள்வி இது காயத்ரி? என்னை நானே எப்படி நம்பாமல் இருப்பேன்? பிகாஸ் ஷி இஸ் இன் மை ஹார்ட்... தட்ஸ் ஒய் ஐ செட் லைக் தட்..." என்ற கார்த்திக்கைப் பார்த்துக் கண்ணீர் மல்கக் கை கூப்பினாள்.

"உங்களை மாதிரி ஒருவரின் சுயநலமில்லாத அன்பு தான், அவளின் மனக் காயத்திற்குச் சரியான மருந்து. தேங்க் யூ சோ மச் சார்!" என்று நெகிழ்ந்த காயத்ரியிடம்,

"இல்லை காயத்ரி... நான்தான் உங்களுக்குத் தேங்க்ஸ் சொல்லணும். இதுவரைக்கும் ஒரு நல்ல

தோழியாக இருந்து என் ஷைலுவைப் பார்த்துக்கிட்ட துக்கு...!" என்ற கார்த்திக்கை, விழி அகல ஆச்சரியமாக நோக்கினாள்.

"ஓ.கே. சார். இப்போ என்ன செய்வது சொல் லுங்கள்...?" என்று கேட்டு அவன் முகம் பார்த்து, அவனின் பதிலுக்காகக் காத்திருந்த காயத்ரிக்கு எதுவும் சொல் லாமல் ஒரு நிமிடம் அமைதியாக இருந்தவன், ஒரு நெடிய பெருமூச்சுடன், "இப்போ ஷைலுவை நான் சந்திப் பதோ கம்பெல் செய்வதோ சரியாக இராது. இந்த மாதிரி மன நிலைக்கு வேற மாதிரி முடிவெடுக்க நிறைய சான்ஸ் இருக்கு. முதலில் அவள் மனதை அவளுக்குப் புரிய வைக்க வேண்டும்.

"சோ, நீங்களாக எதுவும் என்னைப் பற்றி அவளிடம் கேட்காதீர்கள். நானும் அவள் கண்ணில் பட மாட்டேன். அவளாகவே எப்போ என்னைப் பற்றிக் கேட்கிறாளோ, அப்போ எனக்குப் போன் செய்யுங்கள். அடுத்த நிமிடம் நான் அவள் முன்னால் இருப்பேன்...!" என்று தீர்க்கமாக முடிவெடுக்க... காயத்ரிக்கும் அதுதான் சரி என்று தோன் றியது.

அவனின் முடிவை ஏற்றுக்கொண்டு கிளம்பியவளை நிறுத்தி, "எனக்காக ஷைலுவைக் கொஞ்சம் நல்லா பார்த் துக்குங்க...!" என்ற கார்த்திக்கிற்குப் புன்னகையைப் பதிலாகக் கொடுத்து விட்டு காலேஜுக்குத் திரும்பிய வளின் மனதில், ஷைலு மேல் கார்த்திக் வைத்திருக்கும் காதலும், ஷைலு அதை ஏற்றுக் கொள்ள முடியாமல் தவிப்பதும் புரிய,

'கடவுளே! இந்த இரண்டு உள்ளமும் ஒன்று சேர நீதான் கருணை புரியணும்...!' என்று வேண்டிக் கொண்டாள்.

அதே சமயம், கார்த்திக் எப்படியும் ஷைலுவை விட்டு விட மாட்டார் என்றே தோன்றியது. அவர் என்ன நினைக்கிறாரோ அதைச் செய்தே தீருவது என்ற பிடிவாதம் அதிகமாக உள்ளவர் என்று பார்த்தாலே தெரிகிறது. அதனால் ஷைலு மறுத்தாலும் எப்படியும் அவளைச் சம்மதிக்க வைத்துவிடுவார் என்ற நம்பிக்கை எழ, அதுவே பெரும் நிம்மதியைக் கொடுத்தது.

காலேஜ் விட்டு வீட்டுக்குச் சென்றதும் டிபன் சாப்பிட்டுவிட்டு ஷைலுவைப் பார்க்கச சென்றவள், ஜுரம் குறைந்து அறையில் அமைதியாக எதையோ சிந்தித்தபடி அமர்ந்திருந்த தோழியைக் கண்டு மனது வலித்தது. ஜுரம் குறைந்திருந்தாலும் முகம் தெளியாமல் குழப்பத்தில் இருப்பதைக் கண்டும் காணாமல் அவளின் உடல் நிலை பற்றி விசாரித்தவளுக்கு, ஷைலுவிடமிருந்து வெறும் 'ம்ம்...' என்றே பதில் வந்தது.

சில வினாடிகள் கழித்து ஷைலுவே கிளாசைப் பற்றி விசாரிக்க, "ஒரே அறுவை... நீ இல்லாமல் எனக்குக் கிளாசில் இருக்கப் பிடிக்கவே இல்லை..." என,

மெலிதாகப் புன்னகைத்தவள், "இன்றைய நோட்ஸ் கொடு. காபி செய்யணும்...!" என்றாள்.

அவளின் கடமை உணர்ச்சியைக் கண்டு ஆச்சரியமாக இருந்தாலும், வெறுமே 'ம்...ம்...' மட்டுமே

கொட்டியவளிடம், "நாளைக்கு எனக்காக வெயிட் பண்ணு. இன்னும் ரெண்டு மாசத்தில் செமஸ்டர் வருது, இந்த நேரத்தில் வீட்டில் இருந்தால் சரி வராது...!" என்று ஒரு அலைபாய்தலோடு சொன்னவளின் பேச்சும் சரி யாகத்தான் தோன்றியது.

சற்று நேரம் அங்கு அமைதி நிலவ, 'என்னைத் தேடி கார்த்திக் காலேஜுக்கு வந்திருப்பாரோ...? இவளிடம் ஏதாவது கேட்டிருப்பாரோ...?' என்ற நினைவு எழுந்ததுமே காயத்ரியை நோக்கித் திரும்பியவள், அவள் எவ்வித பரபரப்பும் இல்லாமல், பாடப புத்தகத்தைக் கருமமே கண்ணாகப் புரட்டிக் கொண்டிருப்பதைப் பார்த்துவிட்டு, 'ஒரு வேளை அவர் வரவில்லையா...? வந்திருந்தால் அதைப் பற்றி என்னிடம் சொல்லியிருப்பாளே...? கார்த்திக் வந்தாரா இல்லையா என்று காயத்ரியிடம் கேட்க லாமா?' என்று மனதிற்குள் ஒரு பட்டிமன்றமே நடத்திக் கொண்டிருந்தாள்.

ஷைலுவுக்குக் கார்த்திக்கைப் பார்க்க வேண்டும் போலத் தோன்றியது.

தூங்கும்பொழுதும் கனவெல்லாம் அவனே... மறுநாள் கல்லூரிக்குச் சென்றபொழுதும் அவனை நினைத்து மனம் அலைபாய்ந்தாலும்... காயத்ரி, கார்த்திக்கைப் பற்றிப் பேச்சே எடுக்காததாலும் தானே முன் வந்து பேச முடியாமல் ஏற்பட்ட தயக்கத்தினாலும் 'அவளே ஆரம்பிக்கட்டும், அப்பொழுது கேட்கலாம்...!' என்ற முடிவுக்கு வந்தாள்.

ஆனால் காயத்ரிக்கோ, 'இவள் ஏன் கார்த்திக்கைப் பற்றி ஒன்றுமே கேட்க மாட்டேன்கிறாள்...!' என்று தோன்றி னாலும், அவளைப் பார்க்கப் பார்க்கப் பாவமாக இருந்தது.

'கார்த்திக் சொன்னமாதிரி இருந்தால்தான் இவ ளுக்கு அவரின் அருமை தெரியும். நாமாகப் பேச்சை எடுத்தால் வேதாளம் மறுபடியும் முருங்கை மரத்தில் ஏறிவிடும். இது உன் வாழ்க்கை. அடுத்தவர்கள் சொல்லி முடிவெடுப்பதை விட நீயாக நன்றாக யோசித்து ஒரு முடிவுக்கு வா. அது தான் நல்லது...!' என்று நினைத்தவள், எதுவுமே நடவாதது போலப் பேசினாள்.

இப்படியே ஒன்றரை மாதம் உருண்டோட, இருவருமே கார்த்திக்கைப் பற்றிப் பேசாமல் கண்ணா மூச்சி ஆட்டத்தைத் தொடர, கார்த்திக்கோ அவளுக்குத் தெரியாமல் காரை ஓர் ஓரமாக நிறுத்திப் பார்த்து விட்டுச் செல்வான்.

வெள்ளிக்கிழமைகளில் மணக்குள விநாயகர் கோயிலுக்குச் செல்லும் பழக்கமுடைய ஷைலு, அந்த வார வெள்ளிக்கிழமை மாலையிலும் காயத்ரியுடன் கோயி லுக்குச் சென்று விநாயகரிடம், 'சீக்கிரமே கார்த்திக்கை என் கண்ணில் காட்டுப்பா...!' என்று மனம் உருக வேண்டிக் கொண்டு பிராகாரத்தைச் சுற்றி வந்து ஒரு மூலையில் காயத்ரியுடன் அமர்ந்து பேசிக் கொண்டி ருந்தாள்.

அந்த நேரம் ஒரு பெண்மணி தன் மணிபர்சைத் தவறவிட்டதைக் கவனித்த ஷைலு, வேகமாக எழுந்து

மணிபர்சை எடுத்து அவரை அழைத்து அவரின் கையில் கொடுத்து, "கீழே விழுந்திருச்சும்மா..." என்று நீட்ட, நன்றி சொல்லி வாங்கியவர், "உன் பெயர் என்னம்மா...?" என்றார் வாஞ்சையாக.

சிறு புன்னகையுடன் தன் பெயரைச் சொன்னதும், "அழகான பெயர்மா? மகாலட்சுமி மாதிரி இருக்கே...!" என, அவரின் பேச்சிற்குச் சிறு புன்னகையைப் பதிலாகக் கொடுத்து விட்டு, "நான் வரேன்மா...!" என்று காயத்ரி யுடன் கிளம்பி விட, அந்தப் பெண்மணி மகாலட்சுமிக்குத் தான் அவளைப் பார்த்துக்கொண்டே இருக்கணும் போல ஆசையாக இருந்தது. 'ம்ம்... யார் வீட்டுக்கு மருமகளாகப் போகக் கொடுத்து வெச்சிருக்கோ...!' என்ற ஏக்கப் பெரு மூச்சு எழுந்தது.

வீட்டிற்குச் சென்றவர், கோயிலில் பார்த்த பெண் ணைப் பற்றிக் கணவரிடம் சிலாகித்துப் பேச, அவர் சிரித்துக்கொண்டே, "நீயும்தானே நம்ம பையனுக்கு பெண்ணைக் கோயில் குளம் என்று தேடுகிறாய். ஆனால் அவன்தான் ஏற்கெனவே ஒரு பெண்ணைப் பார்த்துட்டானே...!" என்று கேலியாகச் சொன்னாலும்... அவர் சொல்றதும் உண்மைதான் என்பதை உணர்ந் தவர், ஆதங்கம் தாங்காமல், "இருந்தாலும் இந்தப் பெண்ணைப் பார்த்ததிலிருந்து மனசுக்குள் ஒரு ஏக்கம்!" என்று பெருமூச்செடுத்தார்.

மனைவியின் ஏக்கம் புரிந்தாலும், "மஹா! நமக்கு ஒரே பையன்தானே? வேறு யாரும் இல்லை, என்னைத் தவிர...." என்று கண் சிமிட்டிச் சிரிக்க,

"ஆசையைப் பாரு... மீசை நரைச்சாலும் ஆசை நரைக்கலை!" என்று அவரை வார, அட்டகாசமாகச் சிரித்தார்.

"யாருக்கும்மா, என்ன ஆசை அடங்கவில்லை...?" என்று கேட்டுக்கொண்டே வந்த மகனுக்கு, "நத்திங் கார்த்திக்... உங்கம்மா கோயில்ல ஒரு பெண்ணைப் பார்த்தாளாம். அவள் இந்த வீட்டுக்கு மருமகளாக வரணும் என்று ஆசையாக இருக்காம்...!" என்று விஸ்வநாத் முடிப்பதற்குள், கார்த்திக் கோபமாக முறைத்தான்.

"நான்தான் எனக்குச் சொந்தமானவளை ஏற்கனவே செலக்ட் செய்து விட்டேனே... அப்புறமும் ஏன் இந்த வீண் வேலை...?" என்று கோபப்பட்டவனை நிறுத்தி,

"இப்போ என்ன ஆச்சுன்னு கோபப்படறே...? அன்றைக்கு காலேஜில் ஒரு பெண்ணைப் பார்த்தேன்; அவள் என் தேவதை என்றாய். அவளைப் பற்றி ஏதாவது தெரிஞ்சுதா... இல்லையா? என்றார் மஹா.

"அம்மா, நான் அவ கிட்டே ப்ரொபோஸ் பண்ணிட்டேன். இன்னும் கொஞ்ச நாளில் உங்களுக்கு என் சம்மதத்தைச் சொல்கிறேன். அதுவரைக்கும் கொஞ்சம் பொறுத்துக்கக் கூடாதா...? என் செல்ல அம்மா இல்லை..." என்று கொஞ்ச.

"உன் கொஞ்சல் எல்லாம் இருக்கட்டும்... கொஞ்ச நாள்னு சொன்னியே, அது எத்தனை நாள் கார்த்திக்?" என்ற தந்தைக்குச் சற்றுத் தயங்கி,

"சரியாகச் சொல்ல முடியாது டாடி..." என, அவன் முகம் மாறுதலைக் கண்டு,

"ஓய் கார்த்திக்...? ஏதாவது பிரச்சினையா...?" என்றார் சற்றுக் கவலையுடன்.

"நோ டாடி... அவள் கொஞ்சம் ரிசர்வ்ட், தட்ஸ் இட். அதான் இன்னும் எனக்குப் பதில் சொல்லவில்லை..." என்ற மகனிடம்,

"அவளைப் பற்றி என்ன தெரியும்...?" என்று துருவினார் தாய்.

"அவள் பெயர் ஷைலஜா..." என்றவுடன்,

"கண்ணா! இன்றைக்கு நான் கோயில்ல பார்த்த பெண் பெயரும் ஷைலஜாதான்!" என்றதுமே,

"அம்மா! உலகத்தில் ஒருத்தருக்குத்தான் இந்தப் பெயர் இருக்குமா...?" என்றான் சற்று எரிச்சலுடன்.

அவனின் எரிச்சல் புரிந்து விஸ்வநாத் மனைவியைக் கையமர்த்தி, "நீ சொல்லுப்பா...!" என்று ஊக்குவிக்க, ஷைலஜாவின் பிரச்சினைகளை விட்டு விட்டு விவரங்களைக் கூற, இருவருக்குமே திருப்தியாக இருந்தது.

"சீக்கிரம் அவளை நம்ம வீட்டுக்குக் கூட்டிட்டு வா கண்ணா...!" என்ற தாயின் ஆசையைக் கண்டதும், "ஒரு நிமிடம்,,," என்று மேலே சென்றவன், திரும்பி வரும் போது தன் லேப்டாப்போடு வந்து, ஸ்கிரீன் சேவரில் போட்டு வைத்த படத்தைக் காட்டியதும்... மஹாலட்சுமிக்கு

ஆச்சர்யம், சந்தோஷம் எனக் கலவையான உணர்வில் எதுவும் பேசத் தோன்றாமல், அவளின் படத்தையே பார்த்துக் கொண்டிருந்தார்.

'இதுதான் தெய்வ சங்கல்பம் என்பதோ...!' என்று யோசித்துக் கொண்டிருந்தவரிடம், "என்னம்மா, ஷைலு படத்தையே பார்த்துக்கிட்டு இருக்கீங்க. நான் சொன்ன மாதிரி உங்க மருமக இருக்காளா...?" என்ற மகனின் கேள்விக்குச் சட்டென வாய்விட்டுச் சிரித்த மகாலக்ஷ்மியை மற்ற இருவரும் புரியாமல் பார்த்தார்கள்.

"எதுக்கு மஹா இப்போ சிரிக்கிறே...?" என்று புரியாமல் கேட்ட கணவருக்கு, "நான் இப்போ சொன் னேனே ஒரு பொண்ணு ஷைலஜா... அவ இவதான். என் மருமகளைத் தெய்வ சந்நிதானத்தில் வைத்தே பார்த்து விட்டேன்...!" என்று நெகிழ்ந்து போய்ச் சொல் வதைக் கண்டு கார்த்திக்குக்கு ஆச்சர்யத்தில் வாயடைத்துப் போயிருந்தாலும் மனதில் மகிழ்ச்சி ஊற்றெடுத்தது.

"இந்தப் படம் உனக்கு ஏது கார்த்திக்...?" என்ற தந்தைக்குச் சிறிது தயங்கி, "அவளுக்குத் தெரியாமல் எடுத்தது...!" என்றவுடன் அவருக்குக் கோபம் வந்து விட,

"இது தப்பு கார்த்திக். ஒரு பெண்ணுக்குத் தெரி யாமல் இந்த மாதிரிப் படம் எடுப்பது சைபர் குற்றம். தெரியுமில்லையா? நீ விடலைப் பையன் இல்லை, இந்த மாதிரி செய்வதற்கு...?" என்று கண்டிக்க,

"சாரிப்பா... பட், நான் என் ஷைலுவைத்தானே எடுத்தேன். என்னால் அவளுக்கு எப்படிப்பா தொல்லை வரும்...?" என்றவனைக் கேள்வியாக நோக்கி,

"நீ மறைந்திருந்து போட்டோ எடுக்கும் அளவிற்கு என்ன பிரச்சினை...?" என்றார் ஆராயும் பார்வையுடன்.

சில வினாடிகள் அமைதி காத்தவன், ஒரு பெரு மூச்சை விடுத்து, ஷைலுவை பற்றி... அவள் படும் துன்பங்கள், ஜுரம் வந்தது, கடைசியாகக் காயத்ரியிடம் சொன்னதை எல்லாம் சொல்லவும், மற்ற இருவருக்கும் அதிர்ச்சியாக இருந்தது. 'ஒரு சின்னப் பெண்ணிற்குள் இவ்வளவு சோகமா? சோகத்தைத் தாங்குகிற வயசா அது...?' என ஆயாசமாக இருந்தது.

"அதுதான் நான் அவள் கண்ணில் படாமல் அவளைத் தினமும் காலேஜுக்கு வரும்போது பார்க் கிறேன். அப்போ எடுத்ததுதான் இது. சாரிம்மா... சாரிப்பா... என்னால் அவளைப் பார்க்காமல் இருக்க முடிய வில்லை...!" என்ற மகனின் கண்களில் கண்ணீரைக் கண்டதும் மகாலக்ஷ்மி பதறி விட்டார்.

அவனை மடியில் சாய்த்து முதுகை வருடிக் கொடுக்கவும், மனதில் அதுவரைக்கும் அடைத்து வைத் திருந்த சோகங்கள் எல்லாம் கரை உடைத்து வெளிவர, கார்த்திக்கின் முதுகு அழுகையில் குலுங்கியது.

அதைக் கண்டதும் பெற்ற தாய் துடித்துப் போக, இதுவரைக்கும் அழுது பார்க்காத... எதையும் துணிவுடன்

எதிர்கொள்கிற பையன் குலுங்கி அழுவதைக் கண்டதும், விஸ்வநாத்தின் கண்களிலும் வைரத் துளியாய்க் கண்ணீர்.

மனதின் பாரம் இறங்கியதும் கண்ணைத் துடைத்துக் கொண்டு தாயின் மடியிலிருந்து எழுந்தவன், மெலிதாகப் புன்னகைத்து, "கொஞ்ச நாளாக ஷைலுவோட கஷ்டமும், அவளைப் பார்த்தாலும் பேச முடியாத கஷ்டமும் என்னை ரொம்பவே அழுத்தி விட்டது. இப்போ கொஞ்சம் பரவா யில்லை...!" என்றதும், இருவரும் மகனைப் பரிதாபமாக நோக்கினார்கள்.

சிறிது நேரம் சகிக்க முடியாத மயான அமைதி நிலவ, அந்த மௌனத்தை உடைத்த விஸ்வநாத், "கஷ்டம் என்றால் என்னவென்றே தெரியாமல் வளர்ந்த நீயே இந்தக் கொஞ்ச நாளில் ஏற்பட்ட துன்பத்தைத் தாங்க முடியாமல் ஆறுதல் தேடி அழுகிறாய். ஷைலுவுக்கு இந்த மாதிரி ஆறுதல் யாரிடம் கிடைக்கும்? அதனால் சீக்கிரம் அவள் மனதை மாற்றி, உன்னை ஏற்றுக் கொள்ள வை. அதுதான் அவளுக்குச் சந்தோஷத்தையும் நிம்மதியையும் கொடுக்கும்..." என,

"ஆமாம் கண்ணா! என் மருமகளைக் கூடிய சீக்கிரம் வீட்டுக்கு அழைத்து வா. என் பொண்ணு மாதிரி பார்த்துக் கிறேன்..." ஆசையுடன் கூற, இருவரையும் அன்புடன் கட்டிக் கொண்டு,

"கண்டிப்பாகக் கூடிய சீக்கிரமே உங்க பொண்ணை அழைச்சிக்கிட்டு வரேன்!" என்று உறுதியளித்து விட்டுத் தன்னறைக்குச் சென்றான்.

அறையில் கட்டில் மேல் அமர்ந்து, மடி மேல் லாப்டாப்பை வைத்து, அதில் உள்ள ஷைலு போட்டோவைப் பார்த்து, 'புயலே வந்தாலும் நிமிர்ந்து நின்ற என்னை, உன் விழிகளால் சாய்த்து விட்டாயே. எதற்கும் கலங்காத என்னை, உன் காதலால் இப்போது அழ வெச்சிட்டியே. நீ எப்போடா உன் காதலைச் சொல்லுவாய்...? உன்னுடைய ஒரு வார்த்தைக்காகத் தினம்தினம் ஏங்கிக்கிட்டு இருக்கேன்.

'என்னைக் காதலிக்கிறேன் என்று ஒரு வார்த்தை சொன்னால்கூட போதும்டா. அந்தச் சந்தோஷத்திலே எத்தனை வருடமானாலும் காத்திருப்பேன்...!' என்று ஷைலுவுடன் மனதிற்குள் பேசிக் கொண்டிருந்தபோது செல்போன் ரிங்கியது.

"ஹாய் கார்த்திக்... என்ன மேன்... போனும் இல்லை ஆளையும் காணோம்... எங்கேயாவது வெளி நாட்டில் இருக்கிறாயா? இல்லை கனவிலே மிதக் கிறாயா...?" என்ற சந்தோஷின் குரலுக்கு...

"ஹாய்! எப்படிடா இருக்கே? கல்யாண வேலை யெல்லாம் எந்த அளவில் இருக்குது...?" என்று விசாரித் தவன், "நான் கனவிலும் மிதக்கலை... வெளிநாடும் போகலை. இங்கேதான் இருக்கேன். சாருக்குத்தான் ஸ்வேதாவைத் தவிர வேறு யாரும் கண்ணுக்குத் தெரி யலை. அதைச் சமாளிக்க இப்படி ஒரு பிட்டா...?" என்று கார்த்திக் வாரவும்,

"ஹி... ஹி... சரி, போதும்... போதும். இப்படி மானத்தை வாங்காதே! நீதான் கொஞ்சம் பிசி, கல்யாணத்திற்கு வரேன்னு சொல்லிட்டே. அதான் நானும் அப்பாவும் கல்யாண வேலையில் பிசியாக இருக்கோம்!" என்றவன், தொடர்ந்து...

"அடுத்த மாதம் முதல் வாரத்தில் வைத்திருக்கிறார்கள்... சரி, உன் மேட்டர் எந்த லெவலில் நிக்குது. நீ ஷைலுவிடம் பேசினேன்னு ஷிவா சொன்னான்... நீ என்ன சொன்னே... அவ என்ன சொன்னா...? என,

"ஹேய்... ஹேய், கொஞ்சம் மூச்சு விட்டுப் பேசு. நீ கேட்ட கேள்விக்கு ஒரே வரியில் பதில், பாதிக் கிணறு தாண்டிட்டோம்...!" என்றான்.

"டேய்... நிறுத்துடா. சொல்ற உதாரணத்தைப் பாரு, பாதிக் கிணறு தாண்டிட்டானாம். கொஞ்சம் ஏமாந்தே, உள்ளே விழுந்துவீடுங்க. அதனால முழுசையும் தாண்டற வேலையைக் கவனி...!" என்றான் கேலியாக.

"நீ என்னைக் கிண்டல் பண்றியா? ஸ்வேதாவிடம் காதலைச் சொல்லப் பயந்துகிட்டு ஓடின பயந்தாங்கோளி நீ. கடைசியில் ஸ்வேதா தாங்க முடியாமல், 'டேய் முண்டம், ஐ லவ் யூ'ன்னு சொன்னாள்...!" என்று பதிலுக்குக் கார்த்திக் வாரினான்.

"அடப்பாவி! இப்படி என் அந்தரங்கத்தை கிளறி நாறடிக்கிறியே... போதும்பா சாமி, ஆளை விடு...!" என்று சந்தோஷ் அலற,

கார்த்திக் சிரித்துக்கொண்டே, "நான் காரணமாகத் தான் வெயிட் பண்றேன். சக்சஸ் ஆனதும் கண்டிப்பா உனக்குச் சொல்றேன்..." என,

"ஓ.கே... ஓ.கே... முடிந்தால் ஷைலுவோடு கல்யாணத்திற்கு வருவதற்கு முயற்சி செய். இது சம்மந்தமா உதவி வேணும்னா கேள்..." என,

"ஷ்யூர் டா..." எனப் போனை வைத்துவிட்டு, மறுபடியும் ஷைலு படத்தையே பார்க்க ஆரம்பித்தான்.

ஷைலுவுக்கு நாளாக நாளாகக் கார்த்திக்கைப் பார்க்க வேண்டும் என்ற தவிப்பு அதிகமாக... எந்த வேலையையும் சரியாகக் கவனிக்க முடியவில்லை. தூங்கவும் முடியவில்லை.

இருபத்தி நான்கு மணி நேரமும் அவனைப் பற்றிய எண்ணங்களே அவளைச் சுற்றிக் கொண்டிருந்தது.

'அவனும் காலேஜ் பக்கம் வருவதில்லை. என்ன ஆயிற்று? நான் ஓடி வந்ததும் எனக்குப் பிடிக்கவில்லை என்றே முடிவு செய்து விட்டாரா? கடவுளே! அவரை எப்படி கான்டாக்ட் செய்வது...?' என்று யோசித்து யோசித்துத் தலை வெடித்து விடும் போல் இருந்தது.

'காயத்ரியிடம் மனசில் இருப்பதைச் சொன்னால் நிச்சயம் ஒரு தீர்வு கிடைக்கும்!' என முடிவுசெய்து கிளம்பியவளை, "என் பிறந்த நாளைக்கு ஷாப்பிங் செய்யணும், அதை மறந்து விடப் போகிறாய்... சாயங் காலம் நான்கு மணிக்கு வந்துடு!" என்ற தாய்க்குச் சம்மதமாகத் தலையாட்டி விட்டுச் சென்றாள்.

இவளைக் கண்டதுமே காயத்ரி ஒருவாறு விஷயத்தை யூகித்தவள், மாடிக்கு அழைத்துச் சென்று, ஒன்றுமே தெரியாதவள் போல விஷயத்தைக் கேட்டதும்... ஷைலுவுக்கு எப்படிக் கேட்பது என்று தெரியாமல், மொழியே மறந்தவள் மாதிரி விழிக்க, காயத்ரியின் இதழ்கள் சிரிப்பில் திமிறியது.

பிடிவாதமாக ஷைலுவே கேட்கட்டும் என்று அமைதி காக்க, ஷைலுவோ தன் தயக்கத்தை உதறி, "நான் சொல்றதைத் தப்பாக நினைக்காதே...!" என்று இழுத்து, "எனக்குக் கார்த்திக்கைப் பார்க்கணும்..." என்றாள் சுரிதாரின் துப்பட்டாவைத் திருகியபடி.

அவள் கேட்டதுமே புரியாதவள் போல, "யார்... அன்று காலேஜ் வந்தாரே, அவரா...? என்று சீண்டவும்,

"ப்ளீஸ் காயத்ரி... விளையாடாதே...!" என்றாள் கெஞ்சுதலாக.

"சரி, நான் விளையாடலை. நீ எதுக்கு அவரைப் பார்க்கணும்...? அன்று உன்னிடம் அவர் ப்ரொபோஸ் செய்தபோது அழுதே. அப்புறம் இத்தனை நாள் அவரை மறந்து விட்ட மாதிரி நடந்துகிட்டே. இப்போ ஏன் திடீரென்று அவரைப் பற்றிக் கேட்கிறே...?" என்று கேட்டதும்தான் தாமதம், ஷைலு முகத்தை மூடிக் கொண்டு அழ ஆரம்பித்தாள்.

காயத்ரிக்குப் பாவமாக இருந்தாலும் மனதைக் கல்லாக்கி, "நான் கேட்டதற்குப் பதில் சொல்...!" என்று குடைய...

"என்னை வார்த்தையாலே கொல்லாதே. எனக்கு... எனக்குக் கார்த்திக்கைப் பார்க்கணும் போல இருக்கு. இதுக்கு மேலே என்னிடம் எதுவும் கேட்காதே...!" என்னும் போதே மீண்டும் கண்களில் கண்ணீர் துளிர்க்க, காயத்ரி யின் மனம் குதுகலம் அடைந்தது.

'வார்ரே... வா... வந்துட்டியா வழிக்கு...!' என்று நினைத்துக் கொண்டவள், "ஏன் இந்தத் திடீர் முடிவு?" என்ற தோழிக்கு, என்ன சொல்வதென்று தெரியாமல் கண்களைத் துடைத்துக் கொண்டு, மௌனமாகத் தன் விரல்களை ஆராய்ந்தபடி,

"கார்த்திக்கைச் சந்தித்திலிருந்தே என் மனதில் ஒரு சலனம். அவர் ப்ரோபஸ் செய்தபோது ஆசை இருந் தளவுக்குத் தைரியம் இல்லை. ஆனால், அவரைப் பார்க் காமல் இந்த ஒன்றரை மாதமும் எனக்கென்னவோ நரகத்தில் இருந்த மாதிரி ஒரு ஃபீலிங். எதையோ இழந்த மாதிரி ஓர் உணர்வு. இனியும் அவரைப் பார்க்காமல், அவரிடம் பேசாமல் இருந்தால் எனக்குப் பைத்தியமே பிடித்து விடும் போலிருக்கிறது. ப்ளீஸ் காயூ... என்னைப் புரிந்துகொள்...!" என்னும்போதே அழுகை வரப் போகி றேன் என்று கட்டியம் கூறியது.

அதற்கு மேல் காயத்ரிக்குத் தாங்க முடியவில்லை. "அடி அசடு... உன்னைப் பற்றிப் புரிந்து கொண்டதால் தான் இப்படிக் கேட்கிறேன். இதற்காகத்தானே நான் காத்துக்கிட்டு இருக்கேன். கார்த்திக் ரொம்ப நல்லவர், உன்னைப் பற்றி நன்கு புரிந்தவர். உன்னை முதலில்

பார்த்தபோதே அவரையும் அறியாமல் உன்னை நேசிக்க ஆரம்பித்து விட்டார். உன்னைப் பற்றிய டீடெய்ல்ஸ் எல்லாம் ஷிவாவிடம் கேட்ட பிறகுதான் உன்னிடம் ப்ரொபோஸ் செய்தார்.

"அன்று அவர் அப்படிச் செய்ததற்குக் காரணம், நீ அவருக்குக் கிடைக்காமல் போய் விடுவியோ என்ற பயம், அவ்வளவுதான். அது மட்டுமில்லை, கார்த்திக் சாரைப் பற்றி ஷிவா அடுத்த நாளே சொல்லி விட்டான். அதுதான் அன்று அவரிடம் உன்னைத் தனியாகப் பேச விட்டு விட்டுச் சென்றேன்...!" என்று விளக்க, ஷைலுவின் விழிகள் கண்ணீர் ஊறியிருந்தாலும் ஆச்சரியத்தில் மின்னியது.

அவள் தலையில் லேசாகத் தட்டி, "நீங்க ரெண்டு பேரும் சேர்ந்தால் சந்தோஷப்படுகிற முதல் ஆள் நான்தான்... அழாதே, ஏதாவது செய்யலாம்...!" என்று ஷைலுவைக் கட்டிப் பிடித்துக் கண்ணைத் துடைத்து விட்டு,

"சரி, அழுதது போதும். கொஞ்சம் சிரி. அப்போதான் நான் ஏதாவது செய்வேன்...!" என்று போலியாக மிரட்டியவுடன் கண்ணீருடன் புன்னகைத்து "தேங்க்ஸ் காயத்ரி!" என்றாள் ஆத்மார்த்தமாக.

"ஹேய்! தேங்க்ஸ் எல்லாம் எதுக்கு...? என் ஷைலு, இல்லாத மூளையைக் கசக்கிப் பிழிந்து ஒரு நல்ல முடிவு எடுத்திருக்கா... அதனால நான் ரொம்ப சந்தோஷமாக இருக்கேன்...!" என்று அவளைச் சீண்ட,

"ஹேய்... உன்னை..." என்று புன்னகையோடு அடிக்க வர, அவளிடமிருந்து லாவகமாக விலகி, "நாளை போட்டிங் போகலாமா?" என்று கேட்டவளுக்கு, மனது லேசாக இருந்ததால், சம்மதம் என்றாள்.

அவள் சென்றதும், கார்த்திக்கை அழைத்து, ஷைலு பேசியதைக் கூறி, "ஒரு வழியாக ஷைலுவை உங்க வழிக்குக் கொண்டு வந்துட்டீங்க. எஸ்... ஷி ரியலைஸ் யுவர் லவ். நவ் ஷி வாண்ட்ஸ் டு ஸீ யூ..." என, அவனுக்கு உலகமே தன் கையில் வந்த மாதிரி ஃபீலிங் உண்டாக, சந்தோஷத்தில் பேச்சே வரவில்லை. பல முறை காயத்ரி அழைத்த பிறகுதான் சுய நினைவிற்கு வந்தான்.

தன் உணர்வுகளை வெளிக்காட்டாமல் வெறுமே "ம்ம்..." என்று தன் சந்தோஷத்தை வெளியிட்டாலும், காயத்ரிக்கு அவன் எப்படி உணர்வான் என்று புரியுமென்பதால், "சார் இப்பவே எக்ஸ்சைட் ஆகாதீங்க. நாளை போர்ட் க்ளப்பில் மீதியை வெச்சுக்கோங்க. அவளிடம் நீங்க வரப் போவதைச் சொல்லவில்லை, சர்ப்ரைஸா இருக்கட்டும்...!" என்றவளிடம்,

"தேங்க்ஸ் எ லாட் காயத்ரி... இதுக்கு மேலே என்ன சொல்றது...?" என்றான் நெகிழ்ச்சியாக.

"நீங்க சந்தோஷமாகப் பார்த்துப்பீங்க என்ற நம்பிக்கையில்தான் இதைச் செய்கிறேன்...!" என்று போனை வைத்து விட, கார்த்திக்கின் மனதில் சந்தோஷ அலையடித்தது.

தாயுடன் ஜவுளிக் கடையில் சுரிதார் செலக்ட் செய்துகொண்டிருந்த ஷைலுவைக் கண்ட மஹா, வேகமாக அவளருகில் நெருங்கி அழைக்க, திரும்பிய வளுக்கு அவரைக் கண்டதும் ஒரு நிமிடம் தடுமாறி, ஞாபகம் வந்தவளாய் நலம் விசாரித்து விட்டுப் பரஸ்பரம் இருவருக்கும் அறிமுகம் செய்து வைத்தாள்.

"இந்தக் காலத்தில் இப்படி ஒரு பொண்ணைப் பார்க்கிறது ரொம்பக் கஷ்டம். ஷைலு மாதிரி ஒரு பெண் பிறக்க நீங்க கொடுத்து வைத்திருக்க வேண்டும்!" என்றதும், சுஜாதாவின் முகம் ஒரு நிமிடம் வாடி, பின் சரி யானது.

அவரே தொடர்ந்து, "எனக்குப் பெண் என்றால் மிகவும் கொள்ளை ஆசை. ஆனால் கடவுள் அந்தப் பாக்கியத்தை எனக்குக் கொடுக்கவில்லை. ஷைலுவைப் பார்த்ததும் அந்த ஆசை அதிகமாகி விட்டது!" என, சுஜாதாவிற்கு மனம் நெகிழ்ந்து விட்டது. தன் வீட்டில் இந்தப் பெண் அக்காள்களிடம் மாட்டிக்கொண்டு படும் அவஸ்தையை எண்ணி வேதனையாக இருந்தது.

"ஒரு நாளைக்கு ஷைலுவை அனுப்பி வையுங் களேன். என் வீடு மணக்குள விநாயகர் கோயில் பக்கத்தில்தான். கோயிலுக்கு வரும்போது அப்படியே வீட்டுக்கும் வாம்மா...!" என்ற மகாலக்ஷ்மிக்கு,

"கண்டிப்பாக அனுப்பி வைக்கிறேன்...!" என்றார் சுஜா.

அடுத்த நாள் காயத்ரியுடன் போட்டிங் போவதைப் பற்றித் தாயிடம் கூறிவிட்டுப் படுக்கச் சென்றவளுக்குக் கனவெல்லாம் கார்த்திக்கின் முகவரியே.

மறுநாள் தாயிடம் விடைபெற்றுக் காயத்ரியுடன் ஷைலு ஸ்கூட்டியில் கிளம்பினாள்.

வழியெல்லாம் காயத்ரி ஏதேதோ பேசிக்கொண்டு வர, ஷைலுவை கார்த்திக்கின் நினைவுகளே ஆக்ரமித் திருந்ததால், எதுவுமே கருத்தில் பதியவில்லை.

போட்டிங் க்ளப் போய்ச் சேர்ந்ததும் வண்டியைப் பார்க் செய்துவிட்டு ரெஸ்டாரன்ட்டை நோக்கிச் சென்றார் கள்.

ஷைலுவை வெளியே நிறுத்தி, "நீ இங்கேயே நில்லு... போட் ஃப்ரீயா இருக்குதான்னு பார்த்துக் கிட்டு வரேன்!" என்றவள், உள்ளே சென்று கார்த்திக்கைத் தேடினாள். டைனிங் ஹாலில் ஒரு வித பரபரப்புடன் அமர்ந்திருப்பதைக் கண்டவள், புன்னகையுடன் நெருங்க, அவளைப் பார்த்து விட்ட கார்த்திக்கும் வேகமாக அவளை நெருங்கினான் ஆவலுடன்.

"ஷைலு எங்கே...?" என்று விழுந்த முதல் கேள்வி யில் விரிந்த புன்னகையுடன்,

"உங்க ஷைலு இல்லாமல் வருவேனா? அவளும் வந்திருக்கா. வெளியில் நிற்க வைச்சிருக்கேன், அழைச் சிட்டு வரவா? இல்லை, நீங்களே போய் சந்திக்கிறீங்களா?" என்றாள் புன்னகையுடன்.

"இல்லை, வேண்டாம். நான் இங்கேயே இருக்கேன், நீங்க அவளை கெஸ்ட் ரூமுக்கு அனுப்புங்க. நான் வெயிட் பண்றேன்!" என, வெளியில் வந்தவளை எதிர் கொண்டாள் ஷைலு.

ஒரு நிமிடம், 'இவள் கார்த்திக்கைப் பார்த்திருப் பாளா?' என்று யோசித்தவள், "என்னப்பா போட் ஃப்ரீயா இருக்கா?" என்ற இயல்பான கேள்வியில், அவள் பார்க்க வில்லை என்பது ஊர்ஜிதமாக,

"இப்போதைக்கு எதுவும் இல்லை, கெஸ்ட் ரூம் புக் செய்திருக்கேன்... நீ அங்கே போ, நான் வரேன்...!" என, மறுபேச்சுப் பேசாமல் ரூமைத் தேடிச் சென்றாள்.

ரூமிற்கு சென்று கதவைத் திறக்க, இனிதாக ஷாக் அடித்த மாதிரி இருந்தது, மார்பில் அழுத்தமாகக் கையைக் கட்டிக் கொண்டு, சுவரில் சாய்ந்தபடி சிரித்துக் கொண்டி ருந்த கார்த்திக்கைக் கண்டதும். இத்தனை நாட்களாக யாரைப் பார்க்கணும், பேசணும்னு ஆசைப்பட்டாளோ, அவளின் எண்ணத்தின் நாயகனே எதிரில் நிற்பதை நம்ப முடியாமல் தடுமாறினாள்.

ஒரு நிமிடம், தான் காண்பது கனவா என்ற சந்தேகம் கூட எழுந்தது. ஆனால், அவனோ ஒரு நிமிடம் கூடக் கண்ணிமைக்காமல், அவளையே ரசித்துக் கொண்டி ருந்தான்.

கால்கள் அங்கேயே வேர்கள் ஊன்றி விட, ஒரு அடி கூட நகர்த்த முடியவில்லை. அங்கேயே நின்று விட, சிரிப்புடன் அவளை நெருங்கியவன்,

"ஹலோ மேடம்! என்ன, இங்கேயே நின்னுட்டீங்க? உள்ளே வர மாட்டீங்களா...?" என்று சிரிப்புடன் அவள் கைப் பிடித்து அங்கிருந்த சோபாவில் அமர்த்தித் தானும் பக்கத்தில் அமர, அப்பொழுதும் ஷைலுவின் விழிகள் அவன் முகத்தை விட்டு அகலவில்லை, ஆச்சரியமும் அகலவில்லை.

"ஹேய்! என்ன ஆச்சு, இப்படி விழுங்கிற மாதிரி பார்க்கிறே? என்னை நீ இங்கே எதிர்பார்க்கவில்லை இல்லையா?" என, அப்பொழுதும் அவளிடம் மௌனம் தான் பதிலாக வந்தது.

அவளின் கைப் பிடித்துத் தன் கைக்குள் சிறைப் பிடித்து, "ஆச்சரியமாக இருக்கா...? காயத்ரி எல்லாம் சொன்னாங்க!" என்றதும், ஷைலுவுக்கு எல்லாம் புரிய ஆரம்பித்தது.

"சொல்லு ஷைலு... நான் அன்று உன்னிடம் ப்ரொபோஸ் பண்ணியதற்கு நீ இன்னும் பதில் சொல்ல வில்லை. உன் பதிலுக்காக நான் இவ்வளவு நாள் காத்துக்கிட்டு இருக்கேன்டா!" என்றவனின் குரலில் ஏக்கம் இழையோட, மெல்ல நிமிர்ந்து அவன் முகத்தை நோக்கி விட்டுத் தலையைக் குனிந்து கொண்டாள்.

வெட்கமும், நாணமும் போட்டி போட்டுக் கொண்டு சிவந்த அவளின் முகத்தை, அவளையே விழுங்குகிற மாதிரி பார்த்தவன், ஒரு விரலால் மெல்ல அவள் முகத்தை நிமிர்த்தி, "இப்படிப் பார்த்தால் என்ன அர்த்தம்?

நீ என்னை விரும்புகிறாய்னு எடுத்துக்கவா?" என்ற வனின் கேள்விக்கு வெறுமே "ம்ம்..." என்று மட்டுமே வர, கையுடன் சிறைப்பட்டிருந்த கைகளைக் கோத்துக் கொள்ள, உடம்பில் மின்சாரம் பாய்ந்த மாதிரி இருக்க, அவனின் அருகாமையும் தொடுகையும் தாங்க முடியாத வளாக, அவனின் மார்பில் சர்ய்ந்து கொண்டவளை இறுக அணைத்துக் கொண்டான்.

"ஷைலு..." என்று மென்மையாக அழைக்க, "ம்ம்..." என்று முனகிய ஷைலுவிடம், "உன் வாயால் நீ என்னைக் காதலிக்கிறேன்னு சொல்லுடா... ப்ளீஸ்..." என்றவளின் கிசுகிசுப்பான குரல் தாலாட்ட,

மெல்ல நாணத்துடன் நிமிர்ந்து உணர்ச்சிகரமான குரலில், "ஐ லவ் யூ கார்த்திக்..." என்று அவன் கன்னத்தில் தன் இதழைப் பதிக்க, அதற்கு மேல் ஆசை வெள்ளத்தை அணை போட்டுத் தடுக்க முடியாமல், அவள் முகமெங்கும் முத்தப் பேரணி நடத்த, தூக்கி வாரிப் போட எழுந்தாள்.

முகமெல்லாம் முத்து முத்தாக வியர்த்திருக்க, ஒரு நிமிடம் ஒன்றும் புரியாமல் அலங்க மலங்க விழித்தவள், கார்த்திக் முத்தமிட்டது கனவில் என்று புரியவும், ஒரு பக்கம் சிரிப்பும் அவன் முத்தமிட்டதை நினைத்து வெட்கமும் வந்தது.

'காயத்ரியிடம் பேசிவிட்டு வந்ததிலிருந்து கார்த்திக் பற்றியே நினைத்து கொண்டிருந்ததால், போட் கிளப்பில் அவனைச் சந்தித்த மாதிரி கனவு வந்திருக்கு...!' என்று

தனக்குள் பேசியபடி வெட்கத்துடன் புன்னகைத்துக் கொண்டே மணியைப் பார்க்க, அது நான்கு என்றது.

'விடியற் காலை கனவு பலிக்கும் என்பார்களே, அப்படியென்றால் இன்று கார்த்திக்கைச் சந்திப்பேனா...?' என்று நினைக்கும் போதே அவள் தேகமெங்கும் ஓர் இனிய மின்னல் ஓட, பரவசத்துடன் கண் மூடிய ஷைலு, போன் அடிக்கும் சத்தம் கேட்டுக் கண் திறந்தாள்.

போனை எடுத்தவளிடம், "அப்பா ஹார்ட் அட்டாக்கில் இறந்துவிட்டார் ஷைலு..." என்று மாமா வின் மகன் சுரேஷ் தகவல் கூற,

ஒரு நிமிடம் விக்கித்து நின்றவள், உடனே சுதாரித்து, தந்தையிடம் விஷயத்தைக் கூற, எல்லோரும் உடனடி யாகச் சென்னைக்குக் கிளம்ப ஆரம்பித்தார்கள்.

சஞ்சய்யின் ஒரே தங்கை லாவண்யா கல்லூரியில் படிக்கும் போது ஒரு சேட்டுப் பையனைக் காதலித்துப் பலத்த எதிர்ப்புகளிடையே கைப்பிடித்தார்.

அவர்களின் குடும்பத் தொழில் நகைக் கடை என்பதால், லாவண்யாவை அவரின் கணவர் சீரும் சிறப்புமாக வைத்திருந்தார்.

அவர்களின் அன்புக்கு அடையாளமாக ஒரே பையன் சுரேஷ். அவன் பி.இ. ஏரோநாட்டிக் இஞ்சினி யரிங் முடித்து, விமானம் தயாரிக்கும் கம்பெனியில் குவாலிட்டி ஆபீசராக இருக்கிறான்.

எல்லோரும் நிலைமையை உணர்ந்து வேகமாகக் கிளம்பிக் கொண்டிருக்க, ஷைலுவுக்குப் போகலாமா வேண்டாமா என்று குழப்பமாக இருந்தது.

'இன்னும் பத்து நாட்களில் செமஸ்டர், இந்த நேரத்தில் எப்படி...?' என்று யோசித்துக் கொண்டிருந்தவள், தாயிடம் சென்று தன் பிரச்சினையைக் கூற, விஷயம் தந்தையிடம் சென்றது.

அவர் கொஞ்சம் கூட யோசிக்காமல், "நீ அந்த வீட்டுப் பெண் மாதிரி ஷைலு. உன் அக்காள்களை விட உன் மேல்தான் அங்கு இருப்பவர்களுக்குப் பாசம் அதிகம். அதுவும் மாமா உன் மேல் உயிரையே வைத்திருந்தார். அவரின் கடைசிச் சடங்குக்கு வர முடியாது என்றால் என்ன அர்த்தம்? எதுவும் பேசாமல் கிளம்பு..." என்று ஓரடி நகர்ந்தவர், ஒரு வருடப் படிப்பு வீணாகி விடுமே என்ற மகளின் கவலையை அவள் முகச் சுணக்கத்தில் இருந்து புரிந்து கொண்டு,

"ஓ.கே... ஓர் ஐந்து நாள் இருந்து விட்டு நீயும் விக்கியும் வந்து விடுங்கள். நாங்கள் எல்லாம் முடிந்து வருகிறோம்...!" என்று முடிவு சொல்ல, வேறு வழியில்லாமல் சென்னைக் குக் கிளம்பினாள்.

கிளம்பும் முன் காயத்ரியிடம் விஷயத்தைச் சொல்லி விட, அவளாலும் அந்த நேரத்தில் ஒன்றும் சொல்ல முடியவில்லை. போகும் வழியில் ஷைலுவுக்குத் தற்காலிக

மாகக் கார்த்திக் பற்றிய நினைப்பு போய், மாமாவைப் பற்றிய யோசனை ஓடியது. மாமாவுக்கும் அத்தைக்கும் எப்போதுமே ஷைலு மேல் ஒரு தனிப் பாசம். அவர்களுக்குப் பெண் பிள்ளை இல்லாத காரணத்தால், ஷைலுவைத் தங்கள் பெண்ணாக நினைத்து ஊரிலிருந்து வரும்போதெல்லாம் அவளுக்குத் துணி, நகை என்று வாங்கி வருவார்கள். அவளின் அழகும், பொறுமையும், பொறுப்பும் அவர்களுக்கு அவளின் மேல் பாசத்தை அதிகப்படுத்தியது.

நளினாவிற்கும் சாதனாவிற்கும் மரியாதை, பண்பு, பாசம், நேசம் இந்த வார்த்தைகளைக் கண்டாலே அலர்ஜி. ஸ்கூலிங் பொழுது ஃபைனல் இயர் லீவு வந்தால், மாமாவின் வீடுதான் ஷைலுவுக்கு வேடந்தாங்கல். அந்த மாமா இப்போது உயிரோடு இல்லை என்றதும் கண்ணீர் வழிய, தாயின் மடியில் படுத்துக் கொண்டிருக்க, வண்டியிலிருந்த எல்லோரும் அவரைப் பற்றிய நினைவில் அமைதியாகப் பயணத்தைத் தொடர்ந்தார்கள்.

சென்னை போய்ச் சேர்ந்ததும் அத்தை, ஷைலுவை கட்டிக் கொண்டு அழவும் அவளுக்கும் அழுகையாக வந்தது. சில மணித் துளிகளிலே மாமா இறுதிப் பயணம் சென்றதும், அவரவர் மற்ற வேலைகளைக் கவனிக்கச் செல்ல... ஷைலு, குளித்து விட்டு மொட்டை மாடியில் நின்று காயத்ரியைப் பற்றி யோசித்துக் கொண்டிருந்த வளுக்கு, 'போட் கிளப் வருகிறோம் என்று ஆசை காட்டி மோசம் செய்து விட்டோமே...!' என்ற பெருமூச்சு எழுந்தது.

"எதற்கு இந்தப் பெருமூச்சு ஷைலு...?" என்ற குரல் கேட்டுத் தூக்கி வாரிப் போடத் திரும்ப, சுரேஷ் நின்று கொண்டிருந்தான்.

இவனை விட நாலு வயது பெரியவன் என்றாலும், இவள் பெயர் சொல்லித்தான் கூப்பிடுவாள்.

"மாமாவைப் பற்றிய யோசனைதான் சுரேஷ்...!" என அப்போதைக்கு வாய்க்கு வந்ததைச் சொல்லிச் சமாளிக்க,

"இந்த செமஸ்டர் லீவுக்கு உன்னை வரச் சொல் லலாம்னு அப்பா சொல்லிட்டிருந்தார். போன வாரம்வரை நன்றாக இருந்தார். முந்தா நாள் நெஞ்சு வலின்னு ஹாஸ்பிடலில் சேர்த்து ட்ரீட்மென்ட் கொடுத்ததும் நன்றா கத்தான் இருந்தார். ஆனால், இன்று இரண்டு மணி அளவில் அட்டாக் வந்து விட்டது..." என்றவனின் குரல் அழுகையில் நடுங்க, "இன்னும் என்னால் நம்ப முடிய வில்லை, அவர் இறந்ததை..." என, ஷைலுவுக்கு அவனின் வேதனை கண்டு மனது வலித்தது.

அவனைத் தேற்றி, "நீங்களே இப்படி இருந்தால் அத்தைக்கு யார் ஆறுதல் சொல்வாங்க...?" என்ற மாமன் மகளுக்கு...

"ஆண் பிள்ளைகளுக்கு அழக் கூட வழியில்லை, எல்லாவற்றையும் மனதில் போட்டுப் புதைத்துக் கொள்வ தால்தான் அப்பா மாதிரி அட்டாக் வந்து போய் விடு கிறார்கள்...!" என்ற வேதனையான வாதத்திலிருந்த நியாயம் புரிய, அவளின் நினைவு கார்த்திக்கை நோக்கி நழுவியது.

'நான் பதில் சொல்லவில்லையென கார்த்திக்கும் மனதளவில் குமைந்து கொண்டிருப்பாரோ...?' என்ற யோசனையை சுரேஷின் குரல் கலைத்தது.

"என்ன ஷைலு... எப்பொழுதும் ஏதோ ஒரு யோசனையில் இருக்கியே...! என்னாச்சு... உன் முகமும் சரியில்லையே!" என்றான் கூர்மையான பார்வையுடன்.

அதைக் கேட்டதும் உள்ளம் திடுக்கிட, தன் முக பாவனையைத் திருத்தி, "நத்திங் சுரேஷ், நெக்ஸ்ட் வீக் செமஸ்டர்... அதுக்குப் படிக்கணும், நல்லா ஸ்கோர் பண்ணணும்... அதைத்தான் யோசிச்சிக்கிட்டு இருக்கேன்!" என்று சமாளித்துவிட்டு, அவன் வேலையைப் பற்றி விசாரித்தாள் பேச்சின் திசையை மாற்ற.

"வேலைக்கு ஒரு குறையும் இல்லை... ஆனால், இப்பொழுது ஜுவல்லர்ஸை எப்படிக் கவனித்துக் கொள்வது என்றே தெரியவில்லை. வெளி ஆள் யாரையும் வேலைக்கு வைக்க முடியாது... என்ன செய்வதுன்னு யோசிச்சுத்தான் முடிவெடுக்கணும்...!" என, ஆமோதிப்பாய்த் தலையசைத்து விட்டு ஷைலு கீழே இறங்கிச் செல்ல, அவளையே பார்த்துக் கொண்டிருந்த சுரேஷின் மனதில், இதுவரைக்கும் தோன்றாத ஆசை இப்பொழுது தோன்றியது.

பாண்டியில்...

'கார்த்திக் ஏமாந்து விடுவாரே!' என்று நினைத்ததுமே காயத்ரிக்கு மன உளைச்சல் அவளை வாட்ட, தயங்கித்

தயங்கி ஒரு வழியாக அவனிடம் விஷயத்தைக் கூற, ஒரு நிமிடம் அவனிடமிருந்து சத்தமே எழவில்லை. அவள் பலமுறை அழைத்ததும் ஒரு நெடிய மூச்சை விடுத்து,

"பரவாயில்லை காயத்ரி... இப்படி ஆனதற்கு அவள் என்ன செய்ய முடியும்? விடுங்க, இன்னொரு நாள் பார்க்கலாம்..." என்னும் போதே ஏமாற்றமும் ஏக்கமும் சரிவிகிதத்தில் கலந்திருந்தது குரலில்.

"எனக்கே இவ்வளவு ஏமாற்றம் இருக்கும்போது உங்களுக்கு ஏமாற்றமாக இல்லையா...?" என உள்ளே போய்விட்ட குரலில் கேட்டதும், கடகடவென்று சிரிக்க ஆரம்பித்து விட்டான்.

கார்த்திக்கின் சிரிப்பிற்கு அர்த்தம் புரியாமல், "என்ன சார்... பதில் சொல்லாமல் சிரிக்கிறீங்க? நான் ஏதும் முட்டாள்தனமாகக் கேட்டுட்டேனா?" என,

"காயத்ரி... ஏமாற்றம் இல்லையென்று நான் சொல்லவில்லையே! நிச்சயம் ஏமாற்றம் இருக்கு. ஆனால், அவளுடைய உணர்வையும் நாம் மதிக்கணும் இல்லையா? அவளுக்கு மாமா இறந்தது நிச்சயம் கஷ்டமாக இருக்கும். அதை விட இது ஒன்றும் பெரிதில்லை...!" என்ற கார்த்திக்கின் பெருந்தன்மையில் வாயடைத்து நின்றாள்.

"யூ ஆர் கிரேட் சார். கவலைப்படாதீங்க, உங்களுக்குத்தான் ஷைலு என்றிருந்தால் நிச்சயம் நடக்கும்.

இனிமேல் அவள் ஊரிலிருந்து வந்தால் படிப்பதற்குத் தான் நேரம் சரியாக இருக்கும். பரிட்சை முடிந்த பிறகு தான் பார்க்க முடியும். அதுவரைக்கும் கொஞ்சம் பொறுமையாக இருங்கள்...!" என்றாள் வேண்டுதலுடன்.

"என்னைக் கவலைப்படாதீங்கன்னு சொல்லிட்டு, நீங்க கவலைப்படறீங்க காயத்ரி. என்னுடைய கவலையெல்லாம் அவளிடம் பேசாவிட்டாலும், தூர நின்று பார்ப்பேன். ஆனால், இந்த ஐந்து நாளுக்குப் பார்க்க முடியாது என்ற கவலைதான். மத்தபடி ஒன்றுமில்லை...!" என்றான் குரல் பிசிற.

அவனின் குரலில் இருந்த வேதனை புரிய, பேச்சைத் திசை திருப்பும் முயற்சியாக, "உங்களைப் பற்றிக் கொஞ்சம் சொல்லுங்களேன்... ஷைலுவுக்கும் உங்களைப் பற்றி அதிகம் தெரியாது. ஷிவா உங்களைப் பற்றிப் புகழ் பாடுகிறான். அப்படி என்ன ஸ்பெஷல் உங்களிடம்...?" என்றதுதான் தாமதம், மீண்டும் உரத்த குரலில் சிரிக்க ஆரம்பித்து விட்டான்.

பின் சிரிப்பை அடக்கி, "என்னைப் பற்றி என்ன சொல்ல? ம்ம்... பெற்றோருக்கு ஒரே பிள்ளை, ஐந்து சாப்ட்வேர் கம்பெனிக்குச் சேர்மன்... அப்புறம், கண் தெரியாதவர்களுக்காக ஒரு இல்லம் நடத்துகிறேன்..." என்றதும்,

காயத்ரி ஆச்சரியத்துடன், "பிளைன்ட் ஹோமா? அதில் எத்தனை பேர் இருக்கிறார்கள்? எப்படிப் பராமரிக்கிறீர்கள்?" என்றாள் படபடப்பும் ஆச்சரியமுமாக.

"கூல்... கூல்... நான் டொனேஷன் மாதிரி எது வும் வாங்குவதில்லை. என்னிடம் ஐம்பது பேர் இருக் கிறார்கள், அவர்களுக்குப் படிப்பு, சாப்பாடு, உடை எல்லாம் என் கம்பெனி மூலமாகத்தான் செய்கிறேன்..." என்றதுமே,

"செலவை எப்படிச் சமாளிக்கிறீங்க...?" என்றாள் வியப்பாக.

"இதில் சமாளிக்க என்ன இருக்கு? என் ஹோமில் இருப்பவர்கள் ஒன்றும் சும்மா இல்லையே...? அவர்கள் படித்த படிப்புக்கு வேலை செய்கிறார்கள். அது மட்டு மில்லை, நம்மை விட அவர்கள் கைவினைப் பொருட்கள் செய்வதில் வல்லவர்கள். அவர்கள் செய்யும் கிராப்ட் பொருள்களுக்கு வெளிநாட்டில் நல்ல மதிப்பு. அதில் வருகிற பணமும் இருப்பதால், என்னால் அவர்களுடைய தேவையைப் பூர்த்தி செய்ய முடியுது...." என்று விளக்க,

"யூ ஆர் கிரேட் சார்...!" என்றாள் மெச்சுதலாக.

"அப்படிச் சொல்ல முடியாது. நான் டொனேஷன் வேண்டாமென்றாலும் நிறையப் பேர் தருவார்கள்... நான் தான் அதை ஏற்பதில்லை. என்னைப் பொறுத்த வரை அவர்களுக்கு மீன் பிடிக்கக் கற்றுத் தர வேண்டுமே தவிர, மீன் வாங்கித் தரக் கூடாது என்பேன். அப்படிச் செய்தால் அவர்களுடைய தன்னம்பிக்கையை அழித்து விடும். அது மட்டுமில்லை, இந்த ஹோம் நடத்துவதால் எனக்கு டாக்ஸ் கிடையாது!" என்ற கார்த்திக்கின் பேச் சிற்கு,

"இதுவும் ஒரு வகையில் சரிதான். கேட்கவே மனசுக்குச் சந்தோஷமாக இருக்கு. ஷைலு கொடுத்து வைத்தவள்..." என்றாள் தன்னையும் மீறி.

காயத்ரி போனை வைத்ததும், ஐந்து நாள் ஷைலுவைப் பார்க்க முடியாதுன்னு நினைத்ததுமே மனது பாரமாக இருந்தது. மூளை, வெறும் ஐந்து நாள்தானே என்று சமாதானம் செய்தாலும், மனசுக்கு ஐந்து நாள் என்பது யுகம் மாதிரித் தோன்ற, ஒரு பெரு மூச்சுடன் தலையை அழுந்தக் கோதியவாறு சோபாவில் கண்ணை மூடியபடி அமர்ந்தான்.

ஹாலுக்கு வந்த மஹா, மகனின் முகத்தைக் கண்டு துணுக்குற, "என்ன கண்ணா... கொஞ்ச நேரம் முன்பு சந்தோஷமாக இருந்தே... அதற்குள் என்னாவாச்சு...?" என்று கேட்டவருக்கு, மனதில் இருந்தவற்றைக் கொட்டி யதும், 'பையன் தேவி தரிசனம் கிடைக்காதுன்னு வாடு கிறான்...!' என்று மனசுக்குள் சிரித்துக் கொண்டார்.

ஹோமுக்குப் போலாம்னு முடிவு செய்து கிளம்ப, மஹாவும் தானும் வரேன்னு கிளம்ப, அவருக்காகக் காத்துக்கொண்டிருந்த நேரத்தில் அவனின் பக்கத்தில் வந்தமர்ந்த விஸ்வநாத், மகனின் முகச் சுணக்கத்தைக் கண்டு கொண்டு, மனைவி கேட்ட அதே கேள்வியைக் கேட்க, "நத்திங் டாடி... ஜஸ்ட் தலைவலி...!" என்று சமாளித் தவனைக் கூர்மையாக நோக்கி,

"நான் எப்போ உன்னுடைய அப்பாவாக மாறினேன் கார்த்திக்...?" என்றார் புருவங்கள் நெரிய.

அவரின் கேள்வி புரியாமல் நோக்கியவனிடம், "என்னிடமே தலைவலின்னு பார்மலாகப் பேசுறியே. என்னை இதுவரை நண்பனாக நினைத்ததால் உண்மையை மட்டுமே சொன்னாய். இப்போ பொய் சொல்றேன்னா என்ன அர்த்தம்...?" என்று சற்று தாங்கலாகப் பேச, "சாரி டாட்! ஷைலு ஊரில் இல்லை... அதை நினைக்கப் பிடிக்கவில்லை. அதனால்தான்...!" என்று இழுத்தான்.

அவனின் தோளைத் தட்டி, "வெல்... கார்த்திக், நினைப்பது எல்லாம் நடந்து விட்டால், வாழ்க்கையில் உனக்கு சுவாரசியம் இல்லாமல் அலுத்துப் போய் சன்யாசம் போகத் தோணும். இதெல்லாம் வரக்கூடாது என்றுதான் கடவுள் எது எது எப்போ நடக்கணும்னு விதித் திருக்கிறார். அதன்படி நடந்தால்தான் அதுக்கு மதிப்பு இருக்கும். இதுவும் அப்படின்னு எடுத்துக்கோ... மனசுக்குப் பாரமாக இருக்காது. பி சியர் புல் மேன்!" என, சிறிய வனின் முகம் புன்னகையை அணிந்து கொண்டது.

தாய் ரெடியாகி வரவும் தந்தையிடம் சொல்லி விட்டு இருவரும் கிளம்ப, மகனின் முகத்தில் சற்றுத் தெளிவு இருந்தாலும், ஏனோ எதையோ இழந்த மாதிரியே தாயின் மனதிற்குத் தோன்றியது.

அமைதியாகக் காரைக் கையாண்டு கொண்டிருந்த வனின் பக்கம் திரும்பி அமர்ந்து, "கண்ணா! ஷைலு மேல் நீ வைத்திருக்கும் காதல் உண்மையென்றால், கண்டிப்பாக அவள் உன்னைத் தேடி வருவாள்...!" என்று அவன் தலையைச் செல்லமாகக் கலைத்து விட்டார்.

சிகையைக் கலைத்த அவரின் கையைப் பற்றி, "எனக்கு ஆரம்பத்திலிருந்து ஒரு குறுகுறுப்பும்மா... அவசரப்பட்டு என் காதலை சொல்லிவிட்டேனோ என்று. அதனால்தான் அவள் என்னைச் சந்திக்க லேட்டாகு தோன்னு எனக்குள் ஒரு சந்தேகம்...!" என்ற மகனைப் புன்னகையுடன் நோக்கினார்.

"கண்ணா! மனசுக்குள் காதல் வந்த பிறகு, அதை எப்போ எப்படிச் சொல்வது என்பதை விட, அதைச் சொல்கிறவன் எப்படிப்பட்டவன் என்பதுதான் முக்கியம். அந்த வகையில் நீ எதில் குறைந்தவன்...?" என்று கேட்க, அவருக்குப் பதில் சொல்லாமல், அவரின் பேச்சை அசை போட்டபடி ஹோமை அடைந்தான்.

ப்ளைண்ட் ஹோமை கார்த்திக் ஆரம்பித்தாலும், அதைப் பார்த்துக் கொள்வது எல்லாம் மகாலக்ஷ்மிதான். கண் தெரியாதவர்களுக்கான படிப்பு சம்பந்தப்பட்ட அரசாங்க வேலைகள், வெளிநாட்டுத் தொடர்பான வேலைகளைக் கார்த்திக் பார்த்துக் கொள்வான். அவன் ஊரில் இல்லாத சமயங்களில் விஷ்வநாத் பார்த்துக் கொள்வார்.

எல்லோரையும் கவனித்துக் கொள்ள மரகதம் என்று ஒருவர் இருப்பதால், மூவருக்கும் மற்ற வேலைகளைக் கவனிக்க முடிந்தது. ஹோமில் அவர்களுக்குத் தேவை யானவற்றை மரகதத்திடம் விசாரித்து, கண்ணில்லாதவர் களிடமும் பேசி விட்டு வீடு திரும்பும்போது மனசு லேசாக இருந்தது கார்த்திக்குக்கு.

சென்னையில்...

மாமாவின் வீட்டில் நளினா, சாதனா மாதிரி வம்பு பேசிக்கொண்டு சும்மா இல்லாமல், வேலைகளை இழுத்துப் போட்டுச் செய்வதைப் பார்த்த சுரேஷிற்கு, அவள் மேல் ஒரு தனி மரியாதை வந்தது.

இரண்டு வருடமாக ஷைலுவைப் பார்க்காததினால் அவளின் அழகும், பொறுமையும் கூடி இருப்பதாகத் தோன்ற, 'இவள் மாதிரி ஒரு பெண்தான் நமக்குத் தேவை!' என அவன் மனம் ஆசைப்பட்டது. மாமா பெண்தான் என்றாலும் அவளிடம் சொல்லத் தயக்கம்.

ஒரு நாள் தனியாக மாடியில் அமர்ந்து புக் படித்துக் கொண்டிருந்த ஷைலுவிடம், "நம்ம நகைக் கடைக்குப் போயிட்டு வரலாமா?" என்று அழைத்த சுரேஷிற்கு,

"சாரி... எனக்கு மூட் சரியில்லை..." என்று மென்மையாக மறுத்து விட, சுரேஷின் மனது கூம்பிவிட, அங்கிருந்து நகர்ந்து விட்டான்.

கீழே வந்தவனிடம், "ஷைலு எங்கே? நீ அவளை வெளியே அழைச்சுக்கிட்டு போறேன்னு சொன்னே... இப்போ நீ மட்டும் தனியாப் போறே...?" என்ற மாமனின் கேள்வியில் சற்றுத் தடுமாறி,

"அவளைத் தொல்லை செய்யாதீங்க மாமா... அவளுக்கு எது பிடிக்குதோ அதைச் செய்யட்டும்..." என்ற சுரேஷைப் பெருமையாகப் பார்த்தவரின் மனதில், 'இவனை மாதிரி ஒரு பையன்தான் ஷைலுவுக்குப்

பொருத்தம்...!' என்று எண்ணம் எழ, அவரை உலுக்கி விடை பெற்றுச் சென்றான்.

ஐந்தாம் நாள் விக்கி வரவில்லை யெனச் சொல்லி விட்டதால், ஷைலு மட்டும் பாண்டிக்குக் கிளம்ப, அவளைக் கொண்டு விடுவதற்காக சுரேஷைக் கூட அனுப்பி வைத்தார் சஞ்சய்.

காரில் ஏறியதிலிருந்து ஷைலு மௌனத்தைப் பற்றுக்கோலாகப் பிடித்தபடி வேடிக்கை பார்த்துக் கொண்டு வந்தாள்.

காரின் செட்டிலிருந்து மெலிதாக பாடல் கசிய, அதைக் கேட்டுக்கொண்டே அவ்வப்போது ஷைலுவை யும் ஓரக்கண்ணால் பார்த்துக்கொண்டே டிரைவ் செய்து கொண்டிருந்தவன், "என்னாச்சு ஷைலு, அமைதியா வர்றே. என்னோடு வரப் பிடிக்கவில்லையா...? அல்லது என் முகத்தைப் பார்க்கப் பிடிக்கவில்லையா....?" என்றதும் சட்டென்று திரும்பி சுரேஷைப் பார்த்தாள்.

தந்தையும், தாயும் வட நாட்டைச் சேர்ந்தவர்கள் என்பதால், நல்ல கோதுமை நிறமும், அலைஅலையான முடியும், கூர் நாசியும், கூர்மையான பார்வையும் அவனை அழகனாக்கிக் காட்டியது.

ஆனால், ஷைலுவுக்கு சுரேஷைப் பார்த்தால் அந்த மாதிரி எண்ணமே வராமல், ஒரு சகோதரன் உணர்வுதான் அவளுள் நிறைந்திருந்தது.

"ஹலோ மேடம்... பதில் சொல்லாமல் என்ன பலமான யோசனை?"

மென்மையாகப் புன்னகைத்து, "ஒன்றும் இல்லை!" என...

"இல்லை, நானும் நீ வந்ததிலிருந்து பார்க் கிறேன்... இப்படி அடிக்கடி காணமல் போய்விடுகிறாய் அல்லது சிலை மாதிரி நின்று விடுகிறாய்... ஏன்மா? ஏதாவது பிரச்சனையா...?" என்றான் கனிவாக.

அவசரமாக, "அதெல்லாம் ஒன்றுமில்லை..." என்றவள், "உங்களுக்கு என்ன வேண்டும் சுரேஷ்...? கேள்வியாகக் கேட்டுத் தள்றீங்க..." என்று சிரிக்க,

"அப்பா... ஒரு வழியாக நீ சிரிச்சிட்டே. மழை தான் வரும்...!" என்று கேலி செய்தவன், "யூ ஆர் சோ பியூட்டிஃபுல் ஷைலு...!" என்று ரசனையுடன் கூற, எது வும் சொல்ல முடியாமல் அமைதியாகத் தலை குனிய, "நான் உன்னிடம் ஒரு விஷயத்தைப் பற்றிப் பேசணும்... பேசலாமா?" என்று அனுமதி கேட்டுக்கொண்டு, "உனக்கு எங்க வீட்டைப் பத்தி என்ன மாதிரி நினைப்பு இருக்குன்னு தெரிஞ்சுக்கலாமா ஷைலு...?" என்றான்.

"இதென்ன இப்படி ஒரு கேள்வி? எங்க வீட்டை விட உங்க வீடுதான் எனக்குப் பிடிச்சிருக்கு. அத்தை மாமா எல்லோரையும் எனக்குப் பிடிக்கும்..." என்று கூறியதுமே,

"ஏன், என்னைப் பிடிக்காதா ஷைலு...?" என்றான் ஏக்கமாக.

அவனின் கேள்வி அவளை உள்ளுக்குள் எச்சரிக்க, சற்று நிதானித்து, "ம்ம்... உங்களையும் பிடிக்கும்... இத்தனை வருடம் பிடிக்காமலா உங்களிடம் பேசிக் கொண்டிருக்கிறேன்...!" என்றவள்... தொடர்ந்து, "சொல்லுங்க சுரேஷ்! உங்களுக்கு இப்போது என்ன தெரிய வேண்டும்?" என நேரடியாக விஷயத்திற்கு வர வும்,

"இப்போ எதுவும் எனக்குத் தெரிய வேண்டாம். நேரம் வரும்போது சொல்கிறேன்... இப்படி வெளியே குதிச்சு ஓடற மாதிரி இல்லாமல், ரிலாக்ஸா பேசிக்கிட்டு வா! ஓ.கே..." என்று சுரேஷ் சொன்னதும், கலகலவென்று சிரித்தாள்.

அவளின் சிரிப்பைச் சற்று நேரம் ரசித்தவன், "நீ என்றும் இதே மாதிரி சிரிச்சிட்டே இருக்கணும்...!" என்ற வாக்கைப் பெற்றுக் கொண்டான்.

வீட்டை அடைந்ததும் வேலைக்காரி சமைத்திருந்த சாப்பாட்டைச் சாப்பிட்டு விட்டு, அவளை ஜாக்கிரதையாக இருக்கச் சொல்லிவிட்டுப் புறப்பட்டுச் சென்றவனின் மனதில் ஷைலுவைப் பற்றிய சிந்தனையே.

காயத்ரிக்குப் போன் செய்து பேச, அவள் கார்த்திக்கிடம் தான் பேசியது எல்லாவற்றையும் கூறி, "உன்னை செமஸ்டருக்குப் பிறகுதான் சந்திக்க முடியும் என்று சொல்லி விட்டேன்..." என்றவள், "நான் சொன்னது சரிதானே ஷைலு...?" என்றாள் மனதிற்குள் உரக்கச் சிரித்துக் கொண்டே.

ஷைலுவுக்கு ஏமாற்றமாக இருந்தாலும் அதுதான் சரியென்று தோன்ற, நாளை கோயிலுக்குச் செல்ல ஞாபகப்படுத்திவிட்டுப் போனை வைத்து விட்டுப் படுத்த வளுக்குத் தூக்கம் வராமல், கார்த்திக்கின் நினைவிலே படுக்கையிலே புரண்டாள்.

அடுத்த நாள் வெள்ளி என்பதால், குளித்து முடித்துத் தனம் செய்து வைத்திருந்த டிபனைச் சாப்பிட்டு விட்டுப் படிக்க ஆரம்பித்தவள், அதிலேயே மூழ்கி விட, கடிகாரம் நாலு என்று அடித்ததும் தனம் காபி கொண்டு வந்து கொடுத்த பொழுதுதான் மதிய நேரம் படிப்பில் கடந்திருந்ததை அறிந்தவள், ரிலாக்சாகத் தோட்டத்தில் சற்று நேரம் உலாவி விட்டு, ஒரு சின்னக் குளியல் போட்டுக் கோயிலுக்குக் கிளம்பினாள்.

கோல்டன் கலர் சாரியில் ரெட் கலரில் பூ வேலைகள் செய்த நெட் சாரியில், முடியைப் பிடரி வரை பிரெஞ்சு பிளாட் போட்டு முடியை லூசாக விட்டு, நெற்றியில் ஒரு சிறிய திலகம் வடிவில் பொட்டை வைத்துக் கொண்டு தேவதை போல வந்த ஷைலுவை ஒரு நிமிடம் காயத்ரி கண்ணிமைக்காமல் பார்த்தாள்.

அவள் மனதிற்குள், 'இப்போது கார்த்திக் பார்த்தால் என்ன நினைப்பார்...?' என்று யோசித்துக் கொண்டே மணக்குள விநாயகர் கோயிலுக்குச் சென்று தரிசனம் முடிந்த பிறகு பிராகாரத்தில் அமரவும், மஹாக்ஷ்மி வர வும் சரியாக இருக்க, அவரைப் பார்த்துச் சிநேகமாகச் சிரித்தாள்.

மகாலக்ஷ்மிக்கு ஷைலுவைப் புடவையில் பார்த்த தும் அவளிடமிருந்து கண்ணை எடுக்க முடியாமல், 'ஹையோ...! என்னாலே பார்வையைத் திருப்ப முடிய வில்லையே! கார்த்திக் பார்த்தால் காலிதான்...!' என மனதில் நினைத்துக்கொண்டே, "இருங்க வருகிறேன்!" என்று சைகையில் சொல்லி விட்டு விநாயகரைத் தரிசனம் பண்ணிவிட்டு வெளியே வந்ததும்,

"என்ன ஷைலு... இப்பவாவது வீட்டுக்கு வருகி றாயா?" என்று கேட்டதும் மறுக்க முடியாமல் காயத்ரியுடன் அவருடன் செல்ல, 'இன்னும் கொஞ்ச நேரத்தில் மகன் ஷைலுவை எதிர்பாராமல் சந்திக்கப் போகிறான்!' என்ற பரபரப்பில் அவருக்குக் கை கால் ஓடவில்லை.

மனைவி யாரையோ வரவேற்கும் சத்தம் கேட்டு வெளியே வந்த விஷ்வநாத், ஷைலுவைக் கண்டதும் மனதிற்குள், 'பையன் சரியான பொண்ணைத்தான் செலக்ட் செய்திருக்கான்...!' என ஆச்சரியமாகப் பார்த்துக் கொண்டே, "வாம்மா... நீதான் ஷைலுவா...?" என்றார்.

ஆச்சரியத்துடன் நிமிர்ந்தவள், "உங்களுக்கு எப்படி அங்கிள் தெரியும்..." என்றவளுக்கு,

"அதையேன்மா கேட்கிறே... ஒரு மாசமா என் தர்மபத்தினி பேசிக்கிட்டு இருக்கா... இப்போ நீ வீட்டுக்கு வந்துட்டியா...? இனிமேதான் கொஞ்சம் நிம்மதியாகத் தூங்குவா!" என்று கிண்டல் பாதியும் உண்மை பாதியுமாகக் கூறவும், மற்ற மூவரும் சிரித்தனர்.

மஹாலக்ஷ்மி இருவருக்கும் காபி கொண்டு வரேன் என்று உள்ளே செல்ல எத்தனிக்க, "என்னைக் கவனிக்க மாட்டியா மஹா...? உனக்குப் புது ப்ரெண்ட்ஸ் வந்ததும் என்னைக் கழட்டி விட்டுட்டியே...!" என்று கேலி செய்ய,

"ஆமா... நீங்க கூட்ஸ் ரயில், கழட்டி விட..." என்று பதிலுக்கு வார, அங்கே மீண்டும் ஒரு சிரிப்பலை எழுந்தது.

இருவருக்கும் காபியுடன் ஸ்வீட் கொண்டு வந்து வைத்து, "முதன் முதலில் வீட்டுக்கு வந்திருக்கிறாய்... ஸ்வீட் எடுத்துக்கோ...!" என்றவர், சொன்னதோடு நில்லாமல், சிறிது எடுத்து அன்புடன் வாயில் ஊட்டிவிட, ஷைலுவின் முகம் வெட்கத்தில் சிவக்க, காயத்ரியின் கண்களோ வியப்பில் விரிந்தன.

அவளின் ஆச்சரியத்தைக் கண்டு நமுட்டுச் சிரிப்புடன் அவளை அழைத்துக் கொண்டு உள்ளே சென்று...

"நீதானே கார்த்திக்கின் தற்போதைய ஸ்பை...?" என்று சிரிப்புடன் கேட்டதும், காயத்ரிக்கு சகலமும் விளங்க...

"அப்போ இது கார்த்திக்கின்..." என்று முடிக்கும் முன்னரே,

"எஸ்... கார்த்திக்கின் வீடுதான்..." என்று அமர்த்தலாகச் சிரித்துவிட்டு, "பரவாயில்லையே! கண்டுபிடிச்சிட்டியே...!" என்றார் மெச்சுதலாக.

'இது கார்த்திக்கின் வீடுன்னு ஷைலுவுக்குத் தெரியுமா...?' என்று யோசித்தவள், அதை அவரிடமே கேட்டு விட,

"ம்ஹூம்... இனிமேல்தான் தெரிய வைக்கணும்..." என்று மர்மமாகச் சிரித்தவரைக் கண்டு, மேலும் ஆச்சரியத்தின் உச்சத்திற்குச் சென்று,

"ஐ காண்ட் பிலீவ் மா... இப்படி ஒரு அம்மாவை நான் முதன் முதலில் சந்திக்கிறேன்...!" என்றவளை வாஞ்சையாக நோக்கினார்.

"அம்மா என்றாலே வில்லியாகத்தான் இருக்கணுமா...?" என்ற கேள்வியிலே அவரின் நல்ல மனம் புரிந்து விட,

"உண்மையிலே நீங்க கிரேட்மா..." என்றாள் கண்ணீர் மல்க.

"ஹேய்... கார்த்திக் என் மகன், ஷைலு என் மருமகள்... இரண்டும் பேரும் நன்றாக இருக்கணும் என்று நான் நினைப்பது சுயநலம். ஆனால் நீ...! அவள் உனகுக்குத் தோழிதான். அவள் வாழ்க்கை நன்றாக இருக்கணும் என்று நினைக்கிறே பார்... நீதான் கிரேட்!" என்று பதிலுக்குப் பாராட்டியவர், "சரி, நம்ம பட்டிமன்றத்தை அப்புறமா வெச்சிக்கலாம்... முதலில் ஹீரோ ஹீரோயினைச் சந்திக்க வைப்போம்...!" என்று சிரிக்க, காயத்ரியும் அவரின் சிரிப்பில் இணைந்து கொண்டாள்.

ஷைலுவை அழைத்து வீட்டைக் காட்ட, வீட்டின் ஒவ்வொரு அங்குலத்திலும் பணக்காரத் தன்மை தெரிய,

ஆர்வத்துடன் பார்த்துக்கொண்டு வந்தவளை மாடியில் உள்ள ஒரு அறையின் முன் நிறுத்தி, "நீ கம்ப்யூட்டர் படிக் கிறேதானே... அது சம்மந்தப்பட்ட புக்ஸ் என் பையனிடம் நிறைய இருக்கு.. போய்த் தேவையானதை வாங்கிக் கொள்ளேன்...!" என்று அவர் கீழே செல்ல, கதவை மெலிதாகத் தட்டி விட்டுப் பதிலுக்காகக் காத்திருந்தாள்.

சிறிது நேரத்தில், "எஸ் கமின்..." என்ற கம்பீரக் குரல் வெளியே வரவும், 'இந்தக் குரலை எங்கேயோ கேட்டிருக் கிறேனே...!' என்று யோசித்தபடி கதவைத் திறந்தவள், அங்கே சத்தியமாகக் கார்த்திக்கை எதிர்பார்க்கவில்லை.

எதிர்பாராத இன்ப அதிர்ச்சியில் ஷைலு உறைந்து நிற்க, கார்த்திக்கோ தான் காண்பது கனவோ என்ற இனிய குழப்பத்தில் அவளையே பார்த்தபடி உறைந்து நின்றான். ஷைலு ஊரிலிருந்து வந்ததைக் காயத்ரி சொல்லவில்லை என்பதாலும், தன் வீட்டிலே எதிர்பாராமல் சந்திப்போம் என்ற நினைக்காததாலும், அவளை வா... என்று கூட அழைக்காமல் இமைக்க மறந்து நிற்க, "க்கும்..." என்ற குரலில் இருவருமே கலைந்தார்கள்.

"அம்மா, இவங்க எப்படிம்மா இங்கே...?" என்று இன்னும் நம்ப முடியாமல் கேட்டதும், ஷைலுவும் அதே கேள்வியோடு அவரை நோக்கவும், இருவரையும் ஒரு தடவை பார்த்துச் சிரித்து விட்டு, "நீங்க ரெண்டு பேரும் கண்ணாமூச்சி ஆட்டம் ஆடுறீங்க... அதான் நானே முடிச்சி வைக்கலாம் என்று முடிவு செய்தேன்...!" என்று புன்னகைத்தவர், "பத்து நிமிஷம் டைம் தரேன்...

அதுக்குள்ளே பேசி விட்டுக் கீழே வாங்க... மீதியை அங்கே பேசலாம்!" என்று கீழே சென்றார்.

"வாட் எ ப்ளசன்ட் ஸர்ப்ரைஸ்...? என்னால் நம்ப முடியவில்லை. எனக்குப் பிடித்த பெண் என்னுடைய ரூமில்... அதுவும் அம்மா, அப்பாவின் சம்மதத்தோடு. மை காட்!" என அவன் ஆச்சரியப்படுவதைச் சிரிப்போடு பார்த்துக் கொண்டிருந்தாள். அவளுக்கு, எல்லாம் மகாலக்ஷ்மியின் ப்ளான் என்பது தெரிந்து விட்டதால், கொஞ்சம் அதிர்ச்சி போயிருந்தது.

இன்னும் அவள் நின்றுகொண்டே இருப்பதைப் பார்த்ததும், "ஓ...! சாரி ஷைலு. நீங்க திடீரென்று வந்ததால் அதிகமாகவே எக்ஸ்சைட் ஆகிவிட்டேன்!" என்று சிரித்து விட்டு, "ப்ளீஸ் டேக் யூர் சீட்!" என உபசரித்தான்.

அவள் அங்கிருந்த சோபாவில் நன்றி சொல்லி உட்கார்ந்ததும், எதிரில் இருந்த நாற்காலியில் உட்கார்ந்து, நெட் புடவையில் ஒரு தேவதை போலிருந்த ஷைலு வையே விழி எடுக்காமல் ரசிக்க, அவனின் பார்வையைத் தாங்க முடியாமல் முகம் சிவந்து குனிந்து கொண்டாள்.

"வெல்... சொல்லுங்க... எப்படி இருக்கீங்க...? சென்னை எப்படி இருந்தது...?" என்று குறும்பாகக் கேட்டதும்,

விழி அகல, "உங்களுக்கு எப்படித் தெரியும் நான் சென்னை போனது...?" என்றாள் வியப்புடன்.

"அதை அப்புறம் சொல்கிறேன்... நான் உங்களிடம் என் ஆசையைச் சொன்னதற்கு நீங்கள் இன்னும் பதில்

சொல்லவே இல்லையே...! என்னை உங்களுக்குப் பிடிச்சிருக்கா ஷைலு? உங்க பதிலுக்காக இத்தனை மாதம் காத்திருக்கிறேன்!" என்று மூச்சைப் பிடித்துக் கொண்டு கேட்டான்.

உள்ளுக்குள் ஏதாவது நெகடிவ்வாக சொல்லிவிடு வாளோ என்று இதயம் தட தடவென்று அடித்துக் கொண்டது.

அவனின் கேள்விக்கு உடனே பதில் சொல்லாமல், சிறிது நேரம் தன் கை விரல்களையே பார்த்துக் கொண்டிருந்தவள் மெல்ல, "உங்களுக்கு என்னைப் பற்றித் தெரியாது... எனக்கும் உங்களைப் பற்றித் தெரி யாது... அப்படியிருக்கும்போது நீங்கள் என்னைக் காதலிக் கிறேன் என்றது எப்படிச் சரியாகும்...?" என்றாள் திக்கித் திணறி.

அவள் கேள்வியை உள்வாங்கிக் கொண்டு ஒரு நிமிடம் மௌனமாக இருந்தவன், "வெல்! இந்தக் கேள்விக்குப் பதில் சொல்வதற்கு முன் எனக்கு உங்கள் உள் மனதிலிருந்து ஒரு பதில் வேண்டும், உங்களை முதன் முதலில் எப்போது பார்த்தேனோ அப்போதிலிருந்து நீங்கள் என் மனதில் இருக்கிறீர்கள். அதே மாதிரி நான் உங்கள் மனதில் இருக்கிறேனா... இல்லையா என்று சொல்லுங்கள்...?" என்ற கார்த்திக்கின் கேள்விக்குச் சிறிது நேரம் பதில் சொல்லாமல்...

"எப்படி ஒரு பொண்ணை முதல் பார்வையில் காதலிக்க முடியும்...? ஹவ் இஸ் இட் பாசிபிள்...? அவள்

எப்படிப்பட்டவள்...? நல்லவளா... கெட்டவளா... என்று தீர்மானிக்க அவகாசம் இருக்காதே...?" என்றாள்.

"நான் கேட்ட கேள்விக்குப் பதில் சொல்லாமல் இப்படி ஒரு குறுக்குக் கேள்வி... ம்ம்... ஓ.கே... மற்றவர்களுக்கு எப்படி என்று தெரியாது... எனக்கு என் உள் மனது என்ன சொல்லுதோ அதை மட்டும்தான் கேட்பேன். இது வரைக்கும் தவறாக நடந்ததே இல்லை. அதே மாதிரிதான் உங்களை நான் பார்க்கும் போது என் உள் மனசு சொன்னது... 'ஷி இஸ் யுவர் கேர்ள்' என்று.

"உங்கள் ஐந்து நிமிடப் பார்வையில் எனக்குத் தெரிந்தது, பொறுமையும் புத்திசாலித்தனமும் நிறைந்தவள என்று. இப்போது சொல்லுங்கள், என் கணிப்புத் தவறா? உங்களின் பதில் கிடைத்து விட்டதா... இப்போது நான் முதலில் கேட்ட கேள்விக்குப் பதில் சொல்லுங்கள், உங்களுடைய சந்தேகத்தைத் தீர்த்து வைக்கிறேன்...!" என்றான்.

அவளுக்கு ஆமாம் என்று ஏற்றுக் கொள்ளவும் முடியாமல், இல்லை என்று மறுக்கவும் முடியாமல், இருதலைக் கொள்ளி எறும்புபோல் தவித்துக் கொண்டு, தலையைக் குனிந்து உதட்டைக் கடித்துக் கொண்டு மௌனமாக இருந்தவள், மெல்ல மூச்சை உள்ளிழுத்து, "எஸ் ஐ டூ லவ் யூ கார்த்திக்!" என்று ஷைலு சொன்னதும், அவனுக்குப் போன உயிர் திரும்ப வந்தது.

அதைக் கேட்டதும் உலகத்தையே வென்ற மமதை... யாருக்காக இவ்வளவு நாள் ஏங்கிக் கொண்டு காத்திருந்

தானோ அவளே தன் காதலைச் சொன்னதும் சொர்க்கமே கையில் வந்த உணர்வு.

"தேங்க்ஸ் ஷைலு, ஐ லவ் யூ சோ மச்!" என்று உணர்ச்சி மிகுந்த குரலில் சொல்லவும், அவளுக்கும் ஒரு இனம் புரியாத உணர்வு. இருவரும் இன்ப நினைவில் மௌனத்தில் கரைய, சிறிது நேரம் கழித்து இன்ப நினைவிலிருந்து மீண்ட கார்த்திக், "நீ கேட்ட கேள்விக்குப் பதில்... எனக்கு உன்னைப் பற்றி எல்லாம் தெரியும். எப்படி என்று உனக்குப் போகப் போகத் தெரியும்!" என்று ஒருமையில் தாவ, ஏனோ ஷைலுவுக்குத் தன்னையுமறியாமல் அவனது பேச்சில் ஒரு பாதுகாப்பான உணர்வு தோன்ற, அவனையே தன்னை மறந்து பார்த்துக் கொண்டிருந்தவளிடம்,

"சரி, ஷைலு... கீழே எல்லோரும் நமக்காகக் காத்துக் கொண்டு இருப்பார்கள். வா, போகலாம்!" என அவனுடன் கீழே இறங்கினாள்.

அதே நேரத்தில் விஷ்வநாத்திடமும், மகாலக்ஷ்மியிடமும், "நான் என் வயசுக்கு, மகனின் மனதைப் புரிந்து கொள்கிற பெற்றோரைப் பார்த்ததே இல்லை!" என்று இன்னும் பிரமிப்பு நீங்காமல் சொன்ன காயத்ரியை வாஞ்சையுடன் நோக்கி,

"அவர்களைவிட நீ ரொம்ப எக்ஸ்சைட்டா இருக்கே காயத்ரி.. அதான் இப்படிப் பேசுறே... நீ சொல்ற மாதிரி எல்லாப் பெற்றோரும் கெட்டவங்க இல்லையே!" என்ற விஸ்வநாத்திற்கு...

"மே பீ அங்கிள். ஆனால் சில பேருக்கு அம்மா சப்போர்ட்டா இருப்பாங்க, சில பேருக்கு அப்பா சப்போர்ட்டா இருப்பாங்க... இப்படி ரெண்டு பேருமே இருக்க சான்ஸே இல்லை!" என்றாள்.

"எங்களைப் பொறுத்தவரை கார்த்திக் ஒரே பிள்ளை... பொறுப்பான பிள்ளையும் கூட. அவன் ஷைலுவைச் சந்திப்பதற்கு முன் எந்தப் பெண்ணைப் பற்றியும் பேசினதுமில்லை, பார்த்ததுமில்லை. அவன் ஆசைப்பட்ட ஒரே பெண் ஷைலுதான். அதனால்தான் எங்களுக்கு அவன் காதல் கைகூட வேண்டுமென்ற ஆவல். அதுமட்டுமில்லை, ஷைலுவைப் பார்த்தால் யாருக்குத்தான் பிடிக்காது?" என்றவர்,

"இன்னும் ஒரு முக்கியமாக காரணம் இருக்கு. அவள் தங்கள் வீட்டில் தன் சகோதரிகளால் படும் வேதனைதான். நானும் ஒரு பெண்...! அவர்களின் குற்றச்சாட்டு ஒரு பெண்ணின் மனதை எந்தளவு புண்ணாக்கும் என்று புரியும். இந்த நிலைமையில் வேறு பெண்களாக இருந்தால் இரண்டு முடிவு எடுத்திருப்பார்கள்.

"ஒன்று, 'நீங்கள் இவ்வளவு பேசினதுக்கு அப்புறம் நான் ஒழுங்காக இருந்தால் மட்டும் நம்பவா போறீங்க?' என்ற மனோபாவம் வந்து, வேறு வழியில் போய் விடுவார்கள். இன்னொன்று, தங்கள் உயிரை மாய்த்துக் கொள்வார்கள். இது இரண்டுமே இல்லாமல், அவர்கள் இவள் மனதை நோகடித்தாலும் அதை ஏற்று, இன்னும் புடம் போட்ட பெண்ணாகத் தன்னை மாற்றிக் கொண்

டாளே... அவளை மாதிரி ஒரு பெண்ணை மருமகளாக நாங்கள் அடையக் கொடுத்து வைத்திருக்க வேண்டும்!" என்று நீளமாக மகாலக்ஷ்மி பேசி முடிக்க, காயத்ரிக்கு என்ன சொல்வதென்றே தெரியவில்லை.

கார்த்திக்கின் முகத்தில் ஒரு கம்பீரமும் தேஜசும், ஷைலுவின் முகத்தில் சந்தோஷமும், நாணமும் போட்டி போட ஜோடியாக வருவதைப் பார்த்த மூவரும் தங்கள் பேச்சை நிறுத்திவிட்டு, அவர்கள் இருவரையும் ரசிக்க மூவரின் இதயமும் மகிழ்ச்சியில் நிறைந்தது.

காயத்ரியைப் பார்த்த கார்த்திக், "காயத்ரி, நீங்களுமா...? அம்மாவும், ஷைலுவும் சொல்லவே இல்லையே!" என,

"இப்போ அதுவா முக்கியம்...? உங்கள் கண்ணா மூச்சி ஆட்டம் முடிவுக்கு வந்ததா...?" என்று ஷைலுவின் முகத்தையே குறும்பாகப் பார்த்துக் கொண்டு கார்த்திக் கைக் கேட்டாள்.

காயத்ரியின் பார்வையைத் தாங்க முடியாமல், "ச்சே! போடி!" என்று கன்னங்களில் ரோஜாக்கள் மலர காயத்ரியைக் கட்டிக் கொள்ள, எல்லோரும் சந்தோஷமாகச் சிரித்தார்கள்.

"காயத்ரி... அங்கே பார், கார்த்திக் உன்னை கண்ணாலே எரிச்சுடுவான் போலப் பார்க்கிறான்..." என்று விஸ்வநாத் போட்டுக் கொடுக்க, ஒரு நிமிஷம் புரியாமல் தடுமாறி ஷைலுவை நோக்க, அவளோ முகம்

சிவந்து வெட்கத்தில் தலை குனிய, மற்ற மூவரும் சிரித்த பிறகுதான் புரிந்தது.

எல்லோரும் சிரித்து முடிந்ததும் இளம் ஜோடிகள் பெரியவர்களின் கால்களில் பணிந்து ஆசிர்வாதம் வாங்க, விழுந்தவர்களை தூக்கி எழுப்பி மகாலக்ஷ்மி, ஷைலுவைக் கட்டிப் பிடித்து முத்தமிட்டதும்...

"இதெல்லாம் அநியாயம்...! எல்லோரும் ஏன் கார்த்திக்கின் வயிற்று எரிச்சலைக் கொட்டிக்கிறீங்க?" என்று விஷ்வநாத் கேலியாகக் கூறவும், மறுபடியும் அங்கே சிரிப்பலை எழுந்தது.

ஷைலுவுக்காக ஸ்பெஷலாகத் தயார் செய்த உணவை எல்லோரும் அரட்டை அடித்தபடியே சாப்பிட்டு முடித்ததும், காயத்ரிக்கும் ஷைலுவுக்கும் புடவைகள் வைத்துக் குங்குமம் கொடுத்துக் கார்த்திக்கைக் கூட அனுப்பி வைத்தார்கள்.

முதலில் காயத்ரி இறங்கிக் கொள்ள, ஷைலுவின் வீட்டருகே காரை நிறுத்தியவுடன் ஷைலு இறங்க முற்பட, "ஷைலு...!" என்று மென்மையாக அழைத்த கார்த்திக், "வித் யுவர் பெர்மிஷன்...!" என்று அவள் கைகளில் முத்த மிட்டு, "ஐ லவ் யூ டா ஷைலு...!" என அவள் விழி களுக்குள் ஊடுருவ, அவளுள்ளும் பரவசமான உணர்வு.

"ஐ டூ கார்த்திக்...!" என்று சிறிது நேரம் தன்னை மறந்து பார்த்துக் கொண்டிருந்தவள் சுயநினைவிற்கு வர, "ப்ளீஸ் கார்த்திக்... அப்படிப் பார்க்காதீங்க..." என்று மெல்ல முணுமுணுக்க,

தலையைப் பின்னால் சாய்த்துச் சிரித்து, "ஓ.கே... ஓ.கே... கூல் பேபி. குட் நைட்..." என்று சிரித்துக் கொண்டே கிளம்பிப் போனான்.

குளித்து உடை மாற்றிச் சிறிது நேரம் படித்து விட்டுப் படுக்கச் சென்றவளின் போன் சிணுங்கவும் எடுத்து, "ஹலோ... என்றவளுக்கு,

"ஹாய் ஷைலு... நான் சுரேஷ்!" என்றான் குரலில் ஓர் துள்ளலுடன்.

"நல்லபடியாகப் போய்ச் சேர்ந்தீர்களா...?" என்ற வளுக்கு...

"அப்பப்பா... நேற்று நடந்ததை இவ்வளவு சீக்கிரம் கேட்கக் கூடாதும்மா..." என்று கேலியாக நகைக்க, பதிலுக்குச் சிரித்துக் கொண்டே அவனிடம் எல்லோரையும் பற்றி விசாரித்துச் சிறிது நேரம் பேசிவிட்டுப் போனை வைத்தாள்.

படுக்கையில் படுத்தவளுக்கு, மனது ஒரு நிலையில் நில்லாமல் இறக்கை கட்டிப் பறக்க, கார்த்திக்கைப் பற்றியும், அவன் பேசியதும் மனதில் ஊர்வலம் போக, 'எப்படி அழுத்தமாகப் பேசுகிறார்... அவர் பேசினாலே பதில் பேசத் தெரியாமல் முழிக்கிறேனே...! சுரேஷிடம் இயல்பாக பேச முடிவது போல கார்த்திக்கிடம் பேச முடிவ தில்லையே, ஏன்...? இவ்வளவு நாள் மனதை வாட்டிய துன்பங்கள் கார்த்திக்கிடம் பேசியதும் காணாமல் போன மாயம் என்ன...?' என்ற வியப்பிலும், காதல் பரவசத் திலும் தன்னை மறந்து உறங்கிவிட்டாள்.

மகாலக்ஷ்மி இல்லம்...

வீட்டுக்குச் சென்ற கார்த்திக், தாயைக் கட்டிப் பிடித்து முத்தமிட்டு, "தேங்க்ஸ் எ லாட் மா..." என, மகனின் கன்னத்தைச் செல்லமாகத் தட்டி,

"உன் சந்தோஷத்தைத் தவிர வேறு எதுவும் பெரிசில்லை கண்ணா...!" என்றவர், மென்மையாகப் புன்னகைத்து, "இன்றைக்காவது நன்றாகத் தூங்குப்பா..." என,

"நீ வேற மஹா... அவனுக்கு இன்றைக்குச் சந்தோஷ சிவராத்திரி...!" என்றார் கேலியாக விஷ்வநாத்.

"அப்பா, போதும்... இப்படி அநியாயத்திற்குக் காலை வாராதீங்க!" என்று சிணுங்க,

"மஹா... பாரேன், உன் பிள்ளை வெட்கப்படுவதை!" என, அவரின் கேலிக்குச் சிரித்து விட்டு இரண்டிரண்டு படிகளாகத் தாவி உற்சாகமாய் மேலேறிச் சென்றான்.

"ம்ம்... மகனையும் மருமகளையும் ஈசியா ப்ளான் செய்து சந்திக்க வெச்சிட்டே... உண்மையில் பெரிய புத்திசாலிதான்... ஆனால், இந்த ஐடியாவை நம் கல்யாணத்திற்கு முன் செய்து என்னைப் பார்க்க வந்திருந்தால் எவ்வளவு நல்லா இருந்திருக்கும்...!" என்றார் கண்ணால் சிரித்துக் கொண்டே.

"ஐயோ...! கிழவனுக்கு, ஆசையைப் பாரு... நமக்குக் கல்யாண வயதில் ஒரு பையன் இருக்கிறான்... ஞாபகம் வைத்துக் கொள்ளுங்கள்...!" என்றார் சீண்டலாக.

சுஜா நிவாஸ்...

மணி ஐந்து அடித்ததும் வழக்கம் போல் சுறுசுறுப் பாக எழுந்தவளுக்கு, முந்தைய நாளின் நிகழ்வுகள் ஞாபகத்திற்கு வர, இதழ்களில் முறுவலுடன் சிறிது நேரம் தோட்டத்தில் விடியற்காலை இளம் குளிர்காற்றை அனுபவித்தவளுக்கு, மனம் சொல்ல முடியாத உற்சாகத் தில் இருந்ததினால், உலகமே அழகாக இருந்தது.

கொஞ்ச நேரம் இயற்கையை ரசித்து விட்டு, வேலை எதுவும் இல்லாததால் குளித்து, சாப்பிட்டுவிட்டுப் படிக்கலாம் என்று தீர்மானித்து புக்கை எடுத்தபோது, போன் ஒலித்தது.

"ஹலோ..." என,

"ஹாய்... குட் மார்னிங் ஸ்வீட்டி!" என்ற கார்த்திக்கின் குரலில் ஷைலுவின் நெஞ்சம் இனிதாக அதிர்ந்தது.

"ஹாய்... குட் மார்னிங் கார்த்திக்!" என்று இனிமை யாகக் கூறியவளிடம், "இன்றைக்கு உன் ப்ரோக்ராம்ஸ் என்ன ஷைலு...?" என்றவனுக்கு,

"ப்ரோக்ராம்ஸ் ஒன்றும் இல்லை... நிறையப் படிக் கணும் செமெஸ்டருக்கு!" என்றாள் வெகு சாதாரணமாக.

"சரி... உன் படிப்பை நான் தொல்லை செய்ய மாட்டேன்... இன்றைக்குச் சாயங்காலம் உன் வீட்டுக்கு வரலாமா... உனக்கு ஏதும் தொல்லை இல்லையே?" என்றான் சிறு வேண்டுதலாக.

அவனின் கேள்விக்குச் சட்டென்று பதில் கூற முடியாமல் அதிர்ந்தவள் மௌனம் காக்கவும், "ஹேய்...! பயப்படாதே... நான் ரொம்ப நல்ல பையன்... தப்பு தண்டா எல்லாம் பண்ண மாட்டேன்...!" என்று சீண்ட, ஷைலு மௌனச் சிரிப்பில் குலுங்கினாள்.

"என்ன ஸ்வீட்டி... என் கேள்விக்குப் பதிலே இல்லையே! என் மேல் நம்பிக்கை இல்லையா...?" என்றவனின் குரலில் ஏக்கம் இழையோட,

"ச்சே, ச்சே...! நான் அப்படி நினைக்கவில்லை. எத்தனை மணிக்கு வர்றீங்க?" என்று சம்மதமளிக்கும் வகையில் கேட்க,

"ஓ... தேங்க் யூ செல்லம்..." என்று கொஞ்சியவன், "ஐந்து மணி. உனக்கு ஓ.கே.வா...?" எனவும், சரி என்றவளுக்கு, "ஹேவ் எ நைஸ் டே!" என்று வாழ்த்தி விட்டுப் போனை வைத்தான்.

கார்த்திக் பேசினதும் மனது கட்டுக்கு அடங்காமல் அலைய, அதைத் தலையில் தட்டி அடக்கி விட்டுப் படிக்க ஆரம்பித்துப் பின் அதிலேயே மூழ்கி விட்டாள். தனம் கூப்பிட்ட பிறகுதான் தெரிந்தது மணி இரண்டு என்று.

சாப்பிட்டு விட்டுக் கொஞ்ச நேரம் டி.வி. பார்க்க, மணி நான்கு ஆனதும் அவளுள் இனிய பரபரப்பு தொற்றிக் கொண்டது. அவசரமாகக் குளித்து விட்டு உடை மாற்றி, தனத்திடம் டிபன் செய்யச் சொல்லி விட்டுத் தடதடக்கும் இதயத்தோடு காத்திருந்தாள்.

மணி ஐந்தடிக்கவும் வாசலில் கார் சத்தம் கேட்க, அவனின் பங்க்சுவாலிட்டியை வியந்தபடியே வரவேற்க வெளியே வந்த வளிடம் பொக்கேவை நீட்டி, "திஸ் இஸ் பார் மை ஏஞ்சல்!" என, வெட்கத்துடன் புன்னகைத்து நன்றி சொல்லி வாங்கியபடி உள்ளே அழைத்தாள்.

அவளின் அழைப்பிற்குக் கட்டுப்பட்டு உள்ளே வந்து வீட்டைச் சுற்றிப் பார்த்துவிட்டு, "ம்ம்... என் மாமனாருக்கு நல்ல ரசனை!" என்று சர்டிபிகேட் கொடுக்க, ஷைலுவுக்கு சிரிப்பு பொத்துக் கொண்டு வந்தது.

"இப்பதான் ஆரம்பிச்சிருக்கீங்க... அதுக்குள்ளே மாமனாரா...?" என்றாள் சிரிப்புடன்.

"ஏன்... சொல்லக்கூடாதா...? என் ஷைலுவுக்கு அப்பான்னா எனக்கு மாமனார்தானே...!" என்றவன், "அவரிடம் உன்னைக் கேட்பேன்... தரவில்லை என்றால் ப்ரித்விராஜ் மாதிரி குதிரையில் வந்து உன்னைத் தூக்கிக் கொண்டு போய் விடுவேன்... எப்படி...?" என்று ஒற்றைப் புருவத்தை வில்லாகத் தூக்க,

"ம்ம்... ரொம்பத்தான் தைரியம்... நேற்றுதான் சந்தித்துப் பேசினீர்கள்... அதுக்குள்ளே மாமனார், குதிரையில் தூக்கிக் கொண்டு போவதுன்னு வசனம் எல்லாம் பேசுகிறீர்கள். சூப்பர்..." என்றாள் சிரிப்பை அடக்கியபடி.

"ஐயாவோட தைரியம் எப்படின்னு நான் முதன் முதலில் ப்ரொபோஸ் செய்தபோதே தெரிந்திருக்குமே!" என்று கண்ணடிக்க, ஷைலுவுக்கு முகம் சிவந்து விட்டது.

அதை மறைக்கத் திரும்பிக் கொள்ளவும், அதைக் கவனித்தவன் அவளின் முகச் சிவப்பை ரசித்துக் கொண்டே, "ஹேய்... கொஞ்சம் என் பக்கம் திரும்புடா... என் செல்லம் இல்லை!" என்றான் கொஞ்சலாக.

"யாரோ காலையில் நான் நல்ல பையன்... தப்புத் தண்டா எல்லாம் செய்ய மாட்டேன்னு சொன்னார்கள்!" என்று ஷைலு காலை வார,

"ஹலோ மேடம்... நான் உங்களைத் தொடவே இல்லை, கண்ணடிப்பது ஒரு குற்றமா...? இதெல்லாம் அநியாயம்!" என்றான் குற்றஞ்சாட்டும் விதமாக.

"ஆமாமாம்... நேற்று சந்தித்துப் பேசிய பெண்ணின் வீட்டிற்கு வந்து இப்படிக் கதை அடிப்பது அநியாயம்தான்!" என்றாள் அவன் வழியிலே.

"ஓ மை காட்... சேம் சைட் கோல் போட்டுட்டியே..." என்றவன், அவளை சோபாவில் அமர்த்தி, எதிரில் இருந்த சேரில் அமர்ந்து, "நேற்றுதான் சந்தித்தது என்றாயே... அது தவறு. உன்னைச் சந்தித்து இரண்டு மாதம் ஆகிறது. இதுவரைக்கும் நான் மனதளவில் உன்னுடன் வாழ்ந்து கொண்டுதான் இருக்கிறேன். நீதான் லேட்டாகக் காதலைச் சொன்னாய். ஆனாலும் எனக்குத் தெரியும், உன் மனதில் நான் வந்து இரண்டு மாதம் ஆகிறது... இல்லையா ஷைலு...?" என்றான் சிறு குறும்புடன்.

அவனின் திடீர் கேள்வியில் சற்று அதிர்ந்து, மறுக்க முடியாமலும், மறைக்க முடியாமலும், "ஆமாம்..." என்னும் விதமாக, மெல்லத் தலையை உருட்டினாள்.

"தட்ஸ் குட். வார்த்தைகள் முக்கியம் இல்லை, மனசு ரெண்டும் சேர்ந்தாலே போதும்!" என்று பேசிக்கொண்டே செல்ல... ஷைலுவின் மனதில் ஆயாசம். 'இவ்வளவு அன்பை வைத்திருக்கிறானே, இதை நாம் எப்படித் திருப்பி வெளிப்படுத்தப் போகிறோம்...?' என்ற பயம் எழுந்தது.

அதை மறைக்க, "சரி... என்ன, வீட்டுக்கே தேடி வந்துட்டீங்க...?" என்று பேச்சைத் திசை திருப்ப,

"இத்தனை நாட்களாக உன்னைத் தூரத்தில் நின்று பார்ப்பேன்... அதுவே நேற்று நீ திடீரென்று சர்ப்ரைஸ் விசிட் கொடுத்ததும் எல்லாம் காணாமல் போய் விட்டது. இருந்தும் உன்னிடம் நிறையப் பேச வேண்டுமென்ற ஆசை. அதான் வந்து விட்டேன்...!" என்றான் தோள் களைக் குலுக்கி.

"ஓ...!" என்று சிரிப்பை மென்றவள், "சரி, நீங்கள் வரும் நேரத்தில் வீட்டில் யாராவது இருந்தால் என்ன ஆகிருக்கும்...?" என்றாள் சிறு பயத்துடன்.

"ஹேய்... கமான்... உங்கள் வீட்டில் யாரும் இல்லைன்னு எனக்குத் தெரியும்!" என்று அவன் மர்ம மாகப் புன்னகைக்கவும்... ஏதோ ஞாபகம் வந்தவளாக,

"நேற்று கூடச் சொன்னீர்களே... என்னைப் பற்றி எல்லாம் தெரியும்னு? என்ன தெரியும்? எப்படித் தெரி யும்?" என்றாள் குழப்பத்தோடு.

அவளின் கேள்விச் சரங்களுக்கு உரக்கச் சிரித் தவன், "சொல்றேன்... சொல்றேன்..." என்று சிரிப்பை

அடக்கி, "நான் உன்னை விரும்ப ஆரம்பித்தவுடன், உன்னைப் பற்றிய விஷயங்களைக் கலெக்ட் செய்து விட்டேன்!" என்றவன், பாதி விஷயங்களை மட்டும் சொல்லி நிறுத்தி, "மீதியை நீ போகப் போகத் தெரிந்து கொள்வாய்...!" என்றான் ஓர் மந்தகாசச் சிரிப்புடன்.

அவனைப் பிரம்மிப்பாக நோக்கி, "இதெல்லாம் யார் சொன்னதுன்னு சொல்லவே இல்லையே...?" என்று வியந்தவளைச் சீண்டலாக நோக்கி,

"அது சஸ்பென்ஸ்..." என்று சிரித்தவன், "அது சரி... உன்னைப் பற்றி இந்தளவு தெரிந்து வைத்திருக்கிறேனே... உனக்கு என்னைப் பற்றி என்ன தெரியும்...?" என்றவனின் ஆர்வத்துக்கு... ஷைலுவின் முகம் சுருங்கியது, அவனைப் பற்றி ஒன்றும் தெரியாத குற்ற உணர்வில்.

அவளின் மௌனத்தைப் படித்தவன், "சரி, உன் படிப்பெல்லாம் எப்படிப் போகிறது? எக்ஸாமுக்குப் ப்ரிபேர் செய்து விட்டாயா...?" என்று பேச்சைத் திசை மாற்ற,

"ம்ம்... படிச்சுக்கிட்டே இருக்கேன், நல்ல மார்க் வாங்குவேன்!" என்றாள் சிறு குரலில்.

"தட்ஸ் குட்... ஓ.கே. உன் அடுத்த ஐடியா என்ன...?" என்றான் அடுத்த கேள்வியாக.

அவனின் கேள்வி புரியாததால், "அடுத்த ஐடியா என்றால்...?" என அவனிடமே கேள்வியைத் திருப்ப,

தொண்டையைக் கனைத்துக் கொண்டு, "அம்மா... உன் அப்பாவிடம் பேசலாமான்னு கேட்கச் சொன்னார்கள்... அதான் கேட்டேன்...!" எனவும்,

சடாரென்று அவனை நிமிர்ந்து பார்த்தவளின் விழிகளில் தன்னையும் மீறிக் கண்ணீர் கரை கட்டியது.

இதுவரைக்கும் கல்யாணம் என்ற ஒரு விஷயத்தைப் பற்றி யோசித்ததில்லை என்பதால், கார்த்திக் கேட்டதும் வார்த்தைகளே மறந்து போன மாதிரி ஒரு உணர்வு.

தன் மனதிற்கினியவளின் கண்ணீரைக் கண்டதும், "சரி ஷைலு... நான் ஏதும் தவறாகக் கேட்டு விட்டேனோ...?" என்று பதற, அவசரமாகக் கண்ணைத் துடைத்தபடி,

"நத்திங் கார்த்திக். நான் இதுவரைக்கும் என் கல்யாணத்தை பற்றி யோசித்ததே இல்லை. அவ்வளவு ஏன்...? என் வாழ்விலும் கல்யாணம்னு ஒன்று நடக்கும்னு நினைத்ததே இல்லை...!" என்ற ஷைலுவைப் பரிதாபமாக நோக்கினான்.

'இவள் வயதிற்குக் கல்யாணத்தைப் பற்றிய ஆசை ஒன்றுமே எழவில்லை என்றால், எந்தளவு மனது காயப்பட்டிருக்க வேண்டும்!' என்ற யோசனை ஓடியது.

அவளருகே முன்னால் சாய்ந்து அமர்ந்து, "பரவாயில்லைடா... நீ உன் சகோதரிகளால் நிறையத் துன்பங்களை அனுபவித்ததால் இப்படி ஒரு எண்ணம் எழவில்லை. இது உன் தவறில்லை. அதற்காகவே உன்னைச் சீக்கிரம் திருமணம் செய்து என் வீட்டில் மகாராணியாக வாழ வைக்க ஆசையாக இருக்கிறது. ஆனால், நம் திருமணம் உன் விருப்பப்படிதான் நடக்கும்... இது ப்ராமிஸ்..." என்றான் கார்த்திக் உறுதியுடன்.

அப்பொழுதும் மௌனத்துடன் தன் கை விரல்களை முறுக்கி ஒரு வழி செய்யவும், அவள் விரல்களைப் பிடித்து, மென்மையாக நீவி, "சரிடா... இப்போது நீ எதுவும் யோசிக்க வேண்டாம். முதலில் உன் படிப்பை முடி. அதன் பிறகு பார்க்கலாம். உன் ஆசையை விட வேறு எதுவும் எனக்குப் பெரிதில்லை. நீ எங்க வீட்டு மகாராணி. நீ என்ன நினைக்கிறாயோ அதன்படியே நடக்கும். இனி மேல் உன் கண்களிலிருந்து ஒரு சொட்டுக் கண்ணீர் கூட வரக் கூடாது!" என்றவனின் பரிவான, அன்பான குரலில்... ஆழ் மனதில் தேங்கிக் கிடந்த மன சோகங்கள் அணை உடைத்து அழுகையாய் வெடித்தது.

அவளின் அழுகை கார்த்திக்கைத் தாக்க, பதறி அவளைத் தன் மேல் சாய்த்து முதுகை ஆதரவாக வருட, அந்த இதமான ஆறுதலில் அழுகை குறைய,

அவளைத் தன்னிடமிருந்து விலக்கிக் கண்ணீரைத் துடைத்து, "இதுவே நீ அழுவது கடைசியாக இருக்கணும். நீ அழுதால் மனசுக்கு ரொம்ப கஷ்டமா இருக்கு... ப்ளீஸ்டா!" என, காயத்ரி உள்ளே நுழைந்தாள்.

கார்த்திக்கின் அணைப்பில் தோழியைக் கண்டதும் சிறு சிரிப்புடன் "ஓ...! சாரி. சிவ பூஜையில் கரடியாக நான் வந்து விட்டேனா...?" என்ற அவளின் கேலிக்கு இருவருமே மௌனம் காக்க, ஷைலு விலகி அமர்ந்தாள். காயத்ரி இருவரையும் ஆச்சரியத்துடன் நோக்க, அப்பொழுதுதான் ஷைலுவின் கண்ணீரையும் கார்த்திக்கின் முகம் டென்ஷனில் இருப்பதும் புரிந்தது.

"ஹேய், என்னாச்சு?" என்று ஷைலுவிடம் விசாரித்தவள், "ஏன் ஷைலு அழறா?" என்றாள் கார்த்திக்கிடம் பதட்டத்துடன்.

அவன் நடந்தவற்றைக் கூறவும், அவளுள் நீண்ட பெருமூச்சு எழுந்தது.

"என்னத்தை சொல்றது கார்த்திக்...? இவள் எப் பொழுதுமே இப்படித்தான். அடுத்தவர்களைப் பற்றியே கவலைப்பட்டுத் தன் சந்தோஷத்தைத் தொலைக்கிறாள். நானும் எவ்வளவோ சொல்லி விட்டேன், ம்ஹூம்... ஒரு தெளிவு வரவில்லை. நீங்களாவது என்னவென்று கேளுங்கள்!" என்றாள் கோபத்துடன்.

ஷைலுவையே பார்த்துக் கொண்டிருந்தவன், அவள் அருகில் அமர்ந்து, "ஷைலு... நான் சொல்வதைக் கவனமாகக் கேள். யார் நம் மேல் பாசமும் அன்பும் வைத்திருக்கிறார்களோ... அவர்கள் பேச்சை நாம் கண்டிப்பாக மதிக்க வேண்டும். நம் மேல் அன்பில்லாமல், காரணமே இல்லாமல் யார் நம்மை வெறுக்கிறார்களோ... அவர்களை மதிக்கத் தேவையில்லை. உன்னை மதிக்காதவர்கள், அன்பில்லாதவர்கள் பேசும் பேச்சை பெரியதாக எடுத்து நீ ஏன் மனசுக்குள் புழுங்கிக்கொண்டு உன் சந்தோஷத்தை அழித்துக் கொள்கிறாய்...?" என்ற கார்த்திக்கை வலியுடன் நோக்கி,

"அவர்கள் என்னைவிட வயதில் பெரியவர்கள் இல்லையா கார்த்திக்...?" என, அவனுக்கு உள்ளே வலித்தது.

'இந்த அளவு குழந்தைத்தனமாக இருக்கிற பெண்ணை இப்படிக் காயப்படுத்தி விட்டார்களே!' என்ற ஆதங்கம். "என்ன, வயதில் பெரியவர்கள்? அதற்காகக் கூடப் பிறந்த தங்கையை இப்படிப் பேசுபவர்கள், எப்படிப் பெரியவர்களாக இருக்க முடியும்...?" எனப் படபடவென்று பொரிந்தாள் மற்றவள், ஆத்திரம் மிக.

"சரி ஷைலு... நான் உன்னிடம் கேட்கும் கேள்வி களுக்குப் பதில் சொல். உன் சகோதரிகள் இதுவரைக்கும் உன்னிடம் அன்பாகப் பேசியிருக்கிறார்களா? அவர்களு டன் நீ எங்கேயாவது வெளியே போயிருக்கிறாயா? அவர்களுக்கு உன் மேல் அக்கறையிருக்கிறதா...?" என்ற கார்த்திக்கின் கேள்விகளுக்கு, இல்லையென்று தலை யைசைத்தாள்.

"இப்படி உன்னை ஒரு தங்கையாக மதிக்காமல், உன் மேல் அன்பே இல்லாமல் இருப்பவர்கள் வயதில் பெரியவர்களாக இருந்தால் என்ன... இல்லாவிட்டால் என்ன? அன்பு எங்கிருந்து வருகிறதுன்னு பார்... உன் மேல் வைத்திருக்கிற அன்பு எப்படிப்பட்டதுன்னு பார்... அது யாரிடமிருந்து வருகிறதுன்னு பார்க்காதே! அதே மாதிரி, அவர்கள் உன் மேல் ஒரு மடங்கு அன்பைக் காட்டினால், நீ இரண்டு மடங்கு அன்பை அவர்கள் மேல் வை.

"அதே அவர்கள் காரணமில்லாமல் வெறுத்தால், ஒதுங்கிப் போ. அதற்காகப் பயந்து உன் சந்தோஷத்தை அழித்து, உனக்குள்ளே ஒடுங்கினால், அது அவர்களுக்கு வெற்றியாகிவிடும்...!" என்றவனுக்கு,

"அவர்கள் ஏன் என்னை வெறுக்க வேண்டும்? எனக்குத் தெரியவில்லையே கார்த்திக்..." என்றாள் அழுகையுடன்.

"முதலில் நீ அழக் கூடாது... உனக்கு அவர்கள் முக்கியமா? நான் முக்கியமா?" என்ற கார்த்திக்கின் அதிரடிக் கேள்வியில் மிரண்டு, அழுகை தானாக நின்றது.

"பதில் சொல் ஷைலு...?" எனக் கறாராகக் கேட்க,

சற்றும் யோசிக்காமல், "எனக்கு நீங்கள்தான் வேண்டும் கார்த்திக்...!" என்றாள்.

அவளின் பதில் நெஞ்சில் பாலை வார்க்க, "தட்ஸ் குட்... அப்படி என்றால் நீ இனிமேல் அழக் கூடாது... ஓ.கே...?" என்று கண்டிஷன் போட, கண்களைத் துடைத்துக் கொண்டு சம்மதமாகத் தலையை உருட்ட, காயத்ரிக்குச் சந்தோஷப் பெருமூச்சு எழுந்தது.

"அவர்கள் ஏன் உன்னை வெறுக்க வேண்டும் என்று கேட்டாய் அல்லவா? சிம்பிள்... உன் அழகின் மேல் பொறாமை. தட் இஸ் இட்... குழந்தையாட்டம் இருக்கியேடா... பொதுவாக இந்தப் பிரச்சினை இரண்டு மனைவிகள் உள்ள குடும்பத்தில் பிறந்த பிள்ளைகளுக்குள் வரும். உன் விஷயத்தில் கொஞ்சம் வித்தியாசம், அவ்வளவுதான். சரி, இனிமேல் நாம் இதைப் பற்றிப் பேச வேண்டாம். நீயும் அவர்கள் பேச்சை எல்லாம் குப்பையில் தூக்கிப் போட்டுவிட்டுச் சந்தோஷமாக இருக்கப் பழகிக் கொள்...!" என்று நிறுத்தி, அவளின் முக பாவனையைக் கவனித்தான்.

இதற்கு மேல் பேசினால் சென்சிட்டிவாக மாறி விடும் என்று நினைத்தவன்... அவளுக்கு யோசிக்க டைம் கொடுக்க, கார்த்திக் பேசினதை யோசித்த ஷைலுவுக்கு, விடை தெரியாத கேள்விகளுக்கு விடை கிடைத்தது போல் ஒரு தெளிவு. முகத்தைத் துடைத்து, கார்த்திக்கை நோக்கிப் புன்னகைத்து, "தேங்க் யூ கார்த்திக், கொஞ்சம் மனசு தெளிந்த மாதிரி இருக்கு. சாரி, உங்களை அப்செட் செய்துவிட்டேனா...?" என்றாள் சிறு வெட்கமும் கவலை யும் போட்டி போட.

"சட்டர்ன்லி நாட்... உன் மனசு தெளிந்ததே, அதுவே எனக்கு ரொம்பச் சந்தோஷம். சரி, எக்ஸாம் நல்லா எழுதுங்க... ஆல் த பெஸ்ட் டு போத் ஆப் யூ!" என்று வாழ்த்தி விட்டுக் கிளம்ப, ஷைலுவும் அவனுடன் வெளியே வந்தாள்.

"ஓ.கே. ஷைலு. உன்னை எக்ஸாம் முடியுற வரைக்கும் தொல்லை செய்ய மாட்டேன். ஆனால், ஒரு சின்ன ரிக்வெஸ்ட்... நைட் டைமில் மட்டும் ஒரு இரண்டு நிமிஷம் பேசுடா, ப்ளீஸ்...!" என்றவன், காரின் உள் ளிருந்து ஒரு சின்ன பாக்கெட்டை எடுத்துக் கொடுத்து, "இது செல்போன்... என்னிடம் பேசுவதற்கு!" என, ஷைலு தயங்கினாள்.

அவள் வாங்கத் தயங்கவும், "கமான் ஷைலு... எனக்காக வாங்கிக்கோ... உன் குரலை நான் தினமும் கேட்கணும்டா...!" என்று கிட்டத்தட்ட கெஞ்ச, தன் தயக் கத்தை உதறி வாங்கியவள், "தேங்க்ஸ்...!" என்றாள் பரவசத்துடன்.

"இட்ஸ் ஓ.கே... பீ சியர்புல்... பை குட் நைட்...!" என்று விடை பெற்றுச் செல்ல, அவன் சென்ற திசையை இதழில் உறைந்த புன்னகையுடன் பார்த்துக் கொண்டி ருந்தவள், தோழியின் தொடுகையில் புன்னகையுடன் திரும்பினாள்.

"ம்ம்... அப்புறம்... உங்க ரொமான்ஸ் முடிஞ்சுதா...?" என்று சிரிக்க, ஷைலுவும் சிரிப்பை மென்று,

"அதுசரி... சொல்லாமல் கொள்ளாமல் வந்திருக்கே!" என்றாள் வெட்கத்துடன்.

"நான் உனக்குப் போன் செய்தேன்... என்கேஜ்டா இருந்தது அதான் நேரிலே வந்தேன்...!" எனவும், அப்போதுதான் அது சரியாக வைக்காமல் இருப்பதைக் கவனித்துச் சரி செய்ய,

"என்ன ஷைலு... கார்த்திக் வீட்டுக்கே வந்துட்டார், சரி, என்ன பேசுனீங்க...?" என்று கேட்டவள், அதற்கு அவளே, "ஆமாமாம்... எங்கே பேசியிருக்கப் போறீங்க. கார்த்திக் உன்னை முறைச்சுப் பார்க்க, நீ அவரை முறைச்சுப் பார்க்க... இதுதான் நடந்திருக்கும்...!" என்றாள் கேலியுடன்.

அவளின் கிண்டலில் சிரிப்பு வர, அவள் முதுகில் ஒரு அடி வைத்த ஷைலுவின் கையைப் பிடித்து, "ஆனால ஒன்று ஷைலு... உங்க ரெண்டு பேருக்கும் தனியிடமே தேவையில்லை... இப்படி ரொமான்ஸ் லுக் விடுவதற்குப் பொது இடம் கூட ஓ.கே.தான், இல்லையா?

உங்க காதலை எவனாவது ஒரு டைரக்டர் படமா எடுக்க ஆசைப்பட்டால் கதைக்கு ஸ்க்ரீன் ப்ளே எழுத வேண்டிய அவசியமே இல்லை. டப்பிங் செலவு மிச்சம்... ஊமைப் படம்தான்...!" என்று மேலும் கிண்டலடிக்க,

அதற்குமேல் தாங்க முடியாமல் வாய் விட்டுச் சிரித்தவள், "ஏய்... போதும்பா. என்னால் முடியவில்லை!" என்று அடி வயிற்றைப் பிடித்துக் கொண்டு குலுங்கிக் குலுங்கிச் சிரிக்க, காயத்ரியும் இணைந்து கொண்டாள் அவளுடன்.

இருவரும் சிரித்து முடித்ததும், "சரி... சரி...! ஜோக்ஸ் அபார்ட். கார்த்திக் சொன்ன மாதிரி உன் அக்கா பேச்சை யெல்லாம் குப்பைத் தொட்டியில் போட்டுவிட்டு, இனியாவது நிமிர்ந்து நில். இவர்கள் என்ன செய் கிறார்கள் என்று பார்ப்போம்...!" என்று அறிவுறுத்தியவள், "அது சரி... கார்த்திக் என்ன விஷயமாக வந்தார்...?" என்று வினவினாள்.

"ஆன்ட்டி, கல்யாண விஷயமாக அப்பாவிடம் எப்போது பேசலாம்னு கேட்டார்களாம்...!" என்றதுமே,

"தே ஆர் கிரேட் ஷைலு. ரொம்ப அன்பான குடும்பம். அவர்கள் உன்னை இங்கிருந்து சீக்கிரமே அழைத்துச் சென்று, சந்தோஷமா வைத்திருக்க வேண்டு மென்று ஆசைப்படுகிறார்கள். கார்த்திக் பற்றி சொல்ல ணும்னா... சச் எ அமேசிங் பெர்சன். உன்னை ஆழ மாகக் காதலிக்கிறார். உன்மேல் உயிரையே வைத் திருக்கிறார். உனக்கு ஜுரம்னு சொன்னதும் எப்படித்

துடித்துப் போய் விட்டார் தெரியுமா?" என்றாள் பரிதவிப் பாக.

தோழி சொன்னதைக் கேட்டதும் அவள் மனதிற்குள் சந்தோஷ ஊற்றேடுப்பு.

சென்னை...

ஷைலுவைப் பற்றிய இனிய கனவுகளில் மூழ்கிய படி படுத்திருந்தவனைத் தேடி மாமன் வரவும், அவசர மாக எழுந்தவனை அமர்த்தி, "ஹேய் ரிலாக்ஸ் சுரேஷ்..." என்றவர், அவன் அருகில் அமர்ந்து, "உனக்கு ஷைலு வைப் பிடிச்சிருக்கா...?" என்று நேராக விஷயத்திற்கு வந்தார்.

மாமனின் இந்தத் திடீர்க் கேள்வியில் சற்றுத் திடுக்கிட்டாலும், கேள்வி இனிதாக இருக்க, சந்தோஷத்தில் ஊமையாகி விட்டான். மருமகனின் மௌனத்தைத் தவறாகப் புரிந்து, "உன் மனசில் வேறு யாராவது இருந் தால் நோ ப்ராப்ளம் சுரேஷ்..." என்று எழ, அவசரமாக அவரைத் தடுத்து, "அதெல்லாம் ஒன்றுமில்லை மாமா... எனக்கு ஷைலுவை ரொம்பப் பிடிக்கும்...!" என்றான் வெட்கத்துடன்.

அவனின் அவசரமான பதில், பெரியவருக்குச் சிரிப்பைக் கொண்டு வர, "ஓ.கே... ஓ.கே... இதைப் பற்றி நான் அம்மாவிடம் பேசுறேன். ஷைலுவுக்குப் படிப்பு முடிஞ்சதும் கல்யாணத்தை வெச்சுக்கலாம்..." என்று கடகட வென்று முடிவெடுக்க, "டபுள் ஓ.கே. மாமா... நானும்

இதையேதான் நினைச்சேன்...!" என்றதும், அவன் தோளில் தட்டி,

"எனக்குத் தெரியும், நீ ஷைலுவுடைய ஆசைக்கு முக்கியத்துவம் கொடுப்பாய் என்று!" புன்னகையுடன் வெளியேற, குஷியில் துள்ளிக் குதித்தான்.

சுரேஷிடம் பேசின கையோடு லாவண்யாவிடமும், சுஜாதாவிடமும் கல்யாண விஷயத்தை ஆரம்பித்ததும், "நானே கேட்கணும்னு நினைத்தேன்..." என்ற தங்கை யைப் புன்னகையுடன் நோக்கி,

"எனக்குத் தெரியும் லாவண்... சுரேஷ், ஷைலுவை விரும்புகிறான்...!" என்றவர், மனைவியிடம் சம்மதமா என்று கேட்க, சுஜாதாவின் மனம் நிறைந்து போனது.

"லீவுக்கு ஷைலுவை இங்கே அனுப்புகிறேன்... அவர்கள் இருவரும் பேசிப் பழகிப் புரிந்து கொள்ளட்டும்..." என்றதும், இரு பெண்மணிகளுக்கும் மனம் கொள்ளாச் சந்தோஷம். 'இந்த வருடம் திரும்பியதும் நளினாவிற்கும் சாதனாவிற்கும் சீக்கிரமே கல்யாணத்தைச் செய்து அனுப்பிய பிறகு, சுரேஷ் - ஷைலு திருமணத்தை வைத்துக் கொள்ளலாம். அதுவரை வெளியில் யாரிடமும் பேச வேண்டாம்...!' என்று கடகடவென்று முடிவெடுக்க, மற்ற இருவரும் அதற்கு உடன்பட்டார்கள்.

பாண்டி...

ஷைலுவுக்குப் பகலெல்லாம் படிப்பது... இரவில் சிறிதுநேரம் கார்த்திக்குடன் பேசுவது என நாட்கள்

ரெக்கை கட்டிக் கொண்டு பறக்க, எக்ஸாமும் நல்ல படியாக எழுதினாள்.

கடைசிப் பரிட்சை அன்று ஷிவா, தன் அண்ணன் சந்தோஷிற்கு கல்யாணம் என்று காயத்ரிக்கும் ஷைலு வுக்கும் பத்திரிகை வைத்து விட்டு, "கண்டிப்பாக நீங்க ரெண்டு பேரும் கல்யாணத்திற்கு வரணும்...!" என்றவன், "முக்கியமான ஒருவர் கல்யாணத்திற்கு வருவார்!" என்று நமுட்டுச் சிரிப்புடன் சொல்லவும்... காயத்ரியும், ஷைலுவும் ஒருவரை ஒருவர் புரியாமல் பார்த்துக் கொண்டார்கள்.

"ஹலோ மேடம்... யாருன்னு புரியலையா...?" என ஷைலுவை நோக்கிச் சிரிக்க, அப்பொழுதும் புரியாமல் விழித்தவளிடம், "ஓ.கே... ஓ.கே... நானே சொல்லிடறேன். அந்த முக்கியமான நபர் த கிரேட் கார்த்திக் அண்ணன்!" என்று சொல்லி விட்டுச் சிரிக்க, ஷைலுவின் முகம் ஆயிரம் வாட்ஸ் பல்ப் போட்ட மாதிரி ஒளிர்ந்தது.

அவளின் முகம் ஒளிர்ந்ததும்... ஷிவாவும் காயத்ரி யும் கூட்டுச் சேர்ந்து அவளைக் கேலி செய்து தீர்த்துவிட, அவள் திணறிப் போனாள், அவர்களிடமிருந்து தப்பித்துச் செல்ல.

காலேஜ் முடிந்து வீட்டுக்கு வந்தவளிடம், ஊரி லிருந்து திரும்பி வந்திருந்த பெற்றோர், பரிட்சையைப் பற்றி விசாரிக்க... அவர்களுக்குப் பதில் கூறியவள், மாமாவின் காரியங்களைப் பற்றி விசாரித்தவள், அப் படியே அத்தையைப் பற்றியும் அத்தை மகன் சுரேஷ் பற்றியும் விசாரிக்க, தம்பதியர் இருவரும் புன்னகை

யுடன் பார்வைப் பரிமாற்றம் செய்து கொண்டாலும், பதில் கூறத் தவறவில்லை.

எக்ஸாம் முடிந்து விட்டதால், இரவில் கார்த்திக்குடன் பேச அதிக நேரம் கிடைத்தது. கார்த்திக்குடன் பழக ஆரம் பித்ததிலிருந்து ஷைலுவின் முகத்தில் சோகம் மறைந்து தெளிவானதைக் கண்டு காயத்ரிக்குப் பரம திருப்தி. ஆனால், நளினாவும் சாதனாவும் அவளின் முகத் தெளிவைக் கண்டு குழம்பினார்கள்.

அவள் சந்தோஷமாக வளையவருவது ஆத் திரத்தை உண்டுபண்ண, அதை அவர்கள் பேச்சில் காண்பித்தாலும்... ஷைலு அதைக் கண்டு கொள்ளாமல் செல்ல, தமக்கைகள் கொதித்துப் போக, தம்பியோ பூரித்துப் போனான்.

"என்னக்கா... ஆளே மாறிப் போயிட்டே...? இரட்டை ஹிட்லர்ஸ் உன்னை வழக்கம் போல் வறுத்து எடுக் கிறாங்க. இதுவே முன்னாடி என்றால் முகமே வாடிப் போயிருக்கும்... இப்போ கண்டுக்காமல் போறே...? இந்த மாற்றத்தைக் கண்டு சந்தோஷமாக இருக்கு... ஆனால், உன்னிடம் ஏதோ ரகசியம் இருக்கு!" என்றான் உதட் டுக்குள் சிரிப்பை மறைத்தபடி.

"ச்சே... ச்சே...! அப்படியெல்லாம் இல்லை விக்கி. இதை தனிமையில் யோசித்துப் பார்த்தேன்... நான் ஒரு தப்பும் செய்யாத போது ஏன் இவர்கள் பேச்சை மதித்துக் கஷ்டப்பட்ட வேண்டும்னு நினைத்தேன்..." என்று உண் மையை மறைத்துக் கோவையாகச் சொன்னாலும், தம்பி

நம்பவில்லை என்பது அவன் நமுட்டுச் சிரிப்பிலே தெரிந்தது.

"சரிக்கா... நான் நம்பிட்டேன்!" என்று அவன் சொன்ன விதத்தில் அமைதியாகச் சிரிக்கவும், "என்னிடம் சொல்ல மாட்டியா...? என்னையும் ஹிட்லர்ஸ் கணக்கில் சேர்த்து விட்டாயா?" என்றான் வருத்தத்துடன்.

அவன் வருத்தத்தைத் தாங்க முடியாமல் சற்றுத் தயங்கியவள், "விக்கி... நான் சொல்வதை யாரிடமும் சொல்லக்கூடாது!" என்று ப்ராமிஸ் வாங்கிக் கொண்டு, கார்த்திக்கைப் பற்றிச் சொல்லவும், விக்கிக்கு ஒரே சந்தோஷம்.

"அட...! உனக்கு இந்தளவுக்குத் தைரியத்தையும், தெளிவையும், சந்தோஷத்தையும் கொடுத்த அந்த சூப்பர் ஹீரோ யாருக்கா...? நான் பார்க்கணுமே...! உனக்கு சரியான ஜோடியா... இல்லையான்னு நான்தான் பார்ப் பேன்!" என்று குழந்தை போல் அடம் பிடிக்க, ஷைலு வெட்கத்துடன் சிரித்தாள்.

"சரிடா... நாளைக்கு ஒரு ப்ரெண்ட் கல்யாணம் இருக்கு... அதுக்கு வருவார். நீயும் என் கூட வா, அறிமுகப்படுத்துகிறேன்!" என்ற தமக்கையின் பேச்சில் முகம் மலர, உடனே சந்தோஷமாக ஒத்துக் கொண்டான்.

அடுத்த நாள் மாலை பீச் கலர் ஜர்டோஸி வேலைப் பாடு செய்த புடவைக்கு மேட்ச்சாக டைமண்ட் ரூபி நெக்லஸ், வளையல், கம்மல்களை அணிந்து, முடியை

முழுவதும் பிரெஞ்சு பிளாட் போட்டு ரெடியாக வந்த மகளைக் கண்டதும்... தாய்க்குத் தன் கண்ணே பட்டுவிடும் போல் இருந்தது.

அவள் தலையில் நெருக்கமாகத் தொடுத்த மல்லிகைச் சரங்களை வைத்து, முகத்தை வழித்து நெட்டி முறித்தவர், மகளின் கன்னத்தில் முத்தமிட்டுப் பத்திரமாக அழைத்துச் செல்ல மகனுக்குக் கட்டளை யிட்டுப் பைக்கில் வழியனுப்பி வைத்தார்.

வழியில் காயத்ரியும் தன் ஸ்கூட்டியில் சேர்ந்து கொள்ள, இருவரும் கல்யாண மண்டபத்தை அடைந்து பைக்கையும், ஸ்கூட்டியும் பார்க் செய்து விட்டு உள்ளே போகும் போதே ஷைலு கார்த்திக்கைப் பார்த்து விட, அவளின் முகம் தாமரையாய் மலர்ந்தது.

ஷைலுவைக் கண்டதுமே வேக நடையில் அவளை நெருங்கியவன், அவளுடன் இன்னொருவனைக் கண்ட தும் கார்த்திக்கின் நடை தடைபட, அதற்குள் அவனை நெருங்கி விட்டிருந்தவள், "இவர்தான் கார்த்திக்!" என்று அறிமுகப்படுத்தினாள் தம்பியிடம்.

மாநிறத்துக்கும் அதிகமான கலரில், நான் – அயர்ன் நேவி ஸ்ட்ரைப்ஸ் ப்ளூ பெர்ரி பேண்ட்டில் உயரமாக, அதற்கேற்ற வெயிட்டில் கம்பீரமாக இருந்தவனைப் பார்த்ததும் பிரமித்துப் போயிருந்தவனிடம் "ஹாய்...!" என்று கை நீட்ட, விக்கியின் கை தானாகவே நீண்டு கார்த்திக்கின் கையைப் பற்றிக் குலுக்கியது.

சிறிது நேரம் கார்த்திக்குடன் பேசி விட்டுக் கிளம்ப, "அக்கா... சான்சே இல்லை... சூப்பர் பெர்சனாலிட்டி, யூ ஆர் லக்கி, ம்ம்... என்ஜாய்... எனக்கு வேற வேலை இருக்கிறது... இங்கிருந்து கிளம்பும் போது எனக்குப் போன் செய், நான் வருகிறேன்...!" எனத் தமக்கையிடமும், கார்த்திக்கிடமும் விடை பெற்றுச் சென்றான்.

அவன் செல்வதை உறைந்த புன்னகையுடன் பார்த்துக் கொண்டிருந்தவளிடம், "ஹேய் ஏஞ்சல்! யூ லுக் சோ கார்ஜியஸ் இன் திஸ் சாரி!" என ஷைலுவை கண்களாலே விழுங்க, காயத்ரிக்குச் சிரிப்பு வந்தது.

ரகசியமாக ஷைலுவின் தோளில் இடித்து, "நேற்று நான் சொன்ன மாதிரி நடக்குதா...?" என்று கேட்கவும், ஷைலுவின் புன்னகை விரிந்து சிரிப்பாக மாற, இரு வரின் சிரிப்புக்குண்டான காரணத்தை அறிய ஆர்வம் கொண்டவனிடம் காயத்ரி விஷயத்தைக் கூற, அவனுக் கும் சிரிப்பை அடக்க முடியவில்லை.

"லுக் மட்டுமில்லை... அதுக்கும் மேல் போகலாம். ஆனால், உங்க தோழிக்கு ஓ.கே.யான்னு கேளுங்க காயத்ரி...?" என்றான் ஷைலுவைச் சீண்டும் விதமாக.

"ஹலோ... ஹலோ சார், அதை நேரடியாக உங்க ஆள் கிட்டே கேளுங்க, நான் எதுக்கு நடுவில்...?" என்று கழன்று கொள்ள, கார்த்திக் சிரித்துக் கொண்டே ஒற்றைப் புருவத்தைத் தூக்கி, "இதுக்கும் மேலே போகலாமா ஷைலு?" என்றான் அவளுக்கு மட்டும் கேட்கும் குரலில்.

மனம் கவர்ந்தவனின் கேள்வியில் ஷைலுவுக்கு முகம் சிவக்க, தலைகுனிந்து விரல்களைப் படாத பாடு படுத்திக் கொண்டிருந்தவள், பேச்சைத் திசை திருப்பும் எண்ணத்தில் நிமிர, இவர்களை நோக்கி வந்த ஷிவாவைக் கண்டதும் தன் வெட்க முகத்தை மறைத்துப் புன்னகைத்தவளைக் கார்த்திக்கோடு மணமக்களிடம் அழைத்துச் சென்று அறிமுகப்படுத்த, கட்டை விரலை நிமிர்த்திக் காட்டிக் கண்களாலே பெஸ்ட் சாய்ஸ் என்று பாராட்டினான் சந்தோஷ்.

மணமக்களுக்கு வாழ்த்துச் சொல்லிப் பரிசுப் பொருளைக் கொடுத்து விட்டுப் பார்வையாளர் பகுதியில் அமர்ந்தவள், காயத்ரி எங்கேயென்று தேடியவள், அவள் வேறு தோழியுடன் பேசிக் கொண்டிருப்பதைக் கண்டு போரடித்துத் திரும்பியவளுக்கு இனிதாகத் தூக்கி வாரிப் போட்டது.

"என்ன கார்த்திக் இங்கே உட்கார்ந்திருக்கீங்க? உங்க ப்ரெண்ட் கூட பேசலையா...?" என்றவளுக்குத் தன் எதிரில் அமர்ந்து தன்னையே விழுங்குவதுபோலப் பார்த்துக் கொண்டிருக்கவும், பேச்சுப் பாதியில் நின்று வெறும் காத்துதான் வந்தது.

அவன் பார்வையைத் தாங்கி நிற்க முயன்று, முடியாமல் தோல்வியைத் தழுவியவள், "என்ன கார்த்திக், இப்படிப் பார்க்கறீங்க... யாராவது பார்க்கப் போறாங்க...!" என்றாள் சிணுங்கலாக.

அப்பொழுதும் அவளிடமிருந்து பார்வையை விலக்காமல், "பார்த்தால்தான் என்ன?" என்று சீண்டவும்,

"ப்ளீஸ்..." என்றாள் மெதுவாக, அதே சமயம் ராகமாக.

அவளின் சிணுங்கலை ரசித்தபடி, "இந்த மாதிரி நீ எதிரில் வந்து நின்றால் நான் என்னதான் செய்வது...? என்னைக் கொல்றியே...!" என்றவனின் கிசு கிசுப்பான குரல் அவளுள் இனிய இம்சையை உருவாக்க, தனக்குள் சிரித்தபடி,

"ஐயோ வழியுது... கொஞ்சம் துடைச்சுக்கோங்க... அங்கே பாருங்க, சந்தோஷ் உங்களையே பார்க்கிறார்!" என்று அவனைத் திசை திருப்ப முயற்சித்தாள்.

ஆனால் விடாக்கண்டனோ, "அவன் கிடக்கிறான் மடையன். பக்கத்தில் இருக்கிற புதுப் பொண்டாட்டியை சைட் அடிக்கிறதை விட்டுட்டு என்னை முறைச்சிக்கிட்டு உட்கார்ந்திருக்கான் பாரு!" என்றவன், நண்பனை நக்கல் செய்துவிட்டு, "ஏன் ஷைலு... நமக்கு இந்த மாதிரி எப்போ நடக்கும்...?" என்றான் அப்பாவியாக.

கேள்வி அப்பாவியாக இருந்தாலும், அவன் கண்ணிலிருந்த சிரிப்பிற்கு ஷைலுவிடம் செல்ல முறைப்பை வாங்கிக் கட்டிக் கொள்ள, "இது கூட நல்லாத்தான் இருக்கு!" என்றான் மேலும் சீண்டலாக.

தன் சிரிப்பையும் வெட்கத்தையும் பெரும் பாடுபட்டு மறைத்து, "இது சரி வராது... நான் போகிறேன்!" என்று போலியாகக் கோபப்படுவதுபோல் எழுந்தவளைக் கைப் பிடித்து உட்கார வைத்து,

"இந்தப் போலியான கோபம் கூட நல்லா இருக்கு... ஆனால், இடம்தான் சரியில்லை!" எனப் பெருமூச்சு விட,

"படவா ராஸ்கல்..." என்றாள் சலுகையாக.

அவளின் திட்டிற்கும் சிரித்து, "அதிருக்கட்டும்... தம்பிக்கு என்னை அறிமுகம் செய்து வைக்கிற அள வுக்குத் தைரியம் வந்து விட்டதா?" என்றான் சீண்டலாக.

சிறு புன்னகையுடன், "தைரியம் இல்லை... ஆனால், விக்கிக்கு என்னிடம் ஒரு சாப்ட் கார்னர் உண்டு. அவன் யாரிடமும் சொல்ல மாட்டான்..." என்றவளிடம், தன் தாய் நாளை அவளை வீட்டுக்கு வரச் சொன்னதை ஞாபகப்படுத்த, வருவதாக வாக்களித்து விட்டு, எல்லோரிட மிருந்தும் காயத்திரியுடன் விடைபெற்றாள்.

வீட்டுக்குச் சென்றவளுக்குப் பத்து நாள் கழித்து கார்த்திக்கைப் பார்த்த சந்தோஷம் என்றால், இன்னொரு பக்கம் கல்யாண மண்டபத்தில் அவன் தன்னைக் கண்டு கிறங்கியது ஒருவிதமான இனிமையான உணர்வைத் தந்தது.

கல்யாணத்தைப் பற்றி விசாரித்த தாய்க்குப் பதில் சொல்லி விட்டு ரூமிற்குச் செல்ல எத்தனித்தவளைத் தந்தை அழைத்து, "நாளை காலை ரெடியாக இரு... கொஞ்சம் ஷாப்பிங் இருக்கு!" எனவும்,

"சரிப்பா..." என்றாள்.

இரவு படுத்தும் உறக்கம் வராமல், நினைவெல்லாம் கார்த்திக்கின் எண்ண அலைகளில் சிக்கிக் கொஞ்சம்

கொஞ்சமாகத் தன்னை தொலைத்த போது செல்போனில் குறுஞ்செய்தி வரும் சத்தம் கேட்க, எடுத்துப் பார்த்தவள், 'மே யுவர் பர்த்டே பிரிங் யூ அஸ் மச் அஸ் யூ ஹாப் பினஸ், யூ கிவ் டு எவ்ரி ஒன் ஹூ நோஸ் யூ ஹாப்பி பர்த்டே டு யூ மை டியர் ஸ்வீட் ஏஞ்சல்...' என்ற கார்த்திக் கின் மெசேஜ் அவளுக்கு ஆச்சரியத்தையும் சந்தோஷத் தையும் கொடுக்க, அவனுக்குக் கால் செய்யலாம் என்று நினைத்த வினாடி கார்த்திக்கிடமிருந்து கால் வந்தது.

"விஷ்ஷிங் யூ வெரி ஹாப்பி பர்த்டே டார்லிங்!" என்ற கார்த்திக்கின் குரலிலிருந்த உற்சாகம் அவளையும் தொற்றிக் கொள்ள,

"என் பிறந்த நாள் உங்களுக்கு எப்படித் தெரியும்?" என்றாள் குழந்தையின் ஆர்வத்துடன்.

அவளின் கேள்விக்குச் சிரித்து, "நான்தான் சொன்னேனே... என் மனசுக்குப் பிடிச்சவளைப் பற்றிய எல்லா விஷயமும் எனக்குத் தெரியும்!" என்றான் அமர்த்த லாக.

அவனிடம் சற்றுநேரம் ஸ்வீட் நத்திங்ஸ் பேசி போனை வைத்தவளின் மனது அந்தரத்தில் இறக்கை இல்லாமலே பறக்க ஆரம்பித்தது.

10

அடுத்த நாள், மற்ற நாட்களை விட சந்தோஷமாக விடிய, சுஜாவும், விக்கியும் வாழ்த்துச் சொல்லிப் பரிசுப் பொருட்களைக்

கொடுக்க, அவர்களுக்கு நன்றி சொன்னவளுக்கு... சுஜாதா, மகளுக்குப் பிடித்த உணவான இடியாப்பம், ஆப்பத்தை பாயாவுடன் பரிமாற, சிறியவளின் மனது தாயின் அன்பில் கனிந்தது.

தந்தை மற்றும் தம்பியுடன் பேசிக்கொண்டே சாப்பிட்டு முடிந்ததும் தாயிடம் விடைபெற்று தந்தையுடன் வெளியில் சென்றாள்.

முதலில் கோயிலுக்கு அழைத்துச் சென்று அவள் பெயரில் அர்ச்சனை செய்து, அவளுக்குப் பிடித்த மாதிரி நகைகளும், சுரிதாரும் எடுத்துக் கொடுத்தவர், மகளுக்குப் பிடித்த இடமான அரபிந்தோ ஆஸ்ரமத்திற்கு அழைத்துச் சென்று, சற்று நேரம் தியானத்தில் அமர்ந்தார்கள்.

இந்த இடம் எப்பொழுதுமே ஷைலுவின் பேவரைட். மனதிற்கு ஏதாவது சஞ்சலமோ, துன்பமோ வரும் தருணத்தில், இந்த அமைதியான இடம்தான் அவளின் முதல் சாய்ஸ். கடந்த மூன்று வருடங்களாக மகள் தங்கள் பெரிய மகள்களிடம் கஷ்டத்தை அனுபவிக்கும் போதெல் லாம் அவள் இந்த ஆஸ்ரமத்திற்கு வந்து அமர்ந்திருப் பதைக் கண்டிருந்ததால், இன்றும் மகளை அழைத்து வந்திருந்தார்.

தந்தையின் இந்த சர்ப்ரைஸ் ஷைலுவின் முகத்தில் திருப்தி மற்றும் புன்னகையை உண்டாக்க, அவரின் தோளின் மீது ஆதரவாகச் சாய்ந்து கொள்ள, அவளைத் தோளோடு அணைத்தபடி கடற்கரை ரோட்டில் பேசிச் சிரித்தபடி நடந்தார்கள்.

மதியம் ஆனதும் ரெஸ்டாரன்ட்டில் சாப்பிட்டு விட்டுத் தந்தையுடன் பேசிச் சிரித்தபடி வீட்டுக்குள் நுழைய, அப்போதுதான் தன் அறையிலிருந்து வெளிவந்த நளினாவின் முகம், ஷைலுவின் மலர்ந்த முகத்தைக் கண்டதும் வேப்பெண்ணெய் குடித்த குரங்கு போலானது.

'இவள் சிரிக்கக் கூடாதே...! இன்றைக்கு அழ வெச்சே ஆகணுமே...!" என்று யோசித்தபடி அவளை நெருங்க, அந்நேரம் மகளின் சிரிப்புச் சத்தம் கேட்டு சமையலறையிலிருந்த வெளியே வந்த சுஜா, பெரிய மகள் அவள் தங்கையை நோக்கிக் செல்வதைக் கண்டதும் வேக நடையோடு இருவர் நடுவில் புகுந்து, "வா ஷைலு... அப்பா என்ன வாங்கிக் கொடுத்தார், காட்டு..." என்று அவளைத் தன்னோடு அழைத்துச் சென்று விட, நளினாவின் கோபத்தில் பெட்ரோலை ஊற்றியது போலிருந்தது தாயின் செயல்.

தாயிடம் பரிசுப் பொருட்களைக் காட்டிச் சிறிது நேரம் அவரிடம் பேசி விட்டுத் தன் அறையில் சென்றடைந்த வளுக்குத் தந்தை பரிசுப் பொருட்கள் வாங்கிக் கொடுத்தது நெஞ்சம் மகிழ்ச்சியில் நிறைந்தாலும், அவர் தன்னுடன் அதிக நேரம் செலவிட்டது மனதிற்கு இதமாக இருக்க, சிறிதுநேரம் ஓய்வு எடுத்துவிட்டு, மாலையானதும் கார்த்திக் வீட்டுக்குக் கிளம்பினாள்.

சஞ்சய் எடுத்துக்கொடுத்த ராபின் எக் ப்ளூ பனாரசில் உடம்பு முழுவதும் வட்ட வட்டமாகத் தங்க சரிகையில் டிசைன் செய்திருந்த சுரிதார் அணிந்து,

அதற்கு மேட்ச்சாக நீலக் கல் பதித்த கழுத்தை ஒட்டிய ஒற்றைச் சரம் சங்கிலியும் ஸ்டட்டும், நீலக் கல் வளை யலும், நீலக் கல் பதித்த ப்ரேஸ்லெட்டும் அணிந்து ரெடியாகித் தாயிடம் சொல்லி விட்டுக் கிளம்பியவளின் அலங்காரத்தையும் சந்தோஷத்தையும் கண்டு தமக்கை களின் கண்கள் வன்மத்தைக் கக்கின.

மதியமே அவளை அழ வைக்க முடியாமல், தாய் அவளைக் காப்பாற்றியது மேலும் அவர்களின் வன்மத்தை அதிகமாக்க, அந்த வெறியில், "எங்கேடி போறே...? எவனைப் பார்க்கப் போறே...?" என்று வார்த்தைகளை ஊசியாகக் குத்த, அவர்களின் பேச்சில் அதிர்ந்து பேச் சிழந்து நின்றாள்.

இவர்கள் பேச்சுச் சத்தம் கேட்டு அவசரமாக ஓடி வந்த சுஜா, சிறிய மகள் கண்ணீர் வழிய அதிர்ந்து சிலை யாய் நின்ற மகளின் கையைப் பிடித்து அழுத்தி, "அவள் எங்கே போனால் உங்களுக்கு என்ன...? இன்றைக்கு அவ பிறந்த நாள். காலையில் ஒரு வாழ்த்து கூட அவளுக்குச் சொல்லத் துப்பில்லை... அவளை நிக்க வெச்சி கேள்வி கேட்க உங்ளுக்கு என்ன உரிமையிருக்கு...?" என்று அதட்டினார் உள்ளம் கொதிக்க.

தாயின் அதட்டலைக் காதிலே போட்டுக் கொள்ளா மல் அலட்சியமாக உச்சுக் கொட்டி, "ஆமாம்... இவ பெரிய விஜபி, இந்த உலகத்தில் பிறந்து உலகமகா சாதனை செய்து விட்டாள்... இவளுக்குப் பிறந்த நாள் வாழ்த்து சொல்ல!" என்றவர்களின் எகத்தாளமான பேச்சில் ஷைலு வுக்கு முள் மேல் நிற்பது போலிருந்தது.

காலையில் இருந்த சந்தோஷம் எல்லாம் ஊசி குத்தின பலூன் போல வடிந்து போக, அவளின் முக வாட்டத்தைக் கண்ட தாய்க்கு, இரண்டு பெண்களின் மீதும் ஆத்திரம் வந்தது. ஆனால், தன் கோபத்தைக் காட்டுவ தற்கு இதுவல்ல தருணம் என்று நினைத்தவர், தன் கோபத்தைக் கட்டுப்படுத்தி,

"ஷைலு... நீ கிளம்பு. நான் பார்த்துக் கொள்கிறேன்!" எனச் சமாதானம் செய்ய, தன்னையே முறைத்துக் கொண்டு நின்றிருந்த இருவரையும் வேதனையுடன் நோக்கி விட்டு, அங்கிருந்து தப்பித்தால் போதும் என தாயிடம் விடை பெற்று வெளியேறினாள்.

கால்கள் கார்த்திக் வீட்டை நோக்கி அனிச்சை செயலாகச் சென்றாலும், நெஞ்சம் ஊமையாய் ஒப்பாரி வைத்தது.

அதன் சுமை தாங்க முடியாமல் மென்மையான முகம், சுடு வெயில் பட்ட மலர் போல வாடியது. கார்த்திக் கின் வீட்டை அடைந்ததும், தன் முக பாவனையை மாற்றி உள்ளே சென்றவளை மகாலட்சுமி அன்போடு வாழ்த்துச் சொல்லி வரவேற்க, அவரின் அன்பில் மனம் நெகிழ்ந்தது. அவருடன் ஹாலின் உள்ளே பிரவேசிக்க, காயத்ரி விஷ்வநாத் அங்கிளுடன் பேசிக்கொண்டிருப்பதைக் கண்ட தும் வாடியிருந்த முகம் சற்று அமைதியடைய, அவர்களின் வாழ்த்தில் மேலும் புன்முறுவல் பூத்தது.

மூவருடன் அமர்ந்து பேசிக்கொண்டிருந்தவளை, "கார்த்திக் உனக்காகக் காத்திருக்கிறான் ஷைலு. போய்ப்

பார்த்து விட்டு வா...!" என்று அனுப்ப, சிறு வெட்கத்துடன் மாடியேறிச் சென்றவள், கார்த்திக்கின் அறை முன்னே காலை வைத்ததுமே தானியங்கிக் கதவு போலத் தானாகக் கதவு திறந்து, "ஹாய் ஸ்வீட்டி... யூ ஆர் அல்மோஸ்ட் வெல்கம்!" என்று கார்த்திக் ஆங்கிலேயப் பாணியில் குனிந்து வரவேற்றான் ஓர் துள்ளலுடன்.

அவனின் எதிர்பாராத செயலால் ஒரு நிமிடம் அதிர்ந்து, பின் அவன் வரவேற்பிற்கு மெலிதாகப் புன்னகைத்தாள்.

இதழ்கள் புன்னகையைச் சிந்தினாலும் அது அவளின் கண்களை எட்டாததால், கார்த்திக்கிற்கு மன திற்குள் ஏதோ தடம் புரண்டது.

அவளை உள்ளே அழைத்துச் சென்று சோபாவில் அமர வைத்து விசாரிக்க, "நத்திங் கார்த்திக்... கொஞ்சம் தலைவலி...!" என்றாள் சமாளிப்பாக.

"இதை என்னை நம்பச் சொல்றியா...? இன்றைக்கு உன் பிறந்த நாளைக்கு எவ்வளவு ஆசையாக இருந் தேன் தெரியுமா? நீ இப்படி இருந்தால் நான் எப்படி சந்தோஷமாக இருக்க முடியும்...?" என்றவளின் கனிவான பேச்சில் கழிவிரக்க அணை மளுக்கென்று உடைய, ஆரதவு தேடி அவனின் மார்பில் சாய்ந்து அழவும்... துடித்து அவளை அணைத்துக் கொண்டவன், "என்னடா... என்ன நடந்தது...?" என்றான் பதட்டத்துடன்.

அவனின் அணைப்பில் மனபாரம் குறைய, கண்களைத் துடைத்தபடி அவனிடமிருந்து விலக, "ஏன்,

உன் இரண்டு சகோதரிகளும் ஏதாவது சொன்னார்களா?" என்று அவனே யூகித்துக் கேட்க,

தலையைக் குனிந்து, "ஆமாம்..." என, கார்த்திக்கின் கை முறுக்கேறியது கோபத்தில்.

"நான் எத்தனை முறை சொல்லியிருக்கிறேன்... அவர்கள் பேச்சைக் காதில் வாங்காதே, மனசைக் கஷ்டப் படுத்திக்காதே... அது அவர்களுக்கு வெற்றியாகி விடும்!" என்று கோபப்பட, அவளின் கண்ணீர் மீண்டும் துளிர்த் தது.

அவளின் கண்ணீரைக் கண்டு மனம் இளகிய வனாக, "ஒன்றும் தெரியாத குழந்தையா இருக்கியேடா..." என்று ஆதங்கப்பட்டவனிடம்,

"நான் அவர்கள் பேசும்போது என் மனக் கஷ்டத்தைக் காட்டிக் கொள்ளவில்லை. ஆனால், உங் களைப் பார்த்ததும் என்னால் தாங்க முடியவில்லை..." என, அவளை இழுத்து அணைத்துக் கொண்டான்.

"எனக்கு ரொம்பச் சந்தோஷமாக இருக்குடா. உனக்கு என் மேல் அன்பிருப்பதால்தான் என்னிடம் பாதுகாப்பும் ஆறுதலும் கிடைக்கும்னு என்னிடம் வந்து அழுதாய்... இது போதும்டா என் ஆயுசுக்கும்...!" என்று அவளின் கையை ஆறுதலாக அழுத்த, ஷைலுவுக்கும் அவனின் இதமான அணைப்பில் தமைக்கைகளின் பேச்சு மறந்து போனது.

அவளின் கண்ணீரைத் துடைத்து, "இனி நீ அழவே கூடாது. அதுவும் பிறந்த நாளும் அதுவுமாகக் கண்

ணீருக்கு அனுமதியே இல்லை...!" என்றவன், அவளின் கையில் அவளுக்காக வாங்கி வைத்திருந்த பட்டுப் புடவையைக் கொடுத்து, "இதைக் கட்டிக்கிட்டு கீழே வா ஷைலு... நான் ஹாலுக்குப் போறேன்..." என்றவன், கதவை மூடிக் கொண்டு கீழே செல்ல, ஷைலுவின் மனது, அவனின் அன்பில் பனிக்கட்டியாய் உருகியது.

சில நொடிகள் அவனின் காதலில் கரைந்தவளின் பார்வை, அவள் கையிலிருந்த வைர ஊசி வேலைப்பாடு செய்த அரக்கு நிறச் சேலையைக் கண்டதும் வெட்கச் சிரிப்பு ஒன்று மலர, அதை அணிந்து கொண்டு கீழே வந்தவளைக் கண்டு கார்த்திக் முகம் அநியாயத்திற்கு மலர்ந்து, அவளையே இமைக்காமல் நோக்க...

"ஆரம்பிச்சிட்டாங்கடா..." என்றாள் காயத்ரி சிரித்துக் கொண்டே.

அப்பொழுதும் அவன் ஷைலுவையே பார்வையால் விழுங்க, "கார்த்திக்... இன்னும் எவ்வளவு நேரம் பார்த்துக்கிட்டே இருப்பீங்க? ஷைலு பிறந்த நாள்... அவளுக்கு சர்ப்ரைஸ் கொடுக்கலாம், வாங்கன்னு இன்வைட் பண்ணிட்டு, இப்போ நீங்க ரெண்டு பேரும் தனியா ஒரு உலகத்தில் இருந்தீங்கன்னா... நாங்க எல்லாம் என்ன செய்வது...?" என்றவளின் பரிதாபமான கேள்விக்குச் சிரிப்பு அலை எழுந்தது.

விஸ்வநாத்தோ, "இதாவது பரவாயில்லை காயத்ரி. சில சமயம் கார்த்திக் இல்லாத தட்டில் சாப்பிடுவான், இல்லாத படியில் ஏறுவான்..." என்று கிண்டலடிக்க,

"ஐயோ அப்பா... மானத்தை வாங்காதீங்க..." என்று சிரித்தான் வெட்கத்துடன்.

மகாலக்ஷ்மி குறுக்கிட்டு, "நீ கவலைப்படாதேடா செல்லம், அவர் கல்யாணத்திற்கு முன் எப்படி இருந்தார்னு ஹின்ட் கொடுக்கிறார். அது புரியவில்லை உனக்கு...!" என்று கணவரை மகனிடம் போட்டுக் கொடுக்கவும், அசடு வழிய,

"அடிப்பாவி...! இப்படி எட்டப்பனா மாறிட்டியே...!" என,

"நீங்க மட்டும் என்னவாம்?" என்றார் அதே குரலில் அவரின் சகதர்மினி.

விஷ்வநாத், காயத்ரி பக்கம் திரும்பி, "நான் சொன்னது எல்லாம் ரப்பர் போட்டு அழிச்சிடு காயத்ரி... அது சும்மா..." என்று கண்ணைக் காட்ட,

அதைக் கவனித்து விட்ட மகன், "அப்பா, மறுபடியும் அங்கே என்ன கண்ணைக் காட்டுறீங்க...?" என்று மிரட்டவும்...

கைகளை விரித்து, "ஒன்றும் இல்லையே...! ஏம்மா, காயத்ரி... நான் ஏதாவது சொன்னேன்...?" என, காயத்ரிக்குச் சிரிப்பை அடக்க முடியவில்லை.

இவர்களின் கேலி கிண்டல்களை அமைதியாக ரசித்துக் கொண்டிருந்த ஷைலுவிடம், "என்ன மருமகளே! அப்பாவும் பையனும் இப்படிப் பேசிக் கொள்கிறார் களேன்னு பார்க்கிறாயா? இவன் என் மகன் இல்லை, என்

நண்பன் மாதிரி!" என்று கார்த்திக்கின் தோளில் கை போட்டுக் கொண்டார் பெருமை வழிய.

"சரி... சரி... போதும், விட்டால் இப்படியே பேசிக் கிட்டு இருப்பீங்க. நீ வா ஷைலு... இந்தக் கேக்கைக் கட் பண்ணு!" என்று மகாலக்ஷ்மி ஒரு கத்தியை ஷைலுவின் கையில் கொடுக்க,

"அம்மா ஷைலு... சீக்கிரம் கேக்கைக் கட் பண்ணும்மா, எங்களைச் சாயங்காலத்தில் இருந்து பட்டினி போட்டு வைத்திருக்கிறான். நீ வந்த பிறகுதான் சாப்பாடுன்னு சொன்னவன், நீ வந்த பிறகு உன்னை சைட் அடிக்கவே அவனுக்கு டைம் போதவில்லை...!" என்று மீண்டும் மகனைக் கலாய்க்க ஆரம்பிக்க,

"ஷ்... இப்படியே பேசினால் உங்களுக்குச் சாப்பாடு கிடையாது!" என்று குண்டைத் தூக்கிப் போட, விஸ்வநாத் கப்சிப் ஆக, ஷைலு சிரித்துக்கொண்டே கேக்கை வெட்டினாள்.

கைதட்டி ஆரவாரித்து விட்டு எல்லோரும் பரிசுப் பொருட்கள் கொடுக்க, கார்த்திக் எதுவும் கொடுக்காமல் நிற்பதைக் கண்டு, "நீ எதுவும் கொடுக்கலையா கார்த்திக்...?" என்ற தந்தைக்கு,

"நீங்க வேற... அவனாவது, கிப்டு வாங்காமல் இருக்கிறதாவது... அதெல்லாம் தனியா...!" என்றார் தாய் சீண்டலாக.

"அப்பா விட்டதும் நீங்க ஆரம்பிச்சிட்டீங்களா? ஐயோ அம்மா!" என்று சந்தோஷமாக அலுத்துக்

கொண்டவன், "அதுக்குதான் அப்பவே எனக்கு ஒரு தங்கையோ தம்பியோ வேண்டும் என்றேன். அப்படி இருந்திருந்தால் நீங்கள் ரெண்டு பேரும் என்னைக் கிண்டல் செய்வதை விட்டுவிட்டு அவர்களைக் கிண்டல் செய்திருப்பீர்கள் அல்லவா...?" என,

"ஓ நோ... அதை ஏன் கார்த்திக் ஞாபகப் படுத்தினே...?" என விஷ்வநாத் போலியாகப் பெருமூச்சு விட்டதும், மகாலக்ஷ்மி கணவரின் முதுகில் ஒரு அடி வைக்க, அந்த இடமே கலகலத்தது.

சாப்பிட்டு முடிந்ததும் அவளைத் தன் அறைக்கு அழைத்துச் சென்று, அவளின் மெல்லிய விரலில் சிறு டைமண்ட் கல் பதித்த மோதிரத்தைப் போட்டு, அவள் விரல்களை இதழ்களால் ஒற்றி எடுக்க, அவனின் அன்பைக் கண்டு இதயம் கசிந்தது.

அவனின் மார்பில் சாய்ந்து, "இதெல்லாம் எதுக்கு...? எனக்கு உங்க அன்பு மட்டுமே போதும் கார்த்திக்...!" என,

"எனக்குத் தெரியும், நீ இதற்கெல்லாம் ஆசைப்பட மாட்டாய் என்று. ஆனால், இது என்னுடைய திருப்திக் காக...!" என்றான் அவளின் கூந்தலை அன்பாக வருடி.

சிறிது நேரம் பேசிவிட்டுக் கிளம்பும் சமயம், தான் அத்தை வீட்டுக்குப் போகிற செய்தியைச் சொல்ல, அதிர்ந்தவனாக, "கண்டிப்பாகப் போகணுமா ஷைலு? எத்தனை நாள் அங்கு இருப்பே?" என்றான் தொய்ந்து போய்.

"கண்டிப்பாகப் போயே ஆகணும்... மாமா இறந்த பிறகு அத்தை மிகவும் உடைந்து போயிருக்காங்க. அவங்களுக்கு நான் என்றால் பிடிக்கும்... அதனால் என்னை வரச் சொல்லியிருக்கிறார்கள். வருவதற்கு ஒரு மாதம் ஆகிவிடும்...!" என்ற ஷைலுவை இறுக்கமாக அணைத்துக் கொண்டான்.

சில நொடிகள் கழித்து அவனிடமிருந்து விலக, "எப்படிடா உன்னை ஒரு மாசம் பார்க்காமல் இருப்பேன்?" என்றவனின் ஆதங்கத்திற்கு,

"கொஞ்ச நாள் தானே! உடனே ஓடிப் போயிடும் கார்த்திக்..." என்றாள் அவன் தாடையைப் பிடித்து ஆட்டிக் கொண்டே.

"நினைக்கவே கஷ்டமாக இருக்கு. வேறு வழி யில்லை என்பதால் ஒத்துக்கொள்கிறேன். ஆனால், எனக்குத் தினமும் போன் செய்யணும். ஓ.கே...?" என்று ஒப்பந்தம் போட, ஒத்துக் கொண்டவளிடம், "இந்த ஒரு மாசத்துக்குத் தாங்கற மாதிரி ஸ்ட்ராங்கா ஒன்று கொடுக்கக் கூடாதா...?" என்றான் ஏக்கத்துடன்.

அவனைக் காதலாக நோக்கி, "உதட்டில் முத்தம் கொடுத்தால்தான் உங்களுக்கும் எனக்கும் உள்ள காதல் ஸ்ட்ராங்காக இருக்குமா? நீங்கள் ஒன்றும் அப்படிப்பட்ட ஆள் இல்லையே கார்த்திக்...?" என்றவளைத் தூக்கி ஒரு சுற்றுச் சுற்றி விட்டு, "இது... இதுதான் உன்னிடம் எனக்கு பிடித்தது. எந்த நிலையிலும் உன்னை இழக்காத

எச்சரிக்கை உணர்வு. ஜஸ்ட் ஐ லவ் திஸ் அட்டிடியூட்..." என்றான் உல்லாசத்துடன்.

இருவரும் கீழே இறங்கி வரவும், பெரியவர்களிடம் பேசிக்கொண்டிருந்த காயத்ரி, "கிளம்பலாமா...?" என, ஒரு நிமிடம் என்றவள், புடவையை மாற்றித் தன் சுரிதாரை அணிந்து கொண்டு கிளம்ப, கார்த்திக் அவர்களைக் கொண்டு விட கூடவே கிளம்பவும், மஹா அவனைத் தடுத்து நிறுத்தினார்.

"வேண்டாம் கார்த்திக்... அன்று நீ போனபோது வீட்டில் யாரும் இல்லாததால் பிரச்சனை இல்லை. ஆனால், இப்போது அப்படி இல்லை. அதனால் நான் கொண்டு விட்டு வரேன்...!" என்று கிளம்பினார்.

அங்கிளிடம் சொல்லி விட்டு, கார்த்திக்கிடம் கண்ணாலே விடை பெறவும், மனதில் பாரத்துடன் விடை கொடுத்தான்.

அடுத்த நாளே தந்தையின் சொல்படி சுரேஷுடன் அத்தை வீட்டுக்குச் சென்றவளால், ஏனோ நிம்மதியாகவே இருக்க முடியாமல் கார்த்திக்கின் நினைவிலே மனம் தவியாய்த் தவித்தது.

அவள் வந்து ஒரு வாரம் ஓடிப் போனதே தெரிய வில்லை. அத்தை அவளை ஆசையாகப் பார்த்துக் கொள்வதும், மாலையானால் சுரேஷ் அவளை வெளியில் அழைத்துச் செல்வதும், இரவில் கார்த்திக்கிடம் பேசுவதும்,

முக்கியமாக இரட்டை ஹிட்லர்ஸ் தொல்லை இல்லாமல் எனச் சந்தோஷமாகக் கழிந்தது அவளின் நாட்கள்.

ஷைலுவின் இயல்பான பேச்சும், அவள் தன் கூட வெளியில் வருவதும் சுரேஷுக்கு எல்லையில்லாத சந்தோஷத்தைக் கொடுத்தாலும், அவளிடம் தன் காதலைச் சொல்ல தைரியம் மட்டும் வரவில்லை.

எப்படி இருந்தாலும் அவள் நமக்குத்தான்னு தெரிந்தாலும் பெரியவர்களின் சொல்லுக்குக் கட்டுப்பட்டுத் தன்னைக் கல்யாணம் செய்து கொள்வதை விட, அவள் மனதில் இடம் பிடித்துத் தனக்காகவே விரும்பி ஏற்றுக் கொள்ள வேண்டும் என்ற ஆசை இருந்ததால், ஷைலு விடம் தன் காதலைச் சொல்லி அவளின் விருப்பத்தைக் கேட்க நினைத்தான்.

ஒரு நாள் மாலை கடற்கரைக்கு அழைத்துச் சென்றவனுக்கு, தன் காதலை எப்படி அவளிடம் சொல்வ தென்று தெரியாமல் வார்த்தைகள் தந்தியடித்தது.

ஷைலு மணலில் அமர்ந்து முழங்கால்களைக் கட்டிக் கொண்டு, அதில் தலையைச் சாய்த்துக் கார்த்திக் கின் நினைவிலே அமர்ந்திருக்க, அவளின் முன் நெற்றி யில் விழுந்த கற்றைக் கூந்தல் காற்றின் உபயத்தால் விளையாடிக் கொண்டிருந்தது.

அதை ரகசியமாக ரசித்துக் கொண்டே யோசனை யில் இருந்தவனிடம், "என்ன சுரேஷ்... ஏதோ பேசணும்னு சொன்னீங்க..." என்று நினைவு படுத்த,

"ம்ம், நத்திங்..." என, அவளின் மனம் கார்த்திக்கை நோக்கித் தாவியது.

'இப்படித்தானே... ஒன்றும் இல்லை என்றால் ஏதோ கட்டாயம் விஷயம் இருக்கு என்பார்!' என்ற அவன் நினைவில் இதழ் கடையில் சிறு முறுவல் ஏற்பட,

"அப்படின்னா கண்டிப்பாக ஏதோ இருக்கு..." என்றாள் புன்னகையுடன்.

அவளின் அந்தச் சின்னச் சிரிப்பை ரசித்துக் கொண்டே, "ஷைலு... நீ காதலைப் பற்றி என்ன நினைக்கிறாய்...?" என,

ஒரு நிமிஷம் திகைத்து, "என்ன, திடீரென்று காதலைப் பற்றி அனலைஸ் பண்றீங்க...?" என்றாள் ஆச்சரியமாக.

"முதலில் நீ சொல்லேன்!" எனச் சிறு வற்புறுத்த லோடு கேட்கவும், சில நொடிகள் இதழைக் கடித்து யோசித்து,

"காதல் ஒரு அற்புதமான உணர்வு. அதை நம்மால் கண்டிப்பாகப் பார்க்க முடியாது, உணர மட்டுமே முடியும். காதல் வந்தால் முரடன் கூட கவிஞன் ஆகி விடுவான். சரி, போதுமா? இப்போ சொல்லுங்கள், என்ன திடீரென்று இந்தக் கேள்வி?" என்றாள் விடாமல்.

சற்று நேரம் கடலையே பார்த்தவன், அவளிடம் திரும்பி, "நீ என்னைப் பற்றி என்ன நினைக்கிறாய் ஷைலு...?" என,

இந்தக் கேள்வியை எதிர்பார்க்காததால் அவள் மனதில் ஒரு எச்சரிக்கை மணி அடித்தது.

அவனைத் திரும்பி ஒரு பார்வை பார்த்து விட்டு, "ஏன் சுரேஷ் சுற்றி வளைக்கிறீங்க...? நீங்க என்ன கேட்க நினைக்கிறீங்களோ அதை நேரடியாகக் கேளுங்களேன்!" என்றாள் ஒரு ஜாக்கிரதை உணர்வுடன்.

அவள் நேரடியாக விஷயத்திற்கு வரவும் அவள் கண்களையே ஆழமாக நோக்கி, "ஐ லவ் யூ ஷைலு!" என உருக,

இப்படித்தான் ஏதாவது ஒரு பூதம் கிளம்பும்னு ஒரு வகையில் எதிர்பார்த்திருந்தாலும், அந்த நொடி பூமியே தட்டாமாலை சுற்றியது.

அவளின் மனநிலை புரியாமல், "நான் உன்னை உயிருக்கு உயிராகக் காதலிக்கிறேன். என்னதான் அம்மாவும், மாமாவும் நம் இரண்டு பேருக்கும் கல்யாணம் செய்ய முடிவு செய்தாலும், இருவரும் ஒருத்தரை ஒருத்தர் புரிந்து கொண்டால் நன்றாக இருக்கும்!" என்று பேசிக் கொண்டே திரும்பியவன், ஷைலு அமர்ந்த இடம் காலியாக இருந்ததால், எங்கே என்று தேடியவனின் கண்களில், அவள் கடல் அலைகளில் காலை நனைத்துக் கொண்டிருந்ததைக் கண்டதும் நிம்மதிப் பெருமூச்சு எழுந்தது.

கடல் அலையில் காலை நனைத்துக் கொண்டு நின்றிருந்தாலும், அவள் மனதில் புயலடித்துக் கொண் டிருந்தது.

அவளை நெருங்கிய சுரேஷ், "என்ன ஷைலு இங்கே நிற்கிறாய்...? நான், உன்னிடம் சொன்னது எல்லாம் கேட்டாயா... இல்லையா?" என சந்தேகமாகக் கேட்கவும்...

"கேட்டேன் சுரேஷ்!" என்றாள் இறுகிய குரலில்.

"நான் கேட்டதற்குப் பதில் சொல்லாமல் வந்து விட்டாய்!" என்று ஆவலுடன் அவள் முகத்தை நோக்கத் தன்னைச் சமன்படுத்தி, எப்படிச் சொல்வதென்று மன திற்குள் ஒத்திகை பார்த்துக் கொண்டிருந்தாள்.

தன் பதிலுக்காக ஆவலுடன் முகத்தையே பார்த்துக் கொண்டிருக்கிற சுரேஷை நினைத்தால் அவளுக்குப் பாவமாக இருந்தது.

அவன் மனதில் ஆசையை வளர்த்த தன் பெற்றோர் மீதும் ஆத்திரம் வந்தது.

ஆனால், இதையெல்லாம் பார்த்தால் தன் காதல் என்னாவது என்ற பயம் எழ, மெதுவாகத் தொண்டை யைச் சரி செய்து...

"உங்களுக்கே தெரியும்... எனக்கு யார் மனதையும் நோகடிக்கப் பிடிக்காது. இப்போ என் பதிலால் உங்கள் மனதை நோகடித்து விடுவேனோன்னு தயக்கமாக இருக்கு... அதற்காக உங்களுக்கு நான் சரி என்றும் சொல்ல முடியாது. நான் சொல்றதைப் பொறுமையாகக் கேளுங்கள் சுரேஷ்!" என்று பெரிய பீடிகையுடன் ஆரம் பிக்க, அவனின் புருவங்கள் முடிச்சிட்டுக் கொண்டது புரியாத பாவனையில்.

சுரேஷின் முகபாவனை சற்றுப் பயத்தை விளைவிக்க, கண்களை மூடிக் கார்த்திக்கை மனதில் கொண்டு வர... தைரியமும் கை வந்தது. அதன் விளைவாக, "உங்கள் கேள்விக்கு நெகடிவ்வா பதில் வந்தால் என்ன செய்வீங்க?" என்று எதிர்க்கேள்வி எழுப்பினாள்.

கேள்வியின் நோக்கம் புரியவில்லை என்றாலும், "எதுவாக இருந்தாலும் ஏற்றுக் கொள்ளத்தானே வேண்டும்? உன் மனதில் என்ன இருக்குன்னு சொல்!" என்றான் அமைதியாக.

அவனின் அமைதியும் பேச்சும் ஷைலுவை ஒரு நொடி ஊமையாக்கியது, பயத்தில்.

அடுத்த நொடியே, 'தன் காதலை இவனிடம் மறைத்துப் பிரயோஜனமில்லை. இப்போதைக்கு இவனால் மட்டுமே தனக்கு உதவ முடியும்!' என்ற எண்ணம் மேலோங்க, ஒரு நிமிர்வுடன் அவனை நோக்கி, "நான் ஏற்கெனவே ஒருத்தரை விரும்புகிறேன் சுரேஷ்!" என்றாள் தீவிரமாக.

அந்தப் பதிலை எதிர்பார்க்காத சுரேஷ், அதிர்ச்சியின் எல்லைக்கே போய் விட, நான் சரியாகத்தான் கேட்டேனா என்ற சந்தேகத்தை அவளின் தொடர்ந்த பேச்சு, இது சந்தேகமல்ல என்று உறுதி செய்ததும், அவனால் நம்ப முடியவில்லை, ஷைலு மாதிரி ஒரு பெண் காதலில் விழுவாள் என்று எதிர்பார்க்காததால் வந்த அதிர்ச்சி.

அதிர்ச்சி விலகாமலே, "ஷைலு... நீ சொல்வது உண்மையா?" என,

"எஸ் சுரேஷ், ஐ லவ் ஹிம்!" எனவும், கண்களை இறுக்கமாக மூடித் திறந்து தன் ஏமாற்றத்தை மனதிற்குள் மறைத்து, மனதைக் கொஞ்சம் தேற்றி, "சரி, அவர் பேரென்ன, என்ன செய்கிறார்?" என்ற கேள்வியில், தன்னை விட அவன் எந்த விதத்தில் உயர்ந்தவன் என்ற எண்ணத்தினாலும், ஷைலு யாரிடமும் ஏமாந்து விடக் கூடாது என்ற ஆதங்கமும்தான் மேலோங்கி இருந்தது.

கார்த்திக்கைப் பற்றியும் அவன் படிப்பு, தொழில், அவனுடைய குடும்பம், அவனின் காதலின் ஆழம் எல்லாவற்றையும் பற்றி சொல்லி முடித்ததும், சுரேஷின் மனதில் இவ்வளவு நாள் மெல்லியதாக இருந்த நேச இழை அறுந்தது.

கார்த்திக்கைப் பற்றி ஷைலு சொல்லச் சொல்ல அவன் மனதில் ஒரு நெருடல் ஏற்பட, 'இந்தப் பெயரைக் கேள்விப் பட்டிருக்கிறேனே... எங்கே... எங்கே?' என்று ஞாபக அடுக்குகளில் துழாவ, உண்மையில் அந்த கார்த்திக் அதிர்ஷ்டகாரன்தான் என்ற யோசனையில் உழன்று கொண்டிருந்தான்.

பதில் சொல்லாமல் சிலை மாதிரி அமர்ந்திருந்த வனிடம், "உங்களை ஏமாற்றிவிட்டேன் என்று கோபமா?" என்ற ஒரு குழந்தையின் பயத்தோடு கேட்டவளைப் பார்த்துச் சட்டென்று சிரித்தான்.

"கண்டிப்பா இல்லைம்மா... இதில் உன் தவறு ஏதுமில்லை... உன்னைக் கேட்காமல் நாங்களே பேசிக் கொண்டது, தவறுதானே...!" என்று அவளைச் சமாதானப் படுத்த, மனது நிம்மதியடைந்தாலும்,

"சரி சுரேஷ்... உங்களை ஹர்ட் பண்ணிட்டேன்!" என்றாள் கண்ணில் நீர் துளிர்க்க.

அவள் கண்ணீரைக் கண்டு அடிபட்டவனாக, "இல்லை ஷைலு... நான்தான் உன்னை ஹர்ட் பண்ணிட் டேன். உன் மனதில் ஏற்கெனவே உள்ள காதல் தெரி யாமல், உன்னிடம் இந்த மாதிரிக் கேட்டதற்கு என்னை மன்னிச்சுடு!" என்றதும், அவனின் நேர்மை, அவனின் மேல் உள்ள பாசத்தைப் பலப்படுத்தியது.

"சரி, அதை அப்புறம் பார்த்துக் கொள்ளலாம்... நான் உன் கார்த்திக்கைப் பார்க்க முடியுமா? ஏனென்றால், நீ சொல்வதை வைத்துப் பார்த்தால் உனக்கு ஏற்றவர் என்றாலும், உன் பெர்சனாலிட்டிக்கும் ஏற்றவரான்னு பார்க்க ஆசை!" என்று அவன் விருப்பத்தை வெளி யிட்டான்.

ஒரு சிறு புன்னகையோடு, "போன் செய்து வரச் சொல்கிறேன் சுரேஷ்!" என, அதன் பிறகு பேச ஒன்றுமே இல்லாததது போல... சிறிது நேரம் இருவரும் கடலையே பார்த்துக்கொண்டு அமைதியாக இருந்தனர். இருவரும் தங்கள் நினைவுகளில் கரைந்து கொண்டிருந்தால், இருவருக்குமே அமைதி தேவைப்பட்டது.

'நகை, துணி, சாப்பாடு முதற்கொண்டு எனக்குப் பிடித்ததா என்று பார்த்துப் பார்த்துச் செய்கிற நீங்கள், வாழ்நாள் முழுவதும் கூட வாழப் போகிறவனை என் னைக் கேட்காமல், என் விருப்பத்தை மதிக்காமல் தேர்வு செய்து விட்டீர்களே...!' என்று மனம் ஊமையாய் அழுதது.

அவளின் எண்ண ஓட்டத்தை அறிந்தவன் போல், "உனக்கு மட்டுமில்லை ஷைலு... உலகத்தில் பாதி அப்பாக்கள் இப்படித்தான் இருக்கிறார்கள். அவர்கள் டீன் ஏஜாக இருக்கும்போது இதே விஷயத்திற்காக அவர் களின் பெற்றவர்களிடம் கோபப்படுபவர்கள், அதே தவறைத் தன் பிள்ளைகளுக்குச் செய்யும் போது என்ன சொல்வது? சரி, விடு. நான்தான் புரிந்து கொண்டேன் அல்லவா...? அப்புறம் ஏன் அதை நினைத்து வருந்து கிறாய்...?" என்றான் ஆறுதலாக.

"இதோடு போகாதே... இந்தக் கல்யாணத்தில் எனக்குச் சம்மதம் இல்லைன்னு எப்படிச் சொல்வது சுரேஷ்? அந்த அளவிற்கு எனக்குத் தைரியம் இல் லையே...!" என்றாள் அழாக்குறையாக.

"நீ கவலைப்படாதே... இதைச் சமாளித்துக் கொள் கிறேன். இதனால் உனக்கு எந்தப் பாதிப்பும் வராமல் பார்த்துக் கொள்கிறேன்!" என்றான் ஒரு முடிவோடு.

"தேங்க்ஸ் சுரேஷ், உங்களுக்கு என்னை விட நல்ல பெண் கிடைப்பாள்!" என்று ஆருடம் சொன்னதும், சிரித் தான். வழக்கம் போல அன்றிரவு கார்த்திக்குக்குப் போன் செய்தவள், சுரேஷ் பேசியதையும்... அவனிடம், தங்கள்

காதலைப் பற்றிக் கூறியதையும் சொன்னவள், சுரேஷ் வரச் சொன்னதைச் சொல்லவும் கார்த்திக்கிடமிருந்து சற்று நேரம் பதிலே இல்லை.

"என்ன கார்த்திக் பதிலே இல்லை... என் மேல் சந்தேகமா...?" என்றவளின் கலவரக் குரலில் மனது வலித்தது.

காயம்பட்டவனாக, "ஹாய்... உன்னை நான் சந்தேகப்படுவேன்னு எப்படி நினைத்தாய்...? ஒரே அறையில் நீ யார் கூடவாவது இருந்தாலும் அதற்கு ஏதாவது காரணம் இருக்கும்னு நம்புகிறவன் நான். உன் மனதில் என்னைத் தவிர வேறு யாரும் இல்லை, இனி வரவும் முடியாதுன்னு எனக்குத் தெரியும்!" என, 'தன் மேல் இவ்வளவு நம்பிக்கையா...?' என்ற ஆயாசம் அவளை அழுத்தியது.

அவன் தொடர்ந்து, "நான் அங்கு வந்து பின்னால் ஏதாவது பிரச்சினை செய்தால் என்ன செய்வது என்று தான் யோசிக்கிறேன்...? எனக்கு ஒன்றும் பிரச்சினை யில்லை. ஆனால், உனக்குப் பிரச்சினையாகிவிடுமோ என்றுதான் அஞ்சுகிறேன்...!" என்று கலங்கியவனை இடைமறித்தாள்.

"கண்டிப்பாக அந்த மாதிரி நடக்க வாய்ப்பே இல்லை கார்த்திக். சுரேஷ் அந்த மாதிரி இல்லை. ஹீ இஸ் ஜெனுயின் பெர்சன்... நிச்சயம் அந்த மாதிரி செய்ய மாட்டார். அது மட்டுமில்லாமல், அப்பாவிடம் என்னைக் காட்டிக் கொடுக்காமலே, கல்யாணத்திற்குச் சம்மதம்

இல்லைன்னு சொல்லப் போவதாகச் சொல்லியிருக் கிறார்...” என்றாள் உறுதியாக.

“அப்போ சரி...” என்று மனம் தெளிந்தவன், “சற்று நேரம் முன் நீ பேசியதற்குத் தண்டனை தரணுமே! பக்கத்தில் இருந்தால் தண்டனையை நிறைவேற்றலாம், இப்போ நீ தூரத்தில் இருப்பதால் ஒரு முத்தம் எனக்குக் கொடுத்தே ஆக வேண்டும்!” என்று பிடிவாதமாக, அதே சமயம் கெஞ்சலாகக் கேட்கவும், சிரித்துக்கொண்டே அவன் கேட்டதைத் தந்தவுடன் அவனும் கிறக்கமாகச் சிரித்தான்.

கார்த்திக் போனை வைத்ததும், அவனின் கிறக்கமான குரல் அவளைப் பாடாய்ப் படுத்த, அவன் கேட்டதும் தந்த முத்தத்தை நினைத்து முகம் சூடாகிப் போனது. ‘அவன் மார்பில் முகம் புதைக்க வேண்டும்... அவனுடன் கை கோத்து நடக்க வேண்டும்... என்ற ஆசைகள் பேரலைகளாக எழுந்ததும், நாளை வருகிறேன் என்று சொன்னாரே... எப்போது விடியும்... அவனை எப்போது பார்ப்போம்...’ என்ற ஏக்கத்தில் காத்திருக்க ஆரம்பித்ததை நினைத்து, அவளுக்கு ஆச்சரியமாக இருந்தது. கார்த்திக் எந்த அளவு தன் மனதில் அழுத்தமாக உட்கார்ந்து விட்டான் என்ற நினைவே சுகானுபவமாய்த் தாலாட்டியது.

ஷைலுவின் வீட்டில் நளினாவிற்கும் சாதனாவிற் கும் கோபம் புகைந்து கொண்டிருந்தது. பிறந்த நாள் அன்று ஷைலு முகத்திலிருந்த சந்தோஷமும் தெளிவும்

அவர்களுக்குச் சொல்லிய செய்தி என்னவென்று தெரியாமல் மண்டையை உடைத்துக் கொள்ள, தாய் வேறு அவளுக்காகப் பரிந்து கொண்டு வந்தது எரிச்சலைக் கிளப்பியது.

ஷைலு யாரையாவது காதலிக்கிறாளா என்று நளினாவின் மனதில் எழுந்த சந்தேகம், வார்த்தை வடிவில் தங்கையிடம் கொட்ட, "ச்சே... ச்சே...! இருக்காது நல்லி. யாரையும் காதலிக்காதபோதே அவளை வறுத்து எடுத்தோம். அதிலே அவளுக்குக் காதல் என்ற வார்த்தையே நினைக்கப் பயப்படுவாள்..." என்றாள் திருப்தியான புன்னகையுடன்.

"யூ ஆர் கரெக்ட்... ஆனால், நேற்று அவள் முகத்திலிருந்த சந்தோஷம், தெளிவு வரக் காரணம் என்னவாக இருக்கும்...? நாம் இருக்கும் வரைக்கும் எது பேசினாலும் பூனை மாதிரிப் பயந்து நடுங்குகிறவள், ஊருக்குப் போயிட்டு வருவதற்குள் எப்படி மாறினாள்? புரியவில்லையே சது!" எனறாள் குழப்பமாக.

"இப்போ ஊருக்குப் போய் நிம்மதியாக வேற இருக்கா... இந்த அத்தை அவளைத் தலையில் வைத்து கொண்டாடும். அதுவும் சுரேஷ் அவளைப் பார்த்தாலே வழிவான்..." என்று வயிறு காந்த சொல்லிக் கொண்டிருந்தவளின் எரிச்சலில்,

"ஏய் சது... உனக்கு விஷயம் தெரியுமா...? சுரேஷுக்கும் ஷைலுவுக்கும் கல்யாணம் செய்ய நம்மைப் பெத்ததுங்க முடிவு செய்திருக்காங்க..." என்று ஒரு

டின் பெட்ரோலை ஊற்ற, அது மேலும் திகுதிகுவென்று பற்றி எரிந்தது.

"ஓஹ்... அதான் பொண்ணுக்கு வக்காலத்தா?" என்றவளின் முகம், ஆத்திரத்தில் அஷ்டகோணலாக மாற...

"அதான்டி... நாம இருக்கும்போது இப்போது அவளுக்குக் கல்யாணம் முக்கியமா...? இருக்கட்டும், அப்பாவிடம் இதைப் பற்றி நாலு வார்த்தை நறுக்கென்று கேட்கிறேன்...!" என்று சினம் மேலோங்க அவசரப்பட்ட தமக்கைக்கு...

"கொஞ்சம் பொறு நல்லி, கல்யாணப் பேச்சை எடுக்கும் போது கேட்கலாம். இப்போது வேண்டாம்..." எனத் தங்கையின் ஆலோசனையைக் கேட்டதும்...

கோபம், பொங்கிய பாலில் நீர் தெளித்தது போலப் புஸ்ஸென்று வடிய,

"நீ சொல்றது சரிதான்...!" என்று எரிச்சலுடன் அமைதியானாள்.

அதே நேரத்தில், சுஜாதா தன் கணவரிடம், "பெரிய பெண்களுக்கு இப்பொழுதே மாப்பிள்ளை பார்க்க ஆரம்பித்தால்தான் இந்த வருடத்திற்குள் கல்யாணம் செய்ய முடியும்.

"நீங்க என்ன சொல்றீங்க சஞ்சய்? தரகரை நாளை போன் செய்து வரச் சொல்லவா?" என்ற மனைவிக்குச் சற்றும் யோசியாமல் சரி என்றவரிடம்...

"அவங்க ட்வின்ஸ் என்பதால் ட்வின்ஸ் மாப்பிள்ளை களையே தேடச் சொல்லப் போறீங்களா? இல்லை, ஒரே வீட்டில் அண்ணன், தம்பிக்கு முடிவு செய்யப் போறீங் களா?" என்று புரியாமல் கேட்ட சகதர்மினியை, 'உனக்கு என்னாச்சு...?' என்ற விதமாக நோக்கினார்.

"நீ வேற சுஜா... இவர்கள் இரண்டு பேரும் இந்த வீட்டில் செய்யும் அதிகாரம் போதாதா...? பாவம், ஷைலு மாட்டிக்கொண்டு முழிக்கிறாள். போற இடத்திலும் ஒன்றாகச் சென்று, அங்கு ஏதாவது சின்னப் பெண் இருந் தால் அவள் பாவம்!" என்றவரின் கரிசனப் பேச்சில், கணவரின் பார்வைக்கான அர்த்தம் புரிந்தது.

"ஓ...! ஆமாம் சஞ்சய். இவங்க பெண்களே இல்லை... ராட்சசிங்க. போன வாரம் கூட ஷைலு பிறந்த நாள் அன்று அவளைத் திட்டிச் சங்கடப்படுத்தி விட்டார்கள். இவர்கள் சீக்கிரம் கல்யாணம் பண்ணிக்கொண்டு இந்த வீட்டை விட்டுச் சென்றால்தான் ஷைலுவுக்கு கொஞ்சமா வது நிம்மதி கிடைக்கும்!" என்றவரின் பெருமூச்சு, வீட்டுத் தலைவருக்கும் தொற்றிக் கொள்ள,

"இதற்கு ஒரு வழி செய்வோம்..." என்றார் ஆறுத லாக.

சென்னையில்...

காலை ஐந்து மணிக்கு நன்றாகத் தூங்கி கொண் டிருந்த கார்த்திக்கை வேக் அப் கால் எழுப்பி விட, எப்பவுமே ஐந்து மணிக்கு எழுந்திருக்கும் வழக்கம்

ஷைலுவுக்கு இருப்பது தெரியுமென்பதால் எழுந்தவன், முதல் வேலையாக அவளுக்குப் போன் செய்ய, அலாரம் அடித்து எழுந்து ஷைலு போன் வைப்ரேட் ஆவதைப் பார்த்து டிஸ்ப்ளேயில் கார்த்திக் நம்பரைப் பார்த்து விட்டு ஆச்சரியம் தாங்காமல்...

"ஹாய் கார்த்திக்! குட் மார்னிங். என்ன, காலையிலே போன்...?" என்று ஆச்சரியத்துடன் கேட்டவளுக்கு,

"குட் மார்னிங் ஸ்வீட்டி... சும்மாத்தான்...!" என்றான் சிரித்துக் கொண்டே.

"சரி, எப்போ சென்னைக்கு வர்றீங்க?" என்று ஏக்கம் கலந்து கேட்டவளிடம் திருப்பி,

"நீ எப்போ என்னைப் பார்க்க வரப் போறே...?" என்று உல்லாசமாகக் கேட்க, ஒரு நிமிஷம் கேள்வியின் அர்த்தம் புரியாமல்,

"நீங்க என்ன கேட்கறீங்க...?" என்றாள் புரியாமல்.

"நான் இப்போ சிங்காரச் சென்னையில்தான் இருக்கிறேன்!" என்று ஒவ்வொரு வார்த்தையாக அழுத்திச் சொன்னதும், ஷைலுவுக்கு நம்பவே முடியவில்லை,

"ஏய்... என்னைக் காலையிலே கிண்டல் செய்றீங்க தானே...?" என்று சிணுங்க...

"ஹேய் இல்லேடா... நீ நேற்று நைட் போன் செய்தவுடன், உடனே கிளம்பி இங்கு வந்து விட்டேன். ஹோட்டல் சவேராவில் தங்கி இருக்கேன். இப்போ நம்புறியா?" எனவும், அவளுக்குப் பரவசமாக இருந்தது.

'நான் போன் செய்தவுடன் நம்மைப் பார்க்க வந்து விட்டானே!' என்று நினைத்ததும் வானத்தில் பறப்பது போல உணர்ந்தாள்.

மனம் மகிழ்ச்சியில் தத்தளிக்க, "ரியல்லி கார்த்திக்... என்னால் நம்பவே முடியவில்லை. ஆர் யூ கிரேசி? இப்படி சொன்ன உடனே நைட்ல கிளம்பி வந்திருக்கீங்க..." என்ற துக்கு கூலாக,

"எஸ். ஐ அம் கிரேஸ் வித் மை ஸ்வீட்டி...!" என்றான் உல்லாசமாக.

"எங்கே மீட் பண்ணலாம்... சொல்லு, ஷைலு..." என்றவனின் ஆர்வத்திற்குச் சிரித்து விட்டு, "நான் சுரேஷிடம் பேசிவிட்டு, உங்களுக்கு எட்டு மணிக்குப் போன் செய்கிறேன்...!" என்றாள் குரலில் துள்ளலுடன்.

"ஓ.கே. ஹாவ் எ நைஸ் டே... ஐ அம் வெயிட்டிங் ஃபார் யுவர் கால் ஷைலு..." என்று போனை வைத்து விட்டு, ஜாக்கிங் போக ரெடியானான்.

'எப்போது மணி ஏழாகும்... சுரேஷிடம் கார்த்திக் வந்ததைச் சொல்ல வேண்டும்... அவனை நேரில் போய்ப் பார்க்க வேண்டும்!' என்று மனது இனிதாகப் பரபரக்கத் துடித்துக் கொண்டிருந்தவள், நேரத்தைப் போக்கத் தோட்டத்தில் இறங்கினாள். தோட்டம் என்றால் சாதாரண மானது அல்ல... பெரிதாக இதற்கென்று ஒரு பிளாட்டையே வளைத்துப் போட்டிருந்தார் சுரேஷின் தந்தை.

கணவன் மனைவி இருவருக்குமே பூக்கள் மீது அலாதி விருப்பம் என்பதால், எல்லா வகை ரோஜாக்

களும், பவழம், குண்டு, ராமபாணம், முல்லை, நித்திய மல்லி, கனகாம்பரம் என்று பார்த்துப் பார்த்துப் பராமரித்து வரும் அந்தத் தோட்டத்தில், காலை நேரத்தில் நடப்பதற்கு ஷைலுவுக்கு எப்பவுமே பிடித்தமான ஒன்று. அந்தத் தோட்டத்தில் நுழைந்தால் நேரம் போவதே தெரியாது. ஆனால், இன்று அங்கேயே நேரத்தை நெட்டித் தள்ள வேண்டியதாகி விட்டது.

ஒரு வழியாக ஏழு மணி ஆனதும் சுரேஷ் ஜாக்கிங் முடித்து, குளித்து டிரஸ் செய்து கொண்டு வந்தவனுக்கு, ஷைலுவின் முகத்திலிருந்த அளவில்லாத மகிழ்ச்சிக்குக் காரணம் புரியாமல் பார்த்தவனிடம், வெட்கத்துடன் விஷயத்தைச் சொன்னதும், சுரேஷுக்கு ஒரே ஆச்சரியம்.

நேற்று நைட்தான் ஷைலு போன் செய்திருப்பாள், அதற்குள் அவன் இங்கே வந்து தங்கிப் போன் செய்து காத்திருக்கிறான் என்றால், அவன் எந்த அளவுக்கு ஷைலுவை நேசிக்கிறான் என்ற வியப்பு.

"என்ன சுரேஷ் யோசனை...? இப்போது உங்களுக்கு வேலை இருக்கிறதா...? கார்த்திக்கை எப்போது போய்ப் பார்க்கலாம்...?" என்ற அவளின் ஆவல் கலந்த அவசரத்தைக் கண்டு சிரித்தான்.

"ஓ.கே...ஓ.கே... ரிலாக்ஸ். நான் என் வேலையை இப்போது கொஞ்சம் தள்ளி வைத்து விட்டு உன்னுடன் வருகிறேன், நீ போய் ரெடியாகி வா...!" என, அவனுக்கு நன்றிப் புன்னகையைப் பரிசளித்து விட்டுச் சென்றவள்,

இளம் பச்சையில் கோல்டன் கலரில் பூப் போட்ட பிரிண்டட் சில்க் புடவையும் அதற்கு மேட்சாகக் கோல்டன் கலர் ஹாப் சில்க் ப்ளவுஸும் அணிந்து வெளியே வந்த போது, சுரேஷுக்கு அவள் தங்கப் பதுமையாகத் தெரிந்தாள்.

ஷைலு அத்தையிடம் சொல்லிக்கொண்டு கிளம்ப, அவள் கூந்தலில் நித்திய மல்லிப் பூவை வைத்ததும் அவரிடம் விடைபெற்றுச் சொல்லி விட்டுக் காரில் செல்லும் போது "ஏன் ஷைலு... காதலுக்கு இவ்ளோ சக்தி இருக்கா?" என்றான் குறும்பாக.

அந்தக் கேள்வியின் உள் அர்த்தம் புரியாமல் அவன் முகத்தைக் கேள்வியாகப் பார்க்க, "நீ எங்கள் வீட்டுக்கு வந்த இந்தப் பத்து நாளில் இதுவரைக்கும் இப்படி ஒரு மலர்ச்சியை உன் முகத்தில் பார்த்ததே யில்லை..." என்றதும், ஒரு நிமிடம் வாடினாலும், கார்த் திக்கின் நினைவில் முகம் வெட்கப் புன்னகை பூசிக் கொண்டது.

அவளின் வெட்க முக தரிசனத்தைக் கண்டு கனிவுடன், "நீ கடைசிவரைக்கும் இப்படியே இருக் கணும்... அதுதான் என் ஆசை...!" என்ற அன்பான வார்த்தைகள் அவள் மனதில் சில்லென்று பனியைப் போலப் படர,

"தேங்க்ஸ் சுரேஷ்!" என்றாள் மெல்லிய குரலில்.

"சரி... நாம் வருவதை அவருக்குப் போன் செய்து சொல்லி விட்டாயா?" என்ற சுரேஷின் கேள்விக்கு,

"ம்ம், சொல்லிட்டேன்... நமக்காகக் காத்துக்கிட்டு இருப்பார்..." என்றவளின் கண்கள் கனவில் மிதக்க,

'ம்ம்... ஹூ ஆர் யூ மேன் கார்த்திக்... எனி ஹவ் யூ ஆர் வெரி லக்கி!' என்ற எண்ணங்களோடு சுரேஷின் வண்டி ஹோட்டல் சவேராவை அடைந்தது.

"நான் காரைப் பார்க் செய்து விட்டு வருகிறேன். நீ போ ஷைலு!" என்றதும், தயக்கத்துடன் தலையாட்டி விட்டு உள்ளே சென்றவள், ரிசப்ஷனில் இவளுக்காகக் கையில் பொக்கேவுடன் காத்திருந்த கார்த்திக்கைக் கண்டதும் முகம் புன்னகையில் குளித்தது.

தன் இனியவளைக் கண்டதும் வேகமாக நெருங்கிய கார்த்திக் "ஹாய் ஸ்வீட்டி... யூ ஆர் ஆல்வேஸ் வெல்கம்!" என்று சிரித்து பொக்கேவைக் கொடுத்துக் கண்ணடித்ததும் ஷைலுவுக்கு அவனைப் பார்த்த சந்தோஷத்திலும், கண்ணடித்ததிலும் முகம் சிவந்து குனிந்து சிரித்தாள்.

காரைப் பார்க் செய்து விட்டு ஹோட்டல் படியேறி வந்த சுரேஷுக்கு, ஷைலுவுடன் சிரித்துப் பேசிக் கொண்டிருந்த கார்த்திக்கைப் பார்த்ததும் நம்ப முடியாத பிரமிப்பு மனதில்.

'இவன் நம் ப்ரெண்ட் கார்த்திக் தானே! இவனா ஷைலுவோட லவ்வர்...?' என்று வியந்து கொண்டே வந்தவனை ஷைலு பரஸ்பரம் இருவருக்கும் அறிமுகப் படுத்த, இருவர் பார்வையும் ஓர் நேர்கோட்டில் சந்திக்க வும், இருவர் மனதிலும் சொல்ல முடியாத ஆனந்தம்.

"ஹாய் கார்த்திக்... வாட் எ ப்ளசென்ட் சர்ப்ரைஸ். ஐ கான்ட் ப்லீவ் மேன். நீ தானா... நீயே தானா...?" என ஆர்ப்பாட்டமாகக் கட்டிக்கொண்டான். கார்த்திக்கும் அவனை அணைத்தபடி,

"நான் நினைக்கவே இல்லை சுரேஷ்... நீ ஷைலுவின் அத்தை மகனாக இருப்பாய் என்று...!" என்று ஆச்சரியத்துடன் கூறவும், இருவரையும் பார்த்து விழித்துக் கொண்டு இருந்த ஷைலுவைப் பார்த்ததும் சுரேஷுக்குச் சிரிப்பு வந்தது.

அவள் முகத்தின்முன் சொடக்குப் போட்டு, "ஹலோ... எங்கே இருக்கீங்க...?" என்று கேலியாகக் கேட்க,

தன்னைச் சுதாரித்து, "நீங்க ரெண்டு பேரும் எப்படி...?" என்று இழுத்தாள்.

கார்த்திக் நண்பனின் தோள்மீது கையைப் போட்டபடி சிரித்துக் கொண்டே, "ஷைலு, இவன் என் காலேஜ் மேட். நானும் இவனும் இங்கேதான் லயோலா கல்லூரியில் மூன்று வருடம் ஒன்றாகப் படித்தோம். அப்புறம் அண்ணா யுனிவர்சிட்டியில் இரண்டு வருடம். அப்புறம் இவன் மேல் படிப்புக்காக டெல்லிக்குப் போய் விட்டான்... நான் அமெரிக்கா போய் விட்டேன். அத்தோடு இப்போதான் சந்திக்கிறோம்!" என்று சொன்னதைக் கேட்டதும் ஷைலுவுக்கு மனதிற்குள் சாமரம் வீசியது போல் இருந்தது.

"கிட்டத்தட்ட ஐந்து வருடம் ஒன்றாகப் பழகி இருக் கிறீர்கள்... அப்புறம் ஏன் நடுவில் பார்க்கவில்லை...? தொடர்பு கொள்ளவில்லை...?" என்ற ஷைலுவின் சந்தேகத்தை நிவர்த்தி செய்யும் விதமாக,

"நாங்கள் இருவரும் ஒன்றாக இருந்தோம். ஆனால், எங்கள் இருவருக்குமே லட்சியம்தான் அப்போது பெரிய தாக இருந்தது. இவனுக்குக் கம்ப்யூட்டர் லைனில் சாதிக்க வேண்டும் என்ற ஆசை. எனக்கு விமானத் துறையில் ஏதாவது ஒரு பிரிவில் வேலை செய்ய விருப்பம். அதனால் அவரவர் படிப்பில் பிசியாகி விட்டோம்!" என்று சுரேஷ் சொல்லி முடிக்க, கார்த்திக் தொடர்ந்தான்.

"ஆமாம் ஷைலு... அதன் பிறகு படிப்பு முடிந்து வந்ததும் சாப்ட்வேர் கம்பெனி ஆரம்பித்து, அதன் வளர்ச்சியிலே வருடம் ஓடிவிட்டது...!" என, அவனைத் தொடர்ந்து சுரேஷ்,

"நானும் என் கம்பெனியிலே பிஸியாகி விட்டேன். அதனால் தொடர்பு கொள்ள முடியவில்லை..." என்று சொல்லி முடித்தார்கள்.

"அதனால் என்ன...? இப்போதுதான் நாங்கள் மறுபடியும் ஒன்றாகப் போகிறோமே!" என்று சுரேஷ் உதட்டுக்குள் புன்னகைக்க, ஷைலு விழிக்க, கார்த்திக் சிரித்துக் கொண்டே,

"ஆமாம்... உன்னுடைய உட்பீ ஹஸ்பென்ட் நான் தானே! அதைத்தான் சொல்கிறான்..." என்று குறும்பாகப்

புருவத்தை உயர்த்த, ஷைலுவுக்குக் குப்பென்று முகம் சிவந்து விட்டது நாணத்தில்.

அதை ரசித்துக் கொண்டே இருவரையும் ரூமிற்கு அழைத்துச் சென்று, ரூம் சர்வீஸில் காபி ஆர்டர் செய்தவன்...

"சோ... நீதான் ஷைலுவோட மாமாவா...? உன்னிடம்தான் நான் பேச வந்தேனா...?" என்று கேலியாகக் கூறி,

"மாமா சார்... மாமா சார்... உங்க அத்தைப் பெண்ணை எனக்குக் கல்யாணம் பண்ணிக் கொடுங்க சார்!" என்று போலியான பணிவுடன் கையைக் கட்டிக் கொண்டு கேட்டான்.

அவனின் பாவனையில் சுரேஷ் எழுந்து வந்து அவன் வயிற்றில் செல்லமாக ஒரு குத்து விட்டு, "ராஸ்கல், கிண்டலா பண்றே? நான் சம்மதம் சொல்ல மாட்டேன். அப்புறம் நீ தேவதாஸ் மாதிரி தாடி வெச்சுக்கிட்டு வாழ்வே மாயம்னு பாட வேண்டியதுதான்!" என்று வாரினான் பதிலுக்கு.

இருவரின் கலாட்டாக்களை மன நிறைவுடன் வேடிக்கைப் பார்த்துக் கொண்டு அமர்ந்திருந்த ஷைலுவுக்கு, மனதில் சந்தோஷ மழையின் சாரல்.

கார்த்திக் முடிக்குமுன், "ஏன்... அத்தை மகன் என்றவுடன் முரட்டு மீசை, மைனர் சங்கிலி, மல்ஜிப்பா போட்டுக் கொண்டு எதிர்பார்த்தாயா?" என்ற கேலிக்குக்

கார்த்திக் சிரிக்க, "பின்னே என்னடா பயம்? உன்னைப் போட்டுத் துவைத்து எடுத்து விடுவார்கள் என்றா...?" என்று மறுபடியும் சீண்டினான்.

சுரேஷின் கேலிக்கு மனம் நிறைந்து சிரித்து விளையாட்டாக ஒரு விரல் காட்டி மிரட்டி, "நான் எனக்காகப் பார்க்கவில்லை யடா... ஷைலுவுக்கு பிரச்சனை வந்து விடுமோ என்ற பயம்தான்!" என்ற நண்பனின் பேச்சில் சுரேஷின் கேலி மறைந்து முகம் இறுகியது.

"யூ ஆர் கரெக்ட்... என் மாமா அவ்வளவு சீக்கிரம் காதலுக்குச் சம்மதம் சொல்ல மாட்டார். அதுவுமில்லாமல் நான்தான் மாப்பிள்ளைன்னு முடிவு வேற செய்து விட்டார். இதை முதலில் சமாளிக்கணும், அதன் பிறகுதான் மாமா விடம் பேச முடியும்!" என்றான் யோசனையாக.

பேச்சின் நடுவே காபி வர, குடித்துக் கொண்டே, "சொல்லு சுரேஷ்... இந்தப் பிரச்சனையை எப்படிச் சமா ளிக்கப் போறே? ஷைலுவுக்கு இதில் சம்மதம் இல் லைன்னு சொன்னால் உங்க மாமாவுக்கு அவள் மேல் கோபம் வந்து விடும்!" என்னும் பொழுதே சுரேஷ் இடை வெட்டினான்.

"இப்போது இதைப் பற்றி யோசிக்க வேண்டாம் கார்த்திக். நான் ஏற்கெனவே ஷைலுவிடம் சொன்ன மாதிரி இரண்டு மாதம் கழித்துப் பேசுகிறேன்...!" என்றவன், சம்மதமாய் ஷைலுவின் முகத்தைப் பார்த்தான்.

"ஓ.கே. சுரேஷ், முதலில் இரண்டு அக்காவுக்கும் கல்யாணம் ஆகட்டும்..." என்றவளுக்கு,

"நீயே சொல் என்றாலும் இப்போது சொல்ல மாட்டேன். அந்த இரண்டு பெரிய பிசாசுகளுக்கும் கல்யாணம் முடிந்த பிறகு சொன்னால், ஒரு வேளை மாமா சம்மதிக்கலாம்!" என்று பேசிக்கொண்டே சென்ற வனை இடைமறித்தான் மற்றவன்.

"ஏன் சுரேஷ் அவர்கள் இரண்டு பேரும் இந்தளவு மோசமாய் பிஹேவ் செய்கிறார்கள்? ஷைலு அவர்கள் கூடப் பிறந்த தங்கைதானே!" என்றான் சந்தேகமாக.

நண்பனின் கேள்விக்கு ஒரு பெரிய மூச்சை எடுத்து, "இந்தக் கேள்வியை நீ மட்டுமில்லை. அவர்கள் ஷைலுவிடம் நடந்து கொள்ளும் முறையைப் பார்த்து நிறையப் பேர் கேட்டு விட்டார்கள். என்னவென்று சொல் வது. மாமாவிற்குப் பிறந்த மூத்த பெண்கள் அவர்கள்... அதுவும் ட்வின்ஸ் என்பதால் ஏகச் செல்லம்.

"எந்த நேரத்தில் என்ன கேட்டாலும் கிடைக்கும். கிட்டத் தட்ட எட்டு வருடம் அந்த சுகபோகத்தை அனுபவித்த வர்களுக்கு, ஷைலு பிறந்ததும் அதெல்லாம் கொஞ்சம் குறைய ஆரம்பிக்க, இதற்கெல்லாம் காரணம் ஷைலு தான் என்ற ஆத்திரம் அவளின் மேல் வெறுப்பாய் மாறி யது. அதுவும் ஷைலு அவர்களை விட அழகாகவும், நல்ல கலராகவும் இருக்க, இன்னும் ஆத்திரமும், வன்ம மும் வளர்ந்து கொண்டே வந்தது.

"ஷைலுவும் அவர்களின் பொறாமைக்குத் தீனி போடும் வகையில் பொறுமை, நிதானம், சொந்தங்களை உபசரிக்கும் பாங்கு, மரியாதையான பேச்சு என மொத்த உருவமாக வளர்ந்துவிட, இதெல்லாம் சொந்தங்களிடம் இடையே இவள் மேல் அன்பையும் மரியாதையும் வளர்த் தது.

"ஷைலு மாதிரி நீங்கள் இல்லையேன்னு சொந் தங்கள் பேசவும், அதற்கு இவள்தான் காரணம் என்கிற ஆத்திரம் இருவரையும் இவளுக்குப் பரம விரோதியாக்கி விட்டது.

"ஒரு நிமிடம் யோசித்திருக்கலாம். அதிகாரத்தாலும் பணத்தாலும் யாரையும் வளைக்க முடியாது. குணத்தால் மட்டுமே ஒருத்தரைத் தன்பால் ஈர்க்கலாம்னு. ஆனால் அவர்களோ எதையும் புரிந்து கொள்ளாமல், தன் குணத்தை மாற்றிக் கொள்ள விரும்பாமல் இவளின் மேல் துவேஷத்தைக் காட்டித் துன்புறுத்துவார்கள்.

"கொஞ்ச நாளைக்காவது இவள் சந்தோஷமாக இருக்கட்டுமே என்ற எண்ணத்தில் ஒவ்வொரு விடுமுறைக் கும் எங்கள் வீட்டுக்கு அத்தை அனுப்பிவிடுவார்கள். எங்கள் வீட்டில் பெண் குழந்தை இல்லையாதலால் ஷைலுதான் செல்லம்..." என்றான் மனபாரத்துடன்.

சுரேஷ் சொல்வதை தலை குனிந்தபடி கேட்டுக் கொண்டிருந்த ஷைலுவின் கண்களில் தன்னிரக்கத்தில் கண்ணீர் குளம் கட்டியது. அவன் அமைதியாக அமர்ந்

திருப்பதைக் கண்ட இருவரும் புரியாமல் பார்வைப் பரிமாற்றம் செய்து கொள்ள, கார்த்திக் எழுந்து வந்து அவள் பக்கத்தில் அமர்ந்து அவளின் கையை எடுத்துத் தன் கையில் சிறையெடுத்தான்.

அப்பொழுதும் அவள் அமைதி காக்கவே, "என்னடா அமைதியா இருக்கே?" என்று ஒரு விரலால் அவள் முகத்தை நிமிர்த்த, அவள் கண்களில் நீரைக் கண்டதும் இருவருமே ஏக காலத்தில் பதறிப் போனார்கள்.

சுரேஷ் அவளருகில் மண்டியிட்டு அமர்ந்து, "நீ ஏன் அவர்களை நினைத்து அழுகிறாய்? கடவுள் ஒரு கதவைச் சாத்தினால் இன்னொரு கதவைத் திறப்பார். அந்த மாதிரி உனக்கு நல்ல சகோதரிகள் இல்லாமல் இருக்கலாம். ஆனால் ஒரு நல்ல எதிர்காலத் துணையாய் கார்த்திக் உனக்குக் கிடைச்சிருக்கான். நிச்சயம் நல்ல துணையா இருப்பான்..." என்றான் ஆறுதலாக.

அவனைத் தொடர்ந்து, "அவர்களுக்கு உன் அருமை தெரியவில்லை. ஒரு நாள் கண்டிப்பாகப் புரிந்து கொள்வார்கள். அழாதேடா ப்ளீஸ்..." என்ற கார்த்திக்கின் ஆறுதலுக்கும் ஷைலுவின் கண்ணீர் செவி சாய்க்க வில்லை.

"அவர்கள் புரிந்துகொள்ளும் வரை நீ இப்படி உன்னையே அழுகையில் கரைத்துக் கொள்ள வேண்டுமா? இப்போது உனக்காகக் காத்திருக்கும் சந்தோஷத்தை அனுபவி ஷைலுமா!" என்று எடுத்துச் சொல்லியும், கண்ணீர் நிற்காமல் இருப்பதைக் கண்டு சற்று எரிச்சல்

கலந்த கோபத்தில், "அவர்கள் உன் மேல் அன்பாக இல்லை என்று கவலைப்பட்டுக் கண்ணீர் விடும் அள விற்கு உன் கண்ணீருக்குத் தகுதியானவர்கள் அல்ல. அதை நீ மறக்காதே!" என்றான் சீறலாக.

அவனின் சீற்றத்தில் சட்டென்று கண்ணீர் நின்று சுரேஷை விழி அகல விதிர்ப்புடன் நோக்க, கார்த்திக் அவளின் பார்வையைப் புரிந்து அவளின் கையை மென்மையாக அழுத்தி, "நீ அழுவதைத் தாங்க முடியாத ஆதங்கத்தில் கோபமாகப் பேசிவிட்டான். நீ பயப்படாதே..." என்றான் சமாதானம் செய்யும் விதமாக.

"சாரிம்மா... நாங்கள் எல்லோரும் உனக்கு இருக்கும்போது உன்னைப் பற்றிக் கவலைப்படாதவர் களை நினைத்து நீ ஏன் கவலைப்பட வேண்டும் என்ற ஆத்திரத்தில் பேசிவிட்டேன்," என்ற சுரேஷின் கனிவான பேச்சில் ஷைலுவின் முகம் தெளிந்து ஒரு குட்டிப் புன்னகை எட்டிப் பார்த்தது.

"அப்ப்பாஆ... இதுதான் நல்லா இருக்கு..." என்று அவளின் கன்னத்தைத் தட்டிவிட்டு, "சரி கார்த்திக், மணி பத்தாகிவிட்டது. நான் ஆபீஸ் போய்விட்டு ஐந்து மணிக்கு வருகிறேன். அதுவரைக்கும் நீங்க பேசிக்கிட்டு இருங்க..." என்று எழுந்தவன், ஷைலுவிடம் சொல்லி விட்டுக் கிளம்பி னான்.

சுரேஷுடன் வெளியே வந்த கார்த்திக், "ஏண்டா ஷைலுவிடம் இவ்வளவு ஹார்ஷா பேசினே? பாரு, அவ பயந்துட்டா!" என்றான் சற்றுக் கோபத்துடன்.

"இல்லை கார்த்திக்! அவ அழுதால் எனக்குக் கஷ்டமா இருக்கு. அதை நிறுத்தத்தான் இப்படிப் பேசினேன். நீ ஏதும் தப்பா நினைக்காதே. அவள் சின்ன வயசிலிருந்தே நிறைய மனதளவில் வேதனைகளை அனுபவிச்சிட்டு வர்றா. அது அவ்ளோ சீக்கிரம் சரியாகாது. நீதான் அவள் மனசில் இருக்கிற வேதனையை மறக் கடிச்சுச் சந்தோஷமா மாத்தணும். செய்வியா கார்த்திக்!" என்று அவனின் அன்பை ஷைலுவுக்காக யாசகமாய் வேண்டி நின்றான்.

"ஹேய்... என்ன இது முட்டாள்தனமாக் கேட்கிற! அவ என் உயிர்டா. எந்தக் கஷ்டமும் அவளுக்கு வராம நான் பத்திரமாப் பார்த்துக்குவேன். ஆனால் கல்யாணம் வரை நீதான் பார்த்துக் கொள்ள வேண்டும். கல்யாணத் திற்குப் பிறகு அந்த வேதனையைக் கண்டிப்பா அவ மனசிலிருந்து நீக்கிடுவேன். கவலைப்படாதே..." என்று உறுதியளித்தான்.

கார்த்திக்கின் உறுதியான பேச்சில் மனம் தெளிய, "தேங்க்ஸ் கார்த்திக், இது போதும் எனக்கு..." என்றவன், "சரி, நான் வரேன். நீ எங்கேயாவது ஷைலுவை அழைச் சிக்கிட்டுப் போவதென்றால் போ. நான் சாயங்காலம் வந்து உங்களுடன் ஜாயின் பண்ணிக்கிறேன்..." என்று காரைக் கிளப்பிக் கொண்டு சென்றான்.

நண்பனை வழியனுப்பி விட்டு, ரூமுக்குச் சென் றவன், ஜன்னல் பக்கம் திரும்பி நின்றிருந்த ஷைலுவையே கண்ணிமைக்காமல் யோசனையுடன் பார்த்துக் கொண் டிருந்தான்.

முதுகில் ஊசி குத்தியதைப் போல உணர்ந்தவள் திரும்பிக் கார்த்திக்கைப் பார்த்துப் பார்வையாலே என்ன என்று கேட்க, அவளுடைய கவிதை பேசும் விழிகள் அவ னுக்கு ஆயிரம் கதைகளைச் சொல்ல, அதன் அழகில் சொக்கி நின்றான்.

மெல்ல அவளருகில் வந்து அவளைச் சோபாவில் அமர வைத்து, அவளின் கையை எடுத்துக் கார்த்திக் தன் கையுடன் கோர்த்துக் கொள்ளவும், ஷைலுவுக்கு உடம்பில் மின்சாரம் பாய்ந்த மாதிரி ஒரு இனிய அதிர்வு.

அதைக் கவனித்தவன், "என்னடா, ஏன் ஒரு மாதிரியா இருக்கே?" என்று பூஞ்சிறகால் வருடுவது போல் கேட்கவும், கண்ணை மூடிக் கொண்டு ஒன்றும் இல்லை யென்று தலையசைத்தான்.

மூடிய அவள் கண்களில் முத்தமிட்டு கார்த்திக் அவள் விரல்களை வருடியவாறே, "இப்படியே இருந்துட லாம் போல் இருக்குடா. உன்னைப் பார்க்காத இந்தப் பத்து நாட்களில் சரியான தூக்கம் இல்லை. சாப்பிடவும் பிடிக்கவில்லை. எனக்கே ஆச்சரியமாக இருக்கிறது, என் நிலைமையை நினைத்து. அடசலன்ட் பருவத்திலும் கூட என் லட்சியம்தான் பெரிதாக இருந்தது. காதல் மேல் எல்லாம் ஈர்ப்பு இருந்ததே இல்லை" என, ஷைலுவின் விழிகள் அவன் முகம் நோக்கி மலர்ந்தது பரவசத்தில்.

"ஆமாம் ஷைலு, மூன்று மாதம் முன்பு நான் இப்படி இருப்பேன்னு யாராவது சொல்லியிருந்தால் கூட நான் சிரித்திருப்பேன். ஆனால் இப்போது நான் ஏன் ஷைலு

இப்படி மாறிவிட்டேன்" என, கார்த்திக் தாபத்துடன் பேசுவதைக் கேட்டுக் கொண்டே அவன் தோள்மீது தலை சாய்த்து அமர்ந்திருந்தாள்.

"உன்னிடம் என்னை ஈர்த்தது நிச்சயம் அழகு இல்லை. ஏதோ ஒன்று, அது என்னவென்று சொல்லத் தெரியவில்லை. நீ என் மனைவியாக வந்தால் நான் சந்தோஷமாக இருப்பேன் என்றில்லை. இப்படியே உன்னைத் தினம் பார்த்துப் பேசிக் கொண்டிருந்தாலே போதும். என் வாழ்நாளை சந்தோஷமாகக் கழித்துவிடுவேன்...." என்றான் காதலுடன் அவள் முகத்தை நோக்கி.

அவனின் பேச்சைக் கேட்டு, அவன் முகத்தையே பார்த்துக் கொண்டிருந்தாள் பேசும் மொழி அறியாதவள் போல். சிறிது நேர மௌனத்திற்குப் பிறகு, "சுரேஷ் சொன்ன மாதிரி நான் ரொம்பவே குடுத்து வைத்தவள் தான். உங்களை மாதிரி அன்பான எதிர்கால கணவர், மாமியார் மாமனார் கிடைக்க..." என்று சிறு இடைவெளி விட்டு, "ஐ லவ் யூ சோ மச் கார்த்திக்" என்று கண்களில் காதல் வழிய, அவன் கைகளை எடுத்துத் தன் இரு கன்னத்திலும் வைத்துக் கொள்ள, அவளின் மென்மையான தொடுகையால் உணர்ச்சிவசப்பட்டவனாக அவளை அருகில் இழுத்து அவள் இதழில் முத்தமிட்டான்.

சட்டென்று ஷைலுவுக்குத் தன் பெண்மை விழித்துக் கொள்ள அவனிடமிருந்து விலக, அவளின் உணர்வுகளைப் புரிந்து கொண்டவன், தன்னிடமிருந்து விலக்கி விழியெடுக்காமல் பார்த்துக் கொண்டு நின்றான்.

"என்ன கார்த்திக்... எவ்வளவு நேரம் இப்படியே பார்ப்பீங்க?" என்றவளுக்கு, வெட்கத்தில் வார்த்தை களுக்குப் பதில் வெறும் காற்றுதான் வந்தது.

அவளின் வெட்கத்திற்கு வசீகரமாய்ச் சிரித்து, "பேசும் வார்த்தையை விடப் பேசாத வார்த்தைகளுக்குச் சக்தி அதிகம். அதுவும் காதலுக்கு மௌன மொழிதான் சிறந்தது" என்று சொல்லி, அவள் கன்னத்தில் தட்டி, "சரி வா, வெளியே போகலாம்..." என்றான்.

மயக்க உணர்வுகளிலிருந்து விடுபட்டு, மென்மை யாகப் புன்னகைத்து, அவனுடன் கிளம்ப, ரிசப்ஷனிஸ்ட் டிடம், நாளை காலை ஐந்து மணிக்குப் பெங்களூர் ஏர் டிக்கெட்டும், ஹோட்டல் ரூமும் புக் செய்யச் சொல்லிவிட்டு ஷைலுவுடன் கிளம்பினான்.

"ஷைலு, நீ இதுவரைக்கும் பூ வைத்து நான் பார்த்ததே இல்லை. இன்றைக்கு என்ன திடீரென்று பூவெல்லாம், அமர்க்களமா வந்திருக்கே... என்னைக் கவுத்துடாதேடா. ஏற்கெனவே உன்னைப் பார்த்தாலே நான் என் கட்டுப்பாட்டிலே இருக்க முடிவதில்லை. இப்படி வேற வந்தாய் நான் காலிதான்..." என்றவனின் குறும்பிற்குச் சிரிப்புடன் தலையைக் குனிந்தவளுக்கு ரூமில் நடந்த விஷயங்களை நினைத்து முகம் மருதாணி யைப் பூசிக்கொண்டது.

அவளின் முகச் சிவப்பு, கார்த்திக்கின் சிரிப்பை மேலும் பெரிதாக்க, உல்லாசமாய்ச் சிரித்தவனின் தோளில் தட்டி, "சும்மா இருங்க கார்த்திக்..." என்றாள் கொஞ்சலாக.

அவளின் கொஞ்சலை ரசித்துச் சிரித்து, "ஹேய், யூ லுக் வெரி கார்ஜியஸ். ஐ லைக் இட். ஒரு தேவதையே என்கூட காரில் வர மாதிரி இருக்கு..." என்றான் கிறக்க மான குரலில்.

அவனின் புகழ்ச்சியில் மேலும் வெட்கத்தைக் கொண்டு வர, "ஐயோ கார்த்திக், ப்ளீஸ் போதும். வேற ஏதாவது பேசுங்க..." என்று கெஞ்சவும், தலையை ஒரு கையால் கோதிக்கொண்டே சிரித்தவன்,

"சரி... இப்போ நம்ம எதிர்காலத்தைப் பற்றிப் பேசலாமா?" எனக் கேட்டுவிட்டு, "நம் கல்யாணத்திற்குப் பிறகு என்ன செய்வதாய் இருக்கிறாய்? ஐயாவோட அந்தப்புரத்திலே இருக்கிற ஐடியாவா? இல்லை, நம் கம்பெனியை நிர்வாகம் செய்யப் போகிறாயா?" என்றான் பாதி கிண்டலும், பாதி சீரியசாகவும்.

அவனின் முதல் பாதி கேள்விக்குச் சிரித்துவிட்டு, "எனக்கு வீட்டில் இருப்பதைவிட, ஆபீசில் வேலை செய் தால் நன்றாக இருக்கும் கார்த்திக்" என்ற அவளின் விருப்பத்தை மதித்து, "கண்டிப்பாக உன் ஆசையை நிறை வேற்றுகிறேன்..." என்றான் அவளின் கையை அழுத்தி.

முதலில் ஆபீஸ் சென்று அவளை ரெஸ்ட் ரூமில் அமர வைத்துவிட்டுத் தன் கேபின் சென்று வேலைகளை முடித்துக் கொண்டு வந்ததும், ஷைலுவின் விருப்பப்படி அஷ்டலக்ஷ்மி கோவிலுக்குச் சென்றார்கள்.

ஷைலு தன் பிரார்த்தனையை உருக்கமாகக் கடவுளின் முன் வைக்க, அவளையே பார்த்துக் கொண்

டிருந்த கார்த்திக், தரிசனம் முடிந்து பெசன்ட் நகர் பீச்சுக்குச் சென்று அமர்ந்ததும், "என்ன ஷைலு வேண்டிக்கிட்டே?" என்றான் ஆர்வம் தாங்காமல்.

மெல்லப் புன்னகைத்து, "அதெல்லாம் கார்த்திக் என்ற பெயருடையவரிடம் சொல்லக் கூடாதுன்னு ஐதீகம்..." என்று குறும்புடன் நமட்டுச் சிரிப்பு சிரிக்க,

"ஓ... இது மட்டும் சொல்லக் கூடாதா அல்லது..." என்று குறும்பாக இழுத்து, "கார்த்திக் என்பவன்கிட்ட ஐ லவ் யூ கூடச் சொல்லக்கூடாதா?" என்று பதிலுக்கு மடக்கினான்.

அவனின் குறும்பை ரசித்துச் சிரித்து, "ஹேய், ஆளை விடுங்கப்பா. உங்களிடம் என்னால் ஜெயிக்க முடியாது" என்று தோல்வியை ஒப்புக் கொண்டவள், "வாங்க கார்த்திக், கடல் அலையில் நடந்துவிட்டு வரலாம்" என்று அழைத்தாள் பேச்சைத் திசை மாற்ற.

"தேவியார் அழைத்தார் என்றால் வராமல் இருப்பேனோ?" என்று குறும்பாகப் பேசிக்கொண்டே எழுந்து பேண்ட்டில் ஒட்டியிருந்த மணலைத் தட்டிவிட்டு ஷைலுவுடன் நடந்தான்.

அலையில் கொஞ்ச நேரம் விளையாடிவிட்டு அப்படியே அலையின் ஓரத்தில் நடக்க ஆரம்பிக்க, இருவர் கைகளும் தானாகக் கோர்த்துக் கொள்ள, தன்னை மறந்தவர்களின் மேல் ஒரு குழந்தை வந்து மோதவும்

சுயநினைவு வந்து சிரித்துக் கொண்டே காருக்குத் திரும்ப, கார்த்திக்கின் செல்போன் ரிங்கியது.

"ஷைலு இப்போ எப்படி இருக்காடா?" என்ற சுரேஷின் விசாரிப்பிற்கு,

"நவ் ஷீ இஸ் நார்மல் அண்ட் வெரி ஹேப்பி. வி என்ஜாயிங் எவ்ரி மொமென்ட்ஸ்..." என்றான் முகம் விகசிக்க.

"தட்ஸ் குட். என்ஜாய்..." என்றவனை,

"எங்களுடன் ஜாயின் செய்துக்கிறியா சுரேஷ்?" என அழைக்க,

"நோ வே. இங்கே நிறைய வேலை இருக்கு. ஈவினிங் மீட் பண்றேன்..." என்று போனை வைத்து விட்டான்.

சுரேஷிடம் பேசிவிட்டு தி.நகரில் மல்டி-குஷன் ரெஸ்டாரண்ட்டுக்குச் சென்று, "என்ன ஷைலு சாப்பிடு கிறாய்? சைனீஸ் வேண்டுமா அல்லது சவுத் இந்திய ஐட்டம்ஸ் அல்லது கான்டினெண்டல் வேண்டுமா?" என்றான்.

"எனக்கு எதுவா இருந்தாலும் ஓ.கே. கார்த்திக்..." எனவும், பேரரை அழைத்துச் சைனீஸ் உணவு ஆர்டர் செய்துவிட்டு, "நீ சமைப்பாயா ஷைலு?" என்றவனுக்கு,

"ம்ம்... கொஞ்சம் சமைப்பேன்..." என்றவள், "உங்களுக்குச் சமையல் பத்தித் தெரியுமா கார்த்திக்?" என்றாள் ஆர்வமாக.

"ம்... நல்லாச் சுடுதண்ணீர் வைப்பேன்..." என்று சிரிக்காமல் கேலியாகக் கூற,

ஷைலு சிரித்துவிட்டு, "ஆமாம். ரொம்பவே கஷ்டமான வேலைதான்..." என்று கிண்டல் செய்து விட்டு, "நீங்கள் தனியாகத்தானே அமெரிக்காவில் இருந்தீர்கள். அப்போது எப்படி சாப்பாட்டுக்குச் சமாளித்தீர்கள்?" என்றாள் சந்தேகமாக.

"அது ஒரு கொடுமை. ஆரம்பத்தில் ரொம்பவே கஷ்டப்பட்டேன். மூன்று மாதம் டின் ஃபுட் வைத்துச் சமாளித்தேன். நாளடைவில் நாக்கே செத்துப் போச்சு. அதன் பிறகு என் நண்பன் ஒருவன் சொன்ன அட்வைஸ் படி கையைச் சுட்டு, காலைச் சுட்டு எப்படியோ சமைக்கக் கற்றுக் கொண்டேன்.

"அதன் பிறகு இந்தியா வந்ததும் கற்றுக்கொண்ட சமையல் மறந்து போச்சு. இங்கே சமையல் அறை எப்படி இருக்கும்னு கூடத் தெரியாது" என்றான் சிரிப்போடு.

கார்த்திக் சொல்வதைக் கேட்டுக் கொண்டே இருந்தவள் திடீரென்று அமைதியாகி விட, "என்ன பலமான யோசனை ஷைலு?" என்று கார்த்திக்கின் கேள்வியால் ஷைலுவின் யோசனை தடைப்பட,

"என்ன கேட்டீர்கள் கார்த்திக்?" என்றாள் புரியாமல்.

"ஹேய் என்னடா... நான் கேட்பது கூடக் காதில் விழாத அளவிற்கு, என்ன பிரச்சனை உனக்கு? என்னிடம் சொல்லக் கூடாதா?" என்றான் அக்கறையாக.

"ம்ச் நத்திங் கார்த்திக். இந்த மாதிரி உங்களுடன் நான் சென்னையில் சுற்றுவது என் குடும்பத்தில் உள்ளவர் களுக்குத் தெரிந்தால் என்ன ஆகும்னு நினைத்துப் பயமாக இருக்கிறது..." என்றவளின் கண்களில் பயம் வெளிப்படையாகத் தெரிய,

"ஹேய், தெரிந்தால்தானே! யார் சொல்லப் போகிறார்கள்? எந்தப் பிரச்சினை வந்தாலும் நானும், சுரேஷும் இருக்கிறோம். பயப்படாதே. என்ஜாய் திஸ் மொமென்ட்ஸ்டா..." என்றான், அவளின் கைகளை மென்மையாக அழுத்தி.

அவனின் வார்த்தைகள் மனதில் சற்றுத் தைரியம் கொடுத்ததால், அவள் முகத்தில் சிறிய புன்னகை குடியேற, "உங்கள் மேல் நம்பிக்கை இருப்பதால்தான் இப்படிக் கல்யாணத்துக்கு முன் உங்களுடன் வெளியில் வந்திருக்கிறேன்..." என்று முறுவலித்தாள் சூழ்நிலையைச் சகஜமாக்கும் விதமாக.

அவளின் கையை மீண்டும் அழுத்தி, "தேங்க்ஸ்டா!" என, அதற்குள் ஆர்டர் செய்த ஐட்டம்ஸ் வந்துவிடவே, இருவரும் பேசிக் கொண்டே சாப்பிட்டு முடித்து வெளியே வந்தார்கள்.

"இப்போ எங்கே போகலாம் ஷைலு?" என்ற வனிடம்,

"எனக்குத் தெரியலை. நீங்கள் சொல்லுங்க, எங்கே போகலாம்?" என்று அவள் திருப்பிக் கேட்கவும் சிரித்து விட்டு,

"உனக்குள் நிறையப் பயம் இருக்கிறது. நீ சகஜ மாகவே இல்லை. உன்னைக் கல்யாணத்திற்கு அப்புறம் நிறைய மாற்றணும்..." என்றவன், "ஆமாம். இதில் மட்டும் தானே பயம். கல்யாணத்திற்குப் பிறகு எனக்குப் பயமா இருக்குதுன்னு கிட்டே வராம போயிடுவியோ?" என்றான் கேலியாக.

"கல்யாணத்திற்கு அப்புறம் எனக்கு என்ன பயம்? உங்களுடன்தானே இருக்கப் போகிறேன். நீங்கள் என் னிடம் பயப்படாமல் இருந்தால் சரி..." என்று இதழுக்குள் சிரித்துக் கொண்டே கூறியவள், முகத்தை அவன் பார்க்கா வண்ணம் திருப்பிக் கொண்டாள்.

ஷைலுவின் தைரியமான பேச்சிற்கு ஆச்சரியத் துடன் அவள் முகத்தைத் திரும்பிப் பார்த்துவிட்டு, "நீ என்னை என்ன செய்தாலும் எனக்குச் சம்மதம்தான்..." என்று கண்ணடிக்கவும்,

அதற்கு வெட்கத்துடன் சிரித்துவிட்டு, மெதுவான குரலில், "கார்த்திக், இது ரோடு. யாராவது பார்க்கப் போகிறார்கள்..." என்று எச்சரித்தவளை,

"பார்க்கட்டும். யாராவது கேட்டால் ஷீ இஸ் மை கேர்ள் என்பேன்..." என்று அவள் தோளின் மேல் கையைப் போட்டுக் கொண்டான் கூலாக.

"ம்ஹூம்... இன்றைக்கு ஐயா பயங்கரமான ரொமான்ஸ் மூடில் இருக்கிறார் போலிருக்கிறது..." என்று சிரித்தவளுக்கு,

"பின்னே... மனசுக்குப் பிடித்த பெண்ணோட வெளியில் வந்தால் சந்தோஷமாகத்தான் இருக்கும்..." என்று பதிலடி கொடுத்தான்.

அவனின் பதில் சிரிப்பை வரவழைக்க, மௌனமாகச் சிரித்தவளிடம், "சுரேஷ் வருவதற்கு எப்படியும் ஐந்தரை ஆகிவிடும். அதுவரை இந்த வெயிலில் சுற்றுவதை விட மாயாஜால் போய் ஹிந்தி ஃபிலிம் பார்க்கலாமா?" என, ஷைலு ஒத்துக்கொண்டதும் மாயாஜாலுக்குப் போனார்கள்.

'குச் குச் ஹோத்தா'வில் ராணி முகர்ஜியும், ஷாருக்கானும் விழுந்து விழுந்து காதல் செய்வதைக் கண்டு கார்த்திக் சிரித்துக் கொண்டே, "காதல் வந்தாலே இலக்கணம் இல்லாமல் போய்விடுகிறது. இவர்கள் படத்தில் இப்படிக் காதல் செய்வது மாதிரி நடிக்கிறார்களே, நிஜத்தில் தன் மனைவியை எப்படிக் காதலிக்க முடியும்? என்றைக் காவது ஒரு நாள் இந்த நடிப்பு அவர்கள் வாழ்வில் காலை வாரி விட்டுவிடாது..." என்று கேட்க,

"இருக்கலாம். அதனால்தான் என்னவோ சினி ஆக்டர்ஸ் மத்தியில் டைவர்ஸ் அதிகமாக இருக்கிறது" என்றவள், பெருமூச்சை விடுத்தாள்.

"நீ ஏன்டா இப்படி பெருமூச்சை விடறே, நான் நடிகனில்லையே?" என்று சீண்ட,

"உங்களுக்கு உதை கிடைக்கும்...." என ஒரு விரலால் பத்திரம் காட்ட, அந்த விரலைப் பிடித்துக்

கொண்டு, "உதையைத் தவிர வேறு ஏதாவது தந்தால் நல்லா இருக்கும்..." என மறுபடியும் சீண்டினான்.

ஷைலு சிரித்துக் கொண்டே, "யூ நாட்டி பாய்... என்று அவன் தோளில் சாய்ந்து கொள்ளவும், அவளைத் தோளோடு அணைத்துக் கொண்டே படம் பார்க்க, அதிலே ஆழ்ந்து விட்டனர்.

சுரேஷின் கால் வந்ததும் இருவரும் மாயாஜாலை விட்டு வெளியே வர, "எப்படிப் போச்சு பொழுது? நேரமே போதாதே..." எனக் கேலி செய்ய... ஷைலு வெட்கத்தில் தலை குனிய, கார்த்திக் அவள் கையை இறுகப் பிடித்துக் கொண்டான்.

"சாப்பாடு கிடைக்காதவனுக்கு ஒரு ரொட்டித் துண்டு கிடைத்தால் எவ்வளவு சந்தோஷப்படுவானோ அந்த மாதிரி இந்த ஒரு நாள் எங்கள் வாழ்க்கையில் மறக்க முடியாத நாள்டா. தேங்க்ஸ் ஃபார் எவ்ரிதிங் சுரேஷ்!" என்றான் நெகிழ்ச்சியுடன்.

"டேய் விடுடா. நீ எனக்கு பெஸ்ட் ஃப்ரெண்ட். ஷைலு எங்கள் வீட்டுச் செல்ல பெண். ஸோ நோ ஃபார்மாலிட்டீஸ். உங்களுக்காக நான் என்ன வேண்டுமென்றாலும் செய்வேன்..." என்றவன், "அடுத்து என்ன புரோகிராம்?" என்றான்.

"புரோகிராம் ஒன்றும் இல்லை. தி.நகருக்குப் போய் விட்டு ரூமுக்குப் போய்விடலாம்..." என முடிவு செய்ய மூவரும் கிளம்பினார்கள்.

சுரேஷுடன் சேர்ந்து ஷைலு வேண்டாம் என்று மறுக்க மறுக்க, கார்த்திக் நல்ல சில்க்ஸில் சுடிதாரும், புடவையும் வாங்கி ஷாப்பிங்கை முடித்துக் கொண்டு ரூமுக்கு வந்து சேர்ந்தார்கள்.

"நான் நாளை பெங்களூர் போறேன். நீ பாண்டிக்கு வந்தால் வீட்டுக்கு வாடா..." என்று நண்பன் சுரேஷை அழைக்க,

"கண்டிப்பா வர்றேன். ஷைலுவைப் பாண்டியில் விட வரும்போது உனக்குப் போன் செய்து விட்டு வருகிறேன். நீ எங்க வீட்டுக்கு எப்போ வரே?" என்றான் கேள்வியாக.

ஷைலுவை லேசாக அணைத்தபடி, "இப்போது வேண்டாம் சுரேஷ்... எங்கள் கல்யாணம் முடிந்த பிறகு ஜோடியாக வருகிறோம்..." என்றான் தீவிரத்துடன்.

நண்பனின் தீவிரம் புரிந்தாலும், "ம்ம்... நடத்துங்க தலைவா...." என்றவனின் பார்வை குறும்பாக ஷைலு வின் மேல் தாவ, அவள் வெட்கத்துடன் தலை குனிய புன்னகையுடன், "சரிடா. நாங்க கிளம்பறோம். வீட்டில் அம்மா எதிர்பார்த்துக் கொண்டிருப்பார்கள்..." என்று விடைபெற்றவன், "நீ சொல்லி விட்டு வா ஷைலு, நான் காரில் காத்திருக்கிறேன்..." என்றபடி காரை நோக்கிச் சென்றான்.

கார்த்திக் ஷைலுவின் கையைப் பிடித்துக் கொண்டு, "உன்னாலே இன்றைக்கு ரொம்பவும் சந்தோஷமா இருந்தேன்டா. நான் வாழ்க்கையில் கஷ்டத்தை அனுபவிச்சது

இல்லை என்றாலும், இந்த மாதிரி திரில்லான, சந்தோஷத்தை அனுபவிச்சது கிடையாது" என்றான் காதலுடன்.

அவனின் காதல் செறிந்த வார்த்தைகள் பெண்மையின் உள்ளத்தைக் குளிர வைக்க, "நானும் முதன் முறையாக இந்த மாதிரி மனசுக்குப் பிடித்தவரோட ஒரு நாள் முழுவதும் சந்தோஷமா நாளை கழித்திருக்கிறேன். தேங்க்ஸ் கார்த்திக்" என்றாள் அதே உணர்வுடன்.

அவள் கன்னத்தில் அழுத்தமாக முத்தமிட்டு, "சீக்கிரம் பாண்டிக்கு வந்துவிடு ஷைலு!" என்ற கார்த்திக்கின் ஏக்கம் கலந்த குரல் அவளுள் இனிய அதிர்வுகளைத் தோற்றுவிக்க, விழிகளாலே அவனுக்குப் பதிலளித்து விட்டு விடைபெற்றுக் கிளம்ப, கார்த்திக் அவளின் கையைப் பிடிக்க, என்னவென்று திரும்பியவளை இழுத்து அணைத்துக் கொண்டான்.

ஷைலுவும் அவனை அணைத்துக் கொண்டு, "மணியாச்சு கார்த்திக்..." என்று கிசுகிசுக்க, விலக மனமில்லாமல் விலகி அவளுடன் வந்து விடை கொடுத்தவன், "சீக்கிரம் பாண்டிக்கு வந்துவிடு. உனக்காக நான் காத்திருப்பேன் ஷைலு!" என மெதுவாக அவளுக்கு மட்டுமே கேட்கும் குரலில் கூற, சம்மதமாகத் தலையசைத்து விடைபெற்றாள்.

13

ஷைலுவுக்குக் கையசைத்து விடை கொடுத்த கார்த்திக்கின் செல்போன் சிணுங்க, எடுத்தவனிடம்,

"கண்ணா... நாளை திவ்யா அமெரிக்காவிலிருந்து வருகிறாள்னு உன் சித்தி போன் செய்திருக்கிறாள். அதனால் நாங்கள் ஏர்போர்ட் போய் அவளை அழைச் சிக்கிட்டு வருகிறோம். நீ நாளைக்கு வந்துவிடுவாயா?" என்ற தாய்க்கு உடனே பதில் கூறாமல் அமைதி காத்தான் யோசனையுடன்.

எதிர் பக்கம் மௌனத்தில் ஆழ்ந்துவிடவும், "என்ன கார்த்திக்... பதிலே இல்லை" என்ற தாய்க்கு,

"இல்லம்மா... நாளைக்கு நான் பெங்களூர் போகிறேன். அங்கே கொஞ்சம் கம்பெனி வேலை இருக் கிறது. அது முடிந்ததும் பாண்டிக்கு வருகிறேன். திவ்யா விடம் சொல்லிவிடுங்கள்..." என்று போனைக் கட் செய்ய, மகாவும் பெருமூச்சுடன் போனை வைத்தார்.

மகாவின் தங்கை அஞ்சலி, அவர் கணவர் ராஜன் இவர்களின் ஒரே புதல்வி திவ்யா. அஞ்சலி அமெரிக் காவில் ஒரு நல்ல கம்பெனியில் வேலை பார்க்க, ராஜன் சாப்ட்வேர் கம்பெனியில் வேலை செய்ய, திவ்யா பேஷன் டிசைனிங் படித்துக் கொண்டிருந்தாள்.

இந்த வருடம் படிப்பை முடிப்பதால், பெற்றவர் களுக்கு லீவ் இல்லை என்பதால் இவளை மட்டும் அனுப்பி வைக்கிறார்கள்.

போனை வைத்து விட்டுப் படுக்கையில் படுத்த வனுக்கு ஷைலு தன் மேல் வைத்திருக்கும் நம்பிக்கையும், காதலும் அவனை நெகிழ வைத்தது. மனமெல்லாம் இன்று ஷைலுவிடம் பேசினதும், அணைத்ததும் இம்சை

செய்ய, அவள் பக்கத்தில் இல்லாமல் ஏனோ உலகமே வெறுமையாகப் போன மாதிரி மனம் தவித்தது.

இப்படியே தொடர்ந்தால் ஷைலு இல்லாமல் எந்த வேலையும் செய்ய முடியாமல் போய் விடுமோ என்ற மெலிதான பயம் எழ, இறுகக் கண்களை மூடி தூங்க முயற்சி செய்து கொண்டிருந்தான்.

அவனின் முயற்சியை முறியடிக்கும் விதமாக, சுரேஷின் கால் அழைக்க, "ஹாய் சுரேஷ்! என்னடா இப்போதான் பேசிட்டுப் போனே. அதுக்குள்ளே போன் செய்கிறாய்..." என்று ஆச்சரியப்பட்டவன், "ஷைலு என்ன செய்கிறாள்?" என்றான் ஆர்வமாக.

"ஹ்ம்ம்... ஷைலு சாப்பிட்டு அவள் ரூமுக்குப் போயிட்டா. இன்றைக்கு அவள் முகத்தில் பார்த்த சந்தோஷத்தை நான் இதுவரைக்கும் பார்த்ததேயில்லை கார்த்திக். அதுக்குத் தேங்க்ஸ்டா..." என்றான் நெகிழ்ச்சி யுடன்.

"ஹேய்... இது என்ன இப்படியெல்லாம் பேசுற! நான்தான் உனக்குத் தேங்க்ஸ் சொல்லணும். உண்மை யில் நாங்கள் இருவருமே இந்த நாளை இனிமையாக அனுபவித்தோம். நீ இல்லாமல் வேறு யாராவது அவள் மாமனாக இருந்தால் நாங்கள் இப்படிச் சந்தித்திருக்க முடியுமா என்றே சந்தேகம்..." என்றவன், "நானே உன் னிடம் நிறையப் பேசணும் என்று நினைத்தேன்..." என்றவன், அவன் வேலையைப் பற்றி விசாரித்தான்.

"நானும் உன் வேலை பற்றி விசாரிக்கணும் என்று நினைத்தேன் கார்த்திக். முதலில் நானே சொல்கிறேன். நான் விமானம் தயாரிக்கும் கம்பெனியில் குவாலிட்டி ஆபீசராக இருக்கிறேன். நல்ல வேலை. நல்ல சம்பளம். ஜாலியாக இருக்கிறேன். ஆனால் இப்போ கொஞ்சம் நெருக்கடி..." என்றான் சுருதி குறைந்தவனாக.

நண்பனின் குரலில் தெரிந்த திடீர் தொய்வு கார்த்திக்கை உசுப்ப விசாரித்தவனிடம்,

"உனக்குத்தான் தெரியுமே, எங்களுக்கு ஒரு ஜுவல்லர்ஸ் இருக்கு. அதை இத்தனை வருடம் அப்பா தான் கவனித்தார்னு. இப்போ அதை நான் கவனித்தாக வேண்டிய கட்டாயம். அதான் ஒரே குழப்பமாக இருக் கிறது..." என்று முடிக்கும் முன்னரே மற்றவன் இடையிட்டான்.

"இதில் என்னடா குழப்பம் இருக்கிறது? உன் வேலையை விட்டுவிட்டு உங்கள் கடையைக் கவனி. இல்லை, அதற்கு நல்ல நம்பிக்கையான ஆளைப் போடு..." என்றான் தீர்வாக.

"ம்ச்ச்... நீ சொல்றதை நானும் யோசித்து விட்டேன். என் வேலையை விட மனமில்லை. நான் ஆசைப்பட்டுத் தேர்ந்தெடுத்த துறை இது. அதான் யோசிக்கிறேன். நகைக் கடைக்கு நம்பிக்கையான ஆள் கிடைப்பது ரொம்பவே கஷ்டம்..." என்றான் அலுப்பாக.

"டேய் சுரேஷ், நான் சொல்றேன்னு தப்பா நினைக்காதே. நீ நல்ல கிரியேடிவ் மைண்ட் உள்ளவன்.

அப்படியிருக்கும்போது இந்த மூளையை உன் நகைக் கடைக்கு யூஸ் செய்தால் உன் பிசினஸ் வளரும். உனக்கும் நல்ல பேர் கிடைக்கும் இல்லையா! ஆனால் நீ இப்போது செய்யும் வேலை யார் வேண்டுமென்றாலும் செய்யலாம். நகைக் கடை அப்படி அல்ல. உன் திறமையை நிரூபிக்க நல்ல சான்ஸ்...” என்ற நண்பனின் பேச்சு சுரேஷை யோசிக்க வைத்தது.

சில விநாடிகள் கழித்து, “நீ சொல்றது சரிதான் கார்த்திக்... கிட்டத்தட்ட ஒன்றரை மாதமா ஒரே தலை வலியா இருந்தது. ஆனால் இப்போது வேலையை விட முடியாது. என்னை நம்பி ஒரு ப்ராஜெக்ட் கொடுத்திருக் கிறார்கள். அதை முடித்த பிறகு வேலையை ரிசைன் செய்துட்டு நீ சொன்ன மாதிரி செய்யலாம்னு முடிவு செய்துவிட்டேன். தேங்க்ஸ்டா...” என்றான் குழப்பம் நீங்கிய தெளிவில்.

அவனே தொடர்ந்து, “சரி, உன்னைப் பற்றிச் சொல்லுடா. உன் கனவுகள் நிறைவேறிச்சா?” என்ற நண்பனுக்கு,. “ஹ்ம்ம்... நான் நினைத்த மாதிரியே சாஃப்ட்வேர் கம்பெனி ஆரம்பித்து வெற்றிகரமா நடத்திக் கிட்டு வர்றேன். இப்போ நாலு பிராஞ்ச் இருக்கு. இன்னும் கொஞ்ச நாளிலே அமெரிக்காவில் ஆரம்பிக்க ஒரு ஐடியா இருக்கு...” என்றதுமே,

“எனக்குத் தெரியும்டா... படிப்பிலே உன்னுடைய டெடிகேஷனைப் பார்த்து நினைத்தேன். நிச்சயம் எதிர் காலத்தில் பெரிய ஆளா வருவாய்னு... அதே மாதிரிச்

சாதிச்சுட்டேடா. யூ ஆர் கிரேட் கார்த்திக்!" என்று சிலாகித்தான் மற்றவன்.

"இந்தப் பெருமை எனக்கு மட்டுமில்லை சுரேஷ்! என் பேரண்ட்ஸுக்கும் சேர்த்துத்தான். அவர்களின் உறுதுணையோடுதான் சாதித்தேன். அதான் இந்த வெற்றிக்குக் காரணம். என் தொழிலுக்கு மட்டுமில்லை... என் காதலுக்கும் அவர்கள்தான் பெரிய சப்போர்ட்!" என்றான் பெருமிதமாக.

"நீ உண்மையில் லக்கிடா கார்த்திக். நல்ல அப்பா, அம்மா, நல்ல காதலின்னு எல்லாமே உன் வாழ்க்கையில் அமைஞ்சிப் போச்சு. உண்மையில் நீ தேவதைகளால் ஆசீர்வதிக்கப்பட்டவன்தான்..." என்ற நண்பனை இடையிட்டான்.

"இல்லை சுரேஷ்! காதலி என்ற வார்த்தை திருத்திக் கொள். ஷைலு என் எதிர்கால மனைவி. அதனால எதிர்கால மனைவி என்றே சொல்..." என்று சுரேஷைத் திருத்த, சிரிப்போடு ஏற்றுக்கொண்டான்.

கார்த்திக்கின் பேச்சில் ஞாபகம் வந்தவனாக ஷைலுவை எப்படி, எங்கு சந்தித்தாய் என்று சுவாரசியம் கூடக் கேட்ட நண்பனுக்கு, அதைப் பற்றிச் சொல்லிக் கொண்டிருந்தவன், எதையோ நினைத்துக் கொண்டவனாக, "டேய், உன்னிடம் ஒன்று சொல்ல மறந்து விட்டேனே... திவ்யா நாளை அமெரிக்காவிலிருந்து எங்க வீட்டுக்கு வர்றா... உனக்கு அவளை ஞாபகம் இருக்கா?" என்றான் சிறு சந்தேகத்துடன்.

இத்தனை வருட ஓட்டத்தில், தன் தங்கையை மறந் திருப்பானோ என்றுதான் கேட்டான். ஆனால் சுரேஷோ சற்றும் யோசிக்காமல் ஞாபகம் இருக்கு என்றதும், ஆச்சரியப்பட்டவனிடம், "ஆனால் நான் அவளைப் பற்றி நினைத்ததே இல்லை..." என்றான் ஆயாசமாக.

"ஆனால் அவ உன்னை மறக்கவே இல்லையே...! உன்னைப் பற்றிப் போன வருடம்கூட கேட்டாள். எனக்கு உன்னைப் பற்றி ஒரு தகவலும் தெரியாததால் நானும் ஒன்றும் சொல்லவில்லை..." என, இப்பொழுது சுரேஷுக்கே சற்று ஆச்சரியம்தான்.

"ஓ... இப்போ திவ்யா என்ன செய்கிறாள்?" என்று விசாரித்தவனுக்கு அவள் பேஷன் டிசைனிங் முடித் ததைப் பற்றிக் கூறி, "அவளுக்கு இந்தியாவில் வேலை செய்யத்தான் ஆசை. அதான் இங்கு வருகிறாள். உன் மனசில் அவளைப் பற்றி ஐடியா இருக்கா சுரேஷ்?" என்றான் கேள்வியாக.

"இதுவரைக்கும் இல்லை. ஆரம்பத்தில் காதலைப் பற்றி ஐடியா இல்லாமல்தான் இருந்தேன். அப்புறம் நடுவில் இந்தக் குழப்பம்... இப்போது சரியா சொல்லத் தெரியவில்லை, கார்த்திக்!" என்றான் தெளிவில்லாமல்.

"இதையெல்லாம் மறந்து விடு. திவ்யா உன்னை நான்கு வருடத்திற்கு முன் பார்த்து விரும்புகிறேன் என்று சொன்னாள். இன்றுவரை அவள் மனதில் நீதான் இருக்கிறாய். ஆனால் உன் மனதில் அவளைப் பற்றிய எண்ணமே இல்லை என்கிறாய். சரி, நீ இப்போது எதுவும்

சொல்ல வேண்டாம். முதலில் வீட்டுக்கு வா. அவளிடம் பேசு. அதன் பிறகு உன் மனதில் இருப்பதைச் சொல். என்னடா ஓ.கே.வா?" என்றான், அவன் குழப்பத்திற்கு முற்றுப்புள்ளி வைக்கும் விதமாக.

"நாம் விரும்புபவர்களை விட, நம்மை விரும்பு பவர்களைக் கல்யாணம் செய்து கொண்டால் வாழ்க்கை நன்றாக இருக்கும்னு என் அம்மா அடிக்கடி சொல்வாங்க. அவள் மனதில் இன்னும் நான் இருக்கேனா பார்க்கலாம்?" என்றான் அதே குழப்பத்துடன்.

"இதில் உனக்கு எந்தக் குழப்பமும் வேண்டாம். அவள் மனதில் நீ இருக்கிறாய் என்பது தீர்க்கமான ஒரு விஷயம். இருந்தாலும் நான் பெங்களூர் போய் விட்டு உனக்குப் போன் செய்கிறேன். நீயும் ஷைலுவும் வந்து விடுங்கள்..." என்று முடிவைக் கூற,

"டேய்... டேய்... சந்தடி சாக்கில் சிந்து பாடுவார்கள்னு சொல்வார்களே, அது இதுதானா?" என்றான் கேலியாக.

சிரித்துக் கொண்டே, "மே பி, சுரேஷ் என்னால் அடிக்கடி இங்கு வந்து பார்க்க முடியாதே. என் கம்பெனி வேலையே நிறைய இருக்கிறது. அங்கே என்றால் மாலை நேரத்தில் ஷைலுவைப் பார்க்கலாமே!" என்று உண்மையை ஒத்துக் கொண்டான்.

"ஓ... ஓ.கே.டா. ஆனால் என்னால் ஒரு பத்து நாளைக்கு எங்கேயும் நகர முடியாது. ஏன்; ஞாயிறு கூட ஜுவல்லரி ஷாப் வேலை கொஞ்சம் இருக்கு.

அதனால் நான் ஃப்ரீயானதும் உனக்குப் போன் செய்கிறேன்...” என்றவன், “அது சரி. உனக்கு எதையும் வெளிப்படையாகச் சொல்லும் தைரியம் இருக்குன்னு தெரியும்டா. ஆனால் இந்த விஷயத்தில் இவ்வளவு தைரியம் கூடாது மகனே!” என்றான் குறும்பாக.

நண்பனின் குறும்புக்குச் சிரித்து, “உண்மையைச் சொல்ல ஏன் பயப்பட வேண்டும்? நீயும் காதலித்துப் பார். தானாகவே அதிகமாகத் தைரியம் வந்துவிடும். நீதான் பயந்தாங்குளியாச்சே...” என்று நண்பனின் காலை வார,

“ஆமாப்பா... உன் அளவிற்கு எனக்குத் தைரியம் இல்லை. ஒத்துக் கொள்கிறேன். நீங்க வீராதி வீரன், சூராதி சூரனாச்சே...” என்று சிரித்தவன், “ஆனல் ஒன்று கார்த்திக், உனக்கு அமைந்த ஷைலு உனக்கு நேரெதிர்...” பதிலுக்கு வாரினான்.

“நீ வேண்டுமென்றால் பாரேன்... எங்கள் கல்யாணத்திற்குப் பிறகு அவளின் பயத்தை எல்லாம் போக்கிடுவேன். அவளைப் பார்த்து நீயே ஆச்சரியப்படும் அளவிற்கு மாற்றிக் காட்டுகிறேன்...” என்றான் சவாலாக.

“நீதான் நினைத்ததைச் சாதிக்கிறவன் ஆச்சே... நிச்சயம் நீ செய்வாய்...” என்று கூறிச் சிரித்துவிட்டு, “சரிடா. ரொம்ப நேரம் பிளேடு போட்டுட்டோம் போலிருக்கிறது. என் காதில் ரத்தம் வருது. உனக்கு வருதா?” என்றான் சீண்டலாக.

"ஆமா, எனக்குக் கழுத்திலே ரத்தம் வருது. ஆனால் என் ஷைலுவிடம் பேசினால் மட்டுமே ரத்தமே வராது..." என்று கார்த்திக் அவன் வழியிலே போய் காலை வாரிவிட,

"அடப்பாவி. இப்படிக் கவுத்திட்டியே! உன்னைப் பற்றித் தெரிந்தும் நானே வாயைக் குடுத்து மாட்டிக் கிட்டேனே!" என்று நொந்து போய் சுரேஷ் புலம்ப, கார்த்திக் வாய் விட்டுச் சிரித்தான்.

"ஓ.கே.டா. நாளை ஐந்து மணிக்கு பெங்களூர் ஃபிளைட். ஷைலுவிடம் நாளை இரவு போன் செய் கிறேன்னு சொல்லிடு..." என்றவனை, "ஓ.கே. தலைவா..." என்று சுரேஷ் நக்கலடிக்க,

"ஹேய்! இப்போ ஏன் என்னைத் தலைவன் என்று அழைத்தே..." என்றான் புரியாமல்.

"பின்னே... எதிர்காலத்தில் நான் காதலித்தால் உன்னைத்தானே பின்பற்றணும்... அதான் இப்பவே உன்னைத் தலைவனாக ஏற்றுக்கொண்டு விட்டேன்..." என்றான் குறும்பாக.

"அப்படின்னா... எனக்கு நீ கண்டிப்பா குரு தட்சிணை குடுக்கணும்..." என்று போலியாக மிரட்டி விட்டு, "குட் நைட்" என்றவனுக்குப் பதிலாக குட் நைட் அண்ட் போன் வோயாஜ் என்று வாழ்த்தவும்,

"தேங்க்ஸ்டா... சீக்கிரமே நேரில் என் வீட்டில் சந்திப் போம்..." என்று கூறிப் போனை வைத்ததும், மீண்டும் ஷைலு பற்றிய நினைவலைகள், கடலலையைப் போல திரும்ப வந்து கார்த்திக்கை மூழ்கடித்தன.

எப்பொழுதும் கண்ணில் இருக்கும் சிறு பயம், வெட்கத்தில் சிவக்கும் முகம், அதிகம் பேசாமல் தேவைப் பட்டால் மட்டுமே பேசும் நிதானம், குழந்தைத்தனமான உள்ளம்... இதெல்லாம் என்னை உன்னிடம் பைத்திய மாக்கி விட்டதே... இதோடு உன்னை எப்போது பார்க்கப் போகிறேன் என்றே தெரியவில்லை. இங்கு நான் உன்னை நினைத்துப் புலம்புவது போல் நீ யோசிப்பியா ஷைலு?" எனப் பலவாறு எண்ணியவாறே கண்ணயர்ந்தான்.

அதேநேரம் சுரேஷின் வீட்டில் ஷைலுவின் அறை யில், கட்டிலில் படுத்துக் கொண்டே காலையிலிருந்து கார்த்திக் கூட செலவழித்த நேரம் எவ்வளவு இனிமையாக இருந்தது என்று யோசித்துக் கொண்டிருந் தாள்.

இந்த மாதிரி அவள் வாழ்க்கையில் சந்தோஷமாக இருந்ததே இல்லை.

ஒரு நாளிலே அவன் அருகில் இருப்பது அதிக சந்தோஷத்தைக் கொடுத்தால், அவன் மனைவியாக அவன் பக்கத்திலே இருந்தால் எவ்வளவு சந்தோஷமாக இருக்கும். நினைக்கவே இனித்தது.

அவன் அருகில் இருந்தாலே சொர்க்கத்தில் இருப்பது போல் இருக்கிறதே...! இதை எப்போது நான் திரும்பவும் அனுபவிப்பேன் என மனம் ஏங்கியது.

கார்த்திக் தன்னை எந்தளவு தீவிரமாகக் காதலிக் கிறான் என்று புரிந்தபோது, நெஞ்சுக்குள் ஆயிரம் குயில்கள் கூவியதைப் போல் இனிமையாக இருந்தது. ஆனால் வீட்டை நினைத்தால் நெஞ்சுக்குள் குளிர் பரவி

யது. எந்தப் பிரச்சனையானாலும் கார்த்திக் சமாளித்துக் கொள்வான் என்ற தைரியம் இருந்தும், நெஞ்சுக்குள் ஏனோ ஒரு பய அதிர்வு.

என் படிப்பும் நல்லபடியாக முடியணும், எங்கள் காதலும் எந்தப் பிரச்சனையும் இல்லாமல் நிறைவேறணும். சீக்கிரமே கார்த்திக்கின் மனைவியாகிற பாக்கியத்தைக் கொடு, கடவுளே! என்று மனதார வேண்டிக் கொண்டு ஏதேதோ நினைத்துக் கொண்டே உறங்கி விட்டாள்.

காலையில் கார்த்திக்கின் அழைப்பில் விழித்தவளை, "ஹாய் ஸ்வீட்டி! வெரி வெரி குட் மார்னிங். எப்படிடா இருக்கே?" என்றான் உல்லாசமாக.

அவனின் துள்ளல் அவளையும் தொற்றிக் கொள்ள, "ஹாய் குட் மார்னிங் கார்த்திக். நான் நல்லா இருக்கேன். நீங்க எப்படி இருக்கீங்க? இப்ப எங்கே இருக்கீங்க?" என்றாள் பதிலுக்கு.

"நானா... எப்படி இருக்கேனா? உண்மையைச் சொல்லவா? பொய் சொல்லவா?" என்று குறும்பாகக் கேட்க,

ஷைலு, "அது என்ன உண்மை, பொய்?" என்று சிரித்துக் கொண்டே, "எங்கே இரண்டையும் சொல்லுங்கள்..." என்றாள் ஆர்வமாக.

"உண்மையைச் சொல்ல வேண்டுமென்றால் நீ இல்லாமல் நான் நல்லாவே இல்லை. எந்த நேரமும்

உன் நினைப்புதான். உன்னைத் திரும்ப எப்போது பார்ப் பேன்னு தவிப்பாக இருக்கிறது. பொய் என்றால் நல்லா இருக்கேன்..." என்றவனின் ஏக்கம், ஷைலுவின் மன தில் நமக்காக ஒரு ஜீவன் ஏங்குகிறது என்ற நினைவே காலை நேர இளங்குளிர் தென்றலாய் வருடியது.

தன் உணர்வுகளைக் கட்டுப்படுத்தி, "நீங்க பெங்களூர் போகணும்னு சொன்னீங்களே..." என்று விசாரித்தவளுக்கு,

"நான் இப்போ ஏர்போர்ட்டில் இருந்துதான் பேசு கிறேன். இன்னும் ஐந்து நிமிடத்தில் கால் வந்து விடும். உள்ளே போய்விட்டால் அதன் பிறகு பெங்களூர் போய்ச் சேர்ந்த பிறகுதான் பேச முடியும். அதான் போவதற்கு முன் என் தேவதையின் குரலைக் கேட்கலாம்னு போன் செய்தேன்..." பாதி ஏக்கமும், பாதி குறும்பும் சிரிப்பைக் கொண்டு வந்தது.

சன்னமாகச் சிரித்து, அவனின் ஏக்கத்தைப் போக்கி சகஜமான மனநிலைக்கு மாற்ற, "ஆஹா... என் தேவனே, காலையிலே உங்கள் குரலைக் கேட்க என்ன பாக்கியம் செய்தேனோ?" என்று கிண்டலடிக்க, அவனுக்கு ஆச்சரி யம் தாங்கவில்லை.

"ஹேய்... நீ கிண்டல் கூட செய்வியோ? ஹையோ... இந்த நேரத்தில் பக்கத்தில் இல்லாமல் போய் விட்டேனே...! என்னைப் பார்த்தால் மட்டும்தான் அம்மணிக்குப் பேச்சே வரவில்லை. ம்ம்... அப்படியா ஷைலு?" என்று கேட்டுக் கொண்டே இருக்கும்போதே பெங்களூர் ஃபிளைட்டுக்

கான அழைப்பு வர, "ஓ.கே.டா. ஐ வில் கால் யு பேக்..." என்றவனுக்கு, "ஹேவ் எ நைஸ் ஜர்னி கார்த்திக்..." என்று வாழ்த்தினாள்.

கார்த்திக் போனை வைத்ததும் ஒரு பக்கம் பயமாக இருந்தது.

"இந்த அளவு என்னை நேசிக்கிறாரே... ஒருவேளை இந்தக் கல்யாணத்திற்கு வீட்டில் சம்மதிக்கவில்லை என்றால் கார்த்திக்கின் நிலைமை என்ன ஆகும்? இல்லை... நான்தான் என்ன செய்வேன், கார்த்திக் இல்லாமல்..." என நினைக்கும்போதே வயிற்றில் ஒரு பய பந்து உருண்டது.

ஒரு நிமிடம் கண்ணை மூடி மனதிற்குள், "எந்தப் பிரச்சனையும் இல்லாமல் எங்களைக் காப்பாற்று முருகா!" என்று வேண்டிக் கொண்டு தன்னை ஆசுவாசப்படுத்திய படி, ரூமை விட்டு வெளியே வந்து வழக்கம் போல் தோட்டத்தில் உலாவி விட்டு, டைனிங் ஹாலுக்கு வர, அத்தையும் சுரேஷும் தனக்காகக் காத்திருப்பதைக் கண்டு புன்னகையுடன் இருவருக்கும் காலை வணக்கம் சொன்னாள்.

பதிலுக்கு சுரேஷ், "வெரி வெரி குட் மார்னிங் ஷைலு..." என்று இழுத்துக் கூற,

'என்ன ஆச்சு இவனுக்கு?' ஆராயும் நோக்கோடு பார்த்தவளிடம் நமட்டுச் சிரிப்புடன், "பெங்களூர் கிளைமேட் நல்லா இருக்கும்... இல்லை ஷைலு!" என்றான் வேண்டுமென்றே.

ஷைலுவுக்கு அவளின் கேலி புரிந்துவிட, என்ன பதில் சொல்வதென்று திணற, சுரேஷ் அவளை ஓரக் கண்ணால் பார்த்துச் சிரிக்கவும், "என்னடா, திடீரென்று பெங்களூர் பற்றி அவளிடம் கேட்கிறாய். அவ எங்கடா அங்கே போயிருக்கிறாள்?" என்று இடையில் லாவண்யா புகவும், ஷைலுவுக்கு ஒரு நிமிடம் அப்பாடா என்றிருந்தது.

தன்னைச் சுதாரித்து சுரேஷைப் பார்த்து லேசாகச் சிரித்து, "ம்ம்... சூப்பரா இருக்கும்..." என்று இழுத்து, "என்ன சுரேஷ், திடீரென்று பெங்களூர் நினைப்பு...? ஏன், நீங்க அங்கே போகப் போறீங்களா?" என்றாள் அப்பாவியாக முகத்தை வைத்துக் கொண்டு.

"ச்சே... ச்சே... எனக்கு எந்த நினைப்புமில்லை. என் ஃபிரெண்ட் ஒருத்தன் பாவம் துணையில்லாமல் தனியாப் போயிருக்கான். அவன் அங்கே போனாலும் மனசெல்லாம்..." என்று இழுத்து, அவசரமாக,

"எங்கே இருக்கணுமோ அங்கேதான் இருக்கும்..." என்று குறும்பாகக் கூறி நிறுத்த, ஷைலுவின் காது மடல் சூடேறியது வெட்கத்தில்.

அதை மறைக்கச் சட்டென்று குனிந்து சாப்பிடுவது போல் பாவனை செய்ய,

சுரேஷ் அதைப் பார்த்துக் கலாட்டாவாகச் சிரிக்க, லாவண்யா ஒன்றும் புரியாமல் முழித்தார். "டேய், சுரேஷ்... என்ன நடக்குது இங்கே? நீ சிரிக்கிறே... அவ குனிந்த தலை நிமிராம சாப்பிடறா..." என்று மகனிடம்

கேட்டவர், மருமகளிடம் திரும்பி, "என்னம்மா... ஏன் இவன் சிரிக்கிறான்?" என்றார் ஒன்றும் புரியாமல்.

அவரின் கேள்விக்கு ஒரு நிமிடம் விழித்து, "அது... அது... ஒன்றும் இல்லை. எனக்குத் தெரியாது அத்தை... அவர் ஏதோ என்னைக் கிண்டல் பண்ணிக் கொண்டிருக் கிறார்..." என்று திக்கித் திணறியபடியே சுரேஷிடம், "என்னைக் காப்பாற்று!" என்று அத்தைக்குத் தெரியாமல் கண்ணால் கெஞ்ச... அதைப் பார்த்து மேலும் சிரித்து விட்டு, சுரேஷ் தாயின் பக்கம் திரும்பினான்.

"நத்திங்ம்மா... நேற்றுப் பேசும்போது பெங்களூர் கிளைமேட், பிசினெஸ் பற்றிப் பேசினோமா... அதை இன்று கேட்டேன். அவள் மறந்துவிட்டாள் போலிருக் கிறது... அதான் முழிக்கிறாள். வேறு ஒன்றும் இல்லை..." என்று சமாளித்தவன், "சரிம்மா... மாமா போன் செய்தாரா?" என்று அவரைத் திசை திருப்பிவிட்டு நமுட்டுச் சிரிப்புடன் ஷைலுவை நோக்கினான்.

அவள் லாவண்யாவுக்குத் தெரியாமல் கை யெடுத்துக் கும்பிடவும், சுரேஷுக்குச் சிரிப்பை அடக்க முடியவில்லை. இருந்தும் தாய்க்காகக் கஷ்டப்பட்டு அடக்க, "நான் இன்னும் அண்ணனுக்குப் போனே செய்யலை. அவர் கொஞ்சம் பிசியா இருக்கிறார்... நான் போய் அண்ணிக்குப் போன் செய்யணும்..." என்று வேக மாகச் சாப்பிட்டு எழுந்து போக, ஷைலு அவனை முறைத்து விட்டுக் கோபமாக எழுந்து சென்றாள்.

அவள் பின்னாலே வந்து, "சாரி ஷைலு, சும்மா விளையாட்டுக்குச் செய்தேன். டோன்ட் பீ சீரியஸ்..." என்று

சமாதானம் செய்ய, கோபம் தணிந்தவளாக, "ச்சே... ச்சே... நீங்க கலாட்டா பண்ணியதற்காக நான் கோபப் படவில்லை. அதை அத்தை எதிரில் செய்தால், அப்புறம் நான் அவர்களுக்கு என்ன பதில் சொல்வேன். அதனால் தான் கொஞ்சம் எமோஷனல் ஆகிவிட்டேன்," என்றாள் சமாதானமாக.

"சரி விடு. இப்போ உனக்கு ஏதாவது வேலை இருக்கிறதா? அப்படி இல்லையென்றால் கொஞ்சம் ஜுவல்லரிக்குப் போய் விட்டு வரலாம். முடியுமா?" என... சம்மதித்து அவனுடன் கிளம்பினாள்.

காரில் செல்லும்போது, ஓரக் கண்ணால் அவளை நோக்கி, "ஏன் ஷைலு, கார்த்திக்கைப் பார்க்காம கஷ்டமா இருக்கா? அவன் இன்றும் சென்னையில் இருந்திருந்தால், அவனிடம் உன்னை அழைத்துப் போயிருப்பேன். என்ன செய்வது? அவன் பெங்களூர் போய்விட்டதால் முடியாமல் போய்விட்டது. சீக்கிரமே உன்னைப் பாண்டியில் கொண்டு போய்விடுகிறேன். அவனுக்கும் உன்னைப் பார்க்காமல் கஷ்டமாக இருக்கும்..." என்றான் அவள் மனதைப் புரிந்து கொண்டு.

"பரவாயில்லை சுரேஷ். நேற்று ஒரு நாள் முழுவதும் அவர் கூட இருந்ததே சந்தோஷம். நான் அதிகமா எதிர்பார்க்கக் கூடாதுன்னு எனக்குத் தெரியும். எனக்கு இப்போ நடப்பதெல்லாம் சந்தோஷத்தைக் கொடுத் தாலும், அப்பாவிடம் எப்படி இதைப் பற்றிப் பேசப் போகி றேன்னு தெரியவில்லை. ஏதாவது ஏடாகூடமா ஆயிடுச்

சுன்னா நினைக்கவே பயங்கரமா இருக்கு...” என்னும் போதே கண்களில் பயம் கசிந்தது.

ஷைலுவின் பேச்சில் ஒரு நிமிடம் அமைதியாக இருந்தவன், “நீ சொல்வது சரிதான். கார்த்திக் உன் மேல் உயிரையே வைத்திருக்கிறான். இந்தக் கல்யாணம் கைகூடவில்லை என்றால் அவன் உடைந்து போய் விடுவான். எது எப்படி ஆனாலும் சரி... உங்க கல்யா ணத்தை நடத்தியே ஆகணும். மாமாவிடம் நான் பேசு கிறேன். ஒருவேளை நான் சொன்னால் அவர் கேட்பார்னு நம்பிக்கை இருக்கு. நீ பயப்படாதே...” என்றான் ஆறுத லாக.

“நானும் உங்களைத்தான் நம்பியிருக்கிறேன். கார்த்திக்கிற்குத் துணிச்சல் இருந்தாலும் அவரை அப்பா விடம் பேச வைப்பது நல்லதில்லை. பார்க்கலாம் சுரேஷ்!” என்றவள் ஆயாசத்தோடு, “உங்களுக்குக் கஷ்டமா இருக்கா சுரேஷ்... நான் உங்களை ரிஜெக்ட் செய்தது...” என்றாள் மெலிதான குற்றவுணர்வுடன்.

“கண்டிப்பா இல்லை. நீ ஏன் கில்டியா ஃபீல் செய்கிறாய்? யார் யாருக்குன்னு ஆண்டவன் எழுதி இருக்கானோ... அதுதான் நடக்கும். புரியவில்லையா? உனக்குக் கார்த்திக்னு ஆண்டவன் எழுதியிருப்பது போல, எனக்கு ஆண்டவன் திவ்யான்னு எழுதியிருக்கான் போலிருக்கிறது. அதனால்தான் அத்தை, மாமாவின் ஆசை நிறைவேறாமல் போய்விட்டது...” என ஷைலுவுக்கு ஆச்சரியம் தாங்கவில்லை.

"சுரேஷ்... யாரது திவ்யா? புது கேரக்டர். எப்போது சந்திச்சீங்க?" என்று வியப்புடன் கேள்விச்சரங்களைத் தொடுக்க,

மற்றவன் சிரித்துக் கொண்டே, "ஆமாம் ஷைலு! ஐ திங்க் ஷீ வில் பி மை கேர்ள். பட் அவ புது ஆள் இல்லை. நானும் கார்த்திக்கும் யூனிவர்சிட்டியில் முதல் வருடம் படிக்கும்போது, ஒரு லீவில் கார்த்திக் வீட்டுக்கு அவனுடன் போனேன். அப்போது அவனுடைய சித்தி பெண் அவனுடைய வீட்டில் தங்கி, நீ படிக்கின்ற காலேஜில் முதல் வருடம் படித்துக் கொண்டிருந்தாள்.

"அண்ணனுடைய ஃபிரெண்ட் என்ற முறையில்தான் என்னிடம் பேசினாள். நானும் அப்படித்தான் பேசினேன். அப்புறம் ஒரு நாலைந்து தடவை சந்தித்திருப்போம். திடீரென்று ஒரு நாள் என்னிடம் அவள் தன் காதலைச் சொன்னதும் அதிர்ந்த நான் கார்த்திக்கிடம் சொல்லி விட்டேன். பிகாஸ், எனக்கு அப்போது காதலைப் பற்றி எந்த எண்ணமும் இல்லை. என் லட்சியம் ஒன்றே குறிக்கோளாக இருந்தது.

"அது மட்டுமில்லை... அவளுக்கு அப்போது பதி னெட்டு வயசுதான். இந்தச் சின்ன வயதில் காதலிப்பது எனக்குச் சரியாகத் தோன்றவில்லை. அதனால் நான் கார்த்திக்கிடம் சொல்ல, அவன் தன் தங்கையைக் கண்டிக்க, அதன்பிறகு நான் அவன் வீட்டுக்குப் போவதை நிறுத்திவிட்டேன்.

"படிப்பு முடிந்ததும் நாங்கள் இருவரும் பிரிந்து விட்டோம். நான் சுத்தமாக அவளை மறந்துவிட்டேன். ஆனால் அவள் என்னை மறக்கவில்லைன்னு நேற்று கார்த்திக் சொன்னபோதுதான் தெரிஞ்சிக்கிட்டேன்..." என்று சுரேஷ் சொல்வதை ஆச்சரியமாகக் கேட்டுக் கொண்டிருந்தாள்.

"ஏன் சுரேஷ், இதை நீங்களும் கார்த்திக்கும் என்னிடம் இதுவரை சொன்னதே இல்லை..." என,

"என்னைப் பொறுத்தவரை நான் நேற்றுவரை அவளைப் பற்றி நினைக்கவே இல்லை. அதனால் சொல்லவே இல்லை. அவனுக்கு என் மனசு என்ன என்றே தெரியாமல் எப்படி உன்னிடம் சொல்லுவான்? அது மட்டுமில்லை, உன்னைப் பார்த்தாலே எல்லாவற் றையும் மறந்துவிடுகிறான்..." என்று கேலியாகக் கூற, ஷைலு வெட்கத்துடன் அழகாகச் சிரித்தாள்.

"சோ, திவ்யாதான் உங்கள் காதலியா?" என்று கேட்க,

"மே பி இருக்கலாம்... இல்லாமலும் இருக்கலாம்..." என்று சுரேஷ் இரண்டு விதமாகக் கூற,

ஷைலு சற்றுக் குழப்பத்துடன், "அது என்ன சுரேஷ், இப்படிச் சொல்றீங்க... எனக்குத் தலை சுத்துது. கொஞ்சம் தெளிவாச் சொல்லுங்களேன்..." என்றாள்.

"தட் மீன்ஸ்... கார்த்திக் சொல்படி பார்த்தால் திவ்யா என்னைப் பற்றி போன வருடம் வரைக்கும் கேட்டிருக்

கிறாள். இப்போதைய அவளுடைய மனநிலை என்ன வென்று எனக்கும் தெரியாது. கார்த்திக்கிற்கும் தெரியாது. அவன் திவ்யாவை நேரில் சந்தித்தால்தான் தெரியும். இல்லை, நான் நேரிலே அவளைப் பார்த்துப் பேசினால் தான் தெரியும். பார்க்கலாம்.

"ஆனால் எனக்கு நம்பிக்கை இருக்கிறது. எனக்காக இத்தனை வருடம் காத்துக் கொண்டிருந்தவள், இந்த ஒரு வருடத்திற்குள் நிச்சயம் அவள் மனதை விட்டு நான் போயிருக்க மாட்டேன். அப்படி அவள் என்னை விரும்பி னால், அதை வைத்தே மாமாவிடம் பேச ஒரு நல்ல சந்தர்ப்பம்..." என்றான் யோசனையுடன்.

"சரி, அவங்க எப்படி இருப்பாங்க சுரேஷ்?" என்ற வளின் ஆர்வத்தைக் கண்டு புன்னகைத்து,

"ம்ம்... ஐந்து வருடம் ஆகிவிட்டது. அழகாத்தான் இருப்பா. என்னிடம் அவள் காதலைச் சொல்லும்போது வயது பதினெட்டு. இப்போ இருபத்தி மூன்று வயசு இருக்கும். நிச்சயம் அவளிடம் மன அளவில் ஒரு முதிர்ச்சி இருக்கும்..." என்றவன், அவளைப் பற்றிய நினைவுகளில் மூழ்கிவிட்டான்.

நகைக் கடையில் வேலைகளில் மூழ்கியிருந்தவர்கள், மதியமானதும் ஹோட் டலுக்குச் சென்று மெனு ஆர்டர் செய்து விட்டு அமர்ந்திருந்த நேரத்தில் ஷைலு

கார்த்திக்கைப் பற்றிய நினைப்பில் மூழ்கிவிட, சுரேஷ் அவள் முன்னால் சொடக்குப் போட்டுக் கூப்பிடவும், சட்டென விழித்து அசடு வழிந்தாள்.

"சாரி சுரேஷ்... ஏதோ ஞாபகம்..." என,

"ஏதோ ஞாபகம் இல்லைம்மா... கார்த்திக்கின் ஞாபகம் சரியா?" என்று கிண்டலடித்து விட்டு, "சரியான ஜோடிதான். கார்த்திக் என்னடான்னா மூச்சுக்கு முன்னூறு தரம் ஷைலு... ஷைலு... என்கிறான். நீ என்னன்னா அடிக்கடி கார்த்திக்கைப் பற்றி நினைத்துக் கொண்டு வேறு உலகத்துக்குப் போயிடறே... ம்ஹூம். இது சரிப்பட்டு வராது. உடனே மாமாவிடம் பேசி ஏதாவது செய்தால்தான் நீங்க ரெண்டு பேரும் அடங்குவீங்க..." என்றான் கேலி யாக.

ஷைலு பதறி, "ஐயோ சுரேஷ்... அப்படி ஏதும் செய்திடாதீங்க. நான் சொல்லும்போது பேசுங்க, ப்ளீஸ்..." என்று கண்ணால் கெஞ்சவும்,

"ஏய், பயப்படாதே. நான் சும்மா சொன்னேன். உன் அனுமதி இல்லாமல் இந்த விஷயத்தில் நான் தலையிட மாட்டேன். போதுமா?" என்று சுரேஷ் உறுதி கொடுக்க, நிம்மதியாகத் தலையசைத்தாள்.

"சரி, டென்ஷன் ஆனது போதும். சாப்பிடு. நீ சரியாச் சாப்பிடவில்லை என்றால் என்னைக் கார்த்திக் உண்டு, இல்லைன்னு ஒரு வழி பண்ணிவிடுவான். உன்னைப் பார்த்துக் கொள்ளச் சொல்லி என்னிடம்

சொல்லிவிட்டுப் போயிருக்கிறான்," என்று அத்தை மகன் புலம்புவதைக் கண்டு ஷைலுவின் விழிகள் கனிந்தன.

"ஏன்... கார்த்திக் சொல்லவில்லை என்றால் நீங்கள் என்னைக் கவனித்துக் கொள்வதே இல்லையா? நீங்கள் எனக்காகப் பார்த்துப் பார்த்து செய்றீங்க... உங்க மனசு கஷ்டப்படும்படி நடப்பேனா? கார்த்திக்கை இதில் இழுத் தால்தான் சாப்பிடுவேனா என்ன...?" என்றான் நெகிழ் வுடன்.

"தட்ஸ் குட். கண்டுபிடிச்சிட்டியே! நான் இப்படிக் கார்த்திக்கை இழுத்தால்தான் தலைவி தலைவனின் பிரிவு தாங்காமல் பசலை அடையாமல் சரியாக நேரத் துக்குச் சாப்பிட்டு, நேரத்துக்குத் தூங்குவாய்னு சும்மா ஒரு பிட்டு போட்டேன்..." என்று சிரிக்கவும், ஷைலுவும் அவனின் சிரிப்பில் இணைந்து கொண்டாள்.

சிரித்து விட்டு, "பிட்டா போடறீங்க! எனக்கு ஒரு நேரம் வராமலா போய்விடும். திவ்யா வரட்டும். அப்புறம் நான் உங்களை ஒரு வழி செய்கிறேன்..." என்று போலி யாக மிரட்ட, சுரேஷ் பயந்தவன் போல நடிக்கவும்... இருவரும் சேர்ந்து சிரித்தனர்.

பேசிக் கொண்டே சாப்பிட்டு ஹோட்டலை விட்டு வெளியே வந்ததும், ஷைலுவின் போன் அழைத்தது.

அவள் போனை எடுப்பதற்கு முன், "நிச்சயம் கார்த்திக்தான்..." என்று கூறிவிட்டு, ஷைலுவிடமிருந்து போனை வாங்கி, "டேய், அடங்கவே மாட்டியா? பெங்களூர்

போய் கம்பெனி வேலையைப் பாருடா என்றால், இங்கே அடிக்கடி போன் செய்து கடலை போட்டுட்டு இருக்கே!" என்று போலியாக மிரட்டிக் கிண்டல் செய்தான்.

"டேய், உன்னை யாருடா நந்தி மாதிரி நடுவில் வரச் சொன்னது? நான் என் ஸ்வீட்டியிடம் பேசலாம் என்று ஆசையா போன் செய்தால்... நீ ஏன்டா எடுத்துக் கழுத்தறுக்கிற?" என்று கார்த்திக் வேண்டுமென்றே கடுப் படித்தான்.

"அடப் பாவி. நான் உனக்கு நந்தி ஆகிவிட்டேனா... நீ நேரில் வா மகனே! உன்னை ஒரு கை பார்க்கிறேன்..." என்று சுரேஷ் போலியாக மிரட்ட, "சரி, சரி... நம்ம சண்டையை அப்புறம் நேரில் வச்சுக்கலாம். இப்போ ஷைலுவிடம் குடுடா ப்ளீஸ்..." என்று கெஞ்ச,

"அப்படி வா வழிக்கு... கல்யாணம் ஆகிறவரைக்கும் நீ என்னிடம்தான் கெஞ்ச வேண்டும்..." என்று கெத்தாகக் கூறிவிட்டு, சிரித்துக் கொண்டே ஷைலுவிடம் போனைக் கொடுத்தான்.

அதுவரை அவர்கள் இருவரும் போடும் போலியான சண்டையை ரசித்துக் கொண்டிருந்தவள், போனை வாங் கியதும், "நீ பேசு..." என்று சைகையில் சொல்லி விட்டு, அந்த இடத்தை விட்டு அகன்ற சுரேஷை நன்றியுடன் பார்த்தாள்.

ஷைலுவின் குரல் கேட்டதும், சந்தோஷமாக, "ஹாய் ஸ்வீட்டி... நீ எப்படி இருக்கே? சாப்பிட்டாயா?" எனத் துள்ளலுடன் விசாரிக்க,

"கார்த்திக், ஒவ்வொரு கேள்வியா கேளுங்க..." என்று சிரித்தவள், "நான் இப்போதான் சாப்பிட்டேன். நீங்க சாப்பிட்டீங்களா? கம்பெனி வேலையெல்லாம் முடிந்ததா?" என்று விசாரித்தாள் அக்கறையுடன்.

"ஹலோ மேடம், என்னைச் சொல்லி விட்டு நீங்க அதே மாதிரி கேட்கிறீங்க..." என்று கேலி செய்தவன், "என் வேலையெல்லாம் முடிந்துவிட்டது. நான் இப்போதான் சாப்பிட்டேன். எனக்குச் சாயங்காலம் ஃபிளைட். அநேகமா நைட் பாண்டிக்குப் போய் விடுவேன். நீ எப்போடா வருவாய்?

"சுரேஷ் பத்து நாளைக்கு வர முடியாதுன்னு சொல்லியிருக்கிறான். நான் வேண்டுமென்றால் வந்து உன்னை அழைத்து வரவா? நான் உன்னைப் பார்க்காமல் எப்படிடா இருக்கப் போகிறேன்?" என்று ஏக்கமாகப் படபடவென்று அவன் சொல்வதைக் கேட்டு ஷைலு சிரித்துக் கொண்டாள்.

"இப்போ அப்படித்தான் இருக்கும். கல்யாணத்திற்கு அப்புறம் இந்த ஏக்கமெல்லாம் போய்விடும். அப்படித்தானே?" என்று அவனைச் சீண்ட,

"ஹேய், நீ சொல்றது எனக்குப் புரியலை..." என்றான்.

"அது வந்து கார்த்திக்... நிறையப் பேர் கல்யாணத்திற்கு முன் விழுந்து விழுந்து காதலிப்பார்கள். அவர்கள்

நடக்கும்போது ஒட்டிக்கொண்டே இருப்பார்கள். அவர்கள் நடுவில் காற்று கூடப் புக முடியாது. அப்புறம் கல்யாண மானதும் கொஞ்ச நாள் கழித்து அவர்கள் நடுவில் சைக்கிள் போற அளவிற்கு இடைவெளி வரும். கொஞ்சம் வருடமானதும் நடுவில் பஸ்ஸே போகும். நீங்க எப்படி?" என்றாள் சிரிப்பை உள்ளடக்கி.

"உனக்கு உதைதான் கிடைக்கும்... இந்த மாதிரிப் பேசினால்! சீக்கிரமாக உன் அப்பாவிடம் சொல்லிக் கல்யாணத்திற்கு ஏற்பாடு செய். அதன் பிறகு பார்ப் போம். நீ சொல்வது மாதிரி நடக்குதா, இல்லையான்னு பார்ப்போம்..." என்று செல்லமாகக் கோபித்துக் கொண் டான்.

"ஐய்யோ... என் செல்லம் இல்ல... சும்மாக் கிண்டல் செய்தேன்ப்பா..." என்று சிரிக்க,

"ம்ஹூம்... இதுக்கு மேல எனக்குத் தாங்காது. நான் சென்னைக்கே வந்து விடுகிறேன். நீ என்றைக்குப் பாண்டிக்குப் போகிறாயோ... அப்போது நானும் உன் கூடவே வருகிறேன். நீ இந்த மாதிரிப் பேசி என்னை... மூடை கிரியேட் செய்யாதே... அப்புறம் ஆபத்தாகிடும்..." என்று அடிக்குரலில் கொஞ்சினான்.

"ஏன் நீங்களும் எதிர்காலத்தில் அப்படித்தானோ?" என்று மீண்டும் சீண்ட,

"ம்ஹூம்... இதுக்குப் பதில் இப்போ சொல்ல முடியாது. நேரில் உன்னைச் சந்திக்கும்போது கண்டிப்

பாகத் தருகிறேன். இதற்காகவே நீ சீக்கிரம் வர வேண்டும். இப்படிக் கேட்டதற்கு ஒரு பெனால்டியும் உண்டு. அதைக் கண்டிப்பாகக் கட்ட வேண்டும். அது என்னவென்று நேரில் சொல்கிறேன்...” என்றான் கிறக்கத்துடன்.

“ஹையோ கார்த்திக்... உங்களை என்ன செய்வது என்றே எனக்குத் தெரியவில்லை...” என்றவளின் சிணுங்கலுக்கு,

“அதைப் பற்றி நீ கவலைப்படாதே. என்ன செய்யணும்னு நான் உனக்குச் சொல்லித் தர்றேன்...” என்று சிரித்தவன், “சரிடா... நம்ம டீலை நேரில் வைத்துக் கொள்ளலாம். நைட் போன் செய்கிறேன். டேக் கேர்...” என்று போனை வைத்தான்.

அத்தையின் அன்பிலும் சுரேஷின் பாசத்திலும், கார்த்திக்கின் காதலிலும் நனைந்தவளின் நாட்கள் சுகமாக உருண்டோடின.

ஒரு நாள் மாலை விக்கி போன் செய்து சகோதரிகள் இருவருக்கும் வெளிநாட்டு மாப்பிள்ளைகள் அமைந்து விட்டார்கள் என்றதும், ஷைலு கவலையாகி, “அவர்கள் வெளிநாட்டுக்குச் சென்று விட்டால் அடிக்கடி பார்க்க முடியாமல் போய் விடுமே... நான் அப்பாவிடம் பேசுகிறேன்,” என்றதுமே, விக்கி கோபத்தில் எகிறத் தொடங்கி விட்டான்.

“நீதான் அவர்கள் மேல் பாசத்தைப் பொழிகிறாய். ஆனால் அவர்களோ உனக்கு எதற்கு இப்போது

சுரேஷுடன் திருமணம் ஏற்பாடு செய்தீர்கள்னு அப்பா, அம்மாவுடன் சண்டை போடுகிறார்கள். இப்படிப்பட்டவர் களுக்கா நீ பரிதாபப்படுகிறாய்...” என்று கொந்தளிக்க,

“இல்லை விக்கி... நான்...” என்ற தமக்கையை இடைமறித்தான்.

“நீ நினைப்பது போல அவர்கள் நம்மையெல்லாம் பிரிந்து வெளிநாட்டிற்குப் போகப் போகிறோமே என்ற கவலையுடன் இருக்கவில்லை. மாறாகச் சந்தோஷமும், மமதையும்தான் அதிகமாக இருக்கிறது. அதனால் நீ அவர்களை நினைத்து உருகாதே. நன்றி கெட்டவர்கள்...

“அப்படியே நீ பாசத்தைக் காட்டினாலும் உடனே உன்னை ஓடி வந்து அணைத்து என் அருமைத் தங்கை யேன்னு கொஞ்சுவார்கள் என்று நினைக்காதே. இது ஒன்றும் சினிமா அல்ல... வாழ்க்கை...” என்று பொரிந்து விட்டு,

“நீ இன்னொன்றையும் ஞாபகம் வைத்துக் கொள். சுரேஷ் அத்தானுக்கு உன்னை நிச்சயம் செய்ததைக் கேட்டே வீட்டில் தினம் ரகளையாக இருக்கிறது. இந்த லட்சணத்தில் நீ கார்த்திக் சாரை விரும்புகிறாய்னு அவர்களுக்குத் தெரிந்தது... உன்னை நார் நாராகக் கிழித்து விடுவார்கள். அதனால் உன் பரிதாபத்தை இவர் களிடம் காட்டி உன் நேரத்தை வீணடிக்காமல் அத்தை வீட்டில் ஜாலியாக இரு...” என்று நீண்ட பிரசங்கம் செய்ய, தம்பியின் முதிர்ச்சியான பேச்சைக் கேட்டுப் பிரமிப்பில் வாயடைத்துப் போனாள்.

எதிர்முனை அமைதியாக இருக்கவும், "சாரிக்கா... நான் ஏதாவது தவறாப் பேசிட்டேனா?" என்று மன்னிப்புக் கேட்டவனை அமைதிப்படுத்தி,

"நீ சொல்றது நூத்துக்கு நூறு உண்மை என்றா லும் ஏனோ எனக்குள் ஒரு உறுத்தல். அது எதனால் என்று தெரியவில்லை..." என்று மீண்டும் ஆதங்கப்பட்ட தமைக்கைக்கு,

"உனக்கு ஒரு உறுத்தலும் வேண்டாம். அப்பா பிளான் செய்துதான் இந்த மாப்பிள்ளைகளை ஏற்பாடு செய்திருக்கிறார். ஒருவேளை நம்மையெல்லாம் பிரிந்து சென்றாலாவது அவர்களுக்குப் பாசம் என்றால் என்ன வென்று தெரிகிறதான்னு பார்ப்போம். ஆனாலும் எனக்குச் சந்தேகம்தான். அவர்கள் திருந்தாத ஜென்மம்..." என்று முடித்து விட்டுக் கார்த்திக்கைப் பற்றி விசாரித்தான்.

அவனிடம் கார்த்திக்கைச் சந்தித்தது பற்றிக் கூறி யதும், "தேங்க் காட்... ஒரு வழியா சுரேஷ் அத்தானின் பிராப்ளம் சால்வ் ஆகிவிட்டது. இந்த ரெண்டு ஹிட்லர்ஸ் கல்யாணம் முடிந்துவிட்டால் அப்பாவிடம் தைரியமாகச் சொல்லி விடலாம்..." என்று நிம்மதியடைந்தவன், "கார்த்திக் சாரைச் சந்தித்துப் பேசியதால் இந்தத் தம்பி ஞாபகமே வரவில்லையோ?" என்று புன்னகையுடன் சீண்டினான்.

அவனின் சீண்டலுக்குச் சன்னமாகச் சிரிக்க, "ஜாக்கிரதைக்கா... இந்த ஹிட்லர்ஸுக்குத் தெரிந்தால் நீ அம்பேல்... சரி, நான் அப்புறம் கால் செய்கிறேன்..." என்று படபடவென்று பேசி விட்டுப் போனை வைத்ததும்,

'விக்கி சொல்கிற மாதிரி... ஏன் நம்மால் அவர்கள் எப்படியோ போகட்டும்னு நினைக்க முடியவில்லை...' என்று யோசித்தவாறு தோட்டத்தில் உலவிக் கொண்டிருந்தாள்.

காபியுடன் தன்னைத் தேடி வந்த அத்தையிடம், விக்கி போன் செய்த விவரத்தைக் கூறித் தன் மனக் கவலையையும் சேர்த்தே கூற, "எனக்கும் அண்ணன் போன் செய்து விஷயத்தைச் சொன்னார். என்னைப் பொறுத்தவரை மட்டுமில்லை. அவர்கள் இருவரைப் பற்றித் தெரிந்தவர்கள் கூறும் ஒரே பதில்... பிறந்த வீட்டை விட்டு ஆயிரம் மைல் தள்ளியிருந்தால்தான் நல்லது.

"அண்ணன் எது செய்தாலும் அதில் ஒரு அர்த்தம் இருக்கும். அவர்கள் உனக்கு இவ்வளவு கொடுமை செய்தும் நீ அவர்கள் மேல் இன்னும் பாசமாகத்தான் இருக்கிறாய். உன் நல்ல மனசு யாருக்கும்மா வரும்?

"பொயடிக் ஜஸ்டிஸ் என்பார்கள். அதனுடைய அர்த்தத்தை அவர்கள் சீக்கிரமே புரிந்து கொள்வார்கள். அதனால் நீ மண்டையைப் போட்டுக் குழப்பிக் கொள்ளாதே. சுரேஷ் ஆபீசிலிருந்து வந்தவுடன் அவனுடன் எங்கேயாவது வெளியே போய் விட்டு வா. இந்தக் குழப்பம் எல்லாம் தீரும்..." என்றார் கனிவுடன் அவளின் தலையை வருடி.

பாண்டிக்குத் திரும்பின கார்த்திக் திவ்யாவிடம் பொதுப்படையாகப் பேசிவிட்டுத் தன் அறைக்குச் சென்றவன், அடுத்த நாள் கம்பெனியிலிருந்து திரும்பி

வந்ததும் அவளைப் பீச்சுக்கு அழைத்துச் சென்று அவள் மனதில் என்ன இருக்கு என்று அறிவதற்காக, "இப்போ உன் படிப்பு முடிந்துவிட்டது. அடுத்து என்ன செய்வதாகப் பிளான்?" என்று கேட்டான்.

அதுவரை அமைதியாகக் கடலையே பார்த்துக் கொண்டிருந்தவள், அவனைத் திரும்பிப் பார்த்து விட்டு,

"ஏதாவது வேலைக்கு அப்ளை செய்ய வேண்டும் அண்ணா. இல்லை என்றால் நானே சொந்தமாக பிசினெஸ் செய்யும் ஐடியாவில் இருக்கிறேன்..." என்றாள் சலிப்பாக.

அவளின் சலிப்பான பேச்சைக் கேட்டு ஒரு நிமிடம் துணுக்குற்று, "சரி... வேலை கிடைத்த பிறகு என்ன செய்வதாக உத்தேசம்? ஏனென்றால் இப்பவே உனக்கு இருபத்தி மூன்று வயசாச்சு. எப்போ கல்யாணம் செய்து கொள்வதாக இருக்கிறாய்?" என்ற கார்த்திக்கின் கேள்விக்கு அவளிடமிருந்து பதிலே இல்லை.

"என்ன திவ்யா, உன்னைத்தான் கேட்கிறேன். பதில் சொல்..." என்று அழுத்தமாகக் கேட்கவும், தன் கை விரல்களை ஆராய்ந்து கொண்டே, "எனக்குக் கல்யாணம் செய்து கொள்கிற ஐடியா இல்லையண்ணா...!" என்ற வளைக் கூர்ந்து நோக்கினான்.

"என்ன முட்டாள்தனமா பேசுகிறாய்? ஏன் கல்யாணம் வேண்டாம்? இப்படியே எத்தனை வருடம் இருக்க முடிவு செய்திருக்கிறாய்? இப்பவே சித்தியும், சித்தப்பாவும்

உன் கல்யாண விஷயத்தில் அவசரப்படுகிறார்கள். நீ என்னடாவென்றால் கல்யாணமே வேண்டாம் என்கிறாய்.

"சொல்லு... ஏன் இந்த முடிவு? போன வருடம் நீ சுரேஷ் பற்றிக் கேட்டாய். இன்னும் அதே நினைப்புதான் இருக்கிறதா? இல்லை..." என்று முடிக்கும் முன்னரே திவ்யா எழுந்து கடல் அலையை நோக்கிச் சென்றாள்.

அவள் பின்னாலேயே சென்றவன், "கேட்டதற்குப் பதில் சொல்லாமல் இருந்தால் என்ன அர்த்தம்? இதுதான் நீ அமெரிக்காவில் கற்றுக் கொண்டு வந்த நாகரிகமோ?" என்றான் சிறு கோபத்துடன்.

தமையனின் கோபத்தைத் தாங்க முடியாமல் திரும்பியவளின் கண்களில் கண்ணீரைக் கண்டதும் மனம் பதற, "உன் மனசில் என்ன இருக்குன்னு சொன்னாத்தானே தெரியும் திவ்யா! சொல்லு... நீ இன்னும் சுரேஷை நினைத்துக் கொண்டு இருக்கிறாயா?" என்றான் கனிவாக மீண்டும்.

அப்பொழுதும் அவள் அமைதியின் பிடியிலே இருக்கவும், "சரி... நான் வேண்டுமென்றால் உன் அப்பாவிடமும் அம்மாவிடமும் சொல்லி மாப்பிள்ளை பார்க்கச் சொல்லட்டுமா?" என்று கேட்க,

பதறிப் போய் அவசரமாக, "வேண்டாமண்ணா... எனக்குக் கல்யாணம் இப்போ வேண்டாம். ப்ளீஸ், புரிந்து கொள்ளுங்களேன்..." என்று அழ ஆரம்பித்தாள்.

அவளின் கையைப் பற்றி ஆதரவாகத் தடவிக் கொடுத்து, "இங்கே பார் திவ்யா! நீ மனசில் என்ன நினைத் திருக்கிறாய்னு எனக்குத் தெரியும். முதலில் அழுகையை நிறுத்தி விட்டுச் சொல். நீ சொன்னால்தானே அண்ணன் ஏதாவது செய்ய முடியும். நீ நம் குடும்பத்தில் ஒரே பெண் வாரிசு. உன் ஆசையை மீறி நாங்க எதுவும் செய்ய மாட்டோம். ப்ராமிஸ்!" என்ற சகோதரனின் வாஞ்சையான பேச்சில் கண்ணீர் நின்றது.

ஆனாலும் தமையனை நிமிர்ந்து பார்க்கத் தைரியம் இல்லாமல் குனிந்து கொண்டே, "என்னால்... என்னால்... சுரேஷைத் தவிர வேறு யாரையும் நினைத்துக் கூடப் பார்க்க முடியாது. இன்னும் என் மனதில் அவர்தான் இருக்கிறார். அவர் என்னை ஏற்றுக்கொள்ளாவிட்டாலும், எனக்கு அவரின் நினைவுகளே இந்த வாழ்க்கை முழு வதும் போதும்..." என்று சொல்லி, அவள் முகத்தை மூடிக் கொண்டு அழவும்... கார்த்திக் சிலையென நின்றுவிட்டான்.

அவனுக்கு ஆச்சரியமாக இருந்தது. பதினெட்டு வயதில் முளைத்த ஒரு காதல் இந்த ஐந்து வருடங்களாக ஆலமரம் போல் தழைத்து வளர்ந்து விருட்சமாக இருக்கிறது. அதுவும் அமெரிக்காவில் நான்கு வருடம் வாழ்ந்தாலும் எந்த ஆசாபாசத்துக்கும் இடம் கொடாமல், மனதை அலைய விடாமல் தன் முதல் காதலைப் பொத்தி வைத்துப் போற்றிப் பாதுகாப்பதோடு மட்டுமில்லாமல், அதே நினைவோடு வாழ்வேன் என்கிறாளே... ஒருவேளை இவள் காதலை நான்தான் புரிந்து கொள்ளவில்லையா என்று ஆயாசமாக இருந்தது.

எப்படியாவது இவளைச் சுரேஷுடன் சேர்த்து வைக்க வேண்டும் என மனதில் உறுதி எழுந்தது.

அந்த உறுதியோடு, "நீ சுரேஷைக் காதலிக்கிறாய்னு எனக்குத் தெரிந்தாலும் இப்போதைய உன் மனநிலை என்னவென்று தெரிந்து கொள்ளத்தான் கேட்டேன். நான் அவனைக் கொண்டு வந்து உன் நேரில் நிறுத்தினால் நீ திருமணத்திற்குச் சம்மதிப்பாய்தானே?" என்று கேட்கவும், அவள் விழிகள் ஆச்சரியத்தில் விரிந்தன.

"அண்ணா, நீங்க நிஜமாகத்தான் சொல்றீங்களா? அவர் இருக்குமிடம் உங்களுக்குத் தெரியுமா?" என்று ஆவலாகக் கேட்டவளைத் தோளோடு அணைத்து, "இப்போ எதுவும் நான் சொல்ல விரும்பவில்லை. கூடிய சீக்கிரம் நான் அவனை உன் முன்னால் நிறுத்துகிறேன். இந்த அண்ணன் மேல உனக்கு நம்பிக்கை இருக்கில்லையா?" என்றான் ஆறுதலாக அவள் தலையைத் தடவியபடி.

தமையனின் பேச்சில் முகமெல்லாம் விகசிக்க, ஏதோ கேட்க வாய் எடுத்தவளின் முகம் சட்டென்று வாடி விட, "என்னம்மா... ஏதோ கேட்க வந்தாய்... என்ன தயக்கம்? கேள்!" என ஊக்கப்படுத்தவும்,

"உங்களை நம்பாம நான் வேறு யாரை நம்பு வேன்? நீங்க சொன்ன மாதிரி செய்வீர்களே... ஆனால் அவர் ஏற்கெனவே என் காதலை ஏற்றுக்கொள்ளவில்லை. இப்போ நீங்க அவரைக் கண்டுபிடித்து அவரிடம் பேசினால் ஒத்துக் கொள்வாரா? இத்தனை வருடத்தில்

அவருக்குக் கல்யாணம் ஆகாமல் இருக்கணுமே... அப்படியே இருந்தாலும் அவர் மனதில் நான் இருப்பேனா?

"இல்லை... நீங்கள் பேசித்தான் அவரை வற்புறுத்திச் சம்மதிக்க வைக்க வேண்டுமென்றால் எனக்கு வேண்டாமண்ணா... காதலை யாசகமாகக் கேட்க எனக்கு இஷ்டமில்லை. நான் இப்படியே இருந்துவிட்டுப் போகிறேன்..." என்றவளின் பேச்சு பெரியவனுக்குப் பெரு மிதத்தை அள்ளி வழங்கியது.

"திவ்யா! வேலைதான் சிபாரிசில் பெறலாம். காதலைச் சிபாரிசில் பெற்றால் அது காலத்துக்கும் நிலைக்காதுன்னு எனக்குத் தெரியும். ஏன் உனக்கு அழகு இல்லையா? படிப்பு இல்லையா? அந்தஸ்து இல்லையா?

"சுரேஷ் அன்று அப்படிச் சொன்னதற்குக் காரணம் அவனுக்குப் படிப்பைத் தவிர வேறு எந்த எண்ணமும் அவன் மனதில் இல்லை. ஆனால் இப்போது உன்னைச் சந்தித்தால் நிச்சயம் உன்னை உனக்காகவே ஏற்றுக் கொள்வான். நீ பயப்படாதே. மற்றதை நான் பார்த்துக் கொள்கிறேன்..." என்ற கார்த்திக்கின் வார்த்தைகள் அவளுக்குப் பலமூட்ட, அதன் விளைவாக முகச் சுணக்கமும் நீங்கி முகத்திலும் புன்னகை வந்தது.

"தட்ஸ் குட். நீ எப்போதும் இப்படித்தான் இருக்கணும். இனி எதையும் போட்டுக் குழப்பிக் கொள்ளாதே. நான் சித்தி, சித்தப்பாவிடம் பேசிக் கொள்கிறேன். நீ சந்தோஷமாக இரு. அது போதும்..." என்றவன், "சரி, வா.

ஐஸ்கிரீம் சாப்பிடலாம்...” என ஐஸ்கிரீம் பார்லர் நோக்கிச் சென்றார்கள்.

அன்று வெள்ளிக்கிழமை என்பதால் தலை குளித்து மதியம் சாப்பிட்டு விட்டு, டி.வி. முன்னால் அமர்ந்து கொண்டிருந்தவள்... டி.வியில் ஓடிக் கொண் டிருந்த காதலுக்கு மரியாதை படத்தில் அவள் கண்கள் நிலை குத்தியிருந்தாலும், அவளின் நினைவுகள் கார்த் திக்கை முதன் முதலில் பார்த்து அதிர்ந்து நின்றது.

அவன் காதலைச் சொன்னபோது ஏற்கவும் முடியாமல், விடவும் முடியாமல் ஜுரம் வந்தது. அதன் பிறகு கார்த்திக்கைப் பார்க்க ஏங்கிக் காயத்ரியிடம் அழுதது, கார்த்திக்கின் அம்மாவினால் கார்த்திக்கைச் சந்தித்துக் காதலைப் பரிமாறிக் கொண்டது, இங்கே சென்னையில் அவனுடன் சுற்றியது... இதுவரைக்கும் அவனுடன் பேசிக் கொண்டிருப்பது என எல்லாம் உலா வந்தது.

இதுவரைக்கும் இந்தப் படம் போல நல்லாப் போய்க் கொண்டிருக்கிறது. இனிமேல் என்ன ஆகும்? இதில் வரும் நாயகனும், நாயகியும் பிரிந்து விடுவார்களே... அது மாதிரி ஏதாவது ஆகிவிடுமோ என்று நினைக்கும்போதே அவளுக்குத் தூக்கிப் போட்டது.

சட்டென்று தலையை உலுக்கிக் கொண்டு, “ச்சே... வெள்ளிக்கிழமை அதுவுமா என்ன மாதிரி நினைத்துக் கொண்டிருக்கிறேன். மனதில் என்ன நினைக்கிறோமோ அதுதானே நடக்கும். நாம் நல்லதே நினைப்போம்.

நல்லதே நடக்கும்...” என்று மனதைச் சமாதானப்படுத்திக் கொண்டு, மீண்டும் கவனத்தைப் படத்தில் பதித்தாள்.

கண் என்னவோ படத்தில் இருந்தாலும், கை பாட்டுக்கு டி.வி. ரிமோட்டை சேனல் சேனலாக மாற்றிக் கொண்டிருந்தது. அவள் சேனல் மாற்றுவதே மனதில் பதியாது, டி.வி.யையே பார்த்துக் கொண்டிருக்க, தோட்டத்தில் செடிகளை வேலையாளின் உதவி கொண்டு பாத்தி போட்டுக் கொண்டிருந்த லாவண்யா ஒரு தெளிவான சத்தம் இல்லாமல், கலவையாகச் சத்தம் கேட்டு ஹாலுக்கு வந்தவர், ஷைலுவின் நிலையைக் கண்டு, “ஷைலு...” என்றழைக்க,

திடுக்கிட்டு விழித்தவள் மாதிரி திருதிருவென்று விழித்தாள்.

அவள் பக்கத்தில் அமர்ந்து அவள் கையில் இருந்த ரிமோட்டை வாங்கி, டீபாயின் மேல் வைத்துவிட்டு, “என்னம்மா... என்ன யோசனை? டி.வி. சேனல் மாறுவது கூடத் தெரியாம அமர்ந்திருக்கே! அப்பா, அம்மாவைப் பார்க்க ஆசை வந்துவிட்டதா?” என்றார் வாஞ்சையுடன்.

தன் உள்மனப் போராட்டங்களைக் கவனமாக மறைத்துத் தன்னைச் சுதாரித்துக் கொண்டவள், மனதிற்குள் அத்தைக்கு என்ன பதில் சொல்வது, கார்த்திக்கைப் பற்றி யோசித்தேன்னு எப்படி சொல்ல முடியும்? என் மனதில் இருப்பவர் கார்த்திக்தான். சுரேஷ் இல்லை என்று இவரிடம் நான் எப்படி சொல்வேன்?

அதை எப்படித் தாங்கிக் கொள்வார்... இந்த அன்பான பெண்மணி என்று ஒரு நிமிடம் யோசித்தவள்... சட்டென, "இல்லை அத்தை! அக்காள்களைப் பற்றி யோசித்துக் கொண்டிருந்தேன். அவர்களுக்கு வரும் மாப்பிள்ளைகள் எப்படி இருப்பார்கள்? இவர்கள் இதே மாதிரி அவர்களிடம் ஆணவமாக நடந்து கொள்வார்களா? இல்லை அடங்கிப் போவார்களா?" என்று ஒரு வழியாகக் கோர்வையாகக் கூறிச் சமாளித்தாள்.

"அதுக்கு நீ ஏன் ஷைலு குட்டி குழப்பிக் கொள்கிறாய்? கல்யாணம் ஆகிக் கணவன் சொல்படி நடந்தாலே பாதிப் பிரச்சனைகள் தவிர்க்கப்பட்டு விடும். இல்லையென்றால் தினமும் சண்டையும் கையுமாத்தான் நிற்கணும். இவர்கள் போவது வெளிநாடு. புருஷனுடன் சண்டை போட்டால் உடனே கோபித்துக் கொண்டு அம்மா வீட்டுக்கும் வர முடியாது. தானேதான் சமாளித்தாகணும்... பார்ப்போம்.

"இரண்டும் அரேபிய திமிர் பிடித்த குதிரைகள். கணவனுக்கு அடங்குதா? இல்லை, தறிகெட்டு ஓடி வருதான்னு பார்க்கலாம்..." என்று அனுபவம் நிறைந்த பெண்மணி கூறுவதைக் கேட்டுக் கொண்டிருந்தவள்... அவர் மடியில் சலுகையாகப் படுத்துக் கொண்டு, "ஏன் அத்தை... கல்யாணம் ஆகிவிட்டாலே புருஷன் என்ன சொன்னாலும் கேட்டுத்தான் ஆகவேண்டுமா?" என்றாள் அப்பாவியாக.

அதைக் கேட்டுச் சிரித்தவர், அவள் கூந்தலைச் சிக்கெடுத்துக் கொண்டே, "அப்படி எதுவும் இல்லை ஷைலு!

புருஷன் சொல்வதை ஏன் கேட்க வேண்டுமென்று பெரியவர்கள் சொல்கிறார்கள் என்றால், பொதுவாகவே ஆண்பிள்ளைகள் வீட்டில் இருக்கும் நேரத்தை விட, வெளியில்தான் அதிகம் இருப்பார்கள். நாலு இடங்களுக்குப் போய் வருவதால் அவர்களுக்கு ஓரளவு வாழ்க்கையில் அனுபவம் இருக்கும். எது சரி... எது தப்பு... என்று சீக்கிரமே புரிந்து கொள்வார்கள்."

"மே பி பெண்களும் இந்தக் காலத்தில் வெளியே போகிறார்கள். வேலை பார்க்கிறார்கள். இல்லையென்று சொல்லவில்லை. அவர்களால் ஆண்களைப் போல நினைத்த இடத்திற்கு நினைத்த நேரத்திற்குச் செல்ல முடியாதில்லையா? அப்படியே அவர்கள் போக ஆசைப் பட்டாலும் பெற்றவர்கள் அனுமதிக்க மாட்டார்கள். அதனால் பெண் பிள்ளைகளுக்கு அனுபவம் குறைவு தான். இருந்தாலும் உள்ளுணர்வு அதிகம்.

"இன்னொன்று - கல்யாணம் செய்யும்போது பெண்களை விட, ஆண்கள் வயதில் பெரியவர்களாக இருப்பதால் கணவன் என்கிற ஒரு உரிமை, நட்புணர்வு இருந்தாலும், தன்னை விடப் பெரியவர் என்ற மதிப்பு இருந்தால் நன்றாக இருக்கும் என்றுதான் இப்படிப் பிரித்துச் சொல்லாமல் ஒரேயடியாகக் கணவன் பேச்சைக் கேட்கணும் என்பது..." என்று நீளமாக அவளுக்குப் புரியும்படி நிதானமாகச் சொன்னார்.

அதைக் கேட்டுச் சிறிது நேரம் சிந்தித்தவள், "ஏன் அத்தை, நீங்களும் கணவர் என்ன சொல்கிறாரோ,

அதைக் கொஞ்சம் கூட இம்மி பிசகாமல் கேட்டு நடந் தீர்களா?" என்று கேட்க,

லாவண்யாவுக்குக் கணவரின் ஞாபகத்தில் கண் கலங்கியது.

அதைப் பார்த்துப் பதறிப் போய் எழுந்தவள், "சாரி அத்தை! நான் ஏதும் உங்களைத் தப்பாகக் கேட்டு விட்டேனா? மாமாவின் நினைப்பைத் தூண்டிவிட்டேனா?" என்றாள் மன்னிப்புக் கோரும் குரலில்.

கண்ணைத் துடைத்துக் கொண்டு, "இல்லைடா கண்ணா... நான் அவரை மறந்தாத்தானே நினைப்ப தற்கு! ஏதோ ஒரு ஞாபகம்... விடு, நீ பதட்டப்படாதே..." என்று அவளைச் சமாதானப்படுத்தித் திரும்ப அவளைப் படுக்க வைத்துக் கொண்டு,

"உன் மாமா என்னிடம் இதுவரைக்கும் கோபப் பட்டதே கிடையாது. நானும் அவரும் காதலித்துத்தான் கல்யாணம் செய்து கொண்டோம். எங்கள் வீட்டில் சம்மதிக்கவே இல்லை. கிட்டத்தட்ட ஒரு வருடம் போராடிக் கடைசியில் அண்ணன்தான் சம்மதம் வாங்கிக் கொடுத் தார்.

"அப்போது கூட என் அம்மா, அப்பா, அதான் உன் தாத்தா, பாட்டி எங்களை ஏற்றுக் கொள்ளவே இல்லை. உன் மாமா சேட்டு இனத்தைச் சேர்ந்தவர் என்பதால், அப்பாவுக்கு ரொம்பவே கோபம். ஒரு வழியாகச் சுரேஷ் பிறந்ததும் அண்ணன்தான் அவர்களைச் சமாதானப் படுத்திக் குழந்தையைப் பார்க்க அழைத்து வந்தார்.

"அதன் பிறகு உன் மாமா என்னை வைத்திருக்கும் அழகைப் பார்த்து அவர்களும் எங்களை ஏற்றுக் கொண்டார்கள். உன் மாமா என்னை இதுவரைக்கும் அதட்டியோ, திட்டியோ நான் கேட்டதே இல்லை. அவர் என்ன சொன்னாலும், அவர் பேச்சுக்கு வேறு விதமாக நான் நடந்ததே இல்லை. அதற்காக நான் அடிமையாக இருக்கச் சொல்லவில்லை. புருஷன் என்ன சொன்னாலும் அது சரியா இருந்தால் கவுரவம் பார்க்காமல் ஏற்றுக்கொள்ள வேண்டும்.

"அதே சமயத்தில் மனைவி என்ன சொன்னாலும் அது சரியாக இருந்தால் கணவனும் ஏற்றுக்கொள்ள வேண்டும். அப்போதுதான் வாழ்க்கை தெளிந்த நீரோடை போல சலசலத்து ஓடும். இல்லை, கலங்கின குட்டை மாதிரி ஆகிவிடும். அதில் நிறையப் பேர் மீன் பிடிக்க ஆரம்பித்து விடுவார்கள்..." என்று வாழ்க்கையின் இலக்கணத்தைப் பற்றி லாவண்யா சொல்வதைக் கவனமாகக் கேட்டுக் கொண்டிருந்தாள்.

அவள் மனதில், 'கார்த்திக் இப்போது இப்படி இருக்கிறாரே, கல்யாணமானால் சராசரி ஆண்பிள்ளைகள் போல மாறிவிடுவாரா? அல்லது மாமா மாதிரி அப்படியே இருப்பாரா?" என்று அவள் நினைப்பு ஓடும் பாதையைக் கண்டு திடுக்கிட்டு, "ச்சே! என் கார்த்திக்கையே சந்தேகப் படுகிறேனே! நிச்சயம் அவர் அந்த மாதிரி சராசரி ஆண் அல்ல..." என்று தன்னையே திட்டிக் கொண்டாள்.

ஷைலு ஏதும் சொல்லாமல் இருப்பதை உணர்ந்த லாவண்யா, "என்ன ஷைலு குட்டி, இந்தக் குட்டித் தலைக் குள்ளே என்ன பலமான யோசனை? எனக்குச் சொல்லக் கூடாதா?" என்றார் அன்போடு.

அவர் கேட்டதும் தன்னையும் மீறிப் புன்னகைத்து, "ஒன்றும் இல்லை அத்தை! உங்களைப் பற்றித்தான் நினைத்துக் கொண்டிருந்தேன். உங்களைப் போல, என் அப்பா அம்மாவைப் போல எல்லோருக்கும் அமைந்தால் எப்படி இருக்கும்னு நினைத்தேன்..." என்றாள் சமாளிப் பாக.

"ம்ஹூம்... எல்லோருக்கும் அப்படி அமைவது கஷ்டம் ஷைலு! அவரவர் செய்த முன்வினைப் பயன் களை வைத்துத்தான் அவர்களது வாழ்வும் அமையும் என்பார்கள். உனக்கு அந்தக் கவலையில்லைடா! சுரேஷ் உன்னை அன்பாகப் பார்த்துக் கொள்வான். நல்ல பையன். உன் மேல் உயிரையே வைத்திருக்கிறான்..." எனவும்,

திடுக்கிட்டு... பேச்சு அபாயகரமான பாதையில் போகிறதே, இதை எப்படி மாற்றுவது என்று யோசித்தவள், சட்டென... "சரி அத்தை, இன்று கோயிலுக்குப் போக லாமா?" என்று பேச்சைத் திசை திருப்பினாள்.

"இல்லைடா கண்ணா! சுரேஷ் வந்ததும் அவனுடன் நீ போ. மாமா இறந்து ஒரு வருடம் முடியாமல் நான் எங்கேயும் போக முடியாது..." என்றவர், "சரி, நீ போய்க் கிளம்பி ரெடியாக இரு. அவன் ஆபீசிலிருந்து வந்த

வுடன் அழைத்துப் போ...” என்று அவளின் தலையை வாரிப் பின்னலிட்டார்.

வீட்டில் பூத்த நித்தியமல்லிப் பூவைத் தொடுத்து அவள் தலையில் வைத்ததும், அதன் வாசம் அவளுக்குக் கார்த்திக்கின் வார்த்தையை நினைவில் கொண்டு வந்தது. கார்த்திக்கிற்குப் பூ வைத்தால் பிடிக்கும் என்ற நினைவே அவளுக்குப் புளகாங்கிதமடையச் செய்ய, அதன் நினை விலே மெலிதாகப் புன்னகைத்துக் கொண்டே, மைசூர் சில்க் சேலையைக் கட்டிக் கொண்டு ரெடியானாள்.

கோயிலுக்குச் செல்லும் வழியில் ஷைலு தீவிரமாக யோசிக்கும் பாவனையில் இருப்பதைக் கவனித்தவன் என்னவென்று பார்வையாலேயே கேட்க, “ம்ச்... நத்திங்...” என்று விக்கி சொன்ன விஷயத்தைக் கூறியதும்,

உற்சாகமாக விசிலடித்து, “நீ நேற்று சொல்லவே இல்லையே...” என்றான்.

“சாரி சுரேஷ், நேற்று ஒரே குழப்பத்தில் இதை உங்களிடம் சொல்ல மறந்துவிட்டேன்...” என சங்கடத் துடன் கூற,

“கமான் ஷைலு! இதென்ன பெரிய விஷயமா? இதற்குப் போய்ச் சங்கடப்படுகிறாய். ஆனால் இந்த விஷயத்தில் உனக்குச் சந்தோஷமான செய்தி இருக் கிறது...” என்று சொல்லி ஆனந்தப்பட்டவன், எதையோ

யோசித்தவனாக, "ஆமா... இந்த விஷயத்தைச் சொல்லும் போது நீ ஏதோ வருத்தப்பட்ட மாதிரி இருக்கே ஏன்? அட மண்டூ... இது சந்தோஷப்பட வேண்டிய விஷயம். இதில் நீ வருத்தப்பட என்ன இருக்கு?" என்றான் புரியாமல்.

*

"என்ன சுரேஷ், இப்படிச் சொல்றீங்க? அக்கா இரண்டு பேரும் வெளிநாட்டுக்குப் போய் விட்டால் அவர்களை அடிக்கடி பார்க்க முடியாதே. அது வருத்தப்பட வேண்டிய விஷயம் இல்லையா?" என்று திருப்பிக் கேட்டான்.

"ஆமாமாம்... நிறையவே வருத்தப்பட வேண்டிய விஷயம்..." என்று நக்கலடித்து விட்டு, அவர்கள் இங்கே இருந்தால் மட்டும் விக்கி சொன்ன மாதிரி உன் மேல் அப்படியே அன்பைப் பொழிந்து திக்குமுக்காட வைப் பார்கள்னு கனவு காண்கிறாயா?

"மாமா காரணமாத்தான் இந்த மாதிரிச் செய்கிறார். அதனால் நீ இதைப் பற்றி யோசிப்பதை முதலில் விடு. கார்த்திக் சரியாகத்தான் உன்னைக் கணிச்சு வைத் திருக்கிறான். குழந்தையாகவே இருக்கிறாயே ஷைலும்மா... நிஜ உலகத்திற்கு வா. உன்னை நான் யாரையும் வெறுக்கச் சொல்லவில்லை. அட்லீஸ்ட் இந்த மாதிரி உன்னைக் குழப்பிக் கொள்ளாமல் இரு. அது போதும்..." என்றவனைச் சலிப்பாகப் பார்த்தாள்.

"எல்லோரும் ஒரே மாதிரிச் சொல்றீங்க... ஆனால் என்னால்தான் அப்படி நினைக்க முடியவில்லை. மேனு

ஃபாக்ஷரிங் டிஃபெக்ட் போலிருக்கிறது...” என்று சொல்லிச் சிரிக்க,

சுரேஷும் இணைந்து சிரித்து விட்டு, “இருக்கும்... இருக்கும். தலையில் சாம்பல் கலரில் மூளை ஒன்று எங்க எல்லோருக்கும் இருக்கு. உனக்கு இருக்குதா என்று செக் செய்யணும். பாவம் கார்த்திக், உன்னிடம் என்ன கஷ்டப்படப் போகிறானோ?” என்றான் மீண்டும் கேலியாக.

“ஐயோ சுரேஷ், நீங்க இப்பல்லாம் ரொம்பக் கிண்டல் செய்றீங்க...” என்று செல்லமாகக் கோபித்துக் கொண்டு, “என்னைக் கிண்டல் செய்தது போதும். இந்தக் கேள்விக்குப் பதில் சொல்லுங்க...” என்றவள், “நீங்கள் உங்கள் வருங்கால மனைவியை எப்படி நடத்துவீர்கள்?” என்று கேட்டாள்.

அதைக் கேட்டு ஒரு நிமிடம் ஷைலுவை வினோத மாகப் பார்த்தவன், “என்ன ஆராய்ச்சி எல்லாம் பலமா இருக்கு? என்ன ஆச்சு உனக்கு? ஏன்... கல்யாணம் ஆனதும் கார்த்திக் எப்படி இருப்பான்னு இப்பவே சென்சஸ் எடுக்க ஆரம்பிச்சிட்டியா?” என்று கலாட்டா வாகச் சிரித்து விட்டு,

“இரு... இரு. நானே கார்த்திக்கிடம் கேட்டுச் சொல் கிறேன்...” எனக் கேலியாக மிரட்ட,

“ஹையோ சுரேஷ்! நான் உங்களைக் கேட்டேன். இன்றைக்கு நானும் அத்தையும் பேசும்போது மாமாவைப் பற்றிச் சொன்னார்கள். அத்தையும் மாமாவும் மேட் ஃபார்

ஈச் அதர் மாதிரி இருந்தார்கள் என்றார்கள். நீங்கள் அவர்களுடைய பிள்ளை.

"உங்களுடைய திங்கிங், அதாவது உங்களுக்கு வரப் போகிற மனைவியைப் பற்றிய எண்ணம் எப்படி இருக்கும்? நீங்கள் எப்படி அவர்களை ட்ரீட் செய்வீர்கள் என்ற அர்த்தத்தில் கேட்டேன். அதற்குள் கார்த்திக்கை இதில் இழுத்து என்னைக் கேலி செய்கிறீர்களே..." என்று சிணுங்கினாள்.

"ஓ...! நீ அப்படி வர்றீயா? சாரி... நீதான் இருபத்தி நான்கு மணி நேர சர்வீஸ் மாதிரி கார்த்திக் பல்லவியே பாடுகிறாயே... அதனால் அதை நினைத்துத்தான் கேட்டிருப்பாய்னு நினைத்து விட்டேன்..." என்று சிரித்ததும், ஷைலு அவனை முறைக்க...

"சரி... சரி. முறைக்காதே. சொல்கிறேன்..." என்றான்.

"நான் சின்ன வயசிலிருந்து ஆதர்ஷ தம்பதியா வாழ்ந்த என் பெற்றோரைப் பார்த்து வளர்ந்த காரணத்தால், என் மனைவியாக வருகிறவளை நிச்சயம் ஒரு தோழியாத்தான் முதலில் நடத்துவேன். அதன் பிறகுதான் என் மனைவி என்ற ஸ்தானம். அப்பாவை மாதிரிதான் நானும்... எனக்குப் பெண்கள் மேல் எப்போதுமே ஒரு மதிப்புண்டு.

"பெண்கள் இல்லாவிட்டால் இந்த உலகமே இல்லை. அவர்கள் கடவுளுக்குச் சமமானவர்கள். எப்படி என்று கேட்கிறாயா? அவர்கள்தானே ஒரு உயிரைப்

பூமிக்குக் கொண்டு வருகிறார்கள். 'உலகத்தில் எதை வேண்டுமானாலும் வாங்கலாம். தாயைத் தவிர...' என்று ஒரு வார்த்தையே இருக்கிறது. அதனால் என் மனைவி யின் உணர்வுகளுக்கு மதிப்புக் கொடுக்கும் ஒரு நல்ல கணவனாத்தான் இருப்பேன். போதுமா? இப்போ உன் கேள்விக்குப் பதில் கிடைத்ததா?" என்றான் சிறு சிரிப்புடன்.

"இதே கேள்வியைக் கார்த்திக்கிடம் கேட்க வேண் டும்..." என்று மனதில் நினைத்துக் கொண்டு, "சரி சுரேஷ்... இப்போ திவ்யா உங்க எதிர்கால மனைவி என்றால் அவர்கள் வேலைக்குப் போக ஆசைப்பட்டால் அல்லது சொந்தமாகப் பிசினெஸ் செய்ய முற்பட்டால் உங்க ரியாக்ஷன் என்ன?" என்றாள் அடுத்த கேள்வியாக.

"நிச்சயமா அவள் ஆசை அதுதான் என்றால் நான் ஏன் தடுக்க வேண்டும் ஷைலு? நான் படித்து விட்டு வேலைக்குப் போகிற மாதிரி அவளும் விரும்பினால் போகட்டும். இல்லை, நானே அவள் என்ன தொழில் செய்ய விரும்புகிறாளோ, அதை நானே அமைத்துத் தருவேன்..." என்றான் யோசனையாக.

"அவர்கள் ஏன் வேறு பிசினெஸ் செய்யப் போகிறார்கள்? அவர்கள் படித்தது பேஷன் டிஸைனிங். அதனால் உங்க ஜுவல்லர்ஸை அவர்களிடம் கொடுத்து விடுங்கள். சூப்பராக நடத்துவார்கள்..." என்று கூறிய வுடன் ஞாபகம் வந்தவனாக,

"அட ஆமாம். திவ்யா படித்திருப்பது பேஷன் டிசைனிங் இல்லையா...! நான் மறந்தே போய் விட்டேன்.

அப்போ கடையைத் திவ்யாவிடம் கொடுத்துவிட்டால் அவள் பார்த்துக் கொள்வாள். நான் என் வேலையை விட வேண்டிய அவசியம் இல்லை.

"பார்க்கலாம். நாம் என்னதான் கணக்குப் போட்டாலும் ஆண்டவன் கணக்கு என்னன்னு தெரிய வில்லையே! லெட் அஸ் சீ..." என்றான் யோசனையாக.

"சுரேஷ், இந்தச் சனிக்கிழமை பாண்டிக்குப் போகலாமா? உங்களுக்கு வேலை ஏதும் இருக்கிறதா?" என்று திடீரென்று கேட்க,

"என்ன... திடீரென்று டாபிக் மாறுது. ஏன்... ஊருக்குப் போய் உன் அன்பான சகோதரிகளைப் பார்க்க ஏக்கமாக இருக்கிறதா?" என்றான் சீண்டலாக.

"உங்களுக்கு உதைதான் கிடைக்கும். நக்கலா செய்யறீங்க..." என்றதும்,

"பாருடா... உனக்கு உதைக்கிற அளவுக்குக் கூட தைரியம் இருக்கா? ம்ம்... கார்த்திக் உனக்கு அவன் துணிச்சலைப் பாதி உனக்கு டிரான்ஸ்பர் செய்து விட்டான் போலிருக்கிறது..." என்றான் சிரித்துக் கொண்டே.

"ம்ம்ச்... இல்லை..." என்று இழுத்து, "எனக்குக் கார்த்திக்கைப் பார்க்க வேண்டும் போல் உள்ளது. அதனால்தான் கேட்கிறேன். ப்ளீஸ் சுரேஷ்..." என்று ஏக்கத்தோடு கேட்டவளைக் கண்ணில் சிரிப்புடன் பார்த்து விட்டு,

"போன வாரமே கேட்பாய்னு எதிர்பார்த்தேன். கொஞ்சம் லேட்டாகக் கேட்கிறாய்..." என்றான் நமுட்டுச் சிரிப்புடன்.

"எனக்குப் போன வாரமே போகத்தான் ஆசை. ஆனால் உங்கள் வேலையை டிஸ்டர்ப் செய்ய வேண்டா மென்றுதான் இப்போ கேட்கிறேன். உங்களுக்கும் உங்க திவ்யாவைப் பார்க்க ஆசையில்லையா? பாவம்... அவங்க இத்தனை வருடம் உங்களுக்காகவே காத்திருக் கிறார்கள். அவங்களைத் தவிக்க விடலாமா?" என்றாள்.

"ஓ.கே. ஓ.கே. எனக்குப் புரியுது. இதுதான் பக்கத்து இலைக்குப் பாயசம் போலிருக்கிறது. நாம் நாளைக்கு மதியத்திற்கு மேல் கிளம்பலாம். எனக்கும் திவ்யாவோட மனசு என்னவென்று தெரியணும். நைட் போன் செய்து நான் கார்த்திக்கிடம் சொல்லி விடுகிறேன்.

"நீ நாளை கிளம்புவதற்கு ரெடியாக இரு. கடை வேலை கொஞ்சம் இருக்கிறது. அதை சிவநாத் அங்கிளிடம் ஒப்படைத்து விட்டு வருகிறேன். எப்படியும் பாண்டியிலிருந்து திரும்ப மூன்று நாளாகி விடும்..." என்று கடகடவென்று திட்டமிட்டான்.

கோவிலுக்குப் போய்விட்டு வீட்டுக்கு வந்ததும், முதல் வேலையாகக் கார்த்திக்குப் போன் செய்து பாண்டிக்கு வருகிற விஷயத்தைக் கூறியதும், அவளிடம் சிறிது நேரம் ஸ்வீட் நத்திங்ஸ் பேசிவிட்டு, சுரேஷுக்குக் கால் செய்து, திவ்யாவின் மனதைப் பற்றிக் கூற, சுரேஷ் மகிழ்ச்சியில் திக்குமுக்காடி ஊமையாகி விட்டான்.

"சொல்லுடா... உனக்குச் சம்மதம்தானே! நீ அவளை அவளுக்காகவே ஏற்றுக் கொண்டால்தான் ஆச்சு. நான் பேசி உன்னைச் சம்மதிக்க வைத்தால் வேண்டா மென்கிறாள். நீ என்ன நினைக்கிறாய் சுரேஷ்! உனக்குச் சம்மதம் என்றால் நான் சித்தி, சித்தப்பாவிடம் பேசி உங்கள் கல்யாணத்திற்குச் சம்மதம் வாங்குகிறேன்..." என்றான் சிறு சந்தேகத்துடன்.

எதிர்முனை மௌனமாக இருக்கவும், "டேய் சுரேஷ்..." அழுத்தி விளிக்க,

"சாரிடா. இதில் என்ன சந்தேகம்? நிச்சயம் இதில் எனக்குச் சம்மதம்தான். இத்தனை வருடம் எனக்காகக் காத்திருக்கிறாளே... அவளின் காதலை நான் இன்னும் புரிந்து கொள்ளவில்லை என்றால், என்னைப் போல முட்டாள் இந்த உலகத்தில் இருக்க மாட்டான்..." என்றான் அவசரமாக.

"அப்ப நீ முட்டாள் இல்லை... புத்திசாலி என்கிறாய். ஓ.கே. ஓ.கே. நான் ஒத்துக் கொள்கிறேன்..." என்று சுரேஷை வாரி விட்டு, "சரி, எங்கே சந்தித்துப் பேசுகிறாய்? வீட்டில் நீங்கள் இரண்டு பேரும் பேசுவது கஷ்டம். அம்மா எதுவும் சொல்ல மாட்டார்கள் என்றாலும் திவ்யா தயங்கு வாள். அதனால் வெளியில் எங்கேயாவது போகலாமா?" என்றான்.

"ஹ்ம்ம்... கண்டிப்பா போகலாம் கார்த்திக். ஆனால் கல்யாணத்தைப் பற்றி நான் திவ்யாவிடம் பேசிவிட்டு, உன்னிடம் எப்போது வச்சுக்கலாம்னு முடிவு சொல்

கிறேன். எனக்குத் திவ்யாவின் காதலை ஏற்றுக் கொள் வதில் எந்தப் பிரச்சினையும் இல்லை. ஆனால் கல்யா ணம் முடிவு செய்வதில் நிறையக் குழப்பம் இருக்கிறது. இதில் ஷைலு சம்மந்தப்பட்டிருக்கிறாள் என்பதை உன் னால் புரிந்து கொள்ள முடியும்னு நினைக்கிறேன்..." என்றான்.

"ஓ ஐ சீ..." என்றவன், "யூ டூ ஒன் திங் மேன்... முதலில் ஷைலு பிராப்ளத்தை சால்வ் பண்ணு. அதன் பிறகு நாம் முடிவு செய்யலாம்... சரி, நாளைக்கு வரும் போது ஷைலுவைக் கண்டிப்பாக அழைத்து வா. மற்றதை நேரில் பேசலாம்..." என்றான் கார்த்திக்.

"ஷைலுகூட உன்னைப் பார்க்க வேண்டும் என்றாள். அதனால் ஆரோவில் போகலாமா... நான் ஞாயிறு காலை பத்து மணிக்கு ஷைலுவை அழைத்துக் கொண்டு உன் வீட்டுக்கு வருகிறேன். நீயும் திவ்யாவும் ரெடியாக இருங்கள்..." என்றதும் சம்மதித்துப் போனை வைத்தார்கள்.

அடுத்த நாள் விடிந்ததுமே, ஷைலுவின் மனதில் ஒரு பரபரப்பு தொற்றிக் கொள்ள, கார்த்திக்கைப் பார்க்கப் போகிறோம் என்ற எண்ணமே அவளுக்குச் சந்தோ ஷத்தைக் கொடுத்தது. சுரேஷ் கடையிலிருந்து திரும்பி யதும், அத்தையிடம் சொல்லிக் கொண்டு கிளம்ப, லாவண்யாவுக்கு அவளை அனுப்ப மனமே இல்லை.

"அடுத்த லீவுக்குக் கண்டிப்பா வரணும் ஷைலு..." உறுதி வாங்கிக் கொண்டு மனமே இல்லாமல் விடை

கொடுக்க, அத்தையை ஏமாற்றுகிறோமோ என்ற ஒரு குற்றவுணர்வு அவளை வாட்டியது.

அவளின் மனவாட்டத்தைக் கவனித்துவிட்டு விசாரித்தவனிடம், தன் மனதில் தோன்றியதைக் கொட்ட...

"நீ ஒன்றும் பயப்படாதே. நம் கல்யாணம் நடக்கவில்லை என்றாலும் அம்மா உன்னைக் கண்டிப்பாகப் புரிந்து கொள்வார்கள். இந்தக் குற்றவுணர்வு எல்லாம் தேவையில்லாதது. அம்மாவைப் பொறுத்தவரை நீ மருமகளாக வந்தால்தான் உன் மேல் அன்பிருக்கும் என்று பயப்படாதே.

"என்றைக்கு இருந்தாலும் நீ எங்கள் வீட்டுச் செல்லப் பெண். கார்த்திக்கின் மனைவியாக வந்தால் இன்னும் இரண்டு மடங்கு சந்தோஷமாகத்தான் இருக்கும். ஓ.கே. சியர்ஃபுல்..." எனத் தைரியமளித்தாலும், தெளிந்த மாதிரி இருந்தாலும் உள்ளுக்குள் ஏதோ ஒன்று அரித்துக் கொண்டே இருந்தது. அதை ஓரம் தள்ள... மனதைக் கொஞ்சம் சந்தோஷமான மனநிலைக்கு மாற்ற முயற்சி செய்தாள்.

இருவரும் வீடு போய்ச் சேர்ந்ததும், தந்தையின் அன்பான விசாரணைகளுக்கு, மென்மையான புன்னகையுடன் பதில் கூறிவிட்டுத் தாயுடன் சமையல் அறைக்குச் சென்றதும்...

சுஜாதாவே, "புதன்கிழமை பெண் பார்க்க வருகிறார்கள். முடிந்தால் அன்றே நிச்சயம் செய்து விடலாம்னு சொல்லியிருக்கிறார்கள். அதனால் எல்லாவற்றுக்கும்

தயாராக இருக்கிறோம்...” என்றவர் அவளைச் சாப்பிட டைனிங் டேபிளுக்கு அழைத்து வந்தார்.

டைனிங் டேபிளில் குடும்ப உறுப்பினர்கள் எல்லோரும் அமர்ந்திருக்க, சதுவும், நல்லியும் இவளைக் குரோதத்துடன் முறைத்தனர். அதைக் கவனித்துவிட்ட சுரேஷ் கண்ணாலே ஷைலுவைப் பார்த்து, ‘கண்டுக் காதே...’ என்று சைகை செய்தான்.

விக்கிக்கு ஷைலுவைப் பார்த்ததும் ஒரே சந்தோஷம்.

“எப்படி ஷைலுக்கா இருந்தது மெட்ராஸ்? ஜாலியா என்ஜாய் செய்தியா? எந்தத் தொல்லையும் இருந்திருக் காதே...” என்று கீழ் கண்ணால் நல்லியையும், சதுவை யும் அளவிட்டுக் கொண்டே கேட்க, “ம்ம்ம்...” என்றாள் சிறு புன்னகையுடன்.

சகோதரிகளைத் தவிர மற்றவர்களிடம் பேசிக் கொண்டே சாப்பிட்டு எழுந்தவள், தன் அறைக்குப் போய்ப் படுக்கையில் விழுந்த பிறகுதான், சொர்க்கத்தில் இருந்து திடீரென்று நரகத்திற்கு வந்த உணர்வு எழுந்தது.

ஒரு மாசம் அத்தை வீட்டில் சுதந்திரமாக, நினைத்த நேரத்தில் சாப்பிட்டு, சுரேஷுடன் மாலை வேளையில் வெளியில் சென்று, கார்த்திக்குடன் எந்தத் தடையுமில் லாமல் பேசிச் சந்தோஷமாக இருந்து விட்டு... இங்கு வந்தவுடன்... நாங்கள் இருக்கும்வரை உன்னைச் சந்தோஷமாக இருக்கவிட மாட்டோம் என்கிற மாதிரி யான பார்வையைக் கண்டதும் மனம் சோர்ந்து போக,

இன்னும் எத்தனை நாள் இதனை அனுபவிக்கணும் என்ற அலுப்பு வந்து சேர்ந்தது.

காயத்ரிக்குப் போன்செய்து சிறிதுநேரம் பேசி விட்டு, அப்படியே கட்டிலில் படுத்துக் காரில் வரும் வரை கேட்ட பாடலின் விளைவால் கார்த்திக்கின் இனிய நினைவோடு சந்தோஷமாக இருந்ததைக் கஷ்டப்பட்டு ஞாபகத்திற்குக் கொண்டு வந்து, அந்த நினைவோடே தூங்க முயற்சி செய்தவளை... கார்த்திக்கின் அழைப்பில் செல்போன் சிணுங்க, உடம்பெல்லாம் குப்பென்று சந்தோஷம் பூக்க, "ஹலோ கார்த்திக்..." என்றாள்.

"ஹாய் ஸ்வீட்டி, எப்படிடா இருக்கே? எப்போ வந்தே? என்ன செய்கிறாய்?" என்று படபடவென்று கேட்க,

சிரித்துக் கொண்டே, "நான் நல்லா இருக்கேன். நீங்க எப்படி இருக்கீங்க?" என்ற கேள்விக்கு உற்சாகமாக, "நீதான் வந்துவிட்டாய் அல்லவா... இனிமே சூப்பர் தான்..." என்று கூற,

"அது சரி. நான் வந்தது எப்படித் தெரியும்... நான் சொல்லவில்லையே...?" என்றாள்.

"ஹலோ, என் அழகு தேவதையே, நீங்க சொல்லலேன்னா நாங்க கண்டுபிடிக்க மாட்டோமா?" என்று சவாலாகக் கேட்க,

மெலிதாகச் சிரித்து விட்டு, "சரி! ஆன்ட்டி, அங்கிள் எல்லாம் நல்லா இருக்காங்களா?" என்று அக்கறையாக விசாரித்தாள்.

"ரெண்டு பேரும் பரம சுகம். என்ன... அம்மாவுக்கு உன்னைப் பார்த்தால் கொஞ்சம் சந்தோஷமாக இருக்கும். நான் அம்மாவிடம் புலம்புவதைப் பார்த்து விட்டு, அப்பா கிண்டல் செய்து கொண்டே இருக்கிறார்..." என்று சிரித்தவன்,

"நாளைக்கு மறக்காமல் சுரேஷுடன் கிளம்பி ஆரோவில்லுக்கு வா..." என்று கூறவும்,

ஆச்சரியத்துடன், "ஆரோவில்லா? ஏன் அங்கு வரணும்? என்னிடம் சுரேஷ் சொல்லவே இல்லையே...!" என்றாள் புரியாமல்.

"ஏய்... விளையாடறியா? உன்னைப் பார்த்துப் பத்து நாளாச்சு. சுரேஷ் திவ்யாவிடம் பேச அங்கு சென்றால் நல்லா இருக்கும். உன்னைத் தனியா வரச் சொல்ல முடியாது இல்லையா! அதனால் சுரேஷ் வரும்போது உன்னைச் சேர்த்து அழைத்து வரச் சொன்னேன். போதும்டா... என்னைத் தவிக்க விட்டது. நீ இங்கே வந்த பிறகு என்னால் உன்னைப் பார்க்காமல் இருந்தால் பைத்தியமே பிடித்துவிடும்..." என்றவனின் பேச்சில் கொஞ்சலும் அதிகாரமும் கலந்திருக்க, ஷைலு அமைதியானாள்.

அவளிடம் சத்தமே வராமல் இருக்கவும்...

"என்ன ஷைலு அமைதியாயிட்டே? நீ ஆரோவில் வருவாய்தானே?" என்றவனின் ஏக்கத்திற்குத் தன் மௌனத்தைக் கலைத்து, "நாளை கண்டிப்பாக நான் சுரேஷுடன் உங்க வீட்டுக்கு வரேன். ஆனால் நாம்

ஆரோவில் போக வேண்டாம். சுரேஷும், திவ்யாவும் போய் விட்டு வரட்டும். நான் உங்கள் கூட வீட்டிலேயே இருக் கிறேனே... நான் உங்களுடன் வெளியில் போவதை யாராவது பார்த்து விட்டால் பெரிய பிரச்சனை ஆகிவிடும் கார்த்திக்... ப்ளீஸ்!" என்றாள் கெஞ்சலாக.

"இட்ஸ் ஓ.கே.டா. எனக்கு உன்னைப் பார்க்க வேண்டும். அது எங்கே இருந்தாலும் ஓ.கே.தான். உன் நிலைமை எனக்குப் புரியுது. என்னால் உனக்கு எந்தக் கஷ்டமும் வராது. வரவும் விடமாட்டேன். ஓ.கே. நாளை பார்ப்போம். குட் நைட்... ஸ்வீட் ட்ரீம்ஸ் அபௌட் மீ..." என்று சொல்லிச் சிரித்தான்.

போனை வைத்துவிட்டுத் தூங்கலாம் என்று முயற்சிக்க... சுஜாதா கதவைத் தட்டி விட்டு உள்ளே வந்து கட்டிலில் அவள் பக்கத்தில் அமர்ந்து, "எப்படி ஷைலு இருக்கே? அத்தை வீட்டில் சந்தோஷமா இருந்தியா?" என்று கனிவாகக் கேட்க,

"ம்ம்... அத்தை வீட்டில் சந்தோஷமா இருந்தேன். சுரேஷ் தினமும் வெளியே கூட்டிட்டுப் போவார். ஒரு மாசம் போனதே தெரியவில்லை..." என்ற மகளின் பதிலில் தாயின் முகத்தில் புன்னகை அரும்பியது.

"நல்லிக்குக் கனடாவிலும், சதுவுக்கு ஆஸ்திரேலி யாவிலும் மாப்பிள்ளைகள் அமைந்திருக்கிறார்கள்..." என்று பேசிக்கொண்டே சென்றவரை இடைமறித்து,

"ஏன்மா.. உள்ளூரில் பார்க்காமல் வெளிநாட்டு மாப்பிள்ளைகள்... கல்யாணமாகி தூரப் போய் விட்டால்,

அவர்களை நினைத்தவுடனே பார்க்க முடியாதே!" என்று தன் சந்தேகத்தை வெளியிட்டாள்.

மகளின் அப்பாவியான கேள்விக்கு மென்மையாகச் சிரித்து, "ஆமாம் ஷைலு! நீ நினைத்தது சரிதான். அவர்கள் நினைத்தவுடன் இங்கே வந்து நிற்கக் கூடாது. இதுவரைக்கும் அவர்கள் இருவரும் செய்த அக்கிரமங் களைத் தட்டிக் கேட்க முடியாமல் தவித்துக் கொண்டிருந் தோம். அப்படிக் கேட்டால் வீடே நரகமாக ஆகியிருக்கும்.

"அதனால்தான் அவர்கள் உன்னிடம் அநாகரிக மாகப் பேசும்போதெல்லாம் பல்லைக் கடித்துக் கொண்டு அமைதியாக இருந்தோம். சாரி ஷைலு... எங்கள்மீது கோபம் இல்லையே?" என்றார் உண்மையான தவிப்புடன்.

பதறிக் கட்டிலில் இருந்து எழுந்து அமர்ந்து சுஜாதாவின் கையைப் பிடித்துக் கொண்டு, "என்னம்மா... என்னிடம் போய் மன்னிப்பு கேட்கிறீர்கள். அவர்கள் என் அக்காதானே விடுங்கள். நான் அதையெல்லாம் பெரி தாக எடுத்துக் கொள்ளவில்லை..." என்று சமாதானப் படுத்த, "இதான்... உன் பெருந்தன்மை. இருபத்தெட்டு வயசாகியும் இந்தத் தன்மையான குணம் அவர்களுக்கு இல்லையே!" என்றார் வேதனையாக.

"கவலைப்படாதீர்கள்... எல்லாம் சரியாகிவிடும். கல்யாணமாகி அவர்களுக்கென்று ஒரு குடும்பம் வந்தால் தன்னால் மாறிவிடுவார்கள்..." என்று ஆறுதல் கூற,

பெருமூச்சுடன், "என்னமோ ஷைலு... எனக்கு நம்பிக்கையில்லை. நான் அவர்களைத் தப்பாக வளர்த்து விட்டேனோ என்று வருத்தமாக இருக்கிறது..." என்று ஆதங்கப்பட்டவர் தொடர்ந்து, "சரிம்மா... அவர்கள் கல்யாணம் முடிகிறவரை கொஞ்சம் பொறுத்துக் கொள். அவர்கள் ஏதும் பேசினாலும் கண்டுகொள்ளாதே, எங்களுக்காக...!" என்று வேண்டுகோளை வைக்க, சம்மதமாகத் தலையசைத்தாள்.

அவள் தலையை அன்புடன் வருடி, "சரி, நீ களைப் பாக இருப்பே... தூங்கு..." என்று நெற்றியில் முத்தமிட்டு, அறைக் கதவைச் சாத்திவிட்டுச் சென்றதும், சுஜாதாவின் வார்த்தைகளே ஷைலுவைச் சுற்றிச் சுற்றி வர அப்படியே உறங்கிவிட்டாள்.

மாடியில் அமர்ந்திருந்த சுரேஷின் நினைவு, திவ்யாவைப் பற்றியே சுற்றிக் கொண்டிருந்தது.

இத்தனை வருடமாக நான் நிராகரித்த காதலை வளர்த்து வந்திருக்கிறாளே... அவள் அளவுக்கு எனக்கு உறுதி இருக்குமா...? ரியல்லி திவ்யா இஸ் கிரேட்.

எப்போது விடியும்; அவளை எப்போது பார்ப் போம் என்றிருக்கிறதே... பாவம் திவ்யா! இத்தனை வருடம் எப்படித்தான் இந்தக் கொடுமையைத் தாங்கிக் கொண் டிருந்தாளோ? கார்த்திக்கிற்கும் இப்படித்தான் இருந்ததா? அதனால்தான் ஷைலு போன் செய்ததும்... அதே இரவில் ஓடி வந்துவிட்டானா?

கார்த்திக் சொன்ன மாதிரி காதலித்தால்தான் அந்த அவஸ்தையை உணர முடிகிறது என்று நினைத்துக் கொண்டே ரூமிற்குச் சென்றான்.

திவ்யாவிற்குத் தூக்கமே வரவில்லை. அண்ணனிடம் சுரேஷ் பற்றிச் சொன்னவுடன் திட்டுவார் என்று நினைத்தால்... அதற்குப் பதிலாக சுரேஷை என் முன் நிறுத்துகிறேன் என்கிறாரே...! ஆச்சரியமாக இருக்கிறது. அண்ணனா இப்படி மாறிவிட்டார்? அவருக்குக் காதல் என்றாலே பிடிக்காதே.

இப்போ என்ன திடீர் மாற்றம்? எப்படியோ நம் காதலுக்கு அண்ணன் சம்மதித்து விட்டார். அது போதும். ஆனால் சுரேஷை எங்கே என்று தேடுவார்? அப்படியே சுரேஷ் வந்தாலும் பழைய சுரேஷாக இருப்பாரா... அவரை நான் சீக்கிரம் பார்ப்பேனா? அவர் மனதில் எனக்காக ஓர் இடம் கொடுப்பாரா? கடவுளே, நீதான் என் வேண்டுதலை நிறைவேற்றி வைக்க வேண்டும் என்று மானசீகமாக வேண்டிக் கொண்டாள்.

அடுத்த நாள் காலை நால்வருக்கும் இனிதாக விடிய, சுரேஷ் காலையில் எழுந்ததும் சஞ்சயிடம் ஷைலுவை ஆரோவில் அழைத்துப் போவதாகச் சொல்லி விட்டான்.

அவரும் சம்மதிக்கவே... விக்கியும், "நானும் வருகிறேன்..." என்று கூறவும், சுரேஷ் "சரி..." என்றான்.

ஷைலு எழுந்து குளித்துவிட்டு ரூமை விட்டு வெளியில் வந்ததும், "குட் மார்னிங் மேடம். ஆரோவில்

போகலாம். வர்றீங்களா?" என்று கேட்டுக் கொண்டே... கண்ணால் 'கார்த்திக்கைப் பார்க்க...' என்று சைகை செய்தான்.

அதைக் கண்டுகொண்டவள், புன்னகையுடன் தலையசைத்து விட்டு உள்ளே சென்றவள், கார்த்திக் வாங்கிக் கொடுத்த மயில் கழுத்துக் கலரில் ரோஸ் கலர் பூப்போட்ட மைசூர் சில்க் சாரியும், அதே நிற ப்ளவுஸும் அணிந்து, முடியை இரண்டு பக்கமும் வாரி, நடுவில் ஒரு சின்ன கிளிப் மட்டும் போட்டுக் கொண்டு, புடவைக்கேத்த மாதிரி பொட்டு வைத்துக் கொண்டு, கண்ணில் காஜல் கொண்டு வரைய, கண் காஜலில் வசீகரித்தது.

தன்னை ஒரு முறை கண்ணாடியில் சரி பார்த்துக் கொண்டு வெளியே வர,

சுரேஷ் அவளைப் பார்த்துவிட்டு மெலிதாக விசிலடித்து, "பாவம் கார்த்திக்..." என்று முணுமுணுக்க, அவளுக்கு முகம் வெட்கத்தில் சிவந்தது.

சுஜாதா பூவைக் கொண்டு வந்து ஷைலுவின் தலையில் வைத்து விட்டுப் பெண்ணின் அழகை ரசித்து விட்டு, "வெயிலில் அலையாதீர்கள். நேரத்திற்குச் சாப்பிட்டு விடுங்கள்..." என்று கூறி அவர்களை அனுப்பி வைத்தார்.

காரில் சுரேஷும், ஷைலுவும் ஏறியதும்... விக்கி காரில் ஏறாமல், அவனுடைய பைக்கை எடுக்கவும், சுரேஷ் அவனைக் கேள்வியாக நோக்க...

அப்புறம் சொல்கிறேன் என்று சைகையில் காட்டி விட்டு, பைக்கைக் கிளப்பிக் கொண்டு செல்ல... சுரேஷும்,

ஷைலுவும் குழப்பத்துடன் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டனர்.

அவர்களும் விக்கியைப் பின்தொடர, தெரு முனையைத் தாண்டியதும் விக்கி பைக்கை நிறுத்த... சுரேஷும் காரை நிறுத்தி, "என்ன விக்கி... ஏன் காரில் வராமல் பைக்கில் வந்து இப்போது இங்கே நிறுத்தி விட்டாய்?" என்றான் புரியாமல்.

"சாரி அத்தான். நான் உங்ககூட ஆரோவில்லுக்கு வரவில்லை. நான் அப்படிச் சொன்னதற்குக் காரணம் நீங்களும் அக்காவும் இப்போது ஒன்றாகச் சென்றால், நாளை நீங்க இந்தக் கல்யாணத்தில் சம்மதம் இல்லைன்னு சொல்லும்போது இரண்டு ஹிட்லர்ஸும் தப்பாகப் பேச நிறைய சான்ஸ் இருக்கு. அதான் நான் கூட வந்தால் அவர்கள் பேச முடியாதில்லையா..." என்று கேட்டு நிறுத்த, சுரேஷ் அசந்து போய்விட்டான்.

"உனக்கு இந்த விஷயம் எப்படித் தெரியும்?" என்று கேள்வியாக ஷைலுவைப் பார்க்க, அவள், "நான்தான் சொன்னேன்..." என்று கண்ணால் சொல்ல,

விக்கியிடம் திரும்பி, "நீ இந்த மாதிரிப் பேசுவாய்னு நான் நினைக்கவேயில்லை விக்கி. இந்த வீட்டில் நீயாவது ஷைலுவுக்கு ஆதரவாக இருக்கிறாயே... எனக்கு ரொம்பச் சந்தோஷம். இந்த இரண்டு வருடத்தில் அவள் முன் மாதிரி இல்லாமல் மாறிவிட்டாளேன்னு நிறைய நான் குழம்பி இருக்கிறேன். நேற்று மாமா எல்லாவற்றையும் சொன்னார்.

"இப்போதுதான் கொஞ்சம் கார்த்திக்கைச் சந்தித்த பிறகு சந்தோஷமாக இருக்கிறாள். இனிமேலும் நீதான் பார்த்துக் கொள்ள வேண்டும்..." என்று வேண்டுகோளை வைத்தவன், "தேங்க்ஸ் விக்கி... நாங்கள் வருகிறோம். கார்த்திக் வெயிட் செய்து கொண்டிருப்பான். கொஞ்சம் லேட்டாகப் போனாலும் ஷைலுவுக்காக என்னிடம் சண்டை போடுவான்..." என்று சிரித்தான்.

விக்கியும் சிரித்து விட்டு, "சரி அத்தான், நீங்கள் கிளம்புங்கள். அங்கிருந்து திரும்பி வரும்போது எனக்கு ஒரு கால் செய்து விடுங்கள்..." என்று கூறிவிட்டு, ஷைலு விடம், "ஹேவ் எ நைஸ் டே ஷைலுக்கா!" என்று வாழ்த்தி னான்.

அவன் பேசியதைக் கேட்டுப் பிரமித்துப் போய் அமர்ந்திருந்தவள், அவனின் வாழ்த்தைக் கேட்டுக் கண்ணில் நீருடன் வார்த்தைகள் வராமல் தலையசைக்க, "டோன்ட் பி சில்லி ஷைலுக்கா! யூ என்ஜாய் திஸ் டே வெரி வெல் வித் யுவர் கார்த்திக்!" என்று புன்னகைத்து... பைக்கைக் கிளப்பிக் கொண்டு செல்ல,

சற்று நேரம் அமைதியாக இருந்த சுரேஷ், அவனின் சமயோசித புத்தியை வியந்து பேசியபடி கார்த்திக்கின் வீட்டை அடைய, மகாலட்சுமி ஓடி வந்து அன்புடன் வரவேற்றார்.

ஷைலுவை நலம் விசாரித்து விட்டு, "கார்த்திக் மேலே உனக்காகக் காத்திருக்கிறான். போம்மா..." என்று

அவளைக் கார்த்திக்கின் ரூமிற்கு அனுப்பிவிட்டு, சுரேஷுடன் பேச ஆரம்பித்தார்.

கார்த்திக்கின் ரூமிற்குச் சென்றவள்... கார்த்திக் எங்கே என்று பார்வையைச் சுழலவிட, திடீரென்று பின்னால் வந்து, "ஹாய் மை ஸ்வீட்டி..." என்றபடி கார்த்திக் அணைக்க, தூக்கி வாரிப் போட்டவளாய்த் திரும்பினாள்.

அவள் அணைப்பிலிருந்து விடுபட முயற்சி செய்தவளைத் தன் பக்கம் திருப்பி, என்னவென்று புருவம் தூக்கிக் கேட்க, அவனின் பார்வையில் முகம் சிவந்து குனிந்து கொண்டே, "ப்ளீஸ் கார்த்திக்... விடுங்க. இப்படித் தான் பயமுறுத்துறதா? நான் பயந்தே விட்டேன்..." என்று அவள் நெஞ்சில் கை வைத்துச் சொல்ல, "எங்கே உன் நெஞ்சின் துடிப்பை நான் கொஞ்சம் காதை வைத்துக் கேட்கட்டுமா?" என்று குறும்பாகக் கண்ணடித்துக் கேட்டான்.

"ஐயோ கார்த்திக்... என்ன இது விளையாட்டு காலையிலே! கீழே சுரேஷ் வந்திருக்கிறார். வாங்க, கீழே போகலாம்..." என்று சிணுங்க, "ம்ம்... போகலாம்... போகலாம்... உன்னைப் பார்த்து பத்து நாள் ஆச்சு. ஹேய், இந்தப் புடவையில் நீ எப்படி இருக்கிறாய் தெரியுமா? சொல்லவே வார்த்தைகள் இல்லை..." என்ற சொல்லிக் கொண்டே, அவளின் நீளக் கூந்தலை வருடி, "ஷைலு, உன் கூந்தல் பட்டு போல் எவ்வளவு நீளமா இருக்கு..." என்று வருட, அவளுக்கு உடம்பெல்லாம் இனிய மின்னலாய் ஓடியது.

"பிரம்மன் உன்னை இவ்வளவு கொள்ளை அழகாப் படைத்து என்னைத் தவிக்க விட்டுட்டானே!" என்று அவளைத் தன் கையணைப்பில் இருந்து விடாமலே கொஞ்சினான்.

"ஏய்! நான் இவ்வளவு தூரம் ஏங்கிப் போய் இருக்கேனே... உனக்கு அந்த மாதிரி எல்லாம் ஏக்கம் எல்லாம் கிடையாதா?" என்று கிசுகிசுப்பாகக் கேட்க,

ஷைலுவின் முகம் சூடாகி, "சீய்... என்ன கார்த்திக் இப்படியெல்லாம் பேசறீங்க..." என்று உள்ளடங்கிய குரலில் வெட்கத்துடன் கேட்டாள்.

அவளின் வெட்கத்தை ரசித்துக் கொண்டே, "நான் என்னம்மா தப்பா கேட்டேன்? உன்னைப் பார்க்க நான் ஏங்கியது மாதிரி, உனக்கு என்னைப் பார்க்க ஏக்கம் இல்லையான்னு கேட்டேன்..." என்று புரியாமல் அவள் முகத்தைப் பார்க்க...

ஷைலுவுக்கு, மனதில் 'ச்சே... என்ன மாதிரி நினைத்து விட்டோம், ஒரு நிமிடத்தில்!' என்று குட்டிக் கொண்டு, கார்த்திக்கின் முகத்தை நிமிர்ந்து பார்க்காமல், தன் சிவந்த ரோஜா இதழ்களை முத்துப் பற்களால் கடித்தபடி குனிந்தபடியே இருந்தாள்.

ஷைலு நிமிராமல் குனிந்து கொண்டே இருக்கவும், ஒரு விரலால் அவளின் முகத்தை நிமிர்த்த, அவள் கண்களை மலர்த்திக் கார்த்திக்கைப் பார்க்காமல் விழி தாழ்த்தியே இருக்கவும், கார்த்திக்குச் சட்டென விஷயம்

புரிந்து, உல்லாசமாகச் சிரித்து, அவளை இழுத்து இறுக அணைத்துக் கொள்ள... அவளும் மெதுவாகச் சிரித்தாள்.

கார்த்திக்கின் மார்பில் மென்மையாகக் குத்த, அவன் சிரித்துக் கொண்டே அவள் கைகளைப் பிடித்து முத்த மிட்டு, "ஷைலு, இன்னும் எத்தனை நாள்டா நம் கல்யாணத்திற்கு நாம் காத்திருக்கணும்? எனக்குப் புரியுது... நான் இந்த மாதிரிக் கேட்பது தவறுன்னு...! ஆனால் மனசுக்குப் புரியவில்லையே, நீ எப்போ எனக்குச் சொந்தமாவாய்னு எதிர்பார்க்கிறதே..." என்று கண்களில் காதல் வழிய, ஏக்கத்துடன் அவளை அணைத்துக் கூந்தலில் முகம் புதைத்துக் கொள்ள, ஷைலுவுக்கும் அதே உணர்வுதான்.

அவனின் ஏக்கம் அவளைத் தாக்க, அதனால் உள்ளுக்குள் சந்தோஷம் குமிழியிட, "கவலைப்படாதீர்கள் கார்த்திக். என் இரண்டு அக்காவுக்கும் கல்யாணம் நிச்சயமாகி விட்டால் அப்புறம் ஒரு மாதத்திற்குள் கல்யா ணம் ஆகிவிடும்..." என்று வேகமாகச் சொல்லிக் கொண்டு வந்தவள், அதன் பிறகு "என்னுடைய படிப்பிற்குப் பிறகு உங்கள் ஆசை நிறைவேறும்..." என்றாள் வேகம் குறைந்து வெட்கத்துடன்.

அவளின் கண்களை ஊடுருவி, "ம்ஹூம்..." என்று குறும்புடன் இழுத்து விட்டு, "இதுவரைக்கும் நான்தான் உனக்கு முத்தம் கொடுத்திருக்கிறேன். நீயா எதுவும் எனக்குத் தந்ததே இல்லையே! ப்ளீஸ்டா ஷைலு..." என்று அவளை அணைப்பிலே வைத்துக் கொண்டு கொஞ்சி னான்.

சிறிது தயக்கத்திற்குப் பிறகு கையை மாலையாக அவன் கழுத்தில் கோர்த்து, அவன் கன்னத்தில் முத்தம் கொடுக்க முயல, கார்த்திக் சட்டென முகத்தைத் திருப்ப, அவளின் இதழ்கள் அவனின் இதழ்களில் முத்தமிட்டன.

அந்தத் தருணத்தின் மயக்கத்தில் இருவரும் தன்னை மறந்து நிற்க, ஷைலு தான் முதலில் சுதாரித்து, வெட்கத்துடன் அவனை விட்டு விலக, கார்த்திக் வெற்றிச் சிரிப்புடன் அவளை இழுக்க... அவள், "சீய்..." என்று முகம் சிவக்கத் திரும்பிக் கொண்டாள்.

அவளின் திணறலைச் சிறிது நேரம் ரசித்துச் சிரித்து விட்டு, "எப்படி ஷைலு, இப்படி அடிக்கடி வெட்கப்படு கிறாய்? நீ வெட்கப்படும்போது கொள்ளை அழகாய் இருக்கிறாய் மை லவ்..." என்று கொஞ்சியவள், "சரி வா... முதலில் அவர்களை ஆரோவில்லுக்கு அனுப்பிவிட்டு உன்னிடம் பேசிக் கொள்கிறேன்..." என்று அவள் நெற்றி யில் செல்லமாக முட்டிவிட்டு, ஷைலுவுடன் ரூமை விட்டுக் கீழே இறங்கி வந்தான்.

திவ்யா, சுரேஷை விரும்புவதைக் கார்த்திக் ஏற்கெனவே மகாலக்ஷ்மியிடமும், விஸ்வநாத்திடமும் சொல்லி வைத்திருந்ததால் அன்புடன் வரவேற்றுப் பேசிக் கொண்டிருந்தனர்.

விஸ்வநாத், சுரேஷிடம்... "உன்னை ஐந்து வருடங் களுக்கு முன் பார்த்தது... இப்போ மீசை வைத்த ஹிந்தி

நடிகன் மாதிரி இருக்கே...” என்று சொல்லிச் சிரித்து விட்டு, “எப்படி இருக்கே சுரேஷ்? இப்போ என்ன வேலை செய் கிறாய்?” என்று விசாரித்தார்.

தன்னைப் பற்றிப் பெரியவரிடம் சொல்லிக் கொண் டிருந்தவனிடம், மஹாலக்ஷ்மி குறுக்கிட்டு, “நீதான் ஷைலுவின் அத்தை மகன் என்று கார்த்திக் சொன்ன போது மிகவும் சந்தோஷமாக இருந்தது சுரேஷ். முதலில் நீங்கள் இருவரும் நண்பர்கள். இப்போது இன்னும் கொஞ்சம் நாளில் உறவினர்கள் ஆகப் போகிறீர்கள். அதை நினைத்தாலே சந்தோஷமாக இருக்கிறது. இதெல்லாம் கடவுள் அருளால் நல்லபடியாக நடக்க வேண்டும்...” என்றார் சிறு கவலையுடன்.

“பயப்படாதீர்கள் ஆன்ட்டி. உங்கள் ஆசைப்படி எல்லாம் நன்றாகவே முடியும். என் மாமாவின் வீட்டில் நான் பேசிச் சம்மதிக்க வைக்கிறேன்...” என்று அவரின் பயத்தைப் போக்கி உறுதி கொடுக்க, மகாலக்ஷ்மி நிம்மதி யடைந்தார்.

இருவரிடமும் பேசிக் கொண்டிருந்தாலும் அவனின் கண்கள் திவ்யாவைத் தேடி அலை பாய, இரு பெரியவர் களும் ரகசியமாகச் சிரித்துக் கொண்டு, “நீ முக்கியமான ஒருத்தரைப் பற்றி விசாரிக்கவே இல்லையே...” என்று கேலி செய்ய, அவரின் கேலியைப் புரிந்து வெட்கத்துடன் தலை குனிய, விஸ்வநாத் உரக்கச் சிரித்தார்.

“மஹா, இங்கே பாரேன் சுரேஷ் வெட்கப்படுறதை...! காதல் வந்துட்டாலே பசங்களுக்குத் தன்னாலே வெட்கம்

வந்துவிடுகிறது. வெட்கம் பெண் பிள்ளைகளின் சொத்து. அதை நீங்க ஏம்பா குத்தகை எடுக்கிறீங்க?" என்று சுரேஷை மேலும் கேலி செய்ய, அவன் நிமிர்ந்து பார்த்துச் சிரித்தான்.

"ஐயோ, ப்ளீஸ் அங்கிள். போதும் பயங்கரமா ஓட்டு றீங்க...! கார்த்திக் எப்படித்தான் உங்கள் கிண்டலைச் சமாளிக்கிறானோ?" என்று அவரின் கிண்டலை ரசித்துக் கொண்டே மேலும் சிரித்தான்.

அதற்குள் கார்த்திக்கும், ஷைலுவும் இறங்கி வர...

கார்த்திக் அவனை, "வாடா மாப்பிள்ளை..." என்று கேலி செய்ய, சுரேஷ் சந்தோஷமாக அலுத்துக் கொண்டு, "டேய் போதும்டா... ஏற்கெனவே அங்கிள் என்னை உண்டு இல்லைன்னு செய்து கொண்டிருக்கிறார். இதில் நீ வேற ஆரம்பிச்சிடாதே. என்னால் தாங்க முடியாது..." என்று கை கூப்பிச் சிரித்து விட்டு, "ரொம்ப முக்கியமான வேலையா இருந்தாய் போலிருக்கிறது..." என்றான், அவனுக்கு மட்டுமே கேட்கும் குரலில்.

கார்த்திக்கும் அதே குரலில், "இன்னும் கொஞ்ச நாளில் இதே முக்கியமான வேலை உனக்கும் வரும். இரு... இரு. அப்போ இருக்கு கச்சேரி..." என்று கேலியாகக் கூற,

சுரேஷ் அதை நினைத்துத் திணற, அவனின் திணறலைப் பார்த்துச் சிரித்து விட்டு, "இரு. திவ்யாவை அழைத்து வருகிறேன்..." என்று சைகை செய்து விட்டு உள்ளே சென்றான்.

சிறிது நேரம் கழித்துத் திவ்யாவிடம் விஷயத்தைச் சொல்லாமல் அழைத்து வர, எந்த சுவாரசியமும் இல் லாமல்... கடனே என்று ஹாலுக்கு வந்தவளின் கால் நடுநாயகமாகச் சோபாவில் அமர்ந்திருந்த சுரேஷைப் பார்த்ததும் பிரேக் போட்டது.

கார்த்திக் சென்றது ஒரு சில விநாடிகளே என்றாலும்... ஒரு யுகம் போல் தோன்ற, டென்ஷனாக நிலை கொள்ளாமல் அமர்ந்திருந்தவனுக்குத் திவ்யா வைக் கண்டதும் மனதில் வீணையின் இனிய அதிர்வு... அவள் காதலைச் சொன்னபோது பூக்காத காதல் அவள் தனக்காக இத்தனை வருடம் காத்திருக்கிறாள் என்ற நினைவில் மலர்ந்தது.

பதினெட்டு வயதில் ஒரு பட்டாம்பூச்சி போல துறுதுறு வென இருந்தவள்... இந்த ஐந்து வருடத்தில் அழகும் கவர்ச்சியும் கூடி, படிப்பின் தீட்சண்யம் கண்ணில் தெரிய, நடையில் நிதானமும், முகத்தில் மெல்லிய சோகமும் இழையோட, அவள் நின்ற விதம் அவனைப் பெரிதும் கவர்ந்தது.

அண்ணன் சொன்னதைச் செய்வார் என்று திவ்யாவுக்குத் தெரிந்தாலும் இவ்வளவு சீக்கிரமே சுரேஷை இபபடி நடு வீட்டிலே பார்ப்போம் என்று எதிர்பார்க்காத தால், அவனையே விழி விரித்துப் பார்த்துக் கொண்டிருந் தாள்.

இருவரும் சுற்றுப்புறம் மறந்து பார்த்துக் கொண் டிருக்க, மற்ற நால்வரும் சிரிக்க,

விஸ்வநாத், "ம்க்கும்..." என்று பலமாகக் கனைத்ததும் இருவரும் தன் நினைவுகளிலிருந்து கலைந்து, திவ்யா வெட்கத்தில் தலை குனிய... சுரேஷ் அழகாகச் சிரித்தான்.

"என்ன மேன்... முக்கியமான வேலை ஆரம்பிச் சிடுச்சு போல..." என்ற கார்த்திக்கின் கேலிக்கு,

"டேய் சும்மா இரு. காலை வாராதே!" என்று யாரும் பார்க்காதவண்ணம் பல்லைக் கடித்தான்.

கார்த்திக் சிரித்துக் கொண்டே, தங்கையின் அருகில் வந்து, "என்ன திவ்யா மலைச்சிப் போய் நிக்கிறே! என்ன... நான் சொன்ன மாதிரியே உன் சுரேஷை உன்னிடம் சேர்த்து விட்டேன். இனி நீயே அவனிடம் போய்ப் பேசு...

"பேசிவிட்டு நல்ல முடிவாகச் சொல்லு. உன்னை அழைத்துப் போகத்தான் வந்திருக்கிறான். போய்க் கிளம்பு..." என்று ஆதரவாக அவள் தலையை வருட, திவ்யா உணர்ச்சி வசப்பட்டு கார்த்திக்கின் கையைப் பிடித்துக் கொண்டாள்.

"தேங்க்ஸ் அண்ணா!" என வேறு வார்த்தை வராமல் திணறவும்,

அவள் முதுகைத் தட்டிக் கொடுத்து, "போய்க் கிளம்பு..." என்றான் வாஞ்சையாக.

மீண்டும் கண்களாலே நன்றி சொல்லி விட்டு, சுரேஷின் பக்கம் ஓர் மையல் பார்வையைச் செலுத்தி விட்டு, சிறு பெண் போல குதூகலம் பொங்க உள்ளே

சென்றவள், கோல்டன் ஆரஞ்சு சில்க் சுரிதாரில் தோள் வரை வெட்டி விடப்பட்டிருந்த சுருள் முடி காதில் ரகசியம் பேச, சிறியதாகப் பொட்டு வைத்து அளவாக லிப்ஸ்டிக் போட்டுத் திருப்தியாகக் கண்ணாடி பார்த்துக் கொண்டு வெளியே வர, அவளின் அலங்காரத்தைக் கண்ட சுரேஷுக்கு ஓர் இனிய சந்தோஷம்.

எல்லோரிடமும் சொல்லிக் கொண்டு கிளம்ப, "பத்திரமாக் கூட்டிட்டுப் போடா சுரேஷ்!" என,

திவ்யா காரில் ஏற முற்பட, சற்றுத் தயங்கி ஓடி வந்து தமையனை அணைத்துக் கொண்டாள்.

தன் நெஞ்சில் தஞ்சமடைந்தவளின் முகத்தை நிமிர்த்த, திவ்யாவின் கண்களில் கண்ணீர் வழிய, அதைத் துடைத்து, "ச்சே... ச்சே... அழக் கூடாதும்மா... இனிமே நீ எப்பவும் சந்தோஷமாத்தான் இருக்கணும். ஐந்து வருடத்திற்கு முன் எப்படி துருதுருவென இருந்தியோ... இனி அதே மாதிரிதான் இருக்கணும். இதுவே கடைசித் தடவையாக இருக்கட்டும் நீ அழுவது..." என்று அவளைத் தேற்றி,

"என்ஜாய். யுவர் டே வித் யுவர் பியான்சி, குட் லக்..." என்று வாழ்த்தி, அவளைக் காரில் ஏற்றிக் கதவை மூடியதும் எல்லோரும் விடை கொடுத்தனர்.

கார் கிளம்பிப் போனதும், எல்லோருக்குமே மனம் கனத்துப்போக, மௌனம் பலமாக ஆட்சி செய்ய, சிறிது நேரத்திற்குப் பிறகு விஸ்வநாத் தான் மௌனத்தைக்

கலைத்து, ஷைலுவிடம் நலம் விசாரிக்க... அவளும் பதிலுக்கு நலம் விசாரித்ததும், அவர் சிரிக்க ஆரம்பித்து விட்டார்.

அவர் சிரிப்பதைக் கண்டு குழம்பிப் போய்க் கார்த்திக்கைப் பார்க்க, அவன் எனக்குத் தெரியாது என்று ஸ்டைலாகத் தோளைக் குலுக்க, மகாலக்ஷ்மியும் உதட்டைப் பிதுக்கினார்.

அவளே, "என்ன அங்கிள்... ஏன் சிரிக்கிறீங்க? நான் ஏதும் தப்பாக் கேட்டேனா?" என்று தயக்கத்தோடு கேட்டாள்.

சிரிப்பினூடே, "இல்லம்மா... நீ நல்லா இருக்கீங்களா... என்று கேட்டாய் அல்லவா? நீ இன்னும் கொஞ்ச நாள் உன் அத்தை வீட்டிலேயே இருந்திருந்தால் என் காதில் ரத்தம் வந்திருக்கும்... அப்புறம் இ.என்.டி. டாக்டரும் வீடுமாகத்தான் இருந்திருக்கணும்..." என்று சிரிக்க,

மகாலக்ஷ்மியுடம் கூடச் சேர்ந்து சிரிக்க, ஷைலுவுக்கு ஒன்றுமே புரியாமல் இருவரையும் பார்க்க, இப்போது கார்த்திக்கும் சிரிக்க ஆரம்பித்தான்.

அவள் யாருக்கும் தெரியாமல் கார்த்திக்கைக் கிள்ளி, "எதுக்கு சிரிக்கிறீங்க?" என்று சைகையிலே கேட்க,

அவன் துள்ளிக் குதித்துச் சிரித்து விட்டு, "நீ ஊரிலிருந்த சமயம் நான் அம்மாவிடம் தினமும் உன்னைப் பார்க்க முடியவில்லைன்னு புலம்புவேன். அதற்குத்தான்

அப்பா கேலி செய்கிறார்...” என்று கூறிவிட்டுச் சிரிக்க, ஷைலுவும் வெட்கத்துடன் சிரித்தாள்.

“சரிம்மா... உங்கள் கல்யாணத்தை எப்போது வைத்துக் கொள்ளலாம்? திவ்யாவின் வீட்டில் ஏற்கெனவே அவளின் கல்யாணத்திற்கு அவசரப்படுகிறார்கள். உங்கள் இரண்டு ஜோடிகளின் கல்யாணத்தை ஒரே மேடையில் வைத்தால் மிகவும் நன்றாக இருக்கும். நாங்கள் வந்து உன் அப்பா, அம்மாவிடம் எப்டோ பேசலாம். நீயே சொல்!” என்று அவளிடம் அபிப்பிராயம் கேட்கவும், ஒரு நிமிடம் விதிர்த்துப் போய்க் கார்த்திக்கைப் பார்க்க, அவன் உதவிக்கு வந்தான்.

“இப்போது வேண்டாம். அவளின் சகோதரிகள் திருமணமும், ஷைலுவின் படிப்பும் முடியட்டும். அதன் பிறகு யோசிக்கலாம்...” என்று கூற,

“சரிப்பா... உங்க இஷ்டம். நீங்க எப்போ சொல்றீங்களோ அப்போ போய்ப் பேசுகிறோம்...” என்று சம்மதம் கொடுக்க, ஷைலு நிம்மதியாக மூச்சு விட்டாள்.

விஸ்வநாத், “ம்ஹூம்... மஹா, இது என்னமோ ஆகிற காரியமா தெரியவில்லை. ஒரு வருடம் இவன் தாங்குவான் என்று நம்பிக்கை இல்லை. அதற்குள் நம் இருவர் காதில் ரத்தம் வந்தாலும் ஆச்சரியமே இல்லை...” என்று கார்த்திக்கைக் கேலி செய்ய,

கார்த்திக் சிரித்து விட்டு, “அப்பா, ப்ளீஸ்... என்னை விட்டுடுங்களேன்... இந்தப் பத்து நாளா என்னைக் கேலி

செய்வது தவிர உங்களுக்கு வேறு வேலை இல்லாமல் போய்விட்டது...” என்று அலுத்துக் கொள்ள, விஸ்வ நாத்தும், ஷைலுவும் சிரிக்க...

மகாலக்ஷ்மி சிரித்து விட்டு நடுவில் குறுக்கிட்டு, “கார்த்திக், நீ ஷைலுவை உன் ரூமிற்கு அழைத்துப் போய்ப் பேசிக் கொண்டிரு. ஷைலு, உன்னைப் பார்க் காமல் பத்து நாளா தவித்து விட்டான். பாவம் பையன்...” என்று அனுமதி வழங்கவும்...

கார்த்திக் எழுந்து, அவளின் கைப்பிடித்து, “வா...” என்று அழைக்க, அவளின் பார்வையோ பெரியவர்களின் அனுமதி வேண்டி அவர்களிடம் தாவியது.

“போம்மா... போய்ப் பேசிவிட்டு வா...” என்றவர் களின் சம்மதத்தைத் தொடர்ந்து, ஐந்து கம்பெனிகளின் சேர்மன், ஒரு சின்னப் பையன் மாதிரித் துள்ளலுடன் ஷைலுவின் கையைப் பிடித்துக் கொண்டு, மாடியேறிச் செல்வதையே இருவரும் சந்தோஷமாகப் பார்த்து ரசித்துக் கொண்டிருந்தார்கள்.

காரில் சென்ற இருவருக்கும் வார்த்தைகள் வெளிவர அழிச்சாட்டியம் செய்ய... பார்வைகள் ஒரு வேகத்துடன் தழுவிக் கொண்டன. ஆனால் திவ்யாவுக்கோ, மனம் கவர்ந்தவனின் பார்வையை அதிக நேரம் தாங்கி நிற்க முடியாமல் நாணம் அவளைச் சூழ்ந்து கொண்டது.

சுரேஷைத் திரும்பிப் பார்ப்பதும், பிறகு குனிந்து கொள்வதுமாக இருக்க, அவனும் அவளைத் திரும்பிப்

பார்ப்பதும், சாலையைப் பார்த்து வண்டி ஓட்டுவதுமாக இருக்க, இருவரின் விழிகளும் கவிதை பரிமாறிக் கொள்ள முகவரி தேடி அலைந்தன.

திவ்யா ஏதோ பேச நினைப்பது போலத் தோன்றிய தால், "என்ன திவ்யா, ஏதும் பேச மாட்டேன்கிறாய். என் மேல் கோபமா?" என, வார்த்தைகளைப் பிரசவிக்க முடியாமல் தடுமாறி இல்லையென்று தலையசைத்தாள்.

"ஏன் வாயைத் திறந்து பேச மாட்டியா? ஏதாவது மௌன விரதமா? இல்லை, இத்தனை வருடம் உன்னைத் தவிக்க விட்டதற்காக... அதனால் திருப்பி என்னைத் தவிக்க விடுகிறாயா?" என்றான் சிறு கவலையுடன்.

அவனின் எந்தக் கேள்விக்கும் பதில் சொல்லாமல், மௌனத்தை உடும்புப் பிடியாகப் பிடித்திருந்தவளிடம், "ப்ளீஸ் திவ்யா, ஏதாவது பேசு. எனக்குக் கஷ்டமா இருக்கு... நீ இந்த மாதிரி அமைதியா இருக்கிறது..." என்றவனின் கார், ஆரோவில் நுழைவாயிலில் நுழைந்து ஓர் ரெஸ்டாரண்டில் நின்றது.

"ஏதாவது கூல் ட்ரிங்க்ஸ் வேண்டுமா திவ்யா?" என,

அதற்கும் மௌனத்தையே பதிலாகக் கொடுக்க, சுரேஷ் இறங்கிச் சென்று, இரண்டு பெப்சி வாங்கிக் கொண்டு வந்தவன் யாரும் இல்லாத ஒரு தனிமையான இடத்திற்குக் கொண்டு போய் நிறுத்தினான் காரை.

காரிலிருந்து இறங்காமல், அவள் பக்கம் திரும்பி அமர்ந்து, "என்ன திவ்யா... இதுவரைக்கும் நீ பேசவே

இல்லை. என் மேலே ஏதாவது கோபம் இருந்தா திட்டிடு. இப்படி அமைதியா இருந்து என்னைக் கொல்லாதே...” என்றவனின் வருத்தத்தில் மௌனம் கலைந்தவளாக, அவனின் கண்களை நோக்கி நிமிர்ந்தாள்.

“சாரி சுரேஷ். உங்க மேல எனக்கு எந்தக் கோபமும் இல்லை. இன்ஃபாக்ட் எனக்குச் சந்தோஷம்தான். உங்களைச் சந்திப்பேனா... இல்லையா... என்று தவித்துக் கொண்டிருந்தவள், திடீரென்று உங்களைப் பார்த்ததும் என்ன பேசுவதுன்னு தெரியாத ஒரு பிரமிப்பு.இது கனவா? இல்லை, நினைவான்னு எனக்கே ஒரு குழப்பம்...” என்று கவர்ச்சியாகத் தன் தெற்றுப் பல் தெரிய சிரிக்க...

அவளின் அந்த அழகான சிரிப்பில் மயங்கிப் போய் அவளையே பார்த்துக் கொண்டிருந்தான் சுரேஷ்.

அவளையே பார்த்துக் கொண்டிருந்தவனிடம், “என்ன சுரேஷ், அப்படிப் பார்க்கிறீங்க?” என,

சட்டென சுய நினைவிற்கு வந்தவனாக, “கார்த்திக் உன்னைப் பற்றிச் சொல்லி, நீ இன்னும் என் நினைவாகவே இருக்கிறாய் என்றதும் நான் எவ்வளவு சந்தோஷப்பட்டேன் தெரியுமா! இத்தனை வருடம் என் நினைவாகவே வாழ்ந்திருக்கிறாயே... உண்மையில் நான் லக்கிதான் திவ்யா!” என்றான் உணர்ச்சிப் பெருக்கோடு அவளின் கையைப் பிடித்தபடி.

“அப்படிச் சொல்லாதீங்க சுரேஷ்! உங்களை மாதிரி ஒரு ஜெனுயின் பெர்சன் கிடைப்பதற்கு நான்தான் புண்

ணியம் செய்திருக்க வேண்டும்..." என்று கூறிக் கொண்டே காரிலிருந்து இறங்கவும், சுரேஷும் இறங்கினான்.

இருவரும் ஒன்றாக நடக்க, "உங்களை முதன் முதலில் பார்த்தபோது எனக்கு ஒன்றும் தோன்றவில்லை. ஆனால் பழகப் பழக உங்களின் நேர்மை, பெர்சனாலிட்டி, நண்பனோட தங்கையிடம் நீங்கள் காட்டிய கண்ணியம், எல்லாவற்றுக்கும் மேலாக நான் உங்களிடம் காதலைச் சொன்னபோது அதை ஏற்றுக்கொள்ளாமல் என் அண்ணனிடம் சொன்ன விதம்... இதெல்லாம் என்னைக் கவர்ந்தது..." என்று பேசிக் கொண்டே செல்ல, இப் பொழுது சுரேஷ் இடையிட்டான்.

"எப்படி திவ்யா... என்னைப் பார்த்த நாலாவது சந்திப்பிலே அதுவும் அந்தச் சின்ன வயதில் என்னைக் காதலிக்கிறேன்னு தைரியமாகச் சொன்னே... ஒரு வேளை நான் நல்லவனாக இல்லாமல் இருந்து, உன் காதலை நான் ஏற்றுக் கொண்டிருந்தால் என்ன செய்திருப்பாய்?" என்றான் புரியாமல்.

அவனின் கேள்விக்குச் சிரித்து விட்டு, "எனக்கு என் அண்ணன் கார்த்திக்கைப் பற்றி நன்றாகத் தெரியும். அவர் ஒரு பக்கா ஜென்டில்மேன். அவர் பழகும் ஆட்களும் அவரை மாதிரிதான் இருப்பார்கள்னு சின்ன வயதிலிருந்தே தெரியும். 'உன் நண்பனைச் சொல். உன்னைப் பற்றிச் சொல்கிறேன்...' என்பார்கள்.

"என்னைக் கேட்டால் என் அண்ணனைப் பற்றித் தெரிந்தவர்கள் அவரின் நண்பர்கள் எப்படி இருப்

பார்கள்னு அவர்களுக்குத் தெரியும் என்பேன் நான்...” என்று கூறி முடித்து சுரேஷைத் திரும்பிப் பார்க்க, அவனுக்கு வியப்பாக இருந்தது.

அவளின் தெளிவைக் கண்டு, அவளுடைய தீர்க்கமான பேச்சு அவன் முகத்தில் புன்னகையைக் கொண்டு வர, “வெல் செட் திவ்யா. ஹி இஸ் நைஸ் ஜென்டில்மேன்... அவனுக்குத் துணிச்சல் அதிகம். அதே சமயம் தான் நினைப்பதை முடிக்கும் வைராக்கியமும் அதிகம். அந்தத் துணிச்சலும், வைராக்கியமும் அவன் தங்கை உன்னிடமும் இருக்கிறது.

“சாரி திவ்யா! நான்தான் உன்னைப் புரிந்து கொள்ளாமல் இத்தனை வருடம் கஷ்டப்படுத்தி விட்டேன்...” என்றான் மன்னிப்புக் கோரும் விதமாக.

“நீங்கள் இப்படி மன்னிப்புக் கேட்பதுதான் எனக்குக் கஷ்டமாக இருக்கு சுரேஷ். நீங்கள் என்ன தவறு செய்தீங்க? என் அண்ணனின் நண்பர் உங்களிடம் என் காதலைச் சொல்லாமல் வேறு யாரிடமாவது நான் சொல்லியிருந்தால் இந்நேரத்திற்கு என் நிலைமை என்ன ஆகியிருக்கும் என்றே எனக்குத் தெரியாது.

“நீங்கள் என்பதால் என் காதல் இன்றும் அழியாமல், எங்கள் வீட்டில் என் காதலை மதிக்கும் அளவிற்கு வளர்ந்திருக்கிறது. அதற்குக் காரணம் நீங்கள்தானே சுரேஷ்!” என்றவள், சட்டென அவன் கையைப் பிடித்து, “டூ யூ லவ் மீ சுரேஷ்...” என,

"எஸ் திவ்யா! ஐ லவ் யூ சோ மச்..." என்று தன் காதலை வெளிப்படுத்த, திவ்யாவிற்குப் பேச வார்த்தை களற்றுப் போனது.

சில நொடிகள் மௌன கரைப்பிற்குப் பிறகு, "ஒரு நிமிஷம் திவ்யா!" என்று அவன் பாக்கெட்டிலிருந்து சிறு நகைப் பெட்டியை எடுத்து, அதிலிருந்த ஒற்றைக் கல் மோதிரத்தை அவள் விரலில் போட்டு, "இது உனக்காக என் காதலைச் சொல்வதற்காக வாங்கினேன்..." என,

"இது இல்லையென்றாலும், உங்கள் மனது என்னவென்று தெரிந்து விட்டது. தேங்க்ஸ்..." என்றாள் ஆத்மார்த்தமாக.

இருவரும் பேசிக் கொண்டே காருக்குத் திரும்பி வந்து காரின் உள்ளே அமர, சுரேஷ் அவளிடம் பெப்சியை நீட்ட, அவள் நன்றி சொல்லி வாங்கிக் கொண்டு, "என் னால் ஒரு விஷயம்தான் நம்ப முடியவில்லை. அண்ண னுக்குப் பொதுவாகவே காதல் என்றாலே பிடிக்காது.

"அதற்குக் காரணம் அவரின் அழகுக்காகவும், பணத்திற்காகவும் நிறையப் பெண்கள் அவரை வளைக்க முயற்சி செய்ததால், அவருக்குப் பெண்களின் மீதும், காதலின் மீதும் வெறுப்பு. ஆனால் என் காதலுக்கு அவர் எப்படிச் சம்மதித்தார் என்றே தெரியவில்லை?" என்று வியப்பாகக் கேட்க,

சுரேஷ் கடகடவெனச் சிரிக்க ஆரம்பித்தான்.

அவனின் சிரிப்பிற்கான காரணம் புரியாமல் மற்றவள் விழிக்க, சிரிப்பை அடக்க முடியாமல் அடக்கி,

"சாரி திவ்யா. இப்படிக் காரணம் சொல்லாமல் சிரிக்கிறேன்னு நினைக்காதே. கார்த்திக்குக் காதல் பிடிக்காது உண்மைதான். ஆனால் அது ஆறு மாதத்திற்கு முன்... இப்போது இல்லை..." என்றான் ஒரு மர்மச் சிரிப்புடன்.

"சாரி... நீங்க சொல்றது எனக்குப் புரியலை சுரேஷ்! தெளிவாச் சொல்லுங்க. ஏன் இப்போ என்ன மாற்றம்?" என்றாள் வியப்புடன்.

"பிகாஸ்... கார்த்திக் இப்போ ஒரு பொண்ணை விரும்புகிறான்..." என்று சொல்லி முடிப்பதற்குள்,

திவ்யா குறுக்கிட்டு, "கார்த்திக் அண்ணனா காதலிக்கிறார். நீங்க கிண்டல் ஏதாவது செய்றீங்களா சுரேஷ்?" என்றாள் நம்பாமல்.

"செர்டன்லி நாட் திவ்யா... நான் கேலி செய்ய வில்லை. நான் சொல்வது நிஜம்தான். நீ வரும்போது ஒரு பெண்ணைப் பார்த்தாயே... அவள்தான் அவனுடைய கேர்ள்..." என,

"ஆமாம், நான் கவனிக்கவே இல்லை. ரொம்ப அழகா இருந்தாங்க. யார் அவங்க? அவங்க பெயர் என்ன?" என்று ஆர்வத்துடன் விசாரிக்க, சுரேஷ் மீண்டும் சிரிக்க ஆரம்பித்தான்.

பதில் சொல்லாமல் சிரிக்கவும், "சொல்லுங்க சுரேஷ்..." என்று சிணுங்க,

தன் சிரிப்பை நிறுத்தி, "அவள் என் அத்தை பெண்தான்!" என்றவன், அவளைப் பற்றிய விவரங்,

களைக் கூறி, "என்ன ஒன்று... நீ ரொம்பத் தைரியமா பெண், ஷைலு ஆப்போஸிட். மிகவும் பயந்த சுபாவம். ஆனால், கார்த்திக்கின் மேல் உயிரையே வைத்திருக் கிறாள்.

"கார்த்திக்கும் அப்படித்தான்... எதற்கும் தன் நிதா னத்தை இழக்காதவன். ஷைலுவை முதன் முதலில் பார்த்தவுடனே விரும்ப ஆரம்பித்து விட்டான். இரண்டாவது சந்திப்பிலே தன் காதலையும் சொல்லி விட்டான் என்றால் பார்த்துக் கொள்... எந்த அளவுக்கு அவன் ஷைலுவை விரும்புகிறான் என்று!" எனச் சொல்லி முடிக்க, திவ்யா அசந்து போய் அமர்ந்திருந்தாள்.

சுரேஷ் சொல்வதை நம்பவும் முடியாமல், நம்பாமல் இருக்கவும் முடியாமல் யோசனையாக இருந்தவள், சிறிது நேரம் கழித்து, "வெரி நைஸ்... சோ ஸ்வீட். என்னாலே நம்ப முடியவில்லை. இது எப்படிச் சாத்தியம்? ஹி ஹாஸ் வில் பவர்... அதனால்தான் இத்தனை வருடம் பெண்கள் பக்கமே திரும்பாமல் இருந்தவர், ஷைலஜாவைப் பார்த் ததும் முதல் பார்வையிலே விழுந்து விட்டார். தே ஆர் மேட் ஃபார் ஈச் அதர்!" என்று வியந்தாள்.

அவளின் கருத்தை ஒத்துக் கொண்டு, "சரி திவ்யா... உங்கள் அப்பா அம்மா நம் திருமணத்திற்குச் சம்மதிப் பார்களா?" என்றான் சிறு சந்தேகத்துடன்.

"எனக்கு அவர்களைப் பற்றிக் கவலையே இல்லை. ஏனென்றால், கார்த்திக் அண்ணன் ஒரு வார்த்தை சொன்னால், அதற்கு வேறு பேச்சுப் பேச மாட்டார்கள்.

அண்ணன் மேல் அவர்களுக்கு அவ்வளவு மதிப்பு. சரி, உங்கள் வீட்டில் எப்படி சுரேஷ்?" என்று கேள்வியைத் திருப்பினாள்.

ஒரு பெருமூச்சை வெளியேற்றி விட்டு, "எனக்குப் பிரச்சினை இல்லை என்றாலும், என் மாமா... அதான் ஷைலுவின் அப்பா... அவரும், என் அம்மாவும்... ஷைலு வுக்கும் எனக்கும் திருமணம்னு முடிவு செய்திருந்தார்கள். ஆனால், ஷைலு, கார்த்திக்கை விரும்புகிறாள்னு தெரிந்த வுடன் என் மனதை மாற்றிக் கொண்டேன். இப்போ இந்தப் பிரச்சினையிலிருந்து நானும், ஷைலுவும் எந்தத் தொல் லையும் இல்லாமல் வெளியே வரணும். அதான் என்ன செய்யலாம்னு யோசிக்கிறேன் திவ்யா," என்றான் குழப்பத் துடன்.

"ஓ...! இப்படி ஒரு பிரச்சினை இருக்கிறதா? அண்ணன் என்ன சொன்னார்? அவரிடம் கேளுங் களேன்... ஏதாவது வழி சொல்வார்!" என்றாள் ஆலோ சனை கூறும் விதமாக.

"இல்லை திவ்யா... என் மாமாவைப் பற்றி எனக்குத் தான் தெரியும். பார்க்கலாம்... சீக்கிரம் எல்லாவற்றிற்கும் ஒரு முடிவு செய்யலாம். இத்தனை வருடம் உன்னைத் தவிக்க விட்டதே போதும். இனி ஏதாவது செய்து நம் திருமணத்தைச் சீக்கிரம் நடத்தணும்..." என்று பேசிக் கொண்டே அவள் கண்களை ஊடுருவி, "என்ன மேடம்? சீக்கிரம் நடத்தணும்தானே! உங்களுக்கு ஆட்சேபணை இல்லையே?" என்றான் சிறு குறும்புடன்.

அவனின் குறும்பை ரசித்துக் கொண்டே, "உங்க இஷ்டம்... நீங்க என்ன சொன்னாலும் ஓ.கே.தான்!" என வெட்கப்பட,

"இப்போ இப்படித்தான் சொல்லுவீங்க... அப்புறம் திருமணமானதும் பாவம் நாங்கதான்!" என்று கேலி செய்ய,

"உங்களை..." என்று அடிக்க வர, அவளது கையை இறுக்கமாகப் பிடித்துக் கொண்டான்.

"ப்ளீஸ் சுரேஷ்... கையை விடுங்க. யாராவது பார்க்கப் போறாங்க," என்று செல்லமாகக் கோபிக்க,

அதற்குச் சிரிப்புடன், "இங்கே இருப்பவர்கள் எல்லாம் பிரெஞ்சுக்காரர்கள். அவர்களுக்கு இங்கே பிரெஞ்சு கிஸ் கொடுத்தாலே அதைப் பற்றிக் கவலைப்பட மாட்டார்கள்," என்று சொல்லிக் கொண்டே, "அங்கே பார்...!" என்று காட்ட, இரு வெள்ளைக்கார ஜோடிகள், மெய்மறந்து லிப் கிஸ் அடித்துக் கொண்டிருக்க, திவ்யா முகம் சுரேஷின் மார்பில் ஒண்டிக் கொள்ள, உல்லாச மாகச் சிரித்தபடி அவளை அணைத்துக் கொண்டான்.

சில விநாடிகள் கழித்து அவனிடமிருந்து விலக, "சரி திவ்யா... மணி ஒண்ணாச்சு... வா, சாப்பிடப் போக லாம்," என்றவன், அங்கிருந்த ஒரு பிரெஞ்சு ரெஸ்டா ரன்டில் நுழைந்து, இரண்டு பிரெஞ்சு குர்மாந்து ஆர்டர் கொடுத்தான்.

"இங்கு சாப்பாடு, நாம் தினசரி சாப்பிடுகிற மாதிரி காரமாக இருக்காது. என்றாலும், இவர்கள் சாப்பாட்டில்

ஒரு ரிச்னெஸ் இருக்கும். அநாவசியமான எண்ணெய், மசாலா எதுவும் இருக்காது. ஆனால், சத்துகள் அதிகம். அதிகமான பச்சைக் காய்கறிகள் சேர்த்துக் கொள் வார்கள்," என்று விளக்கினான்.

"நான் கூட இவர்கள் கலாசாரத்தைப் பற்றி நிறையப் படித்திருக்கிறேன். நான் அமெரிக்காவில் படிக்கும் போது என் கூடப் படித்த ஒரு பெண் பிரெஞ்சு நாட்டைச் சேர்ந் தவள். அவள், அவளுடைய நாட்டைப் பற்றிச் சொல்லும் போது, கிட்டத்தட்ட அமெரிக்கர்களின் கலாசாரமும் அதே மாதிரிதான். ஆனால், இவர்கள் எப்படிப் பாண்டிச்சேரியில் கலாசாரத்தின் பிடியில் வாழும் இந்த மக்களுடன் ஒத்துப் போக முடிகிறது என்றுதான் தெரியவில்லை!" என்றாள் ஆச்சரியமாக.

"இவர்கள் ஒன்றும் இந்த மக்கள் வாழும் இந்த இடத்தில் ஒன்றாக வாழவில்லையே! ஊரைத் தாண்டி இருக்கும் இங்கே, அதன் பிறகு கடற்கரையை ஒட்டி யுள்ள இடங்களில்தானே வசிக்கிறார்கள். இருந்தாலும் ஆரம்பத்திலிருந்தே பாண்டிச்சேரி மக்கள், இவர்கள் பழக்கவழக்கங்களைப் பார்த்ததினால், எந்தப் பாதிப்பும் அவர்களுக்கு இல்லாமல் இருக்கலாம்," என்றான் யோச னையாக.

"ஆமாம் சுரேஷ். இவர்கள் எதையுமே தேவை என்றால்தான் அதை உபயோகப்படுத்துவார்கள். தனக்கு உபயோகமில்லை என்றால், தூக்கிப் போடவும் தயங்க மாட்டார்கள்... அது குடும்பமே என்றாலும்..." என,

"நீ சொல்றது கரெக்ட். நம் மாதிரி பாசம், பந்தம், காதல் என்றால் என்னவென்றே தெரியாது. இவர் களுக்குக் காதல் என்றாலே அதன அர்த்தம் வேறு. இவர்கள் வாழ்நாளில் குறைந்தது பத்து அல்லது பதினைந்து லைப் பார்ட்னர்களை மாற்றி விடுவார்கள். இவர்களுக்கு இதெல்லாம் சகஜம். நமக்கு அது அருவருப் பான விஷயம்," என்று கூறிச் சிரிக்க,

திவ்யாவும் அவனுடன் சிரிப்பில் இணைந்து கொள்ள, அதற்குள் ஆர்டர் செய்த மெனு வரவும், சாப் பிட்டுவிட்டு வெளியே வந்தார்கள்.

இருவரும் கையைக் கோத்துக் கொண்டு சற்றுத் தூரம் நடந்து, அங்கிருந்த கடையைச் சுற்றிப் பார்த் தார்கள்.

எல்லாவற்றிற்கும் கமெண்ட்ஸ் அடித்தார்கள். நிறையப் பேசினார்கள். சிரித்தார்கள்.

அங்குள்ள கோயிலுக்குச் சென்று அம்மனை வணங்கி விட்டுக் கடைசியாக மதிற் மந்திருக்குச் சென்று தீபத்தைப் பார்த்து விட்டு, உள்ளே சென்று சில விநாடிகள் தியானம் செய்து விட்டு, மனஅமைதியோடும், சந்தோஷத் தோடும் வெளியில் வந்து காரில் அமர்ந்ததும், சுரேஷ் உடனே காரை எடுக்காமல், திவ்யாவையே சிறிது நேரம் பார்த்துக் கொண்டு அமர்ந்திருந்தான். திவ்யாவும் அவனையே காதலுடன் பார்க்க, இருவரின் விழிகளும் சந்தித்துத் தடையின்றிக் கவிதைகளைப் பரிமாறக் கொண்டன.

அவளைப் பார்த்துக் கையை விரித்து, "வா..." என்று கண்ணால் அழைக்க, ஐந்தாண்டுப் பிரிவின் ஏக்கம் கரை புரண்டு ஓட, திவ்யாவும் எந்த மறுப்பும் சொல்லாமல் அவன் மார்பில் தஞ்சமடைந்தாள். சிறிது நேரம் இருவரும் மெய்மறந்து இருக்க, போன் அழைத்தது. இருவரும் சிரித்துக் கொண்டே விலக, போனை எடுத்தவன்,

"சொல்லு கார்த்திக்!"எனவும், கார்த்திக் பேசியதைக் கேட்டு, சிரித்துக் கொண்டே, "இன்னும் ஒரு மணி நேரத்தில் வந்து விடுவோம்," என்று கூறிப் போனை வைத்தான்.

காரை ஸ்டார்ட் செய்து, ஒரு கையால் வண்டியை ஓட்டிக் கொண்டே மற்றொரு கையைத் திவ்யாவின் கையோடு பிணைத்துக் கொண்டிருந்தான்.

கார் நெடுஞ்சாலையைத் தொட்டதும், "இந்த நாள் என் வாழ்நாளில் மிகவும் சந்தோஷமான நாள். இதை என்னால் மறக்கவே முடியாது. நம் திருமணம் முடிந்ததும் முதலில் இங்குதான் வரணும். நீ என்ன சொல்றே திவ்யா?" என,

"எக்ஸாக்ட்லி... என் ஐந்தாண்டு ஏக்கத்தை முடிவுக்குக் கொண்டு வந்த பொன்னாள் என்றுதான் சொல்லணும். என் வாழ்க்கையை எனக்குத் திருப்பிக் கொடுத்த நாள் இது!" என்று உணர்ச்சிவசப்பட்டுச் சொல்ல, சுரேஷ் அவளின் கையை மென்மையாக அழுத்தினான்.

"ஏன் திவ்யா, போன் செய்தால் உனக்கு ஏதும் தொந்தரவு இல்லையே?" என்றான் கேள்வியாக.

"என்ன சுரேஷ் இப்படிக் கேட்கிறீங்க? நீங்க போன் செய்யலேன்னாதான் நான் கோபப்படுவேன். எனக்குத் தினமும் உங்கள் குரலைக் கேட்கணும்!" என்று அவள் ஆசையை வெளியிட,

"கண்டிப்பா... எனக்கும் உன் குரலைத் தினமும் கேட்கணும். நான்தான் கார்த்திக்கை அடிக்கடிக் கிண்டல் செய்வேன். ஆனால், இப்போதுதான் தெரிகிறது, அவன் ஏன் ஷைலுவைப் பார்க்க இப்படித் தவிக்கிறான்னு..." என்று சொல்ல, அவளும் ஆமோதித்து, அவனது தோளின் மீது சாய்ந்து கொண்டாள்.

கார்த்திக்கின் வீட்டில்...

ஷைலுவை அவனின் அறைக்கு அழைத்துச் சென்று சோபாவில் அமர வைத்து, அவளின் பிறந்த நாளன்று எடுத்த புகைப்பட ஆல்பத்தைக் காட்டினான். ஒவ்வொரு போட்டோவுக்கும் கமெண்ட் அடிக்க, அவள் சிரித்து விட்டுப் பதிலுக்குக் கமெண்ட் அடித்துக் கொண்டே வர, கடைசியில் கிராபிக்ஸில் கல்யாணக் கோலப் போட்டோவைப் பார்த்ததும், பார்வை அதிலே நிலைத்துவிட்டது.

அந்தப் பக்கத்தைத் திருப்பாமல் அவள் பார்த்துக் கொண்டே இருக்கவும், "என்னடா... நல்லா இருக்கா? இந்தக் கோலத்தில் உன்னை நிஜத்திலே நேரிலே பார்க்க வேண்டும்னு ஆசையாக இருக்கு ஷைலு...!" என்று மென்மையாகக் கார்த்திக் பேசிக் கொண்டே செல்ல, ஷைலுவை என்னவென்று சொல்லத் தெரியாத உணர்வு

அவளைத் தாக்க, மெல்ல நிமிர்ந்து கார்த்திக்கின் கண்களையே நேராகப் பார்த்தாள்.

அவள் மனதுள் இனம் தெரியாத பயம் ஒன்று பரவி உடம்பை மெலிதாக நடுங்க வைக்க, அவள் நடுக்கத்தை உணர்ந்தவன், அவளை அருகில் இழுத்து அணைத்து, "ஹேய்... என்னாச்சு? ஏன் இப்படி நடுங்குது?" என்று பதற, அவள் பதில் சொல்லாமல் கார்த்திக்கின் மடியில் சாய்ந்தவள், சிறிது நேரம் கழித்து அவனின் மடியில் இருந்து எழ,

"என்னவென்று சொல்லுடா...? எனக்குப் பயமாக இருக்கிறது, நீ இந்த மாதிரி இருப்பது?" என்றான் மனம் துடிக்க.

"என்னவென்று சொல்லத் தெரியவில்லை கார்த்திக். ஆனால் கொஞ்ச நாளாகவே மனதில் ஏதோ நெருடலாகவே இருக்கு. என் உள்ளுணர்வு ஏதோ நடக்கப் போகுதுன்னு சொல்லிக்கிட்டே இருக்கு. அது என்ன வென்றுதான் தெரியவில்லை. அதுவும் இந்தக் கோலத்தில் நம் போட்டோவைப் பார்த்ததும் என்னை அறியாமலே என் உடம்பு நடுங்குது. உங்களைப் பிரிந்து விடுவேனோன்னு பயமாக இருக்கிறது," என்று கண்ணீருடன் அவன் மார்பில் சாய்ந்தாள்.

அவளைத் தட்டிக் கொடுத்து, "பயப்படாதே ஷைலு. என்னைக்கு இருந்தாலும் நீதான் என் மனைவி. இதை யாராலும் பிரிக்க முடியாது. நீ தைரியமாக இரு. நான்

இருக்கும் வரை உனக்கு எந்தக் கஷ்டமும் வர விட மாட்டேன். நீயாகப் பேசச் சொல்கிற வரை நான் காத்திருப்பேன்!" என்று அவளுக்கு உறுதி கூறினான்.

பாவம்! இந்த வார்த்தைதான் அவர்களிருவரின் வாழ்க்கையையும் அழிக்கப் போகிறது என்று தெரியவில்லை.

ஷைலுவின் கலக்கம் தொடர, அவளைத் தன் மேல் சாய்த்துக் கொண்டு கீழே போன் செய்து வேலைக்காரனிடம் தேநீர் எடுத்து வரச் சொன்னான். வேலைக்காரன் முத்து தேநீர் எடுத்துக் கொண்டு மேலே செல்வதைக் கவனித்து, மகாலக்ஷ்மி அந்தத் தேநீரை வாங்கிக் கொண்டு, மகனின் ரூமிற்குச் சென்றார்.

முகம் வெளுத்துக் கண்களில் கண்ணீருடன் கார்த்திக்கின்மேல் சாய்ந்து இருந்த ஷைலுவைக் கண்டதும் துணுக்குற்று, "என்ன ஆச்சு கார்த்திக், ஷைலுவுக்கு?" என்று பதற, நடந்ததைக் கூறவும், அவருக்கு, "கடவுளே! இது என்ன சோதனை? இந்த அளவுக்குப் பயப்படுகிற அளவுக்குக் கோழையாக இருக்கிறாளே...! ஐயோ...! எல்லாம் நல்லபடியாக நடக்கணுமே!" என்று தவிப்பு வந்தது.

ஷைலுவை எழுப்பி, அவளைத் தேநீர் அருந்த வைத்துத் தைரியம் சொல்லி, சற்றுத் தெளிந்த பிறகு கார்த்திக்கிடம் பத்திரமாகப் பார்த்துக் கொள்ளச் சொல்லிவிட்டுக் கீழே இறங்கிச் சென்றார்.

சிறிது நேரத்தில் அவள் சகஜமாக, மெலிதான குற்ற உணர்வு தாக்க, "சாரி கார்த்திக்... உங்களைக் கலங்க வைத்து விட்டேனா...? என்னால் உங்களுக்குச் சந்தோஷம் இல்லைதானே...?" என்று முடிப்பதற்குள், அவள் இதழ் களைக் கைகளால் மூடினான்.

"முட்டாள்தனமாகப் பேசாதே. நீ என்ன நோயாளியா, இல்லை ஊனமானவளா? பொதுவாகவே காதலிக்கும் போது பெண்களுக்கு ஏற்படும் இயற்கையான பயம்தான். இந்தப் பயம், கலக்கம் எல்லாம் நம் திருமணம் வரை தான். அதன் பிறகு உனக்கே பயம் என்றால் என்ன வென்று தெரியாமல் போய்விடும். அப்புறம் நீ என்னை வாடா போடா என்றால்கூட ஆச்சர்யப்பட மாட்டேன்!" என்று சொல்லிச் சிரிக்க, அவனின் அந்தப் பாவனையில் அவளுக்கும் சிரிப்பு வர, "ச்சீ... போடா!" என்றாள் சிரிப் புடன் முகத்தை மூடிக் கொண்டு.

அவள் கைகளை முகத்திலிருந்து பிரித்து எடுத்து, "இப்போதானே சொன்னேன்... அதற்குள் போடா என்கிறாய் பார்த்தாயா?" என்று சிரித்துக் கொண்டே, "சரி, உனக்கு என்னென்ன பிடிக்கும்? என்னென்ன தெரி யும்?" என்று பேச்சை மாற்றினான்.

அவன் கேள்விக்கு யோசித்து, "எனக்கு இளைய ராஜா இசையில் எஸ்.பி.பி. அண்ட் ஜானகி பாட்டுகள், இளங்காலை வெயில், மழை, லைட் கலர்ஸ் எல்லாமே. வாசனையான பூக்கள், விநாயகர், ம்ம்... அப்புறம்... அப்புறம்..." என்று தயங்க, அவள் சொல்வதைக் கன்

னத்தில் கை வைத்தபடி ஆர்வமாகக் கேட்டுக் கொண் டிருந்தவன்,

அவள் தயங்கவும், "ம்ம்... அப்புறம்...?" என்று குறும்பாகக் கேட்க,

மெதுவாக எழுந்து பின்னால் நகர்ந்து கொண்டே, "உங்களைப் பிடிக்கும்!" என்று சொல்லி விட்டுத் திரும்பிக் கொண்டாள்.

சோபாவில் அமர்ந்திருந்தவன், அவளின் பதிலில் எட்டி அவள் கைகளைப் பிடித்து இழுக்க, ஷைலு அவன் மடியில் விழுந்ததும், "என்னைப் பிடிக்கும்னு சொல்லி விட்டு விலகிப் போனால் என்ன அர்த்தம்?" என்று சிரித் தவன்,

"சரி, உனக்கு என்னென்ன தெரியும்?" என்றான் அவன் கை வளைவிலே வைத்துக் கொண்டு.

சற்றும் யோசிக்காமல், "படிக்கிறது ஆங்கில இலக் கியம் என்பதால், கவிதை எழுதுவேன். ஆறு வருடம் மியூசிக் கற்றுக் கொண்டதால் பாடத் தெரியும். சமைக்கத் தெரியும். கொஞ்சம் டிராயிங் தெரியும்..." என்று இழுத்து விட்டு, "அவ்வளவுதான்!" என்றாள்.

"நினைத்தேன். நீ பேசும்போது உன் குரல் மிக இனிமையாக இருக்கும்போது, நீ பாடினால் நன்றாக இருக்கும் என்று நினைத்ததுண்டு...!" என்றதுமே முகத் தில் பூத்திருந்த சந்தோஷம், சட்டென வாடி விட,

"நான் ஏழாம் வகுப்புப் படிக்கும்போது கற்றுக் கொள்ள ஆரம்பித்துப் பன்னிரண்டாம் வகுப்பு வரை கற்றுக் கொண்டேன். அதன் பிறகு... அதன் பிறகு..." என்று தயங்கியவள், "சில காரணங்களால் பாட்டு கிளாஸைத் தொடர முடியாமல் போய விட்டது!" என்று மெல்லிய குரலில் சொல்ல, அவள் முகத்தில் அந்தக் காரணத்திற்குண்டான வேதனை பிரதிபலித்தது.

அவளின் வேதனை என்னவென்று புரிந்த காரணத்தினால், அதை மாற்றும் விதமாக, "சரி. எனக்காக ஒரு பாட்டுப் பாடேன். உன் இசையென்னும் இன்ப வெள்ளத்தில் நீந்த ஓடோடி வந்த என்னை ஏமாற்றாதே ஷைலு!" என்று வசனம் பேசி விட்டுக் கண்களைச் சுருக்கிப் ப்ளீஸ் என, அவனின் பேச்சு முகத்தில் திரும்பவும் சந்தோஷத்தை மலர வைத்தது.

"பாடுவேன்... ஆனால் சிரிக்கக் கூடாது!" என்று அவனிடம் உறுதி வாங்கிக் கொண்டு, எம்.எஸ்.சுப்புலட்சுமி பாடிய, 'குறை ஒன்றும் இல்லை' என்ற பாட்டைக் கண்ணை மூடிக் கொண்டு அனுபவித்துப் பாட, அவளையே பார்த்துக் கொண்டு அமர்ந்திருந்த கார்த்திக், இசையில் மெய்மறந்து கண்ணை மூடி விட, ஏதோ சத்தம் கேட்டுக் கண்ணைத் திறந்தவன், தாய் தந்தை இருவரும் நிற்பதைக் கண்டதும், மகாலட்சுமி வாயில் ஒற்றை விரலை வைத்து, "ஷ்..." என சைகை காட்டினார்.

பாடி முடித்ததும், என்ன சத்தமே இல்லையே என்று கண்ணைத் திறந்தவள், மூவரும் தன்னையே பார்த்துக்

கொண்டு நிற்கவும், வெட்கத்துடன் மகாலக்ஷ்மியிடம் ஒண்டிக் கொண்டாள்.

அவளை அணைத்துக் கொள்ள, "ரொம்ப நல்லாப் பாடுறே ஷைலு. எவ்வளவு இனிமையான குரல்? நாங்க நல்லா ரசித்தோம்," என்று விஷ்வநாத் பாராட்ட,

"இதுக்குத்தான் ஒரு பெண் பிள்ளை வேண்டும் என்பது...? வீடே கோயில் மாதிரி இருக்கும்..." என்று அவளின் முதுகைத் தட்டிக் கொடுத்து விட்டு, "சரி, நீங்க பேசிக்கிட்டு இருங்க," என்று கதவை மூடிவிட்டுச் சென்றார்கள்.

கார்த்திக் அவளைத் தூக்கி ஒரு சுற்றுச் சுற்றி, "ஷைலு... சூப்பர்டா. ரியலி பென்டாஸ்டிக். நான் எதிர்பார்க்கவே இல்லை, நீ இவ்வளவு அழகாய்ப் பாடுவாய் என்று!" எனப் பாராட்டியதும், கன்னங்குழிய அழகாகச் சிரிக்க, அவளின் சிரிப்பை ரசித்தவன், "சரிடா... எனக்காக இன்னொரு பாட்டுப் பாடேன்!" என்று அவளின் தாடையைப் பிடித்துச் செல்லமாகக் கொஞ்சினான்.

அவன் கொஞ்சியதும் வெட்கத்தை ஓரம் தள்ளி, "உங்களுக்கு இல்லாததா... சொல்லுங்க, என்ன பாட்டுப் பாடணும்?" என,

"சிகப்பு ரோஜாக்கள் படத்தில் இருந்து மின்மினிக்குக் கண்ணில் ஒரு மின்னல் வந்தது என்ற பாட்டு எனக்கு மிகவும் பிடித்தமான ஒன்று. ப்ளீஸ்டா...!" எனவும், அவன் விருப்பப்படி பாட ஆரம்பித்தாள்.

அவள் பாடுவதைக் கன்னத்தில் கை வைத்து அமர்ந்து, அவளையே பார்த்துக் கொண்டு இருந்தவனின் பார்வையைத் தாங்கி அவனையே காதலுடன் பார்த்து உருகிப் பாடி முடித்ததும், "உனக்குள் நிறைய திறமை இருக்குடா. அதை ஏன் இன்னும் வளர்க்கக் கூடாது? இனியாவது பாட்டுக் கிளாஸைத் தொடரேன் ஷைலு...!" என்று ஆலோசனை கூற, அதை ஏற்றுக் கொண்டாள்.

"ம்ம்... தூக்கம் வரலைன்னா பொண்டாட்டியைத் தாலாட்டுப் பாடச் சொல்லி ரசித்துக் கொண்டே தூங்க லாம்!" என்று குறும்பாகக் கூற,

சிரித்துக் கொண்டே, "ஹலோ கார்த்திக் சார்... முதலில் திருமணம் ஆகட்டும்... அதன் பிறகு உங்க ஆசையெல்லாம் சொல்லுங்க... நிறைவேற்றி வைக் கிறேன்!" என்று கேலி செய்ய,

"ஏன்? இப்பவே கொஞ்சம் ஆசையை நிறைவேற்றி வைக்கக் கூடாதா? நான் பாவமில்லே... நீ என் செல்லம் தானே?" என்று கொஞ்ச, அவள் மூக்கைச் சுருக்கி, ஒற்றை விரலை மடக்கி அழகு காட்டினாள்.

திடீரென்று, "திவ்யா, அவங்க காதலை சுரேஷிடம் சொல்லி இருப்பாங்களா? இல்லை, தயங்குவாங்களா கார்த்திக்...?" என்றாள் சிறு சந்தேகத்துடன்.

அதைக் கேட்டதுமே சிரித்து, "நம்மை மாதிரி எக்ஸ்ட்ரீமைக் கூட நம்பி விடலாம்... ஆனால், அமைதி யாக இருக்கிறவங்களை நம்ப முடியாது. அதுவுமில்லாமல்

திவ்யாவிற்குத் துணிச்சல் அதிகம். அவள் என்ன நினைக் கிறாளோ அதைத் தெளிவாகச் சொல்லிடுவாள். சுரேஷும் அப்படித்தான். எப்படியோ நானும் அவனும் வருங் காலத்தில் சொந்தமாக ஆகப் போகிறோம் என்று நினைத் தாலே சந்தோஷமாக இருக்கிறது. இதெல்லாம் உன் னால் தானே! உன்னைச் சந்தித்த பிறகுதான் எனக்கு வாழ்க்கையோட அர்த்தமே என்னவென்று தெரியுது," என்றான் அவள் நெற்றியில் செல்லமாக முட்டியபடி.

"கார்த்திக், ஆன்ட்டி சொல்ற மாதிரி நம் இரண்டு ஜோடிகளின் திருமணம் நடக்கவில்லை என்றால் என்ன... முதலில் சுரேஷ் – திவ்யா திருமணத்தை நடத்தி விடலாமே! ஏற்கெனவே ஐந்து வருஷமாகத் திவ்யா கஷ்டப்பட்டுட் டாங்க. இனியும் அவங்களைப் பிரிச்சு வைக்கிறது நல்லா இருக்காது. நீங்க திவ்யா பெற்றோரிடம் பேசுங்க... நான் சுரேஷிடம் பேசுகிறேன். அவர் எனக்காகத்தான் பார்க் கிறார்," என்றாள் யோசனையுடன்.

"உண்மைதான். ஒரு பத்து நாள் பிரிவுக்கே உன்னைப் பார்க்காமல் உலகமே வெறுமையாக இருக் கிற மாதிரி இருக்குது... தாங்க முடியவில்லை. அவள் இத்தனை வருடம் எவ்வளவு தவித்திருப்பாள்? இது கொடுமைதான் இல்லையா?" என்றான் அவளிடமே.

ஷைலு சிரித்துக் கொண்டே, "திவ்யா, சுரேஷைப் பிரிந்து கொடுமையை அனுபவித்தாள்னு சொல்லுங்க, நான் ஒத்துக் கொள்கிறேன். ஆனால், உங்களைப் பிரிந்து கஷ்டப்பட்டேன்னு யார் சொன்னது? நான் உங்களைப்

பிரிந்து கஷ்டப்படவே இல்லையே!" என்றாள் ஓரக் கண்ணால் பார்த்துக் குறும்பாக நோக்கியபடி சிரித்துக் கொண்டே.

"அடிப்பாவி! என்னையே கவுக்கிறியே. உன்னை என்ன செய்கிறேன் பார்!" என்று அவளைப் பிடிக்க வர, அவனின் பிடிக்குச் சிக்காமல் ஓடினாள். இருவரும் ஓடிப் பிடித்து விளையாடிக் கொண்டிருப்பதைக் கண்டு உள்ளே வந்த மஹா சிரித்து விட்டுச் சாப்பிட அழைக்க, நால் வரும் அரட்டை அடித்தபடி சாப்பிட்டு விட்டு எழுந்ததும், பெரிய வர்கள் இருவரும் சிறியவர்களிடம் சொல்லிக் கொண்டு வெளியே கிளம்பி விட்டார்கள்.

மீண்டும் மாடிக்கு வந்ததும், "சரி, என்னிடம் கேட்டீர்களே... உங்களுக்கு என்ன பிடிக்கும் என்று சொல்லவே இல்லையே!" என்று தலையைச் சாய்த்து ஷைலு கேட்க,

கார்த்திக் சிரித்து விட்டு, அவள் வெண்டை விரல்களை வருடிக் கொண்டே, "எனக்குப் பொதுவாகவே எதிலேயும் ஆசையில்லை. உன்னை மாதிரியேதான், மெட்டீரியல் திங்ஸ் எது மேலேயும் எனக்கு ஆசை இல்லை. கடற்கரையில் அமர்ந்து மணிக்கணக்கில் அலையை ரசித்துக் கொண்டிருப்பேன். குழந்தைகள் பிடிக்கும். என் குடும்பத்தைப் பிடிக்கும். இந்த ஐந்து மாதமாக உன்னைப் பிடிக்கும்.

"உன்னுடைய அமைதி, அழகு, இந்த வெட்கம், எப்பவாவது நீ செய்கிற குறும்பு, உன்னுடைய நிதானம்

இதெல்லாம் பிடிக்கும். மற்றபடி வேலையில் மூழ்கி விட்டால் வேறு ஞாபகம் வராது. ஆனால், உன்னைச் சந்தித்த நாளிலிருந்து கொஞ்சம் டிஸ்டர்ப் ஆனது உண்மை," என்று கூற, அவன் முகத்தையே பார்த்துக் கொண்டிருந்தவள், மனம் நெகிழ்ந்து கார்த்திக்கின் கன்னத்தில் அழுந்த முத்தமிட, அவளை இழுத்து அணைத்துக் கொண்டான்.

அதன் பிறகு, கம்ப்யூட்டரில் என்ன படிக்கிறாள் என்று கேட்டு, அதில் இருந்த சில சந்தேகங்களை அவளுக்குச் சொல்லிக் கொடுக்க, அதைக் கவனமாகக் கற்றுக் கொண்டாள். கொஞ்ச நேரம் செஸ் விளையாடினார்கள். தோட்டத்தில் கொஞ்ச நேரம் உலவாவினார்கள். வெளியில் போய் விட்டுத் திரும்பி வந்த பெரியவர்களுடன் அமர்ந்து பேசிக் கொண்டிருக்கும் பொழுது வெளியில் போயிருந்த மற்றொரு ஜோடி வீடு திரும்ப, இருவரின் முகத்தில் சந்தோஷம் விரவியிருப்பதைக் கண்டு நால் வருக்கும் பரம திருப்தி.

மகாலக்ஷ்மி, திவ்யாவின் அருகில் வந்து, அவள் தலையை அன்புடன் வருடி, "என்ன திவ்யா... சுரேஷிடம் எல்லாவற்றையும் பேசியாச்சா? இப்போ உனக்கு நிம்மதிதானே? இனி நான் அஞ்சலி கிட்டே பேசலாம் தானே, உன் கல்யாணத்தைப் பற்றி...?" என்று வாஞ்சை யாக விசாரிக்க, திவ்யாவின் முகம் வெட்கத்தில் தழைந்தது.

"பேசிட்டேன் பெரியம்மா... இருந்தாலும், அம்மா விடம் பேசுவதற்கு முன், எதற்கும் சுரேஷிடம் பேசி விட்டுச்

செய்யுங்கள். அவருக்கு ஏதோ கொஞ்சம் பிராப்ளம் இருக்கிறது என்கிறார்... அதைக் கேட்டு விட்டு, அதன் பிறகு முடிவு செய்யுங்கள்," என்றாள் தீர்க்கமாக.

"திவ்யா, இவ ஷைலு..." என்று கார்த்திக் அறிமுகப் படுத்த,

சிரித்துக் கொண்டே, "சுரேஷ் எல்லாவற்றையும் சொன்னார் அண்ணா..." என்றவள் ஷைலுவிடம் திரும்பி, "வாங்க, என் ரூமிற்குப் போகலாம். உங்களிடம் நிறையப் பேசணும்!" என்று அழைக்க, ஷைலு, கார்த்திக்கை நோக்க, அவன் கண்ணாலே அனுமதி தர, திவ்யா சிரித்துக் கொண்டே, "அண்ணன் அனுமதி இல்லாமல் எங்கேயும் போக மாட்டீங்க போலிருக்கிறது...!" என்று சீண்ட, எல்லோரும் சிரித்தார்கள்.

"நீங்க ரொம்ப அழகாக இருக்கீங்க ஷைலு. கார்த்திக் அண்ணனின் அழகுக்கும், கம்பீரத்திற்கும் நீங்கதான் சரியான ஜோடி. சுரேஷ் சொன்னார், அண்ணனை ஒரே பார்வையில் விழ வெச்சீங்கன்னு..." என்று சொல்ல, ஷைலு வெட்கத்துடன் எதுவும் பேசாமல் சிரிக்க, அவளே தொடர்ந்து, "நீங்க வந்திருப்பதைக் கவனிக் காமல், ஒரு மரியாதைக்காகக் கூட எதுவும் பேசாமல் போய் விட்டேன். ஐ யாம் எக்ஸ்ட்ரீம்லி சாரி ஷைலு," என்றாள் மன்னிப்பாக.

"ச்சே... ச்சே...! இதில் என்ன இருக்கு? உங்கள் நிலைமையில் நான் இருந்தாலும் இப்படித்தான் இருந் திருப்பேன். சரி, சுரேஷிடம் எல்லாம் பேசியாச்சா? எப்போ

திருமணத்தை முடிவு செய்திருக்கீங்க?" என்றாள் ஆவல் மிக.

"இப்போ வேண்டாம் ஷைலு... முதலில் உங்கள் பிரச்சினை முடியட்டும், அதன் பிறகு பார்த்துக் கொள்ளலாம். இப்போது சொன்னால் உங்களுக்கு ஏதாவது சிக்கல் வந்து விடும்னு பயப்படுகிறார். அது நியாயம்தானே! கொஞ்ச நாள் போகட்டும்... அதன் பிறகு, உங்கள் அப்பாவிடம் சொன்ன பிறகு எங்கள் திருமணத்தை முடிவு செய்யலாம் என்றிருக்கிறோம்!" என, ஷைலுவுக்கு வாயடைத்துப் போனது.

'ஒரு பக்கம் எனக்காக மட்டுமே பார்த்துப் பார்த்துச் செய்யும் மனிதர்கள், இன்னொரு பக்கம் என் நிம்மதியை, சந்தோஷத்தை அழிக்கும் மனிதர்கள்... ஏன் இப்படி ஒரு முரண்பாடு?' என்று ஆயாசம் நெஞ்சை அழுத்த, மௌனமாக அமர்ந்திருந்தாள்.

அவளருகில் அமர்ந்து, "என்ன ஷைலு... ஏதாவது பேசாமல் இருக்கீங்க, ஏதாவது பிராப்ளமா?" என்றவளின் பரிவான விசாரிப்பிற்கு மெலிதாகப் புன்னகைத்து,

"இல்லை திவ்யா... எனக்காகப் பார்க்க வேண்டாம். உங்கள் திருமணத்தை நீங்கள் முடிவு செய்யுங்கள். நான் சுரேஷிடம் இது பற்றிப் பேசுகிறேன்," என்றதுமே,

"பரவாயில்லை ஷைலு... இத்தனை வருடம் அவருக்காக... அவருடைய காதலுக்காகக் காத்திருந்தேன். இப்போது அது கிடைத்து விட்ட திருப்தியில், எத்தனை

வருடம் ஆனாலும் காத்திருக்க நான் தயார். இன்னும் சொல்லப் போனால், உங்களுக்கு நான் ரொம்பவே கடமைப்பட்டிருக்கிறேன். உங்கள் அப்பா, அம்மா முடிவு செய்த சுரேஷை... நீங்கள் வேண்டாம் என்றதால்தான் என் சுரேஷ் அப்படியே திரும்பி என்னிடம் வந்திருக்கிறார்.

"அதே சமயம், கார்த்திக் அண்ணனுக்குக் காதலைப் புரிய வைத்து, என்னுடைய காதலுக்கும் சம்மதம் சொல்ல வைத்த உங்களுக்கு எப்படி நன்றி சொல்வது என்றே தெரியவில்லை!" என்று கூறி, அவளின் கையை நன்றி யோடு பிடித்துக் கொண்டாள்.

"இது எதுவுமே நான் செய்யவில்லை. தானாகவே நடந்தது. எனக்கு எதற்கு தேங்க்ஸ்?" என,

"மே பி... பட் யூ ஆர் த மெயின் பெர்ஸன் ஃபார் ஆல் தோஸ் ஈவென்ட்ஸ்!" எனச் சன்னமாகப் புன்னகைத் தாள்.

கார்த்திக்கின் வீட்டில் விடை பெற்று இருவரும் வீட்டிற்குக் கிளம்ப, திரும்பும் வழியில் விக்கிக்குப் போன் செய்து விட்டு, மௌனமாக வந்த ஷைலுவைக் கூர்ந் தவன், "என்ன ஷைலு... அமைதியாக வர்றே? எப்படி இருந்தது இன்றைய நாள்? கார்த்திக் சொன்னான், நீ அவன் கூட வெளியில் வருவதற்குப் பயப்படுகிறாய் என்று. ஏன் ஷைலு... யார் பார்க்கப் போகிறார்கள்? தைரியமாக வந்திருக்கலாம் அல்லவா? நான்தான் இருக்கிறேனே... அப்புறம் என்ன தயக்கம், பயம்?" என்றான்.

"எனக்கும் கார்த்திக் கூட வெளியில் போக ஆசை தான். ஆனால், என் நேரம் எப்படி இருக்கும்னு சொல்ல முடியாதே! நான் அவர் கூடப் போய்... அதை யாராவது பார்த்து நம் வீட்டில் சொல்ல... நான் கஷ்டப்பட்டாலும் பரவாயில்லை, கார்த்திக்குக்கும் இதில் அசிங்கம். அவர் எதற்கு என்னால் மற்றவர்களிடம் அசிங்கமோ, கஷ்டமோ படணும்? அதான் வேண்டாம்னு சொல்லிட்டேன். என் கவலை அது இல்லை சுரேஷ்...!" என்றவள், காரின் வெளிப்பக்கம் திரும்பி வேடிக்கை பார்க்க ஆரம்பித்தாள்.

அவனுள் ஆச்சரியம் மலர, 'என்ன ஆச்சு இவளுக்கு...?' என்று யோசித்தபடியே, "என்னம்மா, ஒன்றும் பேசாமல் வருகிறாய்? வேறு என்ன கவலை உனக்கு? என்னிடம் சொல்லக் கூடாதா? கார்த்திக் எதுவும் சொல்லி விட்டானா? அவன் உன்னிடம் அப்படிப் பேச மாட்டானே! வேறு என்னதான் விஷயம், சொல்லு ஷைலு?" என்று காரை ஓரமாக நிறுத்தினான்.

அவனின் கனிவில் கண்கள் கரை கட்ட, கை விரல்களை முறுக்கியபடி, "என்னால் உங்களுக்கு எவ் வளவு தொல்லைகள் சுரேஷ்? இத்தனை வருடம் கழித்து உங்களை ஆசையுடன் எதிர்பார்த்த திவ்யாவை உங்க ளால் சீக்கிரம் கல்யாணம் செய்து கொள்ள முடியாது என்று நினைக்கும்போது, எனக்குக் கஷ்டமாக இருக் கிறது. என்ன பிரச்சினை வந்தாலும் பரவாயில்லை சுரேஷ், நீங்கள் அப்பாவிடம், எனக்கு இதில் இஷ்ட மில்லைன்னு வெளிப்படையாகச் சொல்லிடுங்க!" என்றாள் வேதனை நிறைந்த குரலில்.

அவளின் பேச்சில் ஏதோ ஒன்று பிறள, 'எனக்காக இப்படி வேதனைப் படுகிறாளே!' என்று நெஞ்சம் கசிய, 'முதலில் இவளை நார்மல் நிலைக்குக் கொண்டு வரணும்' என்று நினைத்தவன், "ஷைலும்மா... இதில் உன் தப்பு எதுவும் இல்லை. நம் வீட்டுப் பெரியவர்களின் ஆசை. இதைத் தவறு என்றும் சொல்ல முடியாது. அதனால் இந்தப் பிரச்சினையை நான் சீக்கிரமே தீர்க்கிறேன். நீ உன் மனதைப் போட்டுக் குழப்பிக் கொள்ளாதே. என்னிடம் விட்டு விடு.

"முதலில் ஹிட்லர்ஸ் திருமணம் முடிந்ததும், மாமாவிடம் பேசி இதற்கு ஒரு முடிவு கட்டுகிறேன். எதுவாக இருந்தாலும் நானும் கார்த்திக்கும் பார்த்துக் கொள்கிறோம். அதுவரை நீ கண்டதையும் யோசிக்காமல், கார்த்திக்கைப் பற்றி மட்டுமே நினை. எனக்கு அது போதும். ஓ.கே...?" என்று அவள் தலையை ஆதரவாகத் தடவ, ஷைலுவின் முகத்தில் புன்னகை வந்தது.

"உன்னை நல்லபடியாகப் பார்த்துக் கொள்ளச் சொல்லிக் கார்த்திக் என்னிடம் சொல்லி இருக்கிறான். இனிமேல் நீ இந்த மாதிரி வேதனைப்படுவது, அழுவது எல்லாம் கூடாது. எந்தப் பிரச்சினையையும் தைரியமாக எதிர்கொள்ளணும். ப்ளீஸ், பீ பிரேவ் ஷைலு..." என்று தைரியமளித்து விட்டுக் காரை எடுத்தான்.

அடுத்த இரண்டாம் நாளே சுரேஷ் கிளம்பி விட, காயத்திரியுடன் காலேஜ் சென்றவள், எதிரில் வந்த ஷிவாவைப் பார்த்துச் சிநேகமாகப் புன்னகைக்க,

அவளைப் பற்றி விசாரித்தவனுக்குப் பதில் கூறி விட்டு சந்தோஷ், ஸ்வேதாவைப் பற்றி விசாரித்தாள்.

"எல்லோரும் நல்லா இருக்காங்க. ஒரு நாள் வீட்டுக்கு வாங்களேன்!" என்று அழைப்பு விடுத்தான்.

அவன் அழைப்பிற்குச் சிரித்து, "நேரம் கிடைக்கும் போது கண்டிப்பாக வருகிறேன்!" என,

"வருகிறேன் அல்ல... வருகிறோம்னு சொல்லுங்க!" என, ஷைலுவின் புருவம் கேள்வியாக உயர்ந்தது.

"புரியவில்லை...? நீங்களும் கார்த்திக் அண்ணனும் கண்டிப்பாக வரணும்..." என்ற ஷிவாவின் பேச்சு தர்ம சங்கடத்தை உண்டாக்க, பதிலாகச் சிரிப்பைக் கொடுத்து விட்டுக் கிளாஸுக்குச் சென்றாள்.

புது கிளாஸ், புது விரிவுரையாளர் என்பதால், எல்லாமே சுவாரசியமாக இருந்தது.

சகோதரிகள் இருவரும் கல்யாண மயக்கத்தில் இருந்ததால், தற்காலிகமாக ஷைலுவை வறுத்தெடுப்பதை மறந்து விட்டு, ஷாப்பிங், பியூட்டி பார்லர் என்றிருந்தால், அவளுக்கும் நாட்கள் நிம்மதியாகக் கழிந்தது.

அந்த வார புதன்கிழமை காலையில் வீடே தடபுட லாக இருந்தது. ஷைலுவும் ஆவலுடன் அக்காவின் மாப்பிள்ளைகளைப் பார்க்கக் காத்திருந்தாள்.

அன்று காலேஜுக்குப் பாதி நாள் லீவு போட்டு வீட்டுக்கு வந்தவள், வீட்டில் நிறைந்திருந்த சொந்தங்

களைக் கண்டதும், எல்லோரிடமும் மரியாதைக்குப் பேசி விட்டுத் தன் ரூமிற்குச் சென்று முகம் கழுவிக் கொண்டு கூந்தலைப் பின்னிக் கொண்டிருந்தவளைத் தேடி சுஜா வரவும், புன்னகையுடன் நோக்கினாள்.

"என்னம்மா... என்ன விஷயம்...? நான் ஏதாவது செய்யணுமா? அக்கா எல்லாம் ரெடி ஆகி விட்டார்களா? இருங்க, இதோ ஐந்தே நிமிடத்தில் ரெடியாகி வந்திடறேன்!" என்று படபடவென்று பேசியபடி வேகமாகப் பின்னலைப் போட, தாய்க்கோ தர்மசங்கடமாக இருந்தது.

தன் ஒப்பனையைத் தொடர்ந்தபடி கண்ணாடி வழியாகத் தாயை நோக்க, அவர் தயக்கத்துடன் கையைப் பிசைந்து கொண்டு நிற்கவும், ஷைலுவின் புருவங்கள் கேள்வியாக நெரிந்து, "என்னம்மா...?" என்றாள் ஓர் அழுத்தத்துடன்.

அப்பொழுதும் அவர் தயங்கிக் கொண்டே, "ஷைலு... நான் சொல்வதை நீ புரிந்து கொள்வாய்னு நினைக்கிறேன்..." என்றவர், சிறு இடைவெளி விட்டு, "மாப்பிள்ளைகள் வரும் நேரத்தில் நீ இங்கு இருக்கக் கூடாதுன்னு நல்லியும் சதுவும் சண்டை போடுகிறார்கள். நானும் அப்பாவும் எவ்வளவோ சொல்லிப் பார்த்து விட்டோம்... கேட்க மாட்டேன்கிறார்கள்..." என்று மேலே தொடர முடியாமல் நிறுத்தி விட்டார்.

"அதனால்..." என்றவளுக்குக் குரலே எழ மறுக்க, மகளின் கையைப் பிடித்து,

"ப்ளீஸ் ஷைலு... நீயாவது புரிந்து கொள்ளும்மா...!" என்றார் கண்ணீருடன் கெஞ்சுதலாக.

மனதில் இனம் புரியாத வேதனை அழுத்த, கண்ணீருடன் வேதனையை விழுங்கி, "சரிம்மா... அவங்க ஆசைப்படியே நான் இங்கு இருக்கவில்லை. நான் மகாலக்ஷ்மி ஆன்ட்டி வீட்டுக்குப் போகிறேன். நீங்கள், எல்லோரும் போனதும் எனக்குப் போன் செய்யுங்கள், வருகிறேன்...!" என்று சொல்லி வேகமாகக் கிளம்பி, விக்கியை அழைத்துக் கொண்டு சென்று விட்டாள்.

விக்கிக்கும் விஷயம் தெரிந்து ஆத்திரம். ஆனால், ஒன்றும் சொல்ல முடியாத நிலைமை. மௌனமாக ஷைலு வைக் கார்த்திக் வீட்டில் இறக்கி விட்டு, "இங்கேயே இரு ஷைலுக்கா... நான் வந்து உன்னை அழைத்துப் போகிறேன்!" என்று வாசலோடு கிளம்பி விட்டான்.

மன பாரத்துடன் வீட்டு மணியை அழுத்த, வேலைக் காரன் முத்து வந்து திறப்பதைக் கண்டு ஆச்சரியத் துடன், "என்ன முத்து, நீங்க வந்து திறக்கிறீங்க...? ஆன்ட்டி இல்லை...?" என,

"முதலில் நீங்க உள்ளே வாங்கம்மா. அம்மா, அய்யா, சின்னம்மா எல்லோரும் கல்யாணத்திற்குப் போயிருக்காங்க. சின்ன அய்யா மட்டும் மேலே இருக் காங்க. நீங்க மேலே போங்க!" என்றான் முத்து அன்புடன்.

மாடியேறிச் சென்று கதவைத் தட்டி அனுமதி கேட்க, "எஸ் கமின்..." என்ற அவனின் கம்பீரக் குரல் கேட்டு உள்ளே செல்ல, லேப்டாப்பில் வேலையாக இருந்தவன்,

அந்த நேரத்தில் ஷைலுவைக் கண்டதும் ஆச்சரியத்துடன் லேப் டாப்பை மூடி வைத்து விட்டு, "ஏய், மை ஸ்வீட் ஷைலு... என்னடா திடீரென்று வந்து இன்ப அதிர்ச்சி கொடுக்கிறே...?" என்று அவளைக் கைப்பிடித்து அழைத்து வந்து சோபாவில் அமர வைத்தான்.

அவள் அமர்ந்து, தலையை இரண்டு கைகளாலும் தாங்கிப் பிடித்துக் கொண்டு இருப்பதைப் பார்த்தவன் துணுக்குற்று, "என்ன ஷைலு...? என்ன ஆச்சு? ஏன் மூட் அவுட்டாக இருக்கிறாய்? இது காலேஜ் விடுற டைம் ஆச்சே! நீ வீட்டுக்குப் போகலை...? கையிலே புக்ஸ் இல்லை... என்னதான்டா நடந்தது?" என்று விசாரிக்க,

அவள் பதில் சொல்லாமல் எழுந்து பால்கனி பக்கம் செல்ல, கார்த்திக் அவள் கையைப் பிடித்து அவன் பக்கம் திருப்பி, "என்னம்மா... ஏன் எதுவும் சொல்லாமல் இருக்கிறாய்?" என்றான் மென்மையாக.

கழிவிரக்கத்தில் அழுகை முட்டிக் கொண்டு வர, அதை அடக்கி மெல்லிய குரலில், "அக்கா இரண்டு பேருக்கும் நிச்சயதார்த்தம் என்பதால் காலேஜுக்குப் பாதி நாள் லீவ் போட்டு விட்டு வீட்டுக்குப் போனேன். ஆனால், நான் அங்கிருக்கக் கூடாது என்பது அவர்களின் விருப்பம்!" என்று சொல்லி முடிப்பதற்குள் அவளின் பெரிய விழிகளில் இருந்து இரண்டு நீர்த் துளிகள் விழ, அதைக் கார்த்திக் பாராமல் மறைத்தாள்.

அதைக் கேட்டதுமே அவளின் மனப் போராட்டம் புரிந்து நெஞ்சு கொதிக்க, 'ச்சே... என்ன குரூரமான

மனசு...!' என்று கோபம் வந்தது. 'இப்போது இதைப் பற்றி நாம் ஏதாவது பேசினால், அழுகையின் விளிம்பில் இருக்கும் இவள் நிச்சயம் உடைந்து விடுவாள். முதலில் இவளை நார்மல் நிலைக்குக் கொண்டு வந்த பிறகு மற்றதைப் பேசிக் கொள்ளலாம்!' என்று முடிவு செய்தான்.

சிரிப்பைக் கட்டாயமாக வரவழைத்து, "இதில் கவலைப்பட என்ன இருக்கு ஷைலு...? பார்க்கப் போனால் உன் சகோதரிகளுக்கு நான் கோயிலே கட்டுவேன்...!" என்றதும், சட்டென்று கலங்கிய விழிகளை மலர்த்திப் புரியாமல் நோக்க, அவளின் கண்ணீரைத் துடைத்துக் கொண்டே,

"ஏனென்று புரியவில்லையா? நீ மாப்பிள்ளைகள் வரும் நேரத்தில் அங்கிருக்க, அவர்கள் உன் சகோதரிகளைக் கவனிக்காமல், அநியாயத்திற்கு அழகாக இருக்கும் நீதான் வேண்டுமென்று சொல்லி விட்டால், என் நிலைமை என்னம்மா ஆகும்? அது மட்டுமில்லை, உன் சகோதரிகளுக்கு இருபத்தியெட்டு வயசாச்சு. இந்த மாப்பிள்ளைகள் அமையாமல் போய் விட்டால், அவர்களுக்குக் கஷ்டமல்லவா? அதனால்தான் அப்படிச் சொல்லியிருப்பார்கள்.

"இதெல்லாம் விடு... உன்னை மறுபடியும் எப்போது நேரில் சந்திப்பேன்னு ஏங்கிக் கொண்டு இருந்தேன். இன்று அவர்கள் புண்ணியத்தில் அந்தப் பாக்கியம் கிடைத்திருக்கிறது. அவர்களுக்கு நம் விஷயம் தெரியாமலே ஒரு விதத்தில் உதவி செய்திருக்கிறார்கள். அதற்காகக் கோயில் கட்டலாம்தானே!" என்று விளக்க,

"ப்ச்... போங்கப்பா!" என்று சிணுங்கினாள்.

"பின்னே என்னடா? இப்படி ஒரு வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுத்ததற்காக சந்தோஷப்படாமல், அழு காச்சிப் பெண்ணாக இருக்கியே! எனக்கு அழுகாச்சி ஷைலு வேண்டாம். எப்பவும் வெட்கத்துடன் இருக்கும் ஷைலுதான் வேண்டும்!" என்று ஒரு புருவத்தைத் தூக்கி அவளைச் சீண்ட, ஷைலுவின் முகத்தில் புன்னகை மலர்ந்தது.

கார்த்திக் சொன்னபடி யோசித்ததில், சகோதரிகளின் மேல வருத்தம் போகவில்லை என்றாலும், கார்த்திக்கைச் சந்திக்க வாய்ப்புக் கிடைத்ததற்காக மகிழ்ச்சி தலைதூக்க, "நான் இப்படி யோசித்தே பார்க்கவில்லை கார்த்திக். எப்படியோ என்னைக் கன்வின்ஸ் செய்திட்டீங்க. பயங்கர மான கில்லாடி நீங்க!" என்று அவன் நெற்றியில் செல்ல மாக முட்டினாள்.

அவள் தலையில் செல்லமாகத் தட்டி, "இங்கே சாம்பல் கலரில் மூளை ஒன்று இருக்கும்... அது கொஞ்சம் கம்மியாக இருக்கிறது!" என்று அவளைச் சீண்ட, அவன் அணைப்பிலிருந்து விலகிச் சோபாவில் அமர்ந்து கொள்ள, அவனும் அவள் பக்கத்தில் அமர,

"பரவாயில்லை... எனக்கு இல்லையென்றால் என்ன? அதுதான் உங்களுக்கு நிறைய இருக்கிறதே! அது போதும்," என்று திருப்பிக் கேலியாகக் கூறியவள், நினைவு வந்தவளாக, "வீட்டில் எல்லோரும் எங்கே? நீங்க இன்று ஆபீஸ் போகவில்லையா?" என்றாள்.

"எல்லோரும் மதுரைக்கு ஒரு கல்யாணத்திற்குப் போயிருக்கிறார்கள். எனக்கு ஆபீஸில் நிறைய வேலை இருந்ததால் நான் போகவில்லை. பொதுவாகவே நான் சொந்தக்காரர்கள் திருமணத்திற்குப் போக மாட்டேன். இன்றைக்குக் காலையில் ஆபீஸ் போனேன்... தலைவலி யாக இருந்ததால், கொஞ்சம் சீக்கிரமே வந்து விட்டேன்!" என்று சொல்லி முடிப்பதற்குள் ஷைலு பதறி விட்டாள்.

"சாரி கார்த்திக். இந்தச் சமயத்தில் நான் வேறு உங்களைத் தொந்தரவு செய்து விட்டேன். ஏதாவது சாப்பிட்டீர்களா? மாத்திரை போட்டீர்களா?" என்று அக்கறையுடன் விசாரிக்க,

கார்த்திக் அவளின் பதட்டத்தை ரசித்துச் சிரித்துக் கொண்டே, "எனக்கு ஒன்றும் இல்லை ஷைலு... ஜஸ்ட் தலைவலி. அது போய் விடும். சமையல் செய்கிற அம்மா இன்று அவர் மகளுக்குப் பிரசவ வலி எடுத்ததால் சொல்லி விட்டுப் போய் விட்டார்கள். நாளைதான் வரு வார்கள். அதற்குள் அம்மாவும் வந்து விடுவார்கள். இன்று மத்தியானம் ரெஸ்டாரன்ட்டில் சாப்பிட்டேன். நைட்டும் அங்கேதான் போகணும்!" என்றான் விளக்கமாக.

"நீங்கள் எங்கேயும் போக வேண்டாம். இப்போது வேலையேதும் இல்லையென்றால் கீழே இறங்கி வாங்க!" என்று அவனை அழைத்துக் கொண்டு இறங்கி வந்து, சோபாவில் அமர வைத்து விட்டு, சமையலறைக்குச் சென்று காபி தயாரித்துக் கொண்டு வந்து, ஒரு தலைவலி மாத்திரையுடன் கொடுத்து, வற்புறுத்திப் போட வைத்தாள்.

"உங்களுக்கு என்ன பிடிக்கும்னு சொல்லுங்கள், செய்து தருகிறேன்," என்று கேட்டு, அவன் மறுத்தும் கேளாமல், அவனுக்குப் பிடித்தமான சப்பாத்தியும், மஷ்ரூம் பனீர் மசாலாவும் செய்து அவனுக்குப் பரிமாற, அவளையும் பக்கத்தில் அமர வைத்துச் சாப்பிட வைக்க, இருவரும் பேசிக் கொண்டே சாப்பிட்டு முடிந்ததும், அவளுடன் சேர்ந்து எல்லாவற்றையும் ஒழுங்கு செய்து விட்டு அமர்ந்த கார்த்திக், அவளைக் கிட்டே இழுத்து அவள் தோளில் கை போட்டு அணைத்து,

"சூப்பர் ஷைலு. ஃபர்ஸ்ட் கிளாசா சமைக்கிறே! ம்ம்... பழகியும் பார்த்தாச்சு, பாட்டும் கேட்டாச்சு, சமையலையும் சாப்பிட்டுப் பார்த்தாச்சு. அப்புறம்..." என்று கண்ணடித்துக் கிறங்கிய குரலில் இழுக்க,

"ம்ம்... அப்புறம் உதை ஒன்றுதான் பாக்கி, படவா ராஸ்கல்!" என்று கூறிச் சிரித்தாள்.

திடீரென்று நினைத்துக் கொண்டவளாக, "எப்படி கார்த்திக், உங்கள் இத்தனை கம்பெனிகளைத் தனியாக நிர்வாகம் செய்றீங்க...?" என்று வியப்படைய,

"இது பெரிய விஷயம் இல்லை. எல்லா வேலை யையும் என் லேப் டாப்பை வைத்து முடித்து விடுவேன். எல்லா பிராஞ்சுக்கும் மாதத்தில் ஒரு நாள் விசிட் செய்து விடுவேன். என் எல்லா கம்பெனி ஜி.எம். போஸ்ட்டில் இருப்பவர்கள் எனக்கு நன்றாகத் தெரிந்தவர்கள். அது மட்டுமில்லாமல் அப்பாவும் நன்றாக ஒத்துழைப்பார்.

"அடுத்த மாதம் ஜப்பான் பராஜெக்ட் ஒன்று வரப் போகுது நமக்கு. அது ஓ.கே. ஆயிடுச்சுன்னா, நான்கு மாதத்தில் அதுக்கு நான் ஜப்பான் போயாகணும். இரண்டு மாதம் நான் அங்கே இருக்க வேண்டி வரும். உன்னைப் பார்க்காமல் இருப்பது நிரம்பவே கஷ்டம். ஆனால் என்ன செய்வது? போய்த்தான் ஆகணும். நிறைய லாபம் வரும். அப்போதானே என் செல்லம் உன்னை நினைத்துப் பார்க்க முடியாத அளவு நன்றாக வைத்திருக்க முடியும்.

"அதற்குள் கல்யாணம் ஆகி விட்டால் உன்னையும் அழைத்துக் கொண்டு போகலாம். ஆனால், உன் படிப்பு முடிய ஒரு வருடம் ஆகிவிடும். நான் ஜப்பான் போய் விட்டு வந்த பிறகுதான் நம் கல்யாணம்னு நினைக்கிறேன். எனக்கு ஆசை இருந்தாலும், உன் லட்சியத்திற்காக நான் வெயிட் பண்றேன்," என, ஷைலுவின் நினைவுகள் எங்கேயோ பறந்தது:

அந்நேரம் ஷைலுவின் போன் தம்பியின் அழைப்பில் சிணுங்க, அவனிடம் பேசி விட்டு, "விக்கி இப்போது வருகிறேன் என்றான்," என்றபடி கிளம்ப ஆயத்தமாக, அவள் கையைப் பிடித்து, "தேங்க்ஸ் ஃபார் எவரிதிங் ஷைலு," என்றான் காதலுடன்.

"இல்லை கார்த்திக், நான்தான் உங்களுக்குத் தேங்க்ஸ் சொல்லணும்," என்று திருப்பிச் சொல்ல, இருவரும் சிரித்துக் கொண்டு கீழே இறங்கி வரவும் அதற்குள் விக்கி வந்திறங்கவும் சரியாக இருக்க, கார்த்திக் அவனிடம் இரண்டு வார்த்தை பேசிவிட்டு, இருவருக்கும் விடை கொடுத்தான்.

இருவரும் சென்றதும் திரும்ப மாடிக்கு வந்து, கட்டிலில் படுத்தவனுக்கு வேலையில் மனம் ஓடவில்லை. ஷைலு பற்றிய எண்ணங்களே அவனைச் சிலந்தி வலை யாய்ப் பின்னியெடுக்க, 'எவ்வளவு இனிமையான பெண். கோபமே இல்லாமல் ஒரு பெண்ணால் இருக்க முடியுமா? கோபம்தானே பெண்களின் சொத்து. அது எப்படி இவளிடம் மிஸ்ஸிங் ஆச்சு? சகோதரிகள் பேசியதற்கு கோபம் அல்லவா வந்திருக்க வேண்டும். இவள் வருத்தப் படுகிறாளே...!

'ஹாவ் நைஸ்... ஷைலுவின் அழகிய வடிவான முகத்தைப் பார்த்தாலே வந்த கோபம் கூடப் போய் விடும். அவளின் சகோதரிகளுக்கு எப்படி இவளிடம் இப்படி மோசமாக நடந்து கொள்ள முடிகிறது? மனசுக்குப் பதில் பாறாங்கல்லுதான் இருக்கிறது போலும். எனி வே, ஷைலுவை இன்று மீட் பண்ண ஒரு சான்ஸ் கிடைத்த தற்கு அவர்களுக்கு ஒரு தேங்க்ஸ்தான் சொல்லணும்,' என்று பலவாறு எண்ணியபடியே ஷைலுவுடன் கழித்த அந்த இனிமையான நேரத்தையே நினைத்துக் கொண்டு படுத்திருந்தான்.

சுஜா நிவாஸ்...

விழா நடந்த அறிகுறி தவிர, சொந்தங்கள் யாரும் இல்லாததால் தன் ரூமிற்குச் சென்றவள், கதவைப் பூட்டிக் கொண்டு படுத்து விட்டாள்.

ஷைலு வந்ததும் பேசலாம்னு வந்த சுஜாதா, மகளின் அறைக் கதவு பூட்டி இருப்பதைக் கண்டதும், குற்ற உணர்வில் தவித்துப் போனார்.

அன்று இரவு கணவரிடம் சொல்லி அழ, "கொஞ்ச நாள் பொறுத்துக்கோ சுஜா. இரு பெண்களும் திருமணம் முடிந்து போய் விட்டால், அப்புறம் அவளுக்குத் தொல்லை இருக்காது. ஷைலுவால் இதைப் புரிந்து கொள்ள முடியும். நிச்சயம் அவள் உன்னைத தப்பாக நினைக்க மாட்டாள். உன் நிலைமையைப் புரிந்து கொள்வாள். நீ அழாதே!" என்று ஆறுதல் கூறினார்.

அடுத்த நாள் ஷைலு, நிச்சயம் பற்றி எதுவும் கேட்கவில்லை. கேட்கவும் விருப்பம் இல்லை. ஏன், எதுக்குக் கேட்கணும் என்ற மனோபாவம்தான் இருந்தது. சுஜாவும், ஷைலு ஏதாவது கேட்பாள் என்ற ஆவலோடு எதிர்பார்த்தார். ஆனால் அவள் அதைப் பற்றி எதுவும் பேசாமல், தன் வேலையைப் பார்த்துக் கொண்டு அமைதியாகப் போகவும், அந்தத் தாய் உள்ளம், மகளின் மனது எந்தளவு ரணமாகி இருக்கிறது என்று புரிந்து நொந்து போனது.

'இந்த நிலைமை எந்தப் பெண்ணுக்கும் வரக் கூடாது. ஷைலுவுக்கு அவளின் மென்மையான மனசுப் படியே நல்ல வாழ்க்கை அமைய வேண்டும்' என்று மனது வேண்டிக் கொண்டது.

அந்த வாரத்தில் ஒரு நாள் நல்லியும், சாதனாவும் ஷாப்பிங் செல்லக் கிளம்பிக் கொண்டிருக்க, மாலை காலேஜ் விட்டு வந்த ஷைலு, சிறிது நேரம் படித்து விட்டுப் போரடித்ததால் டி.வி.யைப் போட, கமல்ஹாசன், அம்பிகாவை, 'வனிதாமணி... வனமோகினி...' என்று

காதல் செய்து கொண்டிருப்பதைப் பார்த்துக் கொண்டே, கார்த்திக் பேசியதை நினைத்து, அந்த நினைவில் ஆழ்ந்து போனவள், திடீரென்று நல்லியின் சத்தம் கேட்டுச் சுய நினைவுக்கு வந்தாள்.

"பாருங்களேன், உங்க பொண்ணு லட்சணத்தை! இந்த மாதிரி சீனெல்லாம் பார்த்தால் இது எங்கே உருப்படப் போகுது? படிக்கிறேன்... படிக்கிறேன்னு ஊர் சுற்றிக் கொண்டு இருக்கிறது. அதுதான் உடம்பில் திமிர் ஏறி, இந்த மாதிரி காதல் சீனெல்லாம் வந்தால், வாயைப் பிளந்து கொண்டு பார்க்கிறாள். ஒரு நாள் எவன் கூடவோ ஓடித்தான் போகப் போகுது!" என்று ஆங்காரமாகக் கத்திக் கொண்டிருக்க, ஷைலுவின் தேகம் தமக்கையின் பேச்சில் பதறியது.

"போதும், நிறுத்து நல்லி. உனக்கு அவள் தங்கை என்றே மறந்து போய் விட்டது. ஏதோ எதிரியிடம் பேசு கிற மாதிரி இருக்கு. நானும் எதுவும் பேசக் கூடாதுன்னு பொறுமையாக இருந்தால், நீங்க இரண்டு பேரும் அளவு மீறிப் பேசுறீங்க. அவள் அந்த மாதிரிப் பெண் இல் லைன்னு எனக்குத் தெரியும். அவளைப் பற்றிய கவலை உனக்கு வேண்டாம். என் மகளைப் பற்றி எனக்குத் தெரியும். நீ போய் உன் வேலையைப் பார்!" என்று சஞ்சய் கோபமாக அதட்டினார்.

"என்ன தெரியும் உங்களுக்கு? அதனால்தான் லெட்டர்ஸ், கிரீட்டிங்ஸ் எல்லாம் வந்ததா? ஒழுங்காக இருக்கிற பொண்ணுக்கு இதெல்லாம் வருமா? திமிர்

பிடித்து ஆடுகிற கழுதைகளுக்குத்தான் வரும். அவளைச் சரியாகக் கேட்டுப் பாருங்கள்... தினம் எங்கே போகிறாள், யாரிடம் பேசுகிறாள் என்று!" பதிலுக்குக் கத்த,

"நல்லி... படிச்ச பெண் மாதிரிப் பேசு. இப்படி லோக்கல் மாதிரிப் பேசாதே. இதுவரைக்கும் நான் ஷைலுவால் அசிங்கப்பட்டது இல்லை. உங்கள் இருவரின் திமிரான நடத்தையால்தான் நம் சொந்தங்களிடம் அசிங்கப்பட்டுக் கொண்டிருக்கிறேன். அதை முதலில் திருத்திக் கொள்ளுங்கள். அவள் ஒன்றும் சின்னப் பெண் இல்லை. அவளுக்கு இருபது வயசாகுது. எது நல்லது, எது கெட்டதுன்னு அவளுக்கும் தெரியும். இனி ஒரு தடவை இந்த மாதிரிப் பேசினால், நான் என்ன செய்வேன்னு எனக்குத் தெரியாது," என்று உறுமினார் சஞ்சய்.

அதற்குள் சமையலறையில் வேலையாக இருந்த சுஜாதா கோபமாக வெளியே வந்து நல்லியிடம், "அப்படியே அவள் யாரோடோவோ ஓடிப் போனாலும் உனக்கு என்ன வந்தது? இந்தக் கவலை அவள் மேல் பாசம் உள்ளவர்கள் பட வேண்டியது. உனக்குத்தான் அவள் தங்கையே இல்லை என்னும்போது, தேவை இல்லாமல் அவள் விஷயத்தில் நீ ஏன் தலையிடுகிறாய்?

"இந்த வீட்டில் நடக்கும் முதல் கல்யாண வைபவத்தில் ஷைலு கலந்து கொள்வதில் உங்களுக்கு இஷ்டமில்லை என்ற நீங்கள், அவளுடைய எந்த விஷயத்திலும் தலையிட வேண்டாம். அந்த உரிமையும் உங்கள் இருவருக்கும் கிடையாது. நீ பேசுவதற்கு எல்லாம் அவள்

அமைதியாக இருக்கிறாள் என்ற காரணத்திற்காக, உன் வாய்க்கு வந்தது எல்லாம் பேசாதே. திருப்பி அவள் உன்னை ஏதாவது சொன்னால் என்ன ஆகும்? ஆனால், அவள் உங்களை மாதிரி கீழ்த்தரமான மனசு உள்ளவள் அல்ல!" என்று பொரிந்து தள்ளினார் ஆத்திரத்தில்.

பெற்றவர்கள், சிறிய மகளுக்குப் பரிந்து பேசு வதைப் பொறுக்க முடியாமல், "விடு நல்லி. நாம் அவர்கள் சின்னப் பொண்ணைப் பற்றி ஏதாவது சொன்னால் அவர்களுக்குக் கோபம்தான் வரும். அவள் ஓடிப் போய் அசிங்கப்படும்போதுதான் தெரியும், நான் சொன்னது. வா, நாம் போகலாம்!" என்று அவளை இழுத்துக் கொண்டு சாதனா செல்ல, ஷைலு உறைந்து போனாள் அதிர்ச்சி யில்.

இரு பெண்களும் அகன்றதும், கோபத்துடன் திரும் பவும் சமையலறைக்குச் சென்ற சுஜாதா, 'கடவுளே! இவர்களுக்கு என்றுதான் நல்ல புத்தி வருமோ? ஷைலுவை இந்தப் பாடு படுத்துகிறார்களே!' என்று மனதிற் குள்ளே புலம்பினார். அவர்கள் இருவரும் சென்றதும் சஞ்சய் வெளியே போய், அவர்கள் போய் விட்டார்களா என்று பார்த்து விட்டு உள்ளே வர, சோபாவில் சிறிய மகள் இல்லாததால் மனைவியிடம் கேட்டார்.

அவரும் ஷைலுவை அவள் ரூமில் தேட... அங்கேயும் இல்லாமல் இருந்தால், மாடிக்குச் சென்று பார்க்க, நாற்காலியில் அமர்ந்து வானத்தை வெறித் துக் கொண்டிருந்தவளுக்கு, மனதில் புயல் அடித்துக்

கொண்டிருந்தது. 'டி.வி.யில் ரொமான்டிக் சீன் பார்த்த தற்கே இப்படிப் பேசும் இவர்கள், நான் கார்த்திக்கைக் காதலிப்பது, சந்திப்பது எல்லாம் தெரிந்தால் என்ன மாதிரிப் பேசுவார்கள்? அப்பா வேறு என் மீது கண்மூடித்தனமான நம்பிக்கை வைத்திருக்கிறார்.

'கடவுளே! நான் என்ன செய்வேன்? இதற்கு முடிவுதான் என்ன? சுரேஷ் வேறு இந்தக் கல்யாணத்தில் சம்மதம் இல்லைன்னு சொல்லும்போது என்ன நடக்கும்?' என்று கலங்கிக் கொண்டிருக்க, சஞ்சய் அருகில் வந்து அவள் தலையை ஆதரவாகத் தடவ, விழிகளில் வேதனை யோடு தந்தையை நோக்கினாள்.

"நான் என்னப்பா பாவம் செய்தேன்? ஏன் என்னை விரோதி மாதிரிப் பார்க்கிறார்கள்? என்னால் யாருக்கும் எந்தக் கஷ்டமும் வந்ததில்லையே! அப்படி இருந்தும் ஏன் இவ்வளவு கீழ்த்தரமாகப் பேசுகிறார்கள்?" என்று குரல் நடுங்கக் கேட்ட கேள்வியில், அவருக்கு நெஞ்சில் ரத்தம் வந்தது.

'கடவுளே! இவள் எதிர்காலத்தில் எந்தக் கஷ்டமும் இல்லாமல் இருக்க வேண்டும்!' என்று மனம் இறைஞ் சியது.

"சாரிடா ஷைலு. அவர்கள் பேசுவதை எல்லாம் நீ காதில் போட்டுக் கொள்ளாதே. எனக்குத் தெரியும்... என் பெண் நீ, என் பேச்சை மீறி எதுவும் செய்ய மாட்டாய். அவர்கள் பேசுகிற மாதிரித் தப்பாக நடக்க மாட்டாய் என்று தெரியும். உன் நல்ல குணத்தை, நடத்தையை அவர்

களுக்கு நிரூபித்து, அவர்கள் முகத்தில் கரியைப் பூசு ஷைலு. அப்போதுதான் உன்னைப் பற்றிப் புரிந்து கொள் வார்கள்," என்று அவள் மேல் அளவு கடந்த நம்பிக்கை யுடன் கூற, ஷைலுவுக்குத் திக்கென்றிருந்தது.

இவர்களைத் தேடி வந்த சுஜாதா, "ஆமாம் ஷைலு... பெண்களாக இருந்தாலும் ஒரு அளவிற்கு மேல் பேச முடியாமல் நாங்கள் தவிப்பது உனக்குப் புரியுதா? எங்களைத் தப்பாக நினைக்காதேம்மா. இவர்கள் கல்யா ணம் முடிந்ததும் சீக்கிரமே உனக்கும் சுரேஷுக்கும் திருமணத்தை முடித்து விடுகிறோம். அங்கே உன் அத்தை வீட்டில் போய் உன் இஷ்டப்படி படித்துக் கொள்!" என்று அவள் நெஞ்சின் வலி தெரியாமல் சுஜாதா பேசிக் கொண்டு செல்ல,

"உனக்கு நாங்கள் இருக்கிறோம். விக்கி, சுரேஷ், அத்தை எல்லாம் இருக்கிறோம். இன்னும் கொஞ்ச நாளில் இவர்கள் ஆட்டம் எல்லாம் அடங்கி விடும். அதன் பிறகு, நீ உன் இஷ்டப்படி இருக்கலாம். எனக்குத் தெரியும், என் பெண் தூய்மையானவள், எவ்வளவு சுதந்திரம் தந்தாலும் தப்பான வழியில் போக மாட்டாள் என்பதால்தான், அவர்கள் பேச்சை நான் மதிப்பதில்லை. நீயும் அதே மாதிரி இருந்து விடு," என்ற சஞ்சய்,

"அவளைச் சிறிது நேரம் தனியாக விடு சுஜா... நிச்சயம் புரிந்து கொள்வாள். நல்லி, சது மாதிரி இல்லை..." என, சுஜாவும் அவள் தலையை அன்புடன் தடவிக் கொடுத்து விட்டுக் கணவருடன் எழுந்து செல்ல, ஷைலுவின் நெஞ்சம் ஊமையாய் அழுதது.

தமக்கைகள் பேசியதை விட, தந்தை அவள் மேல் வைத்த நம்பிக்கையை நினைத்துத்தான் மனது வலித்தது. 'நான் இவர்களுக்குத் துரோகம் செய்கிறேனா? இவரிடம் எப்படிச் சொல்வேன்... நானும் ஒருத்தரைக் காதலிக் கிறேன் என்று! அப்படிச் சொன்னால், நல்லி சொன்ன மாதிரி அப்பா நினைக்க மாட்டாரா?

'என்னதான் செல்லப் பெண் என்றாலும், அவர் மனதின் ஓரத்தில், நல்லி சொன்ன மாதிரியே செய்து விட்டாளே என்று நினைத்தால், அதை விட வேறு அசிங்கம் வேறு எதுவும் இல்லையே! அவருக்கும் அது வாழ்நாள் முழுவதும் உறுத்துமே! இதென்ன சோதனை? இதை எப்படிக் கடந்து வரப் போகிறேன்? கார்த்திக், நீ ஏன்டா என் வாழ்க்கையில் வந்தாய்? நீ இல்லை யென்றால், இந்த உறுத்தல் இல்லாமல் நான் நிம்மதி யாகவாவது இருந்திருப்பேனே...!

'இப்போது அதுவும் இல்லாமல்... ச்சே...! என்ன வாழ்க்கை இது?' என்று எரிச்சலும் கோபமும் தன் மீதே வர, எந்த ஒரு தீர்மானமான முடிவும் எடுக்க முடியாமல் தவித்தவள், ஒரு கட்டத்தில் அதுவே சலித்துப் போக, 'எது வரை போகுதோ அது வரை போகட்டும்!' என ஒரு வழியாக மனதைத் தேற்றிக் கொண்டு கீழே வந்தவளை.. சஞ்சய், அவளை வற்புறுத்திக் கடற்கரைக்கு அழைக்க,

மனம் எதிலும் லயிக்கவில்லை என்றாலும், ஒரு மாற்றம் தேவை என்று நினைத்ததால் அவருடன் கிளம்பினாள்.

அதன்பிறகு தொடர்ந்து வந்த நாட்களில் நல்லியும் சதுவும், கல்யாணச் சடங்குகளில் பிஸியாகி விட, ஷைலு ஒரு வழியாக மனதைத் தேற்றிக் கொண்டு நடமாடினாள். தினமும் இரவு கார்த்திக் பேசுவது ஒன்று தான் அவளுக்கு ஆறுதல். கல்யாணத்திற்கு இரண்டு நாள் முன்பே அத்தையும், சுரேஷும் வர, அவர்களின் அன்பான பேச்சில் சற்று மனம் தெளிந்து, இயல்பாக இருக்க ஆரம்பித்தாள்.

அன்று மாலை பெண் அழைப்பின் போது சுஜாதா வற்புறுத்தியும் கலந்து கொள்ளாமல், ரூமில் அத்தையுடன் இருந்தவள், அடுத்த நாள் கல்யாணத்தின்போது சுஜாதாவும், அத்தையும் வற்புறுத்த, வேறு வழியில்லாமல் கலந்து கொண்டாள்.

மண்டபத்தின் ஒரு மூலையில் காயத்திரியுடன் பேசிக் கொண்டு அமர்ந்திருந்த ஷைலுவைப் பார்த்து நல்லியின் மாப்பிள்ளை ஆகாஷின் நண்பன் சிபி, ஒரு கணம் கண்ணிமைக்க மறந்தான். டார்க் கிரீன் கலர் புடவையில் ஒரு வன தேவதை போலிருந்ததால், அவனால் அவளை விட்டுப் பார்வையை அகற்ற முடியாமல் தவித்தான்.

அவன் பார்வை மேடையில் அமர்ந்திருந்த மணமக்களை விட்டு ஷைலுவையே பின் தொடர, அவளின் அழகும், அடக்கமான குரலும், அமைதியும், அழகான சிரிப்பும் மனதைக் கவர, அவளை யாரென்று தெரிந்து கொள்ள ஆவலைத் தூண்டியது சிபிக்கு. தாலி கட்டும் வைபவம் முடிந்து சடங்குகள் நடக்க, எல்லாம்

எப்போது முடியும், எப்போது அவளைப் பற்றித் தெரிந்து கொள்வோம் என்று நிலை கொள்ளாமல் தவித்தான்.

ஒரு வழியாக எல்லாம் முடிந்து, ஆகாஷ் மணமகன் அறைக்குத் தனியாக வர அவனைப் பிடித்து, டி.வி.யில் ஒளிபரப்பாகிக் கொண்டிருந்த கல்யாண கவரேஜில் ஷைலுவைக் காட்டி, யாரென்று விசாரிக்க, "இவள் என் மனைவியின் தங்கை, என் மைத்துனி, பெயர் ஷைலஜா..." என்றவன், "அது சரி... நீ என்ன திடீரென்று ஒரு பெண்ணைப் பற்றி விசாரிக்கிறாய்? என்ன வேண்டும் சிபி உனக்கு...?" என்றான் வியப்பாக.

"ஷைலஜா... நைஸ் நேம்..." மீண்டும் உச்சரித்துப் பார்த்து, "அவளை மாதிரியே அழகான பெயர். எனக்கு அவள்தானடா வேண்டும். அவளைத் திருமணம் செய்து கொள்ள ஆசையாக இருக்கிறது. நீதான் உன் மனைவி யிடம் பேசி, உன் மாமனாரிடம் பேச வேண்டும் ஆகாஷ்...! ப்ளீஸ்டா... மாட்டேன்னு சொல்லாதே!" என்றான் மன்றாட லோடு.

"ஏய்... என்ன திடீரென்று? கல்யாணம் ஒரு ஜெயில். எனக்கு அது வேண்டாம்... இப்படித் தனியாகவே வாழ்ந்திடறேன்னு நான் பத்திரிகை வைக்கும்போது சொன்ன சிபியா நீ...? இப்போது என்ன இப்படிப் பல்டி அடிக்கிறே?" என்றான் சிறு கேலியோடு.

நண்பனின் கேலியைச் சட்டை செய்யாமல், "தெரியலைடா. ஷைலஜாவைப் பார்த்ததும், திருமணம்

என்று ஒன்று செய்து கொண்டால், அவளைத்தான் என்ற முடிவுக்கு வந்து விட்டேன். என் வாழ்வின் முதலும் கடைசியுமான பெண் அவள்தான். நீதான் பேசி முடிக்க வேண்டும்!" என்றான் கெஞ்சுதலாக.

"டேய்... இப்போதுதான் அவளைப் பார்க்கிறாய். அப் கோர்ஸ்... அவள் என் மைத்துனிதான்... இருந்தாலும் ஒரு பெண்ணைப் பார்த்தவுடன், அவள் யார், எப்படிப்பட்ட வள்னு தெரிந்து கொள்ளாமல், அவளைத் திருமணம் செய்து கொள்ள வேண்டும் என்று யாராவது முடிவெடுப்பார்களா? இதென்ன சினிமாவா? முட்டாள் தனமாகப் பேசாதே சிபி!" என்றான் சற்றுக் கடுப்புடன்.

"யூ ஆர் கரெக்ட். நீ சொல்ற சினிமாவில் வாழ்க் கையில் நடப்பதைத்தானே எடுக்கிறார்கள்? நிஜத்தில் நடந்ததைச் சினிமாவாக எடுத்தால் ஒத்துக் கொள்வீர்கள். சினிமாவில் நடந்த ஒன்றை வாழ்க்கையில் செய்தால், இதென்ன சினிமாவா என்று கேலி செய்வீர்களா? ஓ.கே. கமிங் டு மை பாயின்ட். பல நாள் பழகிக் கல்யாணம் செய்து கொள்கிறவர்கள் வாழ்க்கை எல்லாம் நன்றாகவா இருக்கிறது?

"ஆகாஷ்... கல்யாணம் என்பது நம் வாழ்க்கையின் முக்கியமான அம்சம் என்பதை நான் ஒத்துக் கொள் கிறேன். ஆனால், நமக்கு அமைகிற பெண் எப்படிப் பட்டவள் என்பதைப் பொறுத்துத்தானே கல்யாண வாழ்க்கை வெற்றியா, தோல்வியா என்று நிர்ணயிக்க முடியும்? அந்த வகையில் எனக்கு நம்பிக்கை இருக்கிறது.

இவளைத் திருமணம் செய்து கொண்டால், என் வாழ்க்கை நிச்சயம் வெற்றிதான்!" என்றவனைக் கேள்வியாக நோக்கினான் புது மாப்பிள்ளை.

தொடர்ந்து, "நான் அவளைத் தொடர்ந்து இரண்டு மணி நேரமாகப் பார்த்துக் கொண்டிருக்கிறேன். இந்த இரண்டு மணி நேரத்தில் ஒரு பெண்ணின் இயல்பான குணம் நிச்சயம் வெளி வந்து விடும். ஆனால், இவளை நான் பார்த்த வரைக்கும் அதிர்ந்து கூடப் பேசவில்லை, சத்தமாகச் சிரிக்கவில்லை, அலட்டலோ, திமிரோ இல்லாமல் அடக்கமாக இருக்கும் இவள், நிச்சயம் மோசமான பெண்ணாக இருக்க முடியாது என்பது என் கருத்து. இப்போ புரியுதா நான் ஏன் அவளைத் திருமணம் செய்ய ஆசைப்படுகிறேன்னு...!" என்றான் பதிலடி கொடுக்கும் விதமாக.

"வெல் செட். ஷி இஸ் வெரி கொயட், ப்ரஷியஸ் கேர்ள், ஐ அக்ரீட். பட் நவ் ஐ காண்ட் டு எனிதிங். ப்ளீஸ் அண்டர்ஸ்டான்ட் சிபி!" என்று பொறுமையற்றுப் பேச,

"கமான் ஆகாஷ், உனக்கே தெரியுது ஷைலஜாவைப் பற்றி. அப்புறம் ஏன் தயங்குறே? என் அப்பா, அம்மாவை விட்டுப் பேசுவதை விட, நீ அவர்கள் வீட்டு மூத்த மாப்பிள்ளை... நீ பேசினால் நிச்சயம் மரியாதை இருக்கும். அதற்குத் தகுந்த மாதிரி நான் முடிவெடுக்கலாம்!" என்றான் மன்றாடலாக.

"டேய்... புரியாமல் பேசாதே. எனக்கே இப்போது தான் கல்யாணம் முடிந்தது... என் மனைவியைப் பற்றிச்

சரியாகக் கூடத் தெரியாது. இந்த லட்சணத்தில் நான் எப்படிப் பேசுவது? நீ நல்லவன்தான், படித்தவன்தான், கோடீஸ்வரன்தான்... ஒத்துக்கிறேன். ஆனால், அவளைப் பற்றி என் மாமனார் என்ன முடிவு செய்திருக்கிறார் என்று எனக்குத் தெரியாதே. அது மட்டுமில்லை, உன் அப்பா, அம்மா இதற்குச் சம்மதிக்கணும்!" என்னும்போதே அவன் குரலில் எரிச்சல் தெரிந்தது.

"சரி. உனக்கு ஒரு வாரம் டைம் தருகிறேன். அதற்குள் நீ பேசி விட்டு எனக்கு முடிவு சொல். முடிவு எனக்குப் பேவராக இருக்கணும். ப்ளீஸ், என் அப்பா அம்மாவைப் பற்றி யோசிக்காதே. அவர்கள், நான் எப்போது கல்யாணத்திற்குச் சம்மதிப்பேன் என்று காத்துக் கொண்டிருக்கிறார்கள். நான் சொன்னால் உடனே ஒத்துக் கொள்வார்கள். அதனால் முதலில் உன் மாமனார் சம்மதம் வேண்டும். அதைச் செய், போதும்!" என்று அழுத்தமாகக் கூற, சிறிது நேரம் யோசித்தான்.

"சரி. உன் ஆசைப்படியே நான் கேட்டுப் பார்க் கிறேன். உன் நல்ல குணத்திற்கு எல்லாம் நல்லபடியாக நடக்கும்!" என்று ஆறுதல் கூற,

"தேங்க்ஸ்டா. இந்த உதவியை மட்டும் செய்து, எனக்கு ஷைலஜா கிடைத்து விட்டால், உனக்கு என்ன வேண்டுமென்றாலும் செய்வேன் ஆகாஷ்!" என்று அவன் கையைப் பிடித்து நன்றி நவில,

"நீ எனக்கு எதுவும் செய்ய வேண்டாம். இந்த நிச்சயம் முதல் திருமணம் வரை அவளைப் பற்றி நான்

நல்லவிதமாகத்தான் கேள்விப்பட்டேன். அப்படிப்பட்ட ஒரு நல்ல பொண்ணுக்கு உன்னை மாதிரி ஒரு நல்ல பையன் கிடைக்க வேண்டும் என்ற ஆசையில் இதைச் செய்கிறேன். இதற்கு எதுக்கு தேங்க்ஸ் எல்லாம்? முதலில் நான் பேசுகிறேன்... நல்லபடியாக முடிந்தால் எனக்கும் சந்தோஷம்தான்!" என்று அவன் தோளைத் தட்டித் தைரிய மூட்டினான்.

சடங்கு முடிந்து விட்டதால் எல்லோரும் சாப்பிட எழுந்து செல்ல, ஒரு மூலையில் காலியாக இருந்த நாற்காலியில் அமர்ந்து லைட் மியூஸிக்கைக் கேட்டுக் கொண்டே ஷைலுவும் காயத்திரியும் பேசிக் கொண்டிருப் பதை, அவர்களைப் பார்க்கும்படியான கோணத்தில் அமர்ந்து ரசித்துக் கொண்டிருந்தான் சிபி.

அங்கு வந்த சுரேஷ், சிபியிடம் கை குலுக்கிப் பேசி விட்டு, ஷைலுவிடம் சென்று, "மாமா உன்னை அழைக் கிறார்," என்று கூற, அவள் காயத்திரியிடம் சொல்லி விட்டு எழுந்து சென்றதும், காயத்திரியின் பார்வை அனிச்சைச் செயலாகச் சிபியின் பக்கம் திரும்பியது.

அவனின் பார்வையோ ஷைலுவைத் தொடர்வதைக் கண்டதும், 'இது என்ன புது வம்பு?' என்று கவலைப் பட்டவள், ஷைலு திரும்பி வந்ததும் எதைப் பற்றியும் பேசாமல், அவளை அழைத்துக் கொண்டு ரூமிற்குச் சென்று விட்டாள்.

வீட்டுக்குக் கிளம்பும் முன் சிபி மீண்டும் ஒரு தடவை ஆகாஷுக்கு ஞாபகப்படுத்தி விட்டு, ஷைலுவைப் பார்த்து விட ஏங்கிப் பார்வையாலே துழாவ, அவன் கண் படும் இடத்தில் இல்லையாதலால், எதையோ இழந்த மாதிரித் தோன்ற, தொய்வுடன் மண்டபத்தை விட்டு வெளி யேறினான்.

அடுத்த நாள் காலையில் ஹாலில் நல்லியின் கணவர் ஆகாஷும், சதுவின் கணவர் ஹரியும் அமர்ந்து பேசிக் கொண்டிருக்க, அங்கே வந்த சஞ்சய் புதுமணத் தம்பதிகளின் ஹனிமூன் ட்ரிப் பற்றி விசாரித்து, அதற்கு ஏற்பாடு செய்யக் கிளம்பியவரை அழைத்து ஆகாஷ், "உங்களிடம் கொஞ்சம் பேசணும்...!" என்று அவரை அமரச் சொல்ல, சஞ்சய் குழப்பத்துடனே அமர்ந்தார்.

உட்காரச் சொல்லி விட்டானே தவிர, எப்படி விஷயத்தை ஆரம்பிப்பது என்று தெரியாமல் தயங்க, "சொல்லுங்க மாப்பிள்ளை, என்ன விஷயம்? எதைப் பற்றிப் பேசணும்...?" என்றார் வியப்புடன்.

அவர் திரும்பவும் கேட்கவும் தன் தயக்கத்தை உடைத்து, "நான் சொல்றதைத் தவறாக எடுத்துக் காதீங்க...!" என்று புதிர் போட்டு விட்டு, "என் நண்பன் சிபியை உங்களுக்கு நேற்று அறிமுகப்படுத்தினேனே... ஞாபகம் இருக்கா?" என, 'ஆமாம்...' என்று தலையை உருட்ட,

"அவன் நம் ஷைலுவைப் பற்றிக் கேட்டான். அவளைத் திருமணம் செய்து கொள்ள ஆசைப்படு

கிறான். நல்ல பையன். அப்பா, அம்மாவுக்கு ஒரே பையன். ஆர்கிடெக்ட் படித்திருக்கிறான். கோடீஸ்வரன். சொந்தமாகப் பிசினெஸ் செய்கிறான். அவன் அப்பா டெக்ஸ்டைல்ஸ் எக்ஸ்போர்ட் பிசினெஸ் செய்கிறார். அதையும் இவன் பார்த்துக் கொள்கிறான். எந்தக் கெட்டப் பழக்கமும் இல்லாதவன்.

"இவ்வளவு நாள் கல்யாணமே வேண்டாம் என்றவன் ஷைலுவைப் பார்த்ததும், அவளையே திரு மணம் செய்ய முடிவெடுத்திருக்கிறான். நீங்க என்ன சொல்றீங்க!" என்று ஒரே மூச்சில் கேட்டுவிட்டு, சொல்ல வந்த விஷயத்தைச் சரியாகச் சொன்னோமோ எனப் பதிலுக்காகச் சஞ்சய் முகத்தை ஆர்வமாகப் பார்த்தான்.

ஆனால், அவரோ சற்றும் யோசிக்காமல், பதட்டமே இல்லாமல், "மாப்பிள்ளை ஷைலுவுக்கு ஏற்கெனவே வரன் பார்த்து முடிவு செய்து வாக்கும் கொடுத்தாச்சு. என் தங்கை பையன் சுரேஷ்தான் என் மாப்பிள்ளை..." என ஆகாஷுக்குச் சப்பென்று ஆகிப் போனது.

இவர்கள் இருவரும் பேசுவதைக் கேட்டுக் கொண் டிருந்த சாதனாவின் கணவர் ஹரி, "சரி. எப்போ மாமா ஷைலுவின் திருமணத்தை நடத்தப் போகிறீர்கள்?" என்றான் ஆர்வத்துடன்.

"இப்போ இல்லை மாப்பிள்ளை. முதலில் அவள் படிப்பு முடியணும். அதன் பிறகுதான்... அதுவரைக்கும் சுரேஷ் காத்திருக்கிறேன்னு சொல்லியிருக்கிறான். அவன்

ஓ.கே. என்றால் அடுத்த மாதமே கூடச் செய்து விடலாம்..." என்றவர், தன் வேலையைப் பார்க்க எழுந்து செல்ல,

ஷைலுவுக்கு முதல் பாதி கேட்காமல், மறு பாதி மட்டும் கேட்டதால் திக்கென்றது. சுரேஷுக்கோ முதலில் இந்தப் பிரச்சனையை ஒரு முடிவுக்குக் கொண்டு வரணும்... என்று முடிவு செய்தான்.

மண்டபத்தை விட்டு வெளியேறின சிபி, வீட்டுக்குப் போகாமல் நேரே கடற்கரைக்குச் சென்று காந்தி சிலை அருகில் அமர்ந்து, கடலையே பார்த்துக் கொண்டிருக்க, தினமும் பார்க்கிற கடல்தான் என்றாலும், இன்று என்னவோ புதுமையாக இருந்தது.

காலை இளம் மஞ்சள் வெயிலில் கடல் தங்கத் தகடாய் மினுமினுக்க... அதன் அழகையே ரசித்துக் கொண்டிருந்தான். சில காதல் ஜோடிகளும், புதுமணத் தம்பதிகளும் அமர்ந்து நெருக்கமாகப் பேசிக் கொண்டிருக்க, குழந்தைகள் அலையில் விளையாடிக் கொண்டிருக்க, பட்டாணி சுண்டல் விற்பனை செய்கிறவர்கள் என்று அவரவர் வேலையில் கவனமாக இருக்க... சிபிக்கு, அப்பொழுதுதான் அவனின் தனிமை உரைத்தது.

இவ்வளவு நாள் தொழில் ஒன்றுதான் சாசுவத மென்று நினைத்து வாழ்ந்து கொண்டிருந்தவன், இன்று ஷைலுவைப் பார்த்த நிமிடத்திலிருந்து வாழ்க்கையில் கல்யாணம் என்பது எவ்வளவு இனிமையான ஒன்று என உணர ஆரம்பித்திருந்தான்.

ஒரு பெண்ணை முதல் தடவை சந்தித்தவுடன், அவளிடம் வீழ்ந்து போகிற அளவுக்கு நான் பலவீன மானவனா? இல்லை, அவளின் அழகாலும் நடத்தை யாலும் என்னைப் பலவீனப்படுத்தி விட்டாளா என்று குழப்பமாக இருந்தாலும் தித்திப்பாக இருந்தது.

இத்தனைக்கும் அவள் என்னை நிமிர்ந்து கூடப் பார்க்கவில்லை. அவ்வளவு ஏன்... நான் ஒருத்தன் அங்கிருந்தது கூட அவளுக்குத் தெரியாது. ஜெயிப்பது தான் வாழ்க்கை வெற்றியின் ரகசியம் என்று நினைத் தால்... ஒரு பெண்ணிடம் காதலைப் பெறுவதற்காகத் தோற்பது கூட இவ்வளவு இனிமையாக இருக்குமா என்று அவனுக்கு ஆச்சரியமாக இருந்தது.

சுற்றிலும் பார்வையைச் சுழல விட்டவனின் மனம் ஏங்கியது. இந்தப் புதுமணத் தம்பதிகள் போல் நானும் ஷைலுவும் கல்யாணத்திற்குப் பிறகு இங்கே வந்து அமர்ந்து, இந்த அலையை ரசிக்க வேண்டும்.

அவளோடு இருந்தால் போரான வாழ்க்கை கூட இனிமையாக இருக்கும் என நினைத்ததும் அவன் இதழ்க்கடையில் மெல்லிய புன்னகை அரும்பியது.

அவளின் சிரிப்பு, அமைதி, அவளின் உருவம்... இதுவே அவனின் மனதில் சுழல் போல அவன் மனதில் சுழற்றியடிக்க, அந்த நினைவு தந்த இனிமையில் சிரித்துக் கொண்டே கடற்கரையை விட்டு எதிரில் நிறுத்தியிருந்த காரை நோக்கி நடந்தான்.

வீட்டுக்குச் சென்றதும் காரைப் போர்டிகோவில் நிறுத்தி விட்டு, உள்ளே சென்றவன்... ஹாலில் அமர்ந்திருந்த தாய் தேன்மொழியிடமும் தந்தை விஜய குமாரிடமும் சந்தோஷமாகப் பேசிவிட்டுத் தன் அறைக்குச் சென்றவனை இருவரும் ஆச்சரியமாக நோக்கினார்கள்.

ட்ரெஸ்ஸை மாற்றிக் கொண்டு பால்கனியில் அமர்ந்து தூரத்தில் தெரிந்த மாதா கோயிலையே பார்த்துக் கொண்டிருந்தவன்... திடீரென்று "ஷைலு மட்டும் என் மனைவியாக வந்தால் உன் ஆலயத்திற்கு வருகிறேன்..." என மாதாவிடம் உருக்கமாக வேண்டியபடி, காலை மோடாவில் தூக்கிப் போட்டுக் கைகளைத் தலைக்குப் பின்னால் கோர்த்து, நாற்காலியில் சாய்ந்து அவளின் உருவத்தை அழிக்க விரும்பாதவன் போல் கண்களை மூடி, அவளின் உருவத்தையே மனக் கண்ணில் நிறுத்தி ரசிக்க ஆரம்பித்தான்.

கீழே டி.வியில் தேனமுது நிகழ்ச்சி ஓடிக் கொண்டிருக்க, அதில்...

'மதனோற்சவம் ரதியோடுதான்...
ரதி தேவியோ பதியோடுதான்...
உயிரோவியம் உனக்காகத்தான்...
உடல் வண்ணமே அதற்காகத்தான்...'

எஸ்.பி.பி. காதலுடன் வாணி ஜெயராமுடன் உருகிப் பாட, அந்தப் பாடல் அவனுக்காகவே பாடப்பட்ட மாதிரி இருந்ததால், கண்ணைத் திறக்காமலே ஷைலுவை நினைத்து ரசித்துக் கொண்டிருந்தான்.

அடுத்த நாள் காலையில் உற்சாகமாக எழுந்து முதல் நாள் ஏற்பட்ட இனிமையான அனுபவத்தில் விசி லடித்துக் கொண்டே ஆபீசுக்குக் கிளம்பிச் சென்றவன், அன்று கவனிக்க வேண்டிய வேலையைக் கவனிக்க, நடுநடுவில் ஷைலுவின் முகம் கண் முன்னே வந்து நின்றாலும், புன்னகைத்துக் கொண்டே, வேலையைத் தொடர்ந்தான்.

மகன் கல்யாணத்திற்குப் போய் விட்டு வந்த திலிருந்து அவன் முகத்தில் தெரிந்த மகிழ்ச்சி அவர் களுக்குப் புதிராக இருக்க, மதியம் சாப்பிட வந்தவனிடம் விஜயகுமார் காரணத்தைக் கேட்க, சாப்பாட்டை அளைந்து கொண்டிருந்தவன் நிமிர, பெற்றோரின் முகத்தில் ஆர்வம் டன் கணக்கில் வழிந்தது.

தன் மனதில் இருப்பதைச் சொல்லாமல், "நத்திங் டாட், மாம், ஜஸ்ட் ஒரு ஜோக். ஆகாஷ் கல்யாணத்தில் நடந்தது... அதான் அதை நினைத்துச் சிரித்துக் கொண் டிருந்தேன். தட்ஸ் இட்..." என்றான்.

பெற்றவர்களிடம் தன் ஆசையைச் சொல்ல நினைத்தும், ஷைலு வீட்டின் முடிவு தெரியாமல் இவர் களுக்கு நம்பிக்கை கொடுக்கக் கூடாது. இன்னும் கொஞ்ச நாள்... அதன் பிறகு தெரிந்து விடும். அப்புறம் சொல்லிக் கொள்ளலாம் என்று விஷயத்தை ஒத்தி வைத்தான்.

அவன் ஒன்றும் இல்லை என்றதும், இருவர் முகத்திலும் களையே போய்விட, கணவரிடம், 'பேசுங்க...' என்று கண் ஜாடை காட்டினார் தேன்மொழி.

விஜயகுமார் தொண்டையைக் கனைத்து, "நீ எல்லோர் கல்யாணத்திற்கும் போறே. நீ எப்போது திருமணம் செய்து கொள்வதாக உத்தேசம். எங்களுக்கு நீ சந்தோஷமாக வாழ்வதைப் பார்க்க ஆசை இருக்காதா சிபி!

"உன் வயசுப் பிள்ளைங்க எல்லாம் கல்யாணம் செய்து குழந்தையும் குட்டியுமா இருக்கும்போது நீ மட்டும் ஏன்டா இப்படி அடம் பிடிக்கிறே? எங்களுக்கும் பேரன், பேத்திகளைப் பார்க்க வேண்டும் என்ற ஆசை இருக் காதா?" என்று தங்கள் ஏக்கத்தை முகத்தில் தேக்கி இருவரும் கேட்க, அவனிடம் சலனமில்லை.

தந்தையே தொடர்ந்து, "இவ்வளவு சொத்து இருந்து என்ன புண்ணியம்... அதை அனுபவிக்க ஆள் இல் லையே சிபி! உனக்கு என்னதான் பிரச்சினை? என்னிடம் சொல்லு. இல்லை, எந்த மாதிரி பெண் வேண்டும்னும் சொல். எங்கிருந்தாலும் தேடிக் கொண்டு வந்து உன் முன் நிறுத்துறேன்..." என்று ஒரு முடிவோடு பேசியவரைக் கூர்ந்து பார்த்தவன் சிரித்துக் கொண்டே, "பார்க்கலாம்..." என்று கூறி விட்டு எழுந்து செல்ல, இருவரும் ஒருத்தர் முகத்தை ஒருத்தர் பார்த்துக் கொண்டனர்.

ஆனால் அதன் அர்த்தம்தான் அவர்களுக்குப் புரியவில்லை.

சிறிது நேரம் கழித்து, மகனின் அறைக்குச் சென்ற தேன்மொழிக்குக் கட்டிலில் அமர்ந்து கண்ணை மூடிக் கொண்டு மகன் அமர்ந்திருந்த மோன நிலை மனதை

என்னவோ செய்தது. மெதுவாக அவனருகில் அமர்ந்து அவன் தோளைத் தொட்டு, "சிபி, என்னப்பா... இப்போது கொஞ்சம் சந்தோஷமா இருந்தே. அதற்குள் என்ன ஆச்சு... இப்படி இருக்கே! உன் மனசில் அப்படி என்ன தான் இருக்கு. சொல்லேம்ப்பா..." என்றார் வேதனையுடன்.

கண்களைத் திறந்தவன், "ஒன்றும் இல்லைம்மா... சும்மாதான். நீங்க எதுக்குப் பயப்படுறீங்க? நான் சந்தோஷமாத்தான் இருக்கிறேன்..." என ஆறுதலாகக் கூறியதைக் கேட்டு சமாதானமடையாமல்,

"என்ன சந்தோஷமா இருக்கிறே! இருபத்தி நாலு மணி நேரமும் வேலை வேலைன்னு ஓடினால் எப்படி சந்தோஷமா இருக்க முடியும்? உனக்குன்னு ஒரு குடும்பம் இருந்தால்தானே சந்தோஷமும் நிம்மதியும் கிடைக்கும்.

"ப்ளீஸ் சிபி! உனக்கு எந்த மாதிரிப் பொண்ணு வேண்டும்னு சொல்லு. நாங்க பார்த்துக் கொடுக்கிறோம். இல்லை நீ யாரையாவது மனசில் வைத்திருந்தால் சொல் லுப்பா. அவளையே கல்யாணம் செய்து வைக்கிறோம்..." என மன்றாடினார்.

தாயின் கெஞ்சலில் ஒரு நிமிடம் சொல்லி விடலாமா என்று யோசித்து, "அம்மா, உங்களுக்கு நான் திருமணம் செய்து கொள்ள வேண்டும். அவ்வளவுதானே! எனக்கு ஒரு வாரம் டைம் கொடுங்கள். நான் ஒரு பொண்ணைப் பார்த்திருக்கிறேன். அங்கே இருந்து நல்ல பதில் வரும்னு எதிர்பார்க்கிறேன். அப்படி வந்தால் உங்க ஆசைப்படி உங்களுக்கு ஒரு மருமகளைக் கொண்டு வருகிறேன்.

"அதுவரைக்கும் ப்ளீஸ்... என்னைத் தொல்லை பண்ணாதீர்கள். இப்போது இதைப் பற்றி அப்பாவிடம் எதுவும் சொல்ல வேண்டாம். ஓ.கே. ஆன பிறகு சொல்ல லாம். புரிஞ்சுக்குங்க!" என்று கொஞ்சம் சந்தோஷமும், கொஞ்சம் அலுப்புமாகச் சொல்ல...

தேன்மொழி இந்த அளவுக்காவது பையன் இறங்கி வந்தானே என்று சந்தோஷத்தில் பூம் பூம் மாடு மாதிரித் தலையசைத்தார்.

அவர் இறங்கிச் சென்றதும் ஆகாஷ் போனில் அழைக்க,

ஆர்வத்துடன், "சொல்லு ஆகாஷ், அதுக்குள்ளே பேசிட்டியா? உன் மாமனார் என்ன சொன்னார்?" என்ற வனின் குரலில் இருந்த உற்சாகம் ஆகாஷுக்கு வருத் தத்தைக் கொடுக்க, ஒரு நிமிடம் மௌனமாக இருந்தவன்,

"சாரிடா சிபி! ஷைலுவுக்கு ஏற்கனவே வரன் நிச்சயம் ஆகிவிட்டதாம். என் மாமனாரின் தங்கை பையன் சுரேஷ் தான் அவன்..." என்று கூற,

சிபிக்கு எதையோ இழந்த மாதிரி இருந்தது. நேற் றிலிருந்து குமிழியிட்ட சந்தோஷம் எல்லாம் வடிந்து ஓய்ந்து போனது.

அவனிடமிருந்து பதிலே வராமல் இருக்கவும், ஆகாஷ் அவனை அழைத்து, "என்னடா... பதிலே இல்லை. நான் அதற்குத்தான் அப்பவே சொன்னேன். அவளுடைய வீட்டில் என்ன முடிவு செய்திருப்பார்கள்னு

தெரியாமல் ஆசையை வளர்த்துக் கொள்ளாதேன்னு... சரி விடு. வேறு நல்ல பெண் நிச்சயம் உனக்குக் கிடைப் பாள்..." என்று ஆறுதல் கூற, சிபி விரக்தியாகச் சிரித்தான்.

"எனி ஹவ்... தேங்க்ஸ் ஆகாஷ், நீ எனக்காகப் பேசியதற்கு..." என்று குரலில் சுரத்தே இல்லாமல் ஃபார்ம லாகப் பேசியதைக் கேட்டதும், ஆகாஷுக்கு வருத்தமாக இருந்தது.

"சிபி, ஏன் இப்படிப் பேசறே? நீ கல்யாணம் செய்து கொள்ள முடிவெடுத்ததே எனக்கு ஆச்சரியமான, சந்தோஷமான விஷயம். ஷைலு இல்லையென்றால் என்ன? உனக்குன்னு ஒருத்தி பிறந்திருப்பாள் சிபி. அவள் நிச்சயம் உன்னை வந்து சேருவாள். இதற்காக உன் மனசைத் தளரவிடாதே..." என,

"இட்ஸ் ஓ.கே. ஆகாஷ். விடு, கடவுளின் முடிவு யாருக்குத் தெரியும்? நீ எப்போது ஹனிமூன் கிளம்பற?" என்று பேச்சை மாற்றிச் சிறிது நேரம் பேசி விட்டுப் போனை வைத்தவனுக்கு, என்னமோ உலகமே இருண்டு போய், அதில் அவன் மட்டும் தனியாக இருக்கிற மாதிரி ஒரு உணர்வு அழுத்த, எதுவும் செய்ய இயலாதவனாய் அமர்ந்திருந்தான்.

எவ்வளவு நேரம் அப்படி இருந்தானோ... மதியம் ஆபீஸ் போக வேண்டிய பையன் இன்னும் கீழே இறங்கி வராததைக் கண்டு மேலே வந்த தேன்மொழி, மகன் அமர்ந்திருந்த கோலத்தைக் கண்டு பதறி அவனை உலுக்க, மயக்கத்தில் உலுக்கியவரின் பக்கம் சாய...

தேன்மொழி பயத்தில் அலற, மனைவியின் சத்தம் கேட்டு ஓடி வந்த விஜயகுமார் மகனின் நிலையைக் கண்டு பதறி ஆம்புலன்ஸுக்குப் போன் செய்தார்.

மருத்துவமனையில் அவனைச் சேர்த்து விட்டு தவிப்போடு வெளியே காத்திருந்த விஜயகுமார் அழுது கொண்டிருந்த மனைவியிடம் என்ன நடந்ததென்று விசாரிக்க,

"எனக்குத் தெரியலைங்க... ஏதோ ஒரு பெண்ணின் பதிலுக்காகக் காத்திருக்கிறேன். அதுவரைக்கும் அவசரப் படாம இருங்கன்னு சொன்னான். ஆனால் அதுக்குள்ளே இப்படியாகும்னு நான் நினைக்கலேங்க..." என்று புலம்பியவர், "ஒருவேளை, அந்தப் பெண்ணிடமிருந்து ஏதாவது நெகடிவ் பதில் வந்திருக்குமோ? அதான் இவன் இப்படி இருக்கிறானா?" எனக் காரணம் புரியாமலே புலம்பி அழ, விஜயகுமார்க்கு யோசனையாக இருந்தது. ஒரு பெண் வேண்டாமென்றால் அதற்காகப் பலமிழந்து போகிற அளவுக்கா தன் மகன் இருக்கிறான் என்ற கேள்வியும் அவருள் எழுந்தது.

சில மணித் துளிகள் இருவரையும் துடிக்க வைத்து விட்டு, மருத்துவர்களின் ட்ரீட்மெண்டில் எழுந்து அமர்ந்தவன், தாயின் வேதனையைக் கண்டு, குற்றவுணர்வில் தலை குனிந்தான்.

மகனுக்கு என்ன ஆனது என்ற தந்தையின் கேள்வியில், அவருக்கு ஏதோ மன உளைச்சல். அதான் மயக்கத்திற்குக் கொண்டு போயிருக்கு. இவரின் டெஸ்ட்

ரிப்போர்ட்ஸ் வரட்டும். இப்போ நீங்க ரிலீவ் செய்து அழைச்சிட்டுப் போங்க... என்று அனுமதி தர, விஜய குமாரின் உள்ளம் அமைதியடைந்தது... தன் மகனுக்கு எவ்விதப் பிரச்சனையுமில்லை என!

"என்ன சிபி, என்னப்பா ஆச்சு? ஏன் மயக்கமா கிடந்தே?" எனத் துடித்துப் போய் விசாரிக்க,

ஓ மை காட்... ஷைலு இல்லையென்று ஆகாஷ் சொன்னதும் நெஞ்சுக்குள் சுருக்கென்று தைத்த மாதிரி இருந்தது. அதன் பிறகு நடந்தது தெரியவில்லை. தான் மயக்கமாகி விட்டோம்னு தாயின் பேச்சில் உணர்ந்து கொண்டவன், தன் வேதனையை இவரிடம் வெளிப்படை யாகக் காட்டி விட்டோமோ என்ற குற்றவுணர்வு அவனைத் தாக்க சட்டென்று சுதாரித்தான்.

"நத்திங் மாம்... ஃபைலைப் பார்த்துக் கொண் டிருந்தேன். லைட்டா தலை வலிச்சது. கொஞ்சம் அசதி யாவும் இருந்தது. அப்புறம் என்ன நடந்ததுன்னு தெரியலை..." என்று சமாளித்தவன்,

"ஐயோ, எனக்கு ஒன்றுமில்லை. நான் நல்லா இருக்கேன். எனக்கு ஆபீசில் ஒரு முக்கியமான வேலை இருக்கு. நான் இப்படியே ஆபீஸ் போறேன். டாட், நீங்க அம்மாவை அழைச்சிக்கிட்டு வீட்டுக்குப் போங்க..." என்றவன், கட்டிலிலிருந்து இறங்கித் தன் உடையைத் திருத்திக் கொள்ள, பெரியவர்கள் இருவரும் புரியாமல் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டார்கள்.

"சரி டாட். நான் டாக்சியில் ஆபீஸுக்குப் போறேன். என் வண்டியை ஆபீசுக்கு அனுப்பி வைங்க..." என்றவன், இருவரின் பதிலை எதிர்பாராமல் மருத்துவமனையை விட்டு வெளியே செல்ல, தேன்மொழியுள் நிம்மதி படர்ந்தது. ஆனால் விஜயகுமாருக்கு இதில் ஏதோ சரியில்லை என சந்தேகம் வேர்விட்டது.

ஆனால் அடுத்த நாளே விஜயகுமாரைத் தனியாக மருத்துவமனைக்கு வரச் சொன்ன டாக்டர், சிபிக்கு இதயம் பலகீனமாக இருக்கிற விஷயத்தைப் போட்டு உடைக்க, அப்படியே நொறுங்கிப் போனார்.

உடம்பில் இருக்கிற சக்தியெல்லாம் ஸ்ட்ரா போட்டு உறிஞ்சி எடுத்த மாதிரி தொய்ந்து போய் அமர்ந்திருந்த வரிடம், "அதிக சந்தோஷத்தையும், அதிக துக்கத்தையும் தாங்குகிற சக்தி சிபியின் இதயத்திற்கு இல்லை..." என்று விவரித்துக் கொண்டிருந்த மருத்துவரிடம்,

"ஏன் டாக்டர், இதுக்கு ஏதும் ஆபரேஷன் இருக்கிறதா?" என்றார் அப்பாவியாக.

என்னதான் படித்திருந்தாலும் பாசம் என்று வரும் பொழுது மற்ற தகுதிகள் வெள்ளத்தில் அடிபட்டுச் செல்லும்... சக்திகள் அடித்துச் சென்றுவிடும்... என்பது அவருக்குப் புரிந்தது.

மருத்துவரும் அவரின் கேள்விக்குச் சன்னமாகப் புன்னகைத்து, "அப்படி எதுவும் செய்ய முடியாது மிஸ்டர் விஜயகுமார்...." என,

அடுத்த கேள்வியாக, "என் மகனுக்குக் கல்யாணம் செய்து வைத்தால் இந்தப் பிரச்சினை சரியாகி விடுமா?" என்றார் நப்பாசையுடன்.

"உங்க மகன் உங்க கூட சந்தோஷமா இருக்க ணும்னா நீங்க செய்யக்கூடாத ஒன்று இருக்கிறதென்றால் அது கல்யாணம்தான். அவரால் தாம்பத்தியத்தில் ஈடுபட முடியாது. அதுவே அவரின் உயிருக்கு ஆபத்தை விளை விக்கலாம். பார்த்துக்குங்க..." என்று கூறிவிட,

அடுத்து என்ன செய்வதென்று தெரியாமல் தளர்ந்து போனார் பெரியவர்.

டாக்ஸியில் பயணித்துக் கொண்டிருந்தவன், "ஃபூல். ஒரே தடவை பார்த்த பெண். அதுவும் அவளிடம் பேசக் கூட இல்லை. அவள் கிடைக்கவில்லை என்றால் பெற்ற வர்களின் மனது நோக நடப்பதா? எதையும் சவாலாக ஏற்றுக் கொள்ளும் பிசினஸ்மேனா நீ? யூ ஆர் ரியல்லி ஃபூல். ஷைலு உனக்குன்னு இருந்தால் கண்டிப்பாகக் கிடைப்பாள். அப்படி கிடைக்கவில்லை என்றால் இப்படியா மயக்கமாகிப் பெத்தவங்களைப் பயமுறுத்துவே... இடியட்" என்று தன்னையே திட்டிக் கொண்டாலும்...

இன்னோர் மனது இதுவரை காதல் என்றால் என்னவென்றே தெரியாமல் இருந்த எனக்குள் காதலை விதைத்தவளே... உனக்குத் தெரியுமா... உன்னால் என் மனதில் போராட்டம் நடக்கிறது என்று. நீ விதைத்த காதல்... அது முளை விடும் முன்னே கருகியதே! அது

தெரியுமா? என் முதல் காதல் தோல்வியில் முடிந்து விட்டதே... அது தெரியுமா?

ம்ஹூம்... அட்லீஸ்ட் இப்படி ஒருத்தன் மனதிற்குள் உன்னை நினைத்துப் புலம்புகிறானே... அதாவது உனக்குத் தெரியுமா? என்று புலம்பியவனுக்கு இன் னொன்றும் புரிந்தது.

வருடக் கணக்காகப் பேசிப் பழகிக் கல்யாணம் செய்து கொள்கிறவர்களே ஒருவரை ஒருவர் புரிந்து கொள்ள முடியாமல் விவாகரத்து செய்து கொள்ளும் போது, அவளிடம் பேசாமலே, அவள் மனது என்ன வென்று தெரியாமலே எப்படி இந்தளவுக்கு நம்பிக்கை வைத்தேன்.

ஏன் நான் இப்படி யோசிக்கவில்லை. அவளுக்கு இப்படி ஒரு ப்ரோபோசல் இருக்கும்னு நினைப்பு ஏன் வரவில்லை... என்று யோசிக்க யோசிக்க, தன்னையும் மீறி ஒரு நெடிய பெருமூச்சு எழுந்தது.

"ஓ.கே. ஆல் இன் த கேம். ஒருவேளை காதலித்த பிறகு அவள் கிடைக்கவில்லை என்றால், அதன் வலி இதைவிடப் பெரிதாக அல்லவா இருக்கும். தேங்க் காட்!" என்று ஒருவழியாகத் தன்னைத் தேற்றிக் கொண்டு ஆபீஸ் போய்ச் சேர்ந்தான்.

சுஜா நிவாஸ்.

அடுத்த நாள் காலையில் இரண்டு ஜோடியும் தேனிலவுக்குக் கிளம்பியதும், ஷைலு ரூமில் படித்துக்

கொண்டிருப்பதைக் கவனித்து விட்டு, இதுதான் சரியான சமயமென்று குடும்ப உறுப்பினர்கள் அனைவரையும் ஹாலில் அமரவைத்துப் பேச்சைத் தொடங்கினான் சுரேஷ்.

அவன் பேச ஆரம்பித்ததும் சத்தம் கேட்டு வெளியே வந்தவளுக்கு நெஞ்சு படபடக்க ஆரம்பித்தது. என்ன நடக்கப் போகிறதோ என்ற அச்சத்தில், அவளின் இதயம் பந்தயக் குதிரை வேகத்தில் துடிக்க, அவளின் இதயத் துடிப்பின் சத்தத்தில் சுரேஷ் பேசுவது கேட்காதோ என்ற பயத்தில் கதவின் அருகில் நின்று உன்னிப்பாகக் கவனிக்க ஆரம்பித்தான்.

சுரேஷ் முதலில் எப்படி ஆரம்பிப்பது என்று கொஞ்சம் குழம்பி, கொஞ்சம் தயங்கிப் பிறகு தைரியத்தைத் துணைக்கழைத்துக் கொண்டு, "மாமா, நான் சொல்வதைத் தப்பாக எடுத்துக் கொள்ளாதீர்கள். என்னை மன்னிச்சிடுங்க. உங்க பேச்சை மீறுகிறேன் என்று தப்பாக நினைக்காதீர்கள்..." என்று பலத்த பீடிகையுடன் ஆரம்பித்தவன்,

"எனக்கும், ஷைலுவுக்கும் இந்தத் திருமணத்தில் சம்மதமில்லை..." என்று பட்டென்று உடைத்துவிட, பெரியவர்கள் மூவரும் ஸ்பஷ்டமாக அதிர்ந்தார்கள்.

சில விநாடிகள் ஊசி போட்டால் கூடப் பெரிதாகச் சத்தம் கேட்கும் அளவிற்கு அங்கு அமைதி நிலவ, முதலில் சுதாரித்த சஞ்சய், "அன்று நான் கேட்டதற்குச் சம்மதம் என்று சொன்ன பிறகுதானே நானும் லாவண்யாவிடம் பேசினேன். இன்று இப்படிச் சொன்னால் என்ன

அர்த்தம்? யோசித்துதான் பேசுகிறாயா சுரேஷ்?" என்று பொரிந்தார்.

"மாமா, ப்ளீஸ் கோபப்படாதீர்கள். நான் என்ன சொல்ல வருகிறேன்னு கேளுங்கள்..." என்று வேண்ட,

"என்ன சொல்லப் போகிறாய் என்பது இருக்கட்டும். ஏன்... சுரேஷ் வேண்டாம் என்கிறாய்? ஷைலு ஏதாவது சொன்னாளா? இல்லை... நல்லி, சது பேச்சைக் கேட்டு வேண்டாம் என்கிறாயா?" என்று கோபத்துடன் கேட்க, அவன் சன்னமாகச் சிரித்தான்.

"அவர்கள் இருவர் பேச்சைக் கேட்டு ஷைலுவை வேண்டாம்னு சொல்ல நான் முட்டாள் இல்லை மாமா. எனக்கும் ஷைலுவுக்கும் எந்தப் பிரச்சினையும் இல்லை. நான் வேண்டாம் என்பதற்குக் காரணமே வேறு. நெருங்கிய சொந்தத்தில் திருமணம் செய்தால் பிறக்கும் குழந்தை ஊனமாகப் பிறக்கும்..." என்றதும், சஞ்சயின் பார்வை அவனைத் துருவ,

இடைவெளி விடாமல் அதே வேகத்தில், "இதை நான் சொல்லவில்லை. என் நண்பன் ஒருவன் டாக்டராக இருக்கிறான். ஒரு நாள் எதேச்சையாக என் திருமணத்தைப் பற்றிப் பேசும்போது இப்படிச் சொன்னான். நான் ஏற்கெனவே இதைப் பற்றிக் கேள்விப்பட்டிருக்கிறேன். இருந்தாலும் நான் அதைப் பெரிதாக எண்ணவில்லை.

"ஆனால் அவன் இந்த மாதிரி நெருங்கிய சொந்தத்தில் திருமணம் செய்தவர்களுக்குப் பிறந்த

குழந்தைகளைப் பற்றிய ரிப்போர்ட்டை என்னிடம் காட்டினான். அதைப் பார்த்த பிறகுதான் இந்தக் கல்யாணமே வேண்டாம் என்ற முடிவுக்கு வந்தேன். இதை ஜஸ்ட் வார்த்தையில் கேட்டுச் சொல்லவில்லை. நேரிலே நிறைய இந்த மாதிரி கேஸ்களைப் பார்த்த பிறகு மனதிலிருந்த கொஞ்ச நஞ்ச ஆசையையும் நான் அழித்துவிட்டேன்..." என,

சுஜாதாவிற்கு முகத்தில் எள்ளும் கொள்ளும் வெடித்தது.

சஞ்சய் அவரை அமைதியாக இருக்கும்படி சைகை செய்ய, "நீங்கள் எதற்காக எங்களுக்குத் திருமணம் செய்து வைக்க ஆசைப்படுகிறீர்கள்? சொந்தம் விட்டுப் போகக் கூடாது. அதே சமயம் நாங்கள் இருவரும் சந்தோஷமாக இருக்கத்தானே... ஆனால் கல்யாணத் திற்குப் பிறகு குழந்தை குறையோடு பிறந்தால்... நாங்கள் எப்படி சந்தோஷமாக இருக்க முடியும்... சொல் லுங்கள்..." என்று அவர்களிடமே கேட்க, யாரும் எதுவும் பேசவில்லை.

சஞ்சய் தம்பதிகள் கூட இதைப் பற்றி யோசிக்க வில்லை என்பதால், சுரேஷின் பேச்சில் இருந்த நியாயம் கூட, அமைதி காக்க, அவனே தொடர்ந்தான்.

"மாமா, இந்தக் கல்யாணம் நடந்தால்தான் சொந்தம் விட்டுப் போகாமல் இருக்குமா?" என்றவன், தாயிடம், "அம்மா, ஷைலு உனக்கு மருமகளா வந்தால் தான் அவள் மேல் நீ அன்பாக இருப்பியா?" என்று கேட்டதும்,

"ச்சே! என்னடா முட்டாள்தனமான கேள்வி... நீயா இப்படிக் கேட்கிற? அவள் எப்பவுமே என் குழந்தைடா. ஷைலு என்றுமே என் பெண்தான்... நீ சொல்ற மாதிரிக் கல்யாணத்தின் அடுத்த கட்டம் குழந்தை. அதிலே சிக்கல் வரும் என்று தெரிந்த பிறகு, இந்தக் கல்யாணத்தை நடத்துவதில் அர்த்தமே இல்லை..." என,

தங்கையை அடுத்து என்ன செய்வது மாதிரி பார்த்த சஞ்சயிடம், "ஆமாம் அண்ணா. நம் சந்தோஷத்திற் காகவும், பிள்ளைகளின் சந்தோஷத்திற்காகவும் தான் திருமணமே செய்து வைக்கிறோம். அதுவே பின்னால் நரகமாக மாறும் என்று தெரிந்த பிறகு இந்தப் பேச்சை இதோடு விடுவது நல்லது. ஷைலுவுக்கு வேறு இடத்தில் மாப்பிள்ளை பார்க்கலாம்ண்ணா..." என்றவர்,

"நீங்க என்ன அண்ணி சொல்றீங்க?" என்று அண்ணியிடம் அபிப்பிராயம் கேட்க,

அவருக்கு நாத்தனாரின் மகன் பேசியதும் சரி யென்றே தோன்றியதும், கணவரை நோக்கியவரிடம் சரியென்றே ஒத்துக்கொண்டார்.

சஞ்சய் சுரேஷின் பேச்சை முழுமையாக ஒத்துக் கொண்டாலும், மனதின் ஓரத்தில், 'சுரேஷை விட நல்ல மாப்பிள்ளையை எங்கே போய் தேடுவேன்? வருகிறவன் என் மகளைப் புரிந்து கொண்டவனாக இருக்க வேண் டுமே... இனி இது எப்படி சாத்தியம்? அப்படியே நல்லவன் கிடைத்தாலும்... அவள் புகுந்த வீடு அவளுக்குச் சந் தோஷத்தைக் கொடுக்குமா?' என மனம் குழம்பினார்.

பேச்சு வார்த்தை நல்லபடியாக முடிய, சிறியவர்கள் இருவருக்கும் பெரிய பாரம் நீங்கிய உணர்வு எழ, சில விநாடிகள் அவர்களுக்கு யோசிக்க அவகாசம் கொடுத்தவன் மீண்டும், "மாமா, இதே நேரத்தில் இன்னொரு விஷயத்தையும் நான் உங்களிடம் சொல்லணும்..." என்று தயங்கினான்.

மேற்கொண்டு சொல் என்று ஊக்கம் கொடுத்த தாய்மாமனிடம், "என் ஆபீசில் வேலை அதிகம் இருப்பதால் என்னால் ஜுவல்லர்ஸைக் கவனிக்க முடிவதில்லை. மிகவும் கஷ்டமாக இருக்கிறது. அடுத்தவங்களை நம்பி எத்தனை நாள்தான் இருப்பது? அதனால் நான் ஒரு முடிவுக்கு வந்திருக்கிறேன்..." என்றவன், மீண்டும் தயங்க,

பெரியவர்கள் மூவருமே கூர்மையாக சுரேஷை நோக்க, அவர்களின் பார்வையைச் சந்திக்காமல்,

"என் நண்பனின் தங்கை பேஷன் டிசைனிங் படித்திருக்கிறாள். அவளிடம் கடையின் பொறுப்பை ஒப்படைக்கலாம்னு இருக்கிறேன். நல்ல குடும்பத்துப் பெண். அமெரிக்காவில் படித்தவள். திறமையாக நிர்வாகம் செய்வாள்..." என்று சிறிது இடைவெளி விட்டு, "நீங்க என்ன சொல்றீங்க மாமா...?" என்றான் அவரிடமே அபிப்பிராயம் கேட்பது போல.

சஞ்சய் யோசித்து விட்டு, "உனக்குத் தெரியாததா? உனக்கு எது சரின்னு தோணுதோ, அதைச் செய். நாங்கள் உன் விருப்பத்திற்குக் குறுக்கே நிற்க மாட்டோம்.

தாராளமா அந்தப் பெண்ணின் கையில் பொறுப்பை ஒப்படைத்து விடு...” என்று; கூறிப் புன்னகைக்க, சுரேஷுக்கு நிம்மதியாக இருந்தது.

அப்பாடா! இரண்டு பிரச்சனைகள் முடிந்தது.

திவ்யா மேட்டரை இன்னும் கொஞ்ச நாள் கழித்துத் தான் ஆரம்பிக்கணும். இல்லையென்றால், மாமாவுக்குக் கோபம் வந்துவிடும்.... என்று தன் யோசனையில் மூழ்கிக் கொண்டிருந்தவனின் முகத்தைக் கூர்ந்து கவனித்த சஞ்சய் உதட்டுக்குள் சிரித்துக் கொண்டார்.

“அப்புறம் எப்போ நீயும் திவ்யாவும் திருமணம் செய்ய முடிவு எடுத்திருக்கிறீங்க?” என்று கூலாகக் கேட்க,

சுரேஷுக்கு இதயமே எகிறிக் குதித்து விடும் போல் துடித்துத் தூக்கி வாரிப் போட, அங்கிருந்த எல்லோ ருக்குமே அதிர்ச்சி.

ஷைலுவுக்கு இவருக்கு எப்படி இந்த விஷயம் தெரிந்தது என்று படபடப்பாக இருக்க,

சுரேஷுக்கோ, ‘ஐயோ... இவருக்கு எப்படி தெரிந்தது? யார் சொல்லியிருப்பார்கள்? இவர் இதை நிஜமாகச் சொல்கிறாரா... இல்லை, நக்கலாகச் சொல் கிறாரா? அப்படியே ஒத்துக் கொண்டாலும் இதற்காகத் தான் ஷைலுவை வேண்டாம் என்பதாக நினைப்பாரா?’ என்று மண்டையைக் குடைந்தது.

பயத்தில் உலர்ந்துபோன தொண்டையைத் தண் ணீரைக் குடித்து நனைத்துக் கொண்டு, “மாமா, நீங்க என்ன சொல்றீங்க?” என்று மெதுவாகக் கேட்க,

சஞ்சய் சிரித்துக் கொண்டே "பயப்படாதே சுரேஷ், உன் மனதில் இப்போது என்ன ஓடுகிறதுன்னு எனக்குத் தெரியும்... எனக்கு உன்னைப் பற்றி நன்றாகத் தெரியும். நீ பெண்களிடம் அவ்வளவு சீக்கிரம் பழக மாட்டாய். அப்படிப்பட்டவன் இன்று ஒரு பெண்ணை நம்பிக் கடையை ஒப்படைக்கிறேன் எனும்போது, இவ்வளவு அனுபவம் உள்ளவன் அதைப் புரிந்துகொள்ள மாட்டேனா" என்று கேலியாகக் கேட்க, சுரேஷுக்கு பயம் நீங்கி நன்றியோடு மாமனை நோக்கினான்.

"யார் சுரேஷ் உன் மனதை கவர்ந்தவள்?" என்று ஆர்வமாக விசாரித்த தாய்க்கு,

வெட்கத்தோடு அவளைப் பற்றிய விவரத்தைக் கூற,

"சரிப்பா, அந்தப் பெண்ணுக்கும் உன்னைக் கல்யாணம் செய்ய சம்மதம்தானே?" என்று சந்தேகமாக விசாரித்தார் சுஜாதா.

"ஆமாம் அத்தை. அவள் எனக்காக ஐந்து வருடமாகக் காத்திருக்கிறாள். நான்தான் அவளைப் புரிந்து கொள்ளாமல் இத்தனை வருடமாக இருந்து விட்டேன். போன மாதம்தான் என் நண்பன் கார்த்திக்கைச் சந்தித்தேன். அவன் சொன்ன பிறகுதான் எனக்கு விஷயமே தெரியும்" என்றவன், "இதற்காகத்தான் நான் ஷைலுவை வேண்டாம்னு சொல்கிறேன் என்று நினைக்காதீங்க. எங்கள் திருமணம் வேண்டாம்னு நாங்கள் முடிவு செய்து ஒரு மாசமாகிவிட்டது. அதன் பிறகுதான் இதெல்லாம்..."

என்று சொல்லி முடிக்க, பெரியவர்களுக்கு ஆச்சரியமாக இருந்தது.

சிறியவர்கள் எவ்வளவு தீர்க்கமாக, தெளிவாக வாழ்க்கையைப் பற்றி முடிவு எடுக்கிறார்கள் என்று.

சிபியின் வீடு.

வேலை முடிந்து வந்த சிபி தெளிந்து இருந்தாலும் அவனின் மனது ஷைலு வசமே இருக்க, பெற்றோரிடம் சிரித்துப் பேசிவிட்டு, அறைக்குப் போய் அமர்ந்து லாப் டாப்பில் தன் வேலையைத் தொடர்ந்தவனை ஆகாஷின் கால் அழைத்தது.

"சொல்லு ஆகாஷ்! எப்படி இருக்கே? ஹனி மூன் ட்ரிப் எப்படி போகுது..." என்று விசாரிக்க,

"அதை விடு. நீ எப்படி இருக்கே? நேற்று நீ ரொம்ப டல்லா இருந்தியே! எனக்கு மனசே வரவில்லை இங்கு வருவதற்கு. சொல்லுடா ஆர் யூ ஆல்ரைட்...." என்று வருத்தத்துடன் விசாரித்த நண்பனுக்கு,

"ஹே டோன்ட் வொர்ரி மேன். ஐ அம் கொயட் ஆல்ரைட்" என்றவன், "ஊட்டியில் எங்கே தங்கியிருக்கீங்க? நீ ஹோட்டலில் தங்கியிருந்தால் அங்கிருந்து காலி பண்ணிக் கொண்டு என்னுடைய கெஸ்ட் ஹௌஸ் போய் தங்கு. அங்கேயிருந்து உனக்கு எல்லா இடமும் பக்கம். அட்ரஸ் தெரியுமில்லையா!

"நாம் ஏற்கனவே போயிருக்கோமே. அங்கே போய் கேர் டேக்கர் இருப்பாங்க. அவர்களிடம் நான் சொல்லி விடுகிறேன், நீ போய் சாவி வாங்கிக் கொள்..." என,

"தேங்க்ஸ் சிபி. நான் இதைப் பார்த்துக் கொள் கிறேன். நீ உன் மனசைப் பத்திரமாகப் பார்த்துக் கொள்" என்று போனை வைத்தான்.

சுஜா நிவாஸ்...

சுரேஷ் திவ்யாவைப் பற்றிக் கூறியதும் எல்லோ ருக்குமே மன நிறைவாக இருந்தது. எது எப்படி இருந் தாலும் பிள்ளைகள் நன்றாக இருந்தால் போதும் என்று மூவருமே நினைத்ததால் சுரேஷின் ஆசைக்கு யாரும் தடை போடவில்லை.

மூவரும் தத்தம் நினைவுகளில் மூழ்கி இருந்ததால், சற்று நேரம் அமைதியாக இருந்தது. ஷைலு ரூமிலிருந்து வெளியே வந்து லாவண்யா பக்கத்தில் அமர, அவளின் தலையைப் பாசமாக வருடி,

"ஏன் ஷைலு, இதில் உனக்கு ஒன்றும் வருத்தம் இல்லையே" என்றார் கவலை குடிகொள்ள.

ஷைலு இடம் வலமாகத் தலையை அசைத்து, "நிச்சயமாக இல்லை அத்தை. அவர் சொல்வது நியாயம் தானே. சுரேஷ் என்ன முடிவு செய்தாலும் எனக்குச் சம்மதம்தான். இதில் கவலைப்படவோ கஷ்டப்படவோ என்ன இருக்கு" என்று நிதானமாகவும் தெளிவாகவும் கூற, பெற்றோருக்கு மகளின் தெளிவு கண்டு பூரிப்புதான்.

இருந்தாலும் ஷைலுவுக்குச் சுரேஷ் மாதிரி அவளைப் புரிந்து கொள்பவன் மாப்பிள்ளையாக வர வேண்டுமே என்று, கவலை அவர்கள் மனதை அரிக்க சுஜாதா கணவரின் முகத்தைப் பார்த்தார் குழப்பத்துடன்.

ஆனால் அவரோ இந்த யோசனையைத் தூக்கித் தூர வைத்துவிட்டு, முதலில் தங்கை மகனின் விஷயத்தை முடிக்க வேண்டும் என்று நினைத்துக் கொண்டவராக... "சரிப்பா, முதலில் உன் விஷயத்தைக் கவனிப்போம். உனக்கும் வயசாகிக் கொண்டே போகிறது. சீக்கிரம் கல்யாணம் செய்து வைத்தால்தான் உனக்கும் வசதியாக இருக்கும். லாவண்யாவுக்கும் ஒரு துணை கிடைத்த மாதிரி இருக்கும்.

"அதனால் நல்ல விஷயத்தைத் தள்ளிப் போட வேண்டாம். நீ திவ்யா வீட்டிற்கு நாளை பெண் பார்க்க வருவதாகத் தகவல் கொடுத்து விடு. முதலில் பெண் ணைப் பார்த்துவிட்டு அதன் பிறகு ஒரு மாதமோ இரண்டு மாதமோ கழித்துத் திருமணம் முடிவு செய்து கொள்ளலாம்" என்றார்.

சஞ்சய் கூறியதைக் கேட்டதும் சுரேஷுக்கு உள்ளம் துள்ளிக் குதித்தது.

அதை வெளிக்காட்டாமல், "சரி மாமா, நீங்க சொன்னபடியே அவர்கள் வீட்டுக்குத் தகவல் தந்துவிடு கிறேன்" என்று மகிழ்ச்சியுடன் கூறிவிட்டு, ஷைலுவிடம் திரும்பி அவளிடம் சைகையில், "கார்த்திக் மேட்டரை சொல்லட்டுமா?" என்று கேட்க,

அவசரமாகக் கலவரத்துடன் 'வேண்டாம்' என்று சைகையில் கூற,

அவனுக்கு ஏன் என்று தெரியவில்லை என்றாலும், இப்போது வெளிப்படையாக எதுவும் கேட்க முடியாது என்பதால் சரி என்றான்.

இரு பெண்களிடமும் கலந்து பேசி முடிவு செய்துவிட்டு, மகளிடம், "உன் அக்கா இரண்டு பேரும் இல்லையாததால் உனக்கு எந்தத் தொல்லையும் இருக்காது... அதனால் நீ நிம்மதியாக இருக்கலாம்... அதன் பிறகு எல்லா வற்றையும் பார்த்துக் கொள்ளலாம்" என்று அவள் கன்னத்தைத் தட்டிவிட்டு எழுந்து செல்ல, பின்னாலேயே சுஜாவும், லாவண்யாவும் போக...

அதற்காகக் காத்திருந்தவன்போல்... சுரேஷ் ஷைலுவை நெருங்கினான்.

"ஏன் ஷைலு, இப்போ சொல்ல வேண்டாம் என்றாய். இப்பவே சொல்லியிருந்தால் உன் பிரச்சனை யும் தீர்ந்திருக்கும். கார்த்திக்கும் பாவம்... அவன் ஏற்கனவே உன்னை நினைத்து ஜஸ்கிரீமா உருகிக் கொண்டிருக்கிறான். நீ லேட் செய்து கொண்டே போனால் அவன் தவிக்கமாட்டானா?

"அவன் பக்கத்தில் எந்த பிராப்ளமும் கிடையாது. நீ பேசச் சொன்னால் இப்போதே நான் பேசுகிறேன். எதுவும் உன் சம்மதத்தோடுதான் செய்ய வேண்டும். கார்த்திக் சொல்லியிருப்பதால்தான் நான் கேட்டுக் கொண்டிருக் கிறேன். சொல்லு ஷைலு" என்றான் அழுத்தமாக.

சுரேஷின் நல்ல மனது புரிந்தாலும், மனதிற்குள் ஏதோ முரண்டியது, "என்னைத் தப்பாக நினைக்காதீர்கள், இப்போதான் உங்கள் காதலைப் பற்றிச் சொல்லியிருக் கிறீர்கள். அது முதலில் நல்லபடியாக முடியட்டும். இந்தச்

சமயத்தில் என் காதலைப் பற்றிச் சொன்னால் எது எப்படி மாறும் என்று தீர்மானமாகச் சொல்ல முடியாது.

"அப்புறம் உங்களுக்காகக் காத்திருந்த திவ்யாவின் நிலைமை என்னால் மோசமாகிவிடும். ப்ளீஸ், உங்கள் திருமணம் முடியட்டும். அதன் பிறகு எங்களைப் பற்றிச் சொல்லலாம். நிச்சயம்... கார்த்திக் எனக்காக எத்தனை வருஷம் வேண்டுமென்றாலும் காத்திருப்பார். உங்களுக்குத் தெரியாதா அவரைப் பற்றி" என,

சுரேஷும் அரை மனதாக, "ஏதோ காரணம் சொல்கிறாய். உங்கள் கல்யாணம் முதலில் நடந்தால் நான் சந்தோஷப்படுவேன். ஆனால் இப்படிச் சொல்கிறாய். இதற்கு மேல் நான் என்ன சொல்வது? உன் இஷ்டம்..." என்றான் பெருமூச்சுடன்.

"கவலைப்படாதீங்க சுரேஷ்! நானும் என் சகோதரிகள் இல்லாத இந்த வீட்டில் கொஞ்சம் சுதந்திரமாக இருக்கிறேனே. அதுமட்டுமில்லை... கார்த்திக் என் ஆசைக்குத் தடையேதும் சொல்ல மாட்டார். அதனால் நீங்கள் இந்தச் சந்தோஷமான விஷயத்தை முதலில் திவ்யாவிடம் சொல்லுங்கள்..." என்றவள்,

"திவ்யாவிடம் கடலை போடுங்க. போங்க சுரேஷ்..." என்று கையை நீட்டிக் கேலியாகக் கூற,

அவள் தலையில் செல்லமாகத் தட்டி "உன்னை வந்து கவனித்துக் கொள்கிறேன்" என்று சிரித்துக் கொண்டே அவ்விடத்தை விட்டு அகன்றான்.

சுரேஷ் தன் அறைக்குச் சென்று திவ்யாவுக்குப் போன் செய்து விஷயத்தைக் கூறியதும், திவ்யாவுக்குச் சொல்ல முடியாத ஆனந்தம்.

சிறிது நேரம் சுரேஷ் சஞ்சயிடம் சமாளித்த விதத்தைப் பற்றிப் பேசிச் சிரித்துவிட்டுப் போனை வைத்ததும், கார்த்திக்கிடம் இருந்து கால் வந்தது.

"ரியல்லி ஹாப்பி மேன். எனி ஹவ் உங்க ரெண்டு பேர் பிராபளம் சால்வ்ட். சரி நாளை எத்தனை மணிக்கு வருகிறீர்கள்" என்றான் சந்தேகம் பொங்க.

"டேய்.... டேய்... கொஞ்சம் மூச்சு விட்டு பேசு..." என்று கிண்டலடித்து விட்டு, "நானே உனக்குப் போன் செய்யவேண்டும் என்று நினைத்தேன். அதற்குள் ஷைலு சொல்லி விட்டாளா? நாளை மாலை நான்கு மணிக்கு வருகிறோம். ஆன்ட்டியிடமும், அங்கிளிடமும் சொல்லி விடு. அப்புறம் உங்கள் விஷயத்தைப் பற்றி ஷைலு சொன்னாளா?" என்றான் சற்று வருத்தத்துடன்.

"அவள் சொல்றதும் சரிதான்... முதலில் உங்கள் கல்யாணம் நல்லபடியா நடக்கட்டும். அதன் பிறகு பார்க்கலாம். அதுவரைக்கும் கொஞ்சம் ஜாலியா லவ் பண்ணிக்கிறோம்..." சொல்லிவிட்டு சிரிக்க,

அவனுடன் இணைந்து சிரித்துவிட்டு, "உங்க ரெண்டு பேருடைய விருப்பம் அதுதான் என்றால் நான் என்ன சொல்ல முடியும்? ஓகே என்ஜாய்..." என்று போனை வைத்தான்.

சிபியின் வீட்டில்....

சிபி மாடியில் ஏதோ வேலையாக இருக்க, கீழே ஹாலில் அமர்ந்திருந்த தேன்மொழி தன் கணவரிடம், "ஆகாஷ் கல்யாணத்திற்குப் போய்விட்டு வந்ததிலிருந்து பையன் சரியில்லைங்க. இவன் சம்மதத்தைக் கேட்டு நாம் காத்திருந்தால் சரி வராது. அதனால் உடனடியாப் பொண்ணு பார்க்க ஏற்பாடு பண்ணுங்க. எப்படியாவது கல்யாணத்திற்கு ஓ.கே. சொல்ல வைக்கலாம். நமக்கு அப்புறம் அவனுக்கு யாருமில்லை... இப்படியே விட்டால் தனி ஆளா நின்னுடுவான். இதுக்குதானா பெத்து வளர்த்து சொத்து சேர்த்து வைத்தோம்" என்று அங்கலாய்த்தார்.

"தேனு, உன் கஷ்டம் புரியுது. ஆனால் எனக் கென்னவோ நீ செய்கிற விஷயம் நல்லதாகவே படலை... ஒரு பொண்ணோட வாழ்க்கையில் விளையாடறியோ என்று தோணுது..." என,

தேன்மொழி கணவரை வினோத ஜந்து மாதிரி நோக்கினார்.

"என்னங்க ஆச்சு? நேத்துவரைக்கும் மகனுக்குக் கல்யாணம் ஆகலைன்னு புலம்பிகிட்டு இருந்தீங்க. ஆனால் காலையிலிருந்து வேற மாதிரி பேசறீங்க. உங்க பிரச்சனைதான் என்ன? எதுக்காக சிபிக்குக் கல்யாணம் வேண்டாம்னு சொல்றீங்க? ஒரு பெண்ணோட வாழ்க்கை யில் விளையாடறேன்னு வேற சொல்றீங்க...?" என்று கோபத்தோடு எகிறிய மனைவியைப் பரிதாபமாக நோக்கி னார்.

"என்ன தேனு, ஒண்ணுமே தெரியாத மாதிரிப் பேசறே! நம்ம பையனுக்கு இதயம் பலகீனமா இருக்குன்னு டாக்டர் சொன்னதை மறந்துட்டியா? அவனால் அதிக சந்தோஷத்தையோ, துக்கத்தையோ தாங்க முடியாது. அதிக உணர்ச்சிவசப்படவும் கூடாது. அதுமட்டுமா, அவன் தாம்பத்திய உறவில் ஈடுபடக் கூடாதுன்னு சொன்னாரே! அதையெல்லாம் மறந்துட்டியா?

"இப்போ நீ சொன்ன மாதிரி இவனுக்கு இருக்கிற குறையெல்லாம் மறைத்து ஒரு பெண்ணைத் திருமணம் செய்துவைத்தால் அந்தப் பெண்ணின் நிலையை யோசித்துப் பார்த்தியா? இது எவ்வளவு பாவம் தெரியுமா...? என்றார் கோபத்துடன்.

"அதுக்காக நம் பையனை இப்படியே தனி மரமா நிற்பதைப் பார்த்துக் கொண்டிருக்கலாம் என்கிறீர்களா? பெத்த வயிறு எரியுதுங்க. ஆசை ஆசையாய் ஒரே பிள்ளையைப் பெற்று இப்படி தனி ஆளாக நிற்பதைப் பார்க்கவா நாம் இவ்வளவு கஷ்டப்பட்டோம்...!

"ஏதோ வேலை வேலைன்னு பிள்ளை அலைஞ்சிகிட்டு இருக்கிறதினால் அவனுக்கு மயக்கம் வந்திடுச்சி. அதுக்காக அவனை ஹாஸ்பிடலில் அட்மிட் செய்து டெஸ்டையும் எடுத்தால் இப்படிதான் கிணறு தோண்ட பூதம் வருவது போல புரியாத நோயெல்லாம் இருக்குன்னு சொல்வாங்க. இந்த மயக்கத்துக்கு முன்னே நல்ல ஆரோக்கியமாத்தானே இருந்தான்..." என்று வாதிட்டார் தீவிரமாக.

"உன் ஆதங்கம் புரியுது தேனு. ஆனால் டாக்டர் சொல்றதை நாம அவ்வளவு லேசில எடுத்துக்க முடி யாது. உனக்கு இந்த டாக்டர் மேலே சந்தேகம் இருந்தால் சொல். நானே வேறு ஒரு நல்ல டாக்டரிடம் இவனுடைய ரிப்போர்ட்ஸ் காட்டி செகண்ட் ஒப்பினியன் கேட்டுட்டு வரேன். அதுவரைக்கும் நீ இதைப் பற்றி சிபியிடம் சொல்லாதே...." என்று எச்சரித்துவிட்டு எழுந்தவரை இழுத்து அமர்த்தினார்.

"இங்கே பாருங்க, உங்க நியாயத்தை நான் கேட்டுட்டு இருக்கப் போவதில்லை. புலி எப்போ வரு மோன்னு பயந்துகிட்டு காலத்தை ஓட்டுறதை விட, எது வந்தாலும் ஒரு கை பார்த்திடலாம்னு களத்தில் இறங்குறது தான் புத்திசாலித்தனம்..." என ஓர் முடிவோடு பேச, விஜயகுமார் தொய்ந்து போனார்.

"என்னமோமா... நீ இப்படி பேசுகிறாய். எனக்கு மனசே சரியில்லை. அவனானால் யாருக்கு வந்த விருந்தோ என்று இருக்கிறான். கடவுள் யாருக்குத்தான் உதவி செய்வார்" என்று அலுத்துக்கொண்டே எழுந்து சென்றார்.

கீழே இறங்கி வந்தவன் பெற்றவர்களின் பிந்தையப் பேச்சைக் கேட்டு ஒரு நிமிடம் அசையாது நின்றுவிட, அவர்களின் வேதனையான பேச்சைக் கண்டு தன் மேலே வெறுப்பு வந்தது. நான் ஏன் கல்யாணமே வேண்டாம் என்கிறேன்... எது என்னைத் தடுக்கிறது... என்ன காரணம் தெரியாமலே எதுக்கு வெறுக்கணும்? பேசாமல் அவர்கள்

ஆசைப்படி திருமணம் செய்து கொண்டால்தான் என்ன... என்று நினைத்தாலும் ஷைலு மாதிரி ஒரு பெண் நம் வாழ்வில் கிடைத்தால் அந்தச் சந்தோஷத்திற்கு அளவே இல்லை.

ஆனால் அந்தப் பாக்கியம்தான் எனக்கு இல் லையே! முகம் தெரியாத ஒரு பொண்ணை என்னால் ஏற்றுக் கொள்ள முடியுமா? வாழ்நாள் முழுவதும் அவளைத் தூய்மையாகக் காதலிக்க முடியுமா?

ஷைலுவை மனதில் வைத்துக் கொண்டு. எல்லா வற்றிற்கும் ஷைலுவோடு ஒப்பிட்டுப் பார்க்குமே. இதென்ன கொடுமை.

ச்சே... ஏன் அவளைச் சந்தித்தேன்? இப்படிக் கொஞ்சம் கொஞ்சமா சாகிறதைவிடப் பேசாம கனடா போய் விடலாமா என்று நினைத்தவுடன், அங்கே போனால் மட்டும் மறந்து விடுமா என்ன... என்று மனது இடித்துரைத்தது.

இனிமேல் திருமணத்தைப் பற்றிப் பேசினால் மறுக்க வேண்டாம்... என்ன செய்கிறார்களோ செய்யட்டும். அப்போது பார்த்துக் கொள்ளலாம்... என்று முடிவு செய் தவன்... ஒரு பெண்ணின் நினைவு இந்த அளவுக்குப் பாதிக்குமா என்று தலையைக் கையால் தாங்கிக் கொண்டு அமர்ந்தான்.

LDஹாலக்ஷ்மி இல்லம்.

அடுத்த நாள் மஹாலக்ஷ்மி வீட்டை அழகாக அலங்கரித்து, வருகிறவர்களுக்கு விருந்து தயார் செய்து

கொண்டிருக்க, விஸ்வநாத் வெளிவேலைகளைப் பார்க்க... கார்த்திக்கிற்கு ஆபீஸ் வேலைகள் இருந்ததால், அதை எல்லோரும் வருவதற்குள் முடிக்க வேண்டும் என்று மும்முரமாக இருந்தாள்.

ரோஜா இதழ் கலரில் சிவப்புப் பூக்கள் போட்ட மைசூர் சில்க் சேலை அணிந்து அளவா[illegible]ப்பனை செய்து, சுரேஷுக்காக டென்ஷனாகக் காத்திருந்தாள் திவ்யா. ஒரு பக்கம் எல்லாம் சீக்கிரமாக முடிந்தாலும், சுரேஷின் மாமாவும், தாயும் என்ன சொல்வார்களோ என்ற மெலிதான பயம் இருந்து கொண்டே இருந்தது அவளுள்.

அவர்களைப் பற்றிப் பயப்பட வேண்டாம் என்று சுரேஷ் சொல்லியிருந்தும், ஏனோ டென்ஷனாகவே இருந்தது. அதைக் கவனித்து விட்ட மகாலக்ஷ்மி, அவளின் அருகில் அமர்ந்து, அவள் கையை எடுத்து அதை மெலிதாக அழுத்தி, "திவ்யா, பெண் பார்க்க வருவது எல்லாம் சும்மா ஒரு சடங்குதான். கண்டிப்பா உன்னை ஷைலுவின் அப்பாவுக்குப் பிடிக்கும். உங்கள் கல்யாணம் கண்டிப்பா நடக்கும். கவலைப்படாதே. இந்த மாதிரி டென்ஷனாக இல்லாமல் ஏதாவது மேகசின் படி. எல்லா வற்றையும் சுரேஷ் பார்த்துக் கொள்வான். பயப்படாதே!" என்று தட்டிக் கொடுக்க, திவ்யாவின் முகத்தில் குழப்பமும் பயமும் நீங்கிப் புன்னகை அரும்பியது.

வாசலில் கார் வந்து நிற்கும் சத்தம் கேட்டதும்... மகாலக்ஷ்மியும் விஸ்வநாத்தும் ஓடிச் சென்று ஆரவார மாக வரவேற்க, சுஜாதாவுக்கு மகாலக்ஷ்மியைக் கண்டதும்

ஆச்சரியம் உண்டாக, "நீங்களா! அப்போ திவ்யா யாரு? உங்க பொண்ணா?" என்று வினவ, மகாலக்ஷ்மி சிரித்தார்.

அவர்களை வரவேற்று அமரவைத்து, "திவ்யா என் தங்கை பெண். எனக்கு ஒரே பையன்..." என்று கூறும் போதே, கார்த்திக் மாடியிலிருந்து இறங்கி வந்து எல்லோ ருக்கும் வணக்கம் சொல்லி, சுரேஷுக்குக் கை குலுக்க, "இவன்தான் என் பையன் கார்த்திக்..." என்று மற்ற மூவருக்கும் அறிமுகம் செய்து வைத்தார்.

சுரேஷின் பக்கத்தில் அமர்ந்த கார்த்திக்கிடம், அவன் சாப்ட்வேர் கம்பெனியைப் பற்றி சஞ்சய் விசாரித்துக் கொண்டிருக்க, கார்த்திக் அவருக்குப் பதில் சொல்லிக் கொண்டிருந்தாலும் அவன் கண்கள் எழிலோவியமாக இருந்த ஷைலுவையே தழுவிக் கொண்டிருந்தது.

அதைக் கவனித்த சுரேஷ் அவனை ரகசியமாகக் கிள்ள, கார்த்திக் அவனைத் தடுக்க...

இந்த நாடகத்தைப் பார்த்துக் கொண்டிருந்த ஷைலு சிரிப்பை அடக்கப் பாடுபட வேண்டியிருந்தது.

எல்லோருக்கும் காபி, டிபன் எடுத்து வந்த மகாலக்ஷ்மி, ஷைலுவை அனுப்பி மணப்பெண்ணை அழைத்துவரச் சொன்னார். கார்த்திக்கைத் தவிர எல் லோரும் திவ்யாவைப் பார்க்க, கார்த்திக் ஷைலுவையே பார்த்துக் கொண்டிருக்க, சுரேஷ் அவனை அழுத்திக் கிள்ள, கார்த்திக் துள்ளித் துடித்தான்.

திவ்யாவை மற்ற மூவருக்கும் பிடிக்க, சுஜாதா எழுந்து சென்று அவள் தலையில் பூ வைத்துக் கல்

வைத்த நெக்லஸை அணிவித்து அவள் கன்னத்தில் முத்தமிட, கார்த்திக்கின் பார்வை ஷைலுவிடம், "இதே மாதிரி ஒன்று நீ தரவேண்டும்..." என்றான் குறும்பாக.

ஷைலு, "ம்ஹூம்..." என மறுக்க, அங்கிருந்து எழுந்து அவளைக் கடந்து செல்லும் பொழுது, "உன்னை அப்புறம் கவனிச்சுக்கிறேன்..." என்று மெதுவாக அவளுக்கு மட்டுமே கேட்கும் குரலில் சொல்லி விட்டுப் போக, ஷைலு சிரிப்பை அடக்க முடியாமல் திவ்யாவை அழைத்துக் கொண்டு உள்ளே சென்றான்.

"என்ன ஷைலு... ஒரு பக்கம் பொண்ணு பார்க்கும் படலம் நடக்குதுன்னா... ஒரு பக்கம் ரொமான்ஸ் ஸ்டோரி நடக்குது..." என்ற திவ்யாவின் கேலிக்கு வெட்கத்துடன் சிரிதது, அவளை அடக்கினாள்.

மணமக்கள் இருவரும் பேச வேண்டும் என்றதும் அவர்களைத் திவ்யா ரூமிற்கு அனுப்பிய மஹா, மகன் ஷைலுவிடம் பேசத் திணறுவதைக் கவனித்த பெற்றவர்கள் ரகசியமாகச் சிரித்தார்கள்.

விஸ்வநாத் வந்திருந்த பெரியவர்களைத் தோட்டத் திற்கு அழைத்துச் செல்ல, மஹா மகனை வேகமாக நெருங்கி, "ஷைலு, அம்மா அப்பா வருவதற்குள் நீங்கள் இரண்டு பேரும் போய்ப் பேசிட்டு வந்துடுங்க..." என்று அனுமதி கொடுக்க, எல்லையில்லா சந்தோஷத்துடன் மனம் கவர்ந்தவளின் கையைப் பிடித்துக் கொண்டு, தன் அறைக்கு அழைத்துச் சென்று கதவைச் சாத்தினான்.

"ஹேய், எதுக்குப்பா கதவைச் சாத்தறீங்க?" என்று சிணுங்கிக் கதவிலே சாய்ந்து கொண்டவளை இரு கைகளாலும் வேலி அமைத்துக் கார்னர் செய்ய, "ஹேய் கார்த்திக்... கொஞ்சம் தள்ளி நில்லுங்க..." என்று குரலே வெளியே வராமல் வெட்கத்துடன் அவன் மார்பில் ஒற்றை விரலை வைத்துத் தள்ளியும் நகராமல், அவளையே பார்த்துக் கொண்டிருக்க...

ஷைலுவுக்கு இன்ப அவஸ்தையாக இருந்தது.

அவளின் அனுமதி இல்லாமலே கன்னங்களில் ரோஜாக்கள் மலர, அவளின் கன்னத்தை ஒரு விரலால் வருடி, "இவ்வளவு அழகாக வந்து நின்றால் என்னால் எப்படிச் சும்மா இருக்க முடியும்?" என்று கிறங்கி மேலும் நெருங்க,

"ம்ஹூம்... இது சரி வராது. அத்தை பேசிட்டுத்தான் வரச் சொன்னாங்க. இங்கே வேற என்னமோ நடக்குது...? நான் போறேன்..." என்று அவன் கையைத் தட்டி விட்டு விலக எத்தனித்தவளின் கையைப் பிடித்து,

"ப்ளீஸ் ஷைலு, இன்னும் கொஞ்ச நேரம்... உன்னிடம் பேசக்கூட முடியவில்லை. நீ என்னவென்றால் உன் அப்பா, அம்மாவை விட்டு நகர மாட்டேன் என்கிறாய். சுரேஷும் திவ்யாவும் அவர்கள் சம்மதத்தோடு பேசு கிறார்கள்..." என்று விடலைப் பையன் மாதிரி, அவளிடம் பேச முடியவில்லை என்ற ஆதங்கத்தில் சலித்துக் கொள்ள, ஷைலுவுக்குப் பெருமை கலந்த சிரிப்புப் பொங்கியது.

அவன் கன்னத்தைப் பிடித்துக் கிள்ளி அப்படியும் இப்படியும் ஆட்டி, "என் செல்லம் இல்ல... இன்னும் கொஞ்ச நாள் வெயிட் பண்ணுங்க கார்த்திக்..." என்று சொல்லி, அவள் கன்னத்தில் பட்டும் படாமலும் அவன் இதழ்களை ஒற்றி எடுக்க,

கார்த்திக், "ஆஹா, இப்படிக் கொஞ்சம் முறுக்கிக் கொண்டால் இப்படி ஒரு போனஸ் கிடைக்குமா? இது தெரியாமல் போச்சே எனக்கு?" என்றான் வசீகரமாகச் சிரித்து.

"உங்க சிரிப்பு ரொம்ப அழகா இருக்கு கார்த்திக்..." என்று அவன் மார்பில் சாய,

அவளின் தலையில் செல்லமாக முட்டி, "உன்னை விடவா..." என்று சிரித்துக் கொண்டே இருவரும் வெளியே வந்தார்கள்.

ஹாலில் யாரும் இல்லாததால், ஷைலு அவர் களைத் தேடிக் கொண்டு தோட்டத்திற்குச் செல்ல, கார்த்திக் தனியாக அமர்ந்து பி.பி.சி. பார்த்துக் கொண்டிருந் தான். சுரேஷும் திவ்யாவிடம் பேசி விட்டுக் கார்த்திக்கின் அருகில் அமர, இருவரும் சிரித்துப் பேசிக் கொண்டே இருந்ததைப் பார்த்துக் கொண்டே தோட்டத்திலிருந்து வந்த சுஜாதாவிற்கு, கார்த்திக்கின் கம்பீரமான அழகும் சிரிப்பும் கவர,

'ஷைலு இங்கே வருகிறாளே... இவனிடம் பேசு வாளோ அல்லது அவர்களிடையே ஏதாவது இருக்குமா?' என நினைத்த விநாடி,

"ச்சே... ச்சே... ஷைலு அந்த மாதிரிப் பெண் ணில்லை. அப்படியே இருந்தாலும் எவ்வளவு நன்றாக இருக்கும். ஷைலுவின் அழகுக்கும் இவனுக்கும் பொருத்த மாக இருக்கும்..." என்று தாய் மனம் முடி போட்டது.

விஸ்வநாத் எல்லோரையும் சாப்பிட அழைக்க, சிறியவர்கள் போகாமல் பெரியவர்கள் மட்டுமே செல்ல, கார்த்திக் ஷைலுவுடன் பேச கார்டனுக்குச் சென்றுவிட...

சற்று நேரம் அவளையே பார்த்துக் கொண்டிருந் தவன், "நீ இந்தப் புடவையில் மிகவும் அழகா இருக்கே திவ்யா. புடவைக்கு நீள முடி ஒரு அழகு என்றால் உன் பாப் ஹேர் ஸ்டைல் ஒரு அழகைக் கொடுக்குது..." என்று அவளின் அருகில் நெருங்கி அமர, திவ்யாவுக்கு அவனின் அருகாமை மயக்க, அவன் தோளில் சாய்ந்து கொண்டாள்.

அவள் கையை எடுத்துத் தன் கையுடன் கோர்த்துக் கொண்டு, அவள் தலை மீது தன் தலையைச் சாய்த்து, "நமக்கு இவ்வளவு சீக்கிரம் கல்யாணம் முடிவாகும்... பெரியவர்களின் சம்மதத்தோடு ஒரே ரூமில் அமர்ந்து பேசுவோம் என்று நான் நினைக்கவே இல்லை திவ்யா!" என்ற கிறங்கிய குரல் அவளை மயக்க... கண் மூடி சாய்ந் திருந்தவள் பக்கம் திரும்பி அவள் முகத்தைக் கையில் ஏந்தி,

"நான் உன்னை ரொம்பக் கஷ்டப்பட வைத்து விட்டேனா திவ்யா?" என்றான் உருகிய குரலில்.

கண்களைத் திறக்காமலே, "ம்ஹூம்..." என்று தலையசைக்க,

"எனக்குத் தெரியும். என்றைக்கு இருந்தாலும் நீங்கள் எனக்குக் கிடைப்பீர்கள் என்று நம்பினேன். பிகாஸ் ஐ ட்ரஸ்ட் மை லவ் சுரேஷ். அதுதான் உங்களை என்னிடம் கொண்டு வந்து சேர்த்தது. நீங்கள் என்னை வேண்டாம்னு சொன்னாலும் உங்களின் காதல் கிடைக்கும். உங்களோடு வாழ்வேன்னு நம்பினேன்.

"அந்த நினைவிலே இத்தனை வருடம் வாழ்ந்து விட்டேன். உங்கள் நினைவுகளே சுகமானதுதான். இதில் எந்தக் கஷ்டமும் இல்லை..." எனக் கூறி முடிக்க,

தன் மேல் இவ்வளவு நம்பிக்கையும் காதலும் வைத்திருக்கிறாளே என்று நினைத்ததுமே, எப்படி இந்த அன்பைத் திருப்பிக் கொடுக்கப் போகிறோம் என்று ஆயாசமாக இருந்தது.

சிறியவர்களைச் சாப்பிட அழைக்க, அவர்கள் அரட்டை அடித்தபடியே சாப்பிட்டு முடிந்ததும், எல்லோரும் கலந்து பேசி நிச்சயத் தேதியை முடிவு செய்ததும், "ஷைலுவுக்கு எப்போ திருமணம் செய்யப் போறீங்க? ஏதாவது ஐடியா இருக்கா?" என மெதுவாக மகாலக்ஷ்மி ஆரம்பிக்க,

சுஜாதாவுக்கு ஆசையிருந்தாலும், "எப்படி திடீரென்று சொல்வது... சஞ்சய் மனசில் என்ன இருக்குன்னு தெரியாதே!" என அமைதியாகக் கணவர் முகத்தை நோக்கினார்.

"முதலில் சுரேஷின் கல்யாணத்தை முடித்து விட்டுத் தான் யோசிக்கணும்..." என்று சுருக்கமாக முடித்துவிட, மஹாவும் அதுவும் சரியென்றே விட்டுவிட, எல்லோரும் கிளம்பியதும் இரண்டு ஜோடிகளும் ஏக்கத்துடன் பிரியா விடை கொடுத்தார்கள்.

லாவண்யாவுக்கு அவர்களைப் பிடித்திருந்ததால் விச்ராந்தியாக இருக்க, சஞ்சயும் ஒரு வகையில் நிம்மதி யாக இருக்க, சுஜாவுக்கு மட்டும் மனதில் கார்த்திக்கே வந்து நின்றான்.

சஞ்சயிடம் கார்த்திக்கைப் பற்றிப் பேச வேண்டும் என்று நினைத்தவர், வீடு வந்து சேர்ந்ததும் தனிமையில், "அவங்க பையன் கார்த்திக் பற்றி என்ன நினைக்கிறீங்க?" என்று மெதுவாக ஆரம்பிக்க, சஞ்சய் மனைவியை விநோதமாகப் பார்த்தார்.

"என்ன ஆச்சு சுஜா, திடீரென்று கேட்கிறே?" என்று சிரிக்க...

"ம்ச்ச்... சொல்லுங்களேன்..." என்றார் அவரின் சகதர்மினி.

"ம்ம்... நல்ல பையன். அழகா இருக்கான். புத்திசாலியாவும் இருக்கான். இந்தச் சின்ன வயசிலே இந்த அளவுக்கு அச்சீவ் செய்திருக்கான்..." என்றவர், "ஆமா, இதை ஏன் இப்போ கேட்கிறாய்?" என்றார் கேள்வியாக.

"நம்ம ஷைலுவுக்குக் கார்த்திக் பொருத்தமா இருப்பானோன்னு ஒரு ஆசை. அவங்களைக் கேட்டுப் பார்த்தால் என்ன?" என்று இழுத்தார் தயக்கத்துடன்.

"நீ ஆசைப்படறது சரிதான் சுஜா. ஆனால் இன்னும் சுரேஷின் கல்யாணம் முடிவாகாத நிலையில் நாம் நம் பெண்ணை அவர்கள் பையனுக்குக் கொடுப்பது பற்றிப் பேசுவது தப்பு. அது மட்டுமில்லை. அந்தப் பையன் கைக்கு எட்டாத உயரத்தில் இருக்கிறான்.

"அவன் மனதில் வேறு யாராவது இருந்தால் என்ன செய்வாய்? நாம் நம் பெண்ணின் மனதில் ஆசையை வளர்த்து விட்டு அதன் பிறகு எதுவும் நடக்கவில்லை யென்றால்... வேண்டாம் சுஜா. போதும் அவள் அனுபவிக்கிற துன்பங்களே போதும். இந்தப் பேச்சை இதோடு விட்டுவிடு. ஷைலுவுக்கு யார்னு ஆண்டவன் முடிச்சுப் போட்டிருக்கிறானோ அவன் தன்னாலே தேடி வருவான்.

"கவலைப் படாதே. நம் ஷைலுவின் குணத்திற்கு நல்ல பையன் கிடைப்பான். அதுவரைக்கும் அவள் கொஞ்சம் நிம்மதியாக இருக்கட்டும். அதன் பிறகு முடிவு செய்யலாம்..." என முடித்துவிட, சுஜாவுக்கு அவர் சொன்னது சரியென்றே தோன்ற... அதோடு அந்தப் பேச்சையே எடுக்கவில்லை.

ஆனால் கார்த்திக்கோ ஷைலு வீட்டை அடைந்த அரை மணி நேரத்திலே ஏக்கத்துடன் கால் செய்து விட, "என்னாச்சு கார்த்திக்! இப்போதானே பார்த்துப் பேசினோம். அதற்கு என்ன போன்?" என,

"ம்ச்... ஷைலு! நீ கிளம்பினதும் மனது என்னமோ மாதிரி ஆகிவிட்டது. திரும்ப எப்போ பார்ப்போம் என ஏங்குது..." என்று அவன் குரல் ஏக்கத்தில் தத்தளித்தது.

ஷைலுவுக்கும் அவன் பக்கத்திலே இருக்க வேண்டும் என்று ஆசை இருந்தாலும் அதை வெளிக் காட்டி விடாமல், "சுரேஷ் - திவ்யா நிச்சயத்தில் சந்திப் போமே... அப்புறம் என்ன கார்த்திக்? போதும் போதும்... நான் பக்கத்தில் வந்தாலே சும்மா இருக்க மாட்டேன் கிறீர்கள்... உங்களைப் பார்க்காமல் இருந்தால்தான் சரிப்படும்..." என்று சற்றுக் கேலியாகவும், சற்று உண்மை யாகவும் கூற,

"நீ மட்டும் என்னைப் பார்க்க வராமல் இருந்தாய்... நான் அங்கு வந்துவிடுவேன். என்ன டீல் ஓ.கே.வா?" என்றான் கொஞ்சலாக.

"ஓ... தாராளமா வாங்களேன். ஆனால் நீங்க வந்தால் நான் உங்கள் முன்னால் வரமாட்டேனே... என் அப்பாவிடம் எப்படி கேட்பீங்க? என்னை எப்படிப் பார்ப் பீங்க?" என்று குழந்தை மாதிரி கேட்டு சிரிக்க,

"ம்ம்... நான் கஷ்டப்படுறது உனக்குச் சிரிப்பா இருக்கு. பார்க்கலாம் எத்தனை நாளைக்கு இந்தக் கண்ணாமூச்சி ஆட்டம்? எப்படி இருந்தாலும் ஒரு நாள் முடிவுக்கு வந்துதானே ஆகும்..." எனச் சீண்ட,

என்னமோ அவனைச் சீண்டினாலும் கார்த்திக்கைப் பார்க்காமல் தன்னால் இருக்க முடியுமா என்பதே பெரிய கேள்விக்குறியாக இருந்தது.

"ஏன் ஷைலு, நான் இப்படி என் உணர்வுகளை உன்னிடம் வெளிப்படையாகக் கொட்டுகிறேனே... நீ அந்த

மாதிரி ஒரு நாளும் சொன்னதில்லையே! உன்னை நேரில் பார்த்துப் பேசி விட்டுப் பிரிந்தால் என் உயிரே என்னிடம் இருந்து பிரிந்து போகிற மாதிரி இருக்கு. ஆனால் நீ அந்த மாதிரி உணர்ந்திருக்கிறாயா?" என்ற வனின் குரல் தாபமாகத் தத்தளிக்க,

"ம்க்கும்... எங்கே... நான்தான் உன்னிடம் புலம்பிக் கொண்டிருக்கிறேன் போலிருக்கிறது. சரியான அழுத்தக் காரி ஷைலு நீ..." என்றான் குறையுடன்.

கார்த்திக் சொன்ன மாதிரி அவனின் அருகாமையை மனம் விரும்பினாலும், இப்போது முடியாத நிலைமையில் அதை நினைத்துப் பிரயோஜனமில்லை என்பதால் அவ ளின் ஆசைகளை மனதிலே புதைத்துக் கொண்டிருந் தாள்.

கார்த்திக் வெளியே சொல்லிவிட்டான். ஆனால் நான் ஒரு பெண்... எப்படி வெட்கத்தை விட்டு வெளியே சொல்ல முடியும் என உள்ளுக்குள்ளே மறுகித் தனக் குள்ளே உழன்று கொண்டிருந்ததால், கார்த்திக் சொன் னதைக் கவனிக்கவில்லை.

நினைவு கலைந்து, "சொல்லுங்க கார்த்திக்!" என வும்,

"என்னாச்சுடா... சத்தமே இல்லையே! நான் உன்னைக் கூப்பிட்டுக் கொண்டே இருக்கிறேன். நான் ஏதும் தப்பா சொல்லிட்டேனா...?" என்றவனின் குற்ற உணர்வைப் போக்கி,

"ச்சே... ச்சே... நத்திங்..." என்று சமாளித்தவள், "திவ்யா அப்பா அம்மா ஊரிலிருந்து எப்போ வர்றாங்க?" எனப் பேச்சை மாற்றினாள்.

"அடுத்த வாரம் வரேன்னு சொல்லியிருக்காங்க. அவர்களுக்குத் திவ்யா திருமணத்தை சீக்கிரம் முடித்துவிட வேண்டும் என்ற எண்ணம்தான். என் மாமனார்தான் சொல்லிட்டாரே... அவர்கள் வந்து தேதி குறிக்கட்டும்னு... அதனால் நாங்களும் அதற்குத்தான் காத்திருக்கிறோம்..." என,

"சரி கார்த்திக். மணியாச்சு. நாளை காலேஜ் போகணும். குட் நைட்..."' என்று பேச்சை முடிக்க நினைக்க,

"ஷைலு, நாளை காலேஜ் வந்து உன்னைப் பார்க்கலாமா? அதற்கு அனுமதி தருவாயா?" என்றான் கொஞ்சலாக.

"ஆஹா... கார்த்திக் சார் என் அனுமதி இல்லாமல் என்னைப் பார்த்ததே இல்லை... அப்படிங்களா சார்!" எனக் கேலி செய்ய,

"ஷைலு, யூ ஆர் சோ இம்ப்ரூவ்மென்ட். ம்ம்ம்... பட் ஐ லைக் இட். இதே மாதிரி இருந்தா என்ன...! ஏன் அடிக்கடி அமைதியா ஆயிடறே!" என்றவன், "ஓ.கே. ஓ.கே. நீ நாளை காலேஜ் போகணும் இல்ல... ஓ.கே. குட் நைட்!" எனப் போனை வைக்க, ஷைலுவும் சிரித்துக் கொண்டே வைத்தாள்.

சிபி வீட்டில்...

மனைவியிடம் சொன்ன மாதிரி விஜயகுமார் மகனின் மருத்துவ ரிப்போர்ட்ஸைத் தனக்குத் தெரிந்த ஒரு பெரிய டாக்டரிடம் காட்டித் தன் சந்தேகங்களைக் கேட்க, அவரும் அதையேதான் உறுதிப்படுத்த... அவரின் உள்ளம் நொந்து போனது, மகனின் உடல் நிலையை நினைத்து.

தேன்மொழியோ தரகர் மூலம் வந்த பெண்களைக் காட்டி, சிபியிடம் அனுமதி கேட்க, அவனோ எல்லாவற் றையும் தட்டிக் கழிக்க, தேன்மொழியின் கோபம் எல்லை மீறியது.

"வேண்டாம் சிபி. நீ கல்யாணமே செய்துக்க வேண்டாம். நீ இப்படியே இரு. நானும் உன் அப்பாவும் எங்க பிள்ளைக்குக் கல்யாணமே ஆகலையேங்கிற கவலையிலே கொஞ்சம் கொஞ்சமா உயிரை விட்டுட றோம்..." என்று அங்கிருந்து எழுந்து செல்ல, தாயின் கையைப் பிடித்துச் சோபாவில் அமர்த்தினான்.

"சாரி மாம்... நான் இனி கல்யாணமே வேண் டாம்னு சொல்ல மாட்டேன். உங்க இஷ்டப்படியே பெண் பாருங்க. பட் ஒன் கண்டிஷன். பெண் என் மனசுக்குப் பிடித்திருந்தால்தான் சம்மதம் சொல்வேன்..." என்று கொஞ்சலாகச் சொல்வதைக் கேட்டு, அந்த அப்பாவி தாய் அகமகிழ்ந்து சம்மதமாகத் தலையசைக்க...

மகனோ, அப்பாடா தப்பித்தோம்... என்று நிம்மதி யாகப் பெருமூச்சு விட்டான்.

பள்ளி சுற்றுலாவில் இருந்து திரும்பி வந்த விக்கி யிடம், நடந்த விஷயத்தைக் கூற, அவனுக்குமே பெரும் நிம்மதி. "எப்படியோ உன் ஆசைகள் நிறைவேறும் நாள் கூடிய சீக்கிரமே வரப் போகுது. அட்வான்ஸ் கங்கிராட்ஸ்..." என்று கைகுலுக்கிச் சிரித்தவன், "நம்ம வீட்டு ஹிட்லர்ஸ் தேனிலவிலிருந்து எப்போ வர்றாங்க?" என்று இழுக்க,

அவனின் அந்த தேனிலவு என்ற வார்த்தையை இழுத்த விதம்... ஷைலுவுக்குச் சிரிப்பாக இருந்தது.

"ஏன் விக்கி, இப்படி கிண்டல் செய்கிறாய்? பாவம் விடு. எப்படியோ நன்றாக இருந்தால் சரி..." என்றான் பெருந்தன்மையுடன்.

"நீ வேற ஷைலுக்கா! அவங்க என்னமோ நிம்மதி யாத்தான் இருப்பாங்க. ஆனால் பாவம் ரெண்டு அத்தானும், என்ன பாவம் செய்தார்களோ... இவர் களுக்குப் புருஷனா ஆயிட்டாங்க... ம்ம்..." என்று பெரு மூச்சுவிட,

ஷைலு அவன் தலை செல்லமாகக் கலைத்து, "ரொம்ப வாய் அதிகமா ஆயிடுச்சு விக்கி உனக்கு?" என்று சிரித்தாள்.

அடுத்த வாரத்திலே திவ்யாவின் பெற்றோர் ஊரிலிருந்து வந்துவிட, மாப்பிள்ளையைப் பார்க்க வேண்டும் என்றதால் மகாலக்ஷ்மி அவர்களை அழைத்துக் கொண்டு ஷைலுவின் வீட்டிற்கு வர, அவர்களுக்கும் சுரேஷைக் கண்டு திருப்தியாக இருந்தது.

சஞ்சயிடம் பேசி நிச்சயதாம்பூலம் தேதியைக் குறித்து விட்டுச் செல்ல... சஞ்சய் மாப்பிள்ளைகளுக்குப் போன் செய்து விஷயத்தைக் கூறினார்.

இரண்டு ஜோடிகளும் தேனிலவிலிருந்து திரும்ப... நல்லிக்குச் சுரேஷுடன் ஷைலுவுக்குக் கல்யாணம் முடிவாகவில்லை என்று தெரிந்ததுமே மிகவும் சந்தோஷ மாக இருந்தது.

சதுவுக்குக் கல்யாணம் ஆனதும் ஷைலுவைப் பற்றி அவள் யோசிக்கவும் இல்லை. நினைக்கவும் இல்லை. அவளை விட்டுப் பிரியப் போகிறோமே... அப்புறம் எதுக்கு அவளை நோகடிக்கணும் என்று அவளை எதுவும் சொல் லாமல் இருந்தாள்.

ஆனால் நல்லியால் அப்படி விடமுடியவில்லை. தங்கையை எப்பொழுதும் கண் கொத்திப் பாம்பாகக் கவனித்துக் கொண்டே, தேள் கொடுக்கு போல கொட்டி னாள். சமயம் கிடைக்கும்போதெல்லாம், நல்லியின் செயலால் ஷைலுவின் மனம் மீண்டும் சோர்ந்துவிட வாழ்க்கை அலுப்பாக இருந்தது. அந்தச் சமயம் ஆகாஷ் குடும்பத்துடன் ஊர் போயிட்டு வரலாமா?" என்றான் மாமனாரிடம் ஆவலாக.

பதில் சொல்லாமல் தயங்கிய மாமனாரிடம், "எனக்கு இன்னும் ஒரு மாதம்தான் இருக்கிறது. அப்புறம் நாங்கள் கிளம்பி விடுவோம். அதற்கு முன் எங்கேயாவது போயிட்டு வந்தால் நன்றாக இருக்கும்..." என்று மீண்டும் வற் புறுத்த...

தயக்கத்துடன், "உங்க இஷ்டப்படியே போகலாம். முதலில் சுரேஷ் நிச்சயம் முடியட்டும். அதன் பிறகு போகலாம். ஷைலுவுக்கும் ஃபர்ஸ்ட் செமஸ்டர் முடிந்து விடும். அவளும் கொஞ்சம் ஃப்ரீயாகி விடுவாள். அப்போது போகலாம்..." என்றவர், சம்மதம் கேட்டு மனைவியின் முகத்தை நோக்கினார்.

சுஜாவுக்குப் போக ஆசையிருந்தாலும் நல்லியின் கூடவா... அதுவும் ஷைலுவை அழைத்துக் கொண்டா? இவள் ஷைலுவை மறுபடியும் கொத்தி எடுக்க மாட்டாள்னு என்ன நிச்சயம்? என்று நினைத்தாலும், எல்லோர் முன்னாலும் சொல்ல முடியாமல் எதுவும் பேசாமல் எழுந்து சமையலறைக்குச் சென்று விட்டார்.

மனைவியின் மௌனத்தைப் புரிந்து அவரைப் பின்தொடர்ந்து வந்தவர், "என்ன சுஜா, கேட்டதற்குப் பதில் சொல்லாமல் போகிறாய்? உனக்கு இதில் இஷ்டமில் லையா?" என்னும்போதே,

சலனமில்லாமல் திரும்பி, "டூர் போவதைப் பற்றி எனக்கு ஆட்சேபனை இல்லை. ஆனால் அது நல்லி கூட என்னும்போதுதான் எனக்குப் பயமாக இருக்கு. ஷைலுவை இவர்கள் கூட அழைத்துச் சென்றால் நல்லி சும்மா இருப்பாளா?

"மாப்பிள்ளை முன்னால் ஷைலுவை ஏதாவது பேசி, அவள் மனதை நோகடித்தால் நான் சும்மா இருக்க

மாட்டேன். அப்புறம் நான் ஏதாவது சொல்ல வேண்டி வரும். பெரிய பிரச்சனை ஆகிவிடும். இதெல்லாம் இது தேவையா?" என்றார் அலுப்புடன்.

இவர்களின் பேச்சைக் கேட்டுக் கொண்டு உள்ளே வந்த ஆகாஷ், "நீங்க பயப்படுவது எனக்குத் தெரியுது அத்தை. நல்லியும் சாதனாவும் அவர்கள் தங்கையை மிகவும் கொடுமைப்படுத்துவதைப் பற்றி நானும் கேள்விப் பட்டேன். நீங்கள் கவலைப்படாதீங்க. இனிமேல் அந்த மாதிரி நல்லி பேசுவதற்கு நான் விட மாட்டேன்.

"ஷைலு என் தங்கை மாதிரி. அவள் மனசு நோக நான் விடமாட்டேன். அதனால் நீங்க தைரியமாக எங்க கூட வரலாம். நான் இருக்கிறேன்..." எனத் தைரியமூட்ட,

சஞ்சய் அவன் கையைப் பிடித்துக் கொண்டார் நெகிழ்ச்சியாக.

"இதுவரைக்கும் ஷைலு நல்லி கூடவும், சது கூடவும் எங்கேயும் போனதில்லை. காரணம் பயம். அவளும் பெரிய பெண் என்கிற எண்ணம் இவர்களுக்கு வர வில்லை. தான் வயதில் பெரியவர்களாக இருக்கிறோம்கிற எண்ணத்தில் என்ன பேசுவது, ஏது பேசுவது என்ற வரைமுறை இல்லாமல் பேசி, அவள் மனதை நோகடித்துக் காயமாக்குவதால்தான் நாங்கள் இந்த அளவுக்கு யோசிக்கிறோம். இனி நீங்கள்தான் இதெல் லாம் தப்பென்று நல்லிக்குப் புரிய வைக்க வேண்டும்..." என்றார் வேண்டுதலாக.

"இரண்டு பேரும் கவலைப்படாதீங்க. ஒரு முறை அவள் வெளிநாட்டுக்குப் போய் விட்டு வந்தால் பாசம் என்றால் என்னவென்று தெரிந்து கொள்வாள். அது வரைக்கும் கொஞ்சம் பொறுமையாக இருங்க. கண்டிப்பாக நாம எல்லோரும் சுரேஷின் நிச்சயம் முடிந்ததும் ஒரு டூர் போய்விட்டு வரலாம். இடத்தை அப்புறம் முடிவு செய்து கொள்ளலாம்..." என்று முடிவாகக் கூற, பெரியவர்கள் இருவரும் ஒருமனதாக ஒத்துக்கொண்டார்கள்.

அந்த வாரத்தில் சுரேஷும், லாவண்யாவும் சென்னையிலிருந்து வந்துவிட, கூடவே சில சொந்தங் களும் வர... வீடே விழாக் கோலமாக இருந்தது.

சுரேஷ் ஷைலுவுடன் நிச்சயதார்த்தப் புடவை, நகை என்று வாங்குவதில் பிசியாக இருந்தான்.

நல்லியும் ஆகாஷும் கனடா போவதற்குப் பாஸ்போர்ட், விசா என்று ரெடி செய்ய வேண்டி யிருந்ததால், நல்லிக்கு ஷைலுவை ஏதும் சொல்ல நேரமில்லாமல் போய்விட்டது. அதை விட ஆகாஷ், நல்லியை ஷைலுவிடம் எதுவும் பேச விடாமல் பார்த்துக் கொண்டான் என்றுதான் சொல்ல வேண்டும்.

அவன் சஞ்சயிடம் வார்த்தையில் மட்டும் சொல் லாமல், நல்லியிடம் அவ்வப்போது சொந்தத் தங்கை யிடம், நீ பேசும் முறை தவறு என்று எடுத்துக் கூறியது மில்லாமல்... அவன் நல்லியையே கவனித்துக் கொண்டி ருந்தாலும் நல்லி அடக்கியே வாசிக்க வேண்டியிருந்தது.

சதுவும், ஹரியும் அவர்களுடைய பாஸ்போர்ட், விசா என்று அலைந்ததால் யாரும் யாரையும் கண்டுகொள்ள வில்லை. லாவண்யா இந்தக் கோலத்தில் நல்ல விஷயத் திற்குப் புடவை, நகை வாங்க வரவில்லை என்பதால் சஞ்சய், சுரேஷிடம் பொறுப்பைக் கொடுத்து, ஷைலுவைக் கூட அனுப்பி வைத்தார்.

சுரேஷ், ஷைலு ஷாப்பிங் வரும்போது கார்த்திக், திவ்யாவை அழைத்து வருவதால் இரு ஜோடிகளுக்குமே பேச நிறைய நேரமும், தனிமையும் கிடைத்தது.

நிச்சய நாளும் வர, இதற்காக ஏற்பாடு செய்திருந்த கல்யாண மண்டபத்தில் அஞ்சலியும், ராஜனும் வந்தவர் களை உபசரிக்க, மஹாவும், விஸ்வநாத்தும் மற்ற வேலை களைக் கவனித்தனர்.

திவ்யாவுக்குப் புடவை எடுக்கும்போதே கார்த்திக், ஷைலுவுக்காக அவனுக்குப் பிடித்த ஆகாய நீலத்தில் லெமன் யெல்லோ பார்டர் போட்ட பரம்பரா பட்டு வாங்கிக் கொடுத்திருந்தான். அதைத்தான் கட்ட வேண்டுமென்ற சொல்லியிருந்ததால், ஷைலுவும் அதையே கட்டி அள வான ஒப்பனையோடும், நகைகளோடும் தலை நிறையப் பூவோடு ஒரு வான் தேவதை போல் இருக்க... அவளைப் பார்த்த கார்த்திக் யாருக்கும் தெரியாமல் கண்ணடித்து விட்டு, மயக்கம் வருவது போல நடிக்க, ஷைலு ரகசியமாக வெட்கப்பட்டுச் சிரித்தாள்.

மஹா அவளிடம் வந்து அவள் முகத்தைச் சுற்றி வழித்துத் திருஷ்டி எடுக்க... கார்த்திக் அவளையே பார்வையால் விழுங்கிக் கொண்டிருந்தான்.

பக்கத்தில் அமர்ந்திருந்த விஸ்வநாத் அவனை அடிக்கடி சீண்டிக் கொண்டே இருக்க, கார்த்திக்கிற்கு அவரைச் சமாளிப்பதே பெரிய விஷயமாக இருந்தது.

சுரேஷும் ரகசியமாகத் திவ்யாவைப் பார்க்க, திவ்யாவும் சுரேஷைப் பார்க்க... மற்ற எல்லோரும் அவர்கள் இரண்டு பேரும் வழிவதைப் பார்த்துத் தனக்குள் சிரித்துக் கொண்டனர்.

சஞ்சய்யும், ராஜனும் இருவரும் தட்டை மாற்றிக் கொண்டு ஒரு மாதம் கழித்துத் திருமணத் தேதி குறிக்கவும், எல்லோருக்கும் திருப்தியாக இருந்தது.

திவ்யாவுக்குச் சுரேஷ் வைர மாலையை அணிவிக்க, திவ்யா சுரேஷுக்கு வைர மோதிரமும் பிரேஸ்லெட்டும் அணிவிக்க, எல்லோரும் கை தட்டி வாழ்த்த... இனிதே நிச்சயம் நடந்தேறியது.

சுரேஷ் திவ்யாவை அழைத்துக் கொண்டு, அறைக் குள் சென்று விட, விருந்தினர்களைச் சாப்பிட அழைத்துச் சென்றார்கள் விஷ்வநாத்தும், ராஜனும்.

விருந்து பஃபே சிஸ்டம் என்பதால், வெஜிடேரி யனும், நான்-வெஜிடேரியனும் தனித்தனியாக வைத்தி ருக்க, எல்லோரும் அவரவருக்கு வேண்டியதை எடுத்துப் போட்டுப் பேசிக்கொண்டே சாப்பிட, கார்த்திக், தனக்கு வேண்டியதை எடுத்துக் கொண்டு, ஷைலுவின் அருகில் வந்து அமர, விஷ்வநாத்தும் அவர்கள் அருகில் அமர்ந்து பேசிக்கொண்டே சாப்பிட, யாருக்கும் எந்தவிதச் சந்தேக மும் தோணவில்லை.

சிறிது நேரத்திலே விக்கியும், சுரேஷும், திவ்யாவும் வந்து சேர, அங்கு அரட்டைக் கச்சேரி ஆரம்பமானது. நல்லி, சது இருவரும் தத்தம் கணவர்களோடு தனியாக அரட்டை அடித்தபடி சாப்பிட்டுக் கொண்டிருந்தாலும், நல்லியின் கண்கள் ஷைலுவையே தொடர்ந்தது வன்ம மாக.

அஞ்சலி, ஷைலுவைக் காட்டி யாரென்று கேட்க, லாவண்யா பக்கத்தில் அமர்ந்திருந்ததால் வெறுமே சஞ்சய் யின் பெண் என்று அறிமுகப்படுத்தி விட்டு, அப்புறம் சொல்கிறேன் என்று சைகை செய்ய, அவரும் புரிந்து கொண்டு மேற்கொண்டு எதுவும் கேட்கவில்லை.

எல்லோரும் சாப்பிட்டு முடிந்ததும்... ஷைலு, லாவண்யா பக்கத்தில் அமர்ந்து அவருடன் பேசிக் கொண் டிருக்க, கார்த்திக் தனியாக ஷைலுவிடம் பேச முடியாமல் தவித்தான்.

மஹாவிடம், "அம்மா ப்ளீஸ்... நான் ஷைலுவிடம் பேச வேண்டும். நீங்கள் ஏதாவது செய்ய வேண்டும்!" என்று கெஞ்ச, பெரியவர் சிரித்து,

"டேய் கண்ணா... நான் உன் அம்மாடா, என்னைப் போய் இந்த மாதிரி வேலையெல்லாம் செய்யச் சொல்ல லாமா?" என்று செல்லமாக அவன் தலையைக் கலைக்க, அவர் கையைத் தடுத்தான்.

"ஆனால், நீங்க எனக்கு அம்மா மாதிரி இல் லையே... ஒரு தோழி மாதிரிதானே இது வரைக்கும்

இருந்திருக்கீங்க. இப்போது மட்டும் என்னம்மா?" என்று ஒரு குழந்தை மாதிரி கெஞ்ச, இவர்களின் பேச்சில் இடை யிட்ட விஸ்வநாத்,

"மஹா... குழந்தை என்ன கேட்கிறது? குச்சி மிட்டாய் ஏதாவது வேண்டுமா...? நான் போய் வாங்கி வரவா?" என்று கார்த்திக்கைக் கலாய்க்க, மஹா சிரித்தார்.

சிரிப்புடன், "அவனுக்கு ஷைலுவிடம் தனியாகப் பேச முடியலையாம்... அதான் கேட்கிறான்!" என்றவர், "கண்ணா, என் செல்லம், கொஞ்சம் வெயிட் பண்ணு. நான் சித்திகிட்டே சொல்லி ஏதாவது செய்கிறேன்...!" என்றவர், அஞ்சலியை அழைத்து ஷைலுவை அழைத்து வரச் சொன்னார்.

அஞ்சலியிடம் ஷைலுவை அறிமுகப்படுத்தி, "இவள் தான் கார்த்திக்கின் எதிர்கால மனைவி!" என்று சிரித்துக் கொண்டே கூற, அஞ்சலியின் பார்வை ஷைலுவை ஆச்சரியத்துடன் அளவிட்டது.

"ரொம்ப அழகா இருக்கேம்மா... பெயரும் உன்னை மாதிரியே அழகாக இருக்கிறது. எங்க கார்த்திக்குக்கு ஏற்ற பெண்தான்!" என்றவர், மகன் பக்கம் திரும்பி, "டேய் திருடா, நீ இந்த மாதிரி வேலையெல்லாம் செய்வாய்னு தெரியாமல் போய் விட்டதே! பெண்களைப் பார்த்தாலே வெறுத்து ஓடுவாய்... நீயா இப்போ காதலிக்கிறாய்...? என்னால் நம்பவே முடியவில்லை. உனக்குக் கல்யாணம் செய்து வைப்பதற்குள் அக்கா திணறுவாங்கன்னு நினைத்

தேன், ஆனால், ஷைலு அந்த வேலையைச் சுலபமாக்கி விட்டாள்!" என்று கார்த்திக்கின் வயிற்றில் செல்லமாகக் குத்தினார்.

"சித்தி... இவளைப் பார்த்து எனக்குக் காதலே வரவில்லை என்றால் அப்புறம் எனக்குக் கண்ணில்லை என்றுதான் அர்த்தம். இவள் அழகில் மட்டுமில்லை, நல்லா பாடுவாள், நல்லா சமைப்பாள், கவிதை எழுது வாள், அதே அளவுக்குப் பொறுமை!" என்றான் சிரிப்புடன்.

கார்த்திக்கின் பேச்சில் ஷைலுவின் முகம் சூடாகிச் சிவக்க, மஹாவும் அஞ்சலியும் ரசனையுடன் அவள் முகத்தை ரசிக்க, அவள் தலைகுனிந்து நிற்க, அஞ்சலி அவளை வாஞ்சையுடன் அணைத்துக் கொண்டார்.

"எனக்கு ஆச்சரியமாக இருக்கிறது அக்கா, கார்த்திக் ஒரு பெண்ணிடம் இப்படிக் கவிழ்ந்ததை நினைத்து. சரியான தேர்வுதான். நம்ம விஷ்வாமித்திரரையும் கவிழ்க்க ஒரு மேனகையாய் ஷைலு வந்து விட்டாள்னு சொல்லு. இப்பதான்டா புரியுது கார்த்திக், உன் பிசினெஸில் இந்த அளவுக்கு உயர்வதற்குக் காரணம் நல்ல ரசனை, அதே சமயம் சரியான கணிப்பு..." என்று கார்த்திக்கைப் பாராட்டி, ஷைலுவை அணைத்துக் கொண் டார்.

"அஞ்சலி... இவன் ஷைலுவிடம் தனியாகப் பேச முடியாமல் தவிக்கிறான். நீ ஷைலுவை வெளியே அழைத்துப் போ, கார்த்திக்கும் கூட வருவான். இல்லை யென்றால் பையன் அப்செட் ஆகி விடுவான்!" என்று

மஹா குறும்பாக அஞ்சலியிடம் கண்ணாடிக்க, அதைக் கவனித்து விட்ட மகன்,

"ம்மா... என்னிடமே சேம் சைட் கோல் போடறீங்க!" என்று செல்லமாக மிரட்டினான்.

"பாரு ஷைலு, எப்படி என்னை மிரட்டறான்னு...!" மஹா கேலியாகப் போட்டுக் கொடுக்க, அவர் கன்னத்தில் அழுத்தி ஒரு முத்தம் கொடுத்து, "என் செல்ல அம்மா இல்லை, இந்த மாதிரி எல்லாம் கிண்டல் செய்யக் கூடா தாம்!" என்று கொஞ்சவும், உடனே அஞ்சலி இடையிட்டார்.

"ஏம்ப்பா... உன் ஆளை எதிரில் வைத்துக் கொண்டு இப்படி அம்மாவுக்கு வாரி வழங்கினால், அப்புறம் ஷைலு வுக்கு அக்கா மேல் கோபம் வந்து விடப் போகிறது. அப்புறம் மாமியார் மருமகள் பிரச்சனை ஆரம்பித்து விடப் போகிறது!" என கேலியாக வம்பிழுத்தார்.

இவர்களின் கலாட்டாக்களைத் தாங்க முடியாமல் தலையைக் குனிந்து கொண்டு சிரிக்க, "சித்தி, நீங்க எவ்வளவுதான் அவளை வம்பிழுத்தாலும் ஜீரோ ரிசல்ட் தான். அவள் யாரிடமும் சண்டையும் போட மாட்டாள், சீண்டவும் மாட்டாள். ரொம்ப சைலன்ட்டான பொண்ணு!" என, அஞ்சலிக்கு மிகவும் ஆச்சரியமாக இருந்தது, இந்தக் காலத்தில் இப்படியும் பெண்ணா என.

அவர்கள் நால்வரும் கேலியாகப் பேசிச் சிரித்துக் கொண்டிருப்பதைக் கவனித்து சுஜா அவர்களை நோக்கி வரவும், ஷைலுவின் புன்னகை முகம் மறைந்து விட,

சிறிது நேரம் அவரும் அவர்களின் பேச்சில் கலந்து கொண்டவருக்கு, கார்த்திக் பக்கத்தில் நின்று கொண்டிருந்த ஷைலுவைக் கண்டதும்,

'கடவுளே! இது நிஜமான ஜோடியாக இருக்கக் கூடாதா...?' என்று மனம் ஏங்கியது.

'கல்யாணம் நல்லபடியாக முடியட்டும்... அப்புறம் மஹாவிடமே கேட்டு விட வேண்டியதுதான்!' என்று நினைத்துக் கொண்டிருந்தவரை, அஞ்சலியின் குரல் கலைத்தது.

"ஷைலுவை நான் கொஞ்சம் வெளியே அழைத்துப் போகலாமா சுஜாதா...?" என்று அனுமதி கேட்டவருக்குப் புன்னகையுடன் அனுமதி வழங்கியதும், அவருக்கு நன்றி சொல்லி விட்டு இருவரையும் அழைத்துக் கொண்டு அஞ்சலி நகர, சுஜா அவர்கள் இருவரும் ஜோடியாகச் செல்வதை ரசித்துக் கொண்டிருந்தார். மஹாவின் மனதில் சொல்ல முடியாத ஏக்கம். அதன்பிறகு இருவரும் பொது வாகப் பேசிக் கொண்டிருந்தாலும் இருவரையுமே தயக்கம் கட்டிப் போட்டது.

மஹாவுக்கு, மகனின் தவிப்புப் புரிந்தது. 'எப்படி ஷைலுவைப் பெண் கேட்பது? இப்போதுதான் திவ்யா வின் நிச்சயம் முடிந்து இருக்கிறது. இந்தச் சமயத்தில் நாம் ஷைலுவைப் பெண் கேட்டு, அதில் ஏதாவது குழப்பம் வந்தால் திவ்யாவின் திருமணம் பாதிக்கப்படுமே. அவளே ஐந்து வருடத்திற்குப் பிறகு இப்போதுதான் சந்தோஷமாக இருக்கிறாள். இந்த நிலையில் ஏதாவது குழப்பம் வந்தால்,

அது இருவரையும் பாதித்து விடும்!' என்று யோசித்துக் கொண்டிருக்க,

சுஜாவின் மனதில், 'எப்படி என் பெண்ணிற்கு உங்க பையனைக் கொடுங்கன்னு கேட்பது. நாம் அப்படிக் கேட்டு, இவர்கள் முடியாதுன்னு சொல்லி விட்டால், அப் புறம் சுரேஷிற்கு அசிங்கம், ஷைலுவையும் அசிங்கப் படுத்தின மாதிரி இருக்குமே! எப்படி இருந்தாலும் சஞ்சய் யிடம் ஒரு வார்த்தை கேட்காமல் நாம் எப்படிப் பேச முடியும். இவர்கள் ஷைலுவிடம் நல்லவிதமாகப் பழகிக் கொண்டிருக்கிறார்கள். அதை நாம் இப்படிப் போய் ஏதாவது கேட்டுக் கேவலப்படுத்த வேண்டாம்!' என்ற எண்ணங்கள் மனதில் ஓட, இருவருமே வெளியே பொது வான கதைகளைப் பேசிக் கொண்டிருந்தார்கள்.

அஞ்சலி, ஷைலுவுடன் வெளியே வந்த கார்த்திக், அவனின் ஹோன்டாசிட்டி காரை எடுக்க, மணக்குள விநாயகர் கோயிலுக்குப் போகச் சொல்லி விட்டு, ஷைலு வுடன் பின்னால் அமர்ந்தார். கோயிலை அடைந்ததும் அர்ச்சனைத் தட்டு வாங்கிக் கொண்டு மூவரும் நுழைந்து விநாயகருக்கு அர்ச்சனை செய்ய,

'எந்தப் பிரச்சனையுமில்லாமல் எப்படியாவது கார்த்திக்கிடம் என்னைச் சேர்த்து விடு!' என்று மனமுருக வேண்டி நிற்க, கார்த்திக்கும் அதையே வேண்ட, அஞ்சலி 'இரு ஜோடிகளின் கல்யாணமும் நல்லபடியாக நடக்க வேண்டும்!' என்று வேண்டிக் கொண்டு பிராகாரத்தைச் சுற்றி வந்து ஒரு ஓரமாக அமர்ந்தார்கள்.

சிறிதுநேரம் பேசிக் கொண்டிருந்துவிட்டு... "எனக்குக் கொஞ்சம் ஷாப்பிங் இருக்கு கார்த்திக்... நான் போய் விட்டு நேரே வீட்டுக்கு வந்திடறேன். நீங்க இருவரும் வீட்டுக்குப் போங்க. நான் வந்ததும் ஒன்றாக மண்டபத்துக்குப் போகலாம்!" என்றார் கடகடவென்று.

"ஏன் சித்தி... இப்போ என்ன ஷாப்பிங்? நாளைக்குப் போங்களேன்! இப்போ வீட்டுக்கு எங்க ளுடன் வாங்களேன்!" என்ற அக்கா மகனின் தலையைச் செல்லமாகக் கலைத்து,

"கார்த்திக்... சித்தி சொன்னால் கேட்கணும். நீங்க போங்க, ஒரு முக்கியமான பொருள் ஒன்று வாங்கணும். அதை வாங்கிக்கொண்டு வந்து விடுகிறேன்!" என்று சொல்லி விட்டு எழ,

கார்த்திக்கும், ஷைலுவும் அவருடன் எழுந்து வெளியே வந்ததும், அஞ்சலி ஆட்டோ பிடித்துச் செல்ல, இருவரும் கார்த்திக்கின் வீட்டுக்கு வந்தார்கள்.

ஹாலில் சோபாவில் ஷைலுவை அமரச் சொல்லி விட்டு உள்ளே சென்று இரண்டு பெப்சி டின் கொண்டு வந்து அவளிடம் ஒன்று கொடுத்து விட்டு, அவன் ஒன்று எடுத்துக் கொண்டு அவள் பக்கத்தில் அமர,

இருவரும் சிறிது நேரம் ஒன்றும் பேசாமல் அமைதி யாக இருந்தனர்.

சிறிது நேரம் கழித்து, "ஆன்ட்டி ஏன் அங்கிருந்தே போயிட்டாங்க கார்த்திக்...? முக்கியமான வேலை ஏதாவது

இருக்குமா? இல்லை, நமக்காக வெளியே போயிட்டாங் களா?" என்றாள் புரியாமல்.

சோபாவின் மேல் இரண்டு கைகளையும் போட்டுச் சாய்ந்து அமர்ந்து, கால் மேல் கால் போட்டுக் கொண்டு, "ஏதோ முக்கியமான வேலையாகத்தான் இருக்கும்... அவர்கள் வந்து ஒரு வாரம்தானே ஆகிறது. அதனால் பர்ச்சேஸ் செய்ய நிறைய விஷயம் இருக்கும்!" என்றான் யோசனையாக.

"கார்த்திக், எப்படி உங்க வீட்டில் எல்லோருக்குமே செல்லப் பிள்ளையாக இருக்கீங்க? யாருக்குமே கோபமே வராதா?" என்று அவன் பக்கம் திரும்பி அமர்ந்து கேட்க,

ஓர் மந்தகாசச் சிரிப்புடன், அவளின் தோள் மேல் கையைப் போட்டு அவளை அருகில் இழுத்து அணைத்துக் கொண்டே, "நான் எங்க குடும்பத்தில் ஒரே ஆண் பிள்ளை. என் சித்திக்கு திவ்யா மட்டும் தான். ரமணி அத்தை கல்யாணமே செய்து கொள்ளவில்லை. அவர்களுக்கும் நான்தான் பிள்ளை. அதனால் என் மேல் எல்லோருக்குமே பாசம் அதிகம். நம் கல்யாணம் நடந்த பின்னால் நீயும் எல்லோருக்கும் செல்லமாகி விடுவாய், பாரேன்!" என்றான் அவள் மூக்கைச் செல்லமாகப் பிடித்து ஆட்டி.

"ரமணி அத்தையா? அவங்க எங்கே இருக்காங்க? அவங்க ஏன் நிச்சயத்திற்கு வரவில்லை?" என்றாள் ஷைலு சந்தேகத்துடன்.

அப்போது தான் ஞாபகம் வந்தவனாக, "ஷைலு, உன்னிடம் சொல்ல மறந்து விட்டேனே... ரமணி அத்தை யார் தெரியுமா, உங்க காலேஜ் ப்ரின்சிதான்..." என்றதும், ஷைலு விலுக்கென்று நிமிர்ந்தாள்.

"ஆச்சரியமாக இருக்கா...? உன்னை முதன் முதலில் நான் பார்த்ததே அவங்களைப் பார்க்க வந்ததால் தான். அவங்க என் அப்பாவின் தங்கை. அவங்களுக்கு கல்யாணத்தின் மேல் நம்பிக்கை இல்லை. அதனால் தனியாகவே வாழ்ந்து வருகிறார்கள். ஆனால், அவர் களுக்கு இன்னும் தெரியாது நான் உன்னைக் காதலிக்கிற விஷயம். நீ அந்தக் காலேஜில் இருப்பதால் இப்போது வேண்டாம்னு தள்ளிப் போட்டிருக்கிறேன்.

"நம் கல்யாணம் முடிவானதும் அவர்களைக் கண்டிப்பாகக் கூப்பிடுவோம். இன்று அவர்கள் ஒரு வேலையாக வெளியூர் சென்றிருக்கிறார்கள். ஆனால், கல்யாணத்திற்கு வருவார்கள். நான் அம்மாவிடம் எது வும் சொல்ல வேண்டாம்னு சொல்லி வைத்திருக்கிறேன். அப்படியே திருமணத்திற்கு வந்தாலும் அவர்கள் நினைக்க ஒன்றுமே இல்லை. சரி, உன் படிப்பெல்லாம் எப்படிப் போகிறது? செமஸ்டர் ஆரம்பிச்சாச்சா...? எப்படிச் செய் திருக்கிறாய்?" என்றான் அக்கறையாக.

"ம்ம்... இன்னும் இரண்டு பாக்கி இருக்கிறது. இது வரைக்கும் நல்லா செய்திருக்கேன். இன்றிரவு கொஞ்சம் படித்தால் நாளை எக்ஸாம் நல்லா செய்து விடுவேன். ஏற்கெனவே படித்ததுதான்... ஜஸ்ட் ரிவிஷன் செய்தால் போதும்!" என,

"நான் உன்னை டிஸ்டர்ப் செய்து விட்டேனா? சாரிடா!" என்றான் ஏற்பட்ட குற்ற உணர்வுடன்.

"கமான் கார்த்திக், என்னை யாரும் டிஸ்டர்ப் பண்ண முடியாது. நான் எப்பவுமே எக்ஸாம் டைமில் படிக்கிற ஆள் இல்லை. ஒரு மாதம் முன்னமே எல்லாவற்றையும் ப்ரிபேர் செய்து வைத்து விட்டு, எக்ஸாம் டைமில் ரிவிஷன் பார்க்கிற மாதிரி வைத்துக் கொள்வேன். அதனால் மன்னிப்பெல்லாம் வேண்டாம்!" என்றாள், அவனின் கையைச் சிறையெடுத்து.

"ஷைலு, இந்தப் புடவை உனக்கு அழகா இருக்கு. தலை நிறையப் பூ... ம்ம்... ஆளை மயக்குது. சாதாரண மாகவே நீ ஆளை மயக்குகிற மாதிரிதான் இருப்பாய். இப்போது கேட்கவே வேண்டாம்!" என்று கூறிக்கொண்டே அவளை இழுத்து மடியில் போட்டுக் கொண்டு, அவளின் கையைப் பிடித்து அவள் விரல்களை நீவி, பாலிஷில் தோய்த்த நகங்களை ரசித்துக் கொண்டே,

"இந்த மாதிரி நகங்கள் வைத்தால் திவ்யாவிற்குப் பிடிக்காது. வெட்டி விடுவாள். இப்போது நான் அவளைக் கவனிக்கவில்லை. ஆனால் நீ அழகாக வளர்த்து பாலிஷ் போட்டிருக்கிறாய். உன் மெல்லிய விரலுக்கு நகம் வைத் திருப்பது இன்னும் அழகாக இருக்கிறது!" என்று சொல்லிக் கொண்டே அவளின் விரல்களுக்கு முத்தம் கொடுத்தவன், திடீரென்று, "என்னுடன் வா ஷைலு!" என, அவன் மடி யிலிருந்து எழுந்திருக்க, கார்த்திக் அவளை மாடிக்கு அழைத்துச் சென்றான்.

ஒன்றும் புரியாமல் அவனுடன் அவன் ரூமிற்குச் செல்ல, ஒரு பெரிய பார்சலை அலமாரியிலிருந்து எடுத்து அவளிடம் கொடுத்துப் பிரித்துப் பாரென்று சொல்ல, கேள்விக் குறியுடனே பிரித்தாள்.

உள்ளே மூன்று மைசூர் சில்க் சாரியும், மேக்கப் செட் ஒன்றும் இருந்தது.

"இது, நான் பெங்களூர் போனபோது உனக்காக வாங்கியது. நீ சென்னையிலிருந்து வந்தபோது உன்னைப் பார்த்த சந்தோஷத்தில் கொடுக்க மறந்து விட்டேன். இப்போது உன் நகங்களைப் பார்த்தபோது ஞாபகம் வந்துவிட்டது!" என்று கூறி, "உனக்குப் பிடித்திருக்கிறதா ஷைலு?" என்றான் ஆவலாக.

"நல்லா இருக்கு கார்த்திக்... ஆனால், இதெல்லாம் எதற்கு? நான் எத்தனை முறை சொல்லியிருக்கிறேன், எனக்கு இதில் எல்லாம் ஆசையில்லை. ஏற்கெனவே கொடுத்த புடவையையே என்னால் எடுத்துச் செல்ல முடியவில்லை. இப்போதுகூட நீங்கள் வாங்கிக் கொடுத்தது தான் கட்டியிருக்கிறேன். போதாது என்று இது வேறவா...? ப்ளீஸ் கார்த்திக், எனக்கு வேண்டாம்!" என மறுத்தாள்.

அவள் மறுத்ததும் மனம் வாடியவனாக, "ஏன் ஷைலு... நான் உனக்கு வாங்கித் தரக் கூடாதா? இதெல்லாம் ஒன்றுமில்லை... எனக்கு ஷோ கேசில் நகையோ புடவையோ எது பார்த்தாலும் உனக்காக வாங்க ஆசையாய் இருக்கும். ஆனால், நீ ஏற்றுக்

கொள்ள மாட்டாய் என்றுதான் என் ஆசையை அடக்கிக் கொள்வேன். எனக்குக் கஷ்டமாக இருக்கிறது. நான் வாங்குவது பிடிக்கவில்லை என்றால், நீ என்னை அந்நிய னாய் நினைக்கிறாய்... அப்படித்தானே!" என்றான் சிறு மனத்தாங்கலுடன்.

"ஓ... கார்த்திக்... நான் அப்படிச் சொல்லவில்லையே! நீங்கள் திருமணம் முடிந்த பிறகு எது வாங்கிக் கொடுத் தாலும் என் கணவர் என்ற முறையில் எனக்கு ஒன்றும் தோன்றாது. ஆனால், இப்போது கொடுத்தால் எனக்கு வாங்கிக் கொள்ளக் கூச்சமாக இருக்கிறது. இதுவரைக் கும் நான் உங்களுக்கு எதுவும் செய்ததில்லை. எனக்கே ஒரு மாதிரியாய் இருக்கிறது. உங்கள் ஆசை எனக்குப் புரியாமல் இல்லை. ப்ளீஸ்... புரிந்து கொள்ளுங்களேன்!" என்றாள் மன்றாடலாக.

அவளின் தன்மான உணர்வு அவனுக்குப் புரிய, அவளின் எதிரே நின்று தோளின் மீது இரண்டு கையை யும் வைத்து அவள் கண்களை ஊடுருவி,

"ஹலோ மேடம், நீங்க என்ன நினைக்கிறீங்கன்னு தெரியுது. நீ எனக்குக் கொடுத்ததை விட நான் உனக்கு இதுவரைக்கும் கொடுத்ததில்லை தெரியுமா? புரிய வில்லை...? நீ வருவதற்கு முன் என் வாழ்க்கையில் சந்தோஷம் இருந்தது. ஆனால் எக்ஸ்ட்ரீம் சந்தோஷத்தை நான் அனுபவித்தது இல்லை. அதை உன்னைப் பார்த்து உன் காதல் எனக்குக் கிடைத்த பிறகுதானே அனுபவிக் கிறேன்.

"என்னாலும் கல்யாணம் செய்து கொள்ள முடியுமா என்ற கேள்வி என்னுள் இருந்தது. இப்போது நம் திருமணம் எப்போது நடக்கும் என்று ஒவ்வொரு நிமிட மும் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறேன். ஏன் தெரியுமா? என் மனதில் சிறு புள்ளியாய் வந்தாய். ஆனால், இப் போது ஆலமரமாய் வளர்ந்து எனக்கு மூச்சு முட்டுகிற அளவிற்கு உன் காதல் என்னுள்ளே வளர்ந்திருக்கிறது. இந்தச் சந்தோஷம் என் வாழ்க்கையை அர்த்தமுள்ளதாக மாற்றி யதற்கு நான் என்ன கொடுத்தால் தகும், சொல்.

"நான் உனக்குக் கொடுப்பது எல்லாம் வெறும் பொருள். ஆனால், நீ எனக்குக் கொடுத்த காதலுக்கு விலையே இல்லை. அப்படியே நீ எனக்கு ஏதாவது கொடுத்துத்தான் ஆக வேண்டும் என்று அடம் பிடித்தால், நான்கு மாதம் கழித்து என் பிறந்த நாள் வருகிறது... அப்போது கொடு. பட் ஒன் கண்டிஷன். ஐ வில் நெவெர் அக்செப்ட் மெட்டிரியல் திங்க்ஸ். யூ ஷூட் கிவ் மீ வாட் ஐ வாண்ட். சோ யூ வில் பீ ப்ரிபேர் ஸ்பெஷல் கிப்ட் ஃபார் மீ..." என்றான் குறும்பாக.

ஷைலுவுக்கு ஒன்றும் புரியவில்லை.

'மெட்டீரியல்ஸ் திங்க்ஸ் வேண்டாம் என்றால் என்ன கொடுப்பது?' என்று குழம்பி அவனிடமே கேட்க, மர்மமாகச் சிரித்துக் கொண்டே,

"வீட்டில் போய் நிதானமாக யோசி. இன்னும் இரண்டு மாதம் இருக்கு. சோ, இப்போது உன்னைப்

போட்டுக் குழப்பிக்காதே. நிதானமாக யோசி. ஓ.கே...?" என, ஒன்றும் புரியாமலே தலையை உருட்டினாள்.

அவள் இன்னும் குழப்பத்தில்தான் இருக்கிறாள் என்று புரிந்து சிரித்துக் கொண்டே, "இந்தப் பட்டுத் தலையைப் போட்டுக் குழப்பிக் கொள்ளாதே. நிதானமாக எக்ஸாம் முடிந்த பிறகு யோசி!" என, அசடு வழிய சரி என்றாள்.

"சரி, இந்தத் திங்சை எல்லாம் அலமாரியிலே எடுத்து வைக்கிறேன், நீ இந்த வீட்டு மஹாராணியாக வந்த பிறகு எடுத்து யூஸ் பண்ணு...!" என்றவன், எல்லாவற்றையும் எடுத்து வைத்து விட்டு, அவளை அழைத்துக் கொண்டு கீழே வந்தான்.

மீண்டும் சோபாவில் அமர்ந்து, "காயத்ரி எப்படி இருக்காங்க ஷைலு, அவங்களைப் பார்த்து ரொம்ப நாள் ஆகி விட்டதே!" என்று விசாரிக்க,

"நல்லா இருக்கா... அவளுக்குக் கல்யாணம் முடிவா யிடுச்சு. அவளுக்கு ஏற்கெனவே நிச்சயம் அவள் மாமா வோடு ஆகி விட்டது. அடுத்த மாதம் அவளுக்குக் கல்யா ணம். அதனால் கொஞ்சம் பிஸியாக இருக்கிறாள். அவள் மாமா சிங்கப்பூரில் இருக்கிறார். அவர் சிங்கப்பூர் சிட்டிசன். அதனால் காயத்ரி திருமணம் முடிந்ததும் சிங்கப்பூர் போய் விடுவாள்!" என்றாள்.

"வாவ் நைஸ், சந்தோஷமான விஷயம். ஆனால், சின்னதாக ஒரு வருத்தம் இருக்கு ஷைலு எனக்கு!" என,

"என்ன கார்த்திக் உங்களுக்கு வருத்தம்?" என ஆச்சரியமாக,

"இதுவரைக்கும் காயத்ரி உனக்கு நல்ல துணை யாய் இருந்தாங்க. அவங்களும் போய் விட்டால், நம் கல்யாணம் வரை நீ எப்படி தனியாக சமாளிப்பாய்னு நினைத்தேன். அதுதான் வருத்தமாக இருக்கிறது ஷைலு!" என்றதும்,

'கார்த்திக்கின் எண்ணங்கள் எப்போதும் நம்மைச் சுற்றியே இருக்கிறதே!' என ஆயாசத்தில் எதுவும் சொல் லாமல் அமர்ந்திருக்க, ஷாப்பிங் முடிந்து அஞ்சலி வந்தார்.

உள்ளே வந்தவர், நேரே பூஜை அறைக்குச் சென்று வெள்ளித் தாம்பூலத் தட்டோடு வர...

அதில் பட்டுப் புடவையும் ஒரு நகைப் பெட்டியும் கொஞ்சம் பூவும் இருக்க,

அதை ஷைலுவிடம் நீட்டி, "இதை வாங்கிக்கோ ஷைலு. எனக்கு நீ ஒருத்தி இருக்கிறாய் என்று தெரியாது. அதனால் எதுவும் உனக்காக வாங்கி வரவில்லை. அதான் இப்போது வாங்கி வந்தேன்!" என்றார் வாஞ்சையுடன்.

ஷைலு அதை வாங்காமல், அதிலிருந்த கொஞ்சம் பூவை மட்டும் எடுத்துக் கொண்டு, "இது போதும் ஆன்ட்டி. மற்றதெல்லாம் வேண்டாம், ப்ளீஸ்!" என மறுக்க,

"நீயாவது வாங்கிக்கச் சொல்லேன் கார்த்திக்!" என அவனைத் துணைக்கழைத்தார்.

சித்தியின் பேச்சைக் கேட்டு எழுந்து இரண்டு பாக் கெட்டிலும் கையைக் விட்டு கொண்டு கார்த்திக் கடகட வெனச் சிரிக்க,

அஞ்சலி புரியாமல் பார்க்க, ஷைலுவும் பரிதாபமாய் விழித்தாள்.

அவன் சிரிப்பை அடக்கி, "சித்தி... அவள் வாங்கிக்க மாட்டாள். அவளுக்கு இதெல்லாம் பிடிக்காது. நானும் எவ்வளவோ ட்ரை செய்து பார்த்து விட்டேன். இவ்வளவு நேரம் ஒரு பெரிய பிரசங்கமே நடந்தது. மறுபடியுமா...?" என்று மீண்டும் சிரிக்க ஆரம்பித்தான்.

"ஏம்மா ஷைலு, இந்த ஆன்ட்டி வாங்கித் தந்தால் வாங்கிக் கொள்ள மாட்டியா? நீயும் என் பெண் மாதிரி தானே? உங்க கல்யாணம் நடக்கும்போது நான் இங்கிருக் கேனோ? இல்லையோ? அதனால் இப்போ நான் கொடுப் பதை வாங்கிக் கொள்ளேன்!" என, அவளின் பார்வை கார்த்திக்கை நோக்கித் தாவியது.

"அவங்க ஆசையாய் கொடுக்கிறாங்க, வாங்கிக்கோ ஷைலு!" என, அதற்கு மேல் மறுக்க முடியாமல், தட்டை வாங்கிக் கொண்டு அவர் கால்களில் பணிந்து ஆசிர் வாதம் வாங்க, அஞ்சலி அவளை எழுப்பி அணைத்து அவள் நெற்றியில் முத்தமிட, கார்த்திக்குக்கு நெஞ்சம் நிறைந்தது.

"கொஞ்சம் இருங்க, இதோ வந்து விடுகிறேன்!" எனப் பெரியவர் உள்ளே சென்றதும்,

"கார்த்திக்... இதை நீங்களே வைத்துக் கொள்ளுங்களேன், ப்ளீஸ்!" எனக் கெஞ்ச,

கார்த்திக் சிரித்து விட்டு, "சரி... நீயே அலமாரியின் உள்ளே வைத்து விடு!" என்று அவளைத் தன்னறைக்கு அழைத்துச் சென்றான்.

எல்லாவற்றையும் அலமாரியில் வைத்ததும்...

"நகை, புடவை வேண்டாம் என்கிற பெண்ணை இப்போதுதான் பார்க்கிறேன்!" என்று அவளை அணைத்துக் கொண்டு, "ஐ லவ் யூ டா, லவ் யூ சோ மச் டியர்!" என்று அவள் கன்னத்தில் முத்தமிட, அவன் மார்பில் சாய்ந்து கொண்டாள்.

சில வினாடிகள் கழிந்ததும் அவனிடமிருந்து விலக, அவளைக் கீழே அழைத்து வந்தான்.

புவரும் மண்டபத்திற்கு வந்து சேர... ஷைலு, மஹாவிடம் சொல்லி விட்டு திவ்யாவைத் தேடிச் சென்றுவிட... கார்த்திக், சுரேஷைத் தேடிச் சென்றான்.

விழா முடிந்ததும் எல்லோரும் தத்தம் குடும்பங்களோடு மண்டபத்தை விட்டுக் கிளம்ப...

கார்த்திக், ஷைலுவோடு பேசின திருப்தியில் தலையை அசைத்து விடைபெற, நல்லியின் பார்வை இந்தக் காட்சியை வன்மத்தோடு நோக்கியது.

நிச்சயம் முடிந்த அடுத்த நாள் காலை ஐந்து மணிக்கே சுரேஷ் லாவண்யாவுடன் கிளம்பி விட,

சதுவுக்கும், நல்லிக்கும் பாஸ்போர்ட், விசா விஷயமாய் ஹரியும், ஆகாஷும் கிளம்பி விட,

வீட்டில் யாரும் இல்லாததால் வீடு அமைதியாக இருந்தது.

காலேஜுக்குக் கிளம்பிச் சாப்பிட அமர்ந்த மகளுக்கும், மகனுக்கும் டிபன் பரிமாறிய சுஜாதாவுக்கு, மகளிடம் கார்த்திக்கைப் பற்றிக் கேட்கலாமா வேண்டாமா? என்று ஒரு நிமிடம் தயங்கி, பின், 'எக்ஸாம் மூடில் இருக்கிறாள். இதைப் பற்றிப் பேசிச் சங்கடப்படுத்த வேண்டாம்!' என்று நினைத்தவராகத் தன் நினைப்பை அப்படியே தன்னுள் புதைத்துக் கொண்டார்.

அடுத்து வந்த நாட்களில் ஷைலு படிப்பில் பிஸியாக இருந்ததால் கார்த்திக் போன் கூடச் செய்யவில்லை.

செமஸ்டர் முடிந்து இரண்டு வாரம் லீவு தொடங்க, வீட்டில் தமக்கைகள் இல்லாததால் சந்தோஷமாக ஒவ்வொரு நிமிடத்தையும் அனுபவித்தாள்.

சுஜாவும் அவளை எந்த வேலையும் செய்ய விடுவதில்லை.

சந்தோஷமாக அனுபவித்து விட்டுப் போகட்டும் என நினைத்ததால், அவளை அவள் இஷ்டத்திற்கு விட்டு விட்டார். விக்கியும் அதிகமாக எங்கும் போகாமல் ஷைலு

வுடன் அரட்டை அடிக்க, சில சமயம் அதில் சஞ்சய்யும், சுஜாவும் கலந்து கொள்ள... நாட்கள் தெளிந்த நீரோடை யாகச் சென்றது.

கார்த்திக்குடன் தினமும் இரவில் போனில் அரட்டை அடிப்பதால், ஒரு வாரம் போனதே தெரியாமல் போனது.

அடுத்த வாரமே இரண்டு ஜோடிகளும் திரும்பி வர, ஷைலு மறுபடியும் ஓட்டுக்குள் சுருங்கும் நத்தையாகி னாள்.

அன்று இரவு எல்லோரும் சாப்பிட, ஷைலு மட்டும் அந்த இடத்தில் இல்லாததால் மாமனாரிடம் ஆகாஷ் விசாரித்தான்.

ஒரு பெருமூச்சுடன், "ஏதோ படிச்சிக்கிட்டு இருக்கா அவளுடைய ரூமில்!" என மற்ற இரு பெண்களையும் வெறுமையான பார்வையுடன் அளவெடுத்துக் கொண்டே கூற...

அவன் ஷைலுவின் அறைக்குச் சென்றான்.

நல்லிக்கும் சதுவுக்கும் கணவர்கள் பக்கத்தில் இருந்ததால் எதுவும் சொல்ல முடியாமல் அமைதி காக்க, சுஜா அவர்களைக் கண்டு உள்ளுக்குள் சிரித்துக் கொண் டார்.

ஷைலு ரூமின் கதவைத் தட்டி அனுமதி கேட்டு உள்ளே சென்றவன், அவள் கட்டிலில் அமர்ந்து எங்கேயோ வெறித்துக் கொண்டு அமர்ந்திருப்பதை நெஞ்சம் துணுக்குற, 'இவளுக்காகவே நல்லியை மாற்றி

ஆக வேண்டும்!' என நினைத்தவனாக, "ஷைலு..." என்றழைத்தான்.

நினைவு கலைந்து திரும்பியவள், ஆகாஷைக் கண்டு புரியாதவளாகக் கட்டிலிலிருந்து இறங்கி, "வாங்க மாமா, என்ன இங்கே வந்திருக்கீங்க? நீங்க சாப்பிட வில்லை...?" என்று கேள்விகளை அடுக்க, ஆகாஷ் அவளது பதட்டத்தைப் பார்த்து மெல்லச் சிரித்தான்.

"நான் சாப்பிடுவது இருக்கட்டும்... நீ ஏன் சாப் பிடாமல் இங்கு உட்கார்ந்திருக்கிறாய்? வா, வந்து சாப்பிடு!" என்று அழைக்க,

தயக்கத்துடன், "எனக்குப் பசிக்கலை, நீங்க சாப் பிடுங்க..." என்றாள் ஓர் அவசரத்துடன்.

"நீ என்ன நினைக்கிறாய் என்று எனக்குத் தெரியும் ஷைலு... நீ நல்லியை நினைத்துத்தானே பயப்படு கிறாய்? இனிமேல் உனக்கு அந்தக் கவலை வேண்டாம். அவளை நான் பார்த்துக் கொள்கிறேன். வா, வந்து சாப்பிடு..." என்று அழைத்தும், ஷைலுவிடம் அசை வில்லை.

"இது உன் வீடு ஷைலும்மா... நீ சுதந்திரமாக இருக்கலாம். யாருக்கும் பயப்படாதே. அவர்கள் இந்த வீட்டுப் பெண் போல, நீயும் இந்த வீட்டுப் பெண்தான். அதுவும் கடைக்குட்டி. உன் ஆசைகள்தான் இங்கு முக்கியம்... புரியுதா?" என, அவளின் கண்களில் கலவரம் வெளிப்படையாகத் தெரிந்தது.

"என்னை ஏன் அந்நியனாய் நினைக்கிறாய், சுரேஷின் நிலையில் வைத்துப் பார்... தானாக அந்தத் தயக்கம் போய் விடும்!" என்றாலும்... 'சூடு பட்ட பூனை யாயிற்றே, சகோதரிகள் உடனேயே திருந்தி விட இவர்கள் என்ன சினிமா வில்லிகளா...?' என்று நினைவு ஓட,

"எனக்கு உண்மையில் பசிக்கவில்லை... நீங்க போய்ச் சாப்பிடுங்க..." என மெதுவாகக் கூற,

'இந்தப் பெண்ணின் மனதில் ஏற்பட்ட காயங்களை எப்படிச் சரி செய்யப் போகிறோம்...?' எனக் கவலை யேற்பட்டது.

"சரிம்மா, உன்னிஷ்டம்... நான் சொன்னதை யோசித்துப் பார். சீக்கிரம் வந்து சாப்பிடு..." என்று வெளியே வந்தவனின் மனதில், மனைவியின் மேல் கோபம் பொங்கிக் கொண்டு வந்தது.

இருந்தாலும் அவள் தன்னிடம் ஒழுங்காக நடந்து கொள்வதால், எதுவும் சொல்ல முடியாமல், 'ஷைலுவைப் பேசும்போது பார்த்துக் கொள்ளலாம்!' என்று விட்டு விட்டான்.

அவள் சாப்பிட வேண்டும் என்பதற்காக சீக்கிரம் சாப்பிட்டு விட்டு, நல்லியையும் சதுவையும் அழைத்துக் கொண்டு சென்றதும் சுஜா அவளைச் சாப்பிட அழைத் தார்.

தாயுடன் சாப்பிட்டு முடித்ததும், ஆகாஷ் பேச வேண்டுமென்று சஞ்சய், ஷைலுவை அழைத்ததும்,

"இல்லைப்பா, நான் வரவில்லை. நீங்கள் போய் பேசிட்டு வாங்க... எனக்குக் கொஞ்சம் படிக்கிற வேலை இருக்கு!" என்று மறுத்தாள்.

"பரவாயில்லை ஷைலு... வாம்மா, நாளை படிக்கலாம். நீ ஏன் எப்பவும் ஒதுங்கியே இருக்கிறாய்? நீ இப்படி இருப்பது எனக்குக் கஷ்டமாக இருக்கிறது" என...

அதற்குமேல் மறுப்பது சரியில்லை என்று தந்தை யின் வேண்டுகோளுக்கு இணங்கி அவருடன் மாடிக்குச் சென்றாள்.

சுஜாவின் பக்கத்தில் அமர்ந்து யாரையும் நிமிர்ந்து பார்க்கப் பிடிக்காமல், தன் கைவிரல் நகங்களையே ஆராய்ச்சி செய்து கொண்டிருந்தவளிடம், "உனக்கு செமஸ்டர் முடிந்து விட்டதா? எத்தனை வாரம் லீவ் ஷைலு?" என்ற ஆகாஷின் கேள்விக்கு, அவளின் பார்வை தந்தையிடம் தாவியது.

"அவளுக்கு செமஸ்டர் முடிந்து லீவ் தொடங்கி விட்டது மாப்பிள்ளை..." என்ற மாமனாரின் பதிலுக்கு சிறிது யோசித்து,

"சரி, அடுத்த வாரம் கல்யாணம் முடிந்ததும் ஊருக்குப் போகலாமா? ஷைலு, நீயே சொல்லு... எந்த ஊருக்குப் போகலாம்?" என்று அவளிடமே கேட்க, அவளின் பார்வை தமக்கைகளின் முகத்தை நோக்கிப் பாய்ந்தது.

அவர்களின் முகத்தில் இருந்த வெளிப்படையான வெறுப்பைக் கண்டு நெஞ்சில் கலவரம் புக,

"எனக்குத் தெரியலை... நீங்களே முடிவு செய்யுங்கள்!" என்றாள் மெதுவாக.

"நீ கொடைக்கானல் போக வேண்டும் என்றாயே, போகலாமா ஷைலு...?" என்று மகளிடம் கேட்ட சஞ்சய்,

"ஓ... சாரி. நீங்க ஏற்கெனவே போயிருக்கிறீர்களா ஆகாஷ்? நான் வேறு, நீங்கள் பார்த்திருக்கிறீர்களா இல்லையான்னு தெரியாமல் சொல்லி விட்டேன். நீங்களே எங்கு போவது என்று முடிவு செய்து விடுங்கள்!" என்று முடித்து விட்டார்.

"அதனால் என்ன மாமா...? கொடைக்கானல் ஒரு தடவை போய்விட்டு வந்தால் மறுபடியும் போகக் கூடாதுன்னு சட்டம் இருக்கிறதா என்ன? ஷைலுவுக்கு அங்கே போக வேண்டுமென்றால், கண்டிப்பாக அங்கேயே போகலாம். ஏன் ஹரி, நீங்க கொடைக்கானலுக்குப் போயிருக்கிறீர்களா?" என்ற ஆகாஷின் கேள்விக்கு,

"நான் போயிருக்கேன். இருந்தாலும் நம் குடும்பத்தோடு எங்கு கூப்பிட்டாலும் நான் வருவேன், நோ அப்ஜெக்ஷன்!" என்று விட,

"அப்புறம் என்ன...? ஃபைனல் முடிவு ஷைலுவுக்குப் பிடித்த இடம் கொடைக்கானல்தான். உங்களுக்கு ஓ.கே.வா மாமா?" என்றான் அனுமதியாக.

சுஜா ஏதோ சொல்ல வாயெடுக்கும் முன் உடனே விக்கி, "நான் வரவில்லை மாமா... எனக்கு ஸ்கூல் இருக்கிறது, எக்ஸாம் வரப் போகிறது. அதனால் நீங்கள் எல்லோரும் போயிட்டு வாங்க!" என,

சுஜாவும், "விக்கியைத் தனியாக விட்டு நான் எப்படி வருவது? நீங்க எல்லோரும் போங்க!" என்றார்.

"அம்மாவும், விக்கியும் வரவில்லை என்றால் நானும் வரவில்லை!" என்று கழன்று கொள்ள நினைக்க,

"ஷைலு... நான் உன் கூட இருக்கிறேனே... அப்புறம் என்ன கவலை? அப்பா கூட வர மாட்டியா?" என கேலியாகக் கேட்க, மெலிதாகப் புன்னகைத்தாள்.

"ஷைலு... நீ போய் விட்டு வா. உனக்கும் ஒரு மாற்றம் வேண்டும். அப்பா இருக்கிறார்... அதனால் பயப் படாதே...!" என,

ஷைலு அப்போதும் தயங்க,

"என்ன தயக்கம்...? நாங்க என்ன சிங்கம் புலியா? இப்படி எங்களைப் பார்த்துப் பயப்படுகிறாய்?" என்றான் சீண்டலாக.

அவன் கேலி புரிந்தாலும், அவள் கண்களில் வலியுடன், 'சிங்கம் புலி கூட ஒரே நிமிடத்தில் அடித்துக் கொன்று தின்று விடும். அதனால் சித்ரவதை இல்லை. ஆனால் இவர்களிடம் நான் இத்தனை வருடம் அனுப வித்தது அதை விடக் கொடுமையானது. எப்படி மறக்க

முடியும்?' என்று நினைத்தவளின் இதழ்களில் விரக்தி யாகப் புன்னகை நெளிந்தது.

மகளைத் தோளோடு சேர்த்து அணைத்து, "ஷைலும்மா, சரின்னு சொல்லு... அப்பா உன் கூடவே இருக்கேன்!" என கிட்டத்தட்ட கெஞ்ச,

வேறு வழியில்லாமல் சம்மதம் கொடுத்ததும், அதுவரை இவளையே முறைத்துக் கொண்டிருந்த நல்லி தனக்குள், "க்கும்... இப்போ இவளின் சம்மதம்தான் ரொம்ப முக்கியம்" என முணுமுணுத்தாள்.

அவளின் பார்வையைச் சந்தித்ததும், கீழே போறேன்னு முனகிவிட்டுத் தன் அறைக்கு வந்த ஷைலுவைக் கார்த்திக் போனில் அழைக்க, அவனிடம் சிறிது நேரம் ஸ்வீட் நத்திங்ஸ் பேசிவிட்டுப் போனை வைத்தவளுக்குக் கனவெல்லாம் கார்த்திக்கே வந்து சுகமாகத் தாலாட்டினான்.

அடுத்த வாரம் சுரேஷ் - திவ்யா திருமணம் என்ப தால், நால்வரும் பர்ச்சேஸில் பிஸியாக இருந்தார்கள்.

ஷைலுவுக்கு காலேஜ், ஷாப்பிங், கார்த்திக்குடன் போனில் அரட்டை என்று நாள் ரெக்கை கட்டிக்கொண்டு செல்ல,

திருமண நாளும் நெருங்க... சுரேஷ் - திவ்யா திருமணம் மிகவும் சிறப்பாக நடைபெற்றது.

ரிசப்ஷன் எல்லாம் முடிந்து அவர்களைத் தனி யறையில விடும்போது... கார்த்திக், ஷைலுவைப் பார்க்க,

அந்தப் பார்வை அவளுக்கு ஆயிரம் செய்திகள் கூற, அந்தப் பார்வையைச் சந்திக்க முடியாமல் தடுமாறி னாள்.

திருமணம் முடிந்த பிறகு கொடைக்கானல் ட்ரிப் போகலாம் என்று ஆகாஷ் சொல்லியிருந்ததால், மணமக்கள் ஹனிமூன் கிளம்பியதும் அன்றிரவே கிளம்ப எல்லோரும் ஆயத்தமாக...

ஷைலுவுக்குக் கார்த்திக்கை விட்டுச் செல்ல மனது என்னவோ செய்ய, தாயிடம் காயத்ரியை பார்க்கப் போவதாகச் சொல்லி விட்டுக் கார்த்திக்கைப் பார்க்கச் சென்றவளுக்கு, ஆச்சரியம் காத்திருந்தது.

கார்த்திக்கே கதவைத் திறக்க, வெளிப்படையாகத் தன் ஆச்சரியத்தை வெளிகாட்டியவளிடம், "ஹேய்... என்ன இப்படி முழிக்கிறே... பெரியவங்க எல்லோரும் திவ்யாவுக்கு நல்லபடியாகத் திருமணம் முடிந்ததால் குலதெய்வம் கோயிலுக்கு நேர்த்திக் கடன் செலுத்தப் போயிருக்காங்க. எனக்கு எப்பொழுதும் போல ஆபீஸ்... நல்லவேளை நான் போகவில்லை... அப்படிப் போயி ருந்தால் என் குல தெய்வத்தைச் சந்திக்க முடியாமல் போயிருக்கும்..." என்று செல்லமாக நெற்றியில் முட்டி னான்.

"வீட்டில் யாரும் இல்லையென்றால், சாப்பிட ஹோட் டலுக்குப் போகணுமா... நான் ஏதாவது சமைத்துத் தரவா கார்த்திக்...?" என்று புறப்பட்டவளின் கையைப் பிடித்து,

"சமையல்கார அம்மா இருக்காங்க...!" என்றவன், அவளின் கையைப் பிடித்துக் கொண்டு தன்னறைக்கு அழைத்துச் சென்று, கதவைச் சாத்தி விட்டு அதன் மேல் சாய்ந்து, கைகளை மார்புக்குக் குறுக்காகக் கட்டிக்கொண்டு, "ம்ம்... அப்புறம்...?" என்றான் குறும்பாக.

கார்த்திக் ஸ்டைலாக நின்ற தோரணையையும், அவன் குறும்பாகக் கேட்ட விதத்தையும் ரசித்துக் கொண்டே அருகில் வர,

கார்த்திக் ஒற்றைக் கையை நீட்ட, ஷைலு அவன் கையின் மேல் தன் கையை வைத்ததும் அவளைச் சுண்டி இழுக்க, அவன் மேல் வந்து விழுந்தவளை அணைத்துக் கொண்டு, அவள் கழுத்தில் முகம் புதைத்துக் கொள்ள...

ஷைலு அவனின் அணைப்பை ரசித்துக் கொண்டே விழிகளை மூடிக் கொண்டாள்.

சில மணித்துளிகள் கழித்து அவன் அணைப் பிலிருந்து விலகியவளை, "என்ன ஷைலு இன்றைக்கு செம சர்ப்ரைசாக இருக்கு... சொல்லாமல் கொள்ளாமல் திடீரென்று வந்து நிற்கிறே... ம்ம்..." என்று தலையைச் சரித்துக் கேட்டவனின் அருகில் நெருங்கி அமர்ந்து,

"என்னவோ தெரியலை கார்த்திக்... உங்களைப் பார்க்க வேண்டும் போல இருந்தது... அதான் உடனே வந்துட்டேன். இதோட ஒரு வாரம் கழித்துத்தான் வர முடியும்... இன்றிரவே கொடைக்கானல் கிளம்பறோம்..." என,

அதுவரை சந்தோஷத்தில் தத்தளித்துக் கொண்டிருந்த முகம் வாடியது.

அவனின் முக வாட்டத்தைத் தாங்க முடியாமல், அவனின் முகத்தைத் தன் கைகளால் ஏந்தி, "ப்ளீஸ் கார்த்திக்... ஒரு வாரம் தானே...! கண் மூடித் திறப்பதற்குள் ஓடிவிடும்... என் செல்லம்ல..." என்று கொஞ்சியவள், அவன் கன்னத்தில் தன் இதழைப் பதிக்க, கார்த்திக்கின் கண்கள் வியப்பில் விரிந்தது.

முகம் மீண்டும் புன்னகையைப் பூசிக் கொள்ள, இருவரும் சிறிது நேரம் ஸ்வீட் நத்திங்ஸ் பேசிவிட்டு, நேரமாச்சு என்று கிளம்பியவள், திரும்பி கார்த்திக்கை அணைத்து அவன் கன்னத்தில் முத்தமிட்டு விலக, அவள் கையைப் பிடித்து, "ஹேய்... என்னடா, இன்றைக்கு எல்லாமே சர்ப்ரைசா இருக்கு, எனிதிங் ஸ்பெஷல்...?" என்று அவளிடம் கிசு கிசுப்பாகக் கேட்டதும் வெட்கத்துடன், தலைகுனிந்து,

"ஒன்றும் இல்லை கார்த்திக், ஏதோ தோணியது!" என்றவள், தம்பிக்குப் போன் செய்ய, வந்து அழைத்துச் சென்றான்.

அவள் சென்றதும் ஷைலுவின் நடவடிக்கை புதிதாக இருக்க,

'அவ்வளவு சுலபத்தில் தொட மாட்டாள். ஆனால், இன்று அணைத்து முத்தமிடுகிறாள்!' என்று நினைத்தவுடன் அவனுள் சந்தோஷம் குமிழியிட்டது.

ஷைலுவின் அணைப்பும் முத்தமும் இனிமையாக இருந்தாலும், 'ஷைலுவைப் பார்க்காமல் எப்படி இருக்கப் போகிறோம்...?' என்று நினைத்து கார்த்திக்குக்கு வெறுமை யாக இருந்தது.

இரவே கிளம்பினால்தான் அடுத்த நாள் காலை யிலேயே கொடைக்கானல் சென்று விடலாம் என்று முடிவு செய்ததால், எல்லோருமே பயண ஏற்பாட்டில் மும்முரமாக இருந்தனர்.

கிளம்புவதற்கு முன் கணவரிடம், "சஞ்சய்... பார்த்துப் பத்திரமாகப் போய் விட்டு வாங்க. முக்கியமாக ஷைலு வைப் பத்திரமாகப் பார்த்துக்கோங்க. நல்லி இருக்கும் போது தனியா அவளிடம் விட்டுறாதீங்க. மாப்பிள்ளை பார்த்துக்குவார்... இருந்தாலும், நீங்க கூப்பிட்டீங்க என்பதால் வருகிறாள். ஷைலு மனசு கஷ்டப்படாமல் பார்த்துக்கோங்க!" என்றார் அழுத்தமாக.

மனைவியின் கவலை புரிய, "கவலைப்படாதே சுஜா, நிச்சயம் ஷைலுவை நான் பத்திரமாகப் பார்த்துக்குவேன், எனக்கு அவ சந்தோஷம்தான் இப்போது முக்கியம். அவ சங்கடப்படும்படி எதுவும் நடக்க நான் விட மாட் டேன். போதுமா? நீ நிம்மதியாகப் பத்திரமாக இரு!" என்று அவருக்குச் சமாதானம் சொல்லி விட்டுக் கிளம்பினார்.

பயணம் தொடங்கின கொஞ்ச நேரத்திலே ஷைலு தந்தை மேல் சாய்ந்து தூங்கி விட, கொடைக்கானல் மலை ஏறத் தொடங்கியதும் சஞ்சய் மகளை எழுப்பிவிட,

கொண்டை ஊசி வளைவுகளும், எங்கு பார்த்தாலும் பச்சைப் பசேல் என்று விரிந்த புல்வெளிகளும் கண் களுக்கு விருந்தளிக்க, ரசித்துக் கொண்டே வந்தாள்.

காலை ஆறு மணி என்பதால், அடர்ந்த பனியில் எதிரே வருவது யார் என்று கூடத் தெரியாத வகையில் புகை போலப் பனி படர்ந்திருக்க, ஷைலுவைக் குளிர் தாக்கத் தந்தையுடன் ஒட்டிக் கொண்டாள்.

மலை ஏறியதும் ஆகாஷ் ரூம்ஸ் ரிசர்வ் செய்த ஸ்டெர்லிங் வேலி வியூ ஹோட்டல் வந்து விட, இறங்கி உள்ளே சென்றனர்.

ஹோட்டல் பார்மாலிட்டி முடிந்து அவரவர் ரூமுக்குச் சென்றதும், எல்லோரும் ரெஸ்ட் எடுக்கப் படுத்து விட, ஷைலுவுக்கு மட்டும் தூக்கம் வரவில்லை. ஸ்வெட்டரைப் போட்டுக் கொண்டு வெளியே வர...

அடர்ந்த பனி வெண் புகையில் இருப்பது மாதிரி உணர்வு தோன்ற, அதை அனுபவித்துக் கொண்டே கைகளை இறுகக் கட்டிக் கொண்டு சிறிது தூரம் நடக்க ஆரம்பித்தாள்.

கொஞ்சம் கொஞ்சமாக இருள் பிரிந்து பனி விலக, கோடையின் அழகு பளிச்சென்று தெரிய ஆரம்பிக்க, நடந்தது போதுமென்று வேகமாக ஹோட்டலை நோக்கி நடக்க ஆரம்பித்தாள்.

ஹோட்டலின் உள்ளே நுழைந்து லிப்டில் பட்டனை அமுக்கி விட்டுத் திரும்ப, அதில் இன்னொருத்தனும்

இருக்க, அவன் ஷைலுவை ஆச்சரியமாக நோக்கி, "குட் மார்னிங்!" என,

ஷைலுவும் மரியாதைக்கு, "குட் மார்னிங்!" சொல்லி விட்டு, அவன் பக்கம் திரும்பாமல் நின்றவள், அவள் தங்கியிருக்கும் தளம் வந்ததும் வேகமாக இறங்கிச் சென்று விட்டாள்.

ரூமுக்குச் சென்றதும் குளித்து ரெடியாகி, சஞ்சயை எழுப்ப, அவர் குளித்துவிட்டு ரெடியானதும், இருவரும் வெளியே வர, மற்ற இரு ஜோடிகளும் வெளியே வர... பேசிக்கொண்டே ரெஸ்டாரண்ட் சென்றார்கள்.

அவரவர்க்குத் தேவையானதை ஆர்டர் செய்து விட்டுப் பேசிக் கொண்டிருந்த தருணத்தில் ஆகாஷ் எதேச்சையாகத் திரும்ப, மற்றொரு மூலையில் அமர்ந்து போனில் யாருடனோ பேசிக்கொண்டிருந்த சிபியைக் கண்டதும் முகம் விகசிக்க எழுந்து சென்று, பேசிக் கொண்டிருந்தவன் முன்னால் போய் நின்றான்.

ஒரே ஒரு நிமிடம் கண்ணில் வியப்பைக் காட்டி யவன், அடுத்த நிமிடம், "நான் அப்பவே நினைத்தேன்... நீ இங்கு வந்திருப்பாய் என்று. ஷைலஜாவை ஹோட்டல் வெளியே பார்த்தேன். வாக்கிங் போய்க் கொண்டிருந் தார்கள்!" என்றான் கூலாக.

"ஓ... இன்று காலையில்தான் வந்தோம். நாங்கள் எல்லோரும் தூங்கி விட்டோம்... அவள் தூங்காமல் வாக்கிங் போயிருப்பாள். சரி, நீ எங்கே இங்கே, ஆச்சரிய

மாக இருக்கிறது!" என்ற நண்பனின் கேள்விக்குச் சிரித்து விட்டு,

"நான் இங்கே ஒரு ஹோட்டல் கட்டுவதற்கான ப்ராஜெக்ட்ஸ் சைன் பண்ண வந்தேன். நான் எதிர் பார்க்கவே இல்லை, நீங்கள் எல்லோரும் வருவீர்கள் என்று. முக்கியமாக ஷைலஜா வருவார்களென்று நினைக் கவே இல்லை!" என்றான் புன்னகையுடனும், கண்ணில் ஓர் எதிர்பார்ப்புடனும்.

"ஆமாம்டா... இன்னும் நான்கு வாரத்தில் நாங்கள் கனடா போகிறோம், ஹரி ஆஸ்திரேலியா போகிறார், அதான் ஊருக்குப் போவதற்கு முன் ஜாலியாகக் குடும்பத்துடன் டூர் போகலாம்னு வந்தோம், ஆனால், இதில் என் மாமியாரும், விக்கியும் வரவில்லை. ஷைலு வுக்குக் கொடைக்கானல் போக வேண்டும் என்ற ஆசை... இங்கு வந்து விட்டோம். சரி உன் வேலை முடிந்து விட் டால் எங்களுடன் ஜாயின் செய்து கொள்ளேன்!" என சிபியை அழைத்தான்.

"எனக்கு வேலை நேற்றே முடிந்துவிட்டது, காண்ட்ராக்ட் ஸைன் செய்து விட்டேன். இன்னும் ஆறு மாதத்தில் அப்ரூவல் எல்லாம் வாங்கி விட்டால், வேலை தொடங்க வேண்டியதுதான். இன்று நான் கிளம்பலாம் என்று இருந்தேன். அதனால் உங்களுடன் ஜாயின் செய்து கொள்வதில் எனக்கு எந்த ப்ராப்ளமும் இல்லை. பட், உங்கள் குடும்பத்தில்..." என்று சந்தேகமாக இழுக்க,

"கமான் மேன்... யாரும் தப்பாக நினைக்க மாட் டார்கள்... வா!" என்று அழைத்துச் சென்று எல்லோருக்கும் அறிமுகப்படுத்த, ஹரியும் சஞ்சய்யும் கை குலுக்கி னார்கள்.

ஷைலு, "ஹலோ..." என்று சொல்ல,

பதிலுக்கு சிபியும் "ஹலோ..." என்றான்.

'இவன் என்ன மாமாவுடன் வருகிறான். மாமாவுக்குத் தெரிந்தவனா? அதனால்தான் என்னை ஆச்சரியமாகப் பார்த்தானா? அப்படியே அவரைத் தெரிந்திருந்தாலும் கூட இப்போதுதானே முதல் முறையாக அவருடன் வெளியே வருகிறேன்... எப்படி என்னைப் பார்த்திருக்க முடியும்? அப்புறம் எப்படி என்னைத் தெரியும்...?' என்று ஒரே குழப்பமாக இருந்தது.

இருந்தாலும் எதையும் வெளியில காட்டிக் கொள்ள வில்லை.

ஆர்டர் செய்த சாப்பாடு வர எல்லோரும் சாப்பிட்டு விட்டு வெளியே வந்தார்கள்.

ஆகாஷ், சஞ்சய்யிடம், 'இவன்தான் சிபி!' என்று சொல்லவில்லை. 'அப்புறம் பார்த்துக் கொள்ளலாம்!' என்று விட்டு விட்டான். வெளியே வந்ததும் சஞ்சய், "எனக்கு அவ்வளவாக இந்த ஊரைப் பற்றித் தெரியாது..." என்று விட,

"நான் சொல்கிறேன் ஆகாஷ்... இங்கு எனக்கு எல்லா இடமும் தெரியும். முதலில் பிரையன்ட் பூங்கா

போகலாம். அங்கு எல்லாவிதமான செடிகளும், எல்லா கலர்களிலும் பூக்கள் இருக்கும். ஈவன் கருப்புக் கலரிலும் கூட இருக்கு!" என்று சிபி விவரித்ததும்,

"ஓ.கே.டா... நீயே எல்லா இடங்களுக்கும் எங்களை அழைத்துப் போ. முதலில் நீ சொன்ன பிரையன்ட் பூங்கா வுக்கே போகலாம்!" என, எல்லோரும் வண்டியில் ஏறினார்கள்.

சிபி அவனுடைய லான்சரை எடுத்து, "யாராவது ரெண்டு பேர் என்னுடன் வாங்க!" என்றதும் ஆகாஷ்,

"மாமா... நீங்களும், ஷைலுவும் அவன் வண்டி யில் போங்க!" என்றான்.

மாப்பிள்ளை சொல்வதும் சரிதான் என்று சிபி பக்கத்தில் சஞ்சய் அமர, ஷைலு பின் சீட்டில் அமர, வண்டியை எடுத்தான்.

சஞ்சய் ஏதோ பேசிக்கொண்டே வர, சிபியும் அவரின் கேள்விக்குப் பதில் சொல்லிக் கொண்டே வந்தாலும்...

அவன் கண்கள் ரிவர்வியூ மிரர் வழியாக ஷைலுவைப் பார்த்துக் கொண்டே இருந்தன.

'இப்படி ஷைலுவைச் சந்திப்போம், அவளுடன் சேர்ந்து ஊர் சுற்றுவோம்!' என்று எதிர்பார்க்காததால், மிகவும் சந்தோஷமாக இருந்தான். பிரையன்ட் பூங்கா வந்ததும், எல்லோரும் இறங்கி உள்ளே போக, சிபியும்

காரை பார்க் செய்து விட்டு ஷைலுவைப் பின் தொடர்ந் தான்.

ஷைலுவுக்கு அங்கே இருந்த பூக்களில் இருந்து கண்ணை எடுக்கவே முடியாமல், ஒவ்வொன்றையும் ரசித்துக் கொண்டே வர, சிபி அவள் ரசிப்பதையே அமைதியாக ரசித்துக் கொண்டிருந்தான்.

நீலக் கலரில் இருந்த ரோஜாப் பூவைப் பார்த்து தந்தையிடம் ஆச்சரியமாகக் காட்ட,

அதற்கு, "இங்கே வாங்க ஷைலஜா... உங்களுக்குக் கருப்புக் கலர் ரோஜா காட்டுகிறேன்!" என்று அழைத்துப் போய்க் காட்டினான்.

அதன் மினுமினுப்பான வெல்வெட் போன்ற அழகில் மயங்கிப் போய் அதையே பார்த்துக் கொண் டிருந்தாள். அலுக்க அலுக்க அந்தப் பூங்காவைப் சுற்றிப் பார்த்ததும், பக்கத்தில் அமைந்துள்ள கோடை ஏரிக்குப் போகலாம் என்று கிளம்பினார்கள்.

ஆனால், ஷைலுவுக்கு அந்த இடத்தை விட்டு வர மனமே இல்லாமல் பாதி மனதோடு மற்றவர்களுடன் வெளியே வந்தாள்.

அதைக் கவனித்தவன், "நீங்க போங்க, நான் ஷைலஜாவுக்கு இன்னும் கொஞ்சம் சுற்றிக் காண்பித்து விட்டு வருகிறேன்!" என, ஆகாஷும் இதுதான் தருண மென்று சிபியிடம் அவளை விட்டு விட்டு, மற்றவர்களைத் தள்ளிக்கொண்டு சென்று விட்டான்.

சஞ்சய் நடக்க முடியாமல் ஒரு பெஞ்சில் அமர்ந்து விட, சிபி... ஷைலுவை அழைத்துச் சென்று அபூர்வ வகை ரோஜாக்களையும், பெயரே தெரியாத நிறைய பூக்களையும் காட்ட, ஆச்சரியத்துடன் பார்த்து அதிசயப் பட,

சிபியோ பூக்களோடு பூவாக நின்றிருந்த ஷைலு வைப் பார்த்து அதிசயப்பட்டான்.

சில மணி நேரம் கழிந்ததும், பார்த்தது போது மென்று கிளம்பி வெளியே வந்து மற்றவர்களுடன் சேர்ந்து கொண்டார்கள்.

அடுத்து கோடை ஏரிக்குச் செல்ல, அங்கு நிறைய பேர் படகு சவாரி செய்து கொண்டிருந்தார்கள். ஆகாஷ் டிக்கெட்ஸ் வாங்கி வர, இரண்டு ஜோடிகள் தனித்தனி படகிலும் ஷைலு, சிபி, சஞ்சய் மற்றொரு படகிலும் சவாரி செய்தார்கள். மதிய வெயில் பட்டு ஏரி வெள்ளித் துணுக்குகளை நீரில் போட்ட மாதிரிப் பளபளக்க, பார்க்க மிகவும் அழகாக இருந்தது.

வெயில் ஏற ஏற ஷைலு தான் போட்டிருந்த ஸ்வெட் டரைக் கழற்றிக் கையில் வைத்துக் கொள்ள, சிபிக்கு அவளின் அருகாமையும் அழகும் மூச்சடைத்தது.

ஆனால், ஷைலு எதையும் கண்டு கொள்ளாமல் படகில் பயணம் செய்வதை ரசித்துக் கொண்டு தண் ணீரைத் தந்தையின் மேல் தெளித்து விளையாடிக் கொண்டிருந்தாள்.

சஞ்சய்க்கும் மகளின் உற்சாகம் தொற்றிக் கொள்ள, அவரும் மகளுடன் தண்ணீரை தெளித்து விளையாட,

சிபி இருவரின் குழந்தைத்தனத்தையும் ரசித்துக் கொண்டிருந்தான்.

ஒருவழியாகப் படகு சவாரி முடிந்து கரை திரும்பும் போது மணி ஒன்று ஆகிவிட, மதியம் லஞ்ச் முடிந்ததும் பெய்ரி பால்ஸ் செல்ல, அங்கேயும் இரு ஜோடிகளும் தனியாகப் பிரிந்துவிட, மற்ற மூவரும் தனித்து விடப் பட்டார்கள்.

தந்தையுடன் ஷைலு அமர்ந்து அதனுடைய அழகை ரசிக்க, வெள்ளி ஓடை போல் மேலிருந்து வளைந்து, நெளிந்து ஓடி வரும் அழகே கண்ணுக்கு நல்ல விருந் தாக இருந்தது.

அதன் தண்ணீர் விழும்போது, அதன் சாரல் தூரத் தில் இருந்து பார்த்தால் புகை போலத் தோன்றியதை ரசித்தவளுக்கு, அதன் அருகே செல்ல வேண்டும் என்று தோன்றிய ஆசையைத் தந்தையிடம் வெளியிட, பாதுகாப்புக் கருதி தடுத்து விட்டார்.

சில வினாடிகள் சென்றதும், "நீயும் சிபி கூட கொஞ்ச தூரம் நடந்து விட்டு வாயேன் ஷைலு!" என்று அனுமதி தர,

மௌனமாக அவனுடன் நடக்க ஆரம்பித்தாள்.

ஷைலுவின் மனதில், 'கார்த்திக் கூட இங்கு வந்தால் எப்படி இருக்கும்?' என்று நினைத்த வினாடியில்...

அவளின் இதழ் கடையில் கார்த்திக்கின் நினைவில் ஒரு புன்னகை மலர்ந்தது பரவசமாக.

"என்ன ஷைலஜா, தனியாகச் சிரிக்கிறீங்க...? என்னிடம் சொன்னால் நானும் சிரிப்பேன்!" என்ற சிபிக்கு,

'ம்ம்... நான் என் கார்த்திக் பற்றி நினைத்துக் கொண்டிருக்கிறேன். அதை உன்னிடம் சொல்ல முடி யுமா?

கார்த்திக் பக்கத்தில் இருந்தால் என்ன செய்வார்னு நினைத்துச் சிரித்தேன்!' என்று மனதிற்குள் நினைத்துக் கொண்டு,

"ஒன்றும் இல்லை... சும்மா ஏதோ நினைத்தேன்... சிரிப்பு வந்து விட்டது. அவ்வளவுதான்!" என்று சமாளித் தவள், "சரி, நீங்க அடிக்கடி கொடைக்கானல் வருவீர் களா?" என்று முதல் முறையாகப் பேசினாள்.

"அப்பாடா, மழை வரப் போகிறது இன்றைக்கு, காலையில் இருந்து உங்க கூட இருக்கேன்... இப்போது தான் எட்டு மணி நேரம் கழித்துப் பேசத் தோன்றியிருக் கிறது!" கேலி செய்து விட்டு,

"நான் ஆறு மாதத்திற்கு ஒரு தடவை வருவேன். என் தொழில் ஆர்க்கிடெக்ட் என்பதால், இங்குள்ள இரண்டு மூன்று ஹோட்டல்ஸ்களை நான் கட்டியிருக்கி றேன். இப்போது கூட ஒரு ஹோட்டல் கட்டும் விஷயமாகத் தான் இங்கு வந்திருக்கிறேன்!" என்றான்.

அவனின் பேச்சிற்கு வெறும் "ம்ம்..." மட்டுமே கொட்டியவள், அதன் பிறகு பேசவில்லை.

அவனும் பேசவில்லை. சிறிது தூரம் நடந்து விட்டுப் போதும் என்றதும், திரும்பி வந்து தந்தையுடன் அமர்ந்து கொள்ள, சிபியும் சற்றுத் தூரத்தில் அமர்ந்து கொண்டான்.

மணி ஐந்தானதும் மாலை வெயில் பொன் மஞ்சள் நிறத்தில் இருக்க, தண்ணீர் தங்கம் வார்த்தது போலக் கொட்டியது.

ஷைலு அதன் அழகை இரண்டு கால்களையும் மடக்கி, அதில் கையை மடக்கி வைத்துத் தலையைச் சாய்த்துப் பார்த்துக் கொண்டிருக்க, சஞ்சய் ஒரு பத்திரி கையில் மும்முரமாகி விட, சிபி சற்றுத் தள்ளி இருந்த பெஞ்சில் சாய்ந்து அமர்ந்து கால் மேல் கால் போட்டுக் கொண்டு, மஞ்சள் வெயில் அவள் மேல் பட்டுத் தங்கச் சிலை போலத் தகதகவென்று மின்னுவதை மெய் மறந்து ரசித்துக் கொண்டிருந்தான்.

சில மணித் துளிகள் கழித்து இரண்டு ஜோடிகளும் வர அங்கிருந்து கிளம்பினார்கள்.

எல்லாவற்றையும் சுற்றிப் பார்த்து விட்டுக் கிளம்ப மணி ஒன்பது ஆகிவிட... குளிர் எலும்பை ஊடுருவ... அதைத் தாக்குப் பிடிக்க முடியாமல் கைகளை மார்பின் குறுக்கே இறுக்கமாகக் கட்டிக்கொண்டு தவிப்பதைக் கண்டு சிபி ஓடிச் சென்று காரில் இருந்த ஸ்வெட்டரை

எடுத்துக் கொண்டு அவளிடம் நீட்ட, "தேங்க்ஸ்!" என்றாள் ஒற்றை வார்த்தையில்.

"எனக்கு சிபி என்று ஒரு பெயர் இருக்கிறது... அதைச் சொல்லிக் கூப்பிடலாமே!" என்று குறும்பாகக் கூற,

மெலிதாகப் புன்னகைத்து, "தேங்க்ஸ் சிபி!" என்றாள்.

பெயரைச் சொல்லி அழைக்கவும், 'தன் பெயர் இவ்வளவு அழகா...?' என்று அவனுக்கே ஆச்சரியமாக இருக்க,

"தட்ஸ் குட்!" என்றான் சிரித்துக் கொண்டே.

மணியாகி விட்டதால் ஹோட்டலை வந்தடைந்து ரெஸ்டாரண்ட் போய் சாப்பிட்டு விட்டு அவரவர் அறைக்குச் செல்ல...

சஞ்சய், மகளுக்குத் தனியாக அறை எடுத்துத் தந்திருந்தார்.

ஷைலு தன் அறைக்குச் சென்றதும் ஆகாஷ், "சாரி மாமா... நான் உங்கள் கூட இல்லைன்னு தவறாக நினைக்காதீங்க. ஷைலு குழந்தைத் தனமாக எல்லா வற்றையும் ரசிக்கிறாள். ஆனால், நல்லி பக்கத்தில் இருந்தால் அவள் தனக்குள்ளே ஒடுங்கி விடுகிறாள் என்றுதான் நானும் ஹரியும் அவர்களை அங்கிருந்து அழைத்துக் கொண்டு போய் விட்டோம்...!" என்று

மாமனாரிடம் மன்னிப்புக் கேட்க, மெலிதாகப் புன்னகைத் தார் பெரியவர்.

"ஷைலு இத்தனை வருடத்தில் இப்படிச் சந்தோஷ மாக இருந்து நான் பார்த்ததே இல்லை. அவளைப் புரிந்து கொண்டதற்கு தேங்க்ஸ் மாப்பிள்ளை. இங்கு இருக்கும் ஐந்து நாளும் அவள் இஷ்டப்படி இருக் கட்டும். எனக்கு அதுதான் முக்கியம். நீங்க செய்ததில் தப்பே இல்லை. நான்தான் உங்களுக்கு நன்றி சொல்ல வேண்டும்!" என,

"கவலையே படாதீங்க., ஷைலுவின் சந்தோஷத் திற்கு இடைஞ்சல் வராமல் நாங்க பார்த்துக்கிறோம்...!" என உறுதியளிக்க...

பெரியவருக்கு நிம்மதி கலந்த சந்தோஷம்.

ஷைலு தன்னுடைய அறைக்குச் சென்றதும் கார்த்திக்கு போன் செய்து, பார்த்த இடங்களைப் பற்றிச் சொல்லி, "எனக்கு இந்த இடங்களைப் பார்க்கும்போது உங்களோடு வர வேண்டும் என்று ஆசையாக இருக்கிறது கார்த்திக். உங்களுடன் கை கோத்துக் கொண்டு இங்கே சுற்ற வேண்டும் என்ற ஏக்கம் அதிகமாகி விட்டது!" எனும் போதே ஏக்கம் கூடாரம் போட்டது.

"அவ்வளவுதானே! டோன்ட் வொர்ரி ஷைலு... நம் திருமணத்திற்குப் பிறகு அங்கே போகலாம்டா, உன் ஆசைப்படி கை கோத்துக் கொண்டு என்ன, அதற்கு மேலேயே போகலாம்!" என்றான் குறும்புடன் சிரித்துக் கொண்டே.

"ஹேய்... சீய்...! கார்த்திக், வர வர ரொம்ப நாட்டியா ஆகிட்டே போறீங்க!" என்று கொஞ்ச,

"நாட்டியா... நானா... நான் இன்னும் ஆரம்பிக் கவேயில்லை. இதற்கே இப்படிச் சொன்னால் திருமணத் திற்குப் பின் என்னை என்ன சொல்வாய்...?" என்று அவளைச் சீண்ட,

"ம்ம்... அதை அப்போது சொல்கிறேன்!" என்று சிரித்து விட்டு, "நாளை பேசுகிறேன்!" என்று போனை வைத்தாள்.

குட் நைட் சொல்லி விட்டுத் தன் அறைக்குச் சென்ற சிபிக்கு விவரிக்க முடியாத சந்தோஷம்.

ஒரு நாள் முழுக்க ஷைலுவின் கூடவே இருந்த தால், அவனால் அந்தச் சந்தோஷத்தில் தூங்கவே முடிய வில்லை.

ஒருவழியாக நித்ராதேவியின் கருணையால் உறக்கம் அவனை ஆரத் தழுவிக் கொண்டது.

அடுத்து வந்த நாட்களில் இரண்டு புது மண ஜோடிகள் தனியாகவே பிரிந்து சென்று விட,

மற்ற இரண்டு பேரையும் சிபியே எல்லா இடங் களுக்கும் அழைத்துச் சென்று சுற்றிக் காட்டி விளக்கியது மில்லாமல், ஷைலுவிடமும் பொறுமையாக... அதே சமயம் மென்மையாக நடந்து கொள்வதைக் கண்டு, சஞ்சய்யின் மனதில் ஏதோ ஓர் இனம் புரியாத உணர்வு.

ஷைலு அவனருகில் மிகவும் ஒதுங்கிப் போகாமல், அதே சமயம் அலட்டிக் கொள்ளாமல் ஒரு சிறு புன்னகை தவிர அதிகம் சிரிக்காமல் இயல்பாக நடந்து கொள்ள, அவனின் மனதில் ஷைலு நிரந்தரமாக அழுத்தமாக சிம்மாசனம் போட்டு அமர்ந்து கொள்ள, அந்தச் சுகத்திலே தன்னுள்ளே கரைந்து போனான்.

ஷைலுவின் அருகாமையில் ஐந்து நாட்களும் சிட்டாய்ப் பறந்து விட, மதியம் ஊர் திரும்புகிறார்கள் என்றதும் சிபியின் மனது பாரமாக, எதையும் வெளிக் காட்டிக் கொள்ளாமல் அவர்களுடனேயே கிளம்பியவன், வழக்கம் போலே சிபியின் காரிலே ஷைலுவும், சஞ்சய் யும் ஏறிக் கொள்ள...

சஞ்சய், சிபியைப் பற்றிக் கேட்க... அவன், தன்னைப் பற்றிச் சொல்லிக் கொண்டே வந்தான்.

ஒரு வழியாக ஊர் வந்து சேர்ந்ததும் அவர்களை வீட்டில் இறக்கி விட, ஷைலுவும் நன்றி சொல்லி விட்டு உள்ளே செல்ல,

ஊர் திரும்பியவர்களைக் கண்டு வெளியே வந்த சுஜா உயரமாக, அழகாக இருந்த சிபியைப் பார்த்து, 'யார் இவன், எங்கேயோ பார்த்த மாதிரி இருக்கே...!' என்று யோசித்துக் கொண்டே வரவேற் றார்.

"இவன் என் நண்பன் சிபி!" என்ற மருமகனின் அறிமுகத்தைத் தொடர்ந்து கை குவித்து, "வணக்கம்!" என்றவரிடம் சிறிது நேரம் பேசிக் கொண்டிருந்தான்.

சிபி சென்றதும் தாயிடம் சுற்றிப் பார்த்த இடங்களைப் பற்றிச் சொல்லிப் பேசிச் சிரித்து விட்டு உறங்க தன்னறைக்குச் சென்றவளைக் கார்த்திக்கின் கால் அழைக்க, அவனிடம் உற்சாகமாகப் பேசிக் கொண்டிருந்தவளிடம், "ஷைலு... உன்னிடம் ஏற்கெனவே சொன்னேனே ஜப்பான் ப்ராஜெக்ட்ஸ் பற்றி... அது கிடைத்து விட்டது... அதற்காக நான் இன்று இரவே கிளம்பணும்டா..." என்றதும், ஷைலுவின் சந்தோஷம் ஊசி குத்திய பலூன் மாதிரி வடிந்து, அமைதியாகி விட்டாள்.

அவளிடமிருந்து சத்தமே இல்லையென்றதும்,

"எனக்குப் புரியுதுடா... ஆனால், இதை நான் மிஸ் பண்ண முடியாது... நாளை காயத்ரி கல்யாணத்தில் உன்னைச் சந்திக்கலாம்னு பிளான் வைத்திருந்தேன்... ப்ச்... எனக்கும் இப்பொழுதே உன்னைப் பார்க்க வேண்டும் என்ற ஆசையிருக்கு... ஆனால், இந்த ராத்திரி நேரத்தில் எப்படி உன்னைப் பார்க்க முடியும்...?" என்று ஏக்கம் வழிந்தோடிய குரலைக் கேட்டதும்...

ஷைலு தன் ஏமாற்றத்தை மறைத்துக் கொண்டாள்.

"தட்ஸ் ஓ.கே. கார்த்திக்... பிசினஸ்தான் முதல்... மற்றதெல்லாம் அப்புறம்... எனக்கு ஒரு பிரச்சினையுமில்லை... நீங்க சந்தோஷமாகப் போய் வெற்றிகரமாக டீலை முடிச்சுட்டு வாங்க..." என்றவள், "திரும்ப எத்தனை நாளாகும் கார்த்திக்...?" என்றாள் சிறு ஏக்கத்துடன்.

என்னதான் ஏமாற்றத்தை மறைத்து சகஜமாகப் பேச நினைத்தாலும் குரலில் களிமண்ணாய் ஒட்டி யிருந்த ஏக்கம் வெளிக்காட்டி விட,

"ஒரு மாதமாகும்... நம் கல்யாணத்தைப் பற்றி உன் சகோதரிகள் சென்ற பிறகுதான் பேசணும்னு சொல்லிட்டே. அவர்கள் ஊருக்குச் சென்ற பிறகுதான் நான் வர முடியும்... வந்தவுடனே அப்பா அம்மாவுடன் வந்து உன்னைப் பெண் கேட்கிறேன்... போதுமா...?" என்ற கார்த்திக்,

ம்ம் கொட்டிய ஷைலுவுக்கு, "ஐ லவ் யூ டா!" என்று கூறி அழுத்தமாக முத்தமிட,

ஷைலுவின் முகம் செவ்வானமாகச் சிவக்க, வெட் கத்துடன், "பத்திரமாகப் போயிட்டு வாங்க கார்த்திக்...!" என்று விடை கொடுத்தாள்.

போனை வைத்ததும் என்னவென்று சொல்ல முடியாத ஓர் உணர்வு மனதைப் பாரமாக அழுத்த,

உறங்க முயற்சி செய்தவளைக் காயத்ரி அழைத்து, "நாளை கல்யாணத்திற்கு வர மறந்துடாதே...!" என்று ஞாபகப்படுத்த, அதே நினைவிலே உறங்கி விட்டாள்.

அடுத்த நாள் காயத்ரியின் திருமணத்திற்குத் தாயிடம் சொல்லி விட்டுச் சென்றவள், அவளிடம் கார்த்திக் ஜப்பான் போயிருக்கிற விஷயத்தைக் கூறிக் கவலைப்பட,

தன் சந்தோஷத்தையும் மீறித் தோழியின் கவலை காயத்ரியை ஆட்கொள்ள, அவளைத் தேற்றினாள்.

கல்யாணம் முடிந்து வீட்டிற்கு வந்த ஷைலு, தாய் மட்டும் சோபாவில் அமர்ந்திருப்பதைக் கண்டு அவர் பக்கத்தில் அமர்ந்தவளிடம் கல்யாணத்தைப் பற்றி விசாரிக்க,

"ம்ம்... நல்லா கிராண்டா இருந்தது... நிறைய பேர் சிங்கப்பூரில் இருந்து வந்திருந்தார்கள்...!" என்று விட்டு எழுந்து செல்ல,

"காயத்ரி எப்பொழுது சிங்கப்பூர் போகிறாள்...?" என்று கேட்டதும் ஷைலுவிடமிருந்து ஒரு நிமிடம் பேச்சில்லை.

ஒரு பெருமூச்சோடு மீண்டும் தாயின் பக்கத்தில் அமர்ந்தவள், "ஏற்கெனவே பாஸ்போர்ட், விசா என்று எல்லா ஏற்பாடுகளும் செய்து விட்டதால் இந்த வாரத்திலே கிளம்புகிறாள்...!" என்ற மகளின் பேச்சில் இருந்த கவலையை உணர்ந்தவர், அவளின் கையை அழுத்தி,

"கல்யாணம் ஆகி விட்டால் கணவன் வீடுதானே சாசுவதம் ஷைலு... அவளும் என்ன செய்வாள்...? காயத்ரி உன்னை விட்டுப் பிரிகிறாள் என்ற கவலை எனக்கும்தான் இருக்கிறது. ஆனால், அவள் சந்தோஷமாகக் கணவனுடன் வாழப் போகிறாள் என்று நினைத்துச் சந்தோஷப்படு...!" என்று ஆறுதல் சொல்லிய தாயை முகம் கசங்கப் பார்த்து விட்டுக் கண்கள் கலங்க, அவர் மடியிலே தலை வைத்துப் படுத்துக் கொண்டாள்.

தன் மீது அன்பு செலுத்தியவர்கள் எல்லோரும் தன்னை விட்டுப் பிரிந்து தூரமாகச் செல்வது அவளின்

மனதில் கல்லை வைத்த மாதிரி பாரமாக்க, எதையும் செய்யத் திராணியற்று தாயின் மடியிலிருந்து எழுந்து சென்று தன்னறைக்குச் சென்று கதவைத் தாழிட்டுப் படுத்துக் கொண்டாள்.

அன்று மாலை கணவனும் மனைவியும் ஹாலில் பேசிக் கொண்டிருக்க, மனைவியுடன் உள்ளே வந்த ஆகாஷ், சஞ்சய்யின் எதிரில் அமர்ந்து, "மாமா, நான் உங்களிடம் கொஞ்சம் பேச வேண்டும்!" என்றான் தயங்கிக் கொண்டே.

அவனின் தயக்கத்திற்கான காரணம் புரியாமல், கணவனும் மனைவியும் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டு, இருவரின் பார்வைகளும் ஒரு சேர நல்லியைக் கடுமையாக நோக்க, "எனக்கு அவர் என்ன பேசப் போகிறார் என்று தெரியாது... அவரையே கேளுங்க..." என்று நல்லி எரிச்சலாக மொழிந்து கழன்று கொள்ள, ஆகாஷ் பேச வாயெடுக்கும் முன் ஹரியும் சாதனாவும் வந்து விட, அவர்களையும் அமரச் சொன்னார்.

"இப்போ சொல்லுங்க ஆகாஷ்... என்ன விஷயம்...? பீடிகையெல்லாம் பலமா இருக்கு" என்றார் ஆவலாக.

இருவர் முகத்தையும் பார்த்து விட்டு, "நீங்க ரெண்டு பேரும் சிபியைப் பற்றி என்ன நினைக்கிறீங்க?" என்றான் கேள்வியாக.

"ஏன், ரொம்ப நல்ல பையன். அழகாக இருக்கான். பண்பான பையன்..." என்றதும்,

"மாமா, நான் அன்று ஒரு நாள் சொன்னேனே ஷைலுவைத் திருமணம் செய்து கொள்ள ஆசைப்படு கிறான் என்று, அவன் இவன்தான். ரொம்ப நல்லவன் என்று இந்த ஐந்து நாளில் புரிந்து கொண்டிருப்பீர்கள் என்று நினைக்கிறேன். இன்னும் அவன் ஷைலுவை மறக்கவில்லை.

"சுரேஷ் – ஷைலு கல்யாணம் டிராப் ஆனதும், என் மனதில் சிபிக்கு ஷைலுவைத் தந்தால் நன்றாக இருக்கும் என்று தோன்றியது. நீங்கள் என்ன சொல் கிறீர்கள்?" என்றான் இருவர் முகத்தையும் நோக்கி,

சுஜாவுக்கோ, 'ஷைலுவுக்குக் கார்த்திக்கைக் கேட்க லாம் என்று நினைத்துக் கொண்டிருக்கிறேனே... இந்த சமயத்தில் சிபியைப் பற்றிச் சொல்கிறாரே...

இப்போது என்ன செய்வது. நாமளும் இன்னும் கார்த்திக் அம்மாவிடம் பேசவில்லை. அவர்கள் என்ன பதில் சொல்வார்கள் என்றும் தெரியவில்லை. இது என்ன குழப்பம்?' என்று அலுத்துக் கொண்டவராக அமைதியாக இருந்தார்.

"எனக்கு என்னமோ அந்தப் பையனை மிகவும் பிடித்திருக்கிறது. ஆகாஷ் சொல்றதும் சரிதான். நல்ல அழகாகவும் இருக்கிறான். புத்திசாலி. திறமையானவன். வசதியாகவும் இருக்கிறான். நம்ம ஷைலுவைக் கண் கலங்காமல் பார்த்துக் கொள்வான்... ஷைலுவுக்கு பொருத்தமாக இருப்பான்... நீ சொல், உன்னுடைய ஐடியா என்ன சுஜா?" என,

தன் எண்ணங்களிலிருந்து கலைந்து, "நான் சொல்வது இருக்கட்டும் சஞ்சய்... முதலில் இப்படி ஷைலுவிடம் ஒரு வார்த்தை கூடக் கேட்காமல் சுரேஷை முடிவு செய்தோம்... என்ன ஆச்சு? அந்தத் திருமணம் டிராப் ஆகி விட்டது. இப்போது மறுபடியுமா? எதுவாக இருந்தாலும் அவளை ஒரு வார்த்தை கேட்ட பிறகு அவளுக்கு இதில் சம்மதம் என்றான பிறகு மேற்கொண்டு பேசுங்கள். அது மட்டுமில்லை, நீங்கள்தானே அவள் படிப்பு முடியட்டும் என்றீர்கள். அதற்குள் இப்படி ஒரு முடிவு செய்கிறீர்கள்...?" என்றார் சிறு தயக்கத்துடன்.

"என்னம்மா செய்வது, நல்ல வரன் வரும்போது படிப்பு முடியட்டும் என்று காத்திருக்க முடியுமா? ஆகாஷ் சொன்ன சிபி எல்லோருக்குமே நன்றாகத் தெரிந்தவன். அதனால் ஷைலுவை நல்லா வைத்துக் கொள்வான். அவனும் ஷைலு மேலே ஆசைப்படுகிறான் என்னும்போது அதைப் பற்றி யோசிப்பதில் என்ன தவறு இருக்கிறது?" என்னும் போதே நல்லி இடையிட்டாள்.

"ஏன், இவருடைய ப்ரெண்ட் சிபிக்கு என்ன குறைச்சல்? அவரைக் கல்யாணம் செய்து கொள்ளக் கசக்குமா உங்க சின்னப் பொண்ணுக்கு. அவளை வேறு ஏன் தனியாகக் கேட்கணும். ஏன் உங்க செல்லப் பொண்ணு நீங்க சொன்னா கேட்க மாட்டாளா?" என்றாள் காட்டமாக.

"இதோ பார் நல்லி... இது அவளுடைய வாழ்க்கைப் பிரச்சினை... அழகு, வசதியைப் பார்த்துக் கல்யாணம்

செய்து கொள்ள முடியாது. வாழப் போகிறவள் அவள் தான். அவளே முடிவு செய்து கொள்ளட்டும்!" என்று சஞ்சய் முடிக்கும் முன்னே, சுஜா இடையிட்டார்.

"ஒரு பெண்ணின் வாழ்க்கையை மற்றவர்கள் முடிவு செய்யக் கூடாது. பெற்ற தாய் தந்தைக்கே அந்த உரிமை இல்லாதபோது, கூடப் பிறந்த சகோதரிக்கு என்ன உரிமை இருக்கு? அதுவும் அவளைத் தன் தங்கையாக இதுவரைக்கும் நினைக்காத உனக்கு என்ன உரிமை இருக்கிறது? நீ வயதில் பெரியவள் என்றால், எதுவும் பேசிவிடலாமா? முதலில் ஒரு பாசமான அக்காவாக இரு. அப்புறம் அவள் வாழ்க்கை பற்றி முடிவெடுப்பதில் ஆலோசனை சொல்லலாம்!" என்றவர் எரிச்சல் தாங்க முடியவில்லை.

"சாரி மாப்பிள்ளை... தப்பாக நினைக்காதீங்க. தங்கை மேல் பாசம் இல்லையாம். ஆனால், அவள் வாழ்வைப் பற்றி முடிவு எடுக்கும் அதிகாரம் மட்டும் இருக்கிறதாம். அதனால்தான் இப்படிப் பேசிவிட்டேன்!" என்றார் மன்னிப்பாக.

"விடுங்க அத்தை... நான் ஒன்றும் தப்பாக நினைக்கவில்லை!" என்று அவருக்குச் சமாதானம் சொல்லி விட்டு,

"நல்லி அவங்க சொன்னதில் ஒரு தப்பும் இல்லை. முதலில் ஷைலுவிடம் அன்பாக இரு. அதன் பிறகு நீ பேச வா. அப்போது கூட அவள் முடிவுதான் கடைசி

முடிவு. நீயோ மற்றவர்களோ வற்புறுத்தித் திருமணம் செய்து வைக்க முடியாது. அதனால் நீ இதில் தலை யிடாதே!" என்று சற்றுக் கோபமாகக் கூற, விடுவிடு வென்று அவள் அறைக்குச் சென்று விட்டாள்.

ஷைலுவை அழைத்து விஷயத்தைக் கூறி, அவளின் சம்மதம் கேட்க, அவளின் தலையில் இடி விழுந்த மாதிரி... எதையும் பேச முடியாமல் ஸ்தம்பித்து நிற்க,

கோபமாகச் சென்ற நல்லி, ஷைலு என்ன சொல் கிறாள் என்று அறிந்து கொள்ளும் ஆவலில் மீண்டும் வந்து அமர்ந்ததும்...

ஷைலுவுக்கு வேண்டாம் என்று மறுக்கலாம் என்றிருந்த கொஞ்ச நஞ்சமிருந்த தைரியம் அவளை விட்டுப் பறந்தோட... மொழி மறந்தவள் போல அமைதி யாக இருந்தாள்.

நல்லி ஏற்கெனவே சுரேஷின் கல்யாணத்தில் கார்த்திக்கும் ஷைலுவும் சிரித்துப் பேசுவதைச் சந்தேகப் பட்டு அவர்களைத் தொடர்ந்து கவனித்ததில், இருவரும் காதலிப்பது அவளுக்குத் தெரியவர, உள்ளுக்குள் கனன்று கொண்டிருந்த வன்மத்தை நேரம் பார்த்துச் சரியான தருணத்தில் நாலு பேர் முன்னிலையில் போட்டு உடைக்கும் எண்ணத்தில் இருந்தவளுக்கு, கணவன் கொண்டு வந்த வரன் சிபியை எப்படியாவது ஷைலு வுக்குத் திருமணம் செய்து வைத்து, அவளின் நிம்மதியை யும் சந்தோஷத்தையும் அழிக்க முடிவு செய்தாள்.

அதைச் செயல்படுத்தும் எண்ணத்தில்தான் அவள் பேசவே ஆரம்பித்தது.

ஆனால், அவளை ஆகாஷே அடக்கியதும் அவளின் வெறியை அதிகப்படுத்த மீண்டும் ஹாலுக்கு வந்தவள், ஷைலு என்ன சொல்லப் போகிறாள் என்று கவனிக்க...

ஷைலுவோ எதையும் பேசாமல் விழிப்பதைக் கண்டதும் உள்ளுக்குள் சத்தமாகச் சிரித்துக் கொண்டே தங்கையை வன்மமாகப் பார்த்துக் கொண்டிருந்தாள்.

அவளைத் தங்கள் நடுவில் அமர்த்திக் கொண்ட பெற்றோர் மீண்டும் அதே கேள்வியை பொறுமையாகக் கேட்டும் அவளிடமிருந்து பதில் வராததால்,

"சொல்லு ஷைலு... உனக்கு சிபியை பிடித்திருந்தால் மேற்கொண்டு பேசலாம்... இல்லை..." என்னும் போதே நல்லி இடையிட்டாள் மீண்டும்.

"என்ன ஆகாஷ் இப்படிக் கேட்கறீங்க... அவளுக்கு சிபியைப் பிடிக்காமல் போக என்ன காரணம் இருக்கு... அதுமட்டுமில்லை, அவள் அப்பாவின் பேச்சைத் தட்டவே மாட்டாள்... அவரின் சந்தோஷம்தான் இவளுக்கும் சந்தோஷம்..." என்றவள்,

"நீங்க தான் அடிக்கடி சொல்லுவீங்களே... என் பொண்ணு என் வார்த்தையைமீறி எதுவும் செய்ய மாட்டா... என் கௌரவத்திற்கு எதிரா ஒரு அடி கூட எடுத்து வைக்க மாட்டான்னு சொன்னீங்க... இப்போ நீங்க

இவ்வளவு கேட்டும் அமைதியா இருக்கான்னா என்ன அர்த்தம்...?" என்றவளை முறைத்தார் சுஜா.

"அம்மா, சும்மா அக்காவை முறைக்காதீங்க... அவங்க ஒன்றும் தவறாகச் சொல்லவில்லை... மாமா நல்ல வரனைக் கொண்டு வந்திருக்காரு... அவரை வேண்டாம்னு சொல்லி நிராகரிக்க ஒரு காரணத்தைக் கூட பூதக் கண்ணாடி வெச்சுத் தேடினாலும் கிடைக்காது... அப்படியிருக்கும் பொழுது இவளிடம் நீங்க சம்மதம் கேட்டும் அமுக்கியா இருக்கிறாள் என்றால், நாங்கள் சொன்னதெல்லாம் உண்மைதானே...!" என்று அழுத்திச் சொல்ல,

"சாதனா... ஷட் அப்...!" என்றான் ஹரி.

"எதுக்கு ஹரி அவளை அடக்கிறீங்க... நீங்களே பார்த்துக்கிட்டுத் தானே இருக்கிறீங்க... உண்மையில் பெற்றவங்களுக்கு மதிப்புக் கொடுக்கிறதா இருந்தால் இந்நேரத்திற்கு சம்மதம் சொல்லியிருக்கணும்.

"அவர்களின் பேச்சை மதிக்கவில்லைன்னு எங்களைக் குற்றம் சொல்லிக்கொண்டே இருப்பார்கள். அப்படிப்பட்ட நாங்களே கல்யாண விஷயத்தில் இருவரும் முடிவு செய்த மாப்பிள்ளைகள் உங்களைத் திருமணம் செய்து கொண்டோம். மூச்சுக்கு முன்னூறு தரம் எங்களுக்குக் கவுரவத்தைத் தேடித் தருகிற பெண் ஷைலு என்று சொல்வார்களே... அந்தப் பெண் இன்று இவ்வளவு சொல்லியும் எந்த முடிவும் சொல்லவில்லை என்றால்

என்ன அர்த்தம்... நாங்கள் சொன்னபடி யாரையோ காதலிக்கிறாள் என்றுதானே...!" என்று கேட்டு நிறுத்தினாள்.

"நல்லி... நீ பேசுறது எதுவுமே சரியில்லை... கொஞ்ச நேரம் சும்மா இருக்கியா...?" என்ற கணவனின் முறைப்பை அலட்சியம் செய்து,

"எது சரியில்லைன்னு சொல்றீங்க...? இத்தனை நாள் அவளை உங்க தங்கை என்று சொல்லி என் வாயை அடக்கினீர்களே... நீங்க சொல்லியும் எதுவும் பேசவில்லை என்றால் என்ன அர்த்தம்...?" என்றதும்,

"வாயை மூடு..." என்று அழுத்தமாக அதட்ட,

"ஓ.கே. ஆகாஷ்... நான் பேசவில்லை... நீங்களே கேட்டுச் சொல்லுங்கள்..." என்று அவளை முறைத்துக் கொண்டே பேச, ஷைலுவுக்குத் தன் காதல் ஊமை கண்ட கனவு போல ஆகி விட, அதை வெளியில் சொல்லவும் முடியாமல் விழுங்கவும் முடியாமல் அனலிட்ட புழுப் போலத் துடித்தாள்.

அவளின் முகம் கசங்குவதை உணர்ந்த சுஜா, அவளின் கையைத் தன் கைக்குள் வைத்துக் கொண்டு நல்லியிடம், "நீ சொன்னாலும் சொல்லாவிட்டாலும் என் பெண் பத்தரை மாற்றுத் தங்கம்தான்...நீங்கள் அவள் மேல் வாரியிறைத்த சேறைப் போல அவளில்லை... அவள் தூய்மையானவள்... இன்றுவரை அவள் யாரை யும் மனதில் கூட நினைக்கவில்லை. இந்தக் கணம் வரை அவள் என் பெண்ணாகத்தான் இருக்கிறாள்!" என்று

அழுத்தமாகக் கூற, ஷைலுவுக்கு அவமானத்தில் உடல் கூனிக் குறுக, கண்களில் அவளையும் அறியாமல் கண்ணீர் வழிந்தது.

ஷைலுவுக்குத் தாயின் நம்பிக்கை யான பேச்சில் உடல் குறுகிக் கண்களில் கண்ணீர் வழிய, "அவள் கிடக்கிறாள் ஷைலு... நீ அந்த மாதிரி பெண்ணில் லைன்னு எங்களுக்குத் தெரியும்...!" என்ற அக்கா கணவர்களின் நம்பிக்கையும்,

"எனக்கு உன்னைப் பற்றித் தெரியும்டா ஷைலு... அவர்கள் கண்டதையும் பேசுகிறார்களேன்னு உன்னைச் சந்தேகப்படுவேன் என்று எப்படி நினைத்தாய்...? நீ இந்த வரனுக்கு சம்மதம் சொல்லாமல் இருப்பதற்கும் ஏதாவது காரணம் இருக்கு என்று எனக்குத் தெரியும்..." என்றவர், அவளின் கண்ணீரைத் துடைக்க,

அவரின் அன்பான பேச்சும் பாசமும் அவளைப் பலமிழக்க வைத்தது.

கார்த்திக்கின்மேல் உள்ள காதலை இழக்க முடியா மலும், தந்தையின் நம்பிக்கையை அழிக்க முடியா மலும் உள்ளே நொறுங்கிப் போனாலும் கண் ணீரைத் துடைத்துக் கொண்டு, "சாரிப்பா... படிப்பு கெட்டு விடுமே என்றுதான் யோசித்தேன்... வேறு ஒன்றுமில்லை. நீங்கள் யாரைக் கொண்டு வந்து நிறுத்தினாலும் அவருக்கே

நான் கழுத்தை நீட்டுவேன்... நீங்க தைரியமாக முடிவெடுங்க...” என்றவள், அதற்கு மேல் அங்கிருந்தால் வெடித்துக் கதறி விடுவோம் என்ற பயத்தில், வேகமாகத் தன்னறைக்குச் சென்று கதவைத் தாழிட்டுக் கொள்ள,

நல்லியின் மானசீக ஆணவச் சிரிப்பு அவளைத் துரத்தியது.

மகள் சம்மதம் கொடுத்ததும் சஞ்சய் கர்வமாகப் பெரிய மகள்களை நோக்க, சாதனாவுக்குச் சப்பென்று ஆகிவிட, நல்லிக்கோ, ‘பார்ப்போம்... இந்தக் கர்வம் எத்தனை நாளைக்கு என்று. அவள் கழுத்தில் தாலி ஏறுகிறவரை எதுவுமே நிலையில்லை என்று உங்க ளுக்குப் புரிய வைக்கிறேன்!” என்று உள்ளுக்குள்ளே சவால் விட்டுவிட்டு முறைத்துக் கொண்டே எழுந்து செல்ல,

“அவர்களை விடுங்க மாமா... இந்தக் கல்யா ணத்தை நாங்கள் இங்கே இருக்கும்போதே முடித்து விடுங்களேன்...!” என்ற மாப்பிள்ளைகளின் நியாயமான கோரிக்கையை உடனே ஏற்றுக் கொண்டார்.

சுஜாதாவிற்கு, ‘இதென்ன இப்படி ஒரு சோதனை...? நான் ஒன்று நினைக்க தெய்வம் ஒன்று நினைக்குதே. ஒரு வேளை ஷைலுவுக்கு சிபியைப் பிடிக்குமோ?

சரி, அப்படி அவனைத்தான் பிடிக்குது என்றால் அவள் இஷ்டப்படியே செய்து விட வேண்டியதுதான்.

ஷைலு நன்றாக இருந்தால் போதும்!' என்று நினைத்த வராக, அங்கிருந்து எழுந்து சென்றார்.

இந்த முடிவை உடனே சிபியிடம் தெரிவித்து, அவனைப் பெண் பார்க்க வரச் சொல்ல, தேன்மொழிக்கு சந்தோஷத்தில் தலை கால் புரியவில்லை. ஆனால் விஜய குமாருக்குத்தான் எதிலுமே சுவாரசியமே இல்லாமல், எதுவோ நடக்கப்போகிறது என்ற பயத்திலே இருக்க, நடக்க வேண்டிய சம்பிரதாயங்கள் தங்கு தடையில்லாமல் நடக்க, எல்லாவற்றிற்கும் ஒரு பொம்மை போல ஒத்துழைத்தாள் ஷைலு.

விஷயம் தெரிந்து விக்கிக்கு நெஞ்சு கொதிக்க, தமக்கையிடம் தாம் தூம் என்று குதிக்க, சலனமே இல்லாமல், "நாம் அழுது புலம்பி எதுவுமே நடக்கப் போவ தில்லை விக்கி... எது என் தலையில் எழுதி இருக்கோ அதுதான் நடக்கும்...!" என்று வியாக்கியானம் பேச,

"உன் வியாக்கியானம் எல்லாம் சரி... ஆனால், உன்னால் கார்த்திக் சாரை மறக்க முடியுமா...? இல்லை அவர்தான் இந்த முடிவிற்கு ஒத்துக் கொள்வாரா...? நீயே ஏன் ஊமையாய் இருந்து உன் வாழ்க்கைக்குக் கொள்ளி வெச்சிக்கிறே..." என்று ஆதங்கத்தில் துடித்தான்.

அவனை உயிரே இல்லாமல் பார்த்தவள், "முடியாது... ஆனால்..." என்று எதுவோ சொல்ல வந்தவள், அதைப் பாதியிலே விழுங்கி, "இதுக்கும் மேலே என்னை எதுவும் கேட்காதே விக்கி...!" என்று கரகரவென

கண்ணீர் வழிய, முகத்தை மூடி அழ, தமக்கையின் அருகில் அமர்ந்து பரிதாபமாக நோக்கி,

"அக்கா! நான் கார்த்திக் சாருக்குப் போன் செய்யவா...?" என்றதும் விலுக்கென்று நிமிர்ந்தாள்.

"இல்லை... வேண்டாம்... அவரால் இதைத் தாங்க முடியாது..." என்னும் போதே குரல் நடுங்க, அவசரமாகக் கண்களை அழுந்தத் துடைத்துக் கொண்டு, "இதைப்பற்றி கார்த்திக்குக்குப் போன் செய்ய மாட்டேன்னு சத்தியம் செய்..." என்று அவனை வற்புறுத்தி, சத்தியத்தை வாங்கிக் கொண்டாள்.

"அப்பாவின் கவுரவம் என்னால் எந்த விதத்திலும் கெட்டுப் போய் விடக் கூடாது... என் பேச்சை மீறி அவருக்குப் போன் செய்தால், அடுத்த நொடி நான் உயிரோடு இருக்க மாட்டேன்..." என்று எமோஷனலாக அவனை லாக் செய்ய, விக்கிக்குச் சர்வமும் அடங்கி விட, தளர்ந்த நடையோடு அறையைவிட்டு வெளியே சென்றான்.

காயத்ரி ஊருக்குப் போகும்வரை அவளிடம் எதைப் பற்றியும் சொல்லாமல் மறைக்க முடிந்த ஷைலுவுக்கு... சுரேஷும், திவ்யாவும் விஷயம் கேள்விப்பட்டு ஹனிமூனைப் பாதியிலே விட்டு ஓடி வந்தவர்களுக்குப் பதில் சொல்ல முடியாமல் கண்ணீரை மட்டுமே பதிலாகக் கொடுக்க, அவளை என்ன சொல்வதென்று தெரியாமல் தவித்தார்கள்.

அவர்களிடமும் கார்த்திக்குக்குத் தெரிய வேண்டாம் என்று வேண்டுதல் வைக்க,

"தினமும் உனக்குப் போன் செய்கிற கார்த்திக்கிட மிருந்து இன்னும் எத்தனை நாளைக்கு உன்னால் இந்த விஷயத்தை மறைக்க முடியும்? அவனுக்கு ஒரு பக்கம் துரோகம் செய்து கொண்டே மறுபக்கம் எப்படி உன்னால் அவனிடம் சாதாரணமாகப் பேச முடிகிறது...?" என்று மாமன் மகளின் கோழைத்தனத்தின் உச்சக்கட்ட எரிச்சலில் வார்த்தைகளைச் சிதற விட,

ஏற்கெனவே கண்ணாடிச் சில்லுகளாய் சிதறி யிருந்த நெஞ்சம் மேலும் சுரேஷின் பேச்சில் சுக்கு நூறாக சுவரின் மூலையில் அழுகையோடு சரிந்தாள்.

அவள் நொறுங்கிப் போய் அழுவதைக் கண்டதும், தான் அதிகமாகப் பேசிவிட்டோம் என்று உணர்ந்து, எப்படி அவளைத் தேற்றுவது என்று விக்கித்து நிற்க, அவளருகில் அமர்ந்த திவ்யா, "சாரி ஷைலு... நீயும் அண்ணனும் பிரிவதைத் தாங்க முடியாமல் பேசி விட்டார். அவரின் வார்த்தைகளைப் பெரிதாக எடுத்துக் கொள்ளாதே...! ப்ளீஸ்...!" என்று கெஞ்சினாள் அவளைத் தேற்றும் விதமாக.

"இல்லை திவ்யா... நான் யாருக்கும் துரோகம் செய்யவில்லை... என் உயிரே போனாலும் யாருக்கும் துரோகம் செய்ய மாட்டேன்... சிபியை எனக்கு நிச்சயம் செய்த நாள் முதல் நான் கார்த்திக்கிடம் பேசவில்லை...

போனை சுவிட்ச் ஆஃப் செய்து விட்டேன்...!" என்று கதறி அழ, திவ்யாவிற்கு அவளின் தவிப்பும், வேதனைகளும் புரிய, அழுகையோடு தன்னோடு சேர்த்து அணைத்துக் கொண்டாள்.

பெண் பார்த்து விட்டுப் போன மூன்றாம் நாளே சிம்பிளாக வீட்டிலேயே கைத் தாம்பூலம் மாற்றிக் கொண்டவர்கள், ஒரு வாரம் கழித்துத் திருமணம் வைத்துக் கொள்ளலாம் என்று முடிவு செய்து, அதற்குண்டான ஏற்பாடுகளைக் கவனிக்க, ஷைலுவின் காதலைப் பற்றித் தெரிந்தவர்கள் தவிர மற்றவர்கள் சந்தோஷமாகக் கல்யாண ஏற்பாடுகளைக் கவனிப்பதில் முனைந்தார்கள்.

புடவை எடுக்க, சொந்தங்களுக்குக் காட்ட, கல்யாணப் பத்திரிகை மாடல் பார்க்க என்று சிபி வீட்டிலிருந்து அடிக்கடி யாராவது ஒருத்தர் வந்து கொண்டே இருக்க, அவர்கள் முன்னே இயல்பாக இருப்பது போல நடிப்பதே பெரிய வேலையாக இருந்தது ஷைலுவுக்கு.

மற்ற நேரங்களில் கல்லூரிக்குக் கூட செல்லாமல் தன்னறையே கதி என்று மோட்டு வளையை வெறித்துக் கொண்டு நடைப் பிணமாக வளைய வந்தவளைக் காணச் சகிக்காமல், சுரேஷ் நகைக் கடையில் வேலையிருக்குன்னு முணுமுணுத்துவிட்டுத் திவ்யாவை மட்டும் அவளுக்கு காவல் வைத்து விட்டுச் சென்னைக்குக் கிளம்பி விட்டான்.

'கார்த்திக்குக்குத்தானே போன் செய்ய வேண்டாம் என்றாள்... மஹா அத்தைக்கும் விஸ்வநாத் மாமாவுக்கு

போன் செய்து விஷயத்தைக் கூறினால் என்ன...?' என்று நினைத்த வினாடி அதைச் செயல்படுத்த கால் செய்ய, அவர்களுக்கு ரீச் ஆகாமல், தொடர்பு எல்லைக்கு அப்பால் இருப்பதாக ரிப்ளை வர, சுரேஷ் சோர்ந்து போனான்.

எப்படி இந்தக் கல்யாணத்தைத் தடுப்பதென்று புரியாமல், எதை எதையோ யோசித்து மண்டை குழம் பியதுதான் மிச்சம்...

உருப்படியாக ஒரு ஐடியாவும் கிடைக்காமல் மீண்டும் மீண்டும் அவர்களுக்கே முயற்சி செய்தும் பலனில்லாமல் போக, கல்யாணத்திற்கு இரண்டு நாள் முன் பாண்டிச்சேரி வந்து சேர்ந்தான்.

எப்பொழுதும் எதையோ யோசிக்கும் அவனின் முகக் குறிப்பை வைத்து சஞ்சய் அவனை விசாரிக்க, அவரிடம் ஒன்றும் இல்லை என்று சமாளிப்பதே பெரும் பாடாக இருந்தது.

மனதிலிருந்த ஆசைகளை சுனாமி வந்து அடித்துக் கொண்டு சென்று நிர்மூலமாக்கிச் சென்றாலும் தன் நெஞ்சின் ஓலத்தை யாரிடமும் வெளிப்படுத்தாமல் பெற்றவர்களை நல்லியிடம் விட்டுக் கொடுக்கக் கூடாது என்கிற ஒரே காரணத்திற்காகத் தேமே என்று கீ கொடுத்த பொம்மை போல சாஸ்திர சம்பிரதாயங்களுக்குக் கட்டுப் பட்டு, எல்லாவற்றையும் ஏற்றுக் கொண்டவளுக்கு, திருமண நாட்கள் நெருங்க நெருங்க மனதின் பாரம் அதிகமாகி, மூச்சு விடுவதே பெரும் சுமையாகிப் போனது.

கல்யாண நாளும் நெருங்கி விட, அன்று மாலை மாப்பிள்ளை அழைப்புத் தொடங்கி விட, சுரேஷ் அந்த ஊர்வலத்தில் கலந்து கொள்ளச் சென்று விட, அலங்கார பூஷிதையாக ஜீவனே இல்லாமல் அமர்ந்திருந்த ஷைலு வின் பக்கத்தில் திவ்யா எல்லோரையும் அனுப்பி விட்டு, என்ன பேசுவது என்று புரியாமல் ஆளுக்கு ஒரு மூலை யாக கடனே என்று அமர்ந்திருக்க, படபடவென்று கதவைத் தட்டும் சத்தம் கேட்டு திவ்யா தலையைத் திருப்பி ஷைலுவை நோக்கினாள்.

அவளோ அப்படி ஒரு சத்தமே கேட்காதது போல அழுது அழுது கண்ணீர் வற்றிப் போகக் கண்கள் விட்டத் தில் நிலைகுத்தி இருப்பதைக் கண்டு ஒரு நெடிய பெரு மூச்சோடு கதவைத் திறந்தவளுக்கு, வாசலில் அதிர்ச்சி கலந்த குழப்பத்தோடு பெரியப்பாவையும் பெரியம்மாவை யும் கண்டவளுக்குப் பலமான அதிர்ச்சியும் அதே சமயத் தில் என்னதென்று சொல்ல முடியாத மன நிம்மதியும் ஒரு சேர அவளைத் தாக்க, "பெரியம்மா... ஷைலு..." என்றவளுக்கு, அதற்கு மேல் பேச முடியாமல் தொண்டை அடைத்துக் கொண்டது.

அவர்கள் வந்தது கூடத் தெரியாமல் ஒரு ஜடம் மாதிரி அமர்ந்திருந்தவளின் முகத்தைத் தொட்டு ஷைலு என்றழைத்த மஹாவைக் கண்டதும்... உயிர் பெற்ற சிலை போல அவரின் தோளில் சாய்ந்து அடிபட்ட மானாய்க் கதறிய பெண்ணைத் தேற்ற வழி தெரியாமல் அவரும் அழ,

விஸ்வநாத்துக்கு என்ன பேசுவது அடுத்து என்ன செய்வது என்று தெரியாமல் கையைப் பிசைந்து கொண்டிருந்தார்.

கார்த்திக் வெளிநாடு சென்றதும் எப்படியும் அவன் வந்த பிறகுதான் ஷைலுவைப் பெண் கேட்கப் போகிறோம்... அவன் ஊரிலிருந்து வருவதற்கு முன் ஒரு ஆன்மீக சுற்றுலா போய் விட்டு வந்து விடலாம் என்று கிளம்பியவர்கள், நிம்மதியாக பெங்களூரில் மஞ்சுநாதரை மனம் குளிரத் தரிசித்துக் கொண்டிருந்த வேளையில், சுரேஷின் அழைப்பைக் கண்டு வேகமாகத் தரிசனம் செய்து விட்டு வெளியே வந்தவர்களுக்கு, அவன் சொன்ன விஷயத்தைக் கேட்டு அதிர்ச்சியில் பேச்சே வரவில்லை.

நொந்து போய் அங்கிருந்து புறப்பட்டவர்கள், நேரே இங்கே வந்ததால், ஷைலுவின் நிலைமை அதை விடக் கொடியதாக இருக்க... யாரைக் குற்றம் சொல்வது என்று தெரியாமல் தங்கள் மனக் குமுறல்களை வெளியே சொல்ல முடியாமல், திருடனுக்குத் தேள் கொட்டிய மாதிரி தவித்துப் போனார்கள்.

'கார்த்திக்கால் இந்த விஷயத்தை எப்படித் தாங்கிக் கொள்ள முடியும்... அவன் உயிரே ஷைலுதான்... அவளே இன்று இன்னொருத்தனுக்குச் சொந்தமாகப் போகிறாள் என்று தெரிந்தால் என்னாகும்... அடுத்த வாரம் அவன் ஊரிலிருந்து வந்தால் எப்படி இந்த விஷயத்தை எதிர்கொள்ள முடியும்...? இப்போவே ஷைலுவின் போன்

வேலை செய்யவில்லை... அவளைப் பார்த்துப் பேசிட்டு வாங்கன்னு சொல்லிக் கொண்டிருக்கிறவன், நாளை அவளே இல்லைன்னு தெரிந்தால் என்னாகும்...?' என்று நினைக்க நினைக்க,

அவருக்குப் பயம் நெஞ்சை அழுத்த, லேசாக நெஞ்சு வலிக்கிற மாதிரி இருக்க ஓய்ந்து போய் சோபாவில் அமர்ந்து கொண்டார்.

மஹாவின் நெஞ்சில் சிறு குழந்தை போல ஒண்டிக் கொண்ட ஷைலுவைத் தேற்ற முடியாமல் அவரும் சோர்ந்து அமர்ந்து விட, திவ்யாவுக்கு ஊர் திரும்பிய பிறகு தன் அண்ணனின் நிலைமை என்னாகுமோ என்ற அச்சத்தில் ஒடுங்கிப் போனாள்.

மாப்பிள்ளை ஊர்வலத்தில் காரில் அமர்ந்திருந்த சிபிக்கு ஜிவ்வென்று வானத்தில் பறப்பது போல உணர, பக்கத்தில் நாணத்தோடு ஷைலு அமர்ந்திருப்பது போலத் தோன்றியதும் மெதுவாக நத்தை போல ஊர்ந்து கொண் டிருந்த காரை விட்டிறங்கி ஓடிச் சென்று ஷைலுவின் முகத்தைப் பார்க்கத் துடிப்பாக இருந்தது.

ஒரு வழியாக கார் மண்டபத்தை நெருங்கியதும் ஆரத்தி எடுத்து உள்ளே வரவேற்க, சுரேஷ் வேகமாக ஷைலுவின் அறைக்கு வந்தான்.

அவனைக் கண்டதும் மஹா கண்ணீர் வழிய, "என்னப்பா செய்வது...?" என்று புலம்புவதை ஒரு கையாலாகாத தனத்தோடு பார்த்து விட்டு, "எல்லாமே

கை மீறிப் போச்சு அத்தை...! இவளே நினைத்தாலும் இப்பொழுது ஒன்றும் செய்ய முடியாது. கல்யாணப் பேச்சு ஆரம்பித்திருக்கும் பொழுதே உண்மையைச் சொல்லி யிருந்தால் நம் வீட்டு ஆட்களுக்கு மட்டும்தான் தெரிந் திருக்கும் இவளின் காதல்.

"ஆனால் இன்று இப்பொழுது நாம் எதையாவது செய்து இதை நிறுத்தினால், இத்தனை ஆயிரம் பேர்களின் முன்னால் என் மாமாவின் கவுவரம் மட்டுமில்லாமல்... இதோ இந்த பைத்தியக்காரியின் பெயரும் கெட்டு விடும்..." என்னும் போதே கதவு தட்டும் சத்தம் கேட்டதும்,

எல்லோருமே தங்கள் முக பாவனையை மாற்றிக் கொள்ள, ஷைலு வேகமாக பாத்ரூமில் தஞ்சம் புகுந் தாள்.

எந்த ஒரு சடங்கிலும் கலந்து கொள்ள விருப்ப மில்லாமல் தலைவலி என்று ஒதுங்கியவளை, திவ்யாவின் பாதுகாப்பில் விட்டு விட்டு மஹாவை சந்தோஷமாக வரவேற்ற சுஜா, மாப்பிள்ளைக்கு நலங்கு வைக்கச் சொல்லி அந்தத் தாயுள்ளம் ஊமையாய் அழுதது.

எந்திரத்தனமாக நலங்கு வைத்து விட்டு மீண்டும் ஷைலுவைப் பிரிய மனமில்லாமல், அவளின் பக்கத் திலே அமர்ந்து கொள்ள, அன்றிரவு அவர்களுக்கு சிவ ராத்திரியாகிப் போனது.

சிபியின் அறையில் சந்தோஷத்தில் உறக்கம் வராமல் தவித்தவன், ஷைலுவை சந்தித்துப் பேச மனம்

கொள்ளா ஆசைகள் இருந்தாலும், இந்நேரத்தில் அவளைத் தொந்தரவு செய்வது அநாகரிகம் என்று கருதி யதால் மாடிக்குச் சென்று கால் ஓயும் வரை நடந்து, ஒருவாறு டயர்டாக ஆனவுடன் படுக்கச் சென்றான்.

பக்கத்து அறையிலோ தேன்மொழி நிம்மதியாக உறங்கிக் கொண்டிருப்பதைப் பார்த்து விட்டு, விஜயகுமார் மனதை அரிக்கும் வேதனையுடன் அறைக்குள்ளே குறுக்கும் நெடுக்குமாக நடந்து கொண்டிருந்தார்.

சத்தம் கேட்டுக் கண்விழித்த தேன்மொழி, கணவர் உறங்காமல் இருப்பதைக் கண்டு விசாரிக்க, "எனக்கு உன்னைப் போல விச்ராந்தியாக இருக்க முடியவில்லை... சிபி, ஷைலுவின் கழுத்தில் தாலி கட்டி முடிக்கும்வரை எனக்கு நிம்மதி இல்லை...!" என்று குழப்பமாகப் பேசிய வரைக் கையமர்த்தி,

"நானே நிம்மதியாக இருக்கேன்... நீங்க ஏன் தேவையில்லாமல் குழப்பிக்கிட்டு இருக்கீங்க...? எல்லாம் நல்லபடியா நடக்கும்... நம்ம பையன் சந்தோஷமா இருக் கத்தான் போறான்... பாருங்கள்...!" என்று சமாதனம் செய்தார்.

இருந்தாலும் மனைவியின் பேச்சில் சமாதானம் அடைய மறுத்து, "ப்ச்...நீ தூங்கு..." என்றவர், "இதுக்குத் தான் நான் பயந்தேன்... என் பேச்சைக் கேட்டால் தானே... என்ன நடக்கப் போகிறதோ...?" என்று மீண்டும் புலம்ப ஆரம்பிக்க, தேன்மொழி அவரை வேடிக்கையாகப் பார்த்து விட்டு மீண்டும் தன் தூக்கத்தைத் தொடர்ந்தார்.

சுஜாவும் சஞ்சய்யும் சந்தோஷத்தில் உறங்கவில்லை என்றால்... மஹா, விஸ்வநாத், விக்கி, ஷைலு, சுரேஷ், திவ்யா வேதனையில் உறங்காமல் நேரத்தைக் கடத்திக் கொண்டிருக்க, மணி நான்கு ஆனதும் அவளை ரெடியாகச் சொல்லி விட்டு சுஜா நகர்ந்ததும்தான் ஷைலுவுக்கு நடக்கப் போகிற பயங்கரம் புரிந்தது.

அமர்ந்திருந்த இடத்தை விட்டுச் சிறிது கூட நகராமல் முழங்காலில் முகத்தைப் பதித்து அழுது கொண்டிருந்தவளைச் சமாதானப்படுத்திக் குளிக்க வைத்து அலங்காரத்தைச் செய்ய, அசையாமல் கல் மாதிரி அமர்ந்திருந்தவளைப் பார்க்கப் பார்க்க நெஞ்சம் பதறியது மஹாவுக்கு.

பியூடிஷியன் அலங்காரத்தை முடித்துப் புடவை கட்டி விட்டுச் சென்ற பிறகு அவரும் கடனே என்று ரெடியாகி மனப்பாரத்தோடு காத்திருக்க, முஹூர்த்த நேரம் நெருங்குகிறது என்று அழைக்க வந்தவர்களைக் காத்திருக்கச் சொல்லி விட்டுப் பாத்ரூம் சென்றாள். விஷயம் தெரிந்தவர்களுக்கோ இன்னும் சில வினாடிகளில் ஷைலு வேறொருத்தனுக்கு மனைவியாகப் போவதைப் பார்க்கப் பிடிக்காமல், மேடைக்கு வரப் பிடிக்காமல் ஓர் ஓரமாகக் கவலையோடு நின்று கொண்டிருந்தார்கள்.

பாத்ரூம் சென்று திரும்பியவளின் முகம் சற்றுத் தெளிந்திருக்க, எவ்விதப் பதட்டமும் இல்லாமல் சிபியின் பக்கத்தில் அமரவும், அதைக் காணச் சகிக்காமல் விஸ்வநாத்தும் சுரேஷும் முகத்தைத் திருப்பிக் கொள்ள,

திவ்யாவின் விழிகளில் நீர் பெருக்கெடுக்க, யாருக்கும் தெரியாமல் ரகசியமாகக் கண்களைத் துடைத்துக் கொண்டிருந்தாள்.

மஹாவுக்கு இத்தனை வருட வாழ்க்கை அனுபவத்தில் எதையும் தாங்கும் கலை கை வந்ததினால், மனக் குமுறல்களை மறைத்து வெளியே அமைதியாக நின்றிருந்தார்.

ஷைலுவின் பார்வை தன்னை நேசித்தவர்களை ஒரு தடவை ஆசையோடு வருடிச் செல்ல, பெரியவருக்கு அவள் பார்வையில் இருந்த ஒருவித அமைதி பயத்தைக் கிளப்ப, அவளையே பீதியுடன் பார்த்துக் கொண்டிருந்தார்.

திடீரெனக் கெட்டி மேளம் முழுங்கும் சத்தம் கேட்டு சுயநினைவிற்கு வந்த மஹா, மணமேடையைக் கவனிக்க, ஷைலுவுக்கு சிபி மங்கள நாணைப் பூட்ட, ஷைலு எவ்விதச் சலனமுமில்லாமல் தலை குனிந்து ஏற்றுக் கொள்ள, பெற்றவர்களின் முகத்தில் பெரும் நிம்மதி சூழ்ந்தது.

அக்காவின் கணவர்களுக்கோ சந்தோஷத்தில் முகம் மலர, சாதனா தேமே என்று கவனிக்க, நல்லிக்கோ அவள் நினைத்தது எதுவுமே நடக்காதது கண்டு எரிச்சல் மிக, அட்சதையை ஆத்திரத்துடன் தங்கை மீது வீசி யெறிந்தாள். மற்ற நால்வரும் கண்ணீருடன் அட்சதை தூவ, விஜயகுமார் பெரும் நிம்மதியோடும் சந்தோஷத்

தோடும் அட்சதை தூவ, தேன்மொழியின் பார்வை, "நான் தான் சொன்னேனே...!" என கணவர் மீது பாய, அவரின் முகம் புன்னகையில் விரிந்தது.

ஷைலுவின் மனக்குமுறல்களைக் கண்டு அந்த ஆண்டவனுக்கே பொறுக்கவில்லையோ என்னவோ...?

தாலி கட்டி முடிந்ததும் சிபியின் முகம் கோடி நட்சத்திரங்களைத் தத்தெடுத்த மாதிரி சந்தோஷத்தில் ஒளிர, அவனின் மனது சந்தோஷ சம்சார பாரத்தை சுமக்க முடியாமல் அக்னியைச் சுற்றி வர எழுந்தவன், நெஞ்சைப் பிடித்துக் கொண்டு சரிந்தான்.

ஷைலுவின் திருமணத்தை விரும்பியவர்களின் முகம் புன்னகையில் குளித்த சில வினாடிகளில், அங்கு நடந்த கலவரத்தில் அது இருக்கும் இடம் தெரியாமல் பறந்தோட,

எல்லோருமே அதிர்ச்சியில் சிலையானார்கள்.

ஒரு சில வினாடிகள் எதுவும் புரியாமல் திக்பிரமை பிடித்து நின்றிருந்தவர்கள், அடுத்த நொடி பாய்ந்து வந்து எதையும் உணரமுடியாமல் அதிர்ச்சியில் உறைந்து போயிருந்த ஷைலுவை சுஜாதா குழுவினர்கள் சூழ்ந்து கொள்ள, சூழ்நிலை புரிந்து அந்தக் கூட்டத்திலே இருந்த டாக்டர் ஓடி வந்து சிபியை சோதனை செய்தவர், அவ னின் உயிர்ப் பறவை அந்த இடத்திலே பறந்து போயிருப் பதைப் புரிந்து பரிதாபமாகக் கையை விரிக்க, கல்யாண வீடு கருமாதி வீடானது.

"நீங்க சொன்னதை நான் கேட்கலையே... அவனுக்குக் கல்யாணம் செய்து வைத்து சந்தோஷமாக வாழ்வதைப் பார்க்க வேண்டும் என்று நினைத்தேனே தவிர, என் மகனால் இந்தச் சந்தோஷத்தைத் தாங்க முடியாது என்பதை மறந்து போனேனே... என் அறியாமையால் என் மகனை இழந்துட்டேனே...!" என்று தேன்மொழி கதறி அழ,

சஞ்சய் அதிர்ச்சியாக நிமிர்ந்தார், புது சம்மந்தி யானவரின் கதறலில்.

"அப்போ சிபி நோயாளியா...?" என்ற உண்மை புரிய வர, அவரின் பார்வை ஆகாஷைக் கூறு போட, சுஜாவின் பார்வை ஆகாஷை நோக்கிக் குற்றம் சாட்ட, அவனின் தலை குற்ற உணர்வில் தொங்கிப் போனது.

தன் தங்கை மாதிரியான பெண்ணிற்கு நல்லது செய்ய வேண்டும் என்ற ஆர்வத்தில் செய்த ஒன்று, அவள் வாழ்க்கையையே அழித்து விட்டதை அறிந்து கலங்கிப் போய் நின்றிருந்தவனுக்கு, சிபியின் தாய் கதறிய கதறல்களும், அவனுக்கிருந்த குறையும் அப் பொழுதுதான் புரிய வர... அவனை மேலும் கலங்கடிக்க... தான் எவ்வளவு பெரிய துரோகத்தை ஒரு சிறிய பெண் ணிற்குச் செய்து விட்டோம் என்ற குற்ற உணர்வில் மருகியவனை ஷைலுவின் பெற்றோரும், அவளைச் சேர்ந்தவர்களும் பார்வையாலே எரிக்க, அவனால் தலையைக் குனிந்து கொள்வதைத் தவிர வேறெதும் செய்ய முடியாதவனாக இருந்தான்.

நடந்ததை ஜீரணிக்க முடியாமல் அங்கிருந்த எல்லோருமே தத்தளிக்க, மஹாவின் கைப்பிடியில் இருந்த ஷைலுவின் கண்கள் கொஞ்சம் கொஞ்சமாக செருகு வதைக் கண்டு பயந்து, சுரேஷைத் துணைக்கழைத்தார். அவளின் கன்னத்தைத் தட்டி அழைக்க, அவளிடம் இருந்து எவ்விதச் சலனமும் இல்லாததால் பதறி... சுரேஷ் போர்க்கால நடவடிக்கையாய் திவ்யா, சுஜாவுடன் ஷைலு வைக் காரில் மருத்துவமனைக்கு அழைத்துச் செல்ல, அவள் விஷம் அருந்தியிருக்கிறாள் என்று அறிந்ததும், பேச வார்த்தைகளற்று ஊமையானார்கள்.

மஹாவுக்கு, மணமேடைக்குச் செல்லும்முன் அவளிடம் கண்ட தெளிவும், சற்று முன் அவள் பார்த்த பார்வைக்கான அர்த்தமும் புரிய... ஊரார் பேச்சுக்கும், குடும்ப கௌரவத்திற்கும் பயந்து ஒரு சிறிய பெண்ணைப் பலி கொடுத்து விட்டோமே என்ற ஆற்றாமை தாங்க முடியாமல், தலை சுற்றி அங்கேயே மயங்கி விட, விஸ்வ நாத்தின் நிலைமை மிகவும் மோசமானது.

சுஜாதா, தன் உயிரே தன்னை விட்டுப் போனது போல ஜடமாகக் கன்னங்களில் கண்ணீர் வழிய அமர்ந் திருக்க, சஞ்சய் முகம் இருளக் கைகளைப் பிசைந்த படி ஹாஸ்பிடல் வராண்டாவில் புலி போல நடந்து கொண்டிருந்தார்.

மொத்தத்தில் எல்லோருமே ஷைலு உயிர் பிழைத்து விட வேண்டி மானசீகமாக ஆண்டவனின் பாதத்தில் சரணாகதி அடைய, விக்கி ஹாஸ்பிடல் வளாகத்தில்

அமைந்திருந்த விநாயகர் கோயிலின் முன் பழியாய்க் கிடந்தான்.

ஷைலுவின் நிலைமை மிகவும் கவலைக்கிடமாக இருப்பதை உணர்ந்து, இனியும் கார்த்திக்கிடமிருந்து மறைப்பதில் பிரயோஜனமில்லை என்று உணர்ந்த சுரேஷ், விஷயத்தை முழுதாகச் சொல்லாமல், அவசரம் என்று மட்டும் கூறி, அவனை உடனே புறப்பட்டு வரச் சொல்லவும்... என்னதென்று புரியாவிட்டாலும் மனதின் ஓரம் சுரேஷின் குரலில் இருந்த ஒருவித பதட்டம், நடுக்கம் இதெல்லாம் ஏதோ அசம்பாவிதம் என்று மட்டும் உணர வைக்கக் கிடைத்த ப்ளைட்டில் உடனே கிளம்பி னான்.

சிபியின் உடலை வீட்டுக்குக் கொண்டு சென்றதும், ஆகாஷ் மனைவியுடன் ஹாஸ்பிடலுக்கு விரைய, அங்கு யாருமே அவனிடம் பேசத் தயாராக இல்லை என்பது அங்கு நிலவிய சூழ்நிலையே புரிய வைக்க, அவனும் ஒரு மூலையில் ஷைலு பிழைத்துக் கொள்ள வேண்டும் என்று தவமிருந்தான்.

இதுவரை ஷைலுவை ஒரு தங்கையாக, அவ்வளவு ஏன்... ஒரு உயிருள்ள மனுஷியாகக் கூட நினைக்காத நல்லிக்கு, தான் எவ்வளவு பெரிய கொடுமையை அவளுக்கு இழைத்திருக்கிறோம் என்று உணர, அவள் கண்களும் கண்ணீரைச் சுரக்க, தங்கைக்காக அவளின் மனது முதல் முறையாகக் கடவுளைச் சரணடைந்தது.

விமான நிலையத்திற்கு வந்திருந்த நண்பனின் முகக் குறிப்பை அறிந்து, கேள்விக் கணைகளால் துளைத்து எடுத்த கார்த்திக்கிடம் எதையும் பேசாமல், மனதையும் வாயையும் இறுக மூடிக்கொண்டு வர, அவனின் நெஞ்சுக் கூட்டிற்குள் லேசான பயம் பரவ ஆரம்பித்தது.

தன் வீட்டில் யாருக்கும் எதுவுமில்லை என்பது சென்னை விமான நிலையத்தில் காலை எடுத்து வைத்ததுமே தாயிடம் பேசித் தெரிந்து கொண்டு, ஷைலுவைப் பற்றி விசாரிக்க...

அவரிடமிருந்து சரியான பதில் வராமல் மழுப்பலாக வந்ததிலிருந்தே கார்த்திக்கின் மனம் பயத்தில் தத்தளிக்க வைத்தது.

அவன் பக்கமே திரும்பாமல், கருமமே கண்ணாக கார் ஓட்டிய சுரேஷின் முகத்திலிருந்த ஒருவித அமைதி அவனின் பயத்தை வலுவாக்க, கார் ஸ்டீயரிங்கைப் பிடித்திருந்த அவனின் கையைப் பிடித்திழுத்து, "என் ஷைலுவுக்கு என்னடா ஆச்சு.. ? ஏன் யாருமே எதுவுமே சரியாகச் சொல்ல மாட்டேன்கிறீங்க... இப்போ நீ வாயைத் திறந்து சொல்லப் போறியா... இல்லையா...?" என்று ஆக்ரோஷமாக உலுக்கிய வேகத்தில், கார் சுரேஷின் கட்டுப்பாட்டிலிருந்து நழுவி நெடுஞ்சாலையிலிருந்து ரோட்டோரமாக இருந்த புளிய மரத்தில் ஒரு வேகத்தோடு மோதி நிற்க, இருவருமே ஆளுக்கொரு மூலையாக வண்டியிலிருந்து தூக்கி எறியப்பட்டார்கள்.

வீடு கட்டுவதற்காக ஓரமாகக் கொட்டி வைக்கப் பட்டிருந்த மணல்மேட்டில் விழுந்ததால் எவ்வித அடியோ, ரத்தக் காயமோ இல்லாமல் தப்பிப் பிழைத்த சுரேஷ், சுதாரித்து எழுந்து கார்த்திக் எங்கேயென்று கண்களை சுழல விட, சற்றுத் தூரத்தில் முன் நெற்றியில் அடிபட்டு ரத்தம் வடிய கார்த்திக் மயங்கிக் கிடப்பதைக் கண்டதும் மனம் பதைபதைக்க அவனிடம் ஓடினான்.

அதற்குள் கூட்டம் கூடி விட, அவர்களின் உதவி யோடு அவனைக் காரில் ஏற்றிக் கொண்டு ஹாஸ்பிட லுக்குச் செல்லும் வழியிலே மருத்துவ மனைக்கு தகவல் சொல்லி விட, கார் வந்து நின்றதும் ரெடியாக இருந்த ஸ்ட்ரெச்சரில் படுக்க வைத்து உள்ளே தள்ளிச் செல்ல, மகனுக்கு இந்தச் செய்தியை எப்படித் தெரிவிக்கப் போகிறோம் என்ற வேதனையில் அழுதழுது ஓய்ந்து போயிருந்த மஹா, மகனை அழைக்கச் சென்றிருந்த சுரேஷ் தலை கலைந்து சட்டையெல்லாம் ரத்தத்துடன் முகமெல்லாம் ஓய்ந்து கார்த்திக் இல்லாமல் தனியாகத் திரும்பி வருவதைக் கண்டதும் அவரின் உடல் பயத்தில் விறைத்தது.

மனைவியின் நிலையைக் கவனித்து விட்டு வேக மாக சுரேஷை நெருங்கிய விஸ்வநாத்திடம், வழியில் நடந்தவைகளைக் கூறி அழ, அதற்குள் அவர்களை நெருங்கி விட்டிருந்த மஹாவுக்கு விஷயம் தெரிந்து அழுது கொண்டே கார்த்திக் அனுமதிக்கப்பட்டிருந்த வார்ட் நோக்கி ஓட, மற்ற இருவரும் அவரைப் பின்தொடர்ந்து சென்றார்கள்.

மயக்கத்திலிருந்த மகனைக் கண்டதும் மஹா பெருங்குரலெடுத்து அழ, ரத்தத்தைத் துடைத்துக் காயத்திற்கு மருந்திட்டுக் கொண்டிருந்த நர்ஸ், சைகை யாலே சத்தம் போடாதீர்கள் என்றதும், மனைவியை அணைத்து ஆறுதல் கூறிய கணவரின் தோளில் சாய்ந்து கண்ணீரில் கரைந்து கொண்டிருந்தவரின் தோளில் ஒரு கை விழ, திடுக்கிட்டு நிமிர்ந்தவரிடம், "ஷைலு கண் விழிச்சிட்டா பெரியம்மா... வந்து பாருங்க...!" என்ற திவ்யாவிடம், கார்த்திக்கைக் காட்டிப் பேச முடியாமல் அழுதார்.

"அண்ணனுக்கு எதுவும் ஆகாது பெரியம்மா... வெறும் அதிர்ச்சியில் வந்த மயக்கம்தான்னு டாக்டர் சொல்லியிருக்கார்... இன்னும் கொஞ்ச நேரத்தில் அண்ணன் கண் விழிச்சிடுவார்... நீங்க வந்து முதலில் ஷைலுவைப் பாருங்க...!" என்று சமாதானப்படுத்தி, சுரேஷை அங்கிருக்கச் சொல்லி விட்டு மற்ற இருவரை அழைத்துச் சென்றாள்.

ஏற்கெனவே கார்த்திக்குக்குத் துரோகம் செய்து விட்டோம் என்ற குற்ற உணர்ச்சியில் நடைப்பிணமாக இருந்தவளுக்குத் தன்னை ஏன் காப்பாற்றினார்கள் என்கிற சுய பச்சாதாபமும் சேர்ந்து கொள்ளத் தன்னையே கவலையுடன் பார்த்துக் கொண்டிருந்த பெற்றோரைக் கண்டதும் கண்ணீர் கரகரவென வழிய, அவர்களை எதிர் கொள்ளத் தெம்பில்லாமல் முகத்தைத் திருப்பிக் கொள்ள, சுஜாதா துடித்துப் போனார்.

மகளின் அருகில் அமர்ந்து அவள் கையைப் பிடித்து, "எங்களை மன்னிச்சிடும்மா... உனக்கு நல்லது செய்கிறோம்னு நினைத்து உன் வாழ்க்கையையே அழித்து விட்டோம்... இப்படியெல்லாம் நடக்கும்னு நாங்கள் நினைத்துப் பார்க்கவே இல்லை... உன்னை இந்தக் கோலத்தில் பார்க்கவா அவசரமாக இந்தக் கல்யாணத்தை ஏற்பாடு செய்தேன்...?" என்று கதறியழுத தந்தையின் அழுகை மனதைக் கரைப்பதற்குப் பதில் கார்த்திக்குக்கு செய்த துரோகம் அவளின் மனதை அறுக்க, எதையும் பேசத் திராணியில்லாமல் கண்களை மூடிக் கொள்ள, இயலாமையுடன் கசங்கிய முகத்துடன் ரூமை விட்டு வெளியேறினார்.

மகளின் நிலைமை கண்டு சுஜாதா வெதும்பி னாலும், அவள் சம்மதத்தின் பேரில் நடந்த கல்யா ணத்தில் மகள் எதற்காக விஷம் அருந்தினாள் என்ற கேள்வி மட்டும் அவர் மனதை அரித்துக் கொண்டே இருக்க,

அதை யாரிடம் கேட்டுத் தெளிவுப்படுத்திக் கொள் வது என்று தெரியாமல் தவித்துக் கொண்டிருந்தார்.

கணவர் வெளியேறியதும் மகளின் அருகில் அமர்ந்து, கண் மூடிப் படுத்திருந்தவளின் தலையை மென்மையாக வருட,

அந்த இதத்தில் கண் திறந்த மகளின் கண்களைக் கூர்மையாக நோக்கியவரின் பார்வையைச் சந்திக்க முடியாமல், பார்வையைத் தழைத்த ஷைலுவிடம்,

"இந்தக் கல்யாணம் உன் முழு சம்மதத்தோடு நடந்த கல்யாணம்... ஆனால், நினைத்துப் பார்க்க முடியாத அளவிற்கு என்னென்னமோ நடந்து விட்டது... இப் பொழுது அதைப் பற்றிப் பேசிப் பிரயோஜனமில்லை. என் கேள்வியெல்லாம் நீ எதுக்காக விஷம் குடிச்சே...?" என்று ஆராய்ச்சி நிறைந்த பார்வையோடு கேட்டு நிறுத்த, அதுவரை சலனமில்லாமல் கேட்டுக் கொண்டிருந்தவள் தாயின் கேள்வியில் மனம் திடுக்கிட, மிரட்சியோடு நோக்கினாள்.

அடுத்த கணமே பதில் சொல்ல முடியாமல் பார்வையைத் திருப்பிக் கொள்ள, அவளைக் கூர்மையாக நோக்கி,

"இரவு சரியாகத் தூங்காததினால் ஏற்பட்ட அசதியிலும், சிபியின் திடீர் மரணம் ஏற்படுத்திய அதிர்ச்சியிலும்தான் நீ மயங்கி விழுந்ததாக எல்லோரும் நினைத்துக் கொண்டிருக்கிறார்கள். ஆனால், நீ விஷம் குடித்தது எனக்கும் சுரேஷுக்கும் மற்றும் திவ்யாவுக்கும் மட்டும்தான் தெரியும்... உங்கப்பாவிடம் நான் இதைப் பற்றிச் சொல்லவே இல்லை... சொல்லு, எதுக்காக இப்படி ஒரு காரியத்தைச் செய்தாய்...?" என்று கேட்டும், அப் பொழுதும் அவளிடமிருந்து மௌனம் மட்டுமே பதிலாக வந்தது.

அவரே தொடர்ந்து, "அப்போ இந்தக் கல்யாணத்தில் உனக்கு விருப்பமில்லை... அப்படித் தானே...? உன் மனதில் வேறு யாரோ இருப்பதினால் அதையும் விட்டுக்

கொடுக்க முடியாமல், இதையும் ஏற்றுக் கொள்ள முடி யாமல் இப்படி ஒரு முடிவு எடுத்திருக்கே... சரியா...?" என்று சற்றுக் கடுமையாகக் கேட்கக் கேட்க,

ஷைலுவின் கன்னத்தில் வழிந்த கண்ணீர் அவரின் கேள்விக்குப் பதில் கொடுக்க, மகளின் மனம் புரிந்து அந்தத் தாய் மனம் ஓய்ந்து போனது.

"நீ உன் மனதை எங்களிடம் சொல்லியிருந்தால் நாங்கள் இந்தத் திருமணத்தை ஏற்பாடு செய்திருக்கவே மாட்டோம்... எதுக்காக உன் ஆசையைக் கொன்று எங்களுக்கு நீ சம்மதம் கொடுக்கணும்...? சொல்லுடி..." என்று மகளின் வாழ்க்கை பாழாய்ப் போன ஆங்காரத்தில் அவளை உலுக்க...

அதற்கும் பதில் சொல்லாமல் அழுதவளைப் பார்த்துத் தலையில் அடித்து அழுதவரின் கையைப் பிடித்தாள்.

மகளின் ஸ்பரிசம் உணர்ந்து அழுகையை நிறுத்தி, "யார் ஷைலு உன் மனதில் இருக்கிறவன்...? சொல்லு. யாராக இருந்தாலும் பரவாயில்லை... அப்பாவிடம் பேசி அவனுக்கே உன்னைக் கல்யாணம் செய்து வைக்கிறேன்... இன்றைக்கு நடந்ததெல்லாம் ஒரு கெட்ட கனவா நினைச்சு மறந்திடு. சொல்லு, யாரும்மா அது...?" என்று அழுகையினூடே கேட்ட தாய்க்கு, விரக்தியாகப் புன்னகைத்தாள்.

"என் வாழ்க்கையில் எல்லாமே நடந்து முடிஞ் சிடிச்சி... இனியும் நடக்க ஒன்றுமே இல்லை... என்னை

உயிராக நேசித்தவருக்கு நான் செய்த துரோகம்தான் என்னை இப்படி மூளியாக நிற்க வெச்சிடுச்சி... இனியும் இதைப் பற்றிப் பேசாதீங்க, ப்ளீஸ்..." என்று கையெடுத்துக் கும்பிட,

மகளின் விரக்தியான பேச்சு, அந்தத் தாயின் உள்ளத்தைக் கசக்கிப் பிழிய, இயலாமையுடன் வாயைப் பொத்திக்கொண்டு அழுதார்.

நடந்தவைகளை ஜீரணிக்கத் தெம்பில்லாமல் அசதியுடன் கண்களை மூடியவள்... மஹாவின், ஷைலு என்று குரல் கேட்டுக் கண்களைத் திறக்க...

கார்த்திக்கின் நினைவில் மீண்டும் கண்களில் கண்ணீர் ஊற்றெடுக்க,

சிரமத்துடன் எழுந்தவளைப் பாய்ந்து அணைத்துக் கொண்டார் மஹா.

"உனக்கு ஏதாவது ஆகியிருந்தால் என் பையனுக்கு என்ன பதில் சொல்லியிருக்க முடியும்...?" என்று அழுது புலம்ப, திவ்யாவுடன் சோர்வுடன் வெளியேறிக் கொண்டிருந்த சுஜாதாவின் காதில் மஹாவின் கதறல் விழ,

நம் பெண்ணிற்கு மாப்பிள்ளையாக வர ஆசைப்பட்ட கார்த்திக்தான் தன் பெண்ணின் மனதைக் கவர்ந்தவன் என்று புரிந்ததும், உடம்பிலிருந்த சக்தியெல்லாம் வடிந்தது போலிருக்க... அங்கிருந்த நாற்காலியில் தொப்பென்று தலையைப் பிடித்துக் கொண்டு அமர்ந்தார்.

தன் பெண்ணின் மனதில் யாருமில்லை என்று பெருமையாகச் சொல்லிச் சொல்லியே மகள் தன் விருப்பத்தைச் சொல்ல முடியாத நிலைமைக்குத் தள்ளப் பட்டதற்குத் தான்தானே காரணம் என்ற குற்ற உணர்ச்சி யில் முகத்தை மூடியபடி அழுது கொண்டிருந்த மனைவியை நெருங்கிய சஞ்சய், அவரின் கண்களைத் துடைத்து விஷயம் புரியாமலே அவரைச் சமாதானப் படுத்தி, கார்த்திக் கார் விபத்தில் அடிபட்டு அட்மிட் ஆகி யிருப்பதைக் கூறியதுமே விலுக்கென்று நிமிர்ந்த சுஜாதா,

அவனிருக்கும் அறைக்கு ஓட்டமும் நடையுமாக செல்ல, கண்மூடி மயக்கத்தில் படுத்திருந்த கார்த்திக்கைக் கண்டதும் அவரின் மனம் அணையுடைக்கத் தன்னைக் கட்டுப்படுத்த முடியாமல் அழுதார்.

அத்தையின் அழுகைக்குக் காரணம் புரியாமலே அவரைச் சமாதானப்படுத்திக் கொண்டிருந்த சுரேஷ், கார்த்திக்கிடம் அசைவு தெரிந்ததுமே அவரை அமைதிப் படுத்தி அவனிடம் செல்ல, கண் விழித்ததுமே ஷைலுவின் தாயைக் கண்டதும் ஒன்றும் புரியாமல் வலியோடு முனகிக் கொண்டே எழுந்து அவர்களை வரவேற்றான்.

"என்ன ஆன்ட்டி... என்னைப் பார்க்க வந்தீங் களா...? எனக்கு ஒன்றுமில்லை... ஜஸ்ட், சிறிய அடி தான்... அதுக்கு இவன் ஊரையே கூட்டிட்டானா...?" என்று கேட்டுப் புன்னகைக்க,

சுஜாதாவிற்கு ஒரு நிமிடம் என்ன சொல்வதென்றே தெரியாமல் விழித்தவர், அடுத்த கணமே தன்னைச்

சுதாரித்து, முகத்தில் வலிய புன்னகையை வரவழைத்துக் கொண்டார்.

"ஆ... ஆமாம்ப்பா... சுரேஷ் போன் செய்தான்... அதுதான் பார்க்க வந்தோம்... இப்போ பரவாயில் லையா...?" என்று நலம் விசாரிக்க...

சுரேஷ், அத்தையின் சமயோசிதமான பதிலில் வாயடைத்துப் போயிருந்தவன் தன்னை மீட்டுக்கொண்டு, "நான்தான்டா சொன்னேன்..." என்றவன் தொடர்ந்து,

"திவ்யா, அத்தை, மாமா எல்லோரும் இவ்வளவு நேரம் இங்கேதான் இருந்தார்கள்... இப்போதான் அவர்களைக் காபி குடிக்க வைக்க திவ்யாவுடன் கேன் டீனுக்கு அனுப்பி வைத்தேன்..." என்று சமாளித்தவன்,

அத்தையிடம் திரும்பி, "அத்தை நீங்க மஹா அத்தையைப் பார்க்கணும்னு சொன்னீங்களே... வாங்க அழைச்சிக்கிட்டுப் போறேன்...!" என்றான் நண்பனுக்குத் தெரியாமல் அவன் பக்கம் கண்ணைக் காட்டி.

ஏற்கெனவே சூழ்நிலையை அறிந்துகொண்ட சுஜா, சட்டென்று புரிந்துகொண்டு கார்த்திக்கிட்மிருந்து விடைபெற்றுக் கொள்ள,

அவனிடம் பெற்றோரை அழைத்து வருகிறேன் என்று கூறி விட்டு, வெளியே வந்தான் அத்தையுடன்.

"ரொம்ப தேங்க்ஸ் அத்தை..." என்றதுமே,

"ஷைலுவைப் பற்றிச் சொல்லாமல் இருந்ததற்கா சுரேஷ்..." என்று வேதனையுடன் கேட்டதுதான் தாமதம்...

நடந்து கொண்டிருந்தவன் அதிர்ச்சியில் நின்று விட...

"எனக்கு எல்லாம் தெரியும் சுரேஷ்... நீயாவது இதைப் பற்றி ஒரு வார்த்தை சொல்லியிருக்கலாமே... ஷைலு வாழ்க்கை இப்படிச் சீரழிந்திருக்காதே...!" என்று கண்ணீர் விட, விக்கித்துப் போனான்.

அடுத்த நொடியே தன்னைச் சுதாரித்து, "என்ன செய்யச் சொல்றீங்க அத்தை? அந்தப் பைத்தியக்காரி சத்தியம் என்ற ஒரு வார்த்தையில் என்னைக் கட்டிப் போட்டு விட்டாள். ஷைலுவின் வாழ்க்கை இப்படி ஆகி விட்டதே என்ற பயத்தில் கார்த்திக்கை வரவழைத்து விட்டேனே தவிர, இதுவரை அவனிடம் எதுவுமே சொல்லலை. ஆனால், சொல்லாமலும் இருக்க முடியாது. ஷைலுவுக்கு கார்த்திக் இங்கிருக்கிற விஷயம் தெரிந்து விட்டது. கார்த்திக்கிடம் தன்னைப் பற்றிச் சொல்ல வேண்டாம்னு சொல்லியிருக்கிறாள். சொல்லுங்க அத்தை, நான் என்னதான் செய்ய...?" என்று கேட்டவனைப் பார்க்கப் பரிதாபமாக இருந்தது.

சிறிது நேரம் யோசித்தவர் ஒரு முடிவுடன், "இது மறைக்கக் கூடிய விஷயமில்லை சுரேஷ்... கார்த்திக் தம்பியிடம் எதையும் மறைக்காதே...! அவர் ஷைலுவைச் சந்திச்சிப் பேசட்டும்... கண்டிப்பாக அவரால் அவளைப் புரிந்து கொள்ள முடியும். அதற்குள் நான் எல்லோரையும் அழைத்துக் கொண்டு சென்று விடுகிறேன்...!" என்றவரை ஆச்சரியமாகப் பார்த்தான்.

"என்ன சுரேஷ் அப்படிப் பார்க்கிறே...? அவ என் பெண்... எதையும் விட என் பெண்ணின் வாழ்க்கையும், அவள் சந்தோஷமும்தான் எனக்கு முக்கியம்... வாழ ஆரம்பிப்பதற்குள்ளே வாழ்க்கையைத் தொலைச்சிட்டு அவள் நிற்பதை எப்படி என்னால் பார்த்துக்கிட்டு சும்மா இருக்க முடியும்...? அவ ஆசைப்பட்ட வாழ்க்கையை அமைத்துத் தருகிற வரை எனக்கு நிம்மதியுமில்லை, தூக்கமுமில்லை... யார் என்ன சொன்னாலும்..." என்று கண்களைத் துடைத்துக் கொண்டு உறுதியோடு பேச...

சுரேஷுக்குப் பெருமையாக இருந்தது.

அவர் சென்றதும் மீண்டும் கார்த்திக்கின் அறைக் குள்ளே நுழைந்தவனிடம், "ஷைலு அம்மா எதுக்கு இங்கே வந்தாங்க...? அப்படி வர வேண்டிய அவசியம் என்ன...? அவங்க நிச்சயம் என்னை மட்டும் பார்க்க வரவில்லை... உண்மையைச் சொல்...?" என்று சந்தேகக் கண்ணோடு துளைக்க, நண்பனின் கேள்வியில் மனம் திடுக்கிட்டது.

அவனுக்கு ஜூஸ் போடும் சாக்கில் திரும்பி நின்று, "ஹேய்... உன்னைப் பார்க்கத்தான் வந்தாங்க... இல்லை யென்றால் அவங்க இங்கே வர வேண்டிய அவசியம் என்ன இருக்கு...?" என்று அவனின் பாணியில் திருப்பிக் கேட்டான்.

அதைச் சிறிதும் நம்பாமல், "இஸ் இட்... எங்கே அதை என் முகத்தைப் பார்த்துச் சொல்...!" என்று கட்டிலிலிருந்து எழுந்து வந்து சுரேஷை முரட்டுத்தன

மாகத் தன் பக்கம் திருப்ப, ஏற்கெனவே கார்த்திக்கின் கேள்வியில் ஆடிப் போயிருந்தவன், கார்த்திக்கின் எதிர் பாராத செயலால் நிலைகுலைந்து, தன் உணர்ச்சிகளை அடக்க முடியாமல் கண்கள் கலங்கி விட,

"சொல்லுடா... என் ஷைலுவுக்கு என்னடா ஆச்சு...? அவ உயிருக்கு...?" என்று ஆரம்பித்தவன், பாதியிலே நிறுத்தி, "சொல்லுடா..." என்று மீண்டும் வெறி பிடித்தவன், புளிய மரம் மாதிரி சுரேஷை உலுக்கினான்.

அதற்குமேல் எதையும் மறைக்க முடியாமல் நடந்த வற்றைக் கடகடவென்று கொட்ட, ஒரே ஒரு நிமிடம் தான் அதிர்ந்தான்.

அடுத்த நொடி புயல் போல விருட்டென்று கிளம்பி யவன், சுரேஷ் கெஞ்சித் தடுத்தும் கேளாமல் ஷைலுவின் அறைக்குச் செல்ல, விக்கியைத் துணைக்கு வைத்து விட்டு வீட்டுக்குக் கிளம்பிக் கொண்டிருந்த எல்லோரும், கார்த்திக்கின் திடீர் வருகையால் ஒன்றும் புரியாமல் அதிர்ந்து நின்றார்கள்.

உக்கிரத்துடன் அவன் ஷைலுவின் கட்டிலின் அருகே செல்வதை சஞ்சய் தடுக்க எத்தனிக்க, அவரின் கையைப் பிடித்துத் தடுத்த மனைவியைப் புரியாமல் நோக்கினார்.

மயக்கம் தெளிந்ததிலிருந்து அழுதழுது ஓய்ந்த தினால் முகம் வீங்கி உடல் சோர்வடைய, களைப்புடன் கண் மூடிப் படுத்திருந்தவளை அறையில் நிலவிய திடீர்

நிசப்தம் தாக்க... சோம்பலாகக் கண் திறந்தவள், தன் எதிரே கோபாவேசத்தோடு நின்று கொண்டிருந்த கார்த்திக்கைக் கண்டதும், அவளின் பெரிய விழிகள் பீதியில் மேலும் அகல,

"க...கா...கார்த்திக்..." என்று திக்கியபடி பயத்துடன் சிரமத்துடன் எழ முயற்சி செய்தவளைத் தடுத்து,

"ஏன்டி இப்படிச் செய்தே...?" என்று உறுமினான் கோபாவேசத்தோடு.

இதுவரை கார்த்திக் கோபப்பட்டுப் பார்த்ததில்லை என்பதால் சர்வமும் அடங்கிக் கோழிக் குஞ்சாய் நடுங்க "நா... நான்..." என்றவளுக்குப் பேச முடியாமல் தொண்டை அடைத்துக் கொள்ள, கையெடுத்துக் கும்பிட்டவளின் கன்னங்களில் கண்ணீர் ஆறாக வழிந்தோடியது.

தன் பலத்தையெல்லாம் ஒன்று திரட்டி, "உங்களுக்குத் துரோகம் பண்ணிட்டேன்... என்னை மன்னிச்சிடுங்க...!" என்பதற்குள் மீண்டும் வார்த்தைகள் தொண்டைக்குள் சிக்கிக் கொள்ள, முகத்தை மூடிக் கொண்டு அழுதாள்.

விஷயம் தெரிந்தவர்கள் தவிர மற்றவர்களுக்கு இது புது விஷயமாய் இருக்க, ஆச்சரியம் ப்ளஸ் கலவரத்துடன் கவனித்துக் கொண்டிருந்தார்கள். விஷயம் புரிந்து சஞ்சய் மனைவியின் முகத்தைக் கேள்வியாக நோக்கி, "அப்போ நம்ம ஷைலு... கார்த்திக்கை..." என்று மேலே பேச முடியாமல் நிறுத்தியவருக்கு, சுஜா கண்களை மூடித்

திறந்து ஆமாம் என்று தலையசைக்க, சஞ்சய் குற்ற உணர்ச்சியில் தளர்ந்துபோய் அமர, அவரின் தோள் களை ஆதரவாக அழுத்தினார்.

அழுது கொண்டிருந்தவளின் கைகளைப் பிரித் தெடுத்த கார்த்திக், "நான், எனக்குத் துரோகம் செய்ததைக் கேட்கலை... எதற்குடி விஷம் குடிச்சே...? உனக்கு ஏதா வது ஒன்று ஆகியிருந்தால் என் நிலைமை என்ன...?" என்று அதே ஆவேசத்துடன் கேட்க, அவனின் கேள்வி யில் ஷைலு உட்பட எல்லோருமே ஆடிப் போக, அதிர்ச்சி யின் உச்சத்திற்குச் சென்றார்கள்.

கார்த்திக் கோபமாக உள்ளே நுழைந்ததிலிருந்து பயத்தில் சுரேஷின் கையைப் பிடித்துக் கொண்டு நின்றிருந்த விக்கிக்குக் கார்த்திக்கின் கேள்வி இனிய அதிர்ச்சியைக் கொடுக்க...

தான் ஆண்பிள்ளை என்பது மறந்து அவன் கண் களில் கண்ணீர் தாரைதாரையாக வழிய, சுரேஷோ சிலையாகச் சமைந்து விட்டிருந்தான்.

கேன்டீன் போய் விட்டுத் திரும்பி வந்தவர்கள், ஷைலுவின் அறையில்... அதுவும் எல்லோரும் இருக்கும் பொழுதே தன் மகன் ஷைலுவுடன் பேசிக் கொண்டிருப் பதைக் கண்டதும் பதைபதைத்துப் போய் உள்ளே நுழைய முற்பட்டவரை, வெளியே நின்று இதையெல்லாம் கவனித்துக் கொண்டிருந்த நல்லி, அவரின் கையைப் பிடித்து, "விடுங்க பேசட்டும்..." என அமைதியாகக் கூற,

மஹா அவளை வேறு கிரஹத்து மனுஷி போல ஏற இறங்கப் பார்த்தார்.

தன்மேல் கார்த்திக் வைத்திருக்கும் காதல் அவளைப் பலவீனமாக்கப் பதில் சொல்லத் திராணி யற்று, 'இன்னுமா என்னை நேசிக்கிறே...?' என்ற ரீதியில் வெறித்துப் பார்க்க, அவனே தொடர்ந்து,

"எனக்குத் தெரியும்... இந்த மாதிரி ஏதாவது ஏடாகூடம் நடக்கும்னு தெரியும். ஆனால், இவ்வளவு சீக்கிரம் நடக்கும்னு தெரியாது... அப்படி உனக்குக் கல்யாணம் ஆகிப் போயிருந்தா கூட எனக்கு இந்தளவு பாதிப்பு இல்லைடி... நீ எங்கேயோ நல்லா இருக்கே என்று மனசைத் தேத்திக்கிட்டு உன் நினைவுல வாழ் நாள் முழுவதும் வாழ்ந்துடுவேன். "ஆனால், உன்னையே அழிச்சிக்க எப்படிடி உனக்கு மனசு வந்தது...? நீ இல் லாத இந்த உலகத்தில் நானும் இருப்பேன்னு எப்படி நினைச்சே?" என்று கேட்க,

ஷைலுவுக்கு 'இவரின் காதலுக்குத்தான் அருகதை இல்லையோ!' என்று நினைப்பு மேலோங்க, கண்ணீர் மீண்டும் ஊற்றெடுத்தது.

"இல்லை... இல்லை... நான் உங்க ஷைலு இல்லை. இந்தளவுக்கு என் மேல் உயிரையே வைக்கிற அளவுக்கு எனக்குத் தகுதி இல்லை. நான் ஒரு பாவி. உங்களுக்குத் துரோகம் செய்தவள். என்னை உங்கள் காதலால் மூழ்கடிச்சி என்னைக் கொல்லாதீங்க கார்த்திக்..." என்று ஆவேசம் வந்தவள் போல கதற,

அவளின் கையைப் பிடித்து, "யார் சொன்னது நீ எனக்குத் துரோகம் செய்தேன்னு... கண்டிப்பாக இல்லை... யூ ஆர் மை பியூரிட்டன் ஷைலு..." என... அவளின் கண்ணீரில் ஊறிய விழிகள், புரியாமல் அவன் விழிகளை ஊடுருவியது ஒரு வேகத்தோடு.

"ஆமாம்டா... நீ எனக்குத் துரோகம் செய்யணும்னு நினைச்சிருந்தால் எதுக்காக விஷம் குடிச்சே சொல்லு...? என்னைத் தவிர வேறு யாரையும் யாருக்காகவும் ஏத்துக்க முடியாமல்தானே விலை மதிக்க முடியாத உன் உயிரையே மாய்த்துக் கொள்ளத் துணிஞ்சே...?" என்ற கேள்விக்கு, அவளின் தலை அனிச்சை செயலாகத் தலையாட்ட,

"தட்ஸ் இட். இந்த முடிவு உன் முழு மனசோட எடுத்த தில்லை. ஒரு பயத்தில், பெற்றவர்களுடைய கவுரவத்தைக் காப்பாற்ற எடுத்த முடிவு. அதற்கு நீ எந்த விதத்திலும் பொறுப்பல்ல. அதுமட்டுமில்லை, உன் வாழ்க்கைத் துணை என்னைத் தவிர வேறு யாருமில்லை என்பதை உணர்த்தத்தான் இதெல்லாம் நடந்திருக்கு...!" என்று அவளைச் சமாதானப்படுத்த, ஒரு நிமிடம் வழக்கம் போல அவன் பேச்சில் மயங்கி ஊமையானாள்.

அடுத்த நொடியே விழித்துக் கொண்டு, "இல்லை... இனி நான் உங்களுடையவள் இல்லை. நான் வேறொருத்தரின் மனைவி. அதற்கு இதோ இந்தத் தாலி தான் சாட்சி. ப்ளீஸ் கார்த்திக்... நான் உங்கள் காதலுக்குத் தகுதியானவள் இல்லை... என்னை விட உங்களுக்கு அருமையான பெண் கிடைப்பாள்..."

என்று சொல்லி முடிப்பதற்குள், அவனின் கை அவளின் கன்னத்தில் இடி மாதிரி இறங்கியது.

அதிர்ச்சியில் எல்லோரும் செய்வதறியாது உறைந்து விட, திவ்யா அதிர்ச்சியை உதறி, ஷைலுவின் அருகில் வந்து அவளை அணைத்தபடி,

"அண்ணா ப்ளீஸ்... அவ ஏற்கெனவே நொந்து போயிருக்கிறா... அப்புறமா பேசிக் கொள்ளலாமே...!" என்று ஏறக்குறைய கெஞ்ச,

"பின்னே என்ன திவ்யா... நான் நேசிச்சவளை விட்டு விட்டு வேறொருத்தியைக் கல்யாணம் செய்து கொள் என்று சொல்ல இவளுக்கு என்ன உரிமை இருக்கு...?" என்றான் உச்சக்கட்ட சினத்தில்.

அவனின் நேசத்தில் ஷைலு நொறுங்கிப் போக, தன் மகள் மேல் கொண்ட கார்த்திக்கின் ஆழமான காதலை நினைத்து சஞ்சய்யும், சுஜாவும் தடுக்கவோ, எதையும் பேசவோ முடியாமல் சிலையாக அமர்ந்திருந் தார்கள்.

சூழ்நிலை கருதி மஹா அவனை நெருங்கி, "கார்த்திக்... போதும் பேசினது. அவள் ஏற்கெனவே செத்துப் பொழைச்சி வந்திருக்கா... அது மட்டுமில்லை, நிறைய குழப்பத்தில் இருக்கா. இந்த நேரத்தில் நீ என்ன சொன்னாலும் அவள் மனது ஏற்றுக் கொள்ளாது... அவ ளுக்குக் கொஞ்சம் டைம் கொடு. கண்டிப்பாப் புரிஞ்சுக் குவா..." என்று அவனை அமைதிப்படுத்த,

"பாரும்மா... அவ சொன்னதை...!" என்று அவளை முறைத்துக் கொண்டே தாயிடம் முறையிட்டான் கோபத்துடன்.

"அவன் உன் ஷைலுதான்... நாங்க யாரும் இல்லையென்று சொல்லலை... இதைப் பற்றி அப்புறமாகப் பேசிக்கலாம். நீயும் இப்போ எமோஷனலாக இருக்கே... அவளும் அதிர்ச்சியில் இருக்கா... கொஞ்ச நாள் போகட்டும்... காலம் நிச்சயம் அவள் மனதை மாற்றும்...!" என்றவர், சுரேஷிடம் கண்ணைக் காட்டி, அங்கிருந்து அழைத்துப் போகக் கட்டளையிட, முரண்டு பிடிக்கும் குதிரையை மல்லுக் கட்டி இழுத்துப் போவது போல சுரேஷ் அவனை அழைத்துச் சென்றான்.

இத்தனையையும் கண்கூடாகப் பார்த்துக் கொண்டிருந்த சஞ்சய்க்கு, தான் ஒரு பிசினெஸ் மேன் என்கிற அந்தஸ்து கழன்று ஒரு அப்பாவி மகளின் தந்தையாகக் கதறி அழுதவரைச் சமாதானம் செய்ய யாருக்குமே தைரியம் வரவில்லை. சுஜா, கணவரின் அழுகையில் சிலையாகி விட, புதுமணத் தம்பதிகள் அவரை நெருங்கவே பயந்தார்கள்.

விக்கிக்கோ தந்தை செய்த காரியத்தினால்தானே இவ்வளவும் என்ற கோபம் அவனை அவரருகில் செல்ல விடாமல் தடுத்தது. ஆனால், மஹாவோ கணவருக்குக் கண்ணைக் காட்ட,

அவர் சஞ்சய்யின் தோளில் கை வைத்து ஆறுதலாக அழுத்தினார்.

அவரின் தொடுகையில் நிமிர்ந்தவர், கார்த்திக்கின் தந்தையைக் கண்டதும் மனமுடைந்து அவரின் கைகளைப் பிடித்து மன்னிப்புக் கேட்க, அவரை ஆதரவாகத் தன்னோடு அணைத்துக் கொண்டார்.

கார்த்திக் அன்றே டிஸ்சார்ஜ் ஆகி விட, "ஷைலுவை நான் பார்த்துக் கொள்கிறேன்... நீங்கள் எல்லோரும் போகலாம்!" என்றான், யார் முகத்தையும் பார்க்கப் பிடிக்காமல் பொதுவாக.

அவன் பேச்சிலிருந்த கோபத்தின் நியாயம் புரிந்தாலும், பரிதாபத்துடன் நோக்கிய சஞ்சய்யின் உணர்வுகள் புரிந்து, சுரேஷ் அவரைச் சமாதானப்படுத்தி, "நீங்க பயப் படாமல் போங்க மாமா, அவன் பார்த்துப்பான். அவனால் ஷைலுவை இந்த நிலையில் விட்டு வீட்டுக்குப் போக முடியாது!" என்றவன், அழுதபடி நின்று கொண்டி ருந்த அத்தையைத் துணைக்கழைத்தான்.

அவரும் கணவரிடம் சுரேஷின் வார்த்தைகளையே வழி மொழிய, கண்களை இறுக மூடித் தன்னை நிலைப் படுத்தி ஒரு பெருமூச்சை வெளியேற்றியவர், கார்த்திக்கை நோக்கிச் செல்ல, சுரேஷ் பயந்து அவரைத் தடுக்க எத்தனிக்க, சுஜா அவனின் கைப்பிடித்துத் தடுத்து, "விடு சுரேஷ்..." என்றார் மயான அமைதியுடன்.

கார்த்திக்கின் பேச்சால் அழுதழுது நிலைகுலைந்து, அதன் விளைவாக மீண்டும் மயக்கத்தில் சென்றவளின் முகத்தையே ஓர் தவம் போலக் கை கட்டிக்கொண்டு

பார்த்திருந்தவனின் தோளை மென்மையாகத் தொட, அவரின் தொடுகையில் தவம் கலைந்த ரிஷி போல உக்கிரத்துடன் திரும்பியவனிடம்,

"ஐயாம் சாரி கார்த்திக். உங்க ரெண்டு பேரோட விஷயமும் எனக்குத் தெரியாது. தெரிஞ்சிருந்தா இந்தளவு விஷயம் போயிருக்காது. யார் என்ன சொன்னாலும் சரி, இனி இவ உங்க ஷைலுதான். நாங்க யாரும் குறுக்கே வர மாட்டோம்...!" என்று வாக்குக் கொடுக்க, மீண்டும் அவனின் பார்வை சலனமில்லாமல் ஷைலுவின் பக்கம் திரும்பிக் கொள்ள, ஆயாசத்தோடு மனைவியை அழைத்துக் கொண்டு விடு விடுவென்று வெளியேற, மற்றவர்களும் அவரைப் பின் தொடர்ந்தனர்.

மயக்கம் தெளிந்தவள், தன் எதிரே கார்த்திக்கைக் கண்டதும் ஒரு நொடி முகம் மலர்ந்தது. ஆனால், அடுத்த நொடியே தன் நிலை புரிந்து முகம் இறுகிவிட அவனிடம் பேசப் பிடிக்காமல் முகத்தைத் திருப்பிக் கொண்டு ரகசிய மாகக் கண்ணீர் வடித்தாள். அவளிடம் பேச முயற்சித் தாலும், ஷைலு ஒத்துழைக்க மறுத்தாலும் கார்த்திக் விடுவதாக இல்லை.

இரண்டு நாள் கழித்து ஷைலு டிஸ்சார்ஜ் ஆகிச் சென்றுவிட, அவளைத் தினமும் வீட்டில் சென்று பேச முயற்சி செய்தவனிடம் முகம் கொடுத்துப் பேசாமல் ஒதுங்கிச் செல்வதும், சிரிப்பே மறந்து போன மாதிரி எப் பொழுதும் விட்டத்தையே வெறித்துக் கொண்டிருப்பதும், யாரிடமும் பேசாமல், சரியாகச் சாப்பிடாமல் தனக்குள்ளே

நத்தையாக ஒடுங்கிக் கொள்வதும் பெற்றவர்களுக்கு வேதனையாக இருந்தது.

மருத்துவமனையிலிருந்து திரும்பி வந்த தங்கைக்குத் தேவையானதைச் செய்து அவளைக் கண்ணும் கருத்துமாக கவனித்துக் கொண்ட இரு சகோதரிகளின் மன மாற்றம் பெற்றவர்களின் மனதிற்கு இதமாக இருந்தாலும், இவர்களின் பாசத்தைப் பெறுவதற்கு ஷைலு தன் வாழ்க்கையையே விலையாகக் கொடுத்ததைத்தான் அவர்களால் தாங்க முடியாமல் போனது.

இதற்கு நடுவில் சிபியின் கடைசி காரியத்தன்று ஷைலுவுக்குச் செய்ய வேண்டிய சடங்கைச் செய்யப் பெரியவர்கள் அழைக்க, சுஜாதா ரௌத்ரமாக அவள் கழுத்தில் கட்டியிருந்த மஞ்சள் கயிற்றைக் கழட்டிப் பாலில் போட்டுக் கொடுத்து,

"இதோடு உங்களுக்கும் என் பெண்ணிற்கும் உண்டான பந்தம் அறுந்து போச்சு... ஏற்கெனவே அவள் கண்ணாடி சில்லுகளாய்ச் சிதறிப் போயிருக்கிறாள்... மேலும் அதில் கல்லை விட்டெறிந்து அவளை ரணமாக்காதீர்கள்... ப்ளீஸ்..." என்று கெஞ்சலாக,

அதே சமயம் உறுதியாகச் சொல்லி விட, விஜய குமார் தம்பதிகளுக்குப் பேச்சே வராமல் தலைவிதியை நொந்து கொண்டே மன்னிப்புக் கேட்டு விட்டு விலகிச் சென்றார்கள்.

சாதனாவும், நல்லியும் ஊருக்குக் கிளம்பிய முதல் நாளன்று ஷைலுவிடம் மன்னிப்புக் கேட்டு, நடந்ததை

மறந்து விட்டுக் கார்த்திக்கை ஏற்றுக் கொள்ள அன்பாக எடுத்துரைக்க, அவர்களின் பேச்சிற்குப் பதில் சொல்லாமல் பார்வை வேறெங்கோ பதிந்திருப்பதைக் கண்டு வேதனை யான பெருமூச்சுடன் அரை மனதுடன் ஊருக்குக் கிளம்பிச் சென்றார்கள்.

மீராதங்கள் பல உருண்டோடியும் பெற்றோர், சுரேஷ் தம்பதிகள், விக்கி, கார்த்திக், அவனின் பெற் றோர்கள் என்று மாற்றிமாற்றி எடுத்துக் கூறியும் எல் லோரிடமும் அமைதி காத்த ஷைலுவால், லாவண்யா அத்தையிடம் மட்டும் தன் மௌனத்தைத் தொடர முடிய வில்லை.

அவளிடம் தனிமையில், "கார்த்திக்கை எதுக்கு ஏத்துக்க மறுக்கிறே ஷைலு... அந்தப் பிள்ளை என்ன தவறு செய்தது என்று அவரிடம் பேசாமல் ஒதுங்கிப் போறே...?" என்றவரை, அடிபட்ட பார்வை பார்த்தாள்.

"நான் ஒரு ராசியில்லாதவள் அத்தை... என் மேல் ஆசைப்பட்டுத் தாலி கட்டிய சிபிக்கு என்ன ஆனதுன்னு உங்களுக்குத் தெரியாதா...? அதே மாதிரி கார்த்திக்குக்கும் ஆகிவிட்டால்..." என்று மேலே தொடர முடியாமல் நிறுத் தியவள், உடலைச் சிலிர்த்து, "எனக்கு நினைத்துப் பார்க் கவே பயமாக இருக்கு... என் கார்த்திக் எங்கிருந்தாலும் நல்லா இருக்கணும்...!" என்று கலங்கியவளைக் கண்டு நெஞ்சம் குமைந்தது.

"முட்டாள் மாதிரிப் பேசாதே ஷைலு... சிபிக்கு இருந்த குறையை மறைத்து உன் தலையில் கட்டப்

போக, என்னென்னமோ நடந்து போச்சு... அதுக்கு நீ எப்படிக் காரணமாவாய்...? நீ நினைக்கிற மாதிரி யெல்லாம் நடக்காது. நீங்க ரெண்டு பேரும் பல்லாண்டு காலம் நன்றாகத்தான் இருப்பீங்க..." என்று சமாதானம் கூற, ஏனோ அவளின் மனம் அதை ஒப்புக் கொள்ள மறுத்தது.

இதைக் கார்த்திக்கிடம் கூற, அவன் ஒரு நாள் மாலை... எப்பொழுதும் போலத் தன் அறையில் விட்டத்தை நோக்கியபடி அமர்ந்திருந்தவளின் முன் சில பேப்பர்களை விசிறியடிக்க, என்னவென்று புரியாமல் நிமிர்ந்தவளின் பார்வை, கோபத்துடன் நின்றிருந்த கார்த்திக்கின் மேல் நிலைத்தது.

"இது சிபியின் மெடிக்கல் ரிப்போர்ட்ஸ். அவனுக்கு ஏற்கெனவே ஹார்ட் ப்ராப்ளம் இருந்திருக்கு. அவனுக்கு பலகீனமான இதயம். அவனால் அதிக சந்தோஷத் தையோ, துக்கத்தையோ தாங்கிக்கொள்ள சக்தி இல்லை. ஏற்கெனவே உன்னைப் பெண் கேட்டு வந்திருக்கான், அப்போ உன் அப்பா சுரேஷைக் காரணம் காட்டி மறுத்த தினால், அந்த ஏமாற்றத்தைத் தாங்க முடியாமல் மயங்கி விழுந்திருக்கான். அப்பொழுது தான் அவனுக்கு இப்படி ஒரு பிரச்சினை இருக்குன்னு தெரிய வந்தது.

"சில நாட்கள் கழித்து உனக்கே அவனைப் பேசி முடிக்க, மகனின் பலவீனம் தெரிந்தும் அவனைப் பெற்ற வர்கள் அரக்கத்தனமாக உன் தலையில் கட்டப் பார்த்திருக் கிறார்கள். மீண்டும் நீ கிடைத்த சந்தோஷத்தைத் தாங்கும்

சக்தி அவன் இதயத்திற்கு இல்லாமல் போக, அதன் விளைவு சிபியின் மரணம்...” என அவளுக்கு உண்மை புரிய வைக்க வேண்டும் என்ற ஆவேசத்தில் நீளமாகப் பேசி முடிக்க, ஷைலுவின் விழிகள் எவ்விதச் சலனமுமில் லாமல் தழைந்தது.

அவளருகில் மண்டியிட்டு, “புரிஞ்சிக்கோ ஷைலு, நீ ராசியில்லாதவள்னு யார் சொன்னது? அவனின் தலைவிதி அவன் போய்ச் சேர்ந்திட்டான். அதுக்கு நீ எந்த விதத்திலும் காரணமில்லை. இதற்கு மேலும் உனக்கு நான் எப்படிப் புரிய வைப்பேன்!” என்று மன்றாட, ஷைலு தன் முடிவிலே உறுதியாக நின்றாள்.

அவளைத் தன் வழிக்குக் கொண்டு வர முடியாது என்றுணர்ந்த கார்த்திக், ஒரு நாள் மாலை கல்யாணப் பத்திரிகையுடன் வந்து, அவளிடம் நீட்டி, “இனி உன் வழியில் நான் வர மாட்டேன். இந்த வாழ்க்கைதான் உனக்குச் சாசுவதம்ன்னு நினைத்தால், அதை மாற்ற எனக்குச் சக்தியில்லை.. நீ ஆசைப்பட்டபடி எனக்கு வேறொரு பெண்ணோடு அடுத்த வாரம் திருமணம்...!” என்றதும்,

அதுவரை கடனே என்று அவன் முகத்தை ஏறிட்டும் பார்க்காமல் அமைதியாகக் கேட்டுக் கொண்டிருந் தவள், அவனுக்குக் கல்யாணம் என்றதும் திருவிழாவில் தொலைந்து போன சிறுமி மாதிரி திகைத்துப் போனாள்.

அவளின் பார்வை கார்த்திக்கின் மனதில் ரத்தத்தைக் கசிய வைக்க, வேதனையை உள்ளடக்கி, “உன் ஆசைப்

படியே நான் வேறொரு பெண்ணைத் திருமணம் செய்து கொள்கிறேன்... ஆனால் ஒரு கண்டிஷன்..." என்று நிறுத்தினான்.

அழுகை இதோ வந்து விடுவேன் என்று பய முறுத்தத் தன் உணர்ச்சிகளைக் கட்டுப்படுத்தி நிமிர்ந்து பார்த்தவளின் விழிகளோடு உறவாடி, "என் திருமணம் முடிகிறவரை நீ என் கண்பார்வையிலே இருக்கணும்..." என்றதும்... மீண்டும் திக்கென்று விழிக்க,

"இல்லையென்றால் நானும் உன்னை மாதிரியே இப்படியே இருந்திடுவேன்..." என்றவன், மிரட்டலாக அடுத்த நொடி வில்லிலிருந்து புறப்பட்ட அம்பு மாதிரி விடு விடுவென்று வாசல் கதவு வரை சென்று நின்று திரும்பி, "நீ வரணும், வர்றே..." என்று அழுத்தமாகக் கூறிவிட்டுச் செல்ல, ஷைலு செய்வதறியாது பனிச் சிற்ப மாய் உறைந்து போனாள்.

கார்த்திக்கின் இந்த முடிவை யாராலும் குற்றம் சொல்ல முடியாமல், தங்கள் மகளின் தலைவிதி அவ் வளவுதான் என்று நொந்து போய்... சுஜா கடவுளே கதி என்றிருக்க, விக்கிக்கு வீடே நரகமாக இருந்தது. அதிக மாகச் சிரிக்கவில்லை என்றாலும் புன்னகை தவழும் முகத்தோடு இருந்த தமக்கை, இன்று அதை இருந்த இடம் தெரியாமல் தொலைத்து விட்டு, எப்பொழுதும் எதையோ பறி கொடுத்த மாதிரியே வளைய வருவதைக் கண்டு, அவனும் அவளைச் சிரிக்க வைக்கப் பல வழிகளில் முயற்சி செய்தும் பலனில்லாமல் போனது.

அதுவும் கார்த்திக் பத்திரிகை கொடுத்து விட்டுப் போனதிலிருந்து ஷைலுவுடைய நடமாட்டம் மிகவும் ஒடுங்கி விட, எப்பொழுதும் அவளின் அறையே கதி என்றிருக்க, சுஜாவுக்கு அழுவதைத் தவிர வேறெதையும் செய்ய முடியாத நிலைமையில் இருந்தார்.

சஞ்சய் பிசினஸைக் கவனிக்கச் சென்றுவிட்டால் அவருக்கு ஓரளவு வேலையில் கவனம் திரும்பி விடும். ஆனால், வீட்டிற்குத் திரும்பினால் வீட்டின் நிசப்தமும் சிறிய பெண்ணின் ஓய்ந்த முகமும் அவரைச் சாப்பிட விடாமல், தூங்கவிடாமல் செய்யும்.

மருத்துவ மனையிலிருந்து வீட்டுக்கு வந்த நாள் முதல் அவளைப் பார்க்கத் தினமும் வந்து கொண்டிருந்த கார்த்திக்கின் வருகையும் அவனின் கல்யாணத்தை முன் னிட்டு நின்றுவிட, ஷைலு எதையோ இழந்த மாதிரி உணர்ந்தாள்.

அவள் பேசாவிட்டாலும் கார்த்திக் எதையாவது பேசி அவளை வம்பிழுத்துக் கொண்டிருப்பான்... அவனை நிமிர்ந்து பார்க்காவிட்டாலும் அவன் குரலையாவது மனதிற்குள் ரசித்துக் கொண்டிருப்பாள்.

இப்பொழுது அதுவுமில்லாததால், அவன் குரலைக் கேட்க முடியாமல் தவிப்பேற்பட, அதையும் வெளியில் சொல்ல முடியாத நிலை கொடுமையாக இருந்தது.

ஒவ்வொரு நிமிடமும் அவனின் அருகாமைக்காக ஏங்கித் தவிக்க, அது பூதாகாரமாக விஸ்வரூபம் எடுத்தது.

கல்யாணத்தின் முதல்நாள் எல்லோரும் பெண் அழைப்பிற்குக் கிளம்ப... ஷைலு, தான் வரவில்லை என்று வீட்டிலேயே தங்கி விட, சுஜாதாவுக்கு அதற்கு மேல் வற்புறுத்தப் பிடிக்காமல் கணவர் மகனுடன் கிளம்பிச் சென்ற சில மணித்துளிகள் கழித்து சுரேஷ் வந்து, "உன்னைக் கார்த்திக் அழைத்து வரச் சொன்னான்...!" என்று கூறி, அவள் மறுத்தும் கேளாமல் வற்புறுத்தி அழைத்துச் சென்று விட்டான்.

ஷைலு பெண்ணிற்கு நலங்கு சுற்றுவதை ஓர் ஓரமாக அமர்ந்து சடங்குகளை வேடிக்கை பார்த்துக் கொண்டிருக்க, அவள் மண்டபத்திற்கு வந்துவிட்டாள்னு தெரிந்ததும் ஜானவாசத்தைக் கேன்சல் செய்து விட்டு உள்ளே வந்த கார்த்திக்கைப் பெண்ணின் பக்கத்தில் அமர வைத்து நலங்கு சுற்ற, அதுவரை சலனமே இல்லாமல் கடமையே என்று பார்த்துக் கொண்டிருந்தவள் கார்த்திக் கின் பக்கத்தில் இன்னொரு பெண்ணைப் பார்த்ததும் அவளின் உள்ளம் அதை ஏற்றுக் கொள்ள முடியாமல் தவிக்க, மேலும் கார்த்திக்கின் பார்வை வேறு அவளையே அடித்து வைத்த மாதிரி அவள் மேலேயே இருக்க... அவனைப் பார்க்க முடியாமலும், பார்க்காமல் இருக்க முடியாமலும் தவித்துப் போனாள்.

மைசூர் சில்க் சாரியில் நீண்ட பின்னலை மறைத்து கழுத்து வரை மூடிய சேலையும், சுத்தமாக மேக்கப்பே இல்லாமல் பால் நிலா போலிருந்த முகத்தில் நெற்றியில் இருப்பதே தெரியாதவாறு சிறு விபூதிக் கீற்றோடு ஒரு

அழகிய சோகச் சித்திரமாக இருந்தவளின் மேலிருந்த கண்ணை அகற்றப் பிடிக்காமல், அவளையே பார்வை யால் விழுங்கிக் கொண்டிருந்தான்.

அவனின் பார்வையைத் தாங்க முடியாமல் அங்கிருந்து எழுந்துசெல்ல நினைத்து முயற்சி செய்த வளை நோக்கிக் கார்த்திக் வேகமாக வர, ஷைலு வேகமாக மண்டபத்தின் பின் பக்கம் ஓடி ஒளிந்தாள்.

இருட்டாக இருந்த இடத்தைத் தேர்ந்தெடுத்து, யாரும் வர வாய்ப்பில்லை என்று நினைத்து சுவரில் சாய்ந்து கண்ணை மூடிப் படபடத்த நெஞ்சை நீவி ஆசுவாசப் படுத்தி மெதுவாகக் கண்ணைத் திறக்க, அதிர்ச்சியில் தூக்கிவாரிப் போட்டது அவளுக்கு.

காரணம், அவள் எதிரில் கைகளை அழுத்தமாகக் கட்டிக்கொண்டு அவளையே தலையைச் சரித்துப் பார்த்துக் கொண்டு கார்த்திக் நின்று கொண்டிருந்தது தான்.

"நான்...நான்..." என இழுத்தவள், மேலே பேச தைரியமில்லாமல் மண்டபத்தின் உள்ளே செல்ல எத் தனிக்க, "ஒரு நிமிஷம் ஷைலு..." என்றான் அழுத்தமாக.

திரும்பாமலே அவன் அழைப்பில் நின்றவளிடம், "இப்பவும் சொல்கிறேன்... நீ என் கண்ணெதிரிலே இருந் தால்தான் என் கல்யாணம் நடக்கும்... இல்லை யென்றால் என்ன நடக்கும்னு உனக்கே தெரியும்..." என்று மீண்டும் அழுத்தம்திருத்தத்துடன் மிரட்டலாகக் கூறிவிட்டு, அங்கே

ஒருத்தி இருக்கிறாள் என்கிற உணர்வே இல்லாமல் உள்ளே செல்ல, அவளுக்குச் சலிப்பாக இருந்தது.

'என்ன வாழ்க்கை இது? எப்பொழுதும் அடுத்தவர்களுக்காகப் பயந்துபயந்து என் நிம்மதியையும், வாழ்க்கையையும் தொலைத்துக் கொண்டிருக்கிறேன்... இதுக்கு எப்பொழுதுதான் முடிவு கிடைக்கும்...?' என்று அலுப்புத் தோன்றிய அதே வினாடி, 'கார்த்திக் எப்பொழுது இப்படி ஒரு கல் நெஞ்சுக்காரராக மாறிப் போனார்...?' என்று நினைத்த வினாடி, வாழ்க்கையே வெறுத்துப் போன மாதிரி இருக்க,

மீண்டும் அதே இடத்தில் அமர்ந்து மீன் தரையில் துள்ளித் துடிப்பதைப் போல ஷைலு நெஞ்சம் துடிக்கக் கார்த்திக்குக்கு வேறொரு பெண்ணோடு சடங்கு நடப்பதைப் பார்த்துக் கொண்டிருந்தாள்.

சடங்கெல்லாம் முடிந்து சுஜாவும் சஞ்சய்யும் அங்கேயே தங்கி விட, விக்கியுடன் வீட்டிற்கு வந்த ஷைலுவுக்கு அழுகையை அடக்க முடியாமல், தன் அறையில் ஓவென்று வாய்விட்டு அழ,

விக்கிக்குத் தமக்கையின் நிலைமை புரிந்து அவள் அழுகையைக் கட்டுப்படுத்தத் தோன்றாமல் அவனுமே கண்கள் கலங்கப் பார்த்துக் கொண்டிருந்தான்.

அழுதழுது கண்ணீர் வற்றிப் போய்த் தரையில் அமர்ந்து கட்டிலில் தலையைச் சாய்த்தபடி விளக்கைக் கூடப் போடாமல் இருட்டில் தன் எதிர்காலத்தைத் துழாவிக்

கொண்டிருந்தவள் அறையில் திடீரென்று வெளிச்சம் பரவியது.

வெளிச்சத்தை உணர்ந்து, யார் விளக்கைப் போட்ட தென்று திரும்ப, வாசற்படியில் கார்த்திக்கைக் கண் டதும் அதிர்ச்சியில் எழுந்தவளின் பார்வை கடிகாரத்தை நோக்கிப் பாய்ந்து, மீண்டும் கார்த்திக்கின் முகத்தில் நிலைத்தது.

"நானே சொல்றேன்... இப்போ மணி ஐந்து... இங்கே... இந்த நேரத்தில்... எனக்கென்ன வேலை என்று தானே கேட்கிறே...?" என்று கேட்டுக் கொண்டே அவளை நெருங்கியவன்,

"என் கண்டிஷன் தெரியும்தானே...! இன்னும் அரை மணி நேரத்தில் எனக்குக் கல்யாணம்... ஆனால், நீ இன்னும் மண்டபத்திற்கு வரவேயில்லை..." என்று குற்றம் சாட்டினான்.

தன் மனப் போராட்டத்தை மறைத்து, "சாரி... என்னை மாதிரிப் பெண்கள் எல்லாம் இந்த மாதிரி நல்ல விஷயத்திற்கு வரக் கூடாது..." என்று முடிந்த வரை அமைதியுடன் கூற, சற்றும் அலட்டிக்கொள்ளாமல்,

"பொய்... அப்புறம் ஏன் மண்டபத்திற்கு வரலை..." என்று மீண்டும் கிளிப்பிள்ளை மாதிரி அதே கேள்வி யிலே நிற்க,

"உண்மை அதுதான்..." என்றாள் ஓர் அழுத்தத் துடன்.

"சரி, நம்பிட்டேன்... இப்போ உண்மையைச் சொல்... ஏன் மண்டபத்திற்கு வரலை...?" என்று மீண்டும் அதே கேள்வியைக் கேட்க... ஷைலுவின் பொறுமை அவளைக் கைவிட,

"என்னால் வர முடியாது... வரவும் மாட்டேன்... நீங்கள் இன்னொரு பெண்ணிற்குச் சொந்தமாவதைப் பார்க்கிற சக்தி எனக்கில்லை... போதுமா...?" என்றாள் கதறலுடன்.

அவளருகில் நெருங்கி, "அப்படி வா வழிக்கு..." என்றவன், "என் மேல் இவ்வளவு காதலை வைத்துக் கொண்டு ஏன்டி இத்தனை நாள் நடிச்சே...? எனக்குத் தெரியும், உன்னால் என்னை விட்டுத் தர முடியாதுன்னு... பின் எதுக்காக இப்படி ஒரு பிடிவாதம்...?" என்றான் கடுமையாக.

விழிகள் மடை திறக்க, "என்னை எதுவும் கேட் காதீங்க.... உங்க கல்யாணத்திற்கு வரச் சொல்லி என்னைச் சித்ரவதை செய்யாதீங்க... ப்ளீஸ் கார்த்திக், இங்கிருந்து போயிடுங்க..." என்று கையெடுத்துக் கும்பிட்டுக் கெஞ்சிக் கதற,

"முடியாது... நீ ஏனென்று சொல்கிற வரை நான் இங்கிருந்து போக மாட்டேன்..." என்று பிடிவாதமாக அவள் கட்டிலிலேயே அமர்ந்து கொள்ள,

ஷைலுவுக்கு ஒரு பக்கம் முஹூர்த்தத்திற்கு நேர மாகுதே என்று மனம் பதைத்தது. இன்னொரு பக்கம்

அவன் இங்கிருந்து சென்றால் இன்னொரு பெண்ணிற்குக் கணவனாகி விடுவான் என்றும் பரிதவித்தது.

தன்னுடைய சுயநலத்திற்காக இங்கேயே பிடித்து வைக்க முடியுமா... தான் உண்மையைச் சொல்கிற வரை இவன் இங்கிருந்து போக மாட்டான் என்று புரிந்து கொண்டவள், ஒரு முடிவுடன் அவன் முகத்தைப் பார்க்காமல், "நான் உண்மையைச் சொன்னால் நீங்கள் போய் விடுவீர்களா...?" அழாக்குறையாகக் கேட்க,

"ப்ச்... சொல்கிற உண்மையைப் பொறுத்து..." என்றான் அமர்த்தலாகக் கொஞ்சம் கூட ஈவிரக்கமே இல்லாமல்.

அவனுடன் வார்த்தைக்கு வார்த்தை மல்லுக் கட்டி அலுத்துப் போய், "நான் ஒரு ராசியில்லாதவள் கார்த்திக்... என் கழுத்தில் உங்கள் கையால் தாலி கட்டினால் அடுத்த நிமிடம் சிபிக்கு ஏற்பட்ட அதே நிலைமைதான் உங்களுக்கும். உங்களை இழக்க என்னால் முடியாது... அதனால்தான் சொல்கிறேன்... ப்ளீஸ், போயிடுங்க..." என்றாள் அழுகையுடன் கெஞ்சலாக.

நிதானமாகக் கட்டிலிலிருந்து எழுந்து, "ஓ...! இவ்வளவுதானா...? நான் கூட என்னவோ ஏதோ என்று நினைத்தேன். அதாவது உன் கழுத்தில் நான் தாலி கட்டினால் எனக்கு ஏதாவது ஆகிவிடுமென்று பயப்படுகிறாய்... அவ்வளவுதானே...!" என்று அவளையே திருப்பிக் கேட்க,

எதற்குக் கேட்கிறான்னு புரியாவிட்டாலும் ஷைலு ஆமாம் என்று தலையை உருட்டினாள் வேகமாக.

"அப்போ ஓ.கே...! மனதிற்குப் பிடிக்காத திருமணத்தைச் செய்து கொண்டு அணுஅணுவாகச் சாவதை விட, உன் கழுத்தில் தாலி கட்டி உன்னை மனைவியாக்கியபிறகு நான் இறந்து போனாலும் எனக்குக் கவலையில்லை. நீ என்ன சொல்றே ஷைலு?" எனக் கூலாகக் கூற, அவனின் பேச்சில் அலறியடித்து அவனின் வாயைத் தன் கையால் மூடினாள்.

"ஐயோ... தயவு செய்து இன்னொரு தடவை இப்படி யெல்லாம் பேசாதீங்க கார்த்திக்... என்னால் தாங்க முடியாது...!" என்று கதற, அவளின் கையை எடுத்துத் தன் கைக்குள்ளே சிறைப்படுத்தி,

"பின்னே நீ பேசினது மட்டும் சரியா...? நான் மட்டும் கல்யாணம் செய்து கொண்டு நிம்மதியாக இருப்பேன்னு நீ எப்படி நினைத்தே... என் மனதுக்குப் பிடித்தவளோடு ஒரு நாள் வாழ்ந்தாலும் போதும். அதைவிட வேறேதும் எனக்கு வேண்டாம். உன்னாலேயும் என்னை வேறொ ருத்திக்கு விட்டுக் கொடுக்க முடியாது. உன் இடத்தில் என்னாலேயும் வேறொருத்தியை நினைத்துக் கூடப் பார்க்க முடியாது.... எனக்கு மனைவி என்று ஒருத்தி வந்தால் அது நீயாகத்தான் இருக்க முடியும்..." என்று அழுத்தமாக... ஆனால் ஆணித்தனமாகப் பேசப் பேச, அவனின் பேச்சில் ஷைலுவின் உறுதியெல்லாம் தூள் தூளாக உடைந்தது.

இருந்தும் கார்த்திக்கின் உயிரோடு விளையாடுவதில் உடன்பாடில்லாமல் அவனை ஏற்றுக் கொள்ளத் தயங்கி அழுது கொண்டிருந்தவளைத் தன் பக்கம் திருப்பி, "நான் உயிரோடு இருப்பதும், இல்லாமல் போவதும் உன் கையில்தான் இருக்கு. இந்தக் கல்யாணம் நடந்தாலும் நான் பொணத்துக்குச் சமம்தான்... நீயே நல்லா யோசிச்சு ஒரு முடிவெடு...!" என்று எமோஷனலாக லாக் செய்ய, அதற்கு மேல் அவனைத் தவிக்க விட மனம் இல்லாமல், "கார்த்திக்..." என்ற கதறலோடு அவன் மார்பில் தஞ்சமடைந்தாள்.

ஒரு நிமிடம் ஆனந்த அதிர்ச்சியில் திகைத்து நின்றவன், அடுத்த நொடி அவளை வாரி அணைத்துக் கொண்டான்.

சில வினாடிகள் கொஞ்சலும், கெஞ்சலும், அழுகையும், சமாதானமுமாக நேரம் கரைய, அவனிடமிருந்து விலகி, "கார்த்திக்... உங்களுக்காக அங்கே காத்திருக்கிற பெண்ணிற்கு என்ன பதில் சொல்லப் போறீங்க?" என்றவளின் கவலையைக் கண்டு சட்டென்று மனம் விட்டுச் சிரித்தான்.

"இந்தப் பட்டுத் தலையில் ஒன்றுமே இல்லை என்று எனக்கு இப்போ புரிகிறது..." என்று கேலி செய்ய,

அவனின் கேலிக்குக் காரணம் புரியாமல் அவனைப் போலியாக முறைத்தவளிடம்,

"ஹலோ மேடம்... பத்திரிகையைச் சரியாகப் பார்த்தீங்களா...?" என...

புரியாமல் நோக்கியவளின் தலையில் செல்லமாக ஒரு குட்டுக் குட்டி, "முதலில் அது என் கல்யாணப் பத்திரிகையே இல்லை..." என்று கலாட்டாவாகச் சிரித் தான்.

ஷைலுவின் விழிகள் குழப்பத்துடன் விரிந்து பரபர வென்று கல்யாணப் பத்திரிகையைத் தேடி எடுத்தவள் அதில் பார்வையை ஓட்ட,

"கார்த்திக் வெட்ஸ் நிவி.." என்றிருக்க, மீண்டும் முகம் குழப்ப முலாம் பூசிக் கொண்டது.

அவளை கிட்டே இழுத்து அணைத்து, அவள் கையிலிருந்த பத்திரிகையை வாங்கி, "மணமகன் அப்பா சங்கரலிங்கம் என்று இருக்கு... இவரா எங்கப்பா...?" என்று சிரித்ததும்தான் புரிந்தது.

"ஆனாலும் மண்டபத்தில் சடங்கு, ஜானவாசம் என்று..." என்று இழுக்க... எல்லாமே நாடகம் என்று மீண்டும் சிரித்தவனிடம்,

"அப்போ என் அப்பா அம்மாவிற்குத் தெரியுமா...?" என்று மீண்டும் குழப்பத்துடன் கேட்டவளின் கன்னத்தில் ஒரு விரலால் வருடி,

"இது உண்மையிலே என் நண்பனின் கல்யாணப் பத்திரிகை... உன்னிடம் எப்படி எப்படியோ பேசிப் பார்த்தும் பலனில்லாமல் போகக் கடைசியாக இந்த ஆயுதத்தைப் பயன்படுத்தினேன். எனக்குத் தெரியும் உன் மனதில் அழியாத சித்திரமாக நானிருக்கேன். ஆனால், நீ குற்ற

உணர்ச்சியிலும், ராசியில்லாதவள் என்கிற உப்புச் சப் பில்லாத காரணத்திற்காகவும் உன் வாழ்க்கையை அழித்துக் கொள்வதை ஒரு முடிவுக்குக் கொண்டு வரத்தான் எல் லோருடன் சேர்ந்து இப்படி ஒரு நாடகத்தை நடத்தினேன்.

"நான் நினைத்தபடியே எல்லாமே சரியாக நடந்து, நாடகம் வெற்றிகரமாக முடிவுக்கு வந்து விட்டது... இப்போ என் ராணி என் அணைப்பில்...!" என்று கட்டை விரலைத் தூக்கிக் காட்டிக் கண்ணடித்தான்.

வெட்கச் சிரிப்பைச் சிந்தி, "நீங்கள் இங்கே வந்தது எல்லோருக்கும் தெரியுமா...?" என்று அப்பாவியாகக் கேட்டவளைத் தன்னோடு இறுக்கி,

"உனக்கு அவர்களைப் பார்க்கணுமா..." என்று கிசு கிசுப்பாகக் கேட்க, புரியாமலே தலையை உருட்டியவளின் அணைப்பை விடாமலே ஹாலுக்கு அழைத்து வந்தான்.

குழுமியிருந்த தன் குடும்ப உறுப்பினர்கள், சுரேஷின் குடும்பம், கார்த்திக்கின் குடும்பம் என்று மொத்தப் பேரும் கைதட்டி அவளை வரவேற்க, எதிர்பாராத இன்ப அதிர்ச்சியில் முகம் சிவக்கச் சிரிப்புடன் கார்த்திக்கின் தோளில் முகம் புதைத்தாள்.

24

LDகளின் பழைய அழகிய சிரிப்பை யும், வெட்கத்தையும் கண்ட சுஜாவிற்குத் தலைகால் புரியவில்லை. தன் மகளுக்கு அவள் ஆசைப்பட்ட வாழ்க்கை கிடைத்து

விட்ட திருப்தியில் வானத்தை நோக்கிக் கையெடுத்துக் கும்பிட, கண்ணீர் கட்டுப்பாடின்றி வழிய,

மகளை நோக்கி செல்ல, தாயின் நெஞ்சில் நிம்மதி யுடன் அடைக்கலமானாள்.

கார்த்திக்குக்குத் தன் நன்றியை சஞ்சய் தெரிவித்து அணைத்துக் கொள்ள, அவனுக்குமே அவரின் வேதனை புரிந்தது.

இவர்களின் திருமணத்திற்கு யாரின் தடையும் இல்லையென்றாலும், துக்க சம்பவம் நடந்த வருடம் திரும்பிய பிறகு செய்யுங்கள் என்ற ஐயரின் வாக்குப் படி, சில வாரங்கள் காத்திருக்க வேண்டியிருந்தது.

இடைப்பட்ட காலத்தில் தினமும் ஷைலுவின் வீட்டிற்கு வந்து அவளோடு பேசிவிட்டுச் செல்லச் செல்ல... மெல்ல மெல்ல பழைய ஷைலுவாகத் திரும்பிக் கொண்டிருந்தாள்.

ஷைலுவின் ஆசைப்படியே அவள் சொன்ன தேதியிலே திருமண நாளை சஞ்சய் குறிக்க, அவர்களின் திருமண நாளும் வந்தது.

எல்லோரையும் திருமணத்திற்கு அழைத்த சஞ்சய், பெரிய மகள்களை மட்டும் அழைக்க மனமில்லை. 'அவர் களால்தானே தன் சிறிய பெண்ணின் வாழ்க்கையில் புயல் அடித்து சின்னாபின்னாமாகி இப்பொழுது தான் அவளின் வாழ்க்கை சரியாகி இருக்கு...!' என்று குமைந்த கணவரிடம் இந்த விஷயத்தைப் பற்றிக் கேட்க,

"இந்தக் கல்யாணத்தைப் பார்க்க அவர்களுக்கு அருகதையே இல்லை. அதுதான் நான் அவர்களுக்குக் கொடுக்கிற தண்டனை..." என,

சுஜாவுக்கு கணவரின் பேச்சில் நியாயம் இருந்தாலும், ஊரார் கேட்டால் என்ன சொல்வதென்று குழம்பினார்.

"அந்தக் கவலையை விடு சுஜா. அவர்களுக்கு லீவ் கிடைக்கலைன்னு நான் சொல்லிக்கிறேன். நீ உன் வேலையைப் பார்..." என்று அடக்கி விட, அத்தோடு சுஜாவும் அந்த விஷயத்தைக் கண்டு கொள்ளவில்லை.

அன்று மாலை ரிசப்ஷனில் கார்த்திக் டார்க் ப்ளூ கோட்டில் ஆண்மையாகத் திகழ, ஷைலு ரோஜா இதழ் கலர் புடவையில் முழுவதும் வைர ஊசி வேலைப்பாடு செய்த புடவையணிந்து, பியூட்டி பார்லர் ஒப்பனையில் தேவதையாக மிளிர்ந்தாள்.

எல்லோரையும் வரவேற்று அமர வைத்துக் கொண்டிருந்த சஞ்சய்யின் பார்வை மேடைக்குத் தாவ, கல்யாண ஜோடிகளின் அழகைக் கண்டு மனம் கொள்ளை போனது.

தன்னை மறந்து அவர்களைப் பார்த்துக் கொண்டிருந்தவர், விஸ்வநாத்தின் ஸ்பரிசத்தில் சுதாரித்துப் புன்னகைக்க,

"என்ன சம்மந்தி, பெண்ணையும், மாப்பிள்ளையையும் ரசிச்சிக்கிட்டு இருக்கீங்களா...?" என்று கேலி

செய்ய, கொஞ்சம் கூடத் தயங்காமல் ஒத்துக்கொண்டார் பெருமிதமாக.

சந்தோஷ், ஸ்வேதாவுடனும், காயத்ரி, அவள் மாமா வுடனும் வர, ஷிவா அவன் நண்பர்களுடன் வந்திருந் தான்.

சுரேஷும் திவ்யாவும் எல்லோரையும் வரவேற்று உபசரிக்க, லாவண்யாவின் உள்ளம் குளிர்ந்து போனது.

மண்டபத்தில் ஒரு பக்கம் லைட் மியூசிக் பாடிக் கொண்டிருக்க, அதை ரசித்துக் கொண்டே ஷைலுவிடம் சீண்டிக் கொண்டிருக்க,

ஒரு பக்கம் வந்தவர்களைக் கைகுலுக்கி அவர்கள் வாழ்த்தை ஏற்றுக் கொண்டு சிரித்து, இன்னொரு பக்கம் ஷிவா, காயத்ரி மற்றும் சந்தோஷ் கிண்டலைச் சமா ளித்துக் கொண்டிருந்தார்கள்.

கார்த்திக் மாலை மறைவில் அவளைச் சீண்டிக் கொண்டே இருக்க,..

ஷைலுவுக்கு முகம் சிவக்காமல் தடுப்பதே பெரிய விஷயமாக இருந்தது.

அடுத்த நாள் காலையில் ஒரு நல்ல நேரத்தில் கார்த்திக் அவள் கழுத்தில் மங்கள நாணைப் பூட்ட, எல்லோரும் சந்தோஷமாக வாழ்த்தினார்கள்.

அன்றிரவு மஹாலக்ஷ்மி அவளை அலங்கரித்து மகனின் ரூமிற்கு அனுப்ப, கார்த்திக் ஜன்னல் பக்கம்

ஸ்டைலாகச் சாய்ந்து கையைக் கட்டிக் கொண்டு நிற்க, ஷைலுவுக்குக் கால்கள் பின்னின.

ஏதோ கால்களில் இரும்புக் குண்டை வைத்துக் கட்டியது போல், நடக்க முடியாமல் தடுமாற, அவளின் தவிப்பைச் சிரித்துக் கொண்டே ரசித்துக் கொண்டிருந்தான்.

அதற்குமேல் முடியாது என்பதுபோல ஷைலு அங்கேயே நின்று விட, கார்த்திக் சிரிப்புடன் அவள் அருகே நெருங்க, இதழைக் கடித்துக் கொண்டே தலை கவிழ்ந்தாள் நாணத்துடன்.

அவள் முகத்தை ஒற்றை விரலால் நிமிர்த்த, அவள் கண்ணைத் திறக்காமல் மூடிக் கொள்ள, முகம் சிவந்து கிடந்தது.

அவளின் முகத்தை ரசனையுடன் வருடிக் கொண்டே வந்தவன், அவள் இதழில் அவனின் விரல் நின்று விட, அவளின் சிவந்த இதழ்களை ஆசையுடன் வருட, ஷைலுவுக்கு அதற்கு மேல் தாங்க முடியாமல் அங்கிருந்து ஓடிப் போய் ஜன்னலருகே நின்று விட்டாள்.

கார்த்திக் அங்கிருந்து நகராமல் அங்கேயே சிரித்துக் கொண்டு நிற்க, கொஞ்ச நேரம் கழித்து, 'கார்த்திக் எங்கே?' என்று திரும்பிப் பார்த்தவள், அவன் குறும்புடன் சிரித்து இரு கையை விரித்து, "வா!" என்று கண்ணால் அழைக்கவும், ஓடி வந்து அவன் மார்பில் தஞ்சமடைந்தாள்.

சில வினாடிகள் கழித்து, கார்த்திக் கட்டிலில் அவளை அமர வைத்துப் பக்கத்தில் அமர்ந்து, அவள் கையோடு தன் கையைக் கோத்துக் கொண்டு,

"நம் வாழ்க்கையை இன்று துவக்க வேண்டாம் ஷைலு. உன் ஆசைப்படி கொடைக்கானலில் ஆரம்பிக்க லாமா? உனக்குச் சம்மதமா?" என்று அவள் முகத்தை நிமிர்த்திக் கேட்க,

அவள் நாணத்துடன் சம்மதம் சொல்ல, கட்டிலில் இருவரும் ஒவ்வொரு மூலையில் படுத்துக் கொள்ள, கார்த்திக் தூக்கம் வராமல் தவிக்க, அவள் கையைத் தன் கைக்குள்ளே வைத்துக் கொண்டதும் அந்த நிம்மதியிலே தூங்கி விட்டான்.

ஷைலுவுக்கு அவன் அருகாமையில் இருப்பதே இன்ப அவஸ்தையாக இருந்தது.

போதாததற்கு அவன் கையை வேறு பிடித்துக் கொள்ளவும் ரொம்ப நேரம் தூக்கம் வராமல்... எப்படியோ ஒரு வழியாகத் தூங்கியவள், சீக்கிரமே விழிப்பு வந்து விட்டது. கண்ணைத் திறந்தவள், நாம் எங்கு இருக்கிறோம் என்று பார்த்தாள்.

கார்த்திக் பக்கத்தில் ஆழ்ந்து தூங்கிக் கொண்டிருக்க, அவன் முகத்தில் அவனுடைய வசீகரப் புன்னகை உறைந்து கிடந்தது.

அவன் கைகளிலிருந்து தன் கையை மெதுவாக உருவியவள், அவன் தலையை அன்புடன் கோதி விட்டு,

ஆசையுடன் அவன் முகத்தையே கொஞ்ச நேரம் ரசித்துப் பார்த்துவிட்டுக் கட்டிலிலிருந்து இறங்க முற்பட, முடியாமல் திரும்பிப் பார்க்க, கார்த்திக் குறும்புடன் அவள் புடவை முந்தானையைப் பிடித்திருந்தான்.

திரும்பிப் பார்த்தவளை இழுத்து அணைத்து, "குட் மார்னிங் மை ஸ்வீட் ஏஞ்சல்!" என்று அவள் முகத்தோடு முகம் தேய்த்து விட்டு, "எதுவும் கொடுக்காமல் போனால் எப்படி?" என்று புருவத்தை ஸ்டைலாகத் தூக்கிக் கேட்க...

வெட்கத்துடன் அவன் கன்னத்தில் ஒரு முத்தம் கொடுத்து விட்டு, இறங்கி ஓடிவிட்டாள் குளிப்பதற்கு.

குளித்து விட்டுக் கீழே வந்த மருமகளை மாமியார் அன்புடன் விசாரிக்க, பதில் சொல்ல முடியாமல் முகம் சிவந்து போனது.

அதைக் கண்டு மஹா, அஞ்சலி, மற்றும் சுஜா பூரித்துப் போனார்கள். திவ்யா கேட்டதற்கும் பதில் சொல் லாமல் அங்கிருந்து ஓடி விட, திவ்யா சிரிக்க, சுரேஷ் அவளைப் பார்த்து ரகசியமாகச் சிரித்தான்.

அன்று மாலையே கொடைக்கானல் கிளம்ப, எல்லோரிடமும் சொல்லிக் கொண்டு கார்த்திக் காரில் அமர, சுஜா மகளை அணைத்து முத்தமிட, மஹா, "பத்திரமாகப் போயிட்டு பத்திரமாகத் திரும்பி வாங்க..." என்று விடை கொடுக்க, கையசைத்து விடை பெற்றார்கள் எல்லோரிடமும்.

கார்த்திக், ஷைலுவுக்குப் பிடித்த எஸ்.பி.பி. பாட்டைப் போட, அது மெலிதாகக் கசிந்து கொண்டிருந்தது.

அதைக் கேட்டுக்கொண்டே மனம் கொள்ளா நிம்மதி யுடன் கார்த்திக்கின் தோளில் சாய்ந்து கொண்டாள்.

நடு நடுவே ஓய்வு எடுத்துக் கொண்டு, கொடைக் கானலை அடைய நடுநிசி ஆகியது.

ஏற்கெனவே சுரேஷ் ரூம் ரிசர்வ் செய்து வைத் திருந்த ஃபைவ் ஸ்டார் ஹோட்டலை அடைந்து ரூம் கீயை வாங்கிக் கொண்டு ரூமுக்குச் சென்றதும் கார்த்திக், 'அப்பாடா' என்று நின்ற வாக்கிலே மல்லாந்து படுத்துக் கொண்டான்.

ஷைலு ஜன்னல் வழியே கோடை இருட்டாக இருந் தாலும் விளக்கின் வெளிச்சத்தில் தெரிந்த அழகை ரசித்துக் கொண்டிருக்க, கார்த்திக் எழுந்து வந்து அவள் பின்னால் வந்து இடுப்பைச் சுற்றி வளைத்து, அவள் கழுத்தில் முகம் புதைத்து,

"அட் லாஸ்ட், உன் ஆசைப்படி இங்கு வந்து விட் டோம். ஆனால் எதுவும் சொல்லாமல் இப்படி வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தால் என்ன அர்த்தம்?" என்று கிசு கிசுக்க...

திரும்பி அவன் மார்பில் கை வைத்துத் தள்ளி, "முதலில் குளிக்கணும்..." என்று சிணுங்கியவள், டவல் உடையுடன் பாத்ரூமில் நுழைய, கார்த்திக்கின் சிரிப்பு அவளைத் துரத்தியது.

குளித்து விட்டு வெளியே வந்தவள், கார்த்திக் டி.வி. யில் மூழ்கி இருப்பதைக் கண்டதும் அவனை எழுப்பித் தள்ளிக்கொண்டு போய் பாத்ரூமில் விட்டுக் கதவைச் சாத்தியவள், முடியை உதறிக் காய வைத்தபடியே ஜன்னல் வழியாக வெளியே வேடிக்கை பார்த்துக் கொண்டிருக்க, குளித்துவிட்டு வந்தவன், ஈரத்தலையை உதற, அதிலிருந்த நீர்த் திவலைகள் ஷைலுவின் மேல் தெரித்தது.

குளிர்நீரின் உபயத்தால் தேகம் சிலிர்த்தது என்றால், முதன் முதலாக கார்த்திக்கை வெற்று மார்புடன் காணவும் நிலை தடுமாற, கார்த்திக் அவளின் தடுமாற்றத்தைப் புரிந்து அவளை அணைத்துக் கொண்டான்.

சில வினாடிகள் கழித்துக் கணவனிடமிருந்து விலகி, "ஹாப்பி பர்த்டே கார்த்திக்!" என வாழ்த்தி, ஒரு பிரேஸ் லெட் அணிவித்து அவன் இதழ்களில் அழுந்த முத்தமிட, கார்த்திக் ஆகாயத்தில் பறந்தான் அவளின் முத்தத்தில்.

அவளை இழுத்து மடியில் அமர்த்தி, "ஏய்... நான் உனக்கு நான்கு மாதம் கழித்து என்றுதானே சொன் னேன்...! தேதி சொல்லவில்லையே... உனக்கு எப்படித் தெரிந்தது?" என்றான் ஆச்சர்யத்துடன்.

ஷைலு மர்மமாகச் சிரித்து, "மனசுக்குப் பிடிச்சவங்க பிறந்த நாள் பற்றித் தெரிந்து கொள்வது ஒரு பெரிய விஷயமா...?" என்று அவனுக்கே திருப்பியடிக்க,

அணைப்பை இறுக்கி, "ம்ம்... சூப்பர், எனக்கே என் டயலாக் திரும்பி வருது. சரி, என் பிறந்த நாளைத்

தெரிந்து கொண்டாய். அன்று நான் என்ன சொன்னேன் என்று மறந்து விட்டாயா?" என்று அவள் கன்னத்தோடு அவனின் கன்னத்தை இழைத்துக் கொண்டே பாதிக் குரலில் கேட்டான்.

ஷைலு இடம் வலமாகத் தலையசைத்து, "நீங்க என்ன சொன்னீங்க என்பதை நான் மறக்கவில்லை. நீங்க எதை நினைத்துச் சொன்னீர்களென்றும் தெரியும். உங்க பிறந்த நாள் பரிசா என்னையே உங்களுக்குத் தருகிறேன்!" என்று அவன் காதோடு ரகசியமாகச் சொன்னவள், அவன் முகமெங்கும் முத்திரையைப் பதிக்கத் தொடங்கியதும், "ஷைலு... என் ஷைலு...!" என்று கொஞ்சம் கொஞ்சமாக அவன் தன் வசத்தை அவளிடம் இழந்து கொண்டிருந்தான்.

கழுத்தில் கைகளை மாலையாகக் கோத்து, அவன் கழுத்தில் முகம் புதைக்க... கார்த்திக் கொஞ்சமும் தாமதிக்காமல் தன் வேலையைத் தொடங்க, ஒரு கட்டத்தில் இருவரும் தங்களின் தனி உலகத்திற்குள் நுழைய ஆரம்பித்தனர்.

உன்னோடு நானும்
என்னோடு நீயும்!

ரேவதி அசோக்